Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பாரத மாவிந்தம்

மூலமும் உரையும்

தொகுதி-I

(ஆய்வு முன்னுரையுடன் முதல் ஐந்து சருக்கங்கள்)

பதிப்பாசிரியர்:
த. இராஜேஸ்வரி
(தமிழ்ப் பேராசிரியை - ஓய்வு, தமிழ்நாடு அரசுக்கல்லூரி)
Senior Research Fellow
Ecole francaise d'Extreme - Orient
(French School of Asian Studies)
Centre de Pondichery

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பாரத மாவிந்தம்

மூலமும் உரையும்

தொகுதி – 1

(ஆய்வு முன்னுரையுடன் முதல் ஐந்து சருக்கங்கள்)

பதிப்பாசிரியர்

த. இராஜேஸ்வரி

(தமிழ்ப் பேராசிரியை – ஓய்வு, தமிழ்நாடு அரசுக்கல்லூரி)

Senior Research Fellow,
Ecole Francaise d'Extreme – Orient
(French School of Asian Studies)
Centre de Pondichery.

அறம் பதிப்பகம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ISBN : 978-80-93542-47-8

பாரத மாவிந்தம் மூலமும் உரையும்
Bharatha Maavindham Moolamum Uraiyum

த.இராஜேஸ்வரி
T.Rajeswari

தமிழ்
Tamil

நவம்பர், 2022

பக்கங்கள்
Pages : 382

விலை
Price : Rs.500/-

பதிப்புரிமை : ஆசிரியருக்கு
Copyright Reserved by the Author

வெளியீடு:

அறம் பதிப்பகம்
7A, வீரபத்ரா 2-ஆவது வீதி,
சத்திரோடு, ஈரோடு-3.

Published by:

Aram Pathippakam,
7A,Veerabhatra 2nd Street,
Sathy Road, Erode-3
77088-21464, 85084-84583.
arampathippakam@gmail.com

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

"என் அன்புத் தந்தையார்
சி.பொன்னுசுவாமி அவர்களுக்குக்
காணிக்கை"

அவையத்து என்னை முன்னிருக்கச் செய்த
என் அன்புத்தந்தையின்
நினைவாக ...

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சுருக்கக்குறியீட்டுவிளக்கம்

அகநா.	அகநானூறு
அ.யோ.கா.	அயோத்தியா காண்டம்
அகத்.ப.	அகத்தியப் படலம்
அகலி.ப.	அகலிகைப் படலம்
அப்.	அப்பர்
அரங். பா.	அரங்கநாதக் கவிராயர் பாரதம்
அ.வி.	அருஞ்சொல்பொருள்
ஆரண்.கா.	ஆரண்ய காண்டம்
ஆதி.பரு.	ஆதிபருவம்
ஆரண்.பரு.	ஆரண்ய பருவம்
ஆற்.ப.	ஆற்றுப்படலம்
இரணி.	இரணியன் வதைப் படலம்
இராவ.சோ.ப	இராவணன் சோகப் படலம்
இராவ.மந்.ப.	இராவணன் மந்திரப் படலம்
இரா.சூ.	இராயசூயச் சருக்கம்
இராவ.வதைப்.	இராவணன் வதைப் படலம்
இரா.வானர.ப.	இராவணன் வானரத்தானைக் காண் படலம்
உருக்.ப.	உருக்காட்டுப் படலம்
உரை.ஆசி.	உரை ஆசிரியர்
எ-டு.	எடுத்துக்காட்டு
ஒப்பு.	ஒப்புமைப் பகுதி
கங்கைப்.	கங்கைப் படலம்
கடி.ப.	கடிமணப் படலம்
கந்த.பு.	கந்தபுராணம்
கம்.	கம்பராமாயணம்
கலித்.	கலித்தொகை

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

களப்பலி.ச	களப்பலியூட்டுச் சருக்கம்
கன்.பரு	கன்னபருவம்
காண்.தன.ச.	காண்டவதனச் சருக்கம்
கார்.ப.	கார்காலப் படலம்
கார்.முகப். ப.	கார்முகப் படலம்
காரைக்	காரைக்கால் அம்மையார்
காளிந்.	காளிந்திப்படலம்
கிட்கி. கா.	கிட்கிந்தா காண்டம்
கிட்கி. ப.	கிட்கிந்தைப் படலம்
கிரு.தூது.	கிருட்டிணன் தூது சருக்கம்
கும்ப.வதை.	கும்பகருணன் வதைப் படலம்
குரு. ச.	குருகுலச் சருக்கம்
குலமுறை.	குலமுறைகிளத்துப் படலம்
குறள்.	திருக்குறள்
கைய.ப.	கையடைப் படலம்
கோலங். ப.	கோலங் காண் படலம்
சடா.காண்.ப.	சடாயு காண் படலம்
சபா.பரு.	சபாபருவம்
சம்பந்.	சம்பந்தர்
சர.பிறப். நீங். ப	சரபங்கன் பிறப். நீங். படலம்
சல்.பரு.	சல்லிய பருவம்
சிலம்.	சிலப்பதிகாரம்
சீதை. களம். ப	சீதைகளம் காண் படலம்
சுந்த.கா.	சுந்தரகாண்டம்
சுந்த.	சுந்தரர்
சூத்.	சூத்திரம்
சூடா.ப.	சூடாமணிப் படலம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சூது.போர்.	சூதுபோர்ச் சருக்கம்
சூர்ப்.ப.	சூர்ப்பனகைப் படலம்
செய்.	செய்யுளியல்
சேனா.	சேனாவரையர்
சொல்.	சொல்லதிகாரம்
தண்டி.	தண்டி அலங்காரம்
தாட.வதைப்.	தாடகை வதைப் படலம்
தார.வதைப்.ப	தாரகன் வதைப் படலம்
திரு.அவ.	திரு அவதாரப் படலம்
திரு.சூட்.	திருவடி சூட்டுப் படலம்
திருமுடி.சூட்.	திருமுடி சூட்டுப் படலம்
திருவி.	திருவிளையாடல் புராணம்
துரோ.பரு.	துரோண பருவம்
தேவா.	தேவாரம்
தொல்.	தொல்காப்பியம்
ந.நீங்.ப.	நகர்நீங்கு படலம்
நச்.பொய்.	நச்சுப் பொய்கைச் சருக்கம்
நட்.கோட்.ப	நட்பு கோட்படிவம்
நரிபரி.ப	நரிபரியாக்கிய படலம்
நன்.	நன்னூல்
நாக.ப.	நாகபாசப் படலம்
நாட்.ப.	நாட்டுப்படலம்
நாடு.கரந்.	நாடுகரந்துறை சருக்கம்
நிந்.ப.	நிந்தனைப் படலம்
நிரை.மீட்.	நிரைமீட்சிச் சருக்கம்
நி.கவசர்கால.	நிவாதகவசர் காலகேயர் வதைச் சருக்கம்
நாலா.திவ்.	நாலாயிர திவ்ய பிரபந்தம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ப.	பக்கம்
பதி.	பதிப்பாசிரியர்
பதிற்.	பதிற்றுப்பத்து
பதிமூ.போ.	பதிமூன்றாம் போர்ச் சருக்கம்
பதினான்.போ.	பதினான்காம் போர்ச் சருக்கம்
பதினெ.போ.	பதினெட்டாம் போர்ச் சருக்கம்
பதினே.போ.	பதினேழாம் போர்ச் சருக்கம்
பரசு.ப.	பரசுராமப் படலம்
பழி.ப.	பழியஞ்சின படலம்
பள்ளி.ப.	பள்ளியடைப் படலம்
பன்னி.போ.	பன்னிரண்டாம் போர்ச் சருக்கம்
பா.வே.	பாடவேறுபாடு
பிணி.வீட்.ப.	பிணிவீட்டுப் படலம்
புறநா.	புறநானூறு
பெருங்.	பெருங்கதை
பெரு.பார. மா.	பெருந்தேவனார் பாரதம் (மாவிந்தம்)
பொ.	பொழிப்புரை
மகாப்.பிரஸ்.	மகாப் பிரஸ்தானிக பருவம்
மகு.பங்.	மகுடபங்கப் படலம்
மணி.	மணிமேகலை
மந்த.சூழ்ச்.	மந்தரைச் சூழ்ச்சிப் படலம்
மந்தி.ப.	மந்திரப் படலம்
மரா.ப.	மராமரப் படலம்
மாம.வழக்.	மாமனாக வழக்குரைத்த படலம்
மாயா.சன.	மாயாசனகப் படலம்
மாரீ.வதைப்.	மாரீசன்வதைப் படலம்
மிதி.காட்.	மிதிலைக்காட்சிப் படலம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மிட்.ப.	மீட்சிப் படலம்
முதல்.புரி.ப.	முதல்போர்புரி படலம்
மெய்ப்.	மெய்ப்பாட்டியல்
மேற்.	மேற்படி
மௌ.பரு.	மௌசலப் பருவம்
யுத்.கா.	யுத்தகாண்டம்
வருண.வழி.ப.	வருணனைவழி வேண்டு படலம்
வனம்.ப.	வனம்புகு படலம்
விந்த.ப.	விந்தகிரிப் படலம்
வி.பா.	வியாசபாரதம்
விரா.பரு.	விராட பருவம்
விரா.வதைப்.	விராதன் வதைப் படலம்
வில்.பா.	வில்லிபுத்தூரர் பாரதம்
விறகு.ப.	விறகுவிற்ற படலம்
வீட. அடைக். ப.	வீடணன் அடைக்கலப் படலம்
வெள்ளா.	வெள்ளானைச் சருக்கம்
வேத்திர.	வேத்திரகீயச் சருக்கம்
வேள்.ப.	வேள்விப் படலம்
வைகு.	பெரிய எழுத்து வைகுந்த அம்மானை

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

எழுத்துப் பெயர்ப்பு (Transliteration)

உயிரெழுத்துக்கள்

அ a	ஆ ā
இ i	ஈ ī
உ u	ஊ ū
எ e	ஏ ē
ஐ ai	ஒ o
ஓ ō	ஔ au
ஃ k̲	

மெய்யெழுத்துக்கள்

க் k	ங் ṅ
ச் c	ஞ் ñ
ட் ṭ	ண் ṇ
த் t	ந் n
ப் p	ம் m
ய் y	ர் r
ல் l	வ் v
ழ் l̲	ள் ḷ
ற் r̲	ன் n̲

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Fore word

In the present fast world of internet and e-browsing, the editing and publishing of palm leaf manuscript, and that too of an Epic -Puranic – one is a rarity.

But we still have scholars like Dr.T.Rajeswari, rooted in the traditional knowledge of manuscriptology: and also familiar with the latest – modern- techniques of the field.

So this has been made possible.

Where to search for manuscripts, whom to approach, how to handle the material, the methods to read and comprehend the data, proper presentation, with a research intent –all these are relevant to her. The present out put 'Bhārata Māvintam' stands as the testimony.

Epics in traditional meter are always very interesting to read, though a little difficult to comprehend –when the theme is either puranic or legendary. A clear out live of the back ground, a brief sketch of the story-plot/events, seems to be a must. Compared to the vast familiarity of the Rāmāyaṇā, the Mahā Bhāratā may pose some herdles in this vein. And that too on the larter end of the story- the last journey – the long slow march of the protagonists to heaven. All these aspects have been taken care of here in this work. Through the summary of the story and other editorial features, the out put is made intelligible, and the intention achieved.

Editing of manuscript is both an academic and a technical endeavour. It needs expertise and experience. Comparing the available manuscripts of a text , noting textual variations/variants, choosing the correct reading, identifying hard words, keeping an eye on meter,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

providing headings/ captions for clarity, giving simple paraphrase, adding notes and explanations where ever necessary, quoting similar/ parallel passages, putting references all these skills are perfectly followed.

It is very interesting to note that the scholar editor Dr.T.Rajeswari is very fond of manuscript editing. Quite long back she had edited Tamil Catakams in two volumes, published by the International Institute of Tamil Studies, Chennai. For the École française d'Extrême-Orient (EFEO), Pondichérri, she had edited Kalittokai and Kuṟiñcippāṭṭu with Nacciṉārkkiṉiyar's commentary. Presently she is working in the editing of Patiṟṟuppattu, for this Institute, yet another Caṅkam Classic.

The earlier phase of the present endeavour of editing the Bhārata Māvintam Manuscript, with a critical study, was for acquiring a Doctoral Degree. Only two copies of manuscripts were available there. But now, after a gap of nearly three decades, further availability of manuscript copies have also been taken into account and updated.

This voluminous work is in two parts. A critical study in nine chapters precedes; the edited text follows.From introduction to word index, each page/leaf reveals the expertise and calibre of the scholar.

I congratulate the scholar-editor for all the efforts taken by her in this regard, especially for the engineering of this edifice.

Dr.Annie Thomas (Rtd)
Tamil Professor
I.I.T.S, Chennai.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

என்னுரை

நான் காரியவட்டத்தில் கேரளப்பல்கலைக்கழக ஆய்வு மாணவியர் விடுதியில் தங்கி இருந்தேன். அங்கு நிர்மலாதேவி, லலிதா ஆகிய இருவர் சென்னையில் உள்ள உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தின் சுவடியியல் தொடர்பான பணியில் ஈடுபட்டிருந்தனர். நிர்மலா என்பவர் சுவடியில் உள்ள ஒரு பாடலை அடிமடக்கி எழுதியிருந்ததை நான் பார்க்க நேர்ந்தது. அப்போது நிர்மலாதேவி இப்பாடலில் 'வசூரி' என்னும் சொல் உள்ளது; என்னவென்று தெரியவில்லை என்றார். தமிழ் நாட்டில் பொதுவாகப் பெரிய 'அம்மை' (small pox) நோயை அம்மை நோய் என்றே கூறுவர்; அதனால் அது அவருக்குப் புரியவில்லை போலும். குமரிமாவட்டத்தில் 'வைசூரி' என்று சொல்வோம்; கேரள மக்கள் 'வசூரி' என்று சொல்வார்கள் என்று சொன்னேன். சுவடி பற்றித் தெரிந்து கொள்ளும் ஆவலில் நான் அவர்களிடம் சுவடி எப்படி இருக்கும்? இன்னும் சுவடிகளில் தமிழ் இலக்கியம் எழுதப்பட்ட நிலையில் உள்ளதா? நீங்கள் எங்குச் சுவடி கற்றுக்கொண்டீர்கள் என்று வியப்புடன் கேட்டேன். அப்போது லலிதா என்பவர் உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தில் அதற்கான பட்டய வகுப்பு (PG Diploma) நடத்தப்படுகிறது. அதன் பயிற்சி காலம் பத்து மாதங்கள் என்று கூறினார்.

அப்போதே சுவடிகளைப் பார்க்க வேண்டும் என்ற பேரவா என்னுள் எழுந்தது. எனவே நான் 1984-85 ஆம் கல்வியாண்டு உ.த.ஆ. நிறுவனத்தில் சுவடியியல் வகுப்பில் சேர்ந்தேன். குமரிமாவட்டத்திலிருந்து புறப்பட்டுப் புத்தகக் கண்காட்சியில் புதிதாக (stall) ஒன்றைப் பார்க்கச் செல்வது போல்தான் இருந்தது சென்னை நோக்கிய எனது பயணம். அந்தச் 'சுவடி புலம்' மிகக் கடினமானது என்பது அங்குச் சேர்ந்த பிறகுதான் புரிந்தது. அதற்குத் தமிழின் ஐந்திலக்கண அறிவு வேண்டும்; குறிப்பாக யாப்பிலக்கண அறிவு மிகவும் தேவை என்று. அங்குப் பயின்று தேறிய பின், சுவடியியல்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கற்பித்த எங்கள் ஆசிரியர் மு.கோ.இராமன் அவர்கள் முனைவர் பட்ட ஆய்வுக்காகப் 'பாரத மாவிந்தம்' என்னும் அச்சிடப்படாத சுவடியைப் பதிப்பிக்குமாறு பணித்தார். நான் சங்க இலக்கியத்தில் ஏதேனும் ஒரு தலைப்பில் ஆய்வு செய்ய நினைத்திருந்தேன். கேரளப் பல்கலைக் கழகத்தின் சுவடி நூலகத்தில் தமிழ் ஏட்டுச் சுவடிகள் பல அச்சாகாமல் உள்ளன. சுவடியைப் பற்றிப் பாடமாகப் படித்த நீங்களே செய்யாவிடில் அவற்றை யார் பதிப்பிப்பார்கள் என்று அவர் கவலையுற்றார். அவரின் வற்புறுத்தலின் பேரில் தான் 'பாரத மாவிந்தம்' என்னும் ஏட்டின் பதிப்புப்பணியை ஆய்வேட்டின் தலைப்பாகக் கொண்டேன். காரிய வட்டம் தமிழ்த்துறைப் பேராசிரியர் கி.நாச்சிமுத்து அவர்களின் வழிகாட்டுதலின் கீழ் 1988 இல் ஆய்வைச் செவ்வனே செய்து முடித்தேன். கி.பி.1989 இல் எனக்கு முனைவர் பட்டம் கிடைத்தது.

புத்தகமாக வெளிவராத இந்நூலை அச்சிட்டு வெளியிடுவது நல்லது என்று கூறினார் என் நெறியாளர் பேரா.நாச்சிமுத்து அவர்கள். எனவே நான் திருப்பதி தேவஸ்தானத்திற்கு நிதியுதவி வேண்டி 1991 இல் விண்ணப்பித்தேன். அவர்கள் எனக்கு அனுப்பிக் கொடுத்த நிதி இந்நூலை அச்சிடப் போதுமானதாக இல்லை. மேலும் அவர்கள் சில நிபந்தனைகள் விதித்திருந்தனர்.[1] என்னிடம் போதுமான நிதி வசதி அன்று இல்லாததால் நூலை வெளியிடமுடியவில்லை. எனவே அவர்கள் அனுப்பிய நிதியைத் திருப்பி அனுப்ப வேண்டியதாயிற்று.

---

[1] i. நூலை அச்சிடும்போது அவர்களிடம் நிதியுதவி பெற்றதை நூலில் குறிப்பிட வேண்டும், ii. வேறு யாரிடமேனும் நிதியுதவி பெற்றிருப்பின் அதை நுலில் குறிப்பிடக்கூடாது, iii. குறிப்பிட்ட எண்ணிக்கையில் அவர்களுக்குப் புத்தகம் தரவேண்டும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

எனக்குச் சுவடியியல் கற்பித்த ஆசிரியர் மு.கோ.இராமன் அவர்கள் மத்திய அரசின் நிதி உதவிபெற்று வெளியிடமுடியும் என்று கூறி, அங்கு விண்ணப்பிக்க உதவினார். மத்திய அரசிடமிருந்து ரூ. 50000/ தருவதாகக் கூறிக் கடிதம் வந்தது; அதைப் பெறுவதற்கு மாநில அரசின் கல்வித்துறை பரிந்துரை செய்து கடிதம் ஒன்று அனுப்ப வேண்டும் என்று அவர்கள் கடிதத்தில் கூறியிருந்தனர். அக்கடிதத்தை இணைத்துக் கேரள மாநிலத்தின் கல்வித்துறை அமைச்சரிடம் நேரில் சென்று விண்ணப்பம் கொடுத்தேன். அவர்களிடமிருந்தும் எவ்விதமான கடிதமும் வரவில்லை.

அதன் பின்னர் தமிழ்நாடு தமிழ் வளர்ச்சித்துறைக்கு நிதியுதவி வேண்டி விண்ணப்பித்தேன். அவர்கள் அனுப்பிய நிதியும் புத்தகத்தை அச்சிடப் போதுமானதாக இல்லை. திருப்பதி தேவஸ்தானம் விதித்த விதிமுறைகளை இவர்களும் முன் வைத்தனர். இதைப் பார்த்த என் நெறியாளர் பணத்தைத் திருப்பி அனுப்ப வேண்டாம், வேறு நிதியுதவி ஏதேனும் பெற்று நூலை வெளியிடலாம் என்று கூறினார். அவர் நல்லெண்ணத்தில்தான் சொன்னார். ஆனால் வேறு உதவி எதுவும் கிடைக்கவில்லை; இதற்குள் சில வருடங்கள் உருண்டோடி விட்டன. தமிழக அரசாங்கம் அனுப்பித் தந்த DD என்னிடமே இருந்தது.

பின்னர் எனக்கு 1996 ஆகஸ்ட் மாதம் கும்பகோணம் அரசு மகளிர் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளர் பணி கிடைத்தது. இதை அறிந்த தமிழ் வளர்ச்சித் துறையினர் அவர்கள் அனுப்பிய DD பணத்திற்குண்டான வட்டியாக ரூபாய் நானூறுக்கு மேல் கட்ட வேண்டும் என்று கல்லூரிக்குக் கடிதம் அனுப்பியிருந்தனர். இதைக் கண்ட எங்கள் கல்லூரி முதல்வர் திருமதி பி.டி. இராஜலெஷ்மி அவர்கள் என்னை மிகவும் கடிந்து கொண்டார், “உன்னால் பணத்தைப் பயன்படுத்த முடியவில்லையெனில் அப்போதே அதைத் திருப்பிக் கொடுத்திருக்க வேண்டும்; உன் சம்பளத்தில் நாங்கள் பிடித்தம் செய்து அனுப்பினால் அது “தண்டனை” என்றாகிவிடும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இப்போது தான் வேலையில் சேர்ந்திருக்கிறாய்; ஆகையால் நீ உன் கையிலிருந்து அந்த வட்டிப் பணத்தை அனுப்பிவிடு" என்று அறிவுறுத்தினார்; அவர் சொல்லிய வண்ணம் செய்தேன்.

நான் சென்னையிலுள்ள மாநிலக் கல்லூரியிலிருந்து ஓய்வு பெற்றபின் பாண்டிச் சேரியில் இயங்கிவரும் பிரெஞ்சு ஆசியவியல் ஆய்வுப் பள்ளியில் முதுநிலை ஆய்வாளராகப் பணியில் சேர்ந்தேன். இங்குள்ள பிரெஞ்சு இந்திய கலைக்கழகத்தில் ஒரு 'பாரத மாவிந்தம்' சுவடி உள்ளது என்று நான் ஆய்வு செய்யும் போதே எனக்குத் தெரியும். நான் பாண்டிச்சேரிக்கு வந்தபோது, அந்த அலுவலகத்தில் பராமரிப்புப் பணி நடந்து கொண்டிருந்தது; எனவே என்னால் சுவடியைப் பார்க்க முடியவில்லை. அன்று பார்க்க முடியாமல் போனதை இன்றாவது பார்க்கும் வாய்ப்புக் கிடைத்ததே என்று மகிழ்ந்தேன். அதைப் பார்த்தபோது அது என்னுடைய ஆய்வேட்டின் இன்னொருபடி என்பதை அறிந்தபோது என் மகிழ்ச்சி இரட்டிப்பாகியது. அதனால் அதன் ஒரு படியை அவர்களிடம் கேட்டு வாங்கினேன்.

எங்கள் அலுவலகத்தில் சங்க இலக்கிய நூல்களின் பதிப்புப்பணி 'நெதமிழ்' (NeTamil-2015-2020 திட்டம்) நடந்து கொண்டிருந்ததால், பல நூலகங்களுக்கும் சென்று சங்க இலக்கியச் சுவடிகளைப் படியெடுக்கச் செல்வோம். அவ்வாறு செல்லுங்கால் மதுரைத் தமிழ்ச்சங்கச் செந்தமிழ் கல்லூரியில் ஒரு 'பாரத மாவிந்தம்' ஏட்டுச் சுவடியைக் கண்டேன். அது எனது ஆய்வுக்கு நான் எடுத்துக் கொண்ட சுவடியின் வேறொரு படி என்று தெரியவந்தது; அதை எம் நிறுவனப் புகைப்படக் கலைஞர் கோ.இரவீந்திரன், உதவியாளர் இராமசுவாமி பாபு ஆகியோர் சிறப்பாகப் படியெடுத்துக் கொடுத்தனர். இந்நூலை இயற்றியவர் சோமன்; இவர் இயற்றிய பாரத மாவிந்தத்தின் மொத்தம் நான்கு சுவடிகள் கிடைத்தன. இந்நூலின் பாடுபொருளான பாண்டவர்கள் வைகுண்டம் செல்லும் கதை பதினாறு, பதினேழாம் நூற்றாண்டுகளில் தென்பாண்டி நாட்டுத்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தமிழ்மக்களிடையே மிகவும் செல்வாக்குப் பெற்று விளங்கியுள்ளது. இதற்கு இதே பாடுபொருள் கொண்ட கதைப்பாடல், நாடகம், காப்பியம் என எல்லா வகைகளிலும் நாற்பதுக்கும் மேற்பட்ட ஏட்டுச் சுவடிகள் இன்றும் நூலகங்களில் கிடைக்கின்றன; இதுவே தக்க சான்றாகும்.

நான்கு பாரத மாவிந்தம் சுவடிகள் கிடைத்ததும், அதை அச்சிட வேண்டும் என்ற எண்ணம் மீண்டும் தலைதூக்கியது. நேரமின்மை காரணமாக ஆய்வேட்டை வெளியில் கொடுத்துத் தட்டச்சுச் செய்தேன்; நான்கு சுவடிகளையும் ஒப்பிட்டுப் பாட வேறுபாடு கொடுத்துச் செவ்வனே செய்து முடித்தேன். இதை நன்முறையில் மதுரைப் பல்கலைக்கழகத் தமிழ்ப்பேராசிரியரும் (ஓய்வு), எங்கள் நிறுவனத் தமிழ்ப்பேராசிரியரும் கல்வெட்டாய்வாளருமான திரு.ஜி. விஜய வேணுகோபால் அவர்கள் மெய்ப்புத்திருத்திக் கொடுத்து உதவினார். இப்போது போதிய நிதி வசதி என்னிடம் இருந்ததால் நூலை அச்சிட்டு வெளியிட விரும்பினேன்; நூல் அச்சிடுவதற்கு ஏற்றவாறு இருந்தது.

இதைக் கண்ணுற்ற எங்கள் நிறுவனத் தமிழ்ப் பேராசிரியை முனைவர் ஏவா வில்டன் 'நெதமிழ்' (NeTamil) என்னும் ஐந்து ஆண்டு திட்டத்தின் தலைவர், என்னிடம் 'நெதமிழ்' என்னும் திட்டத்தில் அச்சில் வெளிவராத சுவடிகளை அச்சிட்டு நூலாக வெளியிட ஒரு வழி (option) உண்டு, அதன்படி இந்நூலை வெளியிடலாம், அதற்கு நீ ஆங்கிலத்தில் ஒரு முன்னுரை வழங்கவேண்டும் என ஆலோசனை கூறினார். காலதாமதம் செய்யாமல் ஆங்கிலத்தில் முன்னுரை எழுதிக் கொடுத்தேன். ஆங்கில முன்னுரையைச் சேக்கிழார் அடிப்பொடி டி.என். இராமச்சந்திரன் அவர்கள் சரிபார்த்துக் கொடுத்திருந்தார். எம் நிறுவனத் தலைவர் முனைவர் டொமினிக் குடால், எம் நிறுவனத்தின் உயர்நிலை ஆய்வாளர் முனைவர் ஹியூகோ ஆகியோர் கைகளிலும் தவழ்ந்தது பாரத மாவிந்தம். எதுவும்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நிகழவில்லை. ஏதேதோ காரணங்களால் அச்சிடும் பணியில் முன்னேற்றம் இல்லை.

பாரத மாவிந்தத்தின் பின்னால் அலைகடல் துரும்பாக அவதியுற நேர்ந்தது. என் தந்தை உயிரோடிருக்கும்போதே அதை அச்சிட்டுப் புத்தகமாக வெளியிட விரும்பினேன், முடியவில்லை. என் தந்தை உடல்நலமின்றிப் படுக்கையில் இருக்கும் போது, என்னிடம், "பூக்களையெல்லாம் போட்டோ எடுத்தாயே! அந்தப் புத்தகம் வந்துவிட்டதா" என்று கேட்டார். அந்தப் புத்தகம் குறிஞ்சிப்பாட்டின் பதிப்பு. அது 2021 ஜனவரி மாதம் வெளியானது. என் தந்தை 2020 செப்டம்பர் 18 இல் இறைவனடி சேர்ந்தார். புத்தகத்தைப் பார்த்ததும் என் தந்தையிடம் காட்ட முடியவில்லையே என வருந்தினேன்; கண்கள் பனித்தன; இதயம் கனத்தது.

கற்றறிந்தார் ஏத்தும் கலித்தொகை காட்டும் ஓர் உலகியல் உண்மை,
"கடைநா ளிதுவென் றறிந்தாரு மில்லை" (கலித்.12:15)

எனவே நான் நன்றாக இருக்கும்போதே பாரத மாவிந்தத்தை அச்சில் கொண்டு வந்துவிட வேண்டுமென்று விரும்பி அம்முயற்சியில் இறங்கினேன்.

பாண்டவர்கள் சந்திரகுலத்தைச் சேர்ந்தவர்கள்; அதனால் நூலின் முன்பக்க அட்டையை அழகுபடுத்த நிலவைக் கண்டு மலரும் ஆம்பல்பூவைத் தேர்ந்தெடுத்தேன். இந்நூலுக்குத் தமிழ் முன்னுரையுடன் ஆங்கில முன்னுரையும் கொடுத்துள்ளேன்; இது தேவையா என்ற கேள்வி எழலாம்; ஆம் தேவைதான். எனது ஆங்கில முன்னுரையைச் சரிபார்த்துக் கொடுத்தவர் திரு.டி.என். இராமச்சந்திரன்; அவர் இன்று உயிரோடு இல்லை; சென்ற ஆண்டு இறைவனடி சேர்ந்தார். அதனால் அவர் செப்பம் செய்து தந்ததை இழக்க விரும்பாமல் இங்கு இணைத்துள்ளேன். நான் சுவடியியல் படித்த நிறுவனத்தைச் சேர்ந்த ஒருவர் இந்நூலுக்கு அணிந்துரை தருவது பொருத்தமாக இருக்கும் என்று கருதி, என்னுடன் முதுகலை பயின்ற

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஒரு சாலை மாணாக்கியும், உ.த.ஆ.நி. இயக்குநருமான தமிழ்ப் பேராசிரியை (பொறுப்பு-ஓய்வு) முனைவர் அன்னிதாமஸ் மிர்துல குமாரியிடம் அணிந்துரை தருமாறு கேட்டேன்; அவர் இசைந்தார். எனவே பாரத மாவிந்தத்தை அச்சிடும் முயற்சியில் இறங்கினேன். என் தந்தை வானத்தில் நட்சத்திரமாகயிருந்து இந்தப் புத்தகத்தைப் பார்ப்பார் என நம்புகிறேன்.

த.இராஜேஸ்வரி

முதுநிலை ஆய்வாளர் (தமிழ்)

பிரெஞ்சு ஆசியவியல் ஆய்வுப் பள்ளி, பாண்டிச்சேரி-1.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நன்றியுரை

ஏட்டுச்சுவடியாக இருந்த 'பாரத மாவிந்தம்' என்னும் நூலின் செம்பதிப்பாகும் இது. கேரளப்பல்கலைக்கழகத்தில் (திருவனந்தபுரம்) முனைவர் பட்ட ஆவேட்டிற்காக மேற்கொண்ட ஆய்வுப்பணி. ஆய்வுக் காலத்தில் ஆய்வுமுறைகளைக் கற்பித்துக் கட்டுரைகள் செம்மையுற உதவிய என் நெறியாளர் கேரளப்பல்கலைக்கழகப் பேராசிரியரும் (ஓய்வு) , பிரெஞ்சு ஆசியவியல் ஆய்வு நிறுவனத்தின் முதுநிலை ஆய்வாளருமான முனைவர் கி.நாச்சிமுத்து அவர்களுக்கு நன்றியுடையேன்.

சுவடியைத் தேர்வு செய்யவும், படி எடுக்கவும், படி எடுக்கும்போது பாடல்களைச் செப்பம் செய்யவும் உதவியவரும் சுவடியியல் கற்பித்தவருமான என் ஆசிரியர் திரு.மு.கோ.இராமன் (சுவடி பாதுகாப்பாளர், ஆசிய ஆய்வு நிறுவனம், சென்னை) அவர்களுக்கும், பொருள் விளங்காத பாடல்களுக்குத் தகுந்த பொருள் கூறி உதவிய திரு.எஸ்.கே.இராமராஜன் (அகராதித்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்), அவர்களுக்கும், பாடலுடன் பொழிப்புரை போன்றவற்றைச் செப்பம் செய்து கொடுத்த நூல்கடல் தி.வே.கோபாலையர் (ஆய்வாளர், பிரெஞ்சு இந்தியக் கலைக்கழகம், பாண்டிச்சேரி) அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நூலாசிரியரின் காலம் ஊர் முதலிய செய்திகளைத் தெரிவித்து உதவிய திரு. கே.ஜி .கிருஷ்ணன் (ஓய்வு, கல்வெட்டாய்வாளர், மைசூர்), திரு.எ.சுப்பராயலு (கல்வெட்டுத் துறை, தமிழ்ப்பல்கலைக்கழகம்,) கி.இராஜநாராயணன் (எழுத்தாளர் இடைச்செவல்), ஆகியோருக்கும் என் நன்றியை உரித்தாகுகிறேன்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இதை அச்சில் கொண்டுவருவதற்கான முயற்சியை மேற்கொண்டபோது, சிரமம் பாராமல் நூல் முழுவதையும் ஒருமுறை மெய்ப்புப் பார்த்துத் திருத்திக் கொடுத்துதவிய மதுரைக் காமராஜர் பல்கலைக்கழகத் தமிழ்ப்பேராசிரியரும் (ஓய்வு), கல்வெட்டாய்வாளரும், பாண்டிச்சேரியில் இயங்கி வரும் பிரெஞ்சு ஆசியவியல் ஆய்வு நிறுவனத்தின் முதுநிலை ஆய்வாளருமான திரு.கே.விஜயவேணுகோபால் அவர்களுக்கும், இதற்குரிய ஆங்கில முன்னுரையைச் சரிபார்த்துக் கொடுத்த சேக்கிழார் அடிப்பொடி.டி.என்.இராமச்சந்திரன் அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதை நன்முறையில் அச்சிட்டுத் தந்த வெளியீட்டாளர் ஈரோட்டைச் சேர்ந்த அறம் பதிப்பகத்தாருக்கும், பதிப்பிற்குப் பொறுப்பேற்றிருக்கும் திருமதி ச.மாலதி என்பவருக்கும் என் மனம் கனிந்த நன்றி.

த.இராஜேஸ்வரி

முதுநிலை ஆய்வாளர் (தமிழ்)

பிரெஞ்சு ஆசியவியல் ஆய்வுப் பள்ளி, பாண்டிச்சேரி-1.

****

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பொருளடக்கம்

ஆய்வு முன்னுரை

தலைப்பு	பக்க எண்
1. முன்னுரை	1
1.1 Introduction	33
2. நூலாசிரியர் சோமன்	75
3. பாரத மாவிந்தம் கதைச்சுருக்கம்	95
4. தமிழ்நாட்டில் பாரதக்கதையின் செல்வாக்கு	105
5. பாரத மாவிந்தம் -- காப்பிய அமைப்பு	117
6. பாரத மாவிந்தம் - யாப்பு	141
7. பாரத மாவிந்தம் -அணிநலம்	151
8. பாரத மாவிந்தம் - மொழிநிலை	161
9. வியாசபாரதம், தமிழ் பாரத நூல்கள், மாவிந்த நூல்கள் - ஒப்பீடு	173
நூல் பதிப்பு	
1. பாயிரம்	209
1.1 திருநாட்டுச் சருக்கம்	223
2. துவராபதிச் சருக்கம்	243
3. துருவாசச் சருக்கம்	255
4. அத்தினபுரிச் சருக்கம்	287
5. துரோபதி மோட்சம் பெற்ற சருக்கம்	319
6. சிங்கத்தின் கதைச் சருக்கம்	361

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

7. கருடனைக் கண்ட சருக்கம்	445
8. அட்டவணை-1, பின்னிணைப்புக்கள் -- 1-3	575
9. துணை நூல்கள்	584
9. செய்யுள் முதல் குறிப்பு	592
11. அருஞ்சொல் பொருள் அகராதி முதலியன	603

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

1. முன்னுரை

1.1 நூற் பெயர்

பதிப்புக்கு எடுத்துக் கொண்ட இந்நூலின் பெயர் பாரத மாவிந்தம். இந்நூல் பாண்டவர்களின் துறக்கப் பயணத்தைப் பற்றிக் கூறுகிறது. பாரதக்கதையின் இறுதி மூன்று[1] பருவங்களின் கதைப்பகுதியைக் கூறுவதாலும், பாண்டவர்கள் வைகுண்டம் (திருமாலின் இருப்பிடம்)[2] செல்வதற்கு மேற்கொண்ட பயணம், 'மாவிந்தம்' என்னும் காட்டின் வழி அமைந்திருப்பதாலும், 'பாரத மாவிந்தம்' என்னும் பெயர் நூலுக்கு வழங்கியிருக்கக்கூடும். பாரதக்கதையின் தொடர்ச்சியாக வரும் கதைப்பகுதியைக் குறிக்கும் வகையில், 'மாவிந்தக் கதை' என்று வழக்கிலிருந்த பெயரைப், 'பாரத மாவிந்தம்' எனப் பெயரிட்டிருக்க வேண்டும். தமிழில், பாரதம் என்று சொல்வதே பெருவழக்காக உள்ளது. இந்நூல் இதுவரை அச்சில் பதிப்பிக்கப்பெறாமல் சுவடி வடிவிலேயே உள்ளது. முதன்முறையாக இது அச்சிற் பதிப்பிக்கப் பெறுகிறது.

இப்பதிப்புக்குக் கிடைத்த, பாரத மாவிந்தம் சுவடிகள் நான்கு[3]. இவற்றுள் மூன்று பாரத மாவிந்தச் சுவடிகள்[4] வில்லிபுத்தூரார் இயற்றிய பாரதச் சுவடியோடு அதன் இறுதியில் வைக்கப் பட்டுள்ளன. மதுரைத் தமிழ்ச்சங்கச் செந்தமிழ்க் கல்லூரி நூலகத்தில் இச்சுவடி (சு.எண்198) தனி நூலாக வைக்கப்பெற்றுள்ளது. ஒரே ஆசிரியரால் பாடப்பெற்ற இந்த நூலின் பெயர் நான்கு சுவடிகளிலும் மூன்று விதமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. படியெடுத்தவர் அவ்வாறு எழுதியிருக்கக்கூடும் . சுவடி எண் 3895b இல் பாரத மாவிந்தம் எனவும், சுவடி எண் 11413 இன் முதல் ஏட்டில் மாவிந்தம் எனவும் இறுதி ஏட்டில் மாவிந்த பாரதம் எனவும், சுவடி எண் 198, RE 10857 ஆகியவற்றில் பாரத மாவிந்தம் எனவும் எழுதப்பெற்றுள்ளன.

இவற்றுள் மூன்று சுவடிகளில் பாரதத்தைத் தொடர்புபடுத்திப், பாரத மாவிந்தம்[5] என்றும் ஏனை ஒன்றில் (சு.எண் 11413), 'மாவிந்தம்' என்னும் காட்டின் பெயரை மட்டும் தொடர்புபடுத்தி 'மாவிந்தம், மாவிந்த பாரதம்' என்றும் நூற்பெயர் குறிக்கப்பெற்றுள்ளது. பாரத மாவிந்தம் என்னும் பெயர் மூன்று சுவடிகளில் காணப்படுவதால் பெரும்பான்மை கருதி அப்பெயரிலேயே இந்நூல் பதிப்பிக்கப்பெறலாயிற்று.

வில்லிபுத்தூரார் பாரதக்கதையின் பத்தாம் பருவம்வரை பாடி நூலை முற்றுவித் திருக்கிறார். இந்நூல் பாண்டவர்களின் முடிவைப் பற்றிக் கூறும் நிலையில் அமைந்துள்ளதால், வில்லிபுத்தூரார் பாரதத்தின் இறுதியில் அதன் தொடர்ச்சியாகப் படிக்கும் வகையில் பாரத மாவிந்தத்தை அதனுடன் சேர்த்து வைத்திருக்கக் கூடும்.

---

[1] மௌசலப் பருவம், மகாப்பிரஸ்தானிகப் பருவம், சொர்க்காரோகணப் பருவம்

[2] தமிழ்ப் பேரகராதி –Vishnu's heaven என்னும் குறிப்புத் தருகிறது.

[3] சோமன் என்பவர் இயற்றியது.

[4] கேரளப் பல்கலைக்கழகச் சுவடி நூலகச் சுவடிகள் இரண்டு (சுவடி எண் 3895b,11413). பாண்டிச்சேரி பிரெஞ்சு இந்திய நிறுவனச் சுவடி ஒன்று (RE 10857).

[5] சுவடி எண் 3895b, 11413 , RE10857.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

'பாரத மாவிந்தம்' என்பது, பாரதம் + மாவிந்தம் என விரியும். இதற்குப் பாரதக்கதை மாந்தர்கள், மாவிந்தம் என்னும் காட்டின்வழிச் சென்ற செலவைப் பற்றிக் கூறுகிறது என்று பொருள்கொள்ளலாம்.

'மாவிந்தம்' என்ற காடு வைகுண்டம் செல்லும் வழியில் உள்ளது. இது இடஆகுபெயராய் மாவிந்தமாகிய வைகுண்டத்திற்குப் பாண்டவர்கள் சென்ற வரலாறு உணர்த்தும். மேலும், இது இருமடி ஆகுபெயராய் அவ்வரலாறு உணர்த்தும் கதை நூலைக் குறிக்கிறது. பாரத மாவிந்தம் என்பது பாரதக்கதையிலுள்ள மாவிந்தம் எனும் நூல் பகுதி என்று வேற்றுமைத்தொகையாய்ப் பொருள்தரும். 'மாவிந்தம்' என்பது மகா விந்தம் என்ற மூலச்சொல்லின் தமிழ் வடிவம் ஆகும்.

'மகாவிந்தம்' என்ற சொல்லுக்கு, 'வைகுண்டம்' என்று தமிழ்ப் பேரகராதி உவின் சுலோவைச் சான்று காட்டிப் பொருள் கூறுகிறது. இதற்கு எந்த மேற்கோளும் தரவில்லை. 'மகாமேரு – மாமேரு', 'மகா புரணம் – மாபுராணம்', என்று வருதல்போல் 'மகாவிந்தம் மாவிந்தம்' என வருதல் இயல்பு.

பாரத மாவிந்தத்தில், இடம்பெறும் மகவிந்தம் (பா.மா. 83, 96, 178, 193, 213, 236), மகாவிந்தம் (பா.மா.18, 19, 49) மாவிந்தம் (பா.மா.15, 21, 272, 289, 567, 690), விந்தம் (பா.மா. 66, 70, 201, 205, 240, 251, 258, 283, 311, 325, 343, 545, 670) என்னும் சொற்கள் முறையே 'வைகுண்டம்' (பா.மா.18, 70, 83, 289) என்றும், 'வைகுண்டத்திற்குச் செல்லும் வழியிலுள்ள காடு' (பா.மா.49, 96, 272, 283) என்றும், 'விந்திய மலையை அடுத்துள்ள காடு' (பா.மா.251) என்றும் பொருள் கொள்ளும் வகையில் அமைந்துள்ளன.

எனவே மாவிந்தம் என்னும் சொல் வைகுண்டம் செல்லும் வழியிலுள்ள காட்டையும், வைகுண்டத்தையும் குறிக்கிறது என்று புலனாகிறது. விந்தம் என்பது விந்தியமலையை அடுத்துள்ள காடு, இது மாவிந்த வனம் செல்லும் வழியில் பாண்டவர்கள் கடந்து சென்ற காடு என இந்நூல் குறிப்பிடுகிறது என்று கொள்ளலாம்.

நிடத நாட்டில், 'மாவிந்தம்' என்ற பெயரில் ஒரு நகர் இருந்ததாக நளவெண்பா குறிப்பிடுகிறது.

.. சீத களபச் செழுஞ் சேற்றால் – வீதிவாய்
மானக் கரிவழுக்கு மாவிந்த மென்பதோர்
ஞானக் கலைவாழ் நகர் (நள.13).

நளவெண்பா குறிப்பிடும் "மாவிந்தம்" என்பது மாவிந்த நூல்கள் காட்டும் மாவிந்தத்தி னின்று வேறுபட்டது. "மாவிந்தம்" என்னும் பெயர், "மாபெந்தம்", "மகாபெந்தம்", "மாவிந்த பதம்" போன்ற பெயர்களில் பெருந்தேவனார் பாரதம் (மாவிந்தம்), தஞ்சை சரசுவதி மாகால் மாவிந்தம், வைகுந்த அம்மானை ஆகியவற்றில் வழங்கப்படுவதைக் கீழ்வரும் பாடலடிகள் உணர்த்துகின்றன.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மாபெந்தம் போந்தோம் (பெருந். மா.198)

மகாபெந்தம் போக (தஞ்.சர.1)

மகாவிந்த பதம் (வைகு.ப.156) .

பாரத மாவிந்தத்தில் வரும்,

வருத்தமாய் மன்னன் மாவிந்தஞ் சேர்ந்ததை (பா.மா.15)

தாம மன்னர் மகாவிந்தஞ் சார்ந்ததே (பா.மா.18)

மன்னன் மகாவிந்தத்தை யடைந்துள மெய்க்கதையே (பா.மா.19)

மங்கலஞ்சேர் மாவிந்தக் கதையை (பா.மா.21)

என்னும் தொடர்கள் மாவிந்தம், மகாவிந்தம், மாவிந்தக் கதை என்ற பெயர்கள் இந்த நூலுக்கு வழங்கப்பெற்றிருக்கும் பரியாயப் பெயர்கள் என்று கருதத் தூண்டுகின்றன.'மகாவிந்தம்' என்ற வழக்கு வடமொழிப் பாரதநூல்களில் உள்ளதாகத் தெரியவில்லை. வடமொழி அகராதிகளிலும் இச்சொல் இடம் பெறவில்லை. இதிலிருந்து மாவிந்தம் என்ற கருத்துத் தமிழ்நாட்டில் மட்டும் வழக்கில் உள்ளமை புலனாகின்றது.

மாவிந்த வரலாறு கூறும் கதைக்கருவில் அமைந்த நூல்கள் பல. இவை இலக்கிய வடிவிலும், நாடக வடிவிலும், நாட்டுப்புறப் பாடல் வடிவிலும் காணப்படுகின்றன. இவையெல்லாம் மக்கள் இக்கதைப் பகுதியை எந்த அளவு விரும்பிக் கேட்டிருக்கின்றனர் என்பதையே உணர்த்துகின்றன.

1. 2 பதிப்புக்குப் பயன்படுத்திய சுவடிகள்

இந்தப் பதிப்புக்குப் பயன்படுத்திய சுவடிகள் நான்கு; இதுவரை அச்சாகவில்லை. பாரத மாவிந்தத்தின் இரு சுவடிகள் கேரளப் பல்கலைக்கழகச் சுவடி நூலகத்தில்[1] உள்ளன. புதுச்சேரி பிரெஞ்சு இந்திய கலைக்கழக நிறுவனத்திலுள்ள சுவடி ஒன்று[2]; இவை மூன்றும் முழுமையானவை; படிக்கும்படி நல்லநிலையில் உள்ளன. மதுரைத் தமிழ்ச் சங்கச் செந்தமிழ்க் கல்லூரி நூலகச் சுவடி[3] ஒன்று; இது தெளிவாகப் படிக்கும் நிலையில் இருப்பினும் பல ஏடுகள் சிதைந்து குறையாக உள்ளது. இந்நான்கு சுவடிகளுள்ளும் கேரளப் பல்கலைக்கழகச் சுவடி எண் 3895b காலத்தால் முற்பட்டது. எனவே இதை அடிப்படையாகக் கொண்டு ஏனைய மூன்றும் ஒப்பிடப்பட்டன.

1.2.1 சுவடி எண் 3895b

இது திருவனந்தபுரம் காரியவட்டத்திலுள்ள கேரளப் பல்கலைக்கழகக் கீழ்த்திசைச் சுவடி நூலகத்தில் காணப்படுகிறது. இதைக் கொடுத்தவர் சுப்பையா கணபதி. இவரது ஊர் அரிய நாயகிபுரம்; இது ஆயக்குடி என்னும் ஊரிலுள்ள சுவடி.

---

[1] சுவடி எண் 3895b, 11413.
[2] சுவடி எண் RE 10857.
[3] சுவடி எண் 198.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

1. சுவடியின் இயல்பு

இச்சுவடியில் 296 ஆம் ஏடு முதல் 341 ஆம் ஏடு வரை 46 ஏடுகளில் பாரத மாவிந்தம் எழுதப்பட்டுள்ளது; இது வில்லுபுத்தூரர் பாரதச் சுவடியின் இறுதியில் வைக்கப்பட்டிருக்கிறது. இதன் நீள அகலம் 45.5x3.5 செண்டிமீட்டர். இந்நூல் நல்ல நிலையில் முழுமையாக உள்ளது; பக்கத்திற்கு ஒன்பது அல்லது பத்து வரிகள் எழுதப்பட்டுள்ளன. இது படிக்கும் வகையில் தெளிவான கையெழுத்தைக் கொண்டது.

இதில் 750 பாடல்கள் உள்ளன. இச்சுவடியின் முதல் ஏட்டில், 'பாரத மாவிந்தம்', 'கடவுள் வணக்கம்' என்று யானைமுகனை வணங்கும் கடவுள்வாழ்த்துப் பாடல் மட்டும் எழுதப்பட்டிருக்கிறது. இரண்டாம் ஏட்டில், 'கடவுள் வணக்கம், பாயிரம் அவையடக்கம்' என்னும் குறிப்புடன் ஏட்டின் எண் தமிழ் எண்ணாக எழுதப்பெற்றுள்ளது. இதில் சிவபெருமான், பார்வதி, யானைமுகன், முருகப்பெருமான், திருமால், திருமகள், கலைமகள், நாயன்மார் நால்வர் முதலியோரை வாழ்த்திப் பரவும் பாடல்கள் உள்ளன. யானைமுகனை இருமுறை வழுத்தும் பாடல் இடம்பெற்றுள்ளது. ஆசிரியர் அவர்மீது கொண்ட பக்திப் பெருக்கால் அவ்வாறு பாடியிருக்க வேண்டும். பின்னர் வரும் ஏடுகளில் அந்தந்தச் சருக்கத்தின் பெயர் குறிக்கப்பெற்றுள்ளது. பதிப்புக்குரிய நான்கு சுவடிகளிலும் ஏட்டின் பக்க எண், பாடல் எண் போன்றவை தமிழ் எண்ணால் குறிக்கப்பெற்றுள்ளன.

2. சுவடியில் குறிப்பிட்டிருக்கும் காலம்

இறுதி ஏட்டிற்கு முன்புள்ள ஏட்டில், ௯௱௫௰௩ ௵ ஆனி ௴ ௨௰௩ ௳[1] சுக்கிர வாரமும் சோதி நட்செத்திரமும் நவமியும் பெற்ற சுபதினத்தில் எழுதி முகித்தது. மானவீர வளனாடு தென்பத்தில் வயிவத்திலிருக்கும் வழியடிமையா பிள்ளை மகன் முத்து வயிரவன், பெருமாள்பிள்ளைக்கு [2] எழுதிக் கொடுத்த சுவடி. நீடூழி வாழக் குமரன் கிறுபை செய்ய வேணும் மாயன் சகாயம் என்று எழுதப்பட்டிருக்கின்றது. (பார்க்க: நி.படம் 1)



நி. படம் 1.

இதில் சுவடியைப் படியெடுத்தவர் பெயர்; படியெடுத்தவரின் தந்தை பெயர், யாருக்காகச் சுவடி படியெடுக்கப்பட்டதோ அவருடைய பெயர் என மூன்று பெயர்கள் காணப்படுகின்றன.

---

[1] 953 ஆம் ஆண்டு ஆனி மாதம் 23 ஆம் நாள்.

[2] 'க்கு' என்பதைக் குறிக்கும் குறியீடு.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

◆படியெடுத்தவர் பெயர், முத்து வயிரவன்;

◆படியெடுத்தவரின் தந்தை பெயர், வழியடிமையா பிள்ளை.

◆ படியெடுக்கப்பெற்றது, பெருமாள் பிள்ளைக்கு.

இதில் கூறப்படும் ஆண்டு கொல்லம் ஆண்டு 953; இதைக் கிறித்தவ ஆண்டுக்கு மாற்றினால்[1] இது படி எடுக்கப்பட்ட காலம் கி.பி.1778 ஆம் ஆண்டு ஜுலை மாதம் ஆகும். பாடல்களின் எண்ணிக்கை சருக்கவாரியாகவும் மொத்தமாகவும் இறுதி ஏட்டில் எழுதப்பெற்றுள்ளது. பாடல்களின் விருத்தவகை மாறும்போது, அப்பாடல்கள், 'வேறு' என்பதன் சுருக்கமாக, 'வெ' என்னும் சுருக்கக் குறியீடு பெற்றுள்ளன.

3. மானவீர வளநாடு

சுவடியில் குறிப்பிட்டிருக்கும், 'மானவீர வளநாடு' சுவடியைப் படியெடுத்த முத்துவயிரவனின் ஊர். இந்த மானவீர வளநாடு என்ற நாட்டுப்பிரிவு பாண்டிய நாட்டில் இரண்டு பகுதிகளுக்கு வழங்கி வந்திருக்கின்றது. ஒன்று பசும்பொன் முத்துராமலிங்க மாவட்டத்திலுள்ள பார்த்திபனூரிலிருந்து பரமக்குடி செல்லும் வழியில் அமைந்த கமுதக்குடி என்ற ஊரைச் சேர்ந்த பகுதிகள் அடங்கியதாகும்.[2]

இன்னொன்று இன்றைய திருச்செந்தூர் வட்டத்தில் அமைந்த பெருங்குளம் என்ற ஊருக்குக் கிழக்கேயும் வடகிழக்கேயும் இருந்த பகுதிகள் சூழ்ந்ததாகும்.[3] இதில் நாங்குநேரி வட்டத்தைச் சார்ந்த திருக்குறுங்குடிக்குக் கிழக்கிலும் தென்கிழக்கிலும் உள்ள பகுதிகளும் அடங்கி இருந்தன. 'வயிவம்' என்ற ஊர் திருச்செந்தூர் வட்டத்தில் அமைந்த, மானவீர வளநாட்டை சார்ந்த ஊராக விளங்கியிருக்க வேண்டும்; இவ்வூரின் பழம்பெயர் வடிவம், 'வயிரகம்' என்று இருக்க வேண்டும். வயிரகம் என்ற இப்பெயரில் ஊர் ஒன்று பழைய நாட்டுப் பிரிவான மானவீர வளநாட்டில் இன்றைய திருச்செந்தூர் வட்டத்தில் அமைந்திருப்பதைக் கட்டாரி மங்கலம் (திருச்செந்தூர் வட்டம்) கல்வெட்டுத் (சுமார் கி.பி. 1140) தெரிவிக்கின்றது[4]. இதற்கு, 'மானவீர நல்லூர்'[5] என்ற மற்றொரு பெயரும் இருந்திருப்பதை இக்கல்வெட்டுத் தெரிவிக்கிறது. எனவே, சுவடியில், மானவீர வளனாட்டு வயிவத்து எனக் குறிப்பிடப்பெற்றிருக்கும் ஊர் இன்றைய திருச்செந்தூர் வட்டத்தில் அமைந்த கட்டாரி மங்கலத்துப் பகுதிகளில், 'வயிரகம்' என்ற பெயரில் கி.பி.12 ஆம் நூற்றாண்டில் விளங்கிய ஊராக இருக்க வேண்டும். மேலும் (மானவீர வளநாட்டு), வயிவம் என்பது வயிரகம் என்பதன் திரிபாக இருக்கக் கூடும். இதிலிருந்து இந்த, மானவீர வளநாடும் வயிரகம் அல்லது வயிவம் என்ற ஊரும் திருச்செந்தூர் பகுதியில் அமைந்திருந்தன என்பது தெளிவாகிறது.

---

[1] கிறித்தவ ஆண்டுக்கு மாற்ற 825 என்னும் எண்ணைச் சேர்க்க வேண்டும்; சேர்த்தால் வருவது 1778 (953+825 = 1778).

[2] சௌத் இன்டியன் இன்ஸ்கிரிப்ஷன்ஸ்,தொகுதி 16, எண் 145, 157, 194.

[3] மேற்படி.93, 250 ஆனுவல் ரிப்போர்ட் ஆன் இன்டியன் எப்பிகிராபி 1927 -28, எண் 273.

[4] மேற்படி.தொகுதி 14, எண் 250.

[5] திருச்செந்தூரில் உள்ள வரகுணப் பாண்டியன் கல்வெட்டில் (கி.பி..875-880) எழுதி வளநாட்டு மானவீரப் பட்டினம் என்ற ஊர் குறிப்பிடப்படுகிறது என்பது இங்குக் குறிப்பிடத் தக்கது. மேற்படி எண் 16, 26 ஆ 1912

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

'வயிரகம்' , என்று கி.பி.1140 இல் வழங்கிய பெயரே இச்சுவடி எழுதப்பட்ட கி.பி.1778 -இல், வயிவம் எனத் திரிந்திருக்கிறது என்று தெரிகிறது. இந்த, வயிவம் என்ற ஊர் இப்பொழுது வழங்கிவருகிறதா என்பது தெரியவில்லை. இந்தச் சுவடிக் குறிப்பில் குறிப்பிட்டிருக்கும், 'தென்பத்தில் வயிவம் என்ற பெயரில் உள்ள, தென்பத்தும், இன்று திருநெல்வேலி மாவட்டத்தில் காணப்படும் தென்பத்தும் (கிராம எண் 45) ஒன்றாயின், வயிவம் அல்லது வயிரகம் என்ற ஊர் அதையொட்டிய பகுதிகளிலேயே இருந்திருக்கவேண்டும்.

1. 2. 2 சுவடி எண் 11413

இது கேரளப்பல்கலைக்கழகச் சுவடி நூலகத்திலுள்ள மற்றொரு சுவடி. இச்சுவடியும் வில்லிபுத்தூரார் பாரதச் சுவடியின் இறுதியில் காணப்படுகிறது. இந்தச் சுவடியை நூலகத்திற்கு வழங்கியவர் தச்சநல்லூரிலுள்ள சீதாராம சர்மா; அவர் சுவடியைக் கொடுத்த நாள் 5.8.1942. திருநெல்வேலியின் ஒரு பகுதியாய் அமைந்த ஊர் தச்சநல்லூர்.

1. சுவடியின் இயல்பு

இச்சுவடியில் 169 ஆம் ஏடு முதல் 194 ஆம் ஏடு வரை 26 ஏடுகளில் பாரத மாவிந்தம் எழுதப்பெற்றுள்ளது. இதன் நீள அகலம் 41 x 4 சென்டிமீட்டர். முதல் ஏட்டின் இடப்புறம், 'மாவிந்தப் பாயிரம்' என்னும் குறிப்புக் காணப்படுகிறது; நூல் முழுமையானது; பக்கத்திற்குப் பதினான்கு வரிகள் உள்ளன. சுவடி நல்ல நிலையில் படிக்கும் வண்ணம் எழுத்துத் தெளிவாகக் காணப்படுகிறது. சுவடியில் 759 பாடல்கள் உள்ளன.

2. சுவடியில் குறிப்பிட்டிருக்கும் காலம்

சுவடியின் இறுதி ஏட்டில், ௲௰௪ ௵ ஆவணி ௴ ௨௰[1] அமரபட்சத்து துதிகையும் பூரட்டாதி நஷெத்திரமுங் கூடிய சுபதினத்தி லெழுதி முடிந்த மகாபாரதம். சிவசுப்பிரமணியன் கையெழுத்து நீடுழி வாழ்க. ஸ்ரீ ராமஜயம் என்னும் குறிப்புக் காணப்படுகிறது. சுவடியில் குறிப்பிட்டிருப்பது கொல்லம் ஆண்டு. இதைக் கிறித்தவ ஆண்டுக்கு மாற்றினால், இது படியெடுக்கப்பட்ட காலம் கி.பி.1839 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதமாகும். இறுதி ஏட்டில் படியெடுத்தவர் பெயர் சுப்பிரமணியம் என்று உள்ளது; வேறு குறிப்பு இல்லை. (பார்க்க: நி.படம்2)



நி.படம். 2.

[1] 1014 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 20 ஆம் நாள்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

(சுவடியில் காணப்படும் ME – Malayalam Era என்பதன் சுருக்கம். கொல்லம் ஆண்டு).

1. 2. 3 சுவடி எண் 198

இது மதுரைத் தமிழ்ச்சங்கச் செந்தமிழ்க் கல்லூரி நூலகத்தில் உள்ளது. இது இங்கு வில்லிபாரதத்தோடு சேர்த்து வைக்காமல் தனியாக வைக்கப்பட்டிருக்கிறது.

1. சுவடியின் இயல்பு

இதன் நீள அகலம் 39.25x3 சென்டிமீட்டர். சுவடியின் முதல் ஏட்டில், 'பாரத மாவிந்தம்' என்னும் குறிப்புக் காணப்படுகிறது. அதையடுத்து ஒரு வெற்று ஏடு உள்ளது. அதற்கடுத்த ஏட்டில், 'ஹரி ஓம் ஸ்ரீ மகாபாரதம் மாவிந்தம், சிறப்புப் பாயிரம்' என்று குறிக்கப் பெற்றுள்ளது. ஏட்டில் பக்கத்திற்கு ஏழு வரிகள் எழுதப்பெற்றுள்ளன. (பார்க்க: நி.படம் 3)



நி.படம். 3

இச்சுவடியில் மட்டுமே ஒவ்வொரு சருக்கத்தின் இறுதியிலும், அந்தந்தச் சருக்கத்தின் பாடல்களின் எண்ணிக்கையுடன், அதுவரை எழுதப்பெற்ற பாடல்களின் தொகை எண்ணையும் சேர்த்துக் கொடுக்கும் முறை கையாளப்பட்டுள்ளது. இதைப் படம் 4 இல் காண்க. பார்க்க: படம் 4, ஏடு எண் 15.



நி.படம். 4

மேலே காணப்படும் படம் 4 இல் ஏட்டின் இரண்டாம் வரியில், '...தோன் ரு௯ ஆக விருத்தம் ா௱ரு௯[1] துறுவாசச் சருக்க முற்றிற்று' என்று குறிக்கப்பெற்றுள்ளது. இதில் ரு௯ என்பது துறுவாசச் சருக்கத்தில் உள்ள பாடல்களின் எண்ணிக்கை; ா௱ரு௯ என்பது துறுவாசச் சருக்கம் வரை உள்ள பாடல்களின் தொகை எண். சுவடியில் 1 முதல் 71 ஆம் ஏடுவரை பாரத

[1] ரு௯ (59) ஆக விருத்தம் ா௱ரு௯ (159).

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மாவிந்தம் எழுதப்பெற்றுள்ளது. சுவடி முழுமையாக இல்லை. சிதைவுடன் காணப்படுகிறது; எழுத்துக்கள் படிக்கும் நிலையில் தெளிவாக உள்ளன.

2. சுவடியில் குறிப்பிட்டிருக்கும் காலம்

சுவடியின் இறுதி ஏட்டில், [பிர]பவ வருஷம் ஆவணி மீ இது எழுதி முடித்தது. காரதீவுகள் பூமி பிராமணன் முருகேசர் புலவர். கிருஷ்ண செயம் ***மயம் குருவே துணை. குருவடி வாழ்க' என்ற குறிப்பே காணப்படுகிறது. காரதீவுகள் பூமி என்பது எவ்வூரைக் குறிக்கிறது என்று தெரியவில்லை. காரதீவுகள் என்ற பெயரில் இலங்கையில் ஓர் இடப்பெயர் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. 'காரைத்தீவு என்ற பகுதி மணிபல்லவமாகக் கருதப் பொருத்தம் உண்டு' என்று தம் நூலில்[1] குறிப்பிட்டிருக்கிறார் மு.இராகவ ஐயங்கார். சி.கலைமகள், 'இலங்கைத்தீவின் கிழக்கு மட்டகிளப்பு மாகாணத்தின் தென் திசையில் 24 கல் தொலைவிற்கப்பால் கல்முனை என்னும் சிறிய நகரம் உள்ளது அந்நகரின் 3 கல் தொலைவு வடக்குப் பகுதியில் உள்ள காரைத்தீவு என்னும் ஊர்' என்று 'விபுலானந்தரின் வாழ்க்கை வரலாறு,' என்னும் கட்டுரையில்[2] குறிப்பிட்டிருக்கிறார். இவற்றிலிருந்து கராத்தீவு இலங்கையிலுள்ள ஊர் என்று அறியமுடிகிறது. இறுதி ஏட்டில், 'ஆக விருத்தம் எாஅ0' (780) [3]என்று குறிப்பிட்டிருப்பதால், இது ஏனைய மாவிந்த நூல்களைவிடக் கூடுதலான பாடல்களைக் கொண்டிருக்க வேண்டும். நூல் சிதைந்திருப்பதால் அவற்றை இனங்காண முடியவில்லை.

1.2.4 சுவடி எண் RE 10857

இச்சுவடி பாண்டிச்சேரி பிரெஞ்சு இந்திய கலைக்கழக நிறுவன நூலகத்தில் உள்ளது. இதுவும் வில்லிபுத்தூரர் பாரதச் சுவடியோடு சேர்த்து அதன் இறுதியில் வைக்கப்பெற்றுள்ளது.

1. சுவடியின் இயல்பு

இதன் நீள அகலம் 41 x 4 சென்டிமீட்டர். இதில் முதலில் உள்ள 52 ஏடுகளில் பாரத மாவிந்தம் எழுதப்பெற்றுள்ளது. நூல் முழுமையானது; நல்ல நிலையில் படிக்கும் வண்ணம் காணப்படுகிறது; பக்கத்திற்குப் பத்து வரிகள் உள்ளன. முதல் ஏட்டின் இடப்புறம்,'பாரத மாவிந்தம், கடவுள் வணக்கம், பாயிரம் அவையடக்கம்' என்னும் குறிப்புக் காணப்படுகின்றது. இறுதி ஏடு, 'கெருடனைக் காண்டற் சருக்க முற்றும்' என்னும் குறிப்புடன் முடிகிறது. இதில் படியெடுத்தவரின் பெயர் போன்றவை இல்லை. இதில் 759 பாடல்கள் உள்ளன.

---

[1] "மணிமேகலையும் புத்த ஜாதகமும்", ஆராய்ச்சித் தொகுதி, ப. 222.
[2] "விபுலானந்தரின் வாழ்க்கை வரலாறு", ப.12, இலக்கியக் கட்டுரைகள்", சி.கலைமகள், 1993, சென்னை-14.
[3] ஏடுகள் சிதைந்திருப்பதால் பாடல்கள் எத்தனை எனக் கணக்கிடமுடியவில்லை. இறுதி ஏட்டில் 780 என்று குறிப்பிடப்படுள்ளது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

1.3 சுவடிகளில் உள்ள எழுத்தின் தன்மை

சுவடி எண்3895b, 11413, RE 10857 ஆகிய மூன்றிலும் மெய்யெழுத்துக்கள் புள்ளியின்றியும், குறில் நெடில் வேறுபாடுணர்த்தும் ஒற்றைக் கொம்பு இரட்டைக் கொம்பு வேறுபாடில்லாமலும், 'எ' கர 'ஏ' காரத்திற்கும் வேறுபாடில்லாமலும், இடையின 'ர'கரத்திற்கும் நெடி குறிக்கும் காலுக்கும் ('ோ') வேறுபாடில்லாமலும் காணப்படுகின்றன. சுவடி RE 10857 ஐத் தவிர ஏனைய இரண்டிலும்[1] வல்லின 'ற'கரம் ஒரு வளைவே பெற்றுள்ளது. சுவடி எண் 198, RE 10857 ஆகியவற்றில் வல்லின, 'ற'கரம் இப்போது வழக்கில் உள்ளதுபோல் இரு வளைவுகள் கொண்டுள்ளது. சுவடிகள் 3895b, 11413, 198 ஆகிய மூன்றிலும், 'ஈ'கார உயிர்நெடில் எழுத்துக் கல்வெட்டில் எழுதுவதுபோல், 'இ'காரத்தின் மேல் சுழித்து எழுதப்பட்டுள்ளது. பார்க்க: படம் 2, 3, 4.



நி.படம்: 5, பா.மா.சுவடி 1 (பாடல் 646)



நி.படம்: 6, பா.மா.சுவடி 2 (பாடல் 644)



நி.படம்: 7. பா.மா.சுவடி 3 (பாடல் 713)

சுவடி 198 இல் மெய்யெழுத்துக்கள் தவிர, ஏனைய எழுத்துக்கள் இப்போது வழக்கில் உள்ளதுபோல் எழுதப்பெற்றுள்ளன. ஆகையால் நான்கு சுவடிகளுள்ளும் காலத்தால் பிற்பட்டது சுவடி எண் 198 என்று துணியலாம்.

---

[1] சு.எண். 3895b, சு.எண்.11413.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

1.4 குடிவழிமுறை[1]



1. பதிப்புக்குப் பயன்படுத்திய நான்கு சுவடிகளுள், கேரளப் பல்கலைக்கழகச் சுவடிகள் இரண்டும் ஒன்றின் படிகளல்ல. சுவடி 3895b ஐவிடச் சுவடி 11413 இல் ஒன்பது பாடல்கள் கூடுதலாக[3] உள்ளன. எனவே இரண்டும் வெவ்வேறு சுவடிகளின் படிகள்.

2. மேலும் சுவடி 3895b இல் கருடனைக் காண்டற் சருக்கத்தின், 'இவர்தா னுலகத்தினில்' என்று தொடங்கும் பாடல் 169 ஆம் பாடலாகவும், 'தேவாதிய ரேவல்கள்' என்று தொடங்கும் பாடல் 170 ஆம் பாடலாகவும் உள்ளன. ஏனைய மூன்று சுவடிகளிலும் (சுவடி 2,,3,4) இவ்விருபாடல்களும் இடம் மாறித், 'தேவாதிய ரேவல்கள்' என்று தொடங்கும் பாடல் 169 ஆம் பாடலாகவும், 'இவர்தா னுலகத்தினில் என்று தொடங்கும் பாடல் 170 ஆம் பாடலாகவும் எழுதப்பட்டுள்ளன.

3. மிகையான ஒன்பது பாடல்களும் சுவடி RE 10857, சுவடி 198 ஆகிவற்றில் உள்ளன. முதலிரு சுவடிகளில் (3895b, 11413) இல்லாத ஒரு பாடல் சுவடி RE 10857, சுவடி 198 ஆகிய இரு சுவடிகளிலும் மிகையாக உள்ளது. அது, அத்தினபுரிச்சருக்கத்தில், இடம்பெறும், 'மைந்தரை...' என்று தொடங்கும் பாடல் ஆகும்.

> மைந்தரை யினிப்பெறுவ தென்கொல் மண்மே
> லைந்துமக வைப்பெறு மருந்ததியை நேர்வாள்
> குந்திதனை யன்பொடு குறித்தில ரறத்தோர்
> வந்துகலி புக்கதொரு வாசியதி னென்பார் (பா.மா.227அ).

ஆகையால் இவ்விரு சுவடிகளும் (RE 10857,சுவடி 198) ஒரு சுவடியின் நகல்கள் என்று கொள்ளலாம்.

---

[1] KU – கேரளப் பல்கலைக்கழகச் சுவடி நூலகம்.
MT—மதுரைத் தமிழ்ச் சங்கச் செந்தமிழ்க் கல்லூரி நூலகம்.
IFP –பிரெஞ்சு இந்தியக் கலைக்கழக நிறுவன நூலகம், பாண்டிச்சேரி.

[2] X மூல நூல் எது என்று தெரியாததைக் குறிக்கும். AB என்பன இருவிதமான ஏடுகளைக் குறிக்கும் . A (சு1) என்பதில் 750 பாடல்களே உள்ளன. B (சு.2) இல் 759 பாடல்கள் உள்ளன. C & D (சு.3+சு.4) இரண்டிலும் சு.1 ஐ விடக் கூடுதலாகப் பாடல்கள் காணப்படுவதால் கூடுதலான பாடல்கள் கொண்ட சு. 2 ஐப் பார்த்துப் படியெடுத்திருக்கக்கூடும் என்று கொள்ளலாம்.

[3] சு.2 இல் 69அ, 71அ, 292அ, 328அ, 395அ, 401அ, 420அ, 521அ, 724 அ –என 9 பாடல்கள் மிகை. இப்பாடல்கள் சுவடி 3, சுவடி 4 ஆகியவற்றிலும் உள்ளன.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

4. எனவே, நான்கு சுவடிகளும் மூன்று மூலங்களின் நகல்கள் என்று துணியலாம்.

5. எனினும் படியெடுப்போர் மனநிலைக்கேற்பச் சில சொற்களில் வேறுபாடுகள் தோன்றுகின்றன. சுவடி 198, RE 10857 இரண்டும் ஒன்றின் படியெனினும் சு.எண் 198 ஐப் படியெடுத்தவர் தாம் விரும்பிய வண்ணம், 'வைகுண்டம்' என்பதை 'வைகுந்தம்' எனவும், 'துரோபதி' என்பதைத் 'திரௌபதி' என்றும் குறிப்பிட்டிருக்கிறார். இதையொத்த சுவடி 4 இல் (RE 10857) நூல் முழுவதும் அவ்விரு பெயர்களும் 'வைகுண்டம்', 'துரோபதி' என்றே எழுதப் பெற்றுள்ளன. ஆகையால் இவற்றைப் பாடவேறுபாடாகக் கொள்ளவில்லை.

1.5 நூலின் உட்பிரிவும் பாடல்களும்

பாரத மாவிந்தம் என்னும் இந்நூலின் உட்பிரிவின் பெயர் சருக்கம். இந்நூல் பாயிரத்தில் தொடங்கித் திருநாட்டுச் சருக்கம் முதல் கெருடனைக் கண்ட சருக்கம் ஈறாக ஏழு சருக்கங்கள்[1] கொண்டது. ஆசிரியர் யானைமுகனை வாழ்த்தி நூலைத் தொடங்குகிறார். கடவுள் வாழ்த்தைத் தொடர்ந்து அவையடக்கமும் நூல் நுவலும் பொருளும் அமைந்துள்ளன.

இந்தப் பதிப்புக்கு அடிப்படையாகக் கொண்ட சுவடி 3895b இல் உள்ள பாடல்கள் காப்புச் செய்யுள் உட்பட 751; ஏனைய மூன்று[2] சுவடிகளிலும் மிகையாகக் காணப்படும் ஒன்பது பாடல்களையும் சேர்த்துப் பாரத மாவிந்தத்தின் மொத்தப் பாடல்கள் 760 ஆகும். மிகையான பாடல்கள் கலிவிருத்தத்தால் ஆனவை.

1.6 நூல் ஆசிரியர் – சோமன்

பாரத மாவிந்தத்தை இயற்றியவர் பெயர் சோமன். பாயிரத்தின் இறுதிப் பாடல் நூலை இயற்றியவர், 'சோமன்' என்றும், அவர், 'விருத்த யாப்பில்' நூலை இயற்றியுள்ளார் என்றும் குறிப்பிடுகிறது.

மங்கலஞ்சேர் மாவிந்தக் கதையைத் தொன்னூல்
வகுத்த சோமன் விருத்தவகை யாற்செப்ப... (பா.மா.21)

சோமன் இயற்றிய நூல் செல்லரித்துப் போனதால், அதன் உரை வழியே அந்நூலை மீண்டும் செப்பம் செய்து முழுமையாக்கித் தந்தவர் விநாயகன் என்பவர். இவரது தந்தை பெயர் ஈசுரபட்டன். இந்தச் செய்தியை,

... அங்கதனில் கதைபொறித்த வேட்டிற் சிலசெல்
லரித்ததனாற் பதஞ்சொல் லெழுத்தவை காணாமற்
தங்குறைதேர்ந் துரைவழியே பேணி முன்போற்
றாபித்துக் குறையறவே பூரித் திட்டான்
செங்கமல மார்பனீ சுரபட் டன்றன்
செல்வனெனும் விநாயகனாஞ் செம்மல் தானே (பா.மா. 21)

---

[1] பாயிரம் – பாடல்கள் -21,(1) திருநாட்டுச் சருக்கம்-55, (2) துவராபதிச் சருக்கம் -21 , (3) துருவாசச் சருக்கம்-59 , (4) அத்தினாபுரிச் சருக்கம் -80, (5) துரோபதி மோக்கிஷம் பெற்றச் சருக்கம் -79, (6) சிங்கத்தின் கதைச் சருக்கம்-208,(7) கெருடனைக் கணட சருக்கம்-227 .

[2] சு.எண். 11413, 198, RE 10857.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

என்னும் பாடலடிகள் புலப்படுத்துகின்றன. எனவே பாரத மாவிந்தத்தில் சோமன், விநாயகன் ஆகிய இருவரின் கவித்திறனும் கலந்திருக்கக் கூடும். நூலை இயற்றிய சோமன் வாழ்ந்த ஊரின் பெயர் 'புவனப்பதி'. அவர் அந்தண குலத்தவர். தருமன் மாவிந்தம் சேர்ந்த கதையை விருத்த யாப்பில் பாடியிருக்கிறார் என்பன போன்ற விவரங்களைச்,

சோமன் வாழ்புவ னப்பதித் தோன்றலன்
மாமறைக் குலத்தான் வளத்தா னியற்
பாம னும்விருத் தத்தினிற் பாடினான்
தாம மன்னர் மகாவிந்தம் சார்ந்ததே (பா.மா.18)

என்னும் பாடல் வழி அறியமுடிகிறது.

சோமனின் குலம், சமயம், ஊர், நாடு முதலியவற்றுடன், பாரத மாவிந்தத்தைச் செப்பம் செய்த விநாயகனின் குலம், சமயம் முதலியவை இயல் இரண்டில் விரிவாக விளக்கப்பெற்றுள்ளன (பார்க்க: இயல் 2: 2.3 - 2.5)

1.7 நூல் நுவலும் பொருள்

ஆசிரியர் பாரத மாவிந்தம் நுவலும் பொருளாகப், 'பூமியின் பாரம் நீங்கத் திருமால் பாரதப்போரில் குருகுலத்தவர்களின் கொடிய நால்வகைப் படைகளையும் அழியச் சூழ்ச்சி செய்து, தருமனை அழைத்துக் காட்டிற்குச் செல் என்று கூறி, உயிரோடு அவனை வைகுண்டம் அடையச் செய்த கதையைக்' கூறப் போவதாகப் பாடியிருப்பதைக் கீழ்வரும் பாடல் தெரிவிக்கிறது.

அரவி னிற்றுயில் கருணை வித்தக னவனி யிற்பர மொழியவே
குருகு லத்தவர் தமிலெ திர்த்திடும் கொடிய நாற்படை மடியமுன்
விரகி னைச்செய்து தரும னைப்புவி விரிவ னத்திடை வருகெனப்
பரிவின் மிக்குட லொடுபு கப்பணு பழுதில் நற்கதை பகருவாம்.
(பா.மா.14)

மேலும், முன்பு குறிப்பிட்டது போல், மாவிந்தம், மகாவிந்தம், மாவிந்தக்கதை என்ற பெயர்களும் இக்கதைப் பகுதி கூறும் நூலுக்கு வழங்கியிருக்க வேண்டும். இதற்கு, 'வருத்தமாய் மன்னன் மாவிந்தஞ் சேர்ந்ததை' (பா.மா.15) 'தாம மன்னர் மகாவிந்தஞ் சார்ந்ததே' (பா.மா.18) 'மன்னன் மகாவிந்தத்தை யடைந்துள மெய்க்கதையே' (பா.மா.19) என்னும் பாடலடிகள் சான்றாக விளங்குகின்றன. பாயிரத்தின் இறுதிப் பாடலில், 'மங்கலஞ்சேர் மாவிந்தக் கதையை' (பா.மா.21) என்று குறிப்பிட்டிருப்பது, மேலே கூறப்பட்ட கருத்தை அரண் செய்யும் வகையில் விளங்குகிறது.

1.8 சோமனின் காலம்

நூலை இயற்றிய சோமன் காலத்தால் வில்லிபுத்தூரா[1]ருக்குப் பிற்பட்டவர் என்பதைக் கீழ்வரும் பாடலடிகள் உணர்த்துகின்றன. அவை,

---

[1] தமிழில் பாரதக்கதையை இயற்றியவர் வில்லிபுத்தூரார் என்ற பெயரே பெருவழக்காக இருப்பினும் அவரது பெயர் வில்லிபுத்தூரர் என்று பாரத மாவிந்தத்தில் குறிப்பிடப்பெற்றிருப்பதால் அப்பெயரே இப்பதிப்பில் கொடுக்கப் பெற்றுள்ளது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

விருத்த நீள்கவி வில்லிபுத் தூரன்முன்
தெரித்த பாரதஞ் செய்தனன்; செய்திலன்
வருத்தமாய் மன்னன் மாவிந்தஞ் சேர்ந்ததை
யுரைத்தல் நன்றென் றுரைக்கவு ணர்ந்ததால். (பா.மா.15)

துய்ய வில்லிபுத் தூரன் றொடைக்கவிச்
செய்யல் கண்டபின் செப்புங் கவிதையே (பா.மா.16)

என்பனவாகும்.

தமிழில் பாரதம் இயற்றிய வில்லிபுத்தூரரின் காலம் கி.பி. 14 ஆம் நூற்றாண்டின் இறுதி என்பார் மு.அருணாசலம். [1]

இப்பதிப்புக்குப் பயன்படுத்திய நான்கு சுவடிகளுள் காலத்தால் முற்பட்டது சுவடி எண் 3895b. இது படி எடுக்கப்பட்ட காலம் கி.பி. 1778 ஆகும். எனவே சோமன் வில்லிபுத்தூரர் காலமாகிய 14 ஆம் நூற்றாண்டிற்கும் சுவடி எழுதப்பட்ட 18 ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலப்பகுதியைச் சேர்ந்தவர் என உறுதிப்படுத்த 'விநாயகன்' என்பவர் அந்நூலைச் செப்பம் செய்ததாகப் பாயிரத்தின் இறுதிப் பாடல் (பா.மா. 21) தெரிவிக்கிறது. இதிலிருந்து விநாயகன் என்பவர் பாரத மாவிந்தத்தைச் செப்பம் செய்தது பதினான்காம் நூற்றாண்டுக்கும் பதினெட்டாம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் நடந்திருக்க வேண்டும் என்று தெளியலாம்.

இனி சோமனின் காலத்தைத் திட்டவட்டமாக வரையறுக்க ஏதேனும் அகச்சான்றுகள் உள்ளதா என்று நோக்குங்கால், அருணகிரியார் பாடலில் இடம்பெறும், 'முத்தமி ழுடைவினை முற்படு கிரிதனில்' என்ற பாடலில் வரும் 'முத்தமிழடைவு' என்பதை யொத்த சொற்றொடர், 'முத்தமி ழுடைவினிற் பொலிகருணை' (பா.மா.11) என்று பாரத மாவிந்தத்தில் கையாளப் பெற்றுள்ளது.

செவ்வைச் சூடுவார் பாகவதத்தில் காணப்படும் சொல்லை ஒத்த சில சொற்றொடர்கள் பாரத மாவிந்தத்தில் இடம்பெற்றுள்ளன. அவை கீழ் வருவன:

1 வட்ட வாயழற் றிகிரியான் (செவ். 2912)
வட்டவாய்த் திகிரி (பா.மா. 738)

2. கான் யாறு (செவ். 2878) கானியாறு (பா.மா.263)

3. குழகன் (செவ்.3398) குழக முத்தமிழ் (பா.மா.10)

இதில் யாரை அடியொற்றி யார் எழுதினார் என்பது தெளிவில்லை. செவ்வைச் சூடுவாரைப் பின்பற்றி இச்சொற்றொடர்கள் எழுந்தன எனக் கொண்டால் சோமன் செவ்வைச் சூடுவாரின் சமகாலத்தவர் அல்லது அதற்குப் பிற்பட்டவர் என்று கருத இடமேற்படுகிறது. செவ்வைச் சூடுவாரின் காலம் கி.பி.16 ஆம் நூற்றாண்டின் தொடக்கம் என்று மு.அருணாசலம்[2]

[1] தமிழ் இலக்கிய வரலாறு 14 ஆம் நூற். ப.24.

[2] மேற்படி, 16 ஆம் நூற். ப.346.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கருதுகிறார். பாரத மாவிந்தத்தில் பல தொடர்கள் வில்லிபுத்தூராரை அடியொற்றியும் அமைந்துள்ளன.

அவை வருமாறு:

1. வின்மை (வில்.துரோ.பன். 90) வின்மை (பா.மா. 519)
2. பட்ட வர்த்தனரும் மகுட வர்த்தனரும் (வில்.உத்.கிரு. 103)
   பட்ட வத்தனர் தம்மொடும் பல மகுடவத்தனர் தம்மொடும் (பா.மா. 80)
3. தாண்டிய வெம்பரி (வில்.துரோ.பன்.15)
   தாண்டிய பரிதேர் (பா.மா. 638)
4. பிறந்ததின முதலாக (வில்.துரோ.பதிமூ.138)
   பிறந்தநாள் முதலா (பா.மா. 617)
5. வெந்நிடுதல் (வில்.ஆதி.குரு.27) வெந்நிட்டான் (பா.மா. 619)

சுவடி 3895b ஐப் படியெடுத்த முத்துவயிரவன் என்பவர் பெருமாள் பிள்ளைக்குப் படியெடுத் துக் கொடுத்த ஆண்டு கி.பி. 1778. சுவடி 11413 ஐச் சிவசுப்பிர மணியன் என்பவர் படியெடுத்த ஆண்டு கி.பி.1839 ஆகும் இவ்விரு சுவடிகளும் எழுதப்பெற்ற காலவேறுபாடு (1839-1778=61) 61 ஆண்டுகள் ஆகும். இதை ஒரு கணக்காகக் கொண்டு காலத்தால் முற்பட்ட பாரத மாவிந்தம் சுவடியின் (3895b) பழைய முதற்படி எடுத்ததற்குச் சுமார் 60 ஆண்டுகளுக்கு முன்பு இந்நூல் படியெடுக்கப்பெற்றிருக்கக்கூடும் என்று கொண்டால், நூல் செப்பம் செய்யப் பெற்ற காலம் கி.பி. 1658 (1778-60= 1658) ஆக இருக்கலாம். இந்த நூலுக்கு ஓர் உரை இருந்ததாகவும், மூலமும் உரையுமாக இருந்த ஏடு செல்லரித்துப் போனதால் உரையிலிருந்து நூலைச் செப்பம் செய்ததாகவும், பாயிரத்தின் பாடலடிகள் தெரிவிக்கின்றன. எனவே உரையோடு கூடிய பாரத மாவிந்தம் என்னும் நூல் 60 ஆண்டுகளுக்கு முன் எழுந்திருக்க வேண்டும் என்று ஊகித்து, நூலின் காலம் (1658-60= 1598) கி.பி. 1598 என்று கொள்ளலாம். நூலை இயற்றிய சோமனே உரை எழுதியிருப்பார் எனக் கொண்டால் சுமார் கி.பி.1598 ஆம் ஆண்டில் இந்த நூலை அவர் இயற்றியிருக்கவேண்டும். கீழ்க்காணும் அட்டவணை காலக் கணக்கீட்டை ஓரளவு புரிந்துகொள்ள உதவும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பாரத மாவிந்தம் சுவடிகளின் வழி நூலின் காலக்கணிப்பு

.	படி எடுத்த நாள்	இரண்டிற்கும் உள்ள வேறுபாடு	காலக் கணிப்பு
3895b	ஜூலை 1778		
11413	செப்டம்பர் 1839	[1839-1778= 61 ஆண்டுகள்.]	61 ஆண்டுகள்
சுவடி 3895b இன் முந்தைய படி 60 ஆண்டுகளுக்கு முன்னால் எழுதப் பெற்றது என்று கொண் டால்	1778-60=1718	1718	கி.பி.1718
சுவடி செப்பம் செய்தது 60 ஆண்டு களுக்கு முன்பு என்று கொண்டால்,	1718-60=	1658	கி.பி.1658
சுவடி செப்பம் செய்வதற்கு 60 ஆண்டு களுக்கு முன்பு நூல் தோன்றியிருக்கக் கூடும் என்று கொண்டால்	1658-60=	1598	கி.பி.1598
நூல் தோன்றியிருக்கக் கூடும் என்று ஊகிக்கத் தோன்றும் நாள்		கி.பி.1598	கி.பி.16 ஆம் நூற் றாண்டு எனலாம்

இவ்வாறு அகச்சான்றுகளைக் கொண்டு செய்யும் கால ஆராய்ச்சியும் முற்ற முடிந்ததாகக் கொள்ள இயலாது. ஏனெனில் நூலை இயற்றிய சோமனின் சொற்கள் எவை? அதைச் செப்பம் செய்த விநாயகனின் செப்பங்களெவை என வேறுபடுத்தி அறிய இயலவில்லை.

பொதுவாகச் சுவடிகளில், நூலின் காலக்குறிப்பைக் காண்பது அரிது. சுவடியின் தோற்றம், எழுத்தின் இயல்பு, சொல்லப்படும் கருத்து முதலியவற்றை வைத்துக் காலத்தை ஓரளவு கணிக்க இயலும். பாரத மாவிந்தம் சுவடியில் நூலாசிரியரின் காலம் பற்றிய குறிப்பு இல்லை; சுவடியைப் படியெடுத்த காலக்குறிப்பே காணப்படுகிறது.

1.9 நூல் பதிப்பு முறை

1) பாடல்கள் யாப்பிற்கேற்ப அடிமடக்கிப் புணர்ச்சிவிதியோடு கொடுக்கப் பெற்றுள்ளன.

2) பாடல்களின், 'பா' வகையின் பெயர் குறிப்பிடப்பெற்றுள்ளது.

3) பாடல்களின் உட்பொருளுக்கேற்பக் குறுந்தலைப்புகள் வழங்கப் பெற்றுள்ளன.

4) பாடலின் கீழே பாடவேறுபாடு தருதல்: i. அச்சில் வந்த பதிப்புகள், ii. சுவடிகள், iii. உரையில், இலக்கண உரைமேற்கோள்களில் காணப்படும் வேறுபாடு முதலியவை. முதல் பாடலில் பாடவேறுபாடு, பொழிப்புரை, அருஞ்சொல் விளக்கம், ஒப்புமைப்பகுதி போன்றவற்றை விரிவாகக் கொடுத்துப், பின்னர் வரும் பாடல்களுக்கு பொ., அ.வி., ஒப்.என்று சுருக்கக் குறியீடு தரப்பட்டுள்ளது. பாடவேறுபாட்டுக்குச் சுருக்கக் குறியீடு கொடுக்கவில்லை.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

5. சுவடிகளில்[1] காணப்படும் பாடங்கள் ஒப்பு நோக்கப்பெற்றுப் பொருத்தமான பாடங்கள் கொடுக்கப்பெற்றுள்ளன.

6) பாடவேறுபாடு தரும்போது, ஒப்பீடு செய்த சுவடிகளின் பாடம் பொருத்தமானது எனக் கருதினால், அதை முதலில் தருதல், பாடலில் அப்பகுதியைச் சரிவாக இடப்பெற்ற எழுத்துக்களால் (italicized) குறிப்பிடுதல்.

7) பாடவேறுபாடு காணப்படும் சொற்களின் முன்பாக முகட்டுவரைவு[2] எண் இட்டுப், பாடலின் கீழே அதே எண் கொடுத்து வேறுபாடுகள் காட்டப்பெற்றுள்ளன; அதற்கடுத்து அரைப் புள்ளியும் அதைத் தொடர்ந்து அடுத்த வேறுபாடும் இடம்பெற்றுள்ளது.

8) பாடலின் வலப்புறம் தொடர் எண்ணும், அதன் இறுதியில் அவ்வச்சருக்கங்களின் பாடல் எண்ணும் அரபு எண்ணில் கொடுக்கப்பெற்றுள்ளன.

9) பாடல்களுக்குச் சுருக்கமான பொழிப்புரை.

10) அரிய சொற்களுக்குப் பொருள்.

11) பாடலில் பிழை என்று கருதிய பாடங்கள், பொருளுக்கேற்பத் திருத்தப்பெற்று, அதற்குரிய விளக்கம் அளித்தல்.

12) பேச்சுவழக்குச் சொற்கள் சுவடியில் உள்ளவாறே தரப்பெற்றுள்ளன.

13) பாடலில் இடம்பெறும் கதைக்குறிப்பிற்குரிய விளக்கம் கொடுக்கப்பெற்றுள்ளது.

14) ஒவ்வொரு பாடலுக்கும் இதையொத்த வேறு நூலிலிருந்தும், சங்க இலக்கியங்களிலிருந்தும் ஒப்பீட்டுப் பகுதிகள் காட்டப்பெற்றுள்ளன.

15) சுவடி எண் 3895b யை விட ஒன்பது பாடல்கள் ஏனைய மூன்று சுவடிகளில் மிகையாக உள்ளன. அவை பாடல் எண்ணுடன், 'அ' கரம் பெற்றுள்ளன.

16) நான்கு சுவடி*களுக்கும் எளிமை கருதி சு.1, சு. 2, சு.3, சு.4 என்று எண் இடப்பெற்றுள்ளன.

17) பதிப்பில் வரும் ஆய்வுக் கட்டுரைகளுக்குரிய அடிக்குறிப்புகள் அந்தந்தப் பக்கங்களிலேயே தரப்பெற்றுள்ளன.

18) சுவடி 3895b இல் ஏழாம் சருக்கத்திலுள்ள 678, 686 ஆகிய இரு பாடல்களும் முழுமையாக இல்லை. ஒப்பீட்டிற்குப் பயன்படுத்திய சுவடிகளிலிருந்து விடுபட்ட அடிகள் நிறைவு செய்யப் பெற்றன; அந்த அடிகள் **உடுக்குறி பெற்றுள்ளன.

---

[1] சு.எண் 11413, 198, RE 10857.

[2] Super script.

* சு.1-3895b, சு.2-11413, சு.3-198, சு.4-RE 10857

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

◆ திருத்தம் பெற்றவை

சுவடிகளில், 'ழ' கர, 'ள'க ர, 'ன' கர, 'ண' கர, 'ர' கர, 'ற'கர வேறுபாடின்றி எழுதப்பெற்றிருந்த சொற்கள் செப்பம் பெற்றுள்ளன.

1.எழுத்து வேறுபாடு

எ-டு.	ளகர ழகர வேறுபாடு	புகள்ந்த - புகழ்ந்த (பா.மா.348)
	றகர ரகர வேறுபாடு	காற்கடல் - கார்கடல் (பா.மா.336)
	ணகர னகர வேறுபாடு	மோணமா - மோனமா (பா.மா.341)

2.சொல்வேறுபாடு

பாடல் 580 இல் சப்தமுனிவர்கள்[1] எழுவரில் அறுவர் பெயர் கூறிப், 'பிருகு' என்பவர் பெயர் கூறாமல், அவ்விடத்தில், 'கருணை' என்னும் சொல் இருந்தது. முதலடியில் இரண்டாம் சீராக வரும், 'கருணை' என்ற சொல் வருமிடம்,'பிருகு' என்று திருத்தம் செய்யப்பெற்றது.

அகத்தியன் கருணை புலத்தியன் வசிட்ட னங்கிராக் கவுசிகன் சுகனா
அகத்தியன் *பிருகு* புலத்தியன் வசிட்ட னங்கிராக் கவுசிகன் சுகனா
(பா.மா. 580)

1.10 பதிப்பின் அமைப்பு

இப்பதிப்பு 1. நூல் ஆராய்ச்சி, 2. நூல் பதிப்பு என இரு பகுதிகளாகப் பிரிக்கப் பெற்றுள்ளது; 1. நூலாராய்ச்சி ஒன்பது இயல்கள் கொண்டது.

1. பகுதி ஒன்று - நூல் ஆராய்ச்சி

இயல் 1. பாரத மாவிந்தம் – முன்னுரை

இது பதிப்பின் நோக்கம், பதிப்பு முறை, இந்நூலை யொத்த ஏனைய மாவிந்தம், வைகுண்ட அம்மானை போன்ற சுவடிகள் முதலியவை குறித்து விளக்குகிறது.

இயல் 2. நூலாசிரியர் சோமன்.

இவ்வியல் நூலை இயற்றிய ஆசிரியர் சோமன், அதைச் செப்பம் செய்த விநாயகன் ஆகியோரைப் பற்றிக் குறிப்பிடுகிறது. சோமன் சைவ அந்தண குலத்தவர், அவர் 16 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் புவனப்பதி என்ற ஊரில் வாழ்ந்தவர். அது இன்றைய திருச்செந்தூருக்கு அருகில் இருக்கும் ஆத்தூர் என்று கருதப்படுகிறது. விநாயகனும் அவ்வூரினர் ஆதல் வேண்டும். இவை இவ்வியலில் விளக்கப்படுகின்றன.

இயல் 3. பாரத மாவிந்தம் கதைச்சுருக்கம்

இவ்வியலில் பாரத மாவிந்தத்தின் கதைச் சுருக்கம் கூறப்பெற்றுள்ளது.

[1] அகத்தியன், பிருகு, புலத்தியன், வசிட்டன், அங்கிரா, கவுசிகன், சுகன்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இயல் 4. தமிழ்நாட்டில் பாரதக்கதையின் செல்வாக்கு

இயல் நான்கில் பாரதக்கதையின் செல்வாக்குத் தமிழ்நாட்டில் பரவி இருந்ததையும், அக்கதை குறித்துப் பல காலங்களில் பல நூல்கள் தோன்றியதையும் தெளிவுபடுத்துகிறது.

இயல் 5. பாரதமாவிந்தம் காப்பிய அமைப்பு

இவ்வியல் பாரத மாவிந்தத்தில் காப்பியக் கூறுகள், தண்டி ஆசிரியர் கூற்றுப்படி அமைந்திருப்பதை விளக்கி, அது சிறு காப்பியம் என்று நிறுவுகிறது.

இயல் 6. பாரதமாவிந்தம் – யாப்பு

இவ்வியலில் பாரத மாவிந்தத்தில் பாடல்கள் விருத்தயாப்பில் அமைந்துள்ள முறை விளக்கப்பெறுகிறது.

இயல் 7. பாரதமாவிந்தம் – அணி

இவ்வியலில் உவமை, உருவகம் போன்ற அணிகள் கையாளப்பெற்றிருக்கும் முறை இடம்பெற்றுள்ளது.

இயல் 8. பாரதமாவிந்தம் –மொழிநிலை

இந்த இயல் ஆசிரியர் சோமன் வாழ்ந்த காலத்தின் மொழி இயல்பு, குறிப்பாகத் தென்பாண்டி நாடான திருநெல்வேலியைச் சார்ந்த பகுதிகளிலுள்ள மொழியின் தன்மையைக் குறிப்பிடுகிறது.

இயல் 9. வியாச பாரதம், தமிழ் பாரத நூல்கள், மாவிந்த நூல்கள் – ஒப்பீடு.

இவ்வியல் வியாச பாரதத்தையும் தமிழ் பாரத நூல்களையும், தமிழில் தோன்றிய மாவிந்த நூல்களையும் விரிவாக ஒப்பிட்டு ஆராய்கிறது. பாரதக்கதையிலும் மாவிந்த நூல்களிலும் அடிப்படைக்கதை ஒன்று போல் இருப்பினும் கிளைக்கதைகளைத் தருவதில் மாவிந்த நூல்கள் சிறிது வேறுபட்டுள்ளன. ஆன்மாவின் இறுதிப் பயணம் உலக இலக்கியங்களில், வேறுமொழிகளில் அமைந்திருக்கும் நிலையை இவ்வியல் ஒப்பிட்டுக் காட்டுகிறது.

3. பகுதி இரண்டு - நூல் பதிப்பு:

இப்பதிப்பு நான்கு சுவடிகளின் அடிப்படையில் அமைந்துள்ளது. இது உ.வே. சாமிநாதையர் பதிப்பு முறையைப் பின்பற்றிச் செய்யப் பெற்றது.பாடவேறுபாடுகளைச் சிறப்பாகத் தந்து பதிப்புப்பணி செவ்வனே அமைய வேண்டும் என்னும் நோக்கில், இதுவரை அச்சில் வராத தஞ்சை சரசுவதி மகால் நூலகத்தின், பாரதம் மகாவிந்தம் என்னும் ஏட்டுச் சுவடி (எண் 57) படியெடுத்து ஒப்பிடப்பெற்றது (பார்க்க: 1.9. நூல் பதிப்புமுறை)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

◆ மாவிந்த நூல்களில் காணப்பெறும் உட்கதைகள்

1. திரிபுரம் எரித்த கதையில் திரிபுராதியர்களின் சிவபக்தியை அழியச் செய்வதற்குத் திருமால் வருகிறார். அப்போது அவர் எடுக்கும் வடிவம் புத்தரின் வடிவம். திருமாலின் அவதாரங்களாகச் சொல்லப்படுபவற்றுள் புத்த அவதார நிகழ்வு இல்லை. உலகில் தோன்றும் அரிய பெரியோரின் பெருமைகளைத் திருமாலோடு பொருத்திக் காணும் இயல்பு மக்களிடம் நிலவியதையே இது காட்டுகிறது (பா.மா. 392-402).

புத்த னாகியோர் போதியின் கீழுற
வத்தி றற்சிவ பூசை யசுரர்க
ளித்த லத்தி லிவன்வர வேதெனா
தத்து வத்துள தர்க்கத்தில் மேயினார் (395அ)

2. கண்ணன் பாண்டவர்களிடம் அவரவர் உள்ளக்கிடக்கையைக் கூறுமாறு கேட்கும்போது, துரோபதி, தன் உள்ளக்கிடக்கையாக,

அய்ய்வரும் விதியினாலே அரியதோர் கணவனாகி
வெய்யதோர் மாயா கேழ்க்கில் மீண்டு முண்டாசை யென்னில்
(தஞ்.350)

'மாயா! விதிப்படி ஐவருக்கு நான் மனைவியாயினும் மீண்டும் ஆசை உண்டு' என்று சொல்வது புதிய செய்தியாக[1] உள்ளது.

3. தருமன் பாரதப்போரில் ஒரு பொய் கூறியதற்காக நரகத்திற்குச் செல்ல நேரிடுகிறது. நரகத்தில் துரியோதனன் படும் துன்பத்தைக் கண்டு தருமன் வருந்தி நிற்க, துரியோதனன் தருமனிடம், 'நான் உனக்கு முன்பு செய்த தீமைகளை மனத்தில் நினைக்காதே, நரகத்திலிருந்து என்னைக் கரையேற்றுவாய்', என்று வேண்டுகிறான். தருமன் அவனுக்குக் கையைக் கொடுத்து உதவ முற்பட்டபோது, துரியோதனன் தருமனின் கையைப் பிடித்துக் கொடிய நரகத்தில் அவனை இழுத்ததாகக் கூறப்பட்டுள்ளது.

யானு னக்குமுன் செய்துள தீமையெண் ணாதே
யீன முற்றுறு நரகினா லேற்றெனை யென்ன
வூன மற்றவ னங்கையுத் துதவலு முடன்று
மான மற்றவ னிழுத்தனன் கொடியவன் னரகின் (பா.மா.708).

மூன்றாவதாக வரும் நிகழ்வு பாரதத்திலும் ஏனைய மாவிந்த நூல்களிலும் இல்லாதது; பாரத மாவிந்தத்தில் மட்டுமே காணப்படுகிறது.

◆ முரண்படக் காணப்படும் செய்தி

பாரத மாவிந்தம் பாண்டவர்கள் வைகுண்டம் செல்ல மேற்கொண்ட பயணம் பற்றிக் கூறும் நூல். இருப்பினும், துரோபதியின் இறுதி நேரம் நெருங்கும்போது தருமன் அவளிடம்,

---

[1]. துரோபதி மீண்டும் உண்டு ஆசை என்று சொல்வது குந்தியின் முதல் மகனாகிய கர்ணனைக் குறிக்கக்கூடும் என்று கருதுவார் (காலஞ்சென்ற) கம்பராமன் திரு.எஸ்.கே.இராமராஜன் அவர்கள், தமிழ்ப் பல்கலைக்கழகப் பேராசிரியர்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

'சிவபெருமானின் திருநாமத்தை மனத்தில் கூறுமாறு' பணிக்கின்றான்.[1] அவளும் அவ்வாறே, முதலின் சிவபெருமானைப் பாடுகிறாள்(பா.மா. 308). பின்னர் திருமாலைத் துதித்து (பா.மா. 309) மீண்டும் சிவபெருமானைப் பாடிப் போற்றுகிறாள் (பா.மா310). இவ்வாறு இரு பாடல்களில் சிவனைப் பாடிப் பரவுகிறாள். பின்னர் அதற்கடுத்த பாடலில் அவள், வைகுண்டம்[2] சேர்ந்தாள் என்று ஆசிரியர், குறிப்பிட்டிருக்கும் நிகழ்ச்சி முரண்பட அமைந்துள்ளது. இது 'அரியும் அரனும்' ஒன்று என்ற எண்ணத்தின் பிரதிபலிப்பாக இருக்கக்கூடும் என்று கருதத் தோன்றுகிறது. அல்லது இடைச் செருகலாக இருக்கக்கூடும்.

1.11 மாவிந்தம் என்ற பெயரில் எழுந்த நூல்கள்

மாவிந்தம் என்னும் கதை பற்றி எழுந்த பல நூல்கள் அச்சிலும் அச்சில் வராத சுவடிகளிலும் நூலகங்களில் காணப்படுகின்றன.

1. அச்சான நூல்

மாவிந்தம் என்ற பெயரில் எழுந்த, பிற ஆசிரியர்கள் இயற்றிய நூல்களுள், பெருந்தேவனார் இயற்றிய, பெருந்தேவனார் பாரதம் (மாவிந்தம்) என்ற நூல் மட்டுமே தஞ்சை சரசுவதிமகால் நூலக வெளியீடாக அச்சாகியுள்ளது. இதன் பாடல்கள் வெண்பாவால் ஆனவை.

2. பெரிய எழுத்து வைகுந்த அம்மானை[3]

இது பாண்டவர்களின் வைகுண்ட யாத்திரையைப் பற்றிக் கூறும் நூல், இதை இரத்தின நாயகர் அண்ட் சன்ஸ்" அவர்கள் மலிவுப் பதிப்பாக வெளியிட்டுள்ளனர் [பார்க்க: 1975 ஆம் ஆண்டு பதிப்பு]. இது கேரளப் பல்கலைக் கழகச் சுவடி நூலகத்திலுள்ள வைகுண்ட அம்மானை சுவடியின் கதை போன்றது. வைகுந்த அம்மானை, வைகுண்ட அம்மானை இரண்டும் ஒன்றே.

2. அச்சாகாத சுவடிகள்

1. கேரளப் பல்கலைக்கழகக் கீழ்த்திசைச் சுவடி நூலகம், காரியவட்டம், திருவனந்தபுரம்

இப்பதிப்புக்குப் பயன்படுத்திய கேரளப்பல்கலைக்கழகச் சுவடிகள் இரண்டு. அவை 1.3895b, 2. 11413 ஆகியன.

---

[1] ...சிவபதம்
பொருந்த லாகும் புராந்தகன் பொற்கழல்
தெரிந்த நாமத்தைச் சிந்தையிற் செப்பெனா(பா.மா.307:2-4).

[2] விந்த மீது விமானத்தி லேற்றவே
வந்து வைகுண்டஞ் சேர்ந்தனள் மங்கையே (பா.மா. 307:3-4).

[3] வைகுண்ட அம்மானை என்றும் வழங்கப்பெறும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

2. தமிழ்ச்சங்கம் செந்தமிழ்க் கல்லூரி நூலகம், மதுரை

மதுரைத் தமிழ்ச்சங்கம் செந்தமிழ்க் கல்லூரி நூலகத்தில், மாவிந்தக்கதை போன்ற இரு சுவடிகள் உள்ளன.

1. சுவடி எண் 198. இது, பாரத மாவிந்தம் என்ற பெயரில் அமைந்த மாவிந்தக் கதை கூறும் இன்னொரு நூல். இது இங்குப் பதிப்பிக்கப்பெறும் நூலின் இன்னொரு படியாகும். இஃது இப்பதிப்பில் ஒப்பிடப்பெற்றுள்ளது.

2. சுவடி எண் 176. இது, விந்தகக் கதை என்ற பெயரில் உள்ள மாவிந்தக்கதை கூறும் நூல்.

3. பிரெஞ்சு இந்தியக் கலைக்கழக நிறுவன நூலகம், பாண்டிச்சேரி (IFP)

இங்கு, RE 10857 என்ற எண் கொண்ட ஒரு சுவடி நல்ல நிலையில் உள்ளது. நூல் பெயர், பாரத மாவிந்தம். இது இப்பதிப்புக்கு எடுத்துக் கொண்ட பாரத மாவிந்தம் சுவடியின் இன்னொரு படியாகும்.

இவற்றையடுத்துக் கீழே கொடுக்கப்பட்டிருக்கும் சுவடிகள் பாரத மாவிந்தம் என்னும் பெயரில் வேவ்வேறு புலவர்கள் இயற்றிய நூல்களாகும்.

4. சரசுவதி மகால் நூல்நிலையம், தஞ்சாவூர்

இங்குப், பாரதம் மாவிந்தம் என்ற பெயரில் இரு சுவடிகள் உள்ளன.

அவை 1. சுவடி எண் 57; 2. சுவடி எண் 58 என்பன.

1. சுவடி எண் 57; இல் 248 ஏடுகள் உள்ளன. இது 1435 பாடல்கள் கொண்டது. இந்நூலின் கதைப்பகுதி இப்பதிப்பில் ஒப்பிடப் பெற்றுள்ளது. இதன் ஆசிரியர் விநாயகன் என்பதை,

> ...விருப்புள மகாபெந்த மெய்த வெண்ணிய
> தருக்குள வினாயகன் தமிழிற் பாடவே... (தஞ். சர.2)

என்ற பாடலடி உணர்த்துகிறது.

'தஞ்சாவூரிலிருக்கும் இறா. சிவயோசி அப்பாகிட்ட இருக்கும் கோவிந்தன் என்பவர் யுவ ஆண்டு மார்கழி மாதம் 13 ஆம் நாள்' இதைப் படியெடுத்திருக்கிறார். இந்த விநாகனும் பதிப்புக்கு எடுத்துக் கொண்ட (சோமனால் பாடப்பெற்ற) பாரத மாவிந்தத்தைச் செப்பம் செய்தவரும் ஒருவரன்று.

2. சுவடி எண் 58 இல் 168 ஏடுகள் உள்ளன; குறையானது. இது சுவடி எண் 57 ஐப் போன்றது.

5. தவத்திரு சாந்தலிங்க அடிகளார் தமிழ்க்கல்லூரி நூலகம், பேரூர், கோயம்புத்தூர். இக்கல்லூரி நூலகத்தில் எண் இடப்படாத, மாவிந்தம் என்னும் பெயர் கொண்ட ஒரு சுவடி உள்ளது. இதில் 158 ஏடுகள் உள்ளன. இது நாட்டுப்புறப் பாடல் வடிவில் அமைந்துள்ளது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இது மேலே குறிப்பிடப் பெற்ற சுவடிகளிலிருந்து வேறுபட்டது. இதன் இறுதி ஏட்டில், 'கோயமுத்தூர் சில்லா ஈரோடு தாலுகா பெருந்துறை பிறகா உத்தம பாளையங் கிராமத்தைச் சேர்ந்த மதுகொளத்துப் பாளையத்திலேயிருக்கும் மணியம் கொமாரசாமிக் கவுண்டன் மகன் சங்கரப்பன் மகாவிந்த மடைசம எழுதியது. விய வருஷம் ஆவணி மாதம் 27 ஆம் தேதி வியாழக்கிழமை பகல் 12 மணிக்கு எழுதி முடிந்தது' என்ற குறிப்பு காணப்படுகிறது.

6. தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

இங்கு மாவிந்தக் கதை கூறும் ஏழு சுவடிகள் காணப்படுகின்றன. அவை கீழ்வருமாறு:

1. **சுவடி எண் 450.** நூல்பெயர், மகாவிந்தம், இதில் 115 இதழ்கள் உள்ளன; இது குறையானது; இறுதி ஏட்டில், 'சுவாச வருடம் ஆனி மாதம் 2 ஆம் தேதி குருவார நாள் திரயோதசி 24-3, விசாகம் 7-37 போகி அனுஷ நட் சத்திரத்தில் ஆதி அந்தம் பரமா நாழிகை... சிம்ம லக்கினத்தில் எழுதி நிறைவேறியது முகிந்தது முற்றும். சிதம்பரம் தாலுக்கா புவனகிரி இலாக்கா மஞ்சக் கொல்லை உபாத்தியாயர் வடமலைப் பிள்ளை திருவெழுத்து' என்று காணப்படுகிறது. இது தஞ்சை சரசுவதி மகால் சுவடி எண் 57 ஐப் போன்றது.

2. **சுவடி எண் 1143.** நூல்பெயர், மகாவிந்தம். இதில் 51 ஏடுகள் உள்ளன; குறையானது. இதிலுள்ள பாடல்கள் 150.

3. **சுவடி எண் 1182.** நூல்பெயர், மகாவிந்தம். இதில் 52 இதழ்கள் உள்ளன; இது 102 பாடல்கள் கொண்டது; முழுமையாக இல்லை. இது சுவடி எண் 1143 ஐப் போன்றது.

4. **சுவடி எண் 1202.** நூல்பெயர், மகாவிந்தம். இதில் 30 ஏடுகள் உள்ளன. இறுதி ஏட்டில், 'சாமிநாத புலவர் மகன் நாச்சிமுத்துப் புலவன் மகாவிந்தம் படி எடுத்தவர் படித்து விட்டு உடையான் கையில் கொடுக்கவும்' என இறுதி ஏட்டில் எழுதப்பெற்றுள்ளது. மேற்கூறிய சுவடிகள் மூன்றும் (1143, 1182, 1202) ஒரே நூலின் படிகள்.

5. **சுவடி எண் 1394.** நூல் பெயர் மாவிந்தம்; 22 ஏடுகள் உள்ளன.குறை.

6. **சுவடி எண் 853.** நூல் பெயர், மாவிந்த நாடகம்; இதில் செய்யுளும் உரைநடையும் கலந்துள்ளன. இது முழுமையானது; ஆசிரியர் பெயர் வாலைசேஷன்.

7. **சுவடி எண் 1321.** நூல் பெயர், மாவிந்த நாடகம்; இதில் 127 ஏடுகள் உள்ளன. குறையானது. இதில் செய்யுளும் உரைநடையும் கலந்துள்ளன. ஆசிரியர் பெயர் வாலகேசன். இது சுவடி எண் 853 இன் இன் னொரு படி என்று கருதத் தோன்றுகிறது. நூலைப் படியெடுத்தவர் ஆசிரியர் பெயரை இங்ஙனம் மாற்றி எழுதியிருக்க வேண்டும்.

மேலே கூறியவற்றுள் சுவடி எண் 450, தஞ்சைச் சரசுவதிமகால் நூல் நிலையச் சுவடி 57, 58 ஐப் போன்றது. இறுதியிலுள்ள இரு சுவடிகளின் (853, 1321) ஆசிரியர் வாலைசேஷன் எனக் கொள்ளலாம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

7. அரசு கீழ்த்திசைச் சுவடி நூல்நிலையம், சென்னை

இங்கு மூன்று சுவடிகள் உள்ளன.

1.சுவடி எண் D.531(T.D.321).

நூல் பெயர், மகாபெந்தம்; இதன் மொத்தப் பாடல்கள் கூசாருரு (9455). இதில் 296 ஏடுகள் உள்ளன; இது முழுமையாக நல்ல நிலையில் உள்ளது. இதன் நீள அகலம் 33x3.5 செ.மீ. இறுதி ஏட்டில்,

'நளவருஷம் ஆடி மாதம் ரெண்டாந்தேதி வியாழக்கிழமையிலமைந்த சுபதினத்திலே மத்தூர் கந்தப்ப முதலியார் அவர் குமாரன் முருகப்ப முதலியார் மகாபெந்தம் நிறைஞ்சது. இதை எழுதினவன் அன்னம் கருகுமணியப்பன் கையெழுத்து' என்னும் குறிப்பு உள்ளது.

2.சுவடி எண் D.532 (T.D.322).

இதன் ஏடு மிகவும் பழமையானது. குறையாக உள்ளது. மிகவும் சிதைந்திருப்பினும் கையெழுத்துத் தெளிவாக உள்ளது. நூலின் பெயர் எழுதப்பெற்றிருக்கும் ஏடு இல்லை. இதில் உள்ள 220 ஏடுகளில் பல ஏடுகள் மிகச் சிதைந்துள்ளன. இதன் நீள அகலம் 40.5 x 2.75 செ.மீ.

3. சுவடி எண் 2861. நூல் பெயர், மகாவிந்தம். இதில் 63 இதழ்கள் உள்ளன; குறை. இச்சுவடி முன்பு குறிப்பிட்ட தஞ்சாவூர்த் தமிழ்ப்பல்கலைக்கழகச் சுவடி எண் 57 இன் படியைப் போலுள்ளது.

8. திருமலை நாயக்கர் மகால், அருங்காட்சியகம், மதுரை

மதுரை அருங்காட்சியகத்தில், மாவிந்தக்கதையைக் கூறும், மாவிந்த நாடகம் என்னும் ஒரு சுவடி உள்ளது; இது செய்யுள் நாடக வடிவினாலானது; குறையானது; சிதைந்துள்ளது. இச்சுவடியை நூலகத்திற்கு வழங்கியவர், நிலக்கோட்டை என்னும் ஊரைச் சேர்ந்த சுந்தரராஜ கூளப்ப நாயக்கர்.

9. பிரிட்டீஷ் இந்திய ஆபீஸ் நூல் நிலையம்

திரு.மு.கோ.இராமன்,'அயல்நாடுகளில் தமிழ்ச்சுவடிகள்'[1] என்ற கட்டுரையில், மகாவிந்தம் என்னும் பெயரில் ஒரு சுவடி[2] பிரிட்டீஷ் இந்திய அலுவலக நூலகத்தில் இருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

[1] உலகத்தமிழ் கல்வி இயக்கம் தமிழ்ச் சுவடிகள், கருத்தரங்கு -11, அயல்நாடுகளில் தமிழ்ச் சுவடிகள், ப.5.
[2] சுவடி எண் 113.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

10. மாவிந்தக்கதை நாட்டுப்புறப் பாடலில்

கேரளப் பல்கலைக்கழகச் சுவடி நூல் நிலையத்தில் 22 வைகுண்ட அம்மானைச் சுவடிகள் உள்ளன. இவற்றுள் மிகுதியான சுவடிகள் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள அரியநாயகிபுரம், தச்சநல்லூர், சேத்தூர் ஆகிய இடங்களிலிருந்து பெறப்பெற்றவை.

இம்மாவிந்தக்கதை முன்பே குறிப்பிட்டதுபோல் இலக்கியம், நாடகம், நாட்டுப்புறப் பாடல் ஆகிய மூன்று வகைகளிலும் எழுதப் பெற்றுள்ளது; நாற்பதுக்கும் மேற்பட்ட சுவடிகள் நூலகங்களில் அச்சாகாமல் உள்ளன; இவற்றுள் நாட்டுப்புறப் பாடல் வடிவில் உள்ள சுவடிகளே மிகுதி. அவற்றின் விளக்கம் கீழ்வருமாறு:

கேரளப் பல்கலைக்கழகச் சுவடி நூல் நிலையத்தில் இருக்கும் வைகுண்ட அம்மானை சுவடிகள்:

1. சுவடி எண் 3214 ; முழுமையானது; 262 ஏடுகள் உள்ளன.
2. சுவடி எண் 4079 ; குறையானது; 251 ஏடுகள் கொண்டது.
3. சுவடி எண் 5453 ; முழுமையானது; 300 ஏடுகள் உள்ளன.
4. சுவடி எண் 5460 ; குறையானது, 14 ஏடுகள் கொண்டது.
5. சுவடி எண் 5665 ; குறையானது, 161 ஏடுகள் உள்ளன.
6. சுவடி எண் 5763 ; குறையானது, 15 ஏடுகள் உள்ளன. இறுதி ஏட்டில், '1018 ஆம் வருடம்[1] சித்திரை மாதம் 7 ஆம் தேதி குருவாரம் சதுர்த்தேதியும் அவிட்ட நட்சத்திரம் மீன லக்கினம் சுவடி விடுமாடன் கையெழுத்து' என்று சுவடி படியெடுத்த நாள் குறிப்புக் காணப்படுகிறது.
7. சுவடி எண் 6400A; முழுமையானது, 29 ஏடுகள் கொண்டது.184 பாடல்கள் உள்ளன.
8. சுவடி எண் 6670; முழுமையானது; 240 ஏடுகள் கொண்டது.
9. சுவடி எண் 6673; முழுமையானது; 221 ஏடுகள் உள்ளன.
10. சுவடி எண் 7955; முழுமையானது, 248 ஏடுகள் உள்ளன. இறுதி ஏட்டில், '1059 ஆம் வருடம்[2] கீழப்பாவூரிலிருக்கும் சொரிமுத்துக்கோன் குமாரனாகிய சொக்கலிங்க வாத்தியார் வாசித்து வருகிற வைகுண்ட அம்மானை' என்ற குறிப்புக் காணப்படுகிறது.
11. சுவடி எண் 8126 ; முழுமையானது; 178 ஏடுகள் கொண்டது.
12. சுவடி எண் 8408; முழுமையானது, 178 ஏடுகள் உள்ளன. "இது1065 ஆம் வருடம்[3] 14 ஆம் தேதி படி எடுக்கப்பட்டதாகக் குறிப்புக் காணப்படுகிறது.
13. சுவடி எண் 8638; முழுமையானது, 191 ஏடுகள் உள்ளன. இச்சுவடியின் 189 ஆம் ஏட்டில், 'துளாயிரத்தி யெழுபத்தொன்பதாம் ஆண்டில்[4] சனிவார விந்தமதில் ஆனியெனும் மாதம் ஞானசனி வாரமுடன் நல்ல திதி பஞ்சமியில் யிக்கதையை விளங்கவே தானெழுதி' என்றும், இறுதி ஏட்டில், '1049 ஆம் ஆண்டு[5] அற்பசி 19 ஆம் தேதி ஆதித்தவாரம் பூர்வ பட்சம்

---

[1] கி.பி.1843.
[2] (1059+825= 1884) கி.பி.1884.
[3] (1065+825= 1890) கி.பி.1890.
[4] (979+825= 1804) கி.பி.1804.
[5] (1049+825= 1874) கி.பி.1874.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

துவாதேசி உத்திரட்டாதி நட்சத்திரம் ஆசுர் வளநாடாகிய சமுத்திரத்துக்குக் கீழ்ப்பிடாகயான கோபங் கீர்த்தி ஸ்ரீ நாராயணகுரு . எழுதியது' என இரு ஆண்டுகளின் குறிப்பு எழுதப்பட்டுள்ளது. இருவர் பெயர் குறிப்பிடப்பெற்றிருப்பதால், இச்சுவடியை இருவர் படியெடுத்திருக்கக் கூடும் என்று கருதத் தோன்றுகிறது.

14. சுவடி எண் 8640; குறையானது; 121 ஏடுகள் உள்ளன.

15. சுவடி எண் 9150; சிறு சிதைவுடன் கூடியது; முழுமையாக உள்ளது; 33 ஏடுகள் உள்ளன. இது 204 பாடல்கள் கொண்டது.

16. சுவடி எண் 9063; குறையானது; 58 ஏடுகள் உள்ளன.

17. சுவடி எண் 10293; சிதைந்துள்ளது; குறையானது; 210 ஏடுகள் உள்ளன.

18. சுவடி எண் 10302 ; சிறுசிதைவு; குறையானது; 112 ஏடுகள் உள் ளன.

19. சுவடி எண் 10369 ; சிறு சிதைவு; குறையானது; 162 ஏடுகள் உள்ளன.

20.சுவடி எண் 10370; முழுமையானது; 259 ஏடுகள் உள்ளன. இறுதி ஏட்டில், '1049 ஆம் வருடம்[1] முக வருடம் கார்த்திகை மாதம் 7 ஆம் தேதி வியாழக்கிழமை அணைஞ்ச பெருமாள் பிள்ளை எழுதியது' என்னும் குறிப்புக் காணப்படுகிறது.

21. சுவடி எண் 11278; முழுமையானது; 195 ஏடுகள் உள்ளன. இதன் இறுதி ஏட்டில், 'பவ வருஷம் தை மாதம் 18 ஆம் தேதி தவமுடைய பஞ்சமியில் சனிவார விந்தமதில் எழுதப்பட்டது' என்னும் குறிப்புக் காணப்படுகிறது.

22. சுவடி எண் 11621; இது முழுமையானது; இதில் 300 ஏடுகள் உள்ளன.

மேலே கூறிய சுவடிகளுள் சுவடி 6400A, 9150 ஆகிய இரண்டும் ஒன்றின் படிகளாக இருக்கக் கூடும். இவை பிற நூல்களிலிருந்து மாறுபட்டுக் குறைந்த அளவு பாடல்களைக் கொண்டுள்ளன. மேலும், வைகுண்ட அம்மானைச் சுவடிகள் பல, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னைக் கீழ்த்திசைச் சுவடி நூல்நிலையம், இன்ஸ்டிடியூட் ஆப் ஏசியன் ஸ்டடீஸ் முதலிய இடங்களிலும் காணப்படுகின்றன.

சென்னைக் கீழ்த்திசைச் சுவடி நூல்நிலையத்தில் இரு சுவடிகள் உள்ளன.

1.சுவடி ஆர்.எண் 7354, 7355 ஆகிய இரண்டும், மகாவிந்த அம்மானைச் சுவடிகள். இவை நெல்லை மாவட்டம் கொக்கிரகுளம் என்ற ஊரிலிருந்து கிடைத்துள்ளன. இந்நூலகத்தில் இருக்கும், வைகுண்ட அம்மானைச் சுவடிகள் திருச்சியிலிருந்து கிடைத்துள்ளன என்று நூலகக் குறிப்புத் தெரிவிக்கின்றது. எனவே, இக்கதை தென்பாண்டி நாட்டில் மிகுதியாக வழங்கி வந்திருக்க வேண்டும் என்று தெரிகிறது. பாண்டவர்களின் வைகுண்டப்பயணத்தைப் பற்றிக் கூறும் பல நூல்கள் சுவடி வடிவில் இருப்பதே, அக்கதை மக்களிடையே பெற்றிருந்த செல்வாக்கைப் புலப்படுத்துகிறது. இதனுள்ளே பாரத, பாகவத, இராமாயண, புராணக் கதைகள் அமைந்துள்ளதால், மக்கள் இதை மிக விரும்பிக் கேட்டிருக்கக் கூடும். ஆகையால் பாவலர் பலர் இக்கதையைப் பாடலாகப் பாடியிருக்கின்றனர்.

[1] (1049+825= 1874) கி.பி. 1874.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பாண்டவர்கள் வைகுண்டம் செல்வதற்கு மேற்கொண்ட பயணத்தைக் கதைக் கருவாகக் கொண்ட நாற்பதுக்கும் மேற்பட்ட ஏட்டுச் சுவடிகள் நூலகங்களில் காணப்படுகின்றன. இவற்றை ஆராய்ந்ததில் தெரிய வருவன வருமாறு:

நூல்களின் பெயர், மகாவிந்தம்(சு.எண் 450), மகாபெந்தம்(சு.எண் 57), மாவிந்தம், விந்தகக் கதை (சு.எண்176), வைகுண்ட அம்மானை, மாவிந்த நாடகம் (சு.எண் 853), மகாவிந்த அம்மானை (சு.எண் 7354) என்று பலவாறு வழங்கப்பட்டுள்ளன. இருப்பினும் அவற்றின் பாடுபொருள் ஒன்றே; எனினும் இதில் காணப்படும் கதை கூறுகளில் சிற்சில வேறுபாடுகள் உள்ளன. அவ்வேறுபாடுகள் ஒப்பீடு கட்டுரையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன (ஆய்வு முன்னுரை- கட்டுரை 9). பல சுவடிகள் குறையாக இருப்பதால் ஆசிரியர் பெயர் அறிய முடியவில்லை. இருப்பினும் வாலைசேஷன் (சு.எண் 853) , விநாயகன் (சு.எண் 57) என்று சில ஆசிரியர்களின் பெயர்கள் காணப்படுகின்றன.

1.11 யாப்பு

கவிஞன் தான் உணர்த்த விரும்பும் கருத்தை வெளியிடுவதற்கு வாயிலாக அமைவது கவிதை; இக்கவிதையின் வடிவம் கலைநயம் உடைய யாப்பு; இது உணர்ச்சி, கற்பனை, சொல்லாற்றல் எனப் பலவற்றைத் தன்னகத்தே கொண்டது.

1. பாரத மாவிந்தத்தில் சந்த ஓசை நயம் உடைய பாடல்கள் உள்ளன.

விடைந டத்திய வரனி டத்துறை விரகி யுத்தமி யுரகநீள்
படந டித்தவ னுடனு தித்தவள் பரிவி னிற்பெறு குமரனாங்
குடவ யிற்றிடைக் கடலை யெட்பொரி கொளவி ருப்புட னொருகைநீள்
கடத டக்கரி வதன வித்தகர் கழலி ணைத்துணை கருதுவாம் (பா.மா. 4)

2. அத்தினபுரத்திலுள்ள மாளிகை அழகும் செல்வச் செழிப்பும் மிகுந்து விளங்கியது; தூண்கள் ஒளிவிடும் பவளத்தாலானவை அவற்றின் போதிகை வயிடூரியமும் பொன்னும் பொருந்தியவை என ஆசிரியர் வருணிப்பதன் மூலம் அதன் அழகும் செல்வச் செழிப்பும் கண்முன் வருகின்றன.

பயிலும் பவழஞ் சுடர்பத்தி கொள்தூ
ணுயரும் வயிடு ரியமொண் கனகச்
செயலொன் றியபோதி வைசெப் புதல்வே
றியல்வென் பலவெண் ணிலமா ளிகையே. (பா.மா.33)

3. பாண்டவர்கள் காட்டில் செல்லும் வழியில் ஓர் அரக்கனுடன் வீமன் மோதிய நிலையை ஓசை நயத்துடன் ஆசிரியர் படைத்திருக்கிறார்.

மலைந டுங்கின மாதிர யானைகள்
நிலைந டுங்கின நீடிய சேடனும்
தலைந டுங்கினன் றாழ்கட லென்றுள
வலைந டுங்கின வீமன திர்ப்பினால். (பா.மா.365)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

4. வீமன் இறந்தபோது வருந்தி, நிலை குலைந்து தருமன் தனியே நின்ற நிலையை,

அணைத்திடு மெடுக்கு மரற்று மாதரிக்கு
மருண்டுடல் புரண்டிடு மருளின்
றுணைத்தன் முகத்தை முகத்துட னழுத்துந்
துய்யதாள் முடியினிற் சூட்டும்.(பா.மா. 610:1-2)

என்னும் பாடல் அதைப் படிப்பவரும் அத்துயரில் தோயும் வண்ணம் அமைந்துள்ளது.

5. பாடல்கள் எளிய நடையில் ஆற்றொழுக்காய்ப் பொருள் கொள்ளும் நிலையில்,

எண்வளர்ந்த சிந்தையர்க்கு மெட்டா வரும்பொருளாய்
விண்வளர்ந்த தென்ன விளங்குங் கருமுகிலைப்,
பண்வளர்ந்த வேதப் பரஞ்சுடரைப் பாற்கடலிற்
கண்வளர்ந்த கோலத்தைக் கண்ணாரக் கண்டனமால் (பா.மா.128)

அமைந்துள்ளன.

பாரத மாவிந்தத்தில் இடம்பெறும் 760 பாடல்களின் மொத்த அடிகள் 3040 ஆகும் (பார்க்க: இயல் 6)

1.12 அணி

பாரத மாவிந்தத்தில் சோமன் கவிதையை நயம்படக் கூறுவதற்கு அணிகளைச் சிறப்பாகக் கையாண்டிருக்கிறார். அவற்றுள் சில வருமாறு:

1.உவமை: தருமன் அடர்ந்த காட்டில் வீமனை இழந்து அனாதரவாய் துயருற்றுத் தன்னந் தனியனாய் நிலைகுலைந்து நிற்கும் நிலையைச் செவ்வனே பல்பொருள் உவமைகளால் கருத்தில் பதிக்கிறார் சோமன். தருமனது நிலையை இடிவிழுந்துள்ள பாம்பிற்கும், பாம்பின் வாயில் அகப்பட்ட தேரைக்கும், பெருங்காற்றில் சாய்ந்த மராமரத்திற்கும் ஒப்பிடுகிறார்.

இத்தகை வீமற் கெய்தல்கண் டறத்தோ னிடிவிழுந்த
துளவர வெனவும்
பைத்தலை யரவின் வாய்ப்படுந் தேரை படுந்துய
ரென்னவும் விரைவின்
வைத்தபே ரன்பென் றொருபெருங் காற்றின் மராமரஞ்
சாய்ந்த வாறென்ன .. (பா.மா.609)

2. உருவகம்: இது உவமையணியோடு நெருங்கிய தொடர்புடையது. உவமையையும், பொருளையும் வேறு வேறாகக் காணாமல் ஒன்றிலே மற்றொன்றைக் காண்பது, 'உருவக அணி'.

ஆசிரியர், சோமன் கலிகாலத்தின் வரவைப் பற்றிக் கூறும்போது,

பொய்கொலையெ னும்பணிகள் பூண்டுவினை பேசி
மையல்பொரு ளாசையெனு மாலைமுடி சூடிக்
கையினை நிலத்தினிடை யூன்றியிரு கால்மேற்
செய்யதலை கீழுற நடந்துகலி சென்றே (பா.மா.168)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

என்று குறிப்பிடுகிறார். பொய்யும், கொலையுமே கலிகாலத்தின் அணிகலன். வஞ்சகம் பேசுவதே அதன் பேச்சு. மோகம், பொருளாசை ஆகியவை அதன் மாலை. இத்தகைய கோலத்துடன் அது நடந்து சென்ற தாகக் காட்டியிருப்பது, கலியை நம் கண்முன் ஓவியமாகத் தீட்டியுள்ளது.

3.சொல் பின்வருநிலை அணி பாரத மாவிந்தத்தில் இடம்பெற்றுள்ளது. முதலடியில் வந்த சொல்லே பின்னும் பலவிடங்களில் வந்து அதன் பொருள் வேறுபடுதல் சொற் பின்வருநிலை. தருமன் வைகுண்டம் சென்றபோது, திருமால் கருடன் மீது எழுந்தருளிய காட்சியை மேகத்தில் ஞாயிறு தோன்றியதைப்போல் இருந்ததாக ஆசிரியர் வருணிக்கிறார். ஞாயிறன்ன தோன்றிய திருமாலைக் கண்ட தருமன் உள்ளம் உவப்புற்று அவரைப் பலவாறு புகழ்ந்து போற்றித் துதிக்கிறான்.

வாரண மடைத்துத் தோலா வஞ்சரை யழித்தாய் போற்றி!
வாரணந் தனைய ளிக்க வந்துமுன் னின்றாய்ப் போற்றி!
வாரணஞ் செங்கை கொண்ட வாமன ரூபா போற்றி!
சீரணி முகுந்தா போற்றி! சிறீகரி போற்றி! போற்றி! (பா.மா.742)

இப்பாடலில் வாரணம் என்னும் சொல் முதல் மூன்று அடிகளில் வருகிறது. முதலடியில், கடல் எனவும், இரண்டாம் அடியில், யானை எனவும், மூன்றாமடியில், சங்கு எனவும் வந்த சொல்லே மீண்டும் வந்து வெவ்வேறு பொருள் தரும் வண்ணம் அமைத்திருப்பது படித்து இன்புறற்குரியது.

4. தற்குறிப்பேற்றம்: இயல்பாக நிகழும் நிகழ்ச்சியின்கண் கவிஞன் தான் கருதிய வேறொன்றினை ஏற்றிக் கூறுவது தற்குறிப்பேற்றம். நெடுகப் பரந்திருக்கும் காட்டிலே நெருப்புப் பரவி யுள்ள வழியில் பாண்டவர்கள் நடந்து செல்ல, அவ்வழியிலிருந்த காட்டுத் தீ பாண்டவர்களின் நல்லியல்பால் அவ்வழியிலிருந்து இயல்பாக விலகிச் சென்றது. அக்காட்சியை ஆசிரியர் மருமகனைக் கண்ட மாமியார் ஒதுங்கிச் செல்வதுபோல் இருந்ததாகத் தற்குறிப்பேற்றமாகத் தம் கருத்தை அதன் மீது ஏற்றிப் பாடுகிறார்.

"... கானக நெடுங்கட லொருக்கால் மாறுதலில்
காயெரி படர்ந்துள தடத்தே யாகிநிகர்
மானகர் சென்றிட வழித்தீ மாறியது
மாமிய ரொதுங்குதல் வகைப்பாம் வாய்மையெனல் (பா.மா.549)

குறிப்பு: துரோபதி நெருப்பில் பிறந்தாள்; அதனால் நெருப்பு அவளுக்குத் தாய்; நெருப்புத் துரோபதிக்குத் தாய் எனில் பாண்டவர்க்கு மாமியார். எனவே நெருப்பாகிய மாமியார் மருமகன் (பாண்டவர்) முன் நில்லாது அவர்களுக்கு வழிவிட்டு நீங்கிச் செல்வதாக அமைந்துள்ளது பாடல். ஒரு கவிஞன் வேறு மொழியிலிருந்து ஒரு நூலைத் தன் தாய் மொழியில் படைக்கும் போது (adapt) இயல்பாகவே அவருடைய பண்பாடும் பழக்க வழக்கங்களும் அந்நூலில் பிரதிபலித்தல் இயல்பு. தமிழ்நாட்டில் பண்டைய மரபில் மருமகன் (மகளுடைய கணவன்) முன்பு மாமியார் வருவது வழக்கமில்லை. ஆசிரியர் சோமன்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தமிழ்நாட்டின் அந்த மரபைக் கருத்தில் கொண்டு இப்பாடலில் அதை வெளிப்படுத்தியிருக்கின்றார்.

5. நேர் நிரனிறை அணி – சொல்லையும் பொருளையும் நிரலே நிறுத்திப் பொருள் கொள்வது இவ்வணி. பொய்கையில் தாமரையும், குவளையும், குமுதமும் மலர்ந்திருந்ததைப் பாண்டவர்கள் கண்டனர். அவர்கள், அவற்றைத் துரோபதியின் முகமும், கண்ணும், வாயும் என்றெண்ணாது, திருமாலின் முகத்துக்கும், கண்ணுக்கும், வாய்க்கும் இயைந்தன என்றெண்ணி மகிழ்ந்த நிலையைக் கீழ்வரும் பாடல் காட்டுகிறது.

பங்க யங்களும் குவளையும் குமுதமும் பாத்தன ரினியபாஞ்
சாலிக்கு
அங்கு றுந்திரு வதனமும் கண்ணும் வாயழகு மென்றிவை
யெண்ணார்
சங்க மர்ந்துறை கரத்தினர் நயனமுந் தக்க மேனியும் வாயும்
இங்கி சைந்துள வென்றுள மெண்ணினார்...... (பா.மா.544)

தாமரை, குவளை, குமுதம் ஆகிய மலர்களை முதலில் கூறிப் பின்னர் அவற்றிற்கு ஒப்புமை உடைய உறுப்புகளான முகம், கண், வாய் இவற்றை முறையாகக் கூறினமையின் இது நேர் நிரனிறை அணியாகும். தாமரை, குவளை, குமுதம் என்ற சொற்களை வரிசையாக நிறுத்தி, அதற்கு இயைபுள்ள உறுப்புக்களை முறைப்படக் கூறியிருப்பது பாடலுக்கு அழகும் இனிமையும் தரும் வகையில் அமைந்துள்ளது. (பார்க்க: இயல் 7).

1.13 மொழிநிலை

பாரத மாவிந்தத்தின் பாடல் வாயிலாக அக்கால மொழியின் இயல்புகளையும் திரிபுகளையும் காணமுடிகிறது. ஆசிரியர் பல மரபுச் சொற்களையும் பேச்சுவழக்குச் சொற்களையும் நூலில் கையாண்டுள்ளார்.

அவை வருமாறு:

◆ மரபுச் சொற்கள்

அடிசில் (பா.மா. 69) உணவு
இடுக்கண் (பா.மா. 740) துன்பம்
உண்ணு நீர் (பா.மா. 358) குடிக்கும் நீர்
உண்டி (பா.மா. 358) உணவு
உம்பி (பா.மா. 619) உன் தம்பி
பிசி (பா.மா.686) பொய்
யாறு (பா.மா. 441) ஆறு

◆ பேச்சுவழக்குச் சொற்கள்

எ.டு. துடர்ந்து – தொடர்ந்து(பா.மா.123)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அஞ்சு – ஐந்து (பா.மா.150)
பராக்குற – கவன்மின்மை (பா.மா.342)
பிறப்படு –புறப்படு (பா.மா.317)
பேராத்தை – பேராற்றை (பா.மா.667)
(மேலும் பார்க்க: இயல் 8)

1.14 நூலின் சிறப்பியல்புகள்

சிறுகாப்பிய மரபில் பாரத மாவிந்தம் என்ற இந்நூல் தனித்த இடம்பெறுகிறது. இந்நூல் அச்சில் வராததால், அறிஞர்கள் இதைப் படிக்கும் வாய்ப்பை இழக்க நேரிட்டது. இது அறம், நன்னெறி, நன்மதிப்புப்[1] போன்றவற்றை வலியுறுத்தி முன்வைக்கிறது. இது பொதுமக்களிடம் வாய்மொழியாகப் பரப்பப்பெற்றுள்ளது. பாண்டவர்கள் அனைவரும் ஓரளவு ஏற்ற தாழ்வற்றவர். ஆயினும் அவர்களுள் சிறப்பானவன் சகாதேவன். தகுதி வாய்ந்த தருமன் கூட ஒரு பொய் சொன்னதற்கு உரியவனாகிறான். பாரத மாவிந்தம் தரும் செய்தி, 'வழுவின்றி வாழ்வது' என்பதாகும். தன்னலத்திற்கு இந்நூலில் இடமில்லை. பாரத மாவிந்தம் படிப்பவர் மனத்தில் சிறந்த பண்பைப் பதியச்செய்கிறது. பரிவு உணர்ச்சிக்கு இடமளிக்கிறது. துரியோதனன் தருமனுக்குத் தீங்கிழைத்தும், தருமன் தனது தருமத்தில் பாதியை மனமாரக் கொடுத்து அவனை நரகத்திலிருந்து மீளச் செய்கிறான்.

அந்த வெல்லையயி லுதிட்டிர னையனை நோக்கி
யெந்தன் மாதரு மத்தினிற் பாதியின் றிவர்க்கே
சிந்தை யாரவே கொடுத்தனன் விடுமெனத் திகைத்துக்
கந்த நாறு பூந் தாரினா னினையன கழறும். (பா .மா.710)

இது, 'பகவனுக் கருள்வாய் நன்னெஞ்சே' என்ற பாரதியின் பாடலடிகளை நினைவூட்டுகிறது. தருமன் தனது தருமத்தில் பாதியைக் கொடுத்துத் துரியோதனை நரகத்திலிருந்து விடுவித்ததைக் கண்ட அவனது தந்தை எமதர்மன்,

வடும னத்தினா னதியிடை வன்கழுப் பாச்சி
விடம ருத்திவல் லிருளினிற் கங்கையின் வீழ்த்திச்
சுடுக னற்பொறி யில்லிடை வைத்துச் சூதாடி
யடிமை யாக்கிமண் கொண்டுகான் விடுத்தவஞ் சகனே
(பா.மா. 711)

[=குற்றமுள்ள மனமுடைய துரியோதனன், கங்கை ஆற்றில் கழுவினை நட்டும், விடம் அருந்தச் செய்து இரவில் கங்கை ஆற்றில் விழச்செய்தும், அரக்கு மாளிகையில் நெருப்பு வைத்தும், சூதாடி அடிமையாக்கி நாட்டைக் கவர்ந்தும், காட்டிற்கனுப்பிய வஞ்சகனாவான்]. என்று துரியோதனன் பாண்டவர்களுக்கு இழைத்த தீங்கைக் கூறியதும், தருமன் தன் தந்தையை நோக்கி,

[1] Tarma, Ethics and values.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

என்ற தந்தையை நோக்கியே யிவர்களா னம்பாற்
றுன்று நல்வினை யாகுமாற் றுயோதனன் செய்த
நன்றி யொன்றதோ பலவுள நாரணன் மலர்ப்பாத
மென்று நாமற வாமலே செய்தவர்க் கீதோ (பா.மா.712).

என்ற தந்தையான தருமதேவனைப் பார்த்துத் தருமன், 'கௌரவர்களால் நம்மிடம் நிறைந்துள்ளது புண்ணியமாகும். துரியோதனன் (எமக்குச்) செய்த நன்றி ஒன்றல்ல பல உள்ளன. திருமாலின் திருப்பெயர் எப்போதும் நாம் மறந்துவிடாமல் இருக்கும்படிச் செய்தவர் களுக்கு இந்தக் கடு நரகமோ?' என்று மறுமொழி கூறுகிறான்.

இது தருமன் திருமால் மீது வைத்திருந்த மாறாப் பேரன்பைக் காட்டுகிறது. இதன் வாயிலாக எப்போதும் பிறரது நல்லியல்பைக் காணும் நற்பண்பைக் கொள்ளவேண்டும் என்று ஆசிரியர் காட்டுகிறார். இத்தகைய பண்புகள் நிறைந்த தருமனைத் திருமால் செம்மல் என்று பாராட்டுகிறார்.

வந்து நமன்பதி வந்து பொல்லா மதிவஞ்சகர் வன்னரகிற்
சிந்தி யழுந்து நெடுந்துயர் கண்டு சுயோதனனே முதலோர்
பந்தம கன்றிட நீபுரி யுந்தரு மத்தினி லோர்பகுதி
சிந்தைம கிழ்ந்துகொ டுத்துல கேற்றிய செம்மலு நீயலையோ
(பா.மா.748)

◆ பொருள் தெளிவில்லாத பாடல்கள்:

248, 249, 254, 401, 536, 542, 545, 554, 556, 580, 648, 681, 682, 684-687, 702 (17) பாடல்கள்.

◆ மிகையான பாடல்கள்[1]

69அ, 71அ, 292அ, 328அ, 395அ, 401அ, 420அ, 521அ, 724அ- (9) பாடல்கள்.

எ.டு. தினையம் பொழுதும் பலசிந் தையர்க்
கனவின் படிகேள் விகருத் துறநின்
வினையென் பனயாவை யும்வீட்டி டுமேல்
நினையும் பிரமத் தியும்நீங் கிடுமே (பா.மா. 69அ) [2]

◆ துதிப் பாடல்கள்

308-310, 347, 356, 540, 564, 586, 605, 606, 736-745 (20) பாடல்கள்

[1] பதிப்புக்கு அடிப்படையாகக் கொண்ட சுவடி 1 யை விட ஒப்பீட்டுக்கு எடுத்துக் கொண்ட சுவடி 2, 3, 4 ஆகியவற்றில் மிகையாக இருந்த பாடல்களைக் குறிக்கும்.
[2] அடிப்படையாகக் கொண்ட சுவடியில் (3895b) இல்லாத பாடல்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

எ.டு. மாதவர்க் கிடுக்கண் தீர்க்க மண்முழு தளந்தாய் போற்றி!
பாதகக் கஞ்சன் வீழ்ந்து பதைத்திட வுதைத்தாய் போற்றி!
போதனை யளித்தாய் போற்றி! புராரி பாலரியைப் பெற்ற
சீதரக் கடவுள் போற்றி! சிறீகரி போற்றி !போற்றி! (பா.மா. 740)

◆ கதை மாந்தர்

அந்தணர், அர்ச்சுனன், இந்திரன், எமதர்மன், கண்ணன், காந்தாரி, கிங்கரர், குந்தி, சகாதேவன், சனமேசயன், சாத்தகி, சித்திரகுப்தன், தருமன், துர்வாசமுனிவர், துரோபதி, நகுலன், பரீட்சித்து, பிரம்மன், வியாசர், வீமன், வேடன் முதலியோர் கதை மாந்தர்[1] ஆவார்.

மேலும், பாரத மாவிந்தத்தில் இடம்பெறும் கிளைக்கதை, கதைக் குறிப்புகள், குறித்துப் பின்னிணைப்பு – 2 இல் காண்க.

பாரத மாவிந்தத்தில் இடம்பெறும் மரம் செடி, கொடி, மலர், விலங்குகள், பறவைகள், முனிவர் பெயர், இடப்பெயர், மலைகள், காடுகள், நதி முதலியவை பற்றிப் பின்னிணைப்பு -3 இல் காண்க.

நிறைவுரை: மேலே கூறியவற்றை நோக்கும்போது, பாண்டவர்களின் வைகுண்ட யாத்திரையைப் பற்றிப் பாடும், மாவிந்தக் கதை தமிழ் மக்களிடையே குறிப்பாகத் தென்தமிழகத்தில் மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்தது என்றுணர முடிகிறது. இதை மக்கள் விரும்பிக் கேட்டமையால், தேவை கருதிப் பலர் இலக்கியமாக, நாடகமாக, நாட்டுப் புறப்பாடலாகப் பாடியிருக்கின்றனர். இக்கதையைக் கூறும் நாற்பதுக்கும் மேற்பட்ட சுவடிகள் நூலகங்களில் கிடைப்பதே இதற்குத் தக்க சான்று. இவ்வகை இலக்கிய நூல்களின் அருமை அறிந்து, அவற்றை அச்சில் கொண்டு வாராமையால், குன்றிலிட்ட விளக்காகத் திகழ வேண்டிய இந்நூல் குடத்திலிட்ட விளக்காகத் திகழ்கிறது. இதை வெளிப்படுத்த வேண்டும் என்னும் நோக்கத்திலேயே, இந்நூலை ஏட்டிலிருந்து பதிப்பித்து வெளியிடுகிறேன். இதுபோல் இத்துடன் தொடர்புடைய வெளிவாராத பிற நூல்களும் பதிப்பிக்கப் பெறவேண்டும் என்ற வேணவா உடையேன்.

[1] இவர்களின் பரியாயப் பெயர்களை அருஞ்சொல் பொருள் அகராதி முதலியன என்பதில் பார்க்க.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Introduction

1.1 Name of the Text - *Pārata Māvintam*[1]

The name of the text edited here is *Pārata Māvintam*. It deals with the journey of *Pāṇṭavars* to *Vaikuṇṭam*, the abode of Vishṇu. It recounts the content of the last three paruvams of the *Mahāpārata*,[2] namely the 16th, 17th and 18th books of the epic of Vyāsa, which cover the ultimate journey of the *Pāṇṭavars*.

It is also possible that the story of the last journey of *Pāṇṭavars* to *Vaikuṇṭam* through the *Māvintam* forest might have been named as *Pārata Māvintam*. In Tamil, the *Makāpāratam* is referred to as *Pāratam*, not as *Makāpāratam*.

Only four palm-leaf manuscripts of the *Pārata Māvintam*[3] are extant now. Even though it is a text composed by the same author, the name of the text is mentioned in three ways in the manuscripts, the copiest may have written like that. Among these, three manuscripts[4] (M.No. 3895b, M.No.11413 and M.No.RE 10857) are bundled along with *Villiputtūrar Pāratam* manuscript. Only the manuscript copy from *Maturait Tamilc Caṅkam Centamil* College Library, is found as a separate bundle. The name of this text is mentioned in three ways in these manuscripts.

1) M.No.3895b – *Pārata Māvintam*

2) M.No.11413 -*Māvintam* (in the first folio) and *Māvinta Pāratam (in the last folio)*

3) M.No.198 and

4) M.No.RE 10857 - *Pārata Māvintam*

Among the four, three *Māvintam* manuscripts refer to it with the epithet *Pāratam* and so this work is edited with the name *Pārata Māvintam*. In the other fourth one (M.No.11413), the name *Māvintam* is mentioned as '*Māvinta Pāratam*'. Since the name *Pārata Māvintam* is mentioned in three manuscripts, it is considered as proper and appropriate to edit it and publish it with that name.

---

[1]Apart from some unavoidable words in the book, other Sanskrit words are given according to the Tamil tradition.

[2] Maucalap paruvam, Makāprattānikāp paruvam, Corkkārōkaṇap paruvam.

[3] Composed by *cōmaṉ*

[4] Two manuscripts from Kerala University Oriental Manuscripts' Library,Kāriyavaṭṭom , Tiruvanantapuram (M.No. 3895b, M.No.11413) and one from French Institute of Pāṇṭiccēri (M.No. RE10857).

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Villiputtūrar has composed the Mahābhārata story in Tamil up to the tenth parvan of Vyāsa's Mahābhāratā. Since this text is about the last phase of the life of the *Pāṇṭavars*, it must have been added at the end of Tamil *Pāratam* to make it complete.

The compound noun *Pārata Māvintam* is derived from *Pāratam* and *Māvintam*, which means the *Māvintam* section of *Pāratam*, where the chief characters of *Makāpāratam* attained 'svarga' (paradise).

Māvintam is the name of the forest region leading to *Vaikuṇṭam*. This work narrates the details of the journey of *Pāṇṭavārs* through the *Māvintam* forest in a metonym[1] for the journey and further it also indicates the literary work in a double transference[2] method.

Pārata Māvintam means the section *Māvintam* which is part of the *Pāratam*. The Tamil Lexicon records *'Makāvintam'* with the meaning '*Vaikuṇṭam*' following Winslow's dictionary, but without other attestation. In Tamil, the Sanskrit Mahā- prefixed to a word may be written and pronounced simply as *mā-*.

In *Pārata Māvintam*, the terms *Makavintam*[3], *Makāvintam*[4], *Māvintam*[5] and *Vintam*[6] mean *Vaikuṇṭam* (*Pā.Mā.*18,70,83,289), the forest on the way to *Vaikuṇṭam* (*Pā.Mā.*49, 96, 272, 283) and the forest next to *Vintiya*.

Naḷaveṇpā spoke about the town named *Māvintam* in Nishata country.

...சீதகள பச்செழுஞ் சேற்றால் – வீதிவாய்
மானக் கரிவழுக்கு மாவிந்த மென்பதோர்
ஞானக் கலைவாழ் நகர் (நள.13).

...Cītakaḷa paccelun̄ cēṟṟāl – vītivāy
māṉak karivaḻukku māvinta meṉpatōr
ñāṉak kalaivāḻ nakar (*Naḷa*.13).

= There is a town called *Māvintam,* where wisdom and arts flourished and in whose streets the elephants slid on the rich and cool *kaḷapam.*[7]

---

[1]The kind of metonymy where in the name of the location is used for the name of the thing contained – *iṭavākupeyar*- metonymy of place.

[2]A variety of metonymy where in a word used figuratively in one sense in the first instance, is once again applied to signify another with which it bears a certain relation; When a word like *kār* –meaning 'black', becomes an *ākupeyar*–place metronymy; it is first used to signify a cloud and when used again to cannote the rainy season.

[3]*Pā.Mā.* 83, 96, 178, 193, 213, 236.

[4]*Pā.Mā.* 18, 19, 49.

[5]*Pā.Mā.* 15, 21, 272, 289, 567, 690.

[6]*Pā.Mā.* 66, 70, 201, 205, 240, 251, 258, 283, 311, 325, 343, 545, 670.

[7]Perfumery substance.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

This *Māvintam* mentioned in *Naḷaveṇpā* is different from the *Māvintam* mentioned in *Pārata Māvintam*.The term, *Māvintam* is mentioned in different ways in the texts. See below:

மாபெந்தம் போந்தேம் (பெரு.பா.மா.)-*Mābentam pōntēm* (*Peru.Pā.Mā.*198) = (we) went to *Mābentam*.

மகாபெந்தம் போக (தஞ்.சர.1)- *Makābentam pōka* (*Tañ.Sara.*1)
= to go to *Makābentam*.

மாவிந்த பதம் (வைகு.ப. 156) – *Māvinta patam* (*Vaiku.*p.156)
= *Māvinta* land.

In *Pārata Māvintam* itself, it is mentioned in different ways. They are as follows:

மன்னன் மாவிந்தஞ் சேர்ந்ததை (பா.மா.15)

Maṉṉaṉ māvintañ cērntatai (*Pā.Mā.*15)=The king (named *Tarumaṉ* who attained) *Māvintam*

மன்னர் மகாவிந்தஞ் சார்ந்ததே (பா.மா.18)

Maṉṉar makāvintañ cārntatē (*Pā.Mā.*18)=the king (named Tarumaṉ) who reached *Makāvintam*

மன்னன் மகாவிந்தத்தை யடைந்துள (பா.மா.19)

Maṉṉaṉ makāvintattai yaṭaintuḷa (*Pā.Mā.*19) =(The story of) the king who reached *Makāvintam*

மங்கலஞ்சேர் மாவிந்தக் கதையை (பா.மா. 21)

Maṅkalañcēr māvintak kataiyai (*Pā.Mā.* 21) = *Māvinta* story which brings auspiciousness .

The usage of the name *Makāvintam* does not exist in Sanskrit Bhāratam texts.This is not found in Sanskrit dictionaries also. From these it is clear, the concept of *Māvintam* is peculiar to Tamilnāṭu. This *Māvintam* concept explicit in certain genres such as minor epic, play, folk song etc. which will be explained later.This attests to the popularity of the above concept in Tamilnādu.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

1.2 Manuscripts used for this Edition

Four manuscripts are available for this edition. The texts are yet to be published. Among the four, two manuscripts (M.No.3895b and M.No.11413) are available in Kerala University Oriental Manuscripts' Library; one from French Institute of *Pāṇṭiccēri* [1].These three are complete, well maintained and legible. Another one from the Library of *Maturait Tamilc Caṅkac Centamil* College. This is incomplete and damaged. Yet it is legible. Among the four manuscripts, the M.No.3895b from the K.O.M.Library[2] is the earliest one. So this is considered as the basic text and the other three are also consulted.

1.2.1 M.No.3895b(cu.1)

This is available in K.O.M.Library, Kāriyavaṭṭom, Tiruvanantapuram. It was donated by *Cuppaiyā kaṇapati*, who is from *Ariyanāyakipuram* in the *Tirunelveli* district of Tamilnāṭu. This was obtained from the village *Āyakkuṭi*.

1. Nature of the manuscript.

In this manuscript the text is written in 46 folios (from the folio number 296 to 341). It is kept along *Villiputtūrar pāratam*. The length and width of the folio is 45.5 x 3.5cm. In the left side margin of the first folio, it reads thus:

பாரத மாவிந்தம், கடவுள் வணக்கம் - *Pārata māvintam, kaṭavuḷ vaṇakkam* and an invocatory verse on Gaṇēsā is also found. In the next folio invoking gods, prologue and apologetic preface etc. are mentioned thus: கடவுள் வணக்கம், பாயிரம், அவையடக்கம்- *Kaṭavuḷvaṇakkam, pāyiram, avaiyaṭakkam.*

It is complete and well maintained. The calligraphy is legible. There are nine or ten lines on a page.From the second folio invocatory poems on gods and goddesses are inscribed. For god Gaṇēsā, there are two invocatory poems, perhaps Gaṇēsā is the author's favourite god. In all manuscripts the folio numbers and the numbers of poems are written in traditional Tamil numerals.

2. Date Mentioned in the Manuscript

In the preceding folio of the last one, the following note is found:

'கூாடுயிநடஹு ஆனி மீ உயிநடவ சுக்கிற வாரமும் சோதி நட்செத்திரமும் நவமியும் பெற்ற சுபதினத்தில் எழுதி முகித்தது. மானவீரவளநாடு தென்பத்தில் வயிவத்திலி ருக்கும் வழியடி

[1]M.No. RE10857.
[2]Kerala University Oriental Manuscripts' Library.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மையாபிள்ளை மகன் முத்து வயிரவன், பெருமாள் பிள்ளை[1](க்கு) எழுதிக்கொடுத்த சுவடி. நீடூழிவாழக் குமரன் கிருபை செய்ய வேணும் மாயன் சகாயம்' – 'கூாருமிடு ஷு *Āṉi* மீ உமிடு௨ *cukkiṟa vāramum cōtinaṭcettiramum navamiyum peṟṟa cupatiṉattil eḻuti mukittatu. Māṉavīra vaḷaṉāṭu teṉpattil vayivattil irukkum vaḻiyaṭimaiyā piḷḷai makaṉ muttuvayiravaṉ, perumāḷ piḷḷaikku eḻutik koṭutta cuvaṭi. Nīṭūḻi vāḻak kumaraṉ kirupai ceyya vēṇum māyaṉ cakāyam'* (See: image 1.)



image 1. f. 340, right side

The Kollam era (கூாருமிடு- 953) mentioned in the manuscript is equel to 1778AD, July, Friday[2]. In the last leaf the names of the *carukkams* along with the number of the poems are mentioned chapterwise and also the total number of poems. The abbreviation of வேறு is mentioned as, வெ wherever the metre pattern is changed.

This colophon shows the name of the scribe, his father's name and also the name of the person for whom the scribe copied the manuscript.

Name of the scribe - *Muttu vayiravaṉ* who lives in *Teṉpattil Vayivam*, which is in *Māṉavīra vaḷanāṭu*

Name of the father of the scribe - *Vaḻiyaṭimaiyā piḷḷai*

Name of the person for whom the scribe copied the manuscript –*Perumāḷ piḷḷai.*

Date of copying the manuscript – 1778 AD, July, Friday.

3.*Māṉavīra Vaḷanāṭu*

The name *Māṉavīra vaḷanāṭu* mentioned in the manuscript refers to two regions in *Pāṇṭiyanāṭu*. One is the area near the village *Kamutakkuṭi* [3], which is on the way to *Paramakkuṭi* (a town in *Rāmaṉātapuram* district) from *Pārttipaṉūr* in *Rāmaṉātapuram* district.

The village name *Vayivam* perhaps refers to *Māṉavīra vaḷanāṭu*, that is situated in *Tiruccentūr* tāluk. The other one is in the east and north east region of the village

---

[1]This symbol refers to the Tamil letters 'க்கு'.
[2]Add 825 with Kollam era; 953+825 =1778 AD.
[3]South Indian Inscriptions, Vol.16, No. 145, 157, 194.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Peruṅkuḷam[1] in the present *Tiruccentūr* district. This also includes the east side area of *Tirukkuṟuṅkuṭi* of *Nāṅkunēri* tāluk. The village name *Vayivam* might belong to *Māṉavīra vaḷanāṭu*, that is situated in *Tiruccentūr* tāluk. The old name of this village might be *Vayiravam* as is evidenced by a reference in the inscriptions.

The *Kaṭṭāri maṅkalam* inscription[2] (c.1140 AD) of *Tiruccentūr* tāluk shows, there is *Vayiravam* in the ancient division of *Māṉavīra vaḷanāṭu* of present *Tiruccentūr* tāluk. The inscription also has an alternate name as *Māna vīranallūr*[3] for *Māṉavīra vaḷanāṭu*.Therefore the name, மானவீர வள நாட்டு வயிவம் – (*Māṉavīra vaḷanāṭṭu vayivam*) altered in the manuscript might be a village name in *Tiruccentūr* tāluk in *Kattārimaṅkalam* area during 12th century. Moreover (*Māṉavīra vaḷanāṭṭu*) *Vayivam* might be the changed form of *Vayiravam*. From these it is clear this *Māṉavīra vaḷanāṭṭu*, *Vayirakam* or *Vayivam* are the areas of *Tiruccentūr*.

The name *Vayirakam,* that existed in 1140 AD might have been changed as *Vayivam* in the year 1778 AD mentioned in the manuscript. It is not known whether this name exist now. If the name, தென்பத்தில் வயிவம் (*Teṉpattil Vayivam*) mentioned in the manuscript and the name, தென்பத்து (கிராம எண் 45-*Teṉpattu* village No.45] which is in *Tirunelvēli* district are identical, *Vayivam* or *Vayiravam* were perhaps near to that area.

1.2.2 M.No.11413 (cu.2)

This is another one in K.O.M.Library. This is also kept along with *Villiputtūrar Pāratam*. This was donated by *Sītārāma Sarmā* to the library on 5-8-1942. He was from *Taccanallūr* which is in *Tirunelvēli* district.

1.Nature of the Manuscript

This text is in 26 folios (from169 to194) The length and width of the folio is 41 x 4 cm. In the left side of the first leaf is this note, மாவிந்தம் பாயிரம் –*Māvintam, pāyiram* (Prologue). It is in good condition, complete and legible. There are 14 lines to a page.

2. Date Mentioned in the Manuscript

In the last folio, the following details are mentioned:

---

[1]Ibid. 93, 250 Annual report on Indian Epigraphy 1927 -28, No. 273.
[2]Ibid. Vo.14, No. 250.
[3]திருச்செந்தூரில் உள்ள வரகுணப் பாண்டியன் கல்வெட்டில் (கி.பி. 875-880) 'வழுதி வளநாட்டு மானவீரப் பட்டினம்' என்ற ஊர் குறிப்பிடப் பெற்றுள்ளது என்பது இங்கு நோக்கத்தக்கது. மேற்படி எண்16, 26 ஆ 1912. It is worth mentioning here that the town of *Vaḷanāṭṭu māṉavīrap paṭṭiṉam* is mentioned in the *Varakuṇappāṇṭiyaṉ*'s Inscription (875-880 AD) in *Thiruchendur*. ibid.No.16, 26 of 1912.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

'தமிச ௵ ஆவணிமீ உம ௨ அமரபட்சத்து துதிகையும் பூரட்டாதி நஷெத்திரமுங் கூடிய சுபதினத்திலெழுதி முடிந்த மகாபாரதம். சிவசுப்பிரமணியன் கையெழுத்து நீடூழிவாழ்க. ஸ்ரீராமஜயம். தமிச ௵ *Āvaṇi*மீ உம௨ *amara paṭcattu tutikaiyum pūraṭṭāti naṣhettiramuṅ kūṭiya cupatiṉattil eḻuti muṭinta makāpāratam. Civacuppiramaṇiyaṉ kaiyeḻuttu nīṭūḻi vāḻka. Srī rāmajayam.* (See: image 2)

image 2.(ME-1014, here ME is the abbreviation of Malayalam Era)

So the date of copying was on 1839 AD September. The name of the scribe is *Civacuppiramaṇiyaṉ.*

1.2.3 M.No.198 (cu.3)

This manuscript is available in the Library of *Maturait Tamilc Caṅkam Centamiḻ* College.

1. Nature of the Manuscript

The length and width of the folio is 39.25x3 cm. In the first folio only the name of the text is mentioned as,

பாரதம் மாவிந்தம் - *Pāratam Māvintam.*

The next one is an empty leaf. In the third folio this is the following note: ஹரி ஓம் ஸ்ரீமகாபா(ர)த(ம்) மாவிந்தம், சிறப்புப்பா(யிரம்) — *Hari' ōm srī Makāpāratam Māvintam, Ciṟappup pāyiram.*

It is readable, though injuired and incomplete. Seven lines to a page. Page number is not provided by the Library.At the end of each *carukkam* the total number of the poems of that *carukkam* and the total number of poems up to that *carukkam* are mentioned.This method is found only in this manuscript. (See: image 3)



image 3. f.15, right side.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

In the second line of the above image No.3, it is mentioned as: ...லறத்தோன் ருகூ ஆக விருத்தம் ாருகூ துறுவாசச் சருக்கம் முடிகிறது -laṟattōṉ ருகூ āka viruttam *ாருகூ Tuṟuvācac carukkam muṭikiṟatu.*

The first number ருகூ mentions the total number of poems in *Turuvācac carukkam*, the second one ாருகூ mentions the total number of poems up to *Turuvācac carukkam*. Seventy one folios are extant; a few are much damaged.

2. Date mentioned in the manuscript

The last folio carries the following details:

[பிர] பவ வருஷம் ஆவணிமீ இது எழுதி முடித்தது. கார தீவுகள் பூமி பிராம ணன் முருகேசர் புலவர்.கிறுஷ்ணசெயம்--- மயம் குருவே துணை. குருவடி வாழ்க. (See: image 4)

image 4, f. 71, right half.

Don't know much about காரதீவுகள்பூமி. It is said that there is one village in this name in Ceylon.*Mu.Irākava Aiyankār*, mentioned, that portion *Kāraittīivu* is assumed as a part of *Manipallavam* area in his essay[1]. C. *Kalaimakal* spoke about this '*Kāraittīvu*' in her essay , *Vipulāṉantariṉ vāḻkkaivaralāṟu*[2] (p.12).

Since the total number of poems is mentioned as, ஆகவிருத்தம் எாஅ0, it might contain more poems than other manuscripts. As it is damaged it is hard to count and identify the poems.

[1] மணிமேகலையும் புத்த ஜாதகமும், ப. 222, ஆராய்ச்சித் தொகுப்பு, *Maṇimēkalaiyum puttajātakamum, Ārāyccitokuppu,* p.222.

[2]"இலங்கைத்தீவின் கிழக்கு மட்டகிளப்பு மாகாணத்தின் தென்திசையில் 24 கல் தொலைவிற்கப் பால் கல்முனை என்னும் சிறிய நகரம் உள்ளது அந்நகரின் 3 கல்தொலைவு வடக்குப் பகுதியில் உள்ள காரைத்தீவு என்னும் ஊர். (விபுலானந்தரின் வாழ்க்கை வரலாறு, ப.12, இலக்கியக் கட்டுரைகள், சி.கலைமகள், 1993, சென்னை-14) In the eastern side *of Mattakilappu* province in Ceylon, there is a small town named *Kalmunai,* in the northern side of that place *Karaittivu* situated" (*Vipulāṉantariṉ vāḻkkai varalāṟu*", p.12,*Ilakkiyak kaṭṭuraikaḷ*, C.*Kalaimakaḷ*, 1993, Chennai-14)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

1.2.4 M.No. R.E10857 (cu. 4)

This manuscript is available in French Institute of *Pāṇṭiccēri.* This is also kept along with *Villiputtūrar pāratam.*

1.Nature of the Manuscript.

The length and width of the folio is 41 x 4 cm. It is in 52 folios. In the first folio the following notes are mentioned, பாரத மாவிந்தம், கடவுள் வணக்கம், பாயிரம், அவையடக்கம்- *Pārata māvintam, kaṭavuḷ vaṇakkam, pāyiram, avaiyaṭakkam.*

The text is in good condition, complete and legible. There are ten lines to a page. In the last leaf, the name of the last *carukkam* and the total number of the poems of the text are mentioned as உ௱உ௲அ கெருடனைக் காண்டற் சருக்க முற்றும்- *Kerutanaikkāṇṭar carukka murrum.*

Neither the name of the scribe nor the date of copying are mentioned.

1.3 The Nature of Scripts

In the four manuscripts No.3895b, 11413, and RE10857, no pulli (dot) for consonant scripts/letters. No difference between the medical consonant letter ர(ra) and the symbol used for long vowel *ā* ('ா). No difference between the short and long vowel consonant scripts/letters (e, ē and o, ō).

In the two manuscripts M.No.198 and M.No.RE 10857, the script 'ற' has two loops as in recent usage. The long vowel 'ஈ' is written as in inscription in three manuscripts (M.No.3895b, M.No.11413 and M.No.198). (See image: 5. 6.7)



image 5, cu.1, line 2 (*Pā.Mā.*646)



image: 6, cu.2 , line 2 (*Pā.Mā.* 644)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)



image 7.cu.3, line 3 (*Pā.Mā.*713)

In M.No.198 the letters except consonants the other letters are identical with current usage. So this might be the latest one among the four.

1.4 Genealogy of the Manuscripts

Stemma codicum



◆Additional Poems from Other Manuscripts

1) The first two manuscripts (M.No.3895b and M.No.11413) are not copies of single one. Nine extra poems[1] are found in this manuscript M.No.11413.

2) In the last *carukkam* (*Karuṭaṉaikkaṇṭa carukkam*) two poems, one begins with the words, இவர்தா னுலகத்தினில்- *Ivartā ṉulakattiṉil* (169) and the other one with the initial words தேவாதிய ரேவல்கள் - *Tēvātiya rēvalkaḷ* (170) are numbered as 169 and 170 in the manuscript M.No.3895b; these two are numbered as follows in the other three manuscripts தேவாதிய ரேவல்கள் 169 and இவர்தா னுலகத்தினில் 170. So it is clear the origin of this M.No.3895b manuscript is entirely different from the other three.

3) Nine additional poems, which are found in the M.No.11413 are found in the M.No.RE 10857 and the M.No.198 .

---

[1]69அ,71அ,292அ,328அ,395அ,401அ,420அ,521அ,724அ–(9) These are extra poems in cu. 2, 3 and 4.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

4) These two manuscripts M.No.RE 10857 and M.No.198 have one more poem than the other two[1]. That is found in *Attiṉapuric carukkam*, which is given below.

மைந்தரை யினிப்பெறுவ தென்கொ லினிமண்மே
லைந்து மகவைப்பெறு மருந்ததியை நேர்வாள்
குந்திதனை யன்பொடு குறித்தில ரறத்தோர்
வந்துகலி புக்கதொரு வாசியதி னென்பார் (பா.மா.227அ)

- Maintarai yiṉippeṟuva teṉkol iṉimaṇmē
laintu makavaippeṟu maruntatiyai nērvāḷ
kuntitaṉai yaṉpoṭu kuṟittila raṟattōr
vantukali pukkatoru vāciyati ṉeṉpār (*Pā.Mā.* 227அ)

= Why should one here after beget sons? The *Pāṇṭavars* never cared to remember *Kunti*, who is like *Aruntati* and who begot five sons in the world. People say that it is because *Kali* has already set in.

5) So the above mentioned two manuscripts are copied from a different one. Both are identical in many aspects.

6)Though these two M.No.RE 10857,M.No.198 are copied from one and the same, the scribes copied according in their own way.

e.g.The scribe who copied M.No.RE 10857 wrote *vaikuṇṭam* and *Turōrpati* as வைகுண்டம் and துரோபதி. And the scribe of M.No.198 wrote the two words as வைகுந்தம் and திரௌபதி. So these are not marked as variants.

1.5 Structure of the Text:

This text *Pārata Māvintam* consists of seven parts; that is named as *Carukkams*; including *Pāyiram* *(prologue). They are,

1. திருநாட்டுச் சருக்கம்-55
2. துவராபதிச் சருக்கம் -21
3. துருவாசச் சருக்கம்- 59
4. அத்தினாபுரிச் சருக்கம் -80
5. துரோபதிமோக்கிஷம் பெற்ற சருக்கம் -79
6. சிங்கத்தின்கதைச் சருக்கம்-208 and
7.: கருடனைக் கண்ட சருக்கம்-227*.

---

[1]M.No. 3895b, M.No.11413.

*Pāyiram -22 poems(including invocatory poem)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

The author begins this text with invocartory poem on Lord Gaṇēsā. It is followed by apologetic preface and the poet's motive for composing this text. The M.No.3895b is considered as the base for this edition, which contains 751 poems. Nine poems in excess when compared with the other three manuscripts. If we add those nine poems, with 751, the total number of poems becomes 760. These additional poems are in *Kaliviruttam* metre.

1.6 Author of the text - *Cōmaṉ*

The name of the author, name of the text and the name of the metre of poems are mentioned in the last poem of the prologue.

மங்கலஞ்சேர் மாவிந்தக் கதையைத் தொன்னூல்
வகுத்த சோமன் விருத்தவகை யாற்செப்ப.(பா.மா.21)

Maṅkalañcē rmāvintak kataiyait toṉṉūl
vakutta Cōmaṉ viruttavakai yāṟceppa. (*Pā.Mā.*21)

= The story of *Māvintam* would give auspiciousness and *Cōmaṉ* who narrates the story, composes it in *viruttam* metre.

This line expresses the author's name as *Cōmaṉ* and the metre of the poems as *Viruttappā*. The rest of the lines of this poem furnish the following details:

Since the text composed by *Cōmaṉ* is damaged by white ants, one *Vināyakaṉ*, who is the son of *Īsuarapaṭṭaṉ* reconstructed the poems through their commentary. So this text is the outcome of the poetic combination of two poets.

... அங்கதனில் கதைபொறித்த வேட்டிற் சிலசெல்
லரித்ததனாற் பதஞ்சொல் லெழுத்தவை காணாமற்
தங்குறை தேர்ந்துரை வழியேபேணி முன்போற்
றாபித்துக் குறையறவே பூரித் திட்டான்
செங்கமல மார்ப னீசுர பட்டன்றன்
செல்வனெனும் விநாயகனாஞ் செம்மல் தானே (பா.மா.21:2-4)

..Aṅkataṉil kataiporitta vēṭṭiṟ cilacel
larittataṉāṟ patañcol leluttavai kāṇāmaṟ
taṅkuṟai tērntu raivaḻiyē pēṇimuṉpōṟ
ṟāpittuk kuṟaiyaṟavē pūrit tiṭṭāṉ
ceṅkamala mārpaṉ īcura paṭṭaṉṟaṉ

* (1) *Tirunāṭṭuc carukkam*-55, (2). *Tuvarāpatic carukkam* -21, (3) *Turuvācac carukkam*- 59, (4) *Attiṉāpuric carukkam* -80, (5) *Turōpati mōkkiṣampeṟṟa ccarukkam* -79, (6) *Ciṅkattiṉ kataic carukkam*-208 and (7) *Karuṭaṉaikkāṇṭaṟ carukkam*-227.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

celvaṉeṉum vināyakaṉāñ cem'mal tāṉē (*Pā.Mā.* 21:2-4)

In the 18th poem, the home town of the author, his caste (Brāhmin), the metre of the poems and the story of the king Tarumaṉ, who reached *Māvintam* are briefly stated.

சோமன் வாழ்புவ னப்பதித் தோன்றலன்
மாம றைக்குலத் தான்வளத் தானியற
பாம னும்விருத் தத்தினிற் பாடினான்
தாம மன்னர் மகாவிந்தஞ் சார்ந்ததே (பா.மா .18)

Cōmaṉ vāḻpuva ṉappatit tōṉṟalaṉ
māma ṟaikkulat tāṉvaḷat tāṉiyaṟ
pāma ṉumviruttattiṉiṟpāṭiṉāṉ
tāma maṉṉar makāvintañ cārntatē (*Pā.Mā.*18)

The lineage of author *Cōmaṉ*, his religion,village ,country, and also the village of *Vināyakaṉ* who reconstructed the text are elaborately explained in chapter 2.(see: chapter 2: 2.3- 2.5)

1.7 Motive of the Text

The mercy -hearted Lord Krishṇā routed four kinds of armies to foster the *Kurukula* family in the Pārata war to wipe out the evil population of the world by his ruses and to transit *Tarumaṉ* to heaven (*Vaikuṇṭam*) by guiding him to abide in the forest (to pursue tapas).

அரவி னிற்றுயில் கருணை வித்தக னவனியிற்பர மொழியவே
குருகு லத்தவர் தமிலெதிர்த் திடும்கொடிய நாற்படை மடியமுன்
விரகினைச் செய்து தருமனைப் புவிவிரி வனத்திடை வருகெனப்
பரிவின் மிக்குட லொடுபுகப் பணுபழுதில் நற்கதை பகருவாம். (பா.மா.14)

Aravi ṉiṟṟuyil karuṇai vittakaṉ avaṉiyiṟpara moḻiyavē
kuruku lattavar tamiletirt tiṭumkoṭiya nāṟpaṭai maṭiyamuṉ
virakiṉaic ceytu tarumaṉaip puviviri vaṉattiṭai varukeṉap
pariviṉ mikkuṭa loṭupukap paṉupaḻutil naṟkatai pakaruvām. (*Pā.Mā.* 14)

The following phrases found in the text are the authentic internal evidence.

வருத்தமாய் மன்னன் மாவிந்தஞ் சேர்ந்ததை (பா.மா.15)

Varuttamāy maṉṉaṉ māvintañ cērntatai (*Pā.Mā.*15) = The story of the king reaching sadly the (land of) *Māvintam.*

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தாம மன்னர் மகாவிந்தஞ் சார்ந்ததே (பா.மா.18)- *Tāma maṉṉar makāvintañ cārntatē* (*Pā.Mā.*18)= King who wears garland reached Makāvintam

மன்னன் மகாவிந்தத்தை யடைந்துள மெய்க்கதையே (பா.மா.19)

Maṉṉaṉ makāvintattai yaṭaintuḷa meykkataiyē (*Pā.Mā.* 19)= The true story of king - *Tārumaṉ* who reached *Makāvintam.*

1.8 Period of *Cōmaṉ*

The author *Cōmaṉ* lived after *Villiputtūrar*, the author of the epic *Villipāratam.* As already mentioned *Vlliputtūrar* lived at the end of 14th century. The following lines speak to this:

விருத்த நீள்கவி வில்லிபுத் தூரன்முன்
தெரித்த பாரதஞ் செய்தனன் செய்திலன்
வருத்தமாய் மன்னன் மாவிந்தஞ் சேர்ந்ததை (பா.மா.15)

Viruttanī ḷkavivillipputtūraṉmuṉ
teritta pāratañ ceytaṉaṉ ceytilaṉ
varuttamāy maṉṉaṉ māvintañ cērntatai (*Pā.Mā.*15)

= *Villiputtūrar*, who earlier composed *Pāratam* has not narrated the story of the king *Tārumaṉ* who reached *Vaikuṇṭam* through distress.

துய்ய வில்லிப் புத்தூரன் றொடைக்கவிச்
செய்யல் கண்டபின் செப்புங் கவிதையே (பா.மா.16)

Tuyya villip puttūraṉ ṟoṭaik kavic
Ceyyal kaṇṭapiṉ ceppuṅ kavitaiyē (*Pā.Mā.*16)

= This verse composition (i.e. the left out portion of *Makāpāratam*) was done by me after reading the long poem by the holy *Villiputtūrar*,

Among the four manuscripts, M.No.3895b is the earliest one.The date of copying this, was done in 1778 AD. So *Cōmaṉ* could have lived between post 14th century AD. i.e. the period of *Villiputtūrar* and 18th century. The date of the last copying, as the original work was damaged by white ants, one *Vināyakaṉ* undertook the work of reshaping it in its present state. This restoration work might also have been done between the 14th and the 18th centuries.

To decide the exact period of the author, some internal evidences are found in the text. *Cōmaṉ* adapted the phrase,

முத்தமி ழுடைவினை from the 2nd verse of *Tiruppukaḻ* by *Aruṇakirinātar.*

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

முத்தமி ழடைவினை முற்படு கிரிதனில் (திருப்புகழ் 2)

Muttami laṭaivinai muṟpaṭu kiritaṉil (*Tiruppukal* 2)

முத்தமி ழடைவி னிற்பொலி கருணை (பா.மா. 11)

Muttami laṭaivi niṟpoli karuṇai (*Pā.Mā.*11)

In the same way *Cōmaṉ* adapted concepts and idioms from the *Pākavatam* by one *Cevvaiccūṭuvār*[1] (16C AD). The relevant phrases are given below:

1. வட்ட வாயழற் றிகிரியான் (செவ்.2912) வட்டவாய்த் திகிரி (பா.மா.738)
Vaṭṭa vāyalaṟ ṟikiriyāṉ (*Cev.*2912), *Vaṭṭavāyt tikiri* (*Pā.Mā.* 738)

2. கான்யாறு (செவ்.2878) கானியாறு (பா.மா. 263)
Kāṉyāṟu (*Cev.*2878), *Kāṉiyāṟu* (*Pā.Mā.* 263)

3. குழகன் (செவ்.3398) குழக முத்தமிழ் (பா.மா.263)
Kulakaṉ (*Cev.* 3398), *Kulak amuttamil* (*Pā.Mā.*10)

If we compare this, there are parallels between the work of *Cōmaṉ* and *Cevvaiccūṭuvār.* Either both of them might have been contemporaries or *Cōmaṉ* might have flourished after the period of *Cevvaiccūṭuvār* (16th c. AD). *Cōmaṉ* also adapted as well as adopted many phrases from *Villipāratam.* They are given below:

1. வின்மை (வில்.துரோ.பன். 90) வின்மை (பா.மா. 519)
Viṉmai (*Vil.Turō.Paṉ.*90) Viṉmai (*Pā.Mā.* 519).

2. பட்ட வர்த்தனரும் மகுட வர்த்தனரும் (வில்.உத்.கிரு. 103)
Paṭṭa varttaṉarum makuṭa varttaṉarum (*Vil.Ut.Kiru.*103)

பட்ட வத்தனர் தம்மொடும் பலமகுட வத்தனர் தம்மொடும் (பா.மா. 80)
Paṭṭa vattaṉar tam'moṭum palamakuṭa vattaṉar tam'moṭum (*Pā.Mā.*80)

3. தாண்டிய வெம்பரி (வில்.துரோ.பன்.15) தாண்டிய பரிதேர் (பா.மா. 638)
Tāṇṭiya vempari (*Vil.Turō.Paṉ.*15) *Tāṇṭiya paritēr* (*Pā.Mā* .638)

4. பிறந்ததின முதலாக (வில்.துரோ.பதிமூ.138) பிறந்தநாள் முதலா (பா.மா. 617)
Piṟantatiṉa mutalāka (*Vil.Turō.Patimū.*138) *Piṟantanāḷ mutalā* (*Pā.Mā.*617)

5. வெந்நிடுதல் (வில்.ஆதி.குரு.27) வெந்நிட்டான் (பா.மா. 619)

---

[1]History of Tamil Literature 16th century, p. 346

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Venniṭutal (*Vil.Āti.Kuru.*27) *Venniṭṭāṉ* (*Pā.Mā.*619)

As already mentioned, among the four manuscripts (consulted for this edition) manuscript No.3895b is the earliest one. This M.No.3895b was copied in1778 AD.The date of copying the M.No.11413 was done during 1839 AD, September. The difference between the dates of the two manuscripts is two months and 61 years (1778-1839=61)

Following this reckoning and assuming the first copying of the earliest manuscript No. 3895b was done 60 years earlier, then the date of it will be 1718 (1778-60=1718).It is further assumed that the reconstruction of the original work took place in 1658 (1718-60=1658) by *Vināyakaṉ*. The next probable assumption is that the original autograph would have been written 60 years before the reconstruction; so the date of the text could be 1598 (1658-60=1598). So it may be presumed that the date of the text may be 1598 AD.

The following table will help the reader to understand the rationale of fixing the dates:

Manuscrtpi No.	Date of copying	Date of the manuscripts
3895b	July 1778 AD	
11413	September 1839	[1839-1778= 61] 61 years
Assuming the previous copy of Mss. 3985b before 60 years	1778 -60=	171 8 AD
Further assumed that the reconstruction of the original work took place before 60 years	1718 -60 =	1658 AD
Further assumed that the original work took place before 60	1658-60	1658-60= 1598 AD
So assuming the date of original text		1598 AD, i.e. 16th century

The dates are inferred from the above assumption; however the inferences are meagre this could be a probable fact. On the basis of the internal evidence, it is hard to differentiate the words of *Cōmaṉ* and of *Vināyakaṉ* and the dating is also provisional.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

1.9 Method of this edition

1) Lines of the poems are split according to the metre.

2) The names of the metre are mentioned.

3) Suitable captions to the verses or groups of the verses are provided on the basis of the text content.

4)Textual variants are given below the verses.

5) After comparing all manuscripts, the appropriate reading is selected.

6) If the reading is chosen from other manuscripts, it is mentioned first in the apparatus with its abbreviation and are italised in the verse.

7) Variants are furnished and appropriately numeralised.

8) Total number of the verse is given beside the verse. In the right side, number of each carukkam is given.

9) A concise commentary is provided.

10) Meanings of hard words are provided.

11) Errors in the text are rectified. i.e. Emendations wherever necessary have been carried out.

12) Dialectic words are retained as found in the manuscript.

13) Notes and explanations of the stories and the like are provided.

14) Comparative passages from similar works and classical texts etc. are provided for each verse.

15) The nine additional verses are marked with Tamil alphabet 'அ' along with its serial numbers.

16) For convenience, the four manuscripts are numbered thus: cu.1, cu.2, cu.3, cu.4.*

17) Foot notes are provided in the page itself.

*cu.1-M.No. 3895b, cu. 2- M.No.11413, cu.3- M.No. 198, cu. 4- M.No.RE 10857.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

18)Two verses 678 and 686 are incomplete in the manuscript 3895b. They are completed with the help of other manuscripts and are marked by the star ** symbol

- **Corrections:**

1) The wrong usages are corrected. A few examples are given below:

புகள்ந்த–*pukaḷnta* is corrected as புகழ்ந்த- *pukalnta* (*Pā. Mā.* 348)

காற்கடல் -*kāṟkaṭal* is corrected as –கார்க்கடல் *kārkkaṭal* (*Pā.Mā.* 336)

மோணமா- *mōṇamā* is corrected as - மோனமா *mōṉamā* (*Pā. Mā* .341)

2) When the author lists the names of Saptarishis, i.e. seven rishis in the 580th poem, he left out the name of *Piruku*. Instead of that name, the term, கருணை is used; that is corrected by the name *Piruku*[1]. The lines are given below:

அகத்தியன் *கருணை* புலத்தியன் வசிட்ட னங்கிராக் கவுசிகன் சுகனா (பா.மா.580) --*Akattiyaṉ karuṇai Pulattiyaṉ Vaciṭṭa ṉaṅkirāk Kavucikaṉ Cukaṉā* (*Pā.Mā.580*)

அகத்தியன் *பிருகு* புலத்தியன் வசிட்ட னங்கிராக் கவுசிகன் சுகனா" (பா.மா.580) *Akattiyaṉ Piruku Pulattiyaṉ Vaciṭṭa ṉaṅkirāk Kavucikaṉ Cukaṉā* (*Pā.Mā.*580)

1.10 Structure of this Edition

This book is divided into two parts: First part being a study and the second being the critical edition of the work.

Part One: contains nine chapters:

First chapter describes the editorial aspects of this work. It also contains details of other palm leaf manuscripts of *Māvintam* and *Vaikuṇṭa Ammāṉai.*

Second chapter is about the author *Cōmaṉ* and the ancient author *Vināyakaṉ. Cōmaṉ* was a Saivite Brahmin poet, who might have lived around the later part of 16th c. AD in *Puvaṉappati,* which is tentatively identified with the modern *Āttūr* near *Tiruccentūr. Vināyakaṉ* was perhaps a resident of the same place.

Third chapter gives the summary of the story.

Fourth chapter traces and describes the popularity of *Pāratā* story in various versions and in various periods of history of Tamilnāṭu.

---

[1]Pirukuis the name of one rishi among the present Manvantara(each of the fourteen periods or eras)of the saptarishis. There are numerous parallels found in various mythologies of these seven preachers. Greeks too had seven wise men namely Cleobulos, Periandros, Bias, Pittacos, Chilon, Solon and Thales. [ref. from net.]

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Fifth chapter describes the epic structure of the work and concludes that on the basis of Taṇṭi's formulations, it could be considered as a minor epic, as it also deals with the mōṭcam part, among the purusharttas[1].

Sixth chapter describes the metrical structure of the work, which is mostly composed in *Viruttam* metre.

In the seventh chapter, a literary evaluation of the work is done, based on the rhetorical devices like alaṅkāras similes, metaphors etc.

The eighth chapter describes the language of the epic and the author and it is found that the language is closely related to the dialect of South Pāṇṭianāṭu[2].

Last chapter is a comparative study of three *Pāratam* works and four *Māvintam* works. It is found, that even though the basic story is similar, the *Māvintam* works differ in their contents, episodes and treatment of the theme. i.e. the last journey of the *Paṇṭavārs/* souls. This work has an universal appeal.

Part two :

Critical Edition of the work is based on four palm leaf [3] manuscripts.The edition follows the model of the editions of *U.Vē.Cāmināta Aiyar.* For the purpose of giving all the available textual variants, an unpublished palm- leaf manuscript of *Pāratam Makāvintam* (M.No.57) from Thanjavur *Sarasvatimakāl* Library was copied and compared (see chapter 1.)

◆New events found in Māvintam

1) In the story of *Tiripuram, Tirumāl* decends to do away with the three asurās (*Tiripurar*). At that time Tirumāl took his avatār as Buddhā. Pakavat Gita says, that Vishṇu makes his avatār, when tarmā declines and atarmā prevails (*Pā.Mā.*392-402).

புத்த னாகியோர் போதியின் கீழுற
வத்தி றற்சிவ பூசை யசுரர்க
ளித்த லத்தி லிவன்வர வேதெனா

[1]Objectives worthy of human pursuit, which are four in number, viz. tarumam, aruttam, kāmam, mōṭcam.

[2] *Tirunelvēli* and its surroundings.

[3]Two from Kerala University Oriental Manucsripts' Library, One from *Maturait Tamilc caṅkac Centamil̲* college Library and the other one from the French Institute of *Pāṇṭiccēri.*

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தத்து வத்துள தர்க்கத்தில் மேயினார்[1] (பா.மா.395அ)

Putta ṉākiyōr pōtiyiṉ kīḻuṟa
vatti ṟaṟāciva pūcai yacurarka
ḷitta latti livaṉvara vēteṉā
tattu vattuḷa tarkkattil mēyiṉār. (*Pā.Mā.395*அ)

= (Tirumāl) took the form of Buddha, and sat under a pipal tree. On witnessing Buddha, the three *Asuras* of *Tiripuram*, who were superior in performing ceremonies to Lord Siva, disputed themselves about reality/ truth; what is the reason for the coming of Buddha in *Tiripura*, where only Lord Siva is worshipped.

2) When Lord Krishṇā asked *Turōpati* to tell him her hidden intention, she said,

அய்வரும் விதியினாலே அரியதோர் கணவனாகி
வெய்யதோர் மாயாகேழ்க்கில் மீண்டுமுண் டாசையென்னில் (தஞ்.சர.350)

Ayvarum vitiyiṉālē ariyatōr kaṇavaṉāki
Veyyatōr māyākēḻkkil mīṇṭumuṇ ṭācaiyeṉṉil (*Tañ. Sar.* 350)-

Though I am the wife of five by destiny, I long for one more[2] consort.

3) When *Tarumaṉ* went to see the hell, he saw *Turiyōtaṉaṉ* in the hell. He took pity on him. *Turiyōtaṉaṉ* asked *Tarumaṉ* to save him from the hell; When *Tarumaṉ* tried to take him away, *Turiyōtaṉaṉ* pulled him into the hell.

யானு னக்குமுன் செய்துள தீமை யெண்ணாதே
யீன முற்றுறு நரகினா லேற்றெனை யென்ன
வூன மற்றவ னங்கையுத் துதவலு முடன்று
மான மற்றவ னிழுத்தனன் கொடியவன் னரகின்[3] (பா.மா.708)

Yāṉu ṉakkumuṉ ceytuḷa tīmai yeṇṇātē
yīṉa muṟṟuṟu narakiṉā lēṟṟeṉai yeṉṉa

[1] (திருமால்) புத்தனாகி ஓர் அரசமரத்தின் கீழ் இருக்கச் சிவபூசையில் சிறந்த முப்புர அசுரர்கள், சிவபெருமானையே வழிபடும் முப்புரத்தில் புத்தனாக இவன் வந்த வரவின் காரணம் என்ன என்று மெய்ப்பொருள் தர்க்கத்தில் ஈடுபட்டனர்.

[2] துரோபதி மீண்டும் ஆசை உண்டென்று சொல்வது, குந்தியின் முதல் மகனாகிய கர்ணனைக் குறிக்கக் கூடும் என்று கருதுவார் (காலஞ் சென்ற) கம்பராமன் திரு.எஸ்.கே.இராமராஜன் அவர்கள், தஞ்சைத் தமிழ்ப்பல் கலைக்கழகப் பேராசிரியர்

[3] நான் உனக்கு முன்பு செய்த தீமைகளை மனத்தில்நினைக்காதே, இழிவுமிக்க நரகத்திலிருந்து என்னைக் கரையேற்றுவாய், என்று (துரியோதனன்) கூற, மனத்தில் குறையில்லாத தருமன் துரியோதனனைக் கரையேற்ற தன்னுடைய கையைக் கொடுத்து உதவ முற்பட்டபோது, தன்மான மற்ற துரியோதனன் தருமனைக் கொடிய நரகத்தினுள் இழுத்தான்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

vūna marrava naṅkaiyut tutavalu muṭanru
māna marrava niluttanan koṭiyavan narakin (*Pā.Mā.708*).

These are a few new interpretations in *Māvintam* works.The third incident is mentioned only in *Pārata Māvintam*.

◆ contradictory event

Although it is a text about the journey of the Pāṇṭavars to vaikuṇṭam, as Turōpaty's final hour approached, Tarumaṉ instructed her to recite the name of Lord Shiva in her mind,[1]. Similarly, she praised of Lord Siva first (Pā.Mā.308); then she praised to Tirumal (Pā.Mā. 309) and again praised to Lord Shiva (Pā.Mā 310). Thus she praised Lord Shiva in two verses. Then in the next song, the poet said that she has joined Vaikuṇṭam[2]. This event mentioned here is contradictory. It is thought , that this may be a reflection of the idea that 'Ari and Aran' are one. Or it may be interpolation.

1.11 The works composed on the theme *Māvintam*.

The works on the theme *Māvintam* are found as printed texts and as in palm- leaf manuscripts preserved in the libraries.

1.Printed texts

1) *Peruntēvaṉār Pāratam* (*Māvintam*) was published by *Thanjavur Sarasvati makāl* Library in 1993*. It is composed by *Peruntēvaṉār* in *veṇpā* metre.

2) *Periya eḻuttu Vaikuṇṭa Ammāṉai*: This work deals with the last journey of the *Pāṇṭavārs* with *Turōpati* through *Māvintam* forest. It is in the form of a folk song and has been published by *Rettiṉam Nāyakar* and Sons in 1975Ψ. This is identical with *Vaikuṇṭa Ammāṉai* palm leaf manuscript that is in the K.O.M. Library. These are the two works on *Māvintam* in print.

2.Unpublished Manuscripts

---

1 ...சிவபதம்
பொருந்த லாகும் புராந்தகன் பொற்கழல்
தெரிந்த நாமத்தைச் சிந்தையிற் செப்பெனா(Pā.Mā.307:2-4).

2 விந்த மீது விமானத்தி லேற்றவே
வந்து வைகுண்டஞ் சேர்ந்தனள் மங்கையே (Pā.Mā.307:3-4).

*2nd edition of *Peruntēvaṉār Pāratam* (*Māvintam*).
Ψ2nd edition of *Periya eḻuttu Vaikuṇṭa Ammāṉai*.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

1. K.O.M.Library,*Kariyavattom,Tiruvanantapuram.*

Two *Pārata Māvintam* manuscripts No.3895b and No.11413 from K.O.M. Library are consulted for this edition.

2. *Maturait Tamilc Caṅkam Centamil* College, Library.

In this library, two manuscripts are available on *Māvintam.* They are:

1) M.No.198: The name of the text is, *Parata Mavintam.* This is another copy of the text of *Pārata Māvintam.* It has been used here for comparison.

2) M.No.176: This is called, *Vintakakkatai*

3. French Institute of *Pāṇṭiccēri,* (IFP)

In this library one *Pārata Māvintam* manuscript is available; its M.No.is RE10857. It is in good condition, complete and legible. This is a copy of *Pārata Māvintam,* which is used for comparison in this edition.

4. *Sarasvati makāl* Library, Thanjavur

Two manuscripts M.No.57 and M.No.58 are found in this library. The name of the text is, *Pāratam Māvintam*

1) M.No.57:It contains 248 folios and 1435 poems. The references from this manuscript are included in this edition.The name of the author of this text is described as *Vināyakaṉ* [1] .vide the following lines:

...விருப்புள மகாபெந்த மெய்த வெண்ணிய
தருக்குள வினாயகன் தமிழிற் பாடவே...(தஞ்.சர.2)
...Viruppuḷa makāpenta meyta veṇṇiya
tarukkuḷa vināyakaṉ tamiḻiṟ pāṭavē... (*Tañ.Sara.*2)

The last folio bears the Colophon as follows:

தஞ்சாவூரிலிருக்கும் இறா.சிவயோசி அப்பாகிட்ட இருக்கும் கோவிந்தன் என்பவர் யுவ ஆண்டு மார்கழி மாதம் 13 ஆம் நாள்

–*Tañcāvūrilirukkum iṟā. Civayōci appākiṭṭa irukkum kōvintaṉ eṉpavar yuva āṇṭu mārkaḻi mātam 13 ām nāḷ*

The name of the scribe is *Kōvintaṉ,* native of *Thanjavur.*

---

[1] This *Vināyakaṉ,* the author of M.No.57 is differenr from the author (*Vināyakaṉ*) of *Pārata Māvintam.*

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

2) M.No.58: It is incomplete,168 folios are preserved.It is identical with M.No.57.

5. TSM College of Arts Science and Tamil in Pērūr in Coimbatore

In this library one *Māvintam* manuscript is available, but without other details. It contains 158 leaves. It is a folk version.

In the last folio the following detais are mentioned:

கோயமுத்தூர் சில்லா ஈரோடு தாலுகா பெருந்துறை பிறகா உத்தமபாளையங் கிராமத்தைச் சேர்ந்த மதுகொளத்துப்பாளையத்திலேயிருக்கும் மணியம் கொமா ரசாமிக் கவுண்டன் மகன் சங்கரப்பன் மகாவிந்த மடைசம எழுதியது. வியவரு ஷம் ஆவணி மாதம் 27 ஆம்தேதி வியாழக்கிழமைபகல் 12 மணிக்கு எழுதி முடிந்தது- *Kōyamuttūr cillā īrōṭu tālukā peruntuṟai piṟakā uttamapāḷaiyaṅ kirāmattaic cērnta matukoḷattup pāḷaiyattilē yirukkum maṇiyam komāracāmik kavuṇṭaṉ makaṉ Caṅkarappaṉ makāvinta maṭaicama eḻutiyatu. Viya varuṣam āvaṇi mātam 27 ām tēti viyāḻakkiḻamai pakal 12 maṇikku eḻuti muṭintatu.*

It is copied by *Caṅkarappaṉ*. He is the son of *Maṇiyam Komāracāmik kavuṇṭaṉ* from *Matukoḷattup pālayam* in the *Uttama pāḷayam* village in the *Peruntu ṟari pirka* of *Īrōṭu* taluk *Coimbatore* district. He finished this work in viya year in the month of *āvaṇi* on 27th *Thursday* 12 o'clock.

6.Tamil University, Thanjavur.

Seven manuscripts are available on *Māvintam* in this Library. The details are given below:

1) M.No.450: The name of the work is *Makāvintam*. It is incomplete;115 folios are kept preserved. In the last folio the following details are found:

விசுவாச வருடம் ஆனி மாதம் 2 ஆம்தேதி குருவார நாள் திரயோதசி 24-3, விசாகம் 7-37 போகி அனுஷ நட்சத்திரத்தில் ஆதி அந்தம்பரமா நாழிகை ... சிம்ம லக்கினத்தில் எழுதி நிறைவேறியது முகிந்தது முற்றும். சிதம்பரம் தாலுக்கா புவனகிரி இலாக்காமஞ்சக் கொல்லை உபாத்தியாயர் வடமலைப் பிள்ளை திருவெழுத்து-*Vicuvāca varuṭam āṉi mātam 2 ām tēti kuruvāra nāḷ tirayōtaci 24-3, vicākam 7-37 pōki aṉuṣa naṭcattirattil āti antamparamā nāḻikai... Cimma lakkiṉattileḻ eḻuti niṟaivēṟiyatu mukintatu muṟṟum. Citam param tālukkā puvaṉakiri ilākkāmañcak kollai upāttiyāyar vaṭamalaip piḷḷai tiruveḻuttu.*

The name of the scribe is *upāttiyāyar Vaṭamalaippiḷḷai*, who is from *mañcakkollai* in *Puvaṉakiri ilākkā* in *Citamparam* Taluk. It is similar to M.No.57 of *Sarasvati makāl* Library, Thanjavur.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

2) M.No.1143: The name of the text is *Makāvintam*, incomplete, 51 folios containing 150 verses.

3) M.No.1182: The name of the text is *Makāvintam*. 52 folios; incomplete. It is same as M.No.1143.

4) M.No.1202: Name of the text is *Makāvintam*. It has 30 folios. In the last folio the following note is found:

சாமிநாத புலவர் மகன் நாச்சிமுத்துப் புலவன் மகாவிந்தம் படிஎடுத்தவர் படித்துவிட்டு உடையான் கையில் கொடுக்கவும்- *Cāminātа pulavarmakaṉ nāccimuttup pulavaṉ makāvintam paṭi eṭuttavar paṭittu viṭṭu uṭaiyāṉ kaiyil koṭukkavum .*

The name of the scribe is not mentioned. This manuscript belongs to *Nāccimuttup pulavaṉ*, whose father is *Cāminātapulavar*. The person who copies the manuscript should, hand over it to the owner of the manuscript.

The above mentioned three manuscripts namely M.No1143, M.No1182, M.No1202 are the copies of a single manuscript.

5) M.No.1394: The name of the text is *Māvintam*. It is incomplete, 22 folios are available.

6) M.No. 853: The name of the text is *Māvinta Nāṭakam*. It is complete, It is in verse as well as in prose. The author of this work is *Valaicēshaṉ.*

7) M.No.1321: The name of the text is *Māvinta Nāṭakam*. It contains 127 folios and it is incomplete. It is in prose and verse. The Name of the author is *Vālaikēshaṉ*. The author of these two manuscripts M.No.853 and M.No.1321 is either *Vālaicēshaṉ* or *Vālaikēshaṉ*. There may be a spelling mistake in the name.

Among the above manuscripts M.No.450 is like M.No. 57 and M.No. 58[1], which are available in *Sarasvati makāl* Library, *Thanjavur*.

7. Government Oriental manuscripts' Library, Chennai

In GOML , three manuscripts are available on *Māvintam*.

1) M.No.D.531(TD 321) The name of the text is *Makāpentam*. Total number of verses is ௯௪௱௫௰௫ (9455). It is complete and in good condition. It has 296 folios.The length and width is 33 x 3.5 cm. The colophon reads as follows:

நளவருஷம் ஆடிமாதம் ரெண்டாந்தேதி வியாழக்கிழமையிலமைந்த சுபதினத்திலே மத்தூர் கந்தப்ப முதலியார் அவர் குமாரன் முருகப்ப முதலியார் மகாபெந்தம் நிறைஞ்சது.

---

[1]vide. 1.11.2 unpublished manuscripts, Sarasvati makāl Library, Thanjavur.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இதை எழுதினவன் அன்னம் கருகு மணியப்பன் கையெழுத்து - *Naḷavaruṣam āṭi mātam reṇṭāntēti viyāḻakkiḻamai yilamainta cupatiṉattilē mattūr kantappa mutaliyār avar kumāraṉ murukappa mutaliyār makāpentam niṟaiñcatu. Itai eḻutiṉavaṉ aṉṉam karuku maṇiyappaṉ kaiye ḻuttu-*

It is copied by *Karukumaṇi yappaṉ*. It was completed on the Tamil month of āṭi 2nd Thursday, Naḷa year, *Makăbentam* of *Murukappa mutaliyār* who is the son of *Kantappa muthaliyār.*

2) M.No. D.532(TD 322) This manuscript is very old; incomplete; much damaged but readable. The number of the last folio is 220. However many folios are omitted. The length and width is 40.5x 2.75 cm.

3) M.No.D 2861: The name of the text is *Makāvintam.* 63 folios are extant. It is incomplete. This is similar to M.No.57 which is in Thanjavur Tamil University.

8. Tirumalai Nayākkarmahāl Museum, Maturai

One manuscript bears the name: *Māvinta Nāṭakam.* It is in the form of verse; damaged and incomplete. It was donated by *Cupparāja kūḷappa Nāyakkar* of *Nilakkōṭṭai.*

9.Library of British India, Britain

Mu.Kō.Rāman mentions, in his essay,Tamil manuscripts in Foreign countries [1]as follows:

A *Māvintam* manuscript (M.No.113) is available in the office Library of British India.

10. Folk ballad songs on Māvintam:

There are 22 palm - leaf manuscripts available on *Vaikuṇṭa Ammāṉai* in K.O.M.Library. Most of these are obtained from *Ariyanāyakipuram, Taccanallūr* and *Cēttūr* areas in *Tirunelvēli* district.

The *Māvintam* story is available in three genres. i.e. minor epic, drama and folk ballads. More than forty palm -leaf manuscripts are available in Tamilnāṭu libraries on *Māvintam* theme. Many of them have not yet been published. Among these palm - leaf manuscripts, folk songs are many in number. Some of these are mentioned below with details available:

---

[1] உலகத்தமிழ் கல்வி இயக்கம் தமிழ்ச்சுவடிகள், கருத்தரங்கு -11, அயல் நாடுகளில் தமிழ்ச் சுவடிகள், ப.5- *Ulakattamiḻkalviiyakkamtamiḻccuvaṭikaḷ, karuttaraṅku -11, ayal nāṭukaḷil tamiḻc cuvaṭikaḷ,* p.5.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

1) M.No. 3214: It is complete; total number of folios is 262.

2) M.No. 4079: It is incomplete; 251 folios are available.

3) M.No. 5453:It is incomplete; there are only 300 folios.

4) M.No.5460: It is incomplete; 14 folios are extant.

5) M.No. 5665: It is incomplete; 161 folios are extant.

6) M.No. 5763: It is incomplete; it contains only 15 leaves. In the last folio the date of copying of the manuscript and the name of the scribe are mentioned as follows,

1018 ஆம் வருடம்[1] சித்திரை மாதம் 7 ஆம் தேதி குருவாரம் சதுர்த்தேதியும் அவிட்ட நட்சத்திரம் மீனலக்கினம் சுவடி விடுமாடன்கை யெழுத்து-*1018 Ām varuṭam cittirai mātam 7 ām tēti kuruvā'aram caturttētiyum aviṭṭa naṭcattiram mīṉa lakkiṉam cuvaṭi viṭu māṭaṉ kaiyeḻuttu.*

By converting Kollam year, we arrive at the exact date of copying of the manuscript as in1843 AD7th April.

7) M.No. 6400A: The total folios are 29. There are 184 verses in this text.

8) M.No. 6670: It is complete; 240 folios are extant.

9) M.No. 6673: It is complete; 221 folios are present in this bundle.

10) M.No 7955: Total palm leaves are 248. In the last folio, the name of the scribe, his occupation, native place and the date of copying are mentioned thus:

1059 ஆம் வருடம்[2] கீழப்பாவூரிலிருக்கும் சொரிமுத்துக்கோன் குமாரனாகிய சொக்கலிங்க வாத்தியார் வாசித்து வருகிற வைகுண்ட அம்மானை -*1059 Ām varuṭam kīḻappāvūril irukkum Corimuttukkōṉ kumāraṉākiya Cokkaliṅka vāttiyār vācittu varukiṟa vaikuṇṭa am'māṉai.*

The name of the scribe is Cokkaliṅkam. He is a teacher. His father is *Corimuttukkōṉ; Kīḻappāvūr* is their native place, which is in *Teṉkāci* district.

11) M.No. 8126: It is complete and is in 178 folios.

12) M.No. 8408: It is complete and it contains 178 palm leaves.The date of copying is mentioned in the last folio as,

இது 1065 ஆம் வருடம்[3] 14 ஆம் தேதி படி எடுக்கப்பட்டது - *Itu 1065 ām varuṭam 14 ām tēti paṭieṭukkap paṭṭatu.*

Only the date of copying of the manuscript is mentioned.

---

[1] (1018+825= 1843) 1843 AD.

[2](1059+825= 1884)1884AD.

[3](1065+825= 1890)1890AD.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

13) M.No. 8638: It is complete and contains 191 folios. In the 189th folio, the following note is found.

துளாயிரத்தி யெழுபத்தொன்பதாம் ஆண்டில்[1] சனிவார விந்தமதில் ஆனி யெனும் மாதம் ஞான சனிவாரமுடன் நல்ல திதி பஞ்சமியில் யிக்கதையை விளங்கவே தானெழுதி *-Tuḷāyiratti yeḻupattoṉpatām āṇṭil caṉivāra vinta matil āṉi yeṉum mātam ñāṉa caṉi vāramuṭaṉ nalla titi pañcamiyil yikkataiyai viḷaṅ kavē tāṉeḻuti-*

In the last folio, the following details are furnished:

1049 ஆம் ஆண்டு[2] அற்பசி 19 ஆம் தேதி ஆதித்தவாரம் பூர்வபட்சம் துவாதேசி உத்திரட்டாதி நட்சத்திரம் ஆசுர் வளநாடாகிய சமுத்திரத்துக்குக் கீழ்ப் பிடாகயான கோபங்கீர்த்தி ஸ்ரீநாராயணகுரு எழுதியது- *1049 Ām āṇṭu aṟpaci 19 ām tēti ātittavāram pūrvapaṭcam tuvātēci uttiraṭṭāti naṭcattiram ācur vaḷanāṭākiya camuttirattukkuk kīḻppiṭākayāṉa kōpaṅkīrtti srī nārāyaṇa kuru eḻutiyatu.*

These two different notes in one manuscript lead us to the assumption that the copying was done by two different persons. The name of the latter one is *Sri Nārāyaṇakuru.*

14) M.No.8640: It is incomplete; there are 121 folios.

15) M.No. 9150: Though it is complete, it is much damaged. It has 33 folios and contains 204 poems.

16) M.No. 9063: It is incomplete; 58 folios alone are available.

17) M.no.10293: It is incomplete and damaged and contains 210 folios.

18) M.No.10302: It is incomplete and slightly damaged.There are112 folios .

19) M.No. 10369: It is incomplete and slightly damaged. 162 folios are extant.

20) M.No. 10370: It is complete and 259 folios are available in this bundle. In the last folio, the following statement is found:

1049 ஆம் வருடம்[3]முகவருடம் கார்த்திகை மாதம் 7 ஆம் தேதி வியாழக் கிழமை அணைஞ்ச பெருமாள்பிள்ளை எழுதியது *-1049 Ām varuṭam muka varuṭam kārttikai mātam 7 ām tēti viyāḻakkiḻamai aṇaiñca perumāḷ piḷḷai eḻutiyatu.*

The date and the name of the scribe *Aṇaiñcaperumāḷ piḷḷai* are mentioned in the last folio.

21) M.No. 11278: It is complete and is in 195 folios. In the last folio the following note is furnished:

---

[1](979+825= 1804)1804AD.

[2](1049+825= 1874)1874AD.

[3](1049+825= 1874)1874AD.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பவவருஷம் தை மாதம் 18 ஆம் தேதி தவமுடைய பஞ்சமியில் சனிவார விந்தமதில் எழுதப்பட்டது.-*Pavavaruṣam tai mātam 18 ām tēti tavamuṭaiya pañcamiyil caṉivāra vintamatil eḻutappaṭṭatu.*

The name of the scribe is not mentioned. The date of copying only is noted.

22) M.No.11621: This is complete and 300 folios are present in this bundle.

Among the above manuscripts, M.No.6400A and M.No.9150 are identical. They might have been copied from one and the same manuscript. Both of them have very limited number of verses.

The availability of these many palm -leaf manuscripts relating to the journey of *Vaikuṇṭam* is enough to highlight the influence of the *Māvintam* in Tamilnāṭu, especially in South Pāṇṭiyaṉ country. *Phāratam, Pākavatam, Rāmāyaṇam* and Purāṇic stories are narrated in this work. Moreover *Vaikuṇṭa Ammāṉai* manuscripts are available in IITS, Chennai, GOML, Institute of Asian Studies, Chennai and some other centres in Tamilnāṭu. The *Māvinta Ammāṉai* manuscripts R.No.7354 and R.No.7355 are available in GOML were obtained from *Kokkirakuḷam* village in *Tirunelvēli* district. *Vaikuṇṭa Ammāṉai* manuscripts were secured from *Tirucciräppaḷḷi.* These stories were used to propagate morality and ethics among the common men.

More than forty palm leaf manuscripts are found in the libraries, Those are about the journey of the Pāṇṭavars to vaikuṇṭam. An examination of these, reveals the following:

The names of the texts are *Makāvintam* (M. No. 450), *Makāpentam* (M. No. 57), *Māvintam, Vintakak Katai* (M. No. 176), *Vaikuṇṭa Ammaṉai, Māvinta Nāṭakam* (M. No. 853), *Makāvinta Ammaṉai* (M. No. 7354) etc. have been provided. However their theme is the same; However/ , there are some differences in the story elements found in it.

Such differences are pointed out in the comparative article (Introduction chapter 9). Author's name could not be ascertained due to lack of many traces. However, the names of some authors such as Valiseshon (Su. No. 853) and Viṉāyakaṉ (M. No. 57) are found.

1.11 Prosody

Poetry reveals the inner thought of the poet. Its form is artfully wrought. *Pārata Māvintam* is pleasant in music. In *Attiṉapuram* are mansions, where beauty and wealth abound. Its pillars are wrought by coral. The tops of pillars are inlaid with lapis lazuli. Such mansions abound in *Attiṉapuram.*

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

1) பயிலும் பவழஞ் சுடர்பத்தி கொள்தூ
ணுயரும் வயிடு ரியமொண் கனகச்
செயலொன் றியபோ திவைசெப் புதல்வே
றியல்வென் பலவெண் ணிலமா ளிகையே (பா.மா.33)

Payilum pavaḻañ cuṭarpatti koḷtū
ṇuyarum vayiṭū riyamoṇ kaṉakac
ceyaloṉ ṟiyapō tivaicep putalvē
ṟiyalveṉ palaveṇ ṇilamā ḷikaiyē (*Pā.Mā.*33)

2) The poem that describes the fight of *Vīmaṉ* with a *Kantarvaṉ* named *Mēkanātaṉ* is surcharged with sweet sound.

மலைந டுங்கின மாதிர யானைகள்
நிலைந டுங்கின னீடிய சேடனும்
தலைந டுங்கினன் றாழ்கட லென்றுள
வலைந டுங்கின வீமன திர்ப்பினால். (பா.மா.365)

Malai naṭuṅkiṉa mātira yāṉaikaḷ
nilain aṭuṅkiṉa nīṭiya cēṭaṉum
talaina ṭuṅkiṉaṉ ṟālkaṭa leṉṟuḷa
valain aṭuṅkiṉa vīmaṉa tirppiṉāl. (*Pā.Mā.* 365)

=Due to the roaring sound of *Vīmaṉ*, the hills trembled, the elephants of direction lost their balance, the Āticēsha shook his head and the waves of deep sea also roared .

3)The plight of *Tarumaṉ* after the death of *Vīmaṉ* is bone-melting. Tragic incidents are fittingly described in *Pārata Māvintam.*

அணைத்திடு மெடுக்கு மரற்று மாதரிக்கு
மருண்டுடல் புரண்டிடு மருளின்
றுணைத்தன் முகத்தைமுகத்துடன முத்துந்
துய்யதாள் முடியினிற் சூட்டும் ...(பா.மா. 610:1-2)

Aṇaittiṭu meṭukku mararru mātarikku
maruṇṭuṭal puraṇṭiṭu maruḷiṉ
ṟuṇaittaṉ mukattai mukattuṭa ṉaḻuttun
tuyyatāḷ muṭiyiṉiṟ cūṭṭum ...(*Pā.Mā.* 610: 1-2)

4) *Kampaṉ* describes the episode of *Vāli* in many verses.*Cōmaṉ* concludes the description of *Vāli*'s death in a single poem in *Pārata Māvintam.*

பற்றி யம்பினைப் பார்த்தடல் வாலியும்
மற்று நேரின் மனுகுலந் தோன்றினோர்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கொற்ற மன்றிது கூறிற் குரங்குடன்
வெற்றி காட்டினை யென்னினை வின்மையால் (பா.மா. 473)

Pa<u>rr</u>i yampi<u>n</u>aip pārttaṭal vāliyum
ma<u>rr</u>u nēri<u>n</u> ma<u>n</u>ukulan tō<u>n</u><u>r</u>i<u>n</u>ōr
ko<u>rr</u>a ma<u>n</u><u>r</u>itu kū<u>r</u>i<u>r</u> kuraṅkuṭa<u>n</u>
ve<u>rr</u>i kāṭṭi<u>n</u>ai ye<u>n</u><u>n</u>i<u>n</u>ai vi<u>n</u>maiyāl (*Pā.Mā*.473)

5) The poetic style of *Cōma<u>n</u>* is very simple and like a flow of river. The following verse is an example.

எண்வளர்ந்த சிந்தையர்க்கு மெட்டா வரும்பொருளாய்
விண்வளர்ந்த தென்ன விளங்குங் கருமுகிலைப்,
பண்வளர்ந்த வேதப் பரஞ்சுடரைப் பாற்கடலிற்
கண்வளர்ந்த கோலத்தைக் கண்ணாரக் கண்டனமால் (பா.மா.128)

Eṇvaḷarnta cintaiyarkku meṭṭā varumporuḷāy
viṇvaḷarnta te<u>n</u><u>n</u>a viḷaṅkuṅ karumukilaip,
paṇvaḷarnta vētap parañcuṭaraip pā<u>r</u>kaṭali<u>r</u>
kaṇvaḷarnta kōlattaik kaṇṇārak kaṇṭa<u>n</u>amāl (*Pā.Mā*.128)

The verses are composed in *Kaliviruttam, Koccakakkali, Kalittu<u>r</u>ai* and *Āciriya viruttam* which are the subdivisions of *Kalippā* and *Aciriyappā*. The total number of lines of 760 poems is 3040 in *Pārata Māvintam*[1].

1.12 Figures of speech

To compose poetry par excellence, a poet has recourse to the utilisation of apt and proper figures of speech. *Cōma<u>n</u>*'s *Pārata Māvintam* is replete with many figures of speech. A few of them are quoted here under:

1.Simile: It is a comparison; a figure of speech in which one thing is compared with another familiar thing or one event to another.

Taruma<u>n</u> after losing *Vīma<u>n</u>* in a dense forest is left severely alone; he languishes immensely. To describe his miserable plight, *Cōma<u>n</u>* seeks the aid and assistance of the well - wrought words constituting figures of speech as well as thought. His miserable loss is compared with that of a snake, smitten by thunder, with a toad caught in a mouth of an adder and with the marā maram uprooted by strong wind.

---

[1]See. Chapter 6- Metre in *Pārata Māvintam*.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இத்தகை வீமற் கெய்தல்கண் டறத்தோ
னிடிவிழுந் துளவர வெனவும்
பைத்தலை யரவின் வாய்ப்படுந் தேரை
படுந்துய ரென்னவும் விரைவின்... (பா.மா.609:1-2)

Ittakai vīmaṟ keytalkaṇ ṭaṟattō
niṭiviḻun-ta tuḷavara veṉavum
paittalai yaraviṉ vāyppaṭu ntērai
paṭuntuyar eṉṉavum viraiviṉ... (*Pā.Mā.* 609:1-3)

2. Metaphor: A figure of speech in which one thing is talked of as another, the comparison being implied and not expressed. Simile and metaphor have close nexus. 'He is like a lion' is a simile. 'He is a lion' is a metaphor.

Speaking of the advent of *Kaliyukam Cōmaṉ* says, wearing the jewel of falsehood indulging in evil deeds, and adorned with bewildering greed, fixing its hands on the earth, it goes forth on its legs in the topsy – turvy way.

பொய்கொ லையெனும் பணிகள் பூண்டு வினைபேசி
மையல் பொருளா சையெனு மாலை முடிசூடிக்
கையினை நிலத்தி னிடையூன் றியிரு கால்மேற்
செய்ய தலைகீ ழுறந டந்துகலி சென்றே (பா.மா. 168)

Poyko laiyeṉum paṇikaḷ pūṇṭu viṉaipēci
maiyal poruḷā caiyeṉu mālai muṭicūṭik
kaiyiṉai nilatti ṉiṭaiyūṉ ṟiyiru kālmēṟ
ceyya talaikī ḻuṟana ṭantu kaliceṉṟē (*Pā.Mā.* 168)

3) *Colpiṉvarunilai aṇi* occurs in *Pārata Māvintam*. A figure of speech in which (same)words are repeated with different meanings.

வாரண மடைத்துத் தோலா வஞ்சரை யழித்தாய் போற்றி!
வாரணந் தனைய ளிக்க வந்துமுன் னின்றாய்ப் போற்றி!
வாரணஞ் செங்கை கொண்ட வாமன ரூபாபோற்றி!
சீரணி முகுந்தா போற்றி! சிறீகரி போற்றி! போற்றி! (பா.மா.742)

Vāraṇa maṭaittut tōlā vañcarai yaḻittāy pōṟṟi!
Vāraṇan taṉaiya ḷikkavan tumuṉ ṉiṉṟāyp pōṟṟi!
Vāraṇañ ceṅkai koṇṭa vāmaṉa rūpā pōṟṟi!
Cīraṇi mukuntā pōṟṟi! Ciṟīkari pōṟṟi! pōṟṟi! (*Pā.Mā.*742)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Occurrence of a word in the first line is repeated in the other lines. However the word concerned conveys different meanings. In the above verse, the word *Vāraṇam* occurs in three lines. In the first line, the word means – sea, in the second line it means –elephant and in the third it means conch.

4) *Taṟkuṟip pēṟṟam* –figure of speech poetical fancy: A figure of speech in which the qualities and functions of an object are ascribed to another object entirely different in nature.

When the *Pāṇṭavārs* were proceeding in a forest, pervaded by fire, the fire moved away(in admiration of their good character). At this the poet said that fire was like a mother – in -law who moves away at the advent of her son-in –law; Here fire is mentioned as mother – in –law and *Pāṇṭavārs* are as son-in –law .

Note: In this line the author expressed the tradition/culture of Tamilnāṭu. *Turōpati* was born in fire. So her mother is fire, who is the mother –in -law of the *Pāṇṭavārs.*

... கானக நெடுங்கட லொருக்கால் மாறுதலில்
காயெரி படர்ந்துள தடத்தே யாகிநிகர்
மானகர்கள் சென்றிட வழித்தீ மாறியது
மாமிய ரொதுங்குதல் வகைப்பாம் வாய்மையெனல்..(பா.மா.249:3-4)

... *Kāṉaka neṭuṅkaṭa lorukkāl māṟutalil*
kāyeri paṭarntuḷa taṭattē yākinikar
māṉakaḷal ceṉṟiṭa vaḻittī māṟiyatu
māmiya rotuṅkutal vakaippām vāymaiyeṉal (*Pā.Mā.*249:3-4)

5. *Niralniṟai aṇi*: Mode of constructing a verse in which words are so arranged in groups, that each term of one group is made to govern or qualify the corresponding term in another group respectively.The *Pāṇṭavārs* beheld a naturally-formed pool. In it were lotus, *kuvaḷai* and *kumutam* flowers. Seeing this they were not reminded of the face, eyes and lips of *Turōpati,* but they imagined that those were like the countenance, eyes and lips of *Tirumāl.*

பங்கயங் களும்கு வளையும் குமுதமும் பார்த்தன ரினிய பாஞ்சாலிக்கு
அங்குறுந் திருவதன மும்கண் ணும்வா யழகு மென்றிவை யெண்ணார்
சங்கமர்ந் துறைக ரத்தினர் நயனமுந் தக்க மேனியும் வாயும்
இங்கிசைந் துளவென் றுளமெண் ணினார்...... (பா.மா.544)

Paṅkayaṅ kaḷumku vaḷaiyum kumutamum pāttaṉa riṉiya pāñcālikku
aṅkuṟun tiruvataṉa mumkaṇ ṇumvā yaḻaku meṉṟivai yeṇṇār
caṅkamam tuṟaika rattiṉar nayaṉamun takka mēṉiyum vāyum

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

iṅkicain tuḷaveṉ ṟuḷameṉṉiṉār...... (*Pā.Mā.* 544)

Thus *Cōmaṉ* describes figures of speech in *Pārata Māvintam* (see chapter 7)

1.13 Nature of the language

The epic work exhibits the nature of the language of that period, especially with the dialect features of *Tirunelvēli.* Author *Cōmaṉ* uses many ancient words. They are:

அடிசில் (பா.மா.69)- *aṭicil* (*Pā.Mā.*69)=boiled rice

இடுக்கண் (பா.மா.740) *iṭukkaṇ* (*Pā.Mā.*740) =distress

உண்ணுநீர் (பா.மா.358)-*uṇṇunīr* (*Pā.Mā.*358)=drinking water

உண்டி (பா.மா.358) *uṇṭi* (*Pā.Mā.*358)=food

உம்பி (பா.மா. 619) *umpi* (*Pā .Mā.* 619)=your younger brother.

பிசி (பா.மா.686)*pici* (*Pā .Mā.*686)=lie

யாறு(பா.மா.441) -*yāṟu* (*Pā.Mā.*441)=river

The author has used many dialect words. They are:

துடர்ந்து – தொடர்ந்து (பா.மா.123) *tuṭarntu – toṭarntu* (*Pā.Mā.*123) =to be continued

அஞ்சு – ஐந்து (பா.மா.150) *añcu – aintu* (*Pā.Mā.*150)= five

பராக்குற-கவனமின்மை (பா.மா.342) *parākkuṟa* (*Pā.Mā.*342)=*careless*

பிறப்படு –புறப்படு (பா.மா.317) *piṟappaṭu –puṟappaṭu* (*Pā.Mā.*317)= depart

பேராத்தை– பேராற்றை (பா.மா.667) *pērāttai – pērāṟṟai* (*Pā.Mā.*667)=big river

1.14 Special features of *Pārata Māvintam.*

In the Tamil literature, *Pārata Māvintam* occupies a unique place. Since it has not appeared in print, modern scholars could not read it. This work lays emphasis on Tarumam, Ethics and Values. In oral form it was propagated among the common people. The *Pāṇṭavārs* are more or less equal. However the greatest among them is *Sakātēvaṉ*. Even *Tarumaṉ*, the eminent eldest was obliged to utter a falsehood. Flawlessness is the message of *Pārata Māvintam.*

Even though *Turiyōtaṉaṉ* does not give up his obstinate nature, *Tarumaṉ* concedes half his *Tarumam*, he had earned to *Turiyōtaṉaṉ*.

அந்த வெல்லையி லுதிட்டிர னையனை நோக்கி
யெந்தன் மாதருமத் தினிற்பாதி யின்றி வர்க்கே
சிந்தை யாரவே கொடுத்தனன் விடுமெனத் திகைத்துக்
கந்த நாறுபூந் தாரினா னினையன கழறும் (பா.மா.710)

Anta vellaiyi lutiṭṭira ṉaiyaṉai nōkki
yentaṉ mātarumat tiṉiṟpāti yiṉṟi varkkē

Digitization by Hindu-Heritage-Foundation of America

cintai yāravē koṭuttaṉaṉ viṭumeṉat tikaittuk
kanta nāṟupūn tāriṉā ṉiṉaiyaṉa kaḻarum (*Pā. Mā.* 710)

=At that time *Tarumaṉ* said to *Yamatarumaṉ*, that I would give half of my *Tarumam* now itself with happiness, and requested him to take them from the hell. On hearing this *Yamatarumaṉ* said the following words.

வடும னத்தினா னதியிடை வன்கழுப் பாச்சி
விடம ருத்திவல் லிருளினிற் கங்கையின் வீழ்த்திச்
சுடுக னற்பொறி யில்லிடை வைத்துச் சூதாடி
யடிமை யாக்கிமண் கொண்டுகான் விடுத்த வஞ்சகனே[1] (பா.மா. 711)

Vaṭum aṉattiṉā ṉatiyiṭai vaṅkaḻup pācci
viṭam aruttival liruḷiṉiṟ kaṅkaiyiṉ vīḻttic
cuṭuka ṉaṟpoṟi yilliṭai vaittuc cūtāṭi
yaṭimai yākkimaṇ koṇṭukāṉ viṭutta vañcakaṉē (*Pā. Mā.* 711)

= *Turiyōtaṉaṉ*'s conscience is ever evil. He administered to you poison.He planted stakes in the river Ganga to cause your death by impalement. He set fire to the mansion you had to dwell. He made you lose everything through treacherous gambling. He drove you to the forest to languish there for many years. Thus spoke *Yamataruman* to his son *Taruman* and added, How will you show him grace?

என்ற தந்தையை நோக்கியே யிவர்களா னம்பாற்
றுன்று நல்வினை யாகுமாற் சுயோதனன் செய்த
நன்றி யொன்றதோ பலவுள நாரணன் மலர்ப்பாத
மென்று நாமற வாமலே செய்தவர்க் கீதோ[2] (பா.மா.712).

Eṉṟa tantaiyai nōkkiyē yivarkaḷā ṉampāṟ
ṟuṉṟu nalviṉai yākumāṟ ṟuyōtaṉaṉ ceyta
naṉṟi yoṉṟatō palavuḷa nāraṇaṉ malarppāta
meṉṟu nāmaṟa vāmalē ceyta varkkītō (*Pā.Mā.*712)

= Thus questioned *Yamatarumaṉ*, *Tarumaṉ* said, Lo and behold ! what *Turiyōtaṉaṉ* did were all virtuous deeds. He has made us to constantly contemplate *Vishṇu*. Does this not merit our gratitude to him?

---

[1] குற்றமுள்ள மனமுடைய துரியோதனன், கங்கை ஆற்றில் கழுவினை நட்டும், விடம் அருந்தச் செய்து இரவில் கங்கை ஆற்றில் விழச்செய்தும், அரக்கு மாளிகையில் நெருப்பு வைத்தும், சூதாடி அடிமையாக்கி நாட்டைக் கவர்ந்தும், காட்டிற் கனுப்பிய வஞ்சகனாவான்.

[2] என்ற தந்தையான தருமதேவனைப் பார்த்துத் தருமன், கௌரவர்களால் நம்மிடம் நிறைந்துள்ளது புண்ணியமாகும். துரியோதனன் (எமக்குச்) செய்த நன்றி ஒன்றல்ல பல. திருமாலின் திருப்பெயர் எப்போதும் நாம் மறந்துவிடாமல் இருக்கும்படிச் செய்தவர்க்கு இந்தக் கடுநரகமோ? (என்றான்)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Hence *Tirumāl* praised *Tarumaṉ* as, செம்மல் –*cemmal* (great person)

வந்து நமன்பதி வந்து பொல்லா மதிவஞ்சகர்வன்னரகிற்
சிந்தி யழுந்து நெடுந்துயர் கண்டு சுயோதனனே முதலோர்
பந்த மகன்றிட நீபுரியுந் தருமத் தினிலோர்பகுதி
சிந்தை மகிழ்ந்து கொடுத்துல கேற்றிய செம்மலு நீயலையோ[1] (பா.மா.748)

Vantu namaṉpati vantu pollā mativañcakar vaṉṉarakiṟ
Cinti yaḻuntu neṭuntuyar kaṇṭu cuyōtaṉaṉē mutalōr
panta makaṉṟiṭa nīpuriyun tarumat tiṉilōr pakuti
cintai makiḻntu koṭuttula kēṟṟiya cem'malu nīyalaiyō (*Pā. Mā.* 748)

= You were a great person who gave up all your *Tarumam* to save the evil - hearted *Turiyōtaṉaṉ* and his relatives from their sin and hell and helped them to attain heaven.

Pārata Māvintam exemplifies the virtue inculcated (desired) by *Pārati*: who said,

பகைவனுக் கருள்வாய் நன்னெஞ்சே- Oh Good heart!, Show grace to enemy.

◆The meaning of the following verses are not clear

248, 249, 254, 401,536, 542, 545,554, 556, 580, 648, 681, 682, 684 -687, 702 (17 verses)

◆Additional verses

Additional poems are nine, they are :69 அ, 71அ, 292அ, 328அ,395அ, 401அ, 420அ, 521அ, 724அ(9 verses)

e.g. தினையம் பொழுதும் பலசிந் தையர்க்
கனவின் படிகேள் விகருத் துறநின்
வினையென் பனயாவை யும்வீட் டிடுமேல்
நினையும் பிரமத் தியும்நீங் கிடுமே (பா.மா. 69அ)

Tiṉaiyam poḻutum palacin taiyark
kaṉaviṉ paṭikēḷ vikarut tuṟaniṉ
viṉaiyeṉ paṉayāvai yumvīṭ ṭiṭumēl
niṉaiyum piramat tiyumnīṅ kiṭumē (*Pā.Mā.* 69 அ)

= Listen carefully to the story.You will get rid of all your sins and the sin of killing Brahmin .

◆ Eulogistic poems

They are (308-310, 347, 356, 540, 564, 586, 605, 606, 736-745) 20 poems.

---

[1]எமலோகத்திற்கு வந்து தீய பண்புடைய கௌரவர்கள் நரகத்தில் துன்புற்றது கண்டு துரியோதனன் முதலியோர்களின் பாவப்பிணிப்புகள் நீங்கிட, நீ செய்த தருமத்தில் ஒரு பகுதியை மனம் நிறைந்து கொடுத்து (அவர்களை) விண்ணுலகிற்கு அனுப்பிய செம்மல் நீயல்லவோ? என்றார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

e.g.

மாதவர்க் கிடுக்கண் தீர்க்க மண்முழு தளந்தாய் போற்றி!
பாதகக் கஞ்சன் வீழ்ந்து பதைத்திட வுதைத்தாய்போற்றி!
போதனை யளித்தாய் போற்றி! புராரிபா லரியைப் பெற்ற
சீதரக் கடவுள் போற்றி! சிறீகரி போற்றி! போற்றி! (பா.மா. 740)

Mātavark kiṭukkaṉ tīrkka maṇmuḻu taḷantāy pōṟṟi!
Pātakak kañcaṉ vīḻntu pataittiṭa vutaittāy pōṟṟi!
Pōtaṉai yaḷittāy pōṟṟi! Purāripā lariyaip peṟṟa
Cītarak kaṭavuḷ pōṟṟi! Ciṟīkari pōṟṟi! Pōṟṟi! (*Pā.Mā.* 740)

◆Dramatic Personae in *Pārata Māvintam*

Antaṇar, Arccuṉaṉ,Intiraṉ, Ematarumaṉ, Kaṇṇaṉ, Kāntāri, Kiṅkarar, Kunti, Sakātēvaṉ, Jaṉamējayaṉ, Cāttaki, Cittirakuptaṉ, Tarumaṉ, Turuvāca muṉivar, Turōpati, Nakulaṉ, Parīṭcittu, Piram'maṉ, Viyācar, Vīmaṉand Vēṭaṉ[1]

◆The episodes in the text are given in appendix -2.

◆The names of flora and fauna in *Pārata Māvintam* and place names, names of mountains etc. are mentioned in appendix -3 (see appendix 2)

◆ Some images of manuscript in appendix -4

◆At the end, an alphabetic index of the initial words of the verses and a glossary of important words are added.

◆ Summary of *Pārata Māvintam*[2]

Pārata Māvintam is a minor epic in 760 Tamil verses. Its main source is the *Pāratam* by Vyāsā. It is based on the last three paruvams of *Pāratam*, which alone serve as the material for *Pārata Māvintam*. This work was popular in Tamilnāṭu. Yet it remains unprinted. The time was when the Indian epics were translated into the regional languages and propagated. The propagation of such works was undertaken by knowledgable story tellers.

They composed in a simple and charming language, that was easily understood and enjoyed by the common people. The story - tellers adapt these texts in their oral discourses, performed in temples and elsewhere.

---

[1]The synonyms of these names are provided in word index.
[2]It comprises the story of last three Paruvams of Bhāratam. It contains seven Carukkams.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

India is a country of villages. The main occupation in India is agriculture. After the harvest of grains, people have a lot of time during evenings.They would gather in a public place like temple and common forum. It is here, the story teller performs his work. An able story teller would attract a great crowd. The story teller was so trained that he could keep in his spell the audience for hours together. It is through such spell binding narrators, epics and minor epics were propagated. Listening to such expositions, the audience would return home with a sense of exhilaration and fulfillment.

Pārata Māvintam comprises the story of the last three paruvams of Bhāratam. A story teller could handle this work enchantingly.The members of the audience willingly donated money and other things to the narrator, who was not at all avaricious for it. To my knowledge *Pārata Māvintam* was never included in school or college curriculum. It was mainly propagated through story tellers otherwise known as *Katākālakṣēpakar*[1]. The first thing that the story teller does is, invoking the benediction of god. He sings charmingly a few invocatory verses. After this he commences the story.

Jaṉamējayaṉ, the son of *Parīṭcittu*, grand son of *Abimaṉṉaṉ*.[2] These epic heroes were known to the audience, thanks to the oral transmission of the puranic materials forming part of the epics. Author *Cōmaṉ* had created a suitable episode to urge the people to listen to the journey of *Paṇṭavārs*, that is not found in *Pāratam*.

•1. *Tirunāṭṭuc carukkam* 22-76 (On the Country)

In the long distant past one day, the saint Vyāsā called on *Jaṉamējayaṉ*. The saint was received very well. *Jaṉamējayaṉ* wanted to know from Vyāsā, the reason for the *Paṇṭavārs* living in the forest for some years. He received convincing answer from Vyāsā, who warned *Jaṉamējayaṉ*, that he would suffer Brammahatti. (the curse of killing a Brahmin). The sage said to take efforts to avoid that curse.

After some days *Jaṉamējayaṉ* performed a yākam (sacrifice). One of the Brahmins, who participated in the yākam fell asleep without chanting mantras. In his sleep he had had a dream. A ferocious tiger rushed towards him. *Jaṉamējayaṉ* tried to wake him, with sacred grass. While he touched the Brahmin, the latter thought that it was a tiger that touched him. He encountered severe anxiety and died. As already foretold by Vyāsā, *Jaṉamējayaṉ* was afflicted with the sin of killing a Brahmin.

---

[1] A person who exposes devotional stories with music. kālaṣēpam – exposition of devotional stories with music.

[2] son of *Arccuṉaṉ*.

Digitization by Hindu-Heritage-Foundation of America-HHFA(USA)

At this he begged the saint, how he could get relieved from the sin. Then Vyāsā told him, that if he listened to the episode of the *Paṇṭavārs* journey to *Vaikuṇṭam*, he could gain the due relief. He further taught him the process of ritual listening.

◆2. *Tuvarāpatic Carukkam* 77- 97 (Meeting of *Krishna* and *Paṇṭavārs*)

It was the time for *Kaṇṇaṉ's* departure from this world. With the departure of *Kaṇṇaṉ* commenced the Yuka known as *Kali*. Before the departure of *Kaṇṇaṉ* , he conversed with the *Paṇṭavārs* and told them the evils, which would characterize the Kaliyuga. *Kaṇṇaṉ* also instructed them, how they could overcome the evils.

◆3. *Turuvācac carukkam* 98-156 (Curse of sage Turuvācar)

Sage Turuvācar was a great rishi . He once called on *Kaṇṇaṉ*. He came to *Tuvārakai* to meet *Kaṇṇaṉ*. *Kaṇṇaṉ* hailed from the clan of goat herds and shepherds. These people sometimes act perversely. On *Turuvācār's* arrival some yātavārs, disguised one of them as a pregnant woman. When they asked the sage *Turuvācār*, what kind of child would that boy deliver in the guise of a pregnant woman ? At this, the sage cursed them saying, that an iron pestle would be born. Then they took the pestle and showed it to Kaṇṇaṉ who bade them to pulverize it and throw the powder in to the sea. A piece, that remained was also thrown. It was swallowed by a fish. That fish was caught by a fisherman. He gave the fish to a hunter. When the hunter cut the fish, he found that small piece of iron in the stomach of the fish. He fixed it to his arrow and darted it. The other pieces grew as reeds and killed the yātavār's children, who played with reeds. Coming to know of this, *Kaṇṇaṉ* sat in the shadow of a banyan tree to perform yogic contemplation.The hunter deeming the toe of *Kaṇṇaṉ* as an antilope, shot his toe with the iron piece. It struck on *Kaṇṇaṉ's* toe. At this the hunter trembled in dread. Then *Kaṇṇaṉ* consoled the hunter and told that it so happened, as a result of a past curse[1]. *Kaṇṇaṉ* sent for *Vīmaṉ* and *Arccuṉaṉ* and witnessing the plight of *Kaṇṇaṉ*, they wailed in sorrow. *Kaṇṇaṉ* informed them, that it was the time for him to return to *Vaikuṇṭam*. He bade them to take the women[2] and all the wealth from *Tuvarāpati* to *Attiṉapuram*. *Kaṇṇaṉ* reached *Vaikuṇṭam*.

Arccuṉaṉ performed the obsequies for *Kaṇṇaṉ*. *Vīmāṉ* and *Arccuṉaṉ*, to carry out the command of *Kaṇṇaṉ* proceeded to *Attiṉapuram*. On their way some hunters carried away their treasure. *Tuvarāpati* was washed away by a hidden river. *Vīmaṉ* and *Arccuṉaṉ* narrated the happenings to *Tarumaṉ*. Then *Tarumaṉ*, *Kunti* and *Turōpati* lamented inconsolably.

---

[1]Curse by *Kāntāri*.

[2]Since men are killed in the war.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

◆4. *Attiṉapuric carukkam* 157-236 (Dispute between two Brahmins)

In *Attiṉapuram* a dispute broke out between two Brahmins. They came to *Tarumaṉ. Tarumaṉ* enquired into the matter. The reason for the strife was as follows:

Of the two Brahmins, one was extremely poor. So the other Brahmin gifted to him a piece of land. The poor man discovered in the land given to him a great treasure. He thought, that the treasure belonged not to him, but the one who gifted it. So he wanted to give it back to the donar (who gave him a piece of land). However the donar refused to treat the treasure as his.This dispute was taken to *Tarumaṉ. Tarumaṉ* asked his ministers to settle the dispute. His ministers said that a verdict would be rendered in five days hence.

Meanwhile *Tuvāparāyukā* ended and *Kaliyukā* commenced inaugurating the advent of evil. The two Brahmins ignored their former stands and asserted contrarywise. *Tarumaṉ* cognizing the evil of *Kaliyukā*, desired to give up rulership and longed to reach *Vaikuṇṭam*. He coronated *Parīṭcit*[1], then with his brothers and *Turōpati, Tarumaṉ* quit *Attiṉapuram*. His subjects lamented. On his way *Tarumaṉ* witnessed evil happenings.

◆5. *Turōpati Mōṭcam peṟṟa Carukkam* 237-315(Ascending to Paradise)

Eventually one *Yāṉaimukaṉ* revealed the way to *Vaikuṇṭam*. On their way the *Pāṇṭavārs* met with hardships and *Vīmaṉ* took to fighting with a *kantarvaṉ* named *Mēkanātaṉ*, who tried to take away *Turōpati. Tarumaṉ* felt sorry for *Vīmaṉ's* action, as their goal was *Vaikuṇṭam*. Many and varied incidents took place during the journey of the *Pāṇṭavārs*. Knowing in advance the demise of *Turōpati* ,*Tarumaṉ* advised her to worship Lord Siva. This she did and reached *Vaikuṇṭam*. The *Pāṇṭavārs* performed the obsequies for *Turōpati*. *Vīmaṉ* asked *Tarumaṉ*, why she left them in the forest. He replied though she married all the *Pāṇṭavārs*, she showed more affection towards one of the *Pāṇṭavārs* i.e. *Arccuṉaṉ*.

◆6. *Ciṅkattiṉ kataic carukkam* 316-523 (Stories from *Pākavatam* and *Rāmāyaṇam*)

Then they proceeded on their way, where many and varied incidents took place. To overcome the ennui of the journey, *Vīmaṉ* entreated *Tarumaṉ* to narrate interesting stories. *Tarumaṉ* had narrated to them the Lila / Leela of *Kaṇṇaṉ* namely his sleeping on a banyan leaf, the quaffing of the *Ālahālā* by *Sivā* (which appeared from the milky ocean), Lord Sivā's gutting with fire the three citadels of the sky, by his mere laughter[2] and such other episodes.

---

[1]Son of Abimaṉṉaṉ

[2] In this episode Tirumāl took the form of Buddha.

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

He narrated the lives of *Prakalātaṉ* and *Makāveli.* He also narrated the story of *Rāmāyaṇam.*

•7. *Karuṭaṉaik kaṇṭa Carukkam* 524-750 (Meeting of *Tarumaṉ* with *Tirumāl*)

Tarumaṉ also added many stories from *Pākavatam. Karuṭaṉ* was sent by *Tirumāl* to know the state of mind of *Pāṇṭavārs.* It took the form of a swan and reached them. It persuaded them to go back to *Attiṉapuram* instead of suffering in the dreadful forest. *Tarumaṉ* replied that their wealth and dwelling place were only *Tirumāl* (*Vaikuṇṭam*).

After knowing this truth through *Karuṭaṉ, Tirumāl* sent *Cakkarattāḻvār* as their protecter.The death of *Sakātēvaṉ*, when the *Pāṇṭavārs* were resting in the shade of banyan tree took place. *Vīmaṉ* asked the reason for his death. He thought about the war (that was the reason). The taming by *Vīmaṉ* of the wild tusker called *kiricaram* took place. Then *Nakulaṉ* died[1].

They wondered on seeing the penance of virgin twins, a tiger turning into a brahmin and then a hog turning into a brahmin and the advent of *purusha mirukam*[2]. These were the incidents they met on their way. At that time *Arccuṉaṉ*'s death took place. *Tarumaṉ* said that *Arccuṉaṉ* is proud that *Kaṇṇaṉ* was his charioteer.

On seeing the arrival of the *Yamaṉ*'s messengers, *Vīmaṉ* tried to fight with them. *Tarumaṉ* advised him not to fight and also added that arrogance of *Vīmaṉ* is his sin. Then *Vīmaṉ* died.

After Vīmaṉ's death *Tarumaṉ* was alone. On his way, a river named *Kaucalā* flooded with water.The drying of the raging river was effected by *Cakkarattāḻvār. Taruma tēvatai* (God of *Tarumam*) came in the form of a wounded dog to probe *Tarumaṉ*. It said to let it in the river. But *Tarumaṉ* swam across the river with the dog. *Taruma tēvatai* was extremely happy and showed its original form. It blessed *Tarumaṉ* and told him to go to *Vaikuṇṭam.*

Tarumaṉ's entry into hell for having uttered a falsehood and the redemption of *Turiyōtaṉaṉ* by *Tarumaṉ*. There they crowned him as '*Rājarishi*'. *Tirumāl* seated on *karuṭaṉ* appeared before *Tarumaṉ*. Then he dwelled in *Vaikuṇṭam* beside *Tirumāl* with immense happiness for ever.

Pārata Māvintam concludes with the heavenly pleasure obtainable by its readers, narrators as well as the listeners thereof.

---

[1] The reason for his death is not mentioned in all Māvintam.
[2] மனிதமுகம் கொண்ட விலங்கு. -animal with human face.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

◆**Conclusion:** From the above narration, it is evident that the *Māvintam* story, which narrates the last journey of *Pāṇṭavārs* was more popular among Tamil people, especially in the South Pāṇṭia area. People were much interested in listening to these stories. The composers of *Māvintam* had enriched the knowledge of common people. It shows how the oral tradition was educating the masses at that time. It is good to maintain this tradition. It is high time, that we revive our values by publishing these texts which form a treasure trove. We must see *Pārata Māvintam* in print as early as possible.

****

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

2. நூலாசிரியர்

2.1 நூலாசிரியர் பெயர்

பாரத மாவிந்தம் என்னும் இந்நூலின் ஆசிரியர் பெயர், சோமன் [1]. இதைத்,

தொன்னூல் வகுத்த சோமன் (பா.மா.21),

சோமன் வாழ்புவ னப்பதி (பா.மா.18), என்ற பாடலடிகள் மெய்ப்பிக்கின்றன.

இப்பெயர் ஆசிரியர் வாழ்ந்த பகுதியாகிய ஆற்றூர் சேந்தமங்கலத்தில் இருந்த ஸ்ரீ சோமநாத தேவர் என்றும், தென்திருப்பூவணம் உடையார்[2] என்றும் அழைக்கப்பெற்ற இறைவன் பெயரால் அமைந்ததாகும். சோமன் என்னும் பெயர் அக்கோயிலில் பணி செய்த அர்ச்சகர்க்கும் பிறர்க்கும் அமைந்திருந்ததை அவ்வூரிலிருந்து கி.பி.11 ஆம் நூற்றாண்டு முதல் கிடைக்கும் கல்வெட்டுக்களால் அறியலாம்.[3] (மேலும் பார்க்க: இயல் 2: 2. 5)

2.2 நூலைச் செப்பம் செய்தவர் பெயர்

சோமன் இயற்றிய நூல் சில இடங்களில் செல்லரித்துப் போய்ப் பதம், சொல், எழுத்து ஆகியன காணாமற் போனதால், ஈசுரபட்டன் என்பவரின் மகன் விநாயகன், அந்நூலின் உரையிலிருந்து நூலைச் செப்பம் செய்தார் என்று பாயிரத்தின் இறுதிப் பாடல் குறிப்பிடுகிறது.

. ..அங்கதனில் கதைபொறித்த வேட்டிற் சிலசெல்
லரித்ததனாற் பதஞ்சொல்லெ ழுத்தவை காணாமற்
றங்குறைதேர்ந் துரைவழியே பேணி முன்போற்
றாபித்துக் குறையறவே பூரித் திட்டான்
செங்கமல மார்பனீ சுரபட் டன்றன்
செல்வனெனும் விநாயகனாஞ் செம்மல் தானே
(பா.மா. 21)

பாடலில் வரும், ‘உரைவழியே பேணி’ என்னும் தொடர், இந்த நூலுக்கு ஓர் உரை இருந்ததைக் குறிப்பதாக அல்லது உரைவழியே பேணி என்பது 'செவி வழியே அறிந்து' என்றும் பொருள் கொள்ளலாம்.

முன்னுரையில் குறித்த ஆற்றூர்க் கல்வெட்டில் ‘தண்டி வினாசகம்', ‘வினாசகன் தண்டி’[4] என்று காணப்படும் பெயர்கள் அப்பகுதியில் அன்று விநாசகன் என்ற பெயர் வழங்கியிருந்ததைக் காட்டுகின்றன. திருச்செந்தூர்க் கோயிலில் விநாயகரின் திருநாமம், ‘தூண்டுகை விநாயகர்’ என வழங்குவதும் இங்கு நோக்கத்தக்கது.

---

[1] சோமன் என்ற இப்பெயர், ஆசிரியர் சோமன் வாழ்ந்த பகுதியாகிய ஆற்றூர் சேந்தமங்கலத்தில் இருந்த ஸ்ரீ சோமநாத தேவர் என்றும் (திருச்செந்தூர் வட்டம்) தென் திருப்பூவனம் உடையார் என்றும் அழைக்கப்பெற்ற இறைவன் பெயரால் அமைந்ததாகும். சோமன் என்னும் பெயர் அக்கோயிலில் பணிசெய்த அர்ச்சகர்க்கும் பிறர்க்கும் அமைந்திருந்ததை கி.பி. 11 -ஆம் நூற்றாண்டு முதல் கிடைக்கும் கல்வெட்டுக்களால் அறியலாம்.

[2] திருச்செந்தூர் வட்டம்.

[3] பார்க்க: சௌத் இண்டியன் இன்ஸ்கிரிப்ஷன்ஸ் தொகுதி 14, எண் 172, கி.பி. 1042.

[4] எண்.135, கி.பி. 1027.

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA).

2.3 நூலாசிரியர் குலம்

பாரத மாவிந்தத்தை இயற்றிய, சோமன் என்பவர் அந்தணகுலத்தைச் சேர்ந்தவர் என்பதை,

மாமறைக் குலத்தான் வளத்தான் (பா.மா.18)

என்ற பாடலடி உணர்த்துகிறது. இவருடைய குருவும் அந்தணர் என்பதை,

மறையவர் குலமுதலெனக் குருப ரற்றுதி கொளநி னைப்பவர்
(பா.மா.12)

என்ற பாடலடி மெய்ப்பிக்கிறது. நூலாசிரியர் சோமனின் குருவைப் பற்றி வேறெந்த குறிப்பும் நூலில் இல்லை.

இந்நூலைச் செப்பம் செய்த விநாயகன் என்பவரும் அந்தணர் ஆவார். இது, விநாயகனின் தந்தை பெயர் ஈசுரபட்டன் என்பதாலும், அவரைச்,

செங்கமல மார்பன் ஈசுர பட்டன் (பா.மா.21)

என்று பாயிரப்பாடல் கூறுவதாலும் புலனாகிறது. தாமரை மலர் அந்தண குலத்தவர்க்கு உரியது என்று பிங்கலந்தையும், பிரபந்தத் திரட்டும்[1] குறிப்பிடுகின்றன.

2.4 சமயம்

பாரத மாவிந்தத்தின் ஆசிரியர் பெயரான சோமன் என்பது சிவபெருமானைக் குறிக்கும். சோமன், விநாயகனை வணங்கி நூலைத் தொடங்குகிறார். பின்னர், சிவபெருமான் (பா.மா.1, 2) பார்வதி (பா.மா.3), விநாயகன் (பா.மா. 4), முருகப்பெருமான் (பா.மா.5), திருமால் (பா.மா.6), திருமகள் (பா.மா.7), கலைமகள் (பா.மா.8) ஆகியோரைத் துதிக்கின்றார். அதைத் தொடர்ந்து நாயன்மாரைப் பாடிப் பரவுகின்றார். இவையெல்லாம் அவர் சைவசமயத்தவர் அல்லது சிவபெருமானிடம் மிகுந்த ஈடுபாடு கொண்டவர் என்பதைத் தெரிவிக்கின்றன. இவர் நாயன்மர் நால்வரையும் துதி செய்துள்ளார்.

சிவபெருமானைப் பற்றிய குறிப்புகள் நூலில் பல பாடல்களில் இடம்பெற்றுள்ளன.

1. வியாசமுனிவர் சனமேசயனிடம்,

பனிவெண் மதிசூ டிபதந் தொழுதே
இனிதின் கதைகேட்க வெழுதி யரோ (பா.மா.68)

என்று கூறுவதாக ஆசிரியர் பாடியிருப்பது மேலே கூறியதை வலியுறுத்தும் வகையில் காணப்படுகிறது.

2. துரோபதியின் இறுதிக்காலம் நெருங்கியபோது தருமன் அவளிடம்,

புராந்தகன் பொற்கழல் தெரிந்த நாமத்தைச்

---

[1] 'மாலை கமலம் மறைகொடி யாகும்' (பிங். 730), 'மறையுலாங் கொடி வாரிச மாலையே' (பிர.திர.297)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சிந்தையிற் செய்கெனா (பா.மா .307)

என்று கூறுவது முன்பு கூறிய கருத்தை அரண் செய்யும் வகையில் அமைந்துள்ளது. தருமன் கூறியதற்கேற்பத் துரோபதியும்,

தில்லை காஞ்சித் திகழரு ணைக்கிரி
அல்லி மாதி னருட்கம லைப்பதி
வல்லி பாகன் குடந்தைமுன் மற்றெலாஞ்
சொல்லி யேதுதித் தாளத் துரோபதி [1] (பா.மா 310)

என்று சிவபெருமானின் முக்தித் தலங்களைப் பாடிப் பரவுகிறாள்.

3. தருமன் வீமனுக்குக் கதை கூறும்போது, சிவபெருமானின் பெருமைகளைக் கூறும் வகையில், அவர் பாற்கடலில் தோன்றிய விடத்தை உண்டு தேவர்களைக் காத்தது, திரிபுரம் எரித்தது, மாவெலிக்கு வரம் அருளியது[2] போன்ற கதைகளைக் கூறுகிறான்.

4. எமதூதர்கள் தருமனுக்குச் சொர்க்கத்தைக் காட்டும்போதும், முதலில் விநாயகரையும், முருகப்பெருமானையும் வணங்கியவர்கள் உயர்ந்தநிலை அடைந்திருந்ததையே காட்டுகின்றனர். இதனை,

"கூர்கொ ளோர்மருப் பைங்கரன் றன்குரை கழலெண்ணி" (பா.மா. 688)

என்ற பாடலடி தெரிவிக்கிறது.

இவை நூலாசிரியர் சோமன், சிவபெருமானிடம் பக்தி கொண்டவர் என்பதைப் புலப்படுத்துகின்றன. அவர் சிவபெருமானிடம் ஈடுபாடு கொண்டிருந்தாலும், கண்ணனைக் குறிப்பிடும் நூலாகிய பாரத மாவிந்தத்தைச் சிறந்த முறையில் இயற்றியிருப்பது அவருடைய சமயப் பொது நோக்கைக் காட்டுகிறது.

நூலாசிரியரின் குருவும் சிறந்த சிவபக்தர் என்பதை,

அரியயற் கரியவன் மலர்ப்பதம் அனுதினத்திலும்
உரைசெய்தே, மரும லர்கொடு பணியும் நற்றவ (பா.மா. 12)

என்ற பாடலடி உணர்த்துகிறது.

நூலைச் செப்பம் செய்தவர் பெயரும் அவருடைய தந்தை பெயரும் முறையே விநாயகன், ஈசுரபட்டன் என்று சைவசமயப் பெயர்களைக் கொண்டிருப்பதால் விநாயகன் சைவ சமயத்தவராதல் வேண்டும். அவர்கள் ஆற்றூர்ச் சோமநாதர் கோயில் சிவாச்சாரியர்களாயிருக்கலாம்.

---

[1] அர்ச்சுனன் தீர்த்த யாத்திரை சென்றபோது காஞ்சி, திருவண்ணாமலை, தில்லை முதலிய சிவ தலங்களை வழிபட்டதாக வில்லிபுத்தூரார் பாடியிருப்பது அவருடைய சமயப் பொதுநோக்கைக் காட்டுகிறது. சோமனும் அம்முறையை அடியொற்றிச் செல்வதை இங்குக் காண முடிகிறது.

[2] பா.மா. 386-391, பா.மா.392-401அ, பா.மா. 412-413.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நூலின் பாயிரம் நூலாசிரியர் சோமனையும் செப்பம் செய்த விநாயகனையும் படர்க்கையில் கூறுகிறது. தன்னையே படர்க்கையில் கூறும் மரபு பற்றி இவ்வாறு அமைந்தது போலும். இதனால் விநாயகன் பாயிரம் முழுவதையும் பாடினாரா அல்லது அவரைப் பற்றிய குறிப்பு இடம்பெறும் 21-ஆம் பாடலை மட்டும் பாடினாரா என்பது தெளிவாகத் தெரியவில்லை. எனினும், பாயிரப்பாடல்களின் நடை பிற பகுதியிலிருந்து வேறுபட்டதாகத் தோன்றுவது இங்குக் குறிப்பிடத்தக்கது.

திருமாலின் பெருமையைப் பாட எழுந்த நூலின் பாயிரத்தில், அடிமுடி தேடிய வரலாறும் நாயன்மார் துதியும் அமைந்துள்ளதால் பாயிரம் நூலாசிரியர் பாடியதன்று என்று கம்பராமன் எஸ்.கே.இராமராஜன் அவர்கள் கருதுவார். ஆனால் நூலின் அகத்தும், பாயிரத்தில் கண்டதற்கொப்ப சிவபெருமானின் பெருமை பாடப்பெறுவதாலும், துரோபதி தன் இறுதி நேரம் நெருங்கும்போது சிவமுக்தி தலங்களை வழிபடுவதாலும் அவரது கருத்து வலிவுடையதல்ல என்று தோன்றுகிறது. வியாசமுனிவர் பாரதக்கதையைச் சொல்ல, விநாயகர் அதைக் கேட்டு எழுதிய கதை ஆகையாலும், அர்ச்சுனனும் வீமனும் சிவபூசை செய்தமையாலும், அர்ச்சுனன் வழிபடும் பொருட்டுக் கண்ணனே சிவோகம் பாவனையில் இருந்த தாலும், சிவபெருமானிடமிருந்து பாசுபதம் பெறக் கண்ணனே அர்ச்சுனனைத் தூண்டி, அவன் பாசுபதம் பெற்றதாலும், சிவபெருமானை வழிபட்ட உபமன்யு முனிவர்[1] கண்ணனின் குருவாக இருந்ததாலும், பாரதக்கதை சிவன்கோவில்களில் உரிமை பாராட்டிப் படிக்கப் பெறுவதாலும் பண்டைக்காலத்து மக்கள் சைவ வைணவப் பேதமின்றி வாழ்ந்து வந்தனர் என்பது தெரியவருகிறது.

பாரத மாவிந்தம் வைணவர்க்கு உரியது என்று கூற இயலாது. சைவரும் அதில் ஈடுபட்டிருந்ததால் சைவர் அதைப் பாடியபோது சிவபெருமானின் பெருமைகள் பற்றிப் பேசியதில் வியப்பில்லை. சோழர் காலத்தில் செந்தலை[2], புள்ளலூர்[3], திருத்தங்கால்[4] ஆகிய கோவில்களில் பாரதக்கதையைப் படித்திருக்கின்றனர் என்பதற்குக் கல்வெட்டுகள் சான்று பகர்கின்றன. இவற்றை நோக்கும் போது, பாண்டவர்கள் வைகுண்டம் சென்ற கதையை விரும்பிப் படிக்கும் வழக்கம் பாண்டி நாட்டுச் சிவன் கோவில்களிலும் இருந்துள்ளது என ஊகிக்க முடிகிறது.

2.5 நூலாசிரியர் சோமனின் ஊர்

நூலாசிரியர் சோமனின் ஊர் புவனப்பதி. இதைச்,

சோமன்வாழ் புவனப்பதி தோன்றலான் (பா.மா.18)

என்ற பாடலடி உணர்த்துகிறது. புவனப்பதி என்னும் பெயருள்ள ஊர் இப்போது இருப்பதாகத் தெரியவில்லை. புவனப்பதி என்ற பண்புத்தொகை தஞ்சை, கோவை போன்ற மரூஉப் பெயர் வடிவமும் 'பதி' என்ற சொல்லும் சேர்ந்தமைந்ததாகத் தோன்றுகிறது. புவனப்பதி என்று முடிவுறும் தமிழ்நாட்டு ஊர்களைச் சற்று நோக்கி அவற்றிற்கும் சோமனின் ஊராகிய புவனப்பதிக் கும் தொடர்பு உண்டா என ஆராயலாம்.

---

[1] பெரி.புரா.திருமலைச் சருக்கம்.
[2] ஏ.ஆர்.இ:1897 ஆப் 63 .
[3] ஏ 48.இ.ஆர்.ஆப் 1923.
[4] ஏ 546.இ.ஆர்.ஆப் 1922.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

2. 5.1 தமிழ்நாட்டில் புவனம் என்று முடியும் ஊர்கள்

கும்பகோணத்துக்கு அருகில், 'திரிபுவனம்' என்னும் ஊரும், திருநெல்வேலி மாவட்டம் அம்பாசமுத்திரம் வட்டத்தில் 'தென்திரி புவனம்' என்னும் ஊரும், கோவில்பட்டி வட்டத்தில் 'இளம் புவனம்' என்னும் ஊரும் உள்ளன. இன்னும் சிதம்பரத்திற்கு அருகிலுள்ள புவனகிரி என்னும் இடத்தைப் 'புவனை' என வழங்குவதுண்டு. பாரத மாவிந்தம் ஏட்டுச் சுவடிகள் கிடைக்கப்பெற்ற ஆயக்குடி, தச்சநல்லூர் ஆகிய இடங்களைக் கொண்ட திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள தென் திரிபுவனம் அல்லது இளம்புவனம் என்னும் ஊர்களில் ஒன்றே ஆசிரியர் சோமனின் பிறப்பிடமாகிய புவனப்பதியாகக் கருத வாய்ப்புகள் மிகுதி.

1. தென்திரி புவனம்

தென்திரி புவனம்[1] (அம்பாசமுத்திரம் வட்டம்) என்னும் ஊர் தாமிரபரணி ஆற்றின் கரையில் கரிகேசநல்லூருக்கு அருகே சற்றுக் கிழக்கே இருந்தது. அங்கு அந்தணர் வசிக்கும் தெருக்களும், பிற சாதியினர் வசிக்கும் தெருக்களும் இருந்தன. ஆனால் அந்தக் கிராமம் இப்போது மறைந்துவிட்டது. அதன் மறைவுக்குரிய காரணம் தெரியவில்லை [2].

புவனப்பதி என்பது இத்தென் திரிபுவனமாக இருக்கலாம். தென் திரிபுவனம் என்னும் ஊர்ப்பெயர் வடக்கில் ஒரு திருபுவனம் என்னும் ஊர் இருந்ததைச் சுட்டிக்காட்டுகிறது. அது மதுரைக்கடுத்துள்ள திருப்பூவணம் என்று கருதுவோரும் உண்டு. ஆனால் பெயர்களிடையே உள்ள வேற்றுமையை நோக்க அவ்வாறு கருதத் தோன்றவில்லை. எனினும் வெறும் திரிபுவனம் என வழங்கப்பட்டதா அன்றி வடதிரிபுவனம் என வழங்கப்பட்டதா என்றும் தெரியவில்லை. அல்லது கோவில்பட்டி வட்டத்திலுள்ள இளம்புவனமே வடதிரிபுவனமா என்பது குறித்தும் தெளிவாக அறிவதற்கில்லை.

திருமுது குன்று[3] என்னும் ஊர் 'முது குன்று' [4] என்று வழங்கியதுபோல் திருபுவனம் என்பது புவனம் என மருவி, அதனோடு பதி என்னும் சொல்லையும் சேர்த்துப் புவனப்பதி என வழங்கியிருக்கக் கூடும். புவனப்பதி என்ற பெயருள்ள ஊர் இப்போது இருப்பதாகத் தெரியவில்லை.

2. இளம்புவனம்

இளம்புவனம் கோவில்பட்டி தாலுகாவில் எட்டயபுரத்திலிருந்து நான்கு கிலோ மீட்டர் தூரத்திலும், கோவில்பட்டியிலிருந்து கிழக்கே பத்து கிலோமீட்டர் தூரத்திலும் சாலையை ஒட்டி உள்ளது. இவ்வூரைப் பற்றிய செய்திகளைத் திரட்டி வே.சதாசிவன் அவர்கள் எழுதி அனுப்பியுள்ளதாவது:

இது பழமையான குறுநிலபூமி. இந்த நிலத்தைப் புலவர்கள் இளசை நாடு என்று குறிப்பிடுவார். திருநெல்வேலிச் சீமைச் சரித்திரம்[5] என்ற வரலாற்று நூலை எழுதிய குருகுகத் தாசப்பிள்ளை என்பவர் இளம்புவனத்தை, முதுகுடி மறவர் நாடு எனக் குறிப்பிடு கின்றார். முதுகுடிநாடு என்று கும்மிப் பாடல்களிலும் பேசப்படுகிறது. இப்போதைய இளம்புவனம்

---

[1] இதுவும் சௌத் இன்டியன் இன்ஸ்கிரிப்ஷன்ஸ், தொகுதி-14 எண் 240 தென்திருப்பூவணமும் குறிப்பிடும் ஒன்றெனத் தோன்றுகிறது .

[2] இச்செய்தியைத் தெரிவித்து உதவிய கே.சி.சங்கரநாராயணன் ஐ.ஏ.ஸ்.(ஓய்வு) அவர்களுக்கு நன்றி.

[3] ஏ 546.இ-ஆர்.ஆப் 1922 .

[4] சந்.தேவா.VI.7-25.

[5] கி.பி.1936.

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

என்னும் கிராமத்திற்குத் தெற்கே உள்ள கண்மாய்க்குள் அமிழ்ந்து இருக்கிற இடத்தைக் கிராம மக்கள், 'அய்யன் குளம்' என்றழைத்து வருகின்றனர். இதனருகே உள்ள நிலப்பகுதி, 'அய்யன் குடியிருப்பு' என வழங்கப்படுகிறது. இப்பெயர் நிலப்பதிவு ஏட்டிலும் இருப்பதாகக் கூறுகின்றனர்.

மேலே கண்ட செய்திகள் சோமன் வாழ்ந்த புவனம் தென்திரி புவனம், இளம் புவனம் என்ற இரண்டு ஊர்களில் ஒன்றாக இருத்தல் கூடும் என்று ஊகிக்கத் தூண்டுகின்றன. அய்யன் குளம் அல்லது அய்யன் குடியிருப்பு என்ற பெயர்கள் இளம்புவனத்தில் அந்தணர்கள் இருந்ததைக் குறிப்பிடுவதாகக் கொள்ளலாம்.

2.5.2 ஆற்றூர்க் கல்வெட்டுத் தரும் செய்தி

கல்வெட்டாய்வாளர் திரு.கே.ஜி.கிருஷ்ணன், பாண்டிய நாட்டுக் கல்வெட்டுகளிலிருந்து சுட்டிக்காட்டிய செய்திகளை நோக்கும்போது, புவனப்பதி என்பது திருநெல்வேலி மாவட்டம் திருச்செந்தூர் வட்டத்து ஆற்றூருக்கருகே அமைந்த வேறொரு பெயராக இருக்க வேண்டும் என்றும், நூலாசிரியர் சோமன் அவ்வூரைச் சேர்ந்தவராதல் வேண்டும் என்றும் தோன்றுகிறது. இவ்வூர், தொல்காப்பியச் சொல்லதிகாரத்திற்கு உரை வரைந்த சேனாவரையர் பிறந்த ஊர் என்பதும் இங்கு நினைவுகூரத் தக்கது. இதை விரிவாக விளக்கலாம்.

திருநெல்வேலி மாவட்டம் திருச்செந்தூர் வட்டத்திலுள்ள ஆற்றூர் சோமநாததேவர் கோவிலில் காணப்படும் மிகப் பழமையான கல்வெட்டொன்று, இவ்வூரையும் இவ்வூரிலுள்ள கடவுளையும், 'ராசேந்திரச் சோழ வளநாட்டுக் குடநாட்டுப் பிரம்மதேயம் ஆற்றூர் சேந்தமங்கலத்துச் சோமநாத தேவர்' [1] என்று குறிப்பிடுகிறது.

கி.பி.1042 ஐச் சேர்ந்த இன்னொரு கல்வெட்டு, [2] 'ராஜராஜப் பாண்டி நாட்டு உத்தமசோழ வளநாட்டுக் குடநாட்டுப் பிரம்மதேயம் ஆற்றூர்சேந்தமங்கலத்து ஸ்ரீ சோமநாததேவரான தென் திருப்பூவணம் உடையார்' என்று கூறுகிறது[3]

இக்காலத்தைச் சேர்ந்த மற்றொரு கல்வெட்டு '(ராஜாதிராஜ) சருப்பேதி மங்கலத்து வடபிடாகை ஆற்றூர் ஸ்ரீசோமநாத தேவரான தென்திருப்பூவணம் உடையார்'[4] என்று கூறுகிறது.

இச்செய்திகளிலிருந்து ஆற்றூர் சேந்தமங்கலம் ஸ்ரீ சோமநாத தேவர்க்குத் தென்திருப்பூவணமுடையார் என்னும் பெயர் கி.பி.11-ஆம் நூற்றாண்டு முதல் வழங்கி வந்தது தெரிகிறது. இது போன்று அம்பா சமுத்திரம் கல்வெட்டு ஒன்றும், தென்திருப்பூவணமுடைய மகாதேவர் [5] என்று குறிப்பிடுகிறது.

இவற்றிலிருந்து மதுரை வையைக் கரையிலுள்ள பாடல் பெற்ற தலமான திருப்பூவணத்தில் எழுந்தருளியுள்ள சிவபெருமானை நினைவூட்டுகிற வகையில், தென்திருப்

---

[1] சௌத் இண்டியன் இன்ஸ்கிரிப்ஷன்ஸ் தொகுதி 14, எண் 135 சடையவர்ம சுந்தரசோழ பாண்டிய தேவர், கி.பி.1027.

[2] மேற்படி எண்172.

[3] மேலும் பார்க்க அதே இடத்தைச் சேர்ந்த கல்வெட்டு எண் 167, கி.பி.1044.

[4] மேற். கல்வெட்டு எண் 192, கி.பி.1050 .

[5] எண் 240 கோச்சடையபன்மரான திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீவல்லப தேவற்கு யாண்டு 17 வது ஸ்ரீ பாண்டிநாட்டு முள்ளிநாட்டுத் தென்திருப்பூவணமுடைய தேவர். .

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பூவணம் உடையார் என்னும் பெயர் தென்பாண்டி நாட்டுக் கோயில்களில் எழுந்தருளியுள்ள சிவபெருமானுக்கும் வழங்கி வந்தமை புலனாகிறது. எனவே இனம் பற்றி தென் திருப்பூவணம் என்னும் பெயரே மரூஉ வழக்காகப், புவனப்பதி [1] என வழங்கியிருக்க வேண்டும். எனவே தென்திருப்பூவணம் என்னும் பெயரே பாண்டியநாட்டில் அம்பா சமுத்திரத்திலிருந்து மறைந்து போன தென்திரி புவனமாக இருக்கக்கூடும்.

ஆற்றூருக்கும் தென்திருப்பூவணம் என்னும் பெயர் வழங்கியிருக்கிறது. இந்த இரண்டு தென் திருப்பூவணங்களில், பாரத மாவிந்த ஆசிரியர் சோமன் வாழ்ந்த புவனப்பதி ஆற்றூராகிய தென்திருப்பூவணமாக இருந்திருக்க வேண்டுமென்பதைச் சோமன் என்னும் இவரது இயற்பெயர் அங்கு உறையும் சோமநாததேவர் என்னும் இறைவன் திருப்பெயரோடு தொடர்பு பட்டிருப்பதை வைத்து ஊகிக்கலாம்.

மேலும் அவ்வூரில் கிடைத்த கி.பி.11-ஆம், 12-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டுகளில் 'சோமன்' என்னும் பெயர், 'சோமன் கண்டி'[2] 'பாக்கரன் சோமன், சோமன் தண்டி, சோமநாதன் மரக்கால்[3]' 'சோமனும் இக்கோத்திரத்துச் சோமன் தண்டியும்'[4] 'சிவதேவன் சோமன்'[5] 'கூத்தாடும் பாரசிவன் சாந்திக் கூத்தன்'[6] என்றெல்லாம் பலவாறு வழங்கப்பட்டிருப்பதை நோக்க இப்பெயர் சூடிய ஆசிரியர் சோமனும் இவ்வூரினர் ஆதல் வேண்டும் என ஊகிக்கத் தூண்டுகிறது.

மேலும், நூலைச் செப்பம் செய்த விநாயகனின், பெயரும், 'பட்டர்' என்னும் அவரது இனப்பெயரும் கல்வெட்டுகளில் கூறப்பட்டிருக்கும், 'சிவபிராமணன் தண்டி வினாசகன்'[7] 'வினாசகன் தண்டி பட்டன்'[8] என்னும் பெயர்களை ஒத்திருப்பது அப்பெயர் அப்பகுதியில் அக்காலத்தில் வழக்கில் இருந்ததைச் சுட்டுகிறது. முன்பு குறிப்பிட்டதுபோல் இவர் சிவாச்சாரியராக இருக்கவேண்டும்.

சங்ககாலம் முதல் இப்பகுதி புலமைப் பாரம்பரியம் மிக்கதாக விளங்கியிருக்கிறது. மாறோக்கத்து நப்பசலையார், காமக்கண்ணி நப்பாலத்தனார், கைந்நிலையின் ஆசிரியர் புல்லங்காடனார் ஆகியோர் இப்பகுதியைச் சார்ந்தவர்கள் என்றும், 'மாறோக்கம்' என்பது கொற்கை சூழ்ந்த நாட்டுக்கு வழங்கும் பெயர் என்றும், சேனாவரையர் ஆற்றூரைச் சேர்ந்தவர் என்றும் சான்றுகள் பலகாட்டி மு.இராகவையங்கார்[9] நிறுவியுள்ளார்.

எனவே இப்பதியிலிருந்து இத்தகைய புலவர் ஒருவர் தோன்றியிருப்பதில் வியப்பில்லை. அப்பகுதியில் அந்தணர் வாழ்ந்ததை அங்குள்ள கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. கண்ணன் ஆயர்குலத்தில் வளர்ந்தவராதலால் ஆயர்குல மக்கள்

---

[1] திருச்செந்தூருக்கும் குடநாட்டுத் திருச்செந்திலூரான திரிபுவனமாதேவிச் சதுர்வதி மங்கலம் என வழங்கி உள்ளது எனக் கல்வெட்டுகளிலிருந்து தெரிகிறது. திரிபுவனம் என்பதும் புவனப்பதி என மருவுவதற்கு வாய்ப்பு உண்டு.

[2] கல்.எண் 186

[3] கல்.எண் 191 .

[4] கல்.எண் 192.

[5] கல் .எண்.230

[6] கல்.எண். 237.

[7] கல் .எண்.135

[8] கல்.எண்.191.

[9] சாசனத் தமிழ்க்கவி சரிதம், பக்-115 -120.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மாவிந்தக்கதையை விரும்பிக் கேட்டிருக்க வேண்டும். அப்பகுதியில் இடையர்கள் வசித்ததற்கு, ‘இடையன் தியாகக் கோனென்’[1] என்ற கல்வெட்டு வரி சான்றாகும்.

2.6 நூலாசிரியர் சோமனின் நாடு

சோமன் தென்பாண்டி நாட்டைச் சார்ந்தவராக இருக்கக் கூடும் என்பதற்கு அகச் சான்றுகள் பல நூலில் காணப்படுகின்றன.

1. தென்பாண்டி நாட்டிற்குரிய வழக்குச் சொற்கள் சில பாரத மாவிந்தத்தினுள் காணப்படுகின்றன. அவை, அறுத்துரை (பா.மா. 165), பராக்கு (பா.மா. 342), பார்த்திடுவோம், (பா.மா. 395), மேடை (பா.மா. 433), சாடியே (பா.மா. 614) அனுமதம் (பா.மா. 682) என்பனவாகும். இவை தென்பாண்டி நாட்டுப் பேச்சு வழக்குச் சொற்கள்.

2. ‘ழ’ கரம் வருமிடத்தில் ‘ள’கரம் பயிலும் வழக்கு மாவிந்த ஏடுகளில் காணப்படுகிறது. இங்ஙனம் அமைதல் தென்பாண்டி வழக்காகும். இவ்வாறு,

ழ > ள ஆகும் விதி பெறுவதை வீரசோழியம்[2] குறிப்பிடுகிறது. துவரிதட் சிறுநகை (பா.மா.7:1), மகிட்சி (பா.மா:81:3), புகட்கொரு (பா.மா. 41:4) புகட் பாஞ்சாலி (பா.மா. 124:2), கீட்பணிந்தார் (பா.மா.141:4) இங்கிவன ருட்படியை (பா.மா.181:1) புகட்டருமன் (பா.மா.322:2) மகிட்சியால் (பாமா.367:3) கலைத்தமிட்கு (பா.மா.405:2) மகிட்சியன் (441:2)" என்னும் சொல் வடிவங்கள், வீரசோழிய விதிப்படி அமைந்த வழக்குச் சொற்கள் பாரத மாவிந்தம் ஏட்டுப் படிகளில் இடம்பெற்றிருப்பதைத் தெரிவிக்கின்றன. இவற்றிலிருந்து இந்நூலின் ஏடுகள் தென்பாண்டி நாட்டைச் சேர்ந்தவை என்பதை உணரலாம். எனினும் மூல ஆசிரியரும் இவ்வொலி மாற்றத்தோடு நூலை இயற்றினரா என்பதை யாப்பு முதலியன கொண்டு உணர இயலும். எனினும் அதற்குரிய சான்றுகள் கிடைக்கவில்லை. எனவே புலவராகிய மூல நூலாசிரியர் சோமன் இவ்வாறு ஆண்டிருப்பார் என்று யூகிக்க இயலவில்லை. ஏட்டைப் படியெடுப்போர் இவ்வாறு எழுதினர் போலும்.

3. உடனிகழ்ச்சிப் பொருளில் வரும் ‘ஒடு’ என்னும் மூன்றாம் வேற்றுமை உருபு இடப்பொருளில் வந்துள்ளது. இதைச்,

சகதே வனோட றத்தினன் (பா.மா.175)

அரியி னோடவன் செய்யும் (பா.மா.415)

என்ற பாடலடிகள் காட்டுகின்றன. இவ்வழக்கு மலையாளத்தில் காணப்படுகிறது. தென் பாண்டிநாடு மலையாள நாட்டை அடுத்திருப்பதை நோக்க, இவ்வழக்கு அதையொத்துக் காணப்படுகிறதோ என எண்ணத் தோன்றுகிறது.

4. ஆழ்வார் திருநகரியின் இறைவன் ஆதிநாதன் .ஆவார். திருமாலை, ஆசிரியர் சோமன், ஆதிநாதன் (பாமா.420அ) என்று குறிப்பிடுவது நோக்கத்தக்கது. திருநகரி என்னும் பெயரின் அடிப்படையில் நகர், புரம் என்னும் ஊர்ப்பெயர்களை ஆசிரியர்,

[1] கல். எண். 167

[2] சந்திப்படலம்.-18.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அத்தின நகரி (பா.மா.77), வைகுண்ட நகரி (பா.மா.589), அத்தினபுரி (பா.மா.31) எனப் பாடியிருக்கிறார்.

5. பாகவதத்தில் இடம்பெறும் கண்ணன் கதையைக் குறிப்பிடும்பொழுது, கண்ணன் பெயரைக் இராமா, காகுத்தா எனவும் இராமர் கதையில் வரும் இராமரைக், கோவிந்தா, "கோபாலா என்றும் இராம, கிருஷ்ண பேதமின்றிக் குறிப்பிடும் வழக்கம் தென்பாண்டி நாட்டில் உள்ளது. அம்முறையிலேயே சோமன் கண்ணனைக் குறிப்பிடும் இடத்தில் காகுத்தன் (பா.மா. 122) என்றும், இராமனைக் குறிப்பிடுமிடத்தில், காகுத்தன் கையுறக் கொண்ட சங்கினது ஓசைக் குறிப்பு (பா.மா. 368) எனத் திருமாலாகவும் குறிப்பிடுகின்றார்.

இக்காரணங்களால் சோமன் தென்பாண்டிநாட்டவராக இருக்கக் கூடும் என்று கருதத் தோன்றுகிறது.

2.7 நூலாசிரியர் காலம் (பார்க்க : முன்னுரை 1.8)

இந்நூலாசிரியர் சோமன் வில்லிபுத்தூரருக்குப் பிற்பட்டவர் என்பதைக் கீழ்வரும் பாடலடிகள் உணர்த்துகின்றன.

விருத்த நீள்கவி வில்லிபுத் தூரன்முன்
தெரித்த பாரதஞ் செய்தனன் செய்திலன்
வருத்தமாய் மன்னன் மாவிந்தஞ் சேர்ந்ததை (பா.மா.15)
துய்ய வில்லிபுத் தூரன் றொடைக்கவிச்
செய்யல் கண்டபின் செப்புங் கவிதையே (பா.மா.16)

சோமன் வில்லிபுத்தூரார் பாடிய சந்தக்களை ஒட்டிப் பல பாடல்களைப் பாடியிருக்கிறார். வில்லிபாரதம்,

ஈரிரு தேரினர் மூவகை யானைய ரெண்ணூறு மாமிசையோர்
ஓரிரு நாலுடை யையிரு பூமியி லுள்ளப தாதருடன்
பாரிரு நாலுதி சாமுக மும்படை யோடுபரந்து வரும்
பேரிரு மானவ ரூதினி யின்றிரன் பேசுற லாமளவோ (துரோ.பதி.7)

பாரத மாவிந்தம்,

நீதியு டன்புவி தன்னைநி றுத்திநெ டுங்கலி வந்திடவே
யாதியில் நம்முரை கொண்டுபொல் லாதவ ருஞ்சுரம் வந்தினிய
மாதும டிந்தும னத்துறு தம்பியர் மண்ணிடைத் துஞ்சிடவும்
பேதமி [1]லாதெமை யுன்னிந டந்தபெ ருந்தகை நீயலையோ
(பா.மா.747)

2.வில்லிபுத்தூராரின் சொல்லையும் பொருளையும் பாரத மாவிந்தத்தில் சோமன் போற்றியிருப்பதைப் பல இடங்களில் காணமுடிகிறது.

1. வெந்நிடுதல் (வில்.ஆதி.குரு.27) வெந்நிட்டான் (பாமா.619)
2. வின்மை (வில்.துரோ.பன்.90) வின்மை (பா.மா.519)
3. பட்டவர்த்தனரும் மகுட வர்த்தனரும் வந்து (வில்.உத்.கிரு.103)

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

பட்டவத்தனர் தம்மொடும் பலமகுட வத்தனர் தம்மொடும் (பா.மா.80)

தாண்டிய வெம்பரி (வில்.துரோ.பன்.15)

தாண்டிய பரி தேர் (பா.மா.638)

பிறந்த தின முதலாக (வில்.துரோ.பதி.138)

பிறந்த நாள் முதலா (பா.மா.617)

வில்லிபுத்தூரரின் காலம் கி.பி.14 ஆம் நூற்றாண்டின் இறுதி என்பார் மு. அருணாசலம்[1].

2.8 பாரதமாவிந்தம் நூல் இயற்றப்பட்ட காலம்

இப்பதிப்புக்கு எடுத்துக் கொண்ட சுவடிகளில் காலத்தால் முற்பட்ட சுவடி 3895பி. இது படி எடுக்கப்பட்ட காலம் கி.பி.1778. எனவே, சோமன் வில்லிபுத்தூரர் காலமாகிய 14-ஆம் நூற்றாண்டிற்கும் சுவடி எழுதப்பட்ட 18-ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலப்பகுதியைச் சேர்ந்தவர் என உறுதிப்படுத்த முடிகிறது. சோமன் இயற்றிய நூல் செல்லரித்துவிட்டதால் 'விநாயகன்' என்பவர் நூலைச் செப்பம் செய்ததாகப் பாயிரத்தின் இறுதிப் பாடல் (பா.மா. 21) கூறுகிறது. இதிலிருந்து விநாயகன் பாரத மாவிந்தத்தைச் செப்பம் செய்தது பதினான்காம் நூற்றாண்டுக்கும் பதினெட்டாம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் நடந்திருக்க வேண்டும் என்று தெளியலாம்.

இனி, சோமனின் காலத்தைத் திட்டவட்டமாக வரையறுக்க ஏதேனும் அகச்சான்றுகள் உள்ளனவா என்று நோக்கலாம். இவ்வாறு நோக்குங்கால் அருணகிரியார் பாடலில் இடம்பெறும்,

முத்தமி ழடைவினை முற்படுகிரிதனில்[2] என்ற பாடலில் வரும் 'முத்தமிழடைவு' என்னும் சொல்லைப் போன்ற சொற்றொடர் பாரத மாவிந்தத்தில், "முத்தமிழடைவினிற் பொலிகருணை" (பா.மா.11) என்று காணப்படுகிறது. இதில் யாரை ஒட்டி யார் எழுதினார் என்பது தெளிவில்லை. என்றாலும் அருணகிரியாரை ஒட்டி இவ்வரிகள் எழுந்தன என்று கொண்டால் இந்நூல் அருணகிரியின் காலமான 15 ஆம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டதாதல் வேண்டும். 14 ஆம் நூற். ப.24

செவ்வைச் சூடுவார் பாகவதத்தில் வரும் சொல்லை ஒத்தமைந்த சொற்றொடர்கள் பாரத மாவிந்தத்தில் இடம்பெற்றுள்ளன. அவை கீழ்வருவன:

1. வட்ட வாயழற் றிகிரியான் (செவ்.2912), வட்டவாய்த் திகிரி (பா.மா. 738)
2. கான்யாறு (செவ்..2878) , கானியாறு (பா.மா. 263)
3. குழகன் (செவ்.3398), குழக முத்தமிழி (பா.மா.16)

இதிலும் யாரை அடியொற்றி யார் எழுதினார் என்பது தெளிவில்லை. இருப்பினும் செவ்வைச் சூடுவாரைப் பின்பற்றி இச்சொற்றொடர்கள் எழுந்தன எனக் கொண்டால் சோமன் செவ்வைச் சூடுவாரின் சமகாலத்தவர் அல்லது அதற்குப் பிற்பட்டவர் என்று கருத இடமுண்டு. செவ்வைச் சூடுவார் காலம் கி.பி.16 ஆம் நூற்றாண்டின் தொடக்கம் என்று மு.அருணாசலம்[3] கூறுகிறார்.

---

[1] தமிழ் இலக்கிய வரலாறு- 14 ஆம் நூற். ப.24.
[2] திருப்புகழ் காப்பு .
[3] மேற்படி 16 -ஆம் நூற். ப.346.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வழியடிமையாப் பிள்ளை என்பவரின் மகன் முத்துவயிரவன் பெருமாள் பிள்ளைக்குப் படியெடுத்துக் கொடுத்த பாரத மாவிந்தம் சுவடியின் எண் 3895b. இது படியெடுத்த ஆண்டு கி.பி.1778 ஆகும். சுவடி எண் 11413 ஐப் படியெடுத்தவர் சிவசுப்பிரமணியன் என்பவர்; இவர் இதைப் படியெடுத்த ஆண்டு கி.பி.1839. இரு சுவடிகளையும் படியெடுத்த கால வேறுபாடு 61 ஆண்டுகள் ஆகும்.

முதல் சுவடியிலிருந்து இரண்டாவது சுவடி படியெடுக்கப்படவில்லை இரண்டிற்கும் மூலம் வேறு. இதை ஒரு கணக்காகக் கொண்டு நோக்கினால், பதிப்பிற்கு எடுத்துக்கொண்ட நான்கு சுவடிகளுள் காலத்தால் முற்பட்ட பாரத மாவிந்தம் சுவடியின் (3895b) முதல்படி எடுத்ததற்குச் சுமார் 60 ஆண்டுகளுக்கு முன்பு இந்நூல் படியெடுக்கப்பெற்றிருக்கக் கூடும் என்று கொண்டால் நூல் படியெடுக்கப்பட்ட காலம் கி.பி.1718 ஆம் ஆண்டையொட்டி அமைந்திருக்கலாம். நூலைப் படி எடுத்ததற்கு 60 ஆண்டுகளுக்கு முன்பு நூல் செப்பம் செய்யப்பட்டதாகக் கொண்டால் நூல் செப்பம் செய்யப்பட்ட காலம் கி.பி.1658 ஆக இருக்கலாம்.

இந்த நூலுக்கு ஓர் உரை இருந்ததாகவும், மூலமும் உரையுமாக இருந்த ஏடு செல்லரித்துப் போனதால் இந்நூலை செப்பம் செய்ததாகவும் பாயிரத்தின் பாடலிலிருந்து ஊகிக்கலாம். இவ்வூகம் சரியாயின் பாரத மாவிந்தம் என்னும் நூல் எழுந்த காலம் கி.பி.1598 என்று கொள்ளலாம். நூலாசிரியர் சோமனே உரையியற்றியிருப் பின் இந்நூல் சுமார் கி.பி.1598 - இல் இயற்றப்பெற்றிருக்க வேண்டும். பாரதமாவிந்தம் 300 ஆண்டுகளாவது செல்வாக்குடன் விளங்கியிருக்கக் கூடும். எனவே நூலின் காலம் 16 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி எனத் துணியலாம்.

வைகுந்த அம்மானை சுவடிகளுள் மிகப் பழைய சுவடியின் காலம் கி.பி.1804 ஆகும். இந்நூல் பாரத மாவிந்தத்தைப் பார்த்து எழுதியிருக்க வேண்டும். தென்பாண்டி நாட்டில் இவ்வம்மானைச் சுவடிகள் மிகுதி. எனவே பாரத மாவிந்தத்தின் காலம் கி.பி.16 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி என்று கொள்வது பொருத்தமாகத் தோன்றுகிறது.

இவ்வாறு அகச்சான்றுகளைக் கொண்டு செய்யும் கால ஆராய்ச்சியும் சோமனின் சொற்கள் எவை, நூலைச் செப்பம் செய்த விநாயகனின் செப்பங்கள் எவை என வேறுபடுத்தி அறிய இயலாததாக நூலின் முன்னுரையில் இருக்கின்றது.

2.8.1 தமிழ் மாவிந்த நூல்களின் கால வரிசை:

தஞ்சை சரசுவதி மகால் 1950 இல் பெருந்தேவனார் பரதம் (மாவிந்தம்) என்ற நூலைப் பதிப்பித்து வெளியிட்டுள்ளது. இதன் பதிப்பாசிரியர் முத்துரத்தினம். இவர் இந்நூலின் முன்னுரையில்,

இப்பகுதி உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுளாகவும் அதன் நடை பெரும்பாலும் நந்திவர்மன் காலத்திய[1] பெருந்தேவனார் பாரதத்தின் நடையை ஒத்தும், இதிலுள்ள உரைநடை நந்திவர்மன் காலத்திய பாரதத்தின் இறுதிப் பகுதியாகிய சுவர்க்காரோகண பர்வத்தின் பகுதியாகக் கொள்ளத்தகும் என்று குறிப்பிட்டுள்ளார் (ப.ix).

இது பற்றி ஆய்ந்த மு.அருணாசலம்,

[1] 9 ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதி.

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

'பதிப்புச் செம்மை பெறாதபடியால் நூல் குறைபாடுடையதாகத் தெரிகிறதே அன்றி இப்பகுதியும் பெருந்தேவனார் வாக்கு என்று கொள்வதில் தடையில்லை' என்று மேற் கண்ட கூற்றை வலியுறுத்துவார்.[1]

மேலே கூறிய இருவர் கூற்றையும் மறுத்து, நந்திவர்மன் காலத்திய பாரதம் எழுதியவரும், பெருந்தேவனார் பாரதம் (மாவிந்தம்) எழுதியவரும் ஒருவரல்லர் வேறுபட்ட இருவர் என்று காரணம் பல காட்டி அ.விசுவநாதன் நிறுவியுள்ளார்[2].

சி.ஜெகநாதச்சாரியரும் மகாபாரதச் சுருக்கம் என்ற நூலின் முன்னுரையில், 'பெருந் தேவனார் பாரதம் (மகாவிந்தம்) என்ற நூலைப் பாடியவர் பாரதவெண்பா பாடிய பெருந் தேவனாரல்லர் வேறொருவர் என்பது தெளிவு' என்பார்(பக்.xxvi).

இதிலிருந்து பெருந்தேவனார் பாரதம் (மாவிந்தம்) 9 ஆம் நூற்றாண்டு என ஒரு சாரார் கூறுவதும், இன்னொரு சாரார் 9 ஆம் நூற்றாண்டு அல்ல என்று கூறி அதன் காலத்தை அறுதியிடாததும் தெரிகின்றது. இது இன்னும் ஆய்வுக்குரியதாகும். பெருந்தேவனார் பாரதம் (மாவிந்தம்), பாரத மாவிந்தம் இரண்டிலும் பல ஒப்புமைப்பகுதிகள் காணப்படுகின்றன.

1. நகரி (பா.மா.77) மாநகரி (பெருந். 85)
2. வரால் குதிபாயும் எழில் நாடு (பா.மா.30)
   துள்ளி வரால் பாயும் துறை (பெருந்.97)
3. ஆயகலு ழன்னுரிமை யானவவ னிக்கோர் (பா.மா. 184)
   கருடனவன் காக்கும் கடலுலகம் காப்ப (பெருந்.65)
4. கையினை நிலத்திடை யூன்றி யிருகால் மேல், செய்யதலை கீழுற (பா.மா.168),
   கையால் நடந்து தலைகீழாய்க் கால் மேலாய் (பெருந்.59)
   கார்மேகம் கவிந்தனவே யென்ன (135)
   கார்மேகம் எங்கும் கலந்தெழுந்த வாறேபோல் (பெருந்.48)

2.8.2 பாரத மாவிந்தமும் வைகுந்த அம்மானையும்

1. வாளபிமன் (பா.மா.38) வாளபிமன் (வைகு.ப.9)
2. மாதவங்க ளொழிந்து சாதி வரம்பழிந்து
   வேதமும் பல பேதமாய் விடும் (பா.மா.85)
   மாதவங்கள் தானழியும் வரமு மழிந்தேவிடும்
   வேதங்கள் தன்பலமும் பேதங்களாகி விடும் (வைகு.ப.22)
3. யாவ ரோவது தேவரோ யிகலசுரரோ(பா.மா.115)
   தேவ சுரர்களோ ... மூவரோ... யாவரோ (வைகு.ப.41)
4. ஈரஞ்சு சென்னி இராவணனை (பா.மா.150)
   ஈரைந்து சென்னி இராவணனை (வைகு.ப.41)
5. கொடுத்ததனை மீளவது கொள்பவரு முன்னே
   யடுத்தது முமக்கு விளைவாகு நினைவாருந் (பா.மா. 164)

---
[1] தமிழ் இலக்கிய வரலாறு 9 ஆம் நூற்றாண்டு -1, ப.52
[2] பாரத நூல்களின் திறனாய்வு, ப.256

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கொடுத்த பொருள் மீளக்கொள்ளுவர் தாமுண்டோ
அடுத்தோர் தமக்கு வினையங்கே நினைப்பாரும் (வைகு.ப.47)

2.8.3 பாரதமாவிந்தம் – பெருந்தேவனார் பாரதம் (மாவிந்தம்) – வைகுந்த அம்மானை, ஒப்புமை முடிவுகள்:

மேலே காட்டப்பெற்ற சான்றுகள் பாரத மாவிந்தம், பெருந்தேவனார் பாரதம் (மாவிந்தம்) வைகுந்த அம்மானை ஆகியவற்றிற்கிடையே மிகுந்த தொடர்பு இருந்திருக்கவேண்டும் என்பதைப் புலப்படுத்துகின்றன. கேரளப்பல்கலைக்கழகச் சுவடி நூல்நிலையத்தில் இருக்கும் வைகுந்த அம்மானை சுவடிகளுள் காலத்தால் முந்தியது சுவடி எண் 8638 ஆகும் இச்சுவடியில் 189 ஆம் ஏட்டில் என்று கொல்லம் ஆண்டு 979 இல் இது படியெடுக்கப் பெற்றதாக எழுதப்பட் டுள்ளது. இறுதி ஏட்டில் கொல்லம் ஆண்டு 1049 என்னும் குறிப்புக் காணப்படுகிறது. இரண்டு ஆண்டுகளையும் கிறித்தவ ஆண்டுக்கு மாற்றினால் அவை முறையே கி.பி. 1804, கி.பி.1874 என்பனவாகும். இரண்டிற்கும் இடையே உள்ள இடைப்பட்ட காலம் 70 ஆண்டுகள்.

முதலில் உள்ள குறிப்புச் சுவடி கி.பி.1804 இல் படியெடுக்கப்பட்டதாகக் குறிப்பிடுகிறது. அதில் குறிப்பிடும் ஆண்டு வேறொரு சுவடியைப் பார்த்துப் படியெடுக்கும்போது அச் சுவடி படியெடுக்கப்பெற்ற ஆண்டா அன்றி நூல் இயற்றப்பட்ட ஆண்டா? என்பது பற்றித் தெளிவாக அறிய இயலவில்லை. இறுதி ஏட்டில் எழுதப்பட்டிருக்கும் ஆண்டு (கி.பி.1874) அச்சுவடி படியெடுக்கப்பட்ட ஆண்டு என்பதைப் புலப்படுத்துகிறது. (மேலும் பார்க்க: இயல்-1 எண் 17)

முதலில் குறிப்பிட்ட ஆண்டு (கி.பி.1804) வைகுந்த அம்மானையின் காலமாயின் பாரத மாவிந்தத்தைப் பார்த்தே அது இயற்றப்பட்டிருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. வைகுந்த அம்மானையில் பாண்டவர்கள் ஸ்ரீ ரங்கராமனின் சீடன் வெங்கியருள் வேடன் என்பவர் முதலில் சுருக்கமாகப் பாடியதாகவும் அதை வைகை என்னும் ஊரிலுள்ள புகழேந்தியின் மகன் பொன்னழகு என்பவர் விரிவாகப் பாடியதாகவும் கூறப்பட்டுள்ளது (வைகு.பக்.6,7,195). இது வைகுந்த அம்மானை இயற்றப்படுவதற்கு முன்பு வைகுந்த யாத்திரை பற்றிச் சுருக்கமான ஒரு நூல் இருந்ததைக் குறிப்பிடுகிறது.

2.8.4 தஞ்சை சரசுவதி மகால் மாவிந்தம் –காலம்

இச்சுவடி 'யுவ ஆண்டு மார்கழி மதம் 13 ஆம் தேதி' படியெடுக்கப் பெற்றதாக இறுதி ஏட்டில் காணப்படுகிறது. இக்குறிப்பை வைத்து அதன் காலத்தைச் சரியாக அறிய இயலவில்லை.

இவற்றையெல்லாம் நோக்கும்போது பாரத மாவிந்தம் முதலில் தோன்றியிருக்க வேண்டும் எனக் கொள்ளலாம். மக்கள் எளிதில் கேட்டு மகிழவேண்டுமென்று வெங்கியருள் வேடன் நாட்டுப்புறப் பாடல் வடிவில் அமைத்துத் தந்ததைப் பாரத மாவிந்தம்போல் விரிவாகக் கூறப் பொன்னழகு என்பவர் பாரத மாவிந்தத்தைக் கற்றுப்பின் வைகுந்த அம்மானையை இயற்றியிருக்க வேண்டும். பொன்னழகின் ஊர் வைகை (வைகு.ப.195) என்று

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

கூறப்பெற்றிருப்பதால் இக்கதை பாண்டிநாடு, தென்பாண்டிநாடு ஆகிய இடங்களிலேயே வழங்கப்பட்டிருக்க வேண்டும் என்று தோன்றுகிறது.

மேலே கூறிய நுல்களுள் பாரத மாவிந்தமே சிறு காப்பிய வடிவில் உள்ளது. காப்பிய வடிவமே கதைப்பாடலுக்கு முந்திய வடிவமாகும். ஏனெனில் பல கதைப்பாடல்கள் காப்பியங்களிலிருந்து உருவாகியுள்ளன. "தமிழ் மொழியில் நாட்டுக்கதை பாடலின் வரலாறு 400 வருடங்களுக்கும் குறைவானது" என்று மு.அருணாசலம்[1] கூறுவார்.

2.9 நூலாசிரியர் சோமனின் புலமைத்திறன்

சோமன் பல நூல்களைக் கற்றுணர்ந்து முந்தைய புலவரின் சொல்லையும், பொருளையும், கருத்தையும் கையாண்டுள்ளதை அவருடைய பாடல்கள் தெரிவிக்கின்றன.

திருக்குறளில் வரும், பிறவிப் பெருங்கடல் (குறள்.10) என்ற சொற்றொடரைச் சோமன் பின்பற்றியிருப்பதைப்,

1. பிறவிப் பெருங்கடல் நீந்தினான் (பா.மா.300) என்னும் பாடலடி உணர்த்துகிறது.

2. ஆசிரியர் நாலடியார் பாடல்களைக் கற்றுத் தேர்ந்தவர்.

'குஞ்சி' (நால.131) என்னும் சொல்லாட்சி, 'எறிந்த குஞ்சியும்' (பா.மா.602) என்னும் பாடலடியில் இடம்பெற்றுள்ளது.

3. வில்லிபுத்தூராரின் சொல்லும் பொருளும் பாரத மாவிந்தம் பாடல்களில் உள்ளன. அவருடைய கருத்தைத் தம் நூலில் பொன்போலப் போற்றிப் பொறித்துள்ளார் சோமன்.

வில்லிபுத்தூரார் பாரதக்கதையை மேருமலையில் விநாயகர் எழுதியதாக பாடியிருக்கும் அதே கருத்துப் பாரத மாவிந்தக் காப்புச் செய்யுளில் வெளிப்படுகிறது.

பைம்பொன் மேருவிற் பாரதந் தீட்டிய,
கம்ப மேய்களி யானை கழல்களே (பா.மா.1)

4. சோமன் தேவாரப் பாடல்களைக் கற்றுத் தேறியவர். அப்பர் தேவாரத்தில், திருமறைக் காட்டுச் சிவன்கோயிலில், அணையும் நிலையில் இருந்த விளக்கை ஓர் எலி எரியச் செய்ததன் பலனாக உலகை ஆள்வதற்கான வரம் பெற்றது சிவபெருமான் அருளால். இதன் கருத்துச் சாயலாகத்,

தூண்டு நேரின் சுடர் விளக்கங்கெரி (பா.மா.413)

என்ற பாடல் அமைந்துள்ளது.

5. திரிகடுகத்திலுள்ள 'உண்ணு நீர்' (திரி.16) என்ற தொடர்
உண்ணு நீருடன் உண்டியும் (பா.மா. 358) என்ற பாடலடியில் காணப்படுகிறது.

6. காட்டில், முல்லைமலர் மலர்ந்திருப்பது தருமனுடைய தனிமை நிலைகண்டு நகைப்பது போலவும், காந்தள் மலர்ந்திருப்பது அவனுக்கு ஏற்பட்ட துன்பம் கூடாதென அம்மலர்

[1] Ballad Poetry, p.3.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கைம்மறிப்பது போலவும் தோன்றுவதாகச் சோமன் தற்குறிப்பேற்றமாகப் பாடியிருப்பது (பா.மா.623).

மிக்கார்தாங் கேட்டின்கண் மேன்மை யில்லாச் சிறியார்போல்
நக்காங்கே யெயிறுடைந்த நறவ முல்லை நாள்வேங்கைத்
நக்கார்போற் கைம்மறித்த காந்த ளந்தோ நகாதெனவே
(சீவ.1227)

என்ற சீவகச் சிந்தாமணி பாடலை ஒத்துள்ளது.

7. ஆசிரியர் இராமாயணக்கதையை வழுவறக் கற்றவர் என்பதை இராமாவதாரக் கதை கூறுவதன் மூலம் உணரமுடிகிறது. இராமன் காடு செல்லுங்கால் அயோத்தி மக்கள் அடைந்த துயரை நினைவுறுத்தும் வண்ணம் தருமன் காட்டிற் கேட்கும்போது அத்தினபுரமக்கள் அடைந்த துயரத்தைக் காட்டும் பாடல்கள் உள்ளன.

கம்பரின், கெடுத்தொழிந்தனை (அயோ.மந்.76) என்னும் தொடர் பாரத மாவிந்தத்தில் இரு பாடல்களில் இடம்பெற்றுள்ளது .

கெடுத்தொ ழிந்தனை கேவல மன்றிமண் (பா.மா.444,).

கெடுத்தொ ழிந்தனை கெட்டபின் தாழ்வென (பா.மா.501)

8. ஆசிரியர் பாகவத நூல்களையும் நன்கு கற்றவர் என்பதை அவர் திருமாலின் அவதாரப் பெருமைகளைக் கூறுவதிலிருந்து அறியமுடிகிறது.

9. சமயச் சான்றோர் கருத்துகளும் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. நரகத்தில், மாற்றான் மனைவியைத் தழுவியவர் பெறும் தண்டனையைக் கூறுமிடத்து,

எரியெழு கின்ற செம்பினால் பாவையைப் பாவீ தழுவென (நாலா.1001)

என்ற நாலாயிரதிவ்ய பிரபந்தக் கருத்தை அடியொற்றி,

ஒழுகுங் கனலா யெரி தூணினை யோடி நேரே,
தழுவும வர்காண் பிறர்தா ரந்தழு வினோர் (பா.மா.704)

என்று பாடியிருக்கிறார்.

நம்மாழ்வார், திருவடி என்னும் சொல்லுக்குக் கடவுள் என்னும் பொருள்படத் திருவடியை நாரணனை (நாலா. 2512) எனப் பாடியிருக்கிறார். இதைத் தழுவிச் சோமனும்,

அன்னதத் தனையுஞ் செய்தார் திருவடிகள் (பா.மா.89)

என்று பாடியிருப்பது ஆழ்வார் பாசுரங்களை அவர் ஆழ்ந்து கற்ற நிலையைக் காட்டுகிறது.

10. சோமன், கலைத்தமிட்கு, உரிய நான்மறை ஓதிய வேதியன் (பா.மா.405) எனத் தமிழுக்கென்று ஒரு வேதம் இருந்ததாகப் பாடியிருப்பது, 'தொல்லை வேத, அருமறைகள் திருக்காப்புச் செய்து' என்ற பெரியபுராணப் பாடலுக்குத் துணைபோகும் வண்ணம் அமைந்துள்ளது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

'தொல்லை வேதம்' எனவும் 'அருமறை' எனவும் கூறப்பட்டவை பண்டைத்தமிழ் நான்மறைகளே' என்று கருதுவார் ப. இராமநாதப் பிள்ளை[1].

11. நளவெண்பாவின், கொள்ளிக்கும் பற்றாத கூர் இருள் (நள.111) என்ற கருத்தைப் போலவே, பாரதமாவிந்தத்தின், சூழுமிருள் அங்கியும் உருக்காணாதபடி (பா.மா.23) என்ற பாடலடி அமைந்துள்ளது.

12. கலிங்கத்துப் பரணியில்,

தீயவக் கொடிய கானகத் திரைதிறந்த,
வாய்தொறும் நுழைந்துதன்
சாயை புக்கவழி யாதெனப் பரிதி
தன்க ரங்கொடு திளைக்குமே (கலிங்.79)

என்ற பாலை வருணைனைப் பாடலைப் போன்று

காயு முதிர் வெங்கதிர் படத்தாழ் சேடர்பதி
காணவழி திறத்தா லேபுடவி (பா.மா.247)

என்ற பாரத மாவிந்தம் பாலை வருணனைப் பாடல் விளங்குகிறது.

13. ஆசிரியர் மரபிலில்லாத சில சொற்களைப் பயன்படுத்தியிருக்கிறார்.

விலைமாதரைக் குறிக்கும் வேசியர் என்ற சொல்லைப்போல் 'நேசியர்' (பா.மா.28) என்னும் சொல்லைப் படைத்திருக்கிறார்.

14. சோமன் சுருங்கச் சொல்லி விளங்கச் செய்வதில் வல்லவர். சிங்கத்தின் கதைச் சருக்கத்தில், இராமாயணக் கதை கூறும்போது, சீதையிடம் வந்த மான் பற்றிய நிகழ்ச்சியைச் சுருக்கமாகக் காட்டுகிறார் சோமன்,

அந்த மானி னழகினைக் கண்டவள்
வந்து வள்ளல்முன் கூறிட வள்ளலு
மிந்த மான்புதி தென்ன விளையவ
னுந்து மான்வரு மோவென வோதினான் (பா.மா. 462)

இந்த மான் நம்மை நோக்கி வருவதால் பொய்மான் என்று ஒரு வார்த்தையில் உண்மையைக் கூறினான் இலக்குவன். இந்த இடம் நயமிக்கது. கம்பர் பொய்மான் என்பதைப் பல பாடல்களில் விவரித்துக் கூறுவதை, இந்நூலாசிரியர் ஒரு பாடலில் நயமாகக் கூறுகிறார்.

இதுபோல், தன்மீது எய்யப்பட்ட அம்பைப் பார்த்த வாலி, இராமனிடம், 'மனு பரம்பரையில் பிறந்தவர்க்கு இது வெற்றி அன்று. சொல்லப் போனால், குரங்கின் பொருட்டுத் தருமம் விட்டுக் குரங்காகிய என்னிடம் நான் நினைவில்லாத சூழலில் உன் திறமையைக்

---

[1] தேவாரத் திருப்பதிகத் திரட்டு, ப. 308 .

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

காட்டினாய்' என்று மறைந்து நின்று அம்பெய்த இராமனின் தவறைச் சுட்டிக்காட்டும் இடம் நயமிக்கது.

பற்றி யம்பினைப் பார்த்தடல் வாலியும்
மற்று நேரின் மனுகுலந் தோன்றினார்
கொற்ற மன்றிது கூறிற் குரங்குடன்
வெற்றி காட்டினை யென்னினை வின்மையால் (பா.மா.473)

இராமனின் ஓர் அம்பால் ஆயிரம் அரக்கர்கள் அழிந்ததை,

ஆயி ரம்பெரு வெள்ளம ரக்கர்கள்
தீய மூல பெலத்தினர் சேர்ந்தபேர்
மேய ராகவன் வெற்றிவில் லொன்றினாற்
பேயும் நாயும் பெருவிருந் துண்டன (பா.மா.515)

கம்பர் பத்தாயிரம் பாடல்களில் பாடிய பெருங்காப்பியக் கதையைச் சிறிதும் சுவை குன்றாமல் 103 பாடல்களில் கதைக்கரு முழுமையும் அமைத்துக் கேட்டார் பிணிக்குந் தகையவாய் ஆசிரியர் சோமன் பாடியிருப்பதை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

15. திருமால் வாமனனாக குறுகிய வடிவில் வந்து, மாவெலியிடம் மூன்றடி மண் கேட்கும்போது, அவனது குலகுரு, 'இது மாயவன் மாய்கை ஈதல் நன்றல்ல' என்று தடுக்க முற்படுகிறார்.

ஈயென இரந்தோர்க்கு இல்லை யென்னாது கொடுத்தல் சான்றோர் பண்பு. எனவே, 'கேசவன் என்னிடம் வந்து இகழ்ச்சி இன்றி, மூன்றடி மண் கேட்டு இரந்திடுவான் என்றால், நான் அழிந்து போனாலும் நல்லது என்று நினைத்துத் தயக்கமின்றிப் பெற்றுக் கொள்' என்று கொடுக்கிறான் மாவெலி. இதை விளக்குகிறது கீழ்வரும் பாடல்.

கேச வனெனை வந்துமண் கேட்டுட
னேச லின்றி யிரந்திடு வானெனி
னாச மாயினு நன்றென வெண்ணியே
கூச லின்றிக் கொடுத்தனன் கொள்கென (பா.மா.418)

2.10 நூலின் செல்வாக்கு

பாரத மாவிந்தம் அது தோன்றிய காலத்தில் மக்களிடையே மிகவும் செல்வாக்குப் பெற்ற நூலாக இருந்திருக்கக் கூடும். பிற்காலத்திலும் அது பலராலும் கற்கப் பெற்றிருக்க வேண்டும்.

ஆசிரியர்,

பயிலும் பவளம் சுடர்பத்தி கொள்தூண்
உயரும் வயிடூரிய மொண் கனக (பா.மா.33)

என அத்தினபுரத்தை வருணித்திருக்கிறார். இதுபோல் பாரதியார் பாஞ்சாலி சபதத்தில் அத்தினபுரத்தை,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அத்தின புரமுண்டாம் இவ்வ வனியிலே அதற்கிணை யிலையாம்
பத்தியில் வீதிகளாம் வெள்ளைப் பனிவரை போறப்பல மாளிகையாம்
(பா.மா.7)

என வருணித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

கண்ணன் என் சேவகன் என்ற பாடலில் பாரதியார்,

நண்பனாய் மந்திரியாய் நல்லாசிரியனுமாய் (பா.மா.53,54)

என்று பாடியிருப்பதுபோல், வீமனும் அர்ச்சுனனும் கண்ணனை இழந்து வருந்தும்போது பாடும்,

தூதாகி மிக்க துணையாகித் தோழனாய் (பா.மா.148)

என்னும் பாடல் அமைந்துள்ளது. பாரதியார் இந்நூலை அறிந்து கற்றிருப்பார் என்று தோன்றுகிறது.

2.11 நூலாசிரியரின் மொழிப்பற்று, நாட்டுப்பற்று

ஆசிரியர் சோமனின் மொழிப்பற்று, அவர் தெள்ளு செந்தமிழ் (பா.மா.9) முத்தமிழடைவு (பா.மா.11) கலைத்தமிழ் (பா.மா.405) என்றெல்லாம் தீந்தமிழைப் புகழ்வதன் மூலம் புலப்படுகிறது. தமிழ்மொழிக்கென்று ஒரு வேதம் இருந்ததாக இவர் கூறியிருப்பதும் இங்கு நினைக்கத்தக்கது.

கலைத் தமிட்கு உரிய நான்மறை (பா.மா.405)

துரோபதி சிவபெருமானைத் துதிக்கும்போது, தமிழ்நாட்டிலுள்ள சிவத் திருத்தலங்களின் பெயர்களையே முதலில் கூறித் துதித்ததாகப் பாடியிருக்கிறார். (பா.மா.310). ஆசிரியர் வட நாட்டில் நிகழ்ந்த கதையைக் கூறினும் தென்னாட்டிலுள்ள இடங்களைக் குறிப்பிடுவது அவருடைய நாட்டுப்பற்றைப் புலப்படுத்துகிறது.

சோமனுடைய பாடல்களில் சிறந்த கற்பனை, நடைச்சிறப்பு, உணர்ச்சி, பக்திச் சுவை போன்றவை காணப்படுகின்றன. அவை வருமாறு:

2.12 சிறந்த பாடற் பகுதிகள்

1. கற்பனை

நீலமுஞ், சிறந்த நளினமுங், குமுத நெய்தலு, மாம்பலும் நெருங்கி[1]
மேலுறை யன்னத் திரள்களுஞ், செங்காற் வெண்குருகினங் களுமேவிச்

[1] கருங்குவளை மலர்களும், சிறந்த தாமரையும், குமுதமும், நெய்தலும் ஆம்பலும் நெருங்கி விளங்க, நீரின்மேல் தங்கி இருக்கும் அன்னப்பறவைகளின் கூட்டமும், சிவந்தகால்களை உடைய வெண்மையான நாரைகளும் சேர்ந்து, சோலையில் வண்டுகளும், அன்றில் பறவையின் இனமும் அதனைச் சுற்றியுள்ள இடங்களில் பொருந்த, மிகவும் குளிர்ச்சியான பொய்கை.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சோலையின் சுரும்பும், அன்றிலின் குலமுஞ் சுற்றெலா முற்றியே துன்றிச்
சாலவுங் குளிர்ந்த பொய்கையை நாடித் தம்பியர்க் குருகினன் றருமன்.
(பா.மா.641)

என்ற பொய்கை வருணனைப் பாடலும்,

காயுமுதிர் வெங்கதிர் படத்தாழ் சேடர்பதி
காணவழி கண்டுள திறத்தாலே புடவி
யாயது கிழிந்துசரு குற்றே நீவியெதி
ராகிய கரிந்து புகையைத்தான் மாகமிசை
போயமுகி லுறிஞ்சிவ ரிடைச்சூ ரராயகொடி
போமிட நினைந்துருக வெப்ப ரானபல
தீயரசெ னுங்கடவு ளர்க்கே யேயதொரு
சீர்நகரெ னுங்கன திறல்சேர் பாலையதின் (பா.மா.247)

என்ற பாலை வருணைனைப் பாடலும் சிறந்த கற்பனைப் படைப்பு.

2. நடைச்சிறப்பு

பாடல்கள் ஆற்றொழுக்காக அமைந்திருப்பதை,

எண்வளர்ந்த சிந்தையர்க்கு மெட்டா வரும்பொருளாய்
விண்வளர்ந்த தென்ன விளங்கும் கருமுகிலைப
பண்வளர்ந்த வேதப் பரஞ்சுடரைப் பாற்கடலிற்
கண்வளர்ந்த கோலத்தைக் கண்ணாரக் கண்டனமால்
(பா.மா.128)

என்ற பாடல் காட்டுகிறது.

3. உணர்ச்சி

ஆசிரியர் உணர்ச்சி மிக்க பாடல்களைப் படைத்துக் தருவதிலும் வல்லவர் என்பதற்கு,

அணைத்திடு மெடுக்கு மரற்றுமா தரிக்கும்
மருண்டுடல் புரண்டிடு மருளின்,
துணைத்தன் முகத்தை முகத்துட னழுத்துந்
துய்யதாள் முடியினிற் சூட்டும .... (பா.மா.610)

மலைந டுங்கின் மாதிர யானைகள்
நிலை நடுங்கின நீடிய சேடனும்
தலை நடுங்கினன் தாழ்கட லென்றுள
அலை நடுங்கின வீமன திர்ப்பினால் (பா.மா.365)

என்ற பாடல்கள் தக்க சான்று.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

4. பக்திச்சுவை

இந்நூலில் இடம்பெறும் துதிப்பாடல்கள் அனைத்தும் பக்திச்சுவை ததும்பத் திகழ்கின்றன என்பதற்குக் கீழ்வரும் பாடல் சான்றாக விளங்குகிறது.

அமலனே போற்றி! அத்தனே போற்றி!
அச்சுதா னந்தனே போற்றி!
நிமலனே போற்றி! நின்மலர் போற்றி!
நீலியாம் பேய்முலை யருந்தும் ... (பா.மா.586)

பாடல்கள் அனைத்தும் எளியநடையில் அமைந்துள்ளன. ஆசிரியரின் முந்துநூல் புலமையாலும், முன்னோர் மொழி பொருளாலும், சொல்லாலும், இலக்கியச் சிறப்புக்களாலும் பாரத மாவிந்தம் என்னும் இந்நூல் சிறந்து விளங்குகிறது.

◆ **நிறைவுரை:** மேலே கூறியவற்றிலிருந்து நூலாசிரியரின் பெயர், குலம், சமயம், நாடு, காலம், நூலைச் செப்பம் செய்தவர் பெயர், அவரது தந்தை பெயர், குருவின் குலம், சமயம், அவரது நுண்ணறிவு முதலியவை குறித்து நன்கு உணரமுடிகிறது. பாடல்கள் அனைத்தும் எளிய நடையில் அமைந்துள்ளன. ஆசிரியரின் முந்துநூல் புலமையாலும், முன்னோர் மொழி பொருளாலும், சொல்லாலும், இலக்கியச் சிறப்புக்களாலும் பாரத மாவிந்தம் சிறந்து விளங்குகிறது.

****

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

3. பாரத மாவிந்தம் கதைச்சுருக்கம்

(பாரதமாவிந்தம் பாயிரத்தில் தொடங்கித் திருநாட்டுச் சருக்கம் முதல் கருடனைக் கண்ட சருக்கம் ஈறாக ஏழு சருக்கங்கள்[1] கொண்டது. இதன் மொத்தப் பாடல்கள் மிகையான பாடல்கள்[2] உட்பட 760 ஆகும்).

3. பாயிரம் (1-21)

பாயிரத்துள் நூலாசிரியர் சோமன் விநாயகரை வணங்குகின்ற செய்தி முதற்கண் பொதுக்காப்பாக அமைந்துள்ளது. பின்னர், அவர் சிவபெருமான், பார்வதி, விநாயகர், முருகப் பெருமான், திருமால், திருமகள், கலைமகள் ஆகியோரின் திருவடிகளையும் நூல் காப்பாகத் துதிக்கின்றார். அதன் பின்பு நாயன்மார் நால்வரையும் போற்றுகின்றார். இறுதியில், குருவணக்கம், நூல் நுவல்பொருள், அவையடக்கம் முதலியவை நூலில் இடம்பெற்றுள்ளன.

வில்லிபுத்தூரர் பாரதக்கதையைத் தமிழில் இயற்றிப் பாரதப்போர் முடிந்து தருமன் முடிசூடியதுவரை பாடியுள்ளார்; பாண்டவர்கள் வைகுண்டம் சென்ற கதையைப் பாடவில்லை. அந்தக் கதைப்பகுதியைப் பாடுவதாக ஆசிரியர் சோமன் குறிப்பிடுகின்றார். இவர் எழுதிய நூல் செல்லரித்துப் போனதால் 'ஈசுரப்பட்டன்' என்பவர் மகன், 'விநாயகன்' அந்நூலின் உரை வழியே பாடலைச் செப்பம் செய்து தருவதாகப் பாயிரத்தின் இறுதிப் பாடல் கூறுகிறது(பா.மா. 21).

3.1 திருநாட்டுச் சருக்கம் (22-76)

பாரதக்கதையின் இறுதி மூன்று பருவங்களின் கதைப்பகுதியே பாரத மாவிந்தத்தின் கதைக்கரு. பாண்டவர்களின் வைகுண்ட யாத்திரை கதையைக் கேட்பதற்கான சூழல், எவ்வாறு ஏற்படுகிறது என்பதை மிகப் பொருத்தமான ஒரு உட்கதையைப் படைத்துத் தந்து அதன் மூலம் விளக்கியிருப்பது ஏற்புடையதாக அமைந்துள்ளது.

திருநாட்டுச் சருக்கத்தில், முதற்கண் கங்கையின் தோற்றமும் அதன் சிறப்பும், பின்னர் அந்நதி பாயும் குருநாட்டின் வளமும், அதன் தலை நகரமான அத்தினபுரியின் அழகும் வருணிக்கப்பட்டுள்ளன. அதைத் தொடர்ந்து அத்தினபுரியை ஆண்ட அர்ச்சுனன் மகன் அபிமன்னனின் பெருமை, அவனுடைய மகன் பரீட்சித்தின் சிறப்பு, பின்னர் பரீட்சித்தின் மகன் சனமேசயன் ஆட்சிபுரிந்ததன் மேன்மை முதலியவற்றை ஆசிரியர் விவரிக்கின்றார்.

சனமேசயன் தன் நாட்டை ஆண்டு வரும்பொழுது, ஒருநாள் வியாச முனிவர் அவனுடைய சபைக்கு வருகை தருகின்றார். அவன் அவரிடம், பாண்டவர்கள் காடு சென்றதற்கான காரணம், பாண்டவர்களுக்கு நேரவிருந்த இடர் முதலியவற்றை அவர்களிடம் முன்பே கூறாததன் காரணம் என்ன என்று வினவினான். அப்போது அவர் முற்பிறப்பில் செய்தவினை முதுமையில் சூழும் என விடையளித்து, அவனுக்கு (சனமேசயனுக்கு) பிரம்மகத்தி[3] தொடரப் போவதாக எச்சரித்து, அதை நீக்க முற்படுமாறு கூறிச் சென்றார்.

நாள்கள் சில சென்றன. சனமேசயன் ஒரு யாகம் நடத்தினான். அந்த யாகத்தை நடத்திய அந்தணர்களில் ஒருவன் மந்திரம் உச்சரிக்காமல் துயிலில் ஆழ்ந்தான்; துயிலில் புலி ஒன்று அவன் மீது பாய்வது போல் கனவு கண்டான். சனமேசயன் தர்ப்பைப் புல்லால்

---

[1] பாயிரம் -21 பாடல்கள், திருநாட்டுச் சருக்கம் -55 பாடல்கள், துவராபதிச் சருக்கம்-21 பாடல்கள், துருவாசச் சருக்கம்-59 பாடல்கள், அத்தினாபுரிச் சருக்கம்-80 பாடல்கள், துரோபதி மோட்சம் பெற்ற சருக்கம்-79 பாடல்கள், சிங்கத்தின் கதைச் சருக்கம்-208 பாடல்கள், கருடனைக் கண்ட சருக்கம்-227 பாடல்கள்.

[2] அடிப்படையாகக் கொண்ட சுவடியில் இல்லாத பிறசுவடிகளில் காணப்படும் மிகையான பாடல்கள்.

[3] அந்தணனைக் கொன்ற பாவம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அந்தணனைத் தீண்டித் துயில் எழுப்ப முயன்றான்; (அந்தணன்) தர்ப்பைப் புல் தன் கையில் பட்டதும், கனவில் கண்ட புலி தன் மீது பாய்வதாக அஞ்சி இறந்துவிட்டான். முனிவர் எச்சரித்ததுபோல் பிரம்ம கத்தி தன்னை வந்தடைந்ததை நினைத்து சனமேசயன் மனம் கலங்கினான். அப்போது வியாச முனிவர் அவன் முன் தோன்றி அந்தணனைக் கொன்ற பாவம் நீங்கப் பாண்டவர்கள் வைகுண்டம் சென்ற கதையைக் கேட்கும்படி அறிவுறுத்தினார்.

தருமன் அறம் ஓங்குமாறு தன் நாட்டைச் சிறப்பாக ஆண்டு வந்தான். அப்போது துவாபரயுகம் முடிந்து கலியுகம் பிறந்தது உலகில். கண்ணன், வைகுண்டம் செல்ல எண்ணினார். ஆகையால் தன் பாம்பணையாம் பலராமரைப் பாற்கடலில் சேருமாறு கூறியதற்கேற்பப் பலராமன் பாற்கடலில் சென்று பாம்பணையாக மாறினார்.

3. 2 துவராபதிச் சருக்கம் (77-97)

கண்ணன் பாண்டவர்களைத் துவாரகைக்கு அழைத்து வருமாறு ஒரு தூதரை ஏவினார். தருமன் அவருடைய அழைப்பை ஏற்றுத் தன் தம்பியரோடு துவாரகையை அடைந்தான். கண்ணன் அவர்களிடம் கலிகாலத்தின் வரவையும் அதன் இயல்பையும் குறிப்பிட்டு, தாம் வைகுண்டம் செல்ல எண்ணியிருப்பதை அவர்களுக்கு உரைத்தார். பாண்டவர்களுக்கேற்பட்ட வீரரைக் கொன்ற பாவம் நீங்க, அவர்களை வைகுண்டம் செல்லுமாறு கூறினார். தருமன் கண்ணனருளால் தான் நாடாளும் தகுதி பெற்ற நிலையை அவரிடம் எடுத்துரைத்தான். இதைக் கேட்ட கண்ணன் பாண்டவர்களிடம் சிலகாலம் நாட்டை ஆண்ட பின்பு, பரீட்சித்துக்கு முடிசூட்டி, குந்தியை அவனிடம் இருக்கச் செய்து, தம்பியர், மனைவி ஆகியோருடன் வைகுண்டம் செல்லுமாறு அறிவுரை கூறினார். தருமன் அவரிடம் விடைபெற்றுத் தம்பியருடன் அத்தினபுரம் சென்றான்.

3. 3 துருவாசச் சருக்கம் (98-156)

துர்வாச முனிவர் கண்ணனைக் காண்பதற்காகத் துவாரகைக்குச் சென்றார். அங்குள்ள யாதவ மைந்தர்கள், தங்களில் ஒருவனைக் கர்ப்பிணிப் பெண்போல் வேடமிட்டனர்; துர்வாச முனிவரிடம் சென்று அப்பெண்ணுக்கு என்ன குழந்தை பிறக்கும் என்று கேட்டனர். அவர் அதைக் கேட்டு வெகுண்டு யாதவ குலத்தை அழிக்க இரும்புலக்கை பிறக்கும் என்று சாபமிட்டார். அவர் கூறியதுபோல் அக்கணமே இரும்புலக்கை பிறந்தது. அனைவரும் அதைக் கண்டு அஞ்சி, அவ்வுலக்கையை எடுத்துச் சென்று கண்ணனிடம் காட்டினர். அவர் அதைப் பொடியாக்கிக் கடலில் இடுமாறு கட்டளையிட்டார். அவ்வண்ணமே அவர்கள் செய்தனர்; எஞ்சியிருந்த சிறிய இரும்புத் துண்டையும் கடலில் எறிந்தனர். கடலில் உள்ள ஒரு மீன் அவ்விரும்புத் துண்டை விழுங்கியது. அம்மீன் ஒரு மீனவரின் வலையில் அகப்பட்டது. மீனவன் அம்மீனை ஒரு வேடனுக்கு அளித்தான். வேடன் அம்மீனின் வயிற்றிலிருந்த இரும்புத்துண்டை எடுத்துத் தன்னுடைய அம்பின் நுனியில் வைத்து அறைந்தான்.

யாதவர்கள் கடலில் இட்ட இரும்புப்பொடி, கடற்கரையில் வாட்கோரையாக முளைத்தது. யாதவர்கள் அக்கோரையைப் பிடுங்கி விளையாடினர்; அக்கோரை உடம்பில் பட்ட இடமெல்லாம் வாள் கொண்டு வெட்டியதுபோல் வெட்டுண்டு இறந்தனர். இதையறிந்த கண்ணன் துர்வாச முனிவரின் சாபம் பலித்ததை எண்ணி, ஓர் ஆலமர நிழலில் யோகநெறியில் இருந்தார். அங்கு வந்த வேடன் அவருடைய கால்விரலின் அசைவை மான் என்று கருதி அம்பெய்தான்; அவ்வம்பு கண்ணனின் கால்விரலில் தைத்ததைக் கண்ட வேடன் தன் தவற்றை உணர்ந்து, அச்சத்தால் நடுங்கினான். அவர் அதைக் கண்டு, அவனால் ஏற்பட்டதன்று முன்பு உள்ள சாபத்தால் அங்ஙனம் நிகழ்ந்தது என்று கூறி அவனைத் தேற்றினார். அவர் வேடனிடம் அத்தினபுரம் சென்று வீமனையும் அர்ச்சுனனையும் அழைத்து வருமாறு பணித்தார். அவன்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அவ்வண்ணமே இருவரையும் அழைத்து வந்தான். அவர்கள் கண்ணனின் நிலையைக் கண்டு கலங்கி அழுதனர். அவர், தாம் வைகுண்டம் சேரப் போவதைக் குறிப்பிட்டு, பாண்டவர்களையும் வைகுண்டம் செல்லுமாறு கூறினார். துவாரகையிலுள்ள மகளிரையும், நிதியையும் அத்தினபுரத்தில் கொண்டு சேர்க்கும்படி கட்டளையிட்டு, அவர் வைகுண்டம் அடைந்தார். கண்ணன் பரமபதம் அடைந்ததும், அர்ச்சுனன் அவருக்கு இறுதிக் கடன் கழித்தான்.

இந்நிகழ்ச்சிக்குப் பின் வீமனும் அர்ச்சுனனும் துவாரகையிலுள்ள மகளிருடன் நிதி, சேனை முதலியவற்றை எடுத்துக்கொண்டு அத்தினபுரம் நோக்கிச் சென்றனர். அதன் பின்னர் துவாரகை[1] மோழையால் அழிந்தது. அவர்கள் சென்ற வழியில் வனவேடர்கள் அவர்களுடைய பொருட்களைச் சூறையாடினர். இருவரும் தங்கள் ஆயுதங்களைப் பயன்படுத்தும் வலிமையின்றி நின்றனர். மக்கள் தங்கள் பொருள்களை வேடர்களிடம் பறிகொடுத்துவிட்டு அத்தினபுரம் அடைந்தனர். வீமனும் அர்ச்சுனனும் கண்ணன் வைகுண்டபதம் அடைந்ததையும், தங்களுக்கு வழியில் ஏற்பட்ட இன்னல்களையும் தருமனிடம் விவரித்தனர். தருமன், குந்தி, துரோபதி ஆகியோர் கண்ணனின் முடிவைக் கேட்டுத் துயரில் ஆழ்ந்தனர்.

3.4 அத்தினபுரிச் சருக்கம் (157-236)

அத்தினபுரியில் வாழ்ந்த இரு அந்தணர்கள் தமக்குள் வழக்கிட்டுத் தருமனின் அரண்மனையிலுள்ள முரசை அறைந்தனர். காவலர்கள் முரசொலித்ததைக் கேட்டு, அச்செய்தியைத் தருமனிடம் தெரிவித்தனர். தருமன் அவர்கள் வழக்கைக் கேட்டான். இருவரில் ஒருவன் மற்றவனின் வறுமைநிலை கண்டு அவனுக்கு நன்கொடையாகச் சிறிது நிலம் அளித்தான். நிலம் பெற்ற அந்தணன் அந்நிலத்தில் ஒரு நிதியைக் கண்டெடுத்தான்; அந்நிதியைத் தனக்கு நிலம் கொடுத்த அந்தணனிடம் கொடுத்தான். நிலம் அளித்தவன் அந்நிதியைப் பெற்றுக்கொள்ள மறுத்தான், நிலம் அளித்த போதே அதில் உள்ள நிதியும் நிலம் பெற்றவனுக்கே உரியது என்றான். நிலம் பெற்ற அந்தணன் தான் நிலம் மட்டுமே பெற்றதாகவும் அதில் உள்ள நிதி தனக்குரியதன்று என்றும் எதிர்வழக்காடினான். தருமன் இவ்வழக்கைக் கேட்டுத் தன் அமைச்சர்களிடம் அதைத் தீர்த்துரைக்கப் பணித்தான்; ஐந்து நாட்கள் கழிந்த பின்னர் நீதி வழங்குவதாக அவர்கள் கூறினர்.

அப்பொழுது துவாபரயுகம் முடிந்து கலியுகம் பிறந்தது. உலகில் அறம் நீங்கி மறம் ஓங்கியது. முன்பு தருமனிடம் வந்து வழக்குரைத்த இரு அந்தணர்களும் வழக்கிட்டபடி மீண்டும் வந்தனர். நிலம் கொடுத்தவன் நிலத்தை மட்டுமே அளித்தேன், அதில் உள்ள நிதியைக் கொடுக்கவில்லை, அந்நிதி தனக்கே உரியது என்று முன்பு கூறியதற்கு மாறாக உரைத்தான். நிலம் பெற்றவன், நிலம் தனக்கு அளித்த பொழுதே அதில் காணப்படும் நிதியும் தனக்கே உரியதென்று கூறினான். தருமன் கலியுகத்தின் வருகையால் அந்தணர்களின் மனம் மாறியதை உணர்ந்து, நாட்டை ஆள்வதைவிட வைகுண்டம் செல்வதே நல்லதென்று உணர்ந்தான்.

கண்ணன் முன்பு கூறியதற்கேற்பப் பாண்டவர்களின் பேரனும் அபிமன்னுவின் மகனுமான பரீட்சித்துக்குத் தருமன் முடிசூட்டினான்; பின்பு குந்தி, காந்தாரி, பரீட்சித்து ஆகியோரிடம் விடைபெற்றுத் தருமன் தம்பியரோடும் துரோபதியோடும் அத்தினபுரத்தை விட்டு நீங்கினான். அவர்கள் சென்ற வழியில் ஒருவன் தன்னுடைய தாயின் தலையில் பெரிய

[1] பூமியின் கீழ் உள்ள ஆறு.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சுமை ஒன்றை எடுக்கச் செய்து, மனைவியின் கையைப் பிடித்து அழைத்து வந்ததைக் கண்டனர். தருமன் இதைக் கண்டு அது கலிகாலத்தின் செயல் என்று கருதி முக்காலமும் உணர வல்லவனான சகாதேவனின் முகம் நோக்கி நகைத்தான்.

3. 5 துரோபதி மோட்சம் பெற்ற சருக்கம் (237-315)

பாண்டவர்களும் துரோபதியும் பாலை நிலத்தின் வழி வைகுண்டம் நோக்கிச் சென்றனர். தருமன் தன் தம்பியர் துரோபதி ஆகியோரின் உண்மையான மனநிலையை அறிய எண்ணினான்; அவர்களைப் பார்த்து மீண்டும் அத்தினபுரம் செல்லும்படி கூறினான். அவர்கள் அதற்கு இசையவில்லை.

அவர்கள் சென்ற வழியில், காட்டில் இருந்த ஆனைமுகன் தருமனிடம் தம் நாட்டை ஆளுமாறு வேண்டினார். தருமன் அதற்கு உடன்படவில்லை. அவர், வைகுண்டம் செல்வதற்குரிய வழியை பாண்டவர்களுக்குக் காட்டியருளினார்.

பாண்டவர்கள் காட்டில் சென்றபோது, மேகநாதன் என்னும் கந்தர்வனைக் கண்டனர். அக்கந்தர்வன் தன்னுடன் போர் செய்யுமாறு பாண்டவர்களை அழைத்துத் துரோபதியைத் தூக்கிச் செல்ல முயன்றான். வீமன் அவனிடமிருந்து துரோபதியைக் காப்பாற்றினான்; பின்பு வீமன் அவனோடு போரிட முற்பட்டான். புனித பயணம் மேற்கொள்ளும்போது போர் செய்யலாகாது என்று கருதிய தருமன் வீமனைத் தடுத்தான். பின்னர் அவர்கள் அங்கிருந்த இராச முனிவரிடம் சென்றனர். அப்போது அங்கு நீராட வந்த நாகமங்கையர் பாண்டவர்களைத் தம் இருப்பிடத்திற்கு வருமாறு அழைத்தனர். தருமன் அவர்கள் அழைப்பை மறுத்துத் திருமாலின் திருவடியே தமக்குத் துணை என மொழிந்தான்.

அதன் பின்பு பாண்டவர்கள் சத்திய முனிவரைக் கண்டு, அவரிடம் வைகுண்டம் செல்வதற்குரிய வழியைக் கேட்டறிந்தனர். அவர்கள் சென்ற வழியில் கிடந்த, 'முகுந்தன்' என்ற மலைப்பாம்பு ஐவரையும் விழுங்கியது. வீமன் அப்பாம்பை உதைத்தான். அது உடனே அந்தணனாக மாறித் தன் சாபம் வீமனால் விலகியது என்றுரைத்தது.

'வித்தியாதரன்' என்பவன் பாண்டவர்கள் சென்ற வழியில் மலை உருவில் கிடந்தான். வீமன் அம்மலையை உடைத்தபோது, அது மனித உருவம் பெற்றுத் தனக்கு நேர்ந்த சாபம் வீமனால் நீங்கியது என்று கூறி அங்கிருந்தகன்றான். மேலும், அங்கு வந்த குதிரை முகம் கொண்ட ஒரு பெண் அர்ச்சுனனைத் தழுவினாள்; தழுவியதன் பலனாக (அவள்) பெண்ணாக மாறித் தனக்கேற்பட்ட சாபம் அர்ச்சுனனால் விலகியது என்று குறிப்பிட்டு அங்கிருந்த கன்றாள்.

அதன்பின் பாண்டவர்கள் அக்காட்டிலுள்ள, 'மாலி' என்னும் ஆற்றைக் கடக்க நேரிட்டது. அவர்கள் ஆற்றைக் கடந்தவுடன், அந்த ஆறு அழகிய பெண்ணாக மாறிப் பாண்டவர்களின் வரவால் தன் சாபம் நீங்கியது என்று குறிப்பிட்டாள்.

தருமன் துரோபதியின் இறுதிக்காலம் நெருங்குவதை அறிந்து, சிவபெருமானைத்[1] துதிக்குமாறு அவளிடம் கூறினான். அவள் அவ்வாறே வணங்கி வைகுண்டம் சேர்ந்தாள்.

1

...தருமன் சிவபதம்
பொருந்த லாகும் புராந்தகன் பொற்கழல்
தெரிந்த நாமத்தைச் சிந்தையிற் செய்கெனா
விந்த மீது விமானத்தி லேற்றவே (பா.மா307)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பாண்டவர்கள் அவளுக்குரிய இறுதிக்கடன் செய்தனர். வீமன் தருமனிடம் துரோபதி இக்காட்டில் இறந்ததற்கான காரணம் என்ன என்று வினவினான். அவள் ஐவருக்கு மனைவியாக இருந்தும் அர்ச்சுனனிடம் மிகுந்த அன்பு கொண்டமையால், முதலில் உயிர் நீத்தாள் என்று தருமன் மொழிந்தான். பின்பு அவர்கள் வடதிசையில் உள்ள குத்திரம் என்னும் வனத்தை அடைந்தனர்.

3.6 சிங்கத்தின் கதைச் சருக்கம் (316-523)

பாண்டவர்கள் குத்திரவனத்தில் ஒரு சிங்கத்தின் குகையை அடைந்தனர். அங்கு வசிக்கும் ஒரு சிங்கம் அவர்களைக் கவ்வியது. வீமன் அதன் வாயைக் கிழித்தான். உடனே அது அந்தணனாக மாறித் தனக்கேற்பட்ட சாபம் தருமனால் நீங்கியது என்று கூறியது.

பின்பு, பாண்டவர்கள் ஏன முனிவரிடம் சென்றனர். அவர் வைகுண்டம் செல்லும் வழியை அவர்களுக்குக் காட்டினார். வழியில் அவர்கள் முன்பாக ஓர் அரக்கி தோன்றினாள். ஐவரும் அரக்கியின் வாயில் புகுந்ததும் அவள் அழகிய பெண்ணாக மாறித் தருமனால் சாபம் விலகியது எனக்கூறிச் சென்றாள். பின்னர் அவர்கள் துர்வாச முனிவரிடம் சென்றனர். அவர் அவர்களுக்குத் திருக்கேதாரம் செல்லும் வழியைக் காட்டியருளினார். அவர்கள் அவ்வழியே செல்லுங்கால், 'கயிலாயன்' என்ற அரக்கனைக் கண்டனர். அவன் ஐவரையும் விழுங்கினான். அவ்வரக்கன் கொட்டாவி விடும்போது, பாண்டவர்கள் அவனுடைய வாய்வழியே வெளியில் வந்தனர். இந்நிலையில் வீமன் வழிநடைத் துன்பம் தொலையக் கதை கூற வேண்டுமென்று தருமனிடம் வேண்டினான். தருமன் கதை கூறலானான்.

3.6.1 கண்ணன் ஆலிலையில் துயிலல் (373-385)

பிரம்மா, விஷ்ணு, சிவபெருமான் ஆகிய மூவரும் தம்மாலன்றி வேறு யாராலும் உலகைப் படைத்துக் காக்க இயலாதென்று எண்ணித் தத்தமக்குள் பெருமை கொண்டனர். சிவபெருமான் உலகை அழிப்பேன் என்று கூறினார். விஷ்ணு பதினான்கு உலகங்களையும் தம் வயிற்றினுள் அடக்கி ஆலிலையில் துயின்றார். அதைக் கண்ணுற்ற சிவபெருமான் அவரிடம் சென்று, அவர் உண்டவற்றை உமிழுமாறு உரைத்தார். அங்கு அவர் பதினான்கு உலகங்களையும் கண்டார். பின்னர் இருவரும் தத்தம் இருப்பிடம் சென்றனர்.

3.6.2 பாற்கடல் கடைதல் (386-391)

சிவபெருமான் கயிலாயமலையில் இருந்தபோது, தேவர்கள் ஒருபுறமும் வாலி ஒருபுறமுமாக நின்று பாற்கடலைக் கடைந்தனர். மந்தரமலை சுழன்றது. கயிறாக இருந்த வாசுகி என்னும் பாம்பு விடத்தைக் கக்கியது. தேவர்கள் விடத்தைக் கண்டு அஞ்சிச் சிவபெருமானிடம் முறையிட்டனர். அவர் அவ்விடத்தை எடுத்துத் தம் கழுத்தில் வைத்தார்.

3.6.3 முப்புரம் எரித்தல் (392-402)

தேவர்கள் சிவபெருமானிடம் முப்புரங்களைக் கொண்ட மூன்று அசுரர்கள் செயலால் மூவுலகும் அழிகின்றன என முறையிட்டனர். சிவபெருமான் முப்புரத்தவர் செய்த சிவபூசையின் நன்மையை ஒழித்தால், அவர்களை அழிப்பதாகக் கூறினார். தேவர்கள் அதைத் திருமாலிடம் கூறினர். திருமால் முப்புரத்தவர்களின் மனநிலையை அறிய வேண்டிப் புத்தராக வேடமிட்டு ஓர் அரசமரத்தின் கீழ் அமர்ந்திருந்தார். அசுரர்கள் அவரிடம் சென்று அவர்

வந்து வைகுண்டஞ் சேர்ந்தனள் மங்கையே. (பா.மா.311)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அமர்ந்திருக்கும் அரசமரத்தை அழித்து மீண்டும் அதை முளைக்கச் செய்தால் அவரை இறைவனாக ஏற்றுக் கொள்வதாக உறுதியளித்தனர். அவர் முப்புரத்தவர் சொன்னதுபோல் செய்து காட்டி, அவர்களை மாயப் புத்தராகும்படி உரைத்தார். முப்புரத்தவர்களில் இருவர் அது திருமாலின் மாயம் என்று உணர்ந்தனர். அவ்விருவரைத் தவிர ஏனையோர் சிவபூசையைக் கைவிட்டனர். எனவே சிவபூசையின் பலன் குறைந்தது. சிவபெருமானின் வரத்தின் பயனால் முப்புரம் அழியாதிருந்தது. முப்புரத்தார் திருமாலின் மாயையில் ஈடுபட்டனர் என்றெண்ணிச், சிவபெருமான் நகைத்தார். திரிபுரம் ஒரு நொடியில் எரிந்து சாம்பலனது.

3.6.4 பிரகலாதன் கதை (403-411)

இரணியன் என்பவன் மரணம் என்பது இன்றித் தன் பெயரே உலகில் நிலைபெறும்படிச் செய்தான். தேவர்கள் திருமாலிடம் சென்று அவன் செய்யும் அழிவைக் கூறினர். இரணியனின் மகன் பிரகலாதன். பிரகலாதனின் ஆசிரியர் அவனிடம், 'இரணியாய நம' என்றுரைக்கும்படிக் கூற அவன், 'ஓம் நமோ நாராயணாய' என்றுரைத்தான். அதை விரும்பாத இரணியன் பிரகலாதனுக்கு விடம் கொடுத்துத் துன்புறுத்தியபோதும் அவன் நாராயணரின் பெயரையே மொழிந்தான், இரணியன் அவனிடம், 'நாராயணரைத் இத்தூணிடைக் காட்டு' என்று சொல்லித் தூணை அறைந்தான். திருமால் நரசிங்கர் உருவில் அங்குத் தோன்றி அவனைக் கொன்றார்.

3.6.5 மாவெலிக் கதை (412-420)

ஓர் எலி திருமறைக்காட்டில் உள்ள சிவன்கோயில் விளக்கில் நெய் குடிக்க வந்தது; அது நெய் குடிக்கும்போது அங்கு அணையும் நிலையில் இருந்த விளக்கின் தீச்சுடர் எலியின் மூக்கில் பட்டது; எலி மூக்கை உதறியதால் விளக்கின் திரி தூண்டப்பட்டு, அது சுடர்விட்டு எரியத் தொடங்கியது. ஆகையால் சிவபெருமான் மனம் மகிழ்ந்து எலிக்கு மண்ணுலகை ஆளும் வரமருளினார். அந்த எலி அசுரர் குலத்தில் மாவெலி என்னும் அரசனாகத் தோன்றியது. மாவெலி உலகை நல்லவண்ணம் ஆண்டு வந்தான். தேவர்கள் மாவெலி செய்த கொடுமையால் வருந்தித் திருமாலிடம் முறையிட்டனர். திருமால் தேவர்களின் குறை நீக்க நினைத்து மாவெலி செய்த வேள்விக்கு வாமன பிரம்மச்சாரியாகச் சென்றார். அவர் அவனிடம் மூன்றடி மண் யாசித்தார். மூன்றடி மண் தானே என நினைத்து, மாவெலி திருமால் கேட்டதைக் கொடுக்க முற்படும்போது, அவர் திரிவிக்கிரமனாக மாறினார். பகைவர் உலகை ஓரடியாகவும், இம்மண்ணுலகை மற்றோரடியாகவும் அளந்தார், மூன்றாமடிக்கு இடமின்றித் திகைத்து, மாவெலியின் தலையில் காலை வைத்து அவனைப் பாதாள உலகில் தள்ளினார்.

3.6.6 இராமவதாரம் (421-523)

மூவுலக மக்கள் எல்லோரும் திருமாலிடம் சென்று இராவணன் செய்யும் தீங்கைக் கூறினர். அவர் தேவர்களைக் குரங்கினமாகப் பிறக்கச் செய்தார்; தாம் தசரத மன்னனின் மகனாக அவதரித்தார். கைகேயி தசரதனிடம் கேட்ட வரத்தால் இராமன் தன் மனைவி சீதை, தம்பி இலக்குவன் ஆகியோருடன் காட்டிற்குச் சென்றான்.

காட்டில் இராம இலக்குவர் இல்லாத நேரம் பார்த்து இலங்கை மன்னன் இராவணன் சீதையைத் தூக்கிச் சென்றான். காட்டில் சுக்ரீவன், அனுமன் ஆகியோரின் நட்பு இராமனுக்குக் கிடைத்தது அவர்கள் உதவியால் இராவணனுடன் இராமன் போரிட்டான். போரில் இராவணன் மாண்டான். இராவணனின் தம்பி விபீடணனை அந்நாட்டுக்கு மன்னனாக்கினான் இராமன். பின்னர் அவன் இலங்கையிலிருந்து சீதையை மீட்டு

Digitization by Hindu-Heritage-Foundation of America HHFA(USA)

அயோத்திக்குச் சென்றான். மேலும் இறைவனின் பெருமையைப் பகரும் பல கதைகளைத் தம்பியருக்கு விவரித்தான் தருமன்.

3.7 கருடனைக் கண்ட சருக்கம் (524-750)

தருமன், திருமாலின் பெருமைகளைக் கூறும் பாகவதக் கதைகளைத் தம்பியர்க்கு உரைக்கலானான். அவை, கண்ணன் சகடாசுரனைக் கொன்றது; பூதனையின் உயிர் உண்டது; மருதமரம் பிளந்தது, விளாமரத்தில் கன்றை மோதியது; பாம்பின் மீது நர்த்தனம் ஆடியது போன்றனவாகும்.

திருமால் பாண்டவர்களின் மனநிலையை அறிந்து வருமாறு கருடனை அனுப்பினார். கருடன் அன்ன வடிவெடுத்து அவர்களிடம் சென்றது. அந்த அன்னம் பாண்டவர்களைப் பார்த்து, 'நீவிர் காட்டில் இங்ஙனம் அல்லலுறுவதைவிட அத்தினபுரம் சென்று அரசாள்வதே நல்லதென்று' கூறியது. தருமன் தங்களுக்குரிய இடமும், செல்வமும் திருமாலே என்று மொழிந்தான். தருமனின் மனநிலையை அறிந்த (அன்ன வடிவிலிருந்த) கருடன் அதைத் திருமாலிடம் கூறியது. அவர் பாண்டவர்களைப் பாதுகாக்க எண்ணிச் சக்கரத்தாழ்வாரை அனுப்பினார்.

பாண்டவர் ஐவரும் ஓர் ஆலமர நிழலில் இருந்தபொழுது, சகாதேவன் வைகுண்ட பதம் அடைந்தான். வீமன் அவனுடைய இறப்புக்குக் காரணம் என்ன என்று தருமனிடம் வினவினான். உறவினர் அழியப் பாரதப்போரை நினைத்ததன் காரணமாக அவன் இறந்தான் எனத் தருமன் பதிலுரைத்தான்.

பாண்டவர்கள் அங்கிருந்து அகன்று சந்திரகாந்த மலையை அடைந்தனர். அங்கு நீராட வந்த கன்னியர் அவர்களை இந்திரலோகத்திற்கு வருமாறு அழைத்தனர். தருமன் அதற்கிணங்கவில்லை. அவர்கள் மேலும் நடந்து வானரத்தலைவன் வாழும் மலையை அடைந்தனர். வானரத் தலைவன் தன் நாட்டை அவர்கள் ஆள வேண்டுமென அவர்களை வேண்டினான். தருமன் அவனிடம் தனக்கு நாடாளும் ஆசை இல்லை என்றுரைத்தான். அப்போது நகுலன் வைகுண்டம் சேர்ந்தான்.[1]

அவர்கள் சென்ற வழியில் 'கிரிசரம்' என்ற யானை வந்தது. வீமன் அந்த யானையை அடக்கினான். உடனே அந்த யானை அந்தணனாக மாறி, வீமனால் சாபநீக்கம் பெற்றதாகக் குறிப்பிட்டு அங்கிருந்தகன்றது. அதன் பின்னர் பூத முனிவர் தம் மகளிரைப் பாண்டவர்களுக்குத் தருவதாகக் கூறினார். தருமன் அதை ஏற்றுக் கொள்ளவில்லை.

மேலும், அவர்கள் சென்ற வழியில் கன்னியர் இருவர் ஊசி மேல் நின்று கடுந்தவம் செய்ததைக் கண்டு வியந்தனர்; அங்கிருந்தகன்று இந்திரகோண மலைக்குச் சென்றனர். அப்போது அங்கு வந்த ஒரு புலி தருமனைப் பற்றியது. வீமன் அப்புலியின் வாயைக் கிழித்தான். உடனே அது அந்தணனாக மாறித் தனக்கேற்பட்ட சாபம் வீமனால் விலகியது என்றுரைத்தது.

அதன் பின்னர் அர்ச்சுனன் வைகுண்டமடைந்தான். வீமனும் தருமனும் அவனுக்கு இறுதிக்கடன் கழித்தனர். வீமன், அர்ச்சுனனின் இறப்புக்குக் காரணம் என்ன என்று

[1] நகுலனுடைய இறப்புக்குரிய காரணம் நூலில் இடம்பெறவில்லை.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தருமனிடம் வினவினான். கண்ணன் தனக்குத் தேரோட்டியாக இருந்தார் என அர்ச்சுனன் வீண் பெருமை கொண்டான் என்று தருமன் கூறினான்.

தருமனும் வீமனும் காட்டில் சென்றபோது, ஒரு பன்றி தருமன் மீது பாய்ந்தது. வீமன் அப்பன்றியின் காலைத் திருகியதும் அது அந்தணனாக மாறியது; தனக்கேற்பட்ட சாபம் தருமனால் விலகியது என்று கூறி அங்கிருந்து அகன்றது. பின்னர், வீமன் தன் எதிரே எமதூதர் வருவதைக் கண்டான்; அவர்களுடன் போரிட முற்பட்டான். அப்போது வீமனின் தந்தை வாயுபகவான் அங்குத் தோன்றினார்; எமதூதர்களோடு போர்செய்வதைத் தவிர்த்து, திருமாலின் திருவடியைத் துதிக்குமாறு அவனிடம் கூறினார். வீமன், தன் மரணத்திற்குரிய காரணத்தைத் தருமனிடம் கேட்டான். வீமனுடைய, 'அகந்தையே' அவனுடைய இறப்புக்குக் காரணம் என்று தருமன் குறிப்பிட்டான். பின்னர் வீமன் வைகுண்ட பதமடைந்தான். காட்டிலுள்ள வனதேவதை தம்பியரை இழந்து தனியனாய் நின்ற தருமனுக்கு வழிகாட்டியது.

தருமன் கானகத்தில் சென்றபோது ஒரு புருடமிருகம் அவனிடம் வந்தது. அது அவனை இந்திரசாலைக்குத் தலைவன் ஆக்குவேன் எனக் கூறியது. தருமன் வைகுண்ட பதமே தனக்குத் துணை என்று மறுத்தான். மேலும் அவன் சென்ற வழியில், 'சிங்கம்' என்னும் பறவையைக் கண்டான். அப்பறவை தருமன் வசிப்பதற்கேற்ற அழகிய நகரம் அமைத்துத் தருவதாகவும், நங்கையரை மணம் செய்து வைப்பதாகவும் மயக்கு மொழி கூறியது. தருமன் அதற்கு இணங்கவில்லை. பின்னர் தேவமங்கையர் தருமனைத் தம்முடன் வருமாறு அழைத்தனர். அவர்களுடைய அழைப்பையும் தருமன் ஏற்றுக் கொள்ளவில்லை.

◆ கவுசல ஆறு

தருமன் சென்ற வழியில், 'கவுசல' என்னும் ஆறு வெள்ளப் பெருக்குடன் ஓடியது. தருமன் அதைக் கடக்க இயலாது நின்றான். (முன்பு திருமால் கூறியதற்கேற்ப) சக்கரத்தாழ்வார் அந்த ஆற்றைவற்றச் செய்தார். தருமதேவதை தருமனைச் சோதிக்க நினைத்தது; ஒரு புழுத்த நாயாக வடிவெடுத்து அவன் முன் வந்து, தன்னை அந்த ஆற்றில் விட்டுவிடுமாறு தருமனிடம் வேண்டியது. அவன் அங்ஙனம் செய்யவில்லை. அதன்மீது பரிவுகொண்டு அந்த நாயுடன் கவுசல ஆற்றைக் கடந்தான். அதைக் கண்டு வியந்த தருமதேவதை மனம் மகிழ்ந்து தன் சுய உருவத்தைக் காட்டி, அவனை வைகுண்டம் சேருமாறு வாழ்த்திச் சென்றது.

சக்கரத்தாழ்வார் விண்ணுலகம் சென்று தருமனின் வருகையைப் பற்றித் திருமாலிடம் கூறினார். அதைக் கேட்டு மகிழ்ந்த திருமால் தருமனை வரவேற்குமாறு ஆணையிட்டார். அங்கு அனைவரும் தருமனை வரவேற்றனர். இந்திரன் தருமனைப் புனித நீராடச் செய்தார். வானுலகில் தேவர், இயக்கர், சூரியசந்திரர் முதலியோர் தத்தம் பதவியில் இருக்குமாறு தருமனை வேண்டினர். அவன் அதற்கு இணங்கவில்லை. தருமன் பாரதப்போரில் ஒரு பொய் கூறியதற்காக எமதூதர்கள் அவனை நரகத்தையும் சொர்க்கத்தையும் காணச் செய்தனர்.

தருமன் நரகலோகத்தில் சென்றபோது அதில் கிடந்த துரியோதனன், தன்னைக் காப்பாற்றும்படி தருமனிடம் வேண்டினான். தருமன் துரியோதனனைக் காப்பாற்ற முயன்றபோது, அவன் தருமனை நரகத்தினுள் இழுத்தான். துரியோதனன் அங்ஙனம் செய்த போதும், தருமன் தான் செய்த தருமத்தில் பாதியைக் கொடுத்து, அவனை நரகத்திலிருந்து மீட்டான். மேலும் தருமன், தான் செய்த புண்ணியத்தின் பலனைக் கொடுத்துத் துச்சாதனன், சகுனி ஆகியோரையும் நரகிலிருந்து விடுவித்தான். தேவர்கள் தருமனுக்கு, 'இராச இருடி' என்று பெயர் சூட்டி மகிழ்ந்தனர். சப்தரிஷிகள் அவனுக்குப் பிரம்மலோகத்தில் முடி சூட்டினார்.

இறுதியில் திருமால் கருடன் மீது காட்சியளித்துத் தருமனைத் தம்முடன் இருக்கச் செய்கிறார். தருமன் அங்குத் தன் தம்பியரைக் கண்டு அகமகிழ்கிறான். மாவிந்தக் கதை

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

கேட்டவர்களும், அக்கதையைப் படித்தவர்களும் தம் பாவம் நீங்கி இன்புற்று மேலான நிலை எய்துவர் என்று கூறி ஆசிரியர் சோமன் நூலை நிறைவு செய்துள்ளார்.

****

Digitization by Hindu-Heritage-Foundation of America HHFA(USA)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

4. தமிழ்நாட்டில் பாரதக்கதையின் செல்வாக்கு

முன்னுரை

உலகப்பெருங் காப்பியங்களுள் பாரதமும் ஒன்று. ‘பாரதம்’ என்ற சொல்லுக்குப் ‘பரதனது குலத்தவரைப் பற்றிய நூல்’ என்று பொருள். பரதன், சந்திரகுலத்துத் துஷ்யந்தனுக்கும் சகுந்தலைக்கும் பிறந்த மகன். பரதனுடைய குலத்தில் தோன்றியவர் பாரதர். பாண்டவர்களும், கௌரவர்களும் பரதகுலத்தில் பிறந்தவர்களாவர். அவர்களைப் பற்றிக் கூறும் நூல் ‘பாரதம்’ என்று வழங்கப்படுகிறது. இத்தகைய சிறப்பு வாய்ந்த பாரதக்கதை தமிழ்நாட்டில் தொன்று தொட்டே வழங்கி வருகிறது. இராமாயணம், பாரதம் ஆகிய கதைகளுள் பாரதமே மக்களிடம் மிகுந்த செல்வாக்கைப் பெற்றது என்று அறிஞர் கருதுவர்.

கண்ணபிரான் இவ்வுலகிலிருந்து மறைந்த நாளே கலியுகம் பிறந்த நாளாம். அது ஆங்கில ஆண்டில் கி.மு.3031 ஏப்ரல் 16-ஆம் நாள் என்பர். மகாபாரத காலம் 5000 ஆண்டுகளுக்கு முற்பட்டதாகும் என்று ச.கு.கணபதி தம்[1] நூலில் குறிப்பிட்டுள்ளார். சங்க இலக்கியங்களில் பாரதக்கதை பயின்று வந்திருப்பதன் மூலம் சங்ககால முதலே பாரதக்கதை தமிழ்நாட்டில் செல்வாக்குப் பெற்றிருந்தமை புலனாகும்.

4.1 சங்க இலக்கியங்களில் பாரதம்

சங்க இலக்கியமான புறநானூறு,

அலங்குளைப் புரவி ஐவரொடு சினைஇ ... ஈரைம்பதின்மரும் பொருது களத்தொழியப் பெருஞ்சோற்று மிகு பதம் வரையாது கொடுத்தோய் (புறம். 2:13-16) எனவும்,

பதிற்றுப்பத்து, ஐந்தொருங்கு புணர்ந்த விளக்கத் தனையை, போர்தலை மிகுத்த வீரைம் பதின்மரொடு, துப்புத்துறை போகிய துணிவுடை யாண்மை (பதி.14: 4-6) எனவும்,

பெரும்பாணாற்றுப்படை, ஈரைம் பதின்மரும் பொருதுகளத் தவிய ... செருவி னைவர் போல .. வடங்காத் தானையோ டுடன்று மேல் வந்த... (பெரும்.415-420) எனவும்,

சிறுபாணாற்றுப்படை, காவெரி யூட்டிய கவர்கணைத் தூணி ... மார்பன் பயந்த (சிறு. 238-241), எனவும் குறிப்பிட்டுள்ளன.

கலித்தொகையில் இடம்பெற்றிருக்கும் பாரதக்கதைக் குறிப்புக்கள் கீழ் வருமாறு:

.....வடமொழிப் பெயர்பெற்ற,
முகத்தவன் மக்களுள் முதியவன் புணர்ப்பினா,
லைவரென் றுலகேத்து மரசர்க ளகத்தராக் ...
கிளையோ டுயப்போகு வான்போல (கலி. 25:1-8)
தீதுதீர் சிறப்பி னைவர்க ணிலைபோல (கலி:26.6)

---

[1] வியாசரும் வில்லியும், ப. 23

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மறந்தலைக் கொண்ட நூற்றுவர் தலைவனைக்
குறங்கறுத் திடுவான்போற் கூர்நுதி மடுத்ததன் (கலி.52: 2, 3)
அஞ்சீ ரசையியல் கூந்தற்கை நீட்டியா
னெஞ்சம் பிளந்திட்டு நேரார் நடுவண்டன்
வஞ்சினம் வாய்த்தானும் போன்ம் (கலி. 101: 18-20)

இவ்வாறு பாரதக்கதை குறிப்புகள் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன. சங்க இலக்கியங்களுள் கலித்தொகையில் இக்கதைக் குறிப்பு மிகுதியாகக் காணப்படுகின்றது.

4.2 தமிழ்க் காப்பியங்களில் பாரதம்

தமிழ்க் காப்பியமான சிலப்பதிகாரம், நடந்த அடி பஞ்சவர்க்குத் தூதாக நடந்த அடி (சில. 17.34),... பஞ்சவர்க்குத் தூது நடந்தானை ஏத்தாத நாவென்ன நாவே (17.37), உரக்குரங்கு உயர்த்த ஒண்சிலை உரவோன் காவெரி யூட்டிய நாள்போற் கலங்க (சில.22. 111, 112) என்று குறிப்பிடுகிறது.

மணிமேகலை, விராடன் பேரூர் விசயனாம் பேடியைக், காணிய சூழ்ந்த மாக்களின் (3.146- 148) என்று குறிப்பிட்டுள்ளது.

சீவகசிந்தாமணியிலும் (288, 456) பாரதக் கதைக்குறிப்புகள் இடம்பெற்றுள்ளன.

4.3 பக்தி இலக்கியங்களில் பாரதம்

தேவாரம், நாலாயிரத் திவ்யபிரபந்தம் போன்ற பக்தி இலக்கியங்களிலும், உரையாசிரியரின் உரைகளிலும், சிற்றிலக்கியங்களிலும் பாரதக்கதைக் குறிப்புக்கள் இடம்பெற்றுள்ளன.

அர்ச்சுனன் பாசுபதம் பெற்றதைக் காரைக்கால் அம்மையார் அற்புதத் திருவந்தாதியில் பாடியிருக்கிறார் (அற்பு.62).

சிவபெருமான் வேடனாக வந்து அர்ச்சுனனுக்கு அருள் செய்தது திருநாவுக்கரசர் தேவாரத்தில் காணப்படுகிறது (தேவா.V, 496).

4.4 உரையாசிரியர் உரையில் பாரதம்

பரிமேலழகர் 935 ஆம் குறளின் உரையில் பாரதக்கதையைக் குறிப்பிட்டிருக்கிறார்.

வீரசோழிய உரையாசிரியரான பெருந்தேவனார் பாரதக்கதையை மேற்கோளாகக் காட்டியுள்ளார் என்பார் அ.விசுவநாதன்[1] நிகண்டுகளிலும் பாரதக்கதைக் குறிப்பு உள்ளது.

பாரதக்கதை சிற்றிலக்கியங்களிலும் மிகுந்த செல்வாக்கைப் பெற்றுள்ளது. திருவேங்கடசதகம் கருத்து விளக்கத்திற்காகப் பாரதக்கதை செய்தியை மேற்கோளாகக் கொண்டுள்ளது.(93)

---

[1] பாரத நூல்களின் திறனாய்வு, ப.42

Digitization by Hindu-Heritage-Foundation-of-America-HHFA(USA)

4.5 உலகவழக்கில் பாரதம்

'தண்டன் தோட்டப்பட்டயம்' என்னும் பட்டயத்தில் 'சிறிய ஊரில் வாழ்பவர்களுக்குப் பாரதம் படித்துப் பொருள் சொல்பவனுக்கு நிலம் விடப்பட்ட செய்தி கூறப்படுகிறது' என்று எம்.எம்.பொன்னுச்சாமி[1] அவர்கள் குறிப்பிட்டுள்ளார்" பாரதக்கதை சோழர்காலத்தில் செந்தலை, புள்ளலூர், திருத்தங்கால் ஆகிய கோவில்களில் படித்ததற்குக் கல்வெட்டுக்கள் சான்றாக உள்ளன. சிறுவர் பத்திரிகைகள் பாரதக்கதையைச் சித்திரக்கதையாகவும் சிறுகதையாகவும் வெளியிடுவதை இன்றும் காணமுடிகிறது.

4.6 பாரதம் பற்றி எழுந்த நூல்கள்

1. (சங்க இலக்கியங்களுக்குக் கடவுள் வாழ்த்துப் பாடிய) பெருந்தேவனார் பாரதம்
2. பெருந்தேவனார் பாடிய பாரத வெண்பா
3. அருணிலை விசாகன் பாரதம்
4. வில்லிபுத்தூரார் பாரதம்
5. ஆதிபருவத்தாதி பருவம்
6. அரங்கநாதக் கவிராயர் பாரதம்
7. நல்லாப்பிள்ளை பாரதம்
8. பாரதசார வெண்பா
9. பெருந்தேவனார் பாரதம்

மேற்கூறிய நூல்கள் யாவும் பாரதக்கதையின் மையக்கதையைப் பொருளாகக் கொண்டு அமைந்தவையாகும்.

1. வில்லிபுத்தூரர் பாரதம்.

இந்நூலை இயற்றியவர் வில்லிபுத்தூரார். இவர் சனியூரினர். தந்தை பெயர் வீரராகவன். வைணவ மரபினர். இவரை ஆதரித்தவர் வக்கபாகை கொங்கை கோன் வரபதி ஆட்கொண்டான். வில்லிபுத்தூரர் காலம் 14 ஆம் நூற்றாண்டின் இறுதி என்று மு.அருணாசலம்[2] கூறுவார். இதில் ஆதிபருவம் முதல் பத்தாம் பருவமான சௌப்திகப்பருவத்தின் முதல் பகுதி வரை உண்டு. இதில் 50 சருக்கங்களும் 4337 பாடல்களும் உள்ளன. இதற்குச் சிறப்புப் பாயிரம் பாடியவர் அவரது மகன் வரந்தருவார். ஏறக்குறைய 1660 பாடல்கள் கிடைத்தில என்பார் ஆ.விசுவநாதன்[3].

2. ஆதி பருவத்தாதி பருவம்

இந்நூல் பாரதத்தின் முதல்பருவமான ஆதிபருவத்தின் தொடக்கத்தில் வரும் சில வரலாறுகளைக் கூறுகிறது. எனவே இப்பெயர் பெற்றது. ஆதிபருவத்தில் வில்லிபுத்தூரார் கூறாமல் விடுத்த சிலசெய்திகள் இதில் உண்டு. இந்நூல் தோன்றக் காரணம் திருமலைராயர்

---

[1] அரிய செய்திகள் சொல்லும் செப்பேடுகள், சக்தி மலர்.4, இதழ்.5, ஜுன், 1986, ப. 53.
[2] தமிழ் இலக்கிய வரலாறு, ப.32.
[3] பாரத நூல்களின் திறனாய்வு, ப. 59.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மகன் திம்மபூபதி ஆவார். இது 566 விருத்தங்கள் கொண்டது; பத்துப் பிரிவுகள் உள்ளன. பிரிவின் பெயர் சருக்கம்.

3. அரங்கநாதக் கவிராயர் பாரதம்

அரங்கநாதக் கவிராயர் தொண்டைமண்டலத்தைச் சார்ந்தவர். இவர் 18 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். இந்நூல் வில்லிபுத்தூரார் பாடாது விடுத்த 'சௌப்திக பருவத்தின் பிற்பகுதி' முதல் 'சொர்க்காரோகண பருவம்' வரை 45 சருக்கங்களையும் 2477 பாடல்களையும் கொண்டுள்ளது. இந்நூல் தோன்ற காரணம் நெல்லைநாட்டுக் கோட்டூரினராய திருமலை வேளாவார். இந்நூலைத் திருவாவடுதுறை ஆதீனம் சிவப்பிரகாச தேசிகர் முன் அரங்கேற்றியுள்ளார்; இது 1902 இல் வெளிவந்தது.

4. நல்லாப்பிள்ளை பாரதம்

நல்லாப்பிள்ளை 19 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்தவர். இவர் தொண்டை நாடு முதலம்பேடு என்ற ஊரினர். செங்காட்டு வீரராகவ ரெட்டியார் வேண்டுகோட்கிணங்க இப்பாரதத்தைப் பாடியுள்ளார். வியாசர், வில்லிபுத்தூரார் ஆகிய இருவர் தம் நூலமைப்பை இந்நூலில் காணலாம். இது 18 பருவங்களையும், 131 சருக்கங்களையும் 13949 பாடல்களையும் கொண்டது. இவர் வில்லிபுத்தூரார் பாடாத ஸ்ரீபருவம், சாந்தி பருவம், அனுசாசனிக பருவம், அசுவமேத பருவம், ஆசிர மவாசிக பருவம், மௌசலபருவம், மகாப்பிரத்தானிக பருவம், சொர்க்கா ரோகணப்பருவம் ஆகியவற்றைப் பாடியிருக்கிறார்.

நல்லாப்பிள்ளையும் அரங்கநாதக் கவிராயரும் பாரத மாவிந்த ஆசிரியர் சோமனுக்குப் பிற்பட்டவராயினும், முன்னவர் இருவரும் தென்பாண்டி நாட்டைச் சேர்ந்தவர்களில்லை. ஆகையால் அவர்களுக்கு மாவிந்தக் கதைகள் தெரிய வாய்ப்பில்லை. எனவே வியாச பாரதத்தை அடியொற்றியே தம் நூலை அமைத்துள்ளனர் என ஆய்வாளர் கருதுவர்.

5. பாரதசார வெண்பா

இதன் ஆசிரியர் பெருமாள் சுவாமிகள். இதில் 748 வெண்பாக்கள் உள்ளன. இவ்வாசிரியர் 18 பருவங்களின் கதைகளைச் சுருக்கிக் கொடுத்துள்ளார்; சருக்கப் பிரிவுகள் இல்லை. இந்நூல் 1947 இல் அச்சாகியுள்ளது.

பாரதக்கதையின் கிளைக்கதைகளையோ அன்றி நிகழ்ச்சிகளையோ பாடுபொருளாகக் கொண்டமைந்த கதைகளாக,

1. நளவெண்பா
2. நைடதம்
3. பாஞ்சாலி சபதம்
4. மாரிவாயில்

முதலிய நூல்கள் விளங்குகின்றன.

Digitization by Hindu-Heritage-Foundation of America-HHFA(USA)

இவைகளைத் தவிர பாரதக்கதையின் பிற்பகுதியைக் கூறும், 'வரந்தருவார் பாரதம்'[1] என ஒரு நூல் பதிக்கப்படாமல் இருக்கின்றது என்று குறிப்பிட்டு, அந்நூலில் திருவாசகச் சருக்கத்துப் பாடல்கள் சிலவற்றையும் காட்டியுள்ளார்.

4.7 நாட்டுப்புறப் பாரத நூல்கள்

பாரதக்கதை மாந்தரை நிகழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டு பல நாட்டுப்புறப் பாடல்கள், கதைகள் போன்றவை எழுந்துள்ளன. அந்நூல்களைப் பற்றிய விவரம் கீழ்வருமாறு:

4.7.1 பெரிய எழுத்து வைகுந்த அம்மானை

இந்நூல் மலிவுப் பதிப்பாக அச்சாகியுள்ளது. இது விருத்தமும் பாடலும் கலந்தது. இதில் 137 விருத்தமும் 7,500 அடிகளும் உள்ளன.

4.7.2 துரோபதி அம்மானை

இந்நூல் 1986 இல் தஞ்சை சரசுவதிமகால் வெளியீடாக வந்துள்ளது. இது 2,935 பாடலடிகளைக் கொண்டது.

துரியோதனன் பாண்டவர்களைக் கொல்லத் திட்டமிட்டுத் தன் தம்பி இலக்கணனின் பூணூல் கல்யாணத்திற்கு வருமாறு அவர்களை அழைக்கிறான். அங்கு வந்த தருமன் சகுனியுடன் சூதாடித் தோல்வியடைகிறான். எனவே, துரியோதனன் பாண்டவர்களைச் சிறையிலிடுகிறான். துரோபதி இந்திரனின் விமானத்தில் ஏறி அத்தினபுரம் செல்கிறாள். அங்கு அவள் கண்ணனை வேண்டித் திருதராட்டிரனுக்குக் கண் பார்வை வரச்செய்கிறாள். திருதராட்டிரன் துரோபதியிடம் பாண்டவர்கள் கௌரவர்களுடன் ஒற்றுமையாக வாழ்ந்தால் உய்ய வழியுண்டு என்று கூறியதைக் கேட்டு அவள் அவரைச் சபிக்கிறாள். துச்சாதனன் துரோபதியைத் துகில் உரியும்போது, கண்ணன் அவளுக்கு ஆடை கொடுத்து அருள் புரிகிறார். துரோபதி துரியோதனனுடன் சூதாடிப் பாண்டவர்களை மீட்கிறாள். அதன் பின்பு, பாண்டவர்கள் காட்டுக்குச் செல்வதாக இந்நூல் அமைந்துள்ளது.

திருதராட்டிரன் கண்பார்வை பெற்றது, துரோபதி சூதாடியது ஆகிய நிகழ்ச்சிகள் இந்நூலில் கூறப்பட்டிருப்பது புதுமையாக உள்ளது; மூல நூலில் இவை இல்லை.

மு.அருணாசலம், தம் நூலில்[2] பாரதக்கதையைப் பின்னணியாகக் கொண்டெழுந்த நாட்டுப்புறக் கதைப்பாடல்களைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். அவை பின்வருவன:

4.7.3 அரவான் அம்மானை

இக்கதை, கோவை மாவட்டத்தின் வேளாளர்களுக்கிடையே வழங்கப்படும் ஒரு நூலாகும். தருமராசா கோவில் விழாக்களில் அரவானைச் சிறப்பிக்கும் வகையில் அமைந்த பாடல்களாகப் பாடப்படுகிறது. அரவான் அர்ச்சுனனுக்கும் நாகக்கன்னி உலூபிக்கும்

---

[1] அரங்கநாதக் கவிராயர் பாரதம், முகவுரை, ப. 2.
[2] Ballad poetry .

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பிறந்தவன், பாரதப்போரில் தன்னைக் களப்பலி கொடுத்தவன். இந்த விழா, பதினெட்டு நாள்கள் நடைபெறும் விழாவின் இறுதிநாள் மரத்தாலான சட்டத்தில் அரவானைக் கட்டி வைத்துப் பலி கொடுப்பர். அப்போது அனுமானையும் உடன் எடுத்துச் செல்வது வழக்கம். இந்தப் பதினெட்டு நாள்களும் பாரத பட்டர்[1] என்பவர் வில்லிபாரதக் கதையைக் கூறுவார். மக்கள் இதை விரும்பிக் கேட்பர்.

4.7.4 நளச்சக்கரவர்த்தி அம்மானை

இந்நூல் 2,650 தாழிசைக் கண்ணிகளால் ஆனது. இதை இயற்றியவர் வெண்ணிமலைப் பிள்ளை என்பவர் ஆவார். (மேற். ப:109)

4. 7.5 பாரத அம்மானை

இது, 2,000 கண்ணிகளை உடையது, இந்நூல் பதினெட்டாம் நாள்போர் வரை உள்ள நிகழ்ச்சிகளைக் கூறுகிறது. நூல் அச்சாகியுள்ளது(மேற். ப:109).

4. 7.6 மகாபாரத அம்மானை

மகாபாரத அம்மானை மிக நீண்ட கதைப்பாடல் கொண்டது. இஃது இரு பாகங்களாக உள்ளது. இதை இயற்றியவர் அதிவீரராமப் பட்டணத்திலுள்ள ஓர் அண்ணாவி ஆவார். இதன் காலம் 19-ஆம் நூற்றாண்டின் தொடக்கமாகும். இது பாலகாண்டம், யுத்தகாண்டம் என இருபாகங்களாக அச்சாகியுள்ளது. (மேற்.ப:109)

4. 7. 7 பஞ்சபாண்டவர் வனவாசம்

இந்நூல், பாண்டவர்கள், கௌரவர்களுடன் சூதாடித் தம் நாட்டை இழந்து பன்னிரண்டு ஆண்டுகள் காட்டில் வசித்தபோது, அவர்களுக்கு ஏற்பட்ட அனுபவங்களைக் கூறும் வகையில் அமைந்துள்ளது. (மேற். பக்:100-104).

4. 7.8 அபிமன்னன் சுந்தரி மாலை

இது, 6600 வரிகளை உடையது. இதில், அர்ச்சுனனின் மகன் அபிமன்னனுக்கும் கிருஷ்ணரின் மகள் சுந்தரிக்கும் இடையே நிகழ்ந்த காதல் பற்றிக் கூறப்படுகிறது. இதில் இருவருக்குமிடையே காதல் தூதுவராக ஔவையார் சென்றதாகக் குறிப்பிட்டிருப்பது புதுமையான நிகழ்ச்சியாகும். பாடல்கள் சில இடங்களில் தரமானவையாகவும் சில இடங்களில் சிறிது தரம் குறைந்தனவாகவும் காணப்படுகின்றன. (மேற் .ப: 106)

---

[1] (மேற்.ப:108)

Digitization by Hindu-Heritage-Foundation of America HHFA(USA)

4.7.9 குருசேத்திர மாலை

'குருசேத்திரன்' என்பவன் அபிமன்னனுக்கும் சுந்தரிக்கும் பிறந்த மகன். ஒருநாள் அவன் வான்வழியாகச் சென்றபோது வெற்றிலையை உமிழ்கிறான். அது, சிவபூசை செய்து கொண்டிருந்த கிருஷ்ணரின் கையில் விழுகிறது. குருசேத்திரன் இந்தப் பாவத்திலிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ளப் பிரம்மன், எமன், சிவபெருமான் ஆகியோரிடம் செல்கிறான். ஒருவரும் அவனுக்கு உதவ முன்வரவில்லை. இறுதியில் தருமன், அவனுக்குப் பாதுகாப்பளிப்பதாக வாக்களிக்கிறான். கிருஷ்ணன் இதைக் கண்டு வெகுண்டு, அவனைத் தன்னிடம் ஒப்படைக்கும்படி பாண்டவர்களிடம் நாரதரை அனுப்புகிறான். பாண்டவர்கள் அதற்கு இசையவில்லை. இரு பக்கத்தவரும் போரிட முற்படுகின்றனர். துரியோதனன் பாண்டவர்களுடைய பக்கம் சேர்கிறான். இறுதியில் கிருஷ்ணர் அவர்களை வென்றதாகக் கதை முடிவடைகிறது. தஞ்சை சரசுவதி மகால் நூலகத்தார் இந்நூலை அச்சிட்டு வெளியிட்டுள்ளனர்.

இக்கதையில் துரியோதனன் பாண்டவர்களுடன் சேர்ந்து போர் செய்ததாகக் கூறப்படும் செய்தி புதுமையாக உள்ளது. (மேற். பக்: 108, 109)

4. 7.10 ஆரவல்லி சூரவல்லி கதை

இந்நூல் 2,600 அடிகளால் ஆனது. பாண்டவர்களின் சகோதரி மகன் அல்லிராஜன் என்பவன் ஆரவல்லிக்கும், சூரவல்லிக்கும் உரிய மந்திரக்கோட்டையைத் தாக்கியதைக் குறிப்பிடுகிறது. இறுதியில் அல்லிராசன் வெற்றி பெற்று ஆரவல்லியின் மகளை மணக்கிறான். இதில் பாண்டவர்களுக்கு ஓர் உடன்பிறந்தவள் இருந்ததாகக் கூறப்பட்டிருப்பது மூல நூலில் இல்லாத நிகழ்ச்சியாகும். (மேற். ப: 105)

4. 7.11 துரோபதி குறம்

இது 'அம்மானை' வடிவில் அமைந்த பாடல். இதில் 2,000 அடிகள் உள்ளன. பாண்டவர்கள் காட்டில் வசித்தவேளை, துரோபதி சகாதேவனைத் தனது மகனாக மாற்றிக் குறத்தி உருவில் அத்தினபுரம் செல்கிறாள். துரியோதனன் மனைவி, இக்குறத்தியிடம் தங்கள் எதிர்காலம் பற்றி வினவுகிறாள். கௌரவர்கள் பாரதப்போரில் அழியப் போவதையும், காந்தாரிக்கு ஏற்பட்ட சாபம் அவள் ஒரு ஆட்டை மணந்ததால் விலகியதையும் கூறுகிறாள். துரியோதனன் அவளைத் துரோபதி என ஐயுற்றுச் சிறையிலிடுகிறான். அர்ச்சுனன் குறவன் வேடத்தில் வந்து அவளைக் காப்பாற்ற முயன்றபோது துரியோதனன் அவனைச் சிறையிலடைக்க எண்ணுகிறான். கர்ணன் இடையிட்டு இருவரையும் விடுவிக்கிறான் என இந்நூலின் கதை அமைந்துள்ளது. இதிலுள்ள பாடல்கள் ஆடுவதற்கும் பாடுவதற்கும் ஏற்ற வண்ணம் சிறப்பாக அமைந்துள்ளன (மேற். பக்: 167,169).

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

4 .7.12 மின்னொளியாள் குறம்

சோழ மன்னனின் மகள் மின்னொளி. அர்ச்சுனனின் பல மனைவியருள் ஒருத்தி. ஒரு நாள் அவள் பூசை செய்து கொண்டிருந்தபோது, அர்ச்சுனன் அவளுடைய கவனத்தைப் பூசையிலிருந்து விலகச் செய்கிறான். அதனால் அவள் அவன் மேல் சினம் கொள்ள, அதைக் கண்ட அர்ச்சுனன் மனம் வருந்துகிறான். அல்லி அர்ச்சுனனைக் குறத்தி வேடத்தில் மின்னொளியிடம் அனுப்புகிறாள். மின்னொளி குறத்தியிடம் தான் அர்ச்சுனனுக்காக ஏங்கி வருந்துவதைக் கூறியதும், குறத்தி வேடமிட்டு வந்த அர்ச்சுனன் தன் உண்மையான உருவத்தைக் காட்டுகின்றான் என்று கதை முடிகிறது. இதிலுள்ள பாடல்கள் சந்தம் நிறைந்து அமைந்தவையாகும். (மேற்.பக். 168, 169).

4. 7.13 கர்ண மகாராஜன் சண்டை

இந்நூல், துரியோதனனின் படைக்குக் கர்ணன் தலைமை தாங்கியது, அவனுடைய இறப்பு, கௌரவர்களின் அழிவு, தருமனின் முடிசூட்டு விழா ஆகியவற்றை விளக்கிக் கூறுகிறது. இதில் கர்ணனின் மனைவி 'பொன்னுருவி' என்று குறிப்பிட்டிருப்பது நோக்கத்தக்கது. இந்நூல் அச்சாகியுள்ளது. (மேற். ப:110)

4. 7.14 பாரதக் கத்தியம்

இது, 136 அடிகளைக் கொண்டது; விருத்தப்பாவால் ஆனது; பாரதக்கதை முழுவதையும் கூறுகிறது. சபாபதி முதலியார் என்பவர் கி.பி.1900-இல் இதை இயற்றியுள்ளார். (மேற். ப:110)

4. 7.15 பஞ்சபாண்டவர் வைகுண்டக் கும்மி

இந்நூல் 300 கண்ணிகளாலான கும்மிப் பாடலாகும். (மேற். ப:111)

4. 7.16 மகாபாரத ஏலப்பாட்டு

மகாபாரத ஏலப்பாட்டு 2,700 கண்ணிகளைக் கொண்டது. இதில் பாரதக்கதை முழுவதும் அடங்கியுள்ளது. இதை இயற்றியவர் சுப்புலட்சுமி அம்மாள் என்பவராவார் (மேற்.ப:196).

4. 7.17 புலந்திரன் தூது

பாண்டவர்களின் காடுறை வாழ்வு முடிந்த பின்னர் துரியோதனனின் கருத்தை அறிய எண்ணித் தருமன், துரியோதனனிடம் புலந்திரனைத் தூதனுப்புகிறான். துரியோதனன் முறைப்படி நடக்கவில்லை. ஆகையால் புலந்திரன் வஞ்சினம் கூறுகிறான். கர்ணனின் மகன் விசுவகேதுவுக்கும் புலந்திரனுக்கும் போர் ஏற்படுகிறது. அப்போது கர்ணன் அங்குத் தோன்றித் தன்னைப் பற்றிக் கூறலானான்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தான் குந்திமகன் என்பதைப் பாண்டவர் அறியார் என்றும் தான் அவர்களோடு சேர்ந்து வாழ விரும்புவதாகவும் தெரிவிக்கிறான். பின்னர் பாரதப்போரில் தான் அர்ச்சுனனால் இறந்துபடப்போவதைக் கூறுகிறான். தன் பிறப்பின் விவரம் பாண்டவர்கள் அறியக்கூடாது எனவும், அவர்கள் அறிந்தால் ஐவர் சபதமும் நிறைவேறாது எனவும் கருதித், தூது உரைத்த செய்தி மட்டும் கூறுக என்று புலந்திரனிடம் கர்ணன் கூறுகிறான். இந்நூல் புதிய நிகழ்ச்சி களைக் கொண்டுள்ளது. இதில் 3920 அடிகள் உள்ளன.

4. 7.18 ஏணியேற்றம்

இது 1985 அடிகளாலானது. பாண்டவர்கள் சூதில் தோற்றதால் காடுறை வாழ்வை மேற்கொண்டனர். துரியோதனன் அர்ச்சுனனின் மனைவியும், கண்ணனின் தங்கையுமாகிய சுபத்திரையை மணக்க விரும்புகிறான். பிறன்மனை நயந்த தன் எண்ணத்தை ஓர் ஓலையில் எழுதி அர்ச்சுனனின் இன்னொரு மனைவியான அல்லிக்கு அனுப்புகிறான். அவள் மூன்று நாட்கள் கழித்து வருமாறு கூறுகிறாள். அல்லி தச்சர்களைக் கொண்டு தந்திரமாக ஏணி ஒன்று செய்கிறாள். அந்த ஏணியில் அகப்பட்டவர் வெளியே வர இயலாது. மூன்றுநாட்கள் கழித்து வந்த துரியோதனன் ஏணியில் ஏறச் சுற்றிலும் ஆணிகளால் சூழப்படுகிறான். ஏணியில் அலைப்புண்டு பல பகுதிகளுக்கும் சென்று துன்பமடைகிறான்; ஆறாத கோபத்தை அடக்கியிருந்தான். அல்லி அதிலிருந்த கழுக்களைக் களையுமாறு ஏவுகிறாள். துரியோதனன் அங்கிருந்து அத்தினபுரம் அடைகிறான். பிறன்மனை நோக்கின் கேடு விளையும் என்பதை இக்கதை உணர்த்துகிறது. துரியோதனன் பிறன்மனை நயந்த செய்தி பாரதத்தில் இல்லை.

4. 7.19 அல்லி அரசாணி மாலை

பாண்டியமன்னனின் மகளாகத் தோன்றியவள் அல்லி. அல்லி மலரின் இலைமேல் பிறந்த காரணத்தால் இப்பெயர் பெற்றாள். அறிவும் ஆற்றலும் நிரம்பப் பெற்றவள். அர்ச்சுனன் தலப்பயணம் சென்றபோது அல்லியைக் கண்டு மயங்கி அவளை அடைய விரும்புகிறான். கண்ணன் உதவியால் அவளை மணம் செய்கிறான். அர்ச்சுனனின் தலப்பயணமும் அவன் பாண்டியன் மகளை மணம் செய்ததும் பாரதத்தில் இடம்பெற்றுள்ளன. இந்நூல் 5306 அடிகளைக் கொண்டது.

4. 7. 20 பவழக்கொடி மாலை

இந்நூல் 3707 அடிகளால் ஆனது. அர்ச்சுனனுக்கும் அல்லிக்கும் பிறந்த மகன் புலந்திரன். புலந்திரன் விளையாடப் பவழத்தேர் செய்தற்பொருட்டுப் பவழக்காட்டிற்குச் செல்கிறான் அர்ச்சுனன். அக்காடு பவழக்கொடியாளுக்கு உரியது. பவழக் கொடியாளின் அழகில் மயங்கிய அர்ச்சுனன் கண்ணன் உதவியால் அவளை மணம் செய்கிறான். இக்கதைக்கும் பாரதக் கதைக்கும் தொடர்பு இருப்பதாகத் தெரியவில்லை.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

4. 7. 21 புலந்திரன் களவுமாலை

துரியோதனன் தங்கை துற்சடையின் மகள் கலந்தாரி. அல்லி அருச்சுனன் ஆகியோரின் மகனாகிய புலந்திரன் கலந்தாரியை மணக்கிறான். இது 3920 அடிகளாலானது. இந்த உட்கதைக்குரிய ஆதாரம் பாரதத்தில் இல்லை.

4. 7. 22 பொன்னுருவி மசக்கை

கர்ணனின் மனைவி பெயர் பொன்னுருவி. இவ்விருவரும் மணமாகியும் சேர்ந்து வாழவில்லை. பொன்னுருவி மயங்கி இருந்தபோது கர்ணன் அவளை முயங்கிப் பிரிகிறான். அவள் கர்ணன் தன்னை முயங்கிப் பிரிந்ததற்காக வருந்துகிறாள். பொன்னுருவி கருவுற்று மசக்கை கொண்டபோது, கர்ணன் கொடுத்தனுப்பிய மாங்கனியை உண்ண மறுக்கிறாள். ஆனால் அவளது தோழி கர்ணனின் தோட்டத்தில் திருடிய கனியினைப் பொன்னுருவிக்குக் கொடுக்கிறாள். மாங்கனி திருடியதற்காகத் தோட்டக்காரனைத் தண்டிக்க முற்படுகிறான் கர்ணன். பொன்னுருவி வேண்டாம் என்று தடுக்கிறாள். அவள் சமைத்துக் கொடுத்தால் தோட்டக்காரனைத் தண்டிப்பதை நிறுத்துவேன் என்று சொல்கிறான் கர்ணன். அவன் விருப்பத்தை நிறைவேற்றுகிறாள் பொன்னுருவி. பின்னர் இருவரும் ஒன்றாக வாழ்கின்றனர். இது 1769 அடிகளைக் கொண்டது.

கர்ணன் தேரோட்டியின் மகன் என்பது பலருடைய எண்ணம். அவன் குந்தியின் மகன் என்பது பலருக்கும் தெரியாது. தேரோட்டியின் மகன் ஆகையால் கர்ணன் மனைவியாலும் வெறுக்கப்பட்டான் என்பதன் அடிப்படையில் இக்கதை தோன்றியிருக்கவேண்டும்.

4. 7. 23 மகாபாரதம் அஸ்வமேத யாகம்

இந்நூலை இயற்றியவர் அதிராமப் பட்டினத்தைச் சேர்ந்த சையத் முகம்மது அண்ணாவியார் என்பவர் ஆவார். இவர் இதை ஒரு காவியம் போல் பாடியிருக்கிறார்.

மேலும், கிருஷ்ணசாமி தூது, பொன்னுருவி புலம்பல், பாரதவிலாசம், ஐவர் அம்மானை, தருமன் அஸ்வமேத யாகம் முதலிய நாட்டுப்புறக் கதைப்பாடல்களும் மலிவுப் பதிப்பாக அச்சாகியுள்ளன.

◆ புதிய உட்கதைகள்

மேலே கூறிய நூல்களில் சில நிகழ்ச்சிகள் புதுமையாக உள்ளன என்பது தெரியவருகிறது. அவை,

1. துரோபதி அம்மானை என்னும் நூலில் திருதராட்டிரன் கண்பார்வை பெற்றது, துரோபதி சூதாடியது போன்ற நிகழ்ச்சிகள் இடம்பெற்றிருப்பது புதுமையாக உள்ளன.

2. குருசேத்திர மாலை என்னும் நூலில் துரியோதனன் பாண்டவர்களுடன் சேர்ந்து போர் செய்ததாகக் கூறப்படும் செய்தி புதுமையாக உள்ளது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. (HHFA(USA)

3. ஆரவல்லி சூரவல்லி கதையில் பாண்டவர்களுக்கு ஓர் உடன்பிறந்தவள் இருந்ததாகக் கூறப்பட்டிருப்பது மூல நூலில் இல்லாத நிகழ்ச்சியாகும்.

4. புலந்திரன் தூது என்னும் நூலில், தான் குந்தி மகன் என்பதைப் பாண்டவர் அறியார் என்றும், அவர்களோடு சேர்ந்து வாழத்தான் (கர்ணன்) விரும்புவதாகவும் கர்ணன் கூறுவது மூலக்கதையிலிருந்து வேறுபட்டுள்ளது.

நிறைவுரை

நாட்டுப்புற இலக்கியங்களில் வரும் கதைகள் விறுவிறுப்பாகவும், காதல் சுவை உடையனவாகவும் இருப்பதை மேலே குறிப்பிட்ட கதைப்பாடல்கள் உணர்த்துகின்றன. பாரதம் ஊர்தோறும் படிக்கப்பட்ட கதை என்று கல்வெட்டுகளும் சான்று பகர்கின்றன. அங்ஙனம் பரவியிருந்த நிலையை வாய்ப்பாகக் கொண்டு இடைக்காலப் புலவர்கள் நாட்டுப்புற இலக்கியங்களை மிகுதியாகப் படைத்துள்ளனர். அவற்றை அவர்கள் இலக்கிய வடிவு, நாடக வடிவு, நாட்டுப்புறப் பாடல் வடிவு[1] என்று பல்வேறு வகைகளாகப் பாடி மகிழ்ந்துள்ளனர் என்பதை அறியமுடிகிறது.

****

[1] அம்மானை, ஏலப்பாட்டு, கும்மி, குறம், தூது, மாலை

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA).

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

5. பாரத மாவிந்தம் – காப்பிய அமைப்பு

'காப்பியம்' என்பது 'காவ்யம்' என்னும் வடசொல்லின் திரிந்த வழக்காகும். கவியாற் செய்யப்படுவது காவியம். எனவே, பொதுவாகச் செய்யுளெல்லாம் காவியமென்றே கூறத்தகும். ஆயினும் தமிழ் வழக்காற்றில் பொருட்டொடர் நிலைக்கே அப்பெயர் வழங்குவதாயிற்று என்று கி.வா.ஜெகந்நாதன்[1] கருதுவார். 'காவியம் என்பது பற்பல நிகழ்ச்சிகளின் கோவை' என்று மு.வரதராசன்[2] குறிப்பிடுகிறார். சி.எம். பௌரா[3], 'காப்பியம் என்பது ஒரு நீண்ட எடுத்துரைக் கதையாகும். அது, பேராற்றலும் முக்கியத்துவமும் உடைய நிகழ்ச்சிகளைப் பற்றியது' என்பார்.

5.1 தண்டி அலங்காரம் கூறும் காப்பியக் கூறுகள்

தண்டியலங்காரம்[4] பெருங்காப்பியத்தின் இலக்கணமாகக் காப்பியத் தொடக்கம், நாற்பொருள் பயத்தல், தன்னிகரில்லாத் தலைவன், வருணனை, தலைவன் தொடர்பான நிகழ்ச்சி, சந்தி, பகுப்புகள், சுவையும் மெய்ப்பாட்டுக் குறிப்பும் போன்ற பண்புகளைக் கூறுகிறது. தண்டி ஆசிரியர் கூறிய காப்பியக் கூறுகள் பாரத மாவிந்தத்தில் அமைந்து சிறப்பதை இங்கு விளக்கலாம்.

5.1.1 காப்பியத் தொடக்கம்

காப்பியத்தின் தொடக்கத்தில் வாழ்த்து, வணக்கம், வருபொருள் உரைத்தல் அமைதல் வேண்டும், என்று தண்டியாசிரியர் கூறுகிறார். நூலின் தொடக்கத்தில் இம்மூன்றும் ஒருங்கே அமைய வேண்டும் என்பதில்லை. 'இம்மூன்றும் ஓரினப் பட்டதென்பார்' கி.வ. ஜெகந்நாதன்[5] பாரதமாவிந்தத்தில், 'வணக்கம்' என்ற அமைப்பு காணப்படுகிறது.

வியாசர் கூறிய பாரதக் கதையை, விநாயகர் மேருமலையில் எழுதிய நிகழ்ச்சியை அடிப்படையாக வைத்து விநாயகரை வணங்குவதாகக் காப்புச் செய்யுள் அமைந்துள்ளது; பின்பு சிவபெருமான், பார்வதி, முருகப்பெருமான், திருமகள், கலைமகள், திருமால், நாயன்மார் ஆகியோரை வணங்கியதாகப் பாடல்கள் காணப்படுகின்றன. பாரத மாவிந்தத்தில் நூல்நுவல் பொருள் கூறும் பாயிரம் அமைந்துள்ளது.[6] வில்லிபுத்தூரர் பாரதத்தில் உள்ளதுபோல் சருக்கந்தோறும் கடவுள் வணக்கம் பாடும் மரபு பாரத மாவிந்தத்தில் இல்லை. சீவகசிந்தாமணி, பெரிய புராணம் இவற்றில் அவையடக்கப் பாடல்கள் உள்ளன. அம்மரபையொட்டிப் பாரத மாவிந்தத்திலும் அவையடக்கப் பாடல்கள் இடம்பெற்றுள்ளன[7].

---

1 தமிழ்க் காப்பியங்கள், ப. 12.
2 இலக்கிய மரபு, ப.49.
3 புறம் வெர்ஜில் டு மில்டன், ப. 1.
4 தண்டியலங்காரம், சூத். 8.
5 தமிழ் காப்பியங்கள், ப.141.
6 பா.மா.14, 15, 18
7 பா.மா.15-20

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

5.1. 2 நூற்பொருள் பயத்தல்

1. அறம்

அறம் என்பது இல்லறம், துறவறம் என இருவகைப்படும். பாரத மாவிந்தம் பாண்டவர்கள், துரோபதியுடன் மேற்கொண்ட பயணத்தைப், பாரதக்கதையின் இறுதிப்பகுதியைப் பற்றிப் பாட எழுந்த நூலாகும். ஆகையால் ஆசிரியருக்கு இல்லறம் பற்றிப் பாட வாய்ப்பில்லை. பாண்டவர்கள் துரோபதியுடன் பற்றற்ற நிலையில் சென்றதைத் துறவு' எனக் கொள்ள வேண்டும். பாண்டவர்கள் துறந்து சென்ற நிலையை,

நற்றிய மரத்துரியி னல்லுடை புனைந்து
சுற்றிய சடைச்சிகை முடித்துறம லோடுஞ்
செற்றய சினத்தினியல் தீமையை யொழிந்தே
பற்றறு தவத்தினர்கள் பான்மையென லாயே (பா.மா.233)

என்ற பாடல் தெரிவிக்கிறது. எனவே, பாரத மாவிந்த்த்தில் துறவறமே கூறப்பட்டுள்ளது.

2. பொருள்

பாரத மாவிந்தத்தில் பொருள் பற்றிய குறிப்பு இடம்பெறவில்லை. துறவு வாழ்வை மேற்கொண்டு இறைவனைத் தேடிச் செல்பவர்களின் பயணம் பற்றிக் கூறுவதால் ஆசிரியர் பொருள் பற்றிய செய்திகளைக் கூறவில்லை போலும்.

3. இன்பம்

பாரத மாவிந்தம், பாண்டவர்கள் சிற்றின்பம் நீக்கிப் பேரின்பம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு சென்ற நிலையைக் கூறுகின்றது. எனவே, இதில் இன்பம் இடம்பெற்றுள்ளது என்று கொள்ளலாம்; அவ்வின்பம் பேரின்பம்.

4. வீடு

பாரத மாவிந்தத்தில் துறக்கப் பயணம் மேற்கொண்ட அனைவரும் வீடு பேறடைகின்றனர். முதலில் துரோபதி வீடுபேறடைகிறாள். பின்னர் முறையே சகாதேவன், நகுலன், அர்ச்சுனன், வீமன், ஆகியோர் ஒருவர் பின் ஒருவராக வீடு பேறடைகின்றனர். இறுதியில் தருமன் பூதஉடலோடு வைகுண்டபதம் அடைகிறான். பாரத மாவிந்தம் வீடுபேறடையும் நோக்கத்துடன் சென்றவர்களைப் பற்றி எழுதப்பட்ட நூல். ஆகையால் எல்லோரும் வீடுபேறடைவதை ஆசிரியர் சிறப்பாகக் காட்டுகிறார்.

சமணமதம் பெண்களுக்கு, வீடுபேறு இல்லை என்று சொல்கிறது. புத்தமதம் பெண்களுக்கு வீடுபேறு உண்டு என்று கூறுகிறது. சீனி.வேங்கடசாமி[1] மணிமேகலை வீடு பேறடைந்த நிலையைத் தம் நூலில் குறிப்பிட்டுள்ளார். கிறித்தவ மதமும் பெண்களுக்கு வீடு பேறு உண்டு என்று உரைக்கின்றது. இந்துக்கள், துறவிகளும் இல்லறத்தாரும் பெண்மகளிரும் மோட்சம் அடையலாம் என்ற கொள்கை உடையவர்கள், என்று சீனி.வேங்கடசாமி[2]

[1] பௌத்தமும் தமிழும் ப.77
[2] சமணம் தமிழும் – 1, பக். 63, 64

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

குறிப்பிடுகிறார். பாரத மாவிந்தம், துரோபதி முதலில் வீடுபேறடைந்ததைக் காட்டி, இல்வாழ்வில் ஈடுபட்ட பெண்களும் வீடுபேறடைவர் என்பதைப் புலப்படுத்துகிறது.

5.1.3 தன்னிகரில்லாத் தலைவன் தருமன்

தண்டி அலங்காரம் தன்னிகரில்லாத் தலைவனை உடைத்தாய் காப்பியம் அமைய வேண்டும் என்று கூறுகிறது. பாரத மாவிந்தத்தில் நூல் முழுமையும் வரும் பாத்திரம் தருமன் ஆகும். எனவே, தருமனே காப்பியத் தலைவன் ஆவான். தன்னிகரில்லாத் தலைவனுக்குரிய பண்பான வீரம், ஆண்மை கொடை முதலியவை தருமனுக்கு உண்டெனினும் அவற்றை விளக்கும் நிகழ்ச்சிகள் பாரத விந்தத்தில் இடம்பெற வாய்ப்பில்லை.

1. வாய்மை தவறாத தருமன்

ஆசிரியர் தருமனைப், பொய்தவிர்ந்த புகழ்த் தருமன் (பா.மா.322) என்று புகழ்வது அவனது வாய்மை தவறா இயல்பைப் புலப்படுத்துகிறது.

2. குடிமக்களைப் போற்றும் பண்பு

அத்தினபுரியிலுள்ள மக்கள் தருமனின் பிரிவால் அடைந்த துன்பத்தின் வாயிலாகத் தருமன் குடிமக்களிடம் கொண்ட அன்பு வெளிப்படுகிறது.

3. நடுநிலை தவறாதவன்

தருமன் ஒருபாற் கோடாத உத்தமன். வீமனுக்கும் மனித விலங்கிற்கும் இடையே உள்ள உடன்பாட்டிற்கேற்ப அவ்விலங்கு வீமனின் உடலில் 'பாதி'யைப் புசிப்பதே நியாயம் எனத் தருமன் நீதி வழங்கியதைக் கன்னியர் கூறித் தருமனை 'நடுவுரை வழுவுறாத் தருமன்' (பா.மா.668) என்று புகழ்கின்றனர்.

4. இன்னா செய்தார்க்கும் இனியவை செய்பவன்

நரகத்தில் உழன்று வருந்தும் துரியோதனன், நரகத்திலிருந்து தன்னை மீட்கும் படித் தருமனிடம் இறைஞ்சுகிறான். பாண்டவர்களுக்குத் துரியோதனன் செய்த தீங்கை நினைத்துத் தருமன் அவனைப் பழிவாங்க நினைக்கவில்லை; அவனை நரகிலிருந்து மீட்க முற்பட்டான். அப்போது, துரியோதனன் தருமனை நரகத்தினுள் இழுத்து விட்டான்[1], எனினும் தருமன் தான் செய்த தருமத்தில் பாதியைக் கொடுத்துத் துரியோதனனை நரகத்திலிருந்து மீட்டான். இதிலிருந்து தருமன் இன்னா செய்தார்க்கும் இனியவை செய்கின்ற பண்பினை உடையவன் என்பது தெரிகிறது.

[1] பா.மா.709

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

5. மண்ணாசை பெண்ணாசை நீக்கியவன்

தருமன், 'கன்னிய ராசை பாரின்மே லாசை கடந்துநீள் கருணைமா முகில்மேல், மன்னிய வாசை கொண்டுற வந்தேன் மங்கையீர் போமென மகிழ்வுற்று' (பா.மா. 655) என்று தன்னை அழைத்த மங்கையரிடம் கூறுவது, தருமன் பெண்ணாசை, மண்ணாசை மட்டுமன்றி இவ்வுலக ஆசைகளைக் கடந்தவன் என்பதைப் புலப்படுத்துகிறது.

6. பொறுமைப் பண்புடையவன்

மேகநாதனும், கயிலாயனும் பாண்டவர்களோடு சண்டையிட வரும்போது, தருமன் சினம் கொள்ளவில்லை. வீமன் அவர்களோடு சண்டையிட முயன்றவேளை, தருமன் அவனைத் தடுத்து, அவனது சினத்தை நீக்கினான். இதிலிருந்து தருமனின் பொறையுடைமைப் பண்பு புலனாகிறது.

7. இறையுணர்வு மிக்கவன்

தருமன் இறையுணர்வு அன்றி வேற்றுணர்வு இல்லாமல் கட்டினில் செல்கிறான்; காணும் பொருள்களில் எல்லாம் திருமாலின் உருவத்தையே காண்கிறான் என்பதைப் பாடல் 671 புலப்படுகிறது. இது தருமனின் இறையுணர்வைக் காட்டுகிறது.

8. மனத்திண்மை உடையவன்

தருமனைச் சந்தித்த பலர், அவனிடம் தம் நாட்டைத் தருவதாகவும், பெண்களைத் தருவதாகவும் கூறி அவனது ஆசையைத் தூண்டுகின்றனர். ஆனால் தருமன் அவற்றையெல்லாம் கடந்து துறக்கப்பயணத்தை விடாமல் தொடர்ந்து மேற்கொள்கிறான். இது தருமனின் மனஉறுதியைக் காட்டுகிறது.

9. பிறருடைய நற்பண்பையே காண்பவன்

துரியோதனன் பாண்டவர்களுக்கு இழைத்த தீமைகளை எமதர்மன் தருமனிடம் கூறினார். தருமன், "துரியோதனன் அவ்வாறு தீங்கு செய்ததால்தான் தன்னால் திருமாலை மறவாதிருக்க முடிந்தது (பா.மா. 712)" என்று கூறியிருப்பது, தருமனின் பிறரது நற்பண்பைப் போற்றும் பண்பைப் புலப்படுகிறது.

10. அடைக்கலம் அளிப்பவன்

எமதர்மன் தருமனைச் சோதிக்கப் புழுத்த நாயாக வந்தபோது, தருமன் அதன் தோற்றம் கண்டு அதை வெறுக்கவில்லை; அதை ஆற்றில் விடாமல் கரையேற்றுகிறான். (பா.மா.667). இச்செயல், தருமன் தன்னை தஞ்சம் அடைந்தவரைக் காக்கும் உயர்ந்த பண்பினன் என்பதைக்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

காட்டுகிறது. இத்தகு சிறந்த பண்பு படைத்த தருமன் இறுதியில் வைகுண்ட பதம் அடைந்து திருமாலருகே இருப்பதாகப் பாரத மாவிந்தம் நிறைவுபெறுகிறது.

5.1.4 வருணனை

பாரத மாவிந்தம் பேரின்பம் பெற வைகுண்டம் செல்பவர்களைப் பற்றிப் பாடுவதால், நூலில் வருணனைப் பகுதிகள் அருகியே காணப்படுகின்றன. இருப்பினும் ஆசிரியரின் கற்பனை நயத்தைக் காட்டும் ஒரு சில பாடல்கள் அமைந்துள்ளன. தண்டியலங்கார ஆசிரியர் மலை, கடல், நாடு, நகர், பருவம், இருசுடர்த் தோற்றம் என்ற வருணனைகள் காப்பியத்துள் புனையப்பெற வேண்டும் என்பார். பாரத மாவிந்தத்தில் இவை அமைந்த விதம் கீழ்வருமாறு:

1. நாட்டு வருணனை

நூலாசிரியர் சோமன் கங்கை நதியால் நீர்வளம் பெற்று நிலவளம் மிகுந்த குருநாட்டின், பொய்கையில் உள்ள மீன்கள் புதுப்புனலில் விளையாடியதைச் சிறப்பாகப் புனைந்துள்ளார். இதனைப்,

புதிதார் புனல்பொய்கை புகுந்துறவே
சதிபாய் வுறுநாள் தகர்தன் மையெனா
மதிதாழ் பொழில்மா மலர்சிந் துவரால்
குதிபா யுமெழிற் குருநா டதுவே (பா.மா.30)

என்ற பாடல் விளக்குகிறது.

2. நகர வருணனை

அழகுடன் திகழும் அத்தினபுரம் நிலமாகிய மங்கைக்கு மாலையாகத் திகழ்கிறது என்று கூறும் கற்பனையைக் கீழ்வரும் பாடல் உணர்த்துகிறது.

புகழா மமரே சபுரிக் கெதிராய்
நிகழ்வா யளகா புரிநே ரியதாய்த்
திகழா நிலமங்கை செழுந்தனமேல்
மகிழா ரம் மெனத் தினமா புரியே (பா.மா.31)

3. நில வருணனை[1]

பாரதமாவிந்தத்தில் பாலை நில வருணனையும், மருத நில வருணனையும் ஓரிரு பாடல்களில் நில வருணனையாக இடம்பெற்றுள்ளன. பாடல்கள் அந்நிலத்தின் இயல்பைச் சிறப்பாக உணர்த்துகின்றன. கதிரவனின் வெம்மை மிகுந்த கதிர்கள் பட்டுப் பூமி பிளந்து காணப்பட்ட நிலையைக் கீழ்வரும் பாடல் விளக்குகிறது.

காயுமுதிர் வெங்கதிர் படத்தாழ் சேடர்பதி
காணவழி கண்டுள திறந்தா லேபுடவி
ஆயதுகி ழிந்துசரு குற்றே நீவியெதிர்

[1] வருணனை இடம்பெற்ற பாடல்கள்: 22-34, 67, 111, 238, 245, 246, 247, 265, 641, 651, 673.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஆகியக ரிந்துபுகை யைத்தான் மாகமிசை
போயமுகி லுறிஞ்சிவர இடைச்சூ ராயகொடி
போமிடம் நினைந்துருக வெப்ப ரானபல
தீயரசெ னுங்கடவு ளர்க்கே யேயதொரு
சீர்நகரெ னுங்கன திறல்சேர் பாலையதின். (பா.மா. 247)

மருதநிலத்தின் தன்மையை,

வாவி யின்கயல் தாவு பாளையின் மதுவ ழிந்துவ யற்கணே,
மேவு நன்குரு னாட னத்தின புரியின் வீதியில் மேவினான் (பா.மா.111:3-4)

என்ற பாடலடிகள் விளக்குகின்றன.

5.1.5 தலைவன் - நிகழ்ச்சிகள்

தண்டியலங்கார ஆசிரியர் தன்னிகரில்லாத் தலைவனின் பண்பாக நன்மணம் புணர்தல், முடிகவித்தல், பொழில் நுகர்தல், புனல்விளையாடல், மதுக்கள், சிறுவரைப் பெறுதல், புலவியிற் கலத்தல், கலவியிற் கலத்தல், மந்திரம், தூது, செலவு, இகல், வென்றி என 13 நிகழ்ச்சிகளைக் கூறுகின்றார். இவற்றுள் முடிகவித்தல், தூது, மந்திரம், செலவு, இகல், வென்றி என்ற ஆறும் அரசியல் செய்திகள் அல்லது புறச்செய்திகள் ஆகும். எஞ்சிய ஏழும் அகத்தோடு தொடர்புடைய இன்பச் செய்திகளாகும்.

'தலைவன் தொடர்பான செய்திகளை நூல் பொருளென்று கூறி, இதுவே காப்பியத்தின் உயிர் நிலையாய் உள்ளதென்று' ச.வையாபுரிப் பிள்ளை[1] கூறுவார்.

1. முடிகவித்தல்

சீவகன், அவனது துறவின்போது மகனுக்கு அரசைக் கொடுத்துச் செல்வதைச் சீவகசிந்தாமணி காட்டுகிறது. பாரத மாவிந்தத்தில் தருமன் பரீட்சித்துக்கு முடிசூட்டிய நிகழ்ச்சி அத்தினபுரிச் சருக்கத்தில் அமைந்துள்ளது[2].

மங்கல வகைத்தொனி முழங்கவரு சங்கின்
பொங்கொலித ழைப்பமறை பூசுரனி சைப்பக்
கங்கைநதி யுற்றபுவி காவல னெனத்தன்
னங்கைகொ டெடுத்துமுடி வைத்தன னறத்தோன் (பா.மா.189).

2. மந்திரம்

அரசன் தன் அமைச்சர்களுடன் அரசியல் நெறிமுறைகளை ஆராய்ந்து செயல்படும் வினைத்திறமே மந்திரம் எனப்படும். கம்பராமாயணத்தில் அயோத்திய காண்டத்திலும் யுத்தகாண்டத்திலும் மந்திரப்படலம் காணப்படுகிறது. சூளாமணியில் மந்திர சாலை சருக்கம் என்ற பகுதி அமைந்துள்ளது.

---
[1] காவியகாலம் ப. 263.
[2] பா.மா.188 – 191.

Digitization by Hindu-Heritage-Foundation of America (HHFA(USA))

பாரத மாவிந்தத்தில் இரு அந்தணர்கள் வழக்கிட்டு வந்ததை ஆராய்ந்து, அதற்குத் தீர்ப்பு வழங்குமாறு தருமன் தனது அமைச்சர்களிடம் சொல்கிறான். இந்த ஒரு நிகழ்ச்சியே பாரத மாவிந்தத்தில் மந்திரம் என்று கூறும் நிலையில் காணப்படுகிறது.

3. தூது

தூது, புறப்பொருளில் பகையரசரிடம் தூது செல்வது, அகப்பொருளில் தலைவனிடமோ, தலைவியிடமோ தூது செல்வது என இரு வகையில் அமையும். பெருங்கதையில்[1], பிரச்சோதனன், பதுமையை உதயணனிடம் தூது விடுத்தது, வாசவதத்தையை மணம்புரியப் பல மன்னர்கள் மணத்தூது[2] அனுப்பியது முதலிய தூதுகள் இடம்பெற்றுள்ளன. கம்பராமாயணத்தில் அனுமன் தூது, அங்கதன் தூது முதலியன சிறப்பு வாய்ந்தவையாகும். வில்லிபுத்தூரார் தம் நூலில் உத்தியோகப் பருவத்தில் ஊலூகன் தூது, சஞ்சயன் தூது, கிருட்டினன் தூது என மூன்று தூதுகளைக் கூறுகிறார். சூளாமணியிலும் தூதுவிடு சருக்கம் இடம் பெற்றுள்ளது.

பாரத மாவிந்தத்திலும் காப்பியமரபுக்கேற்ப தூது அமைந்துள்ளது. புறநிலையில் செய்தியைத் தெரிவிக்கும் வகையில் அமைந்த தூதுகளே இங்கு இடம்பெற்றுள்ளன. ஒன்று, கண்ணன் பாண்டவர்களை அழைத்து வர அனுப்பிய தூது[3]; இன்னொன்று தன்னை அம்பெய்த வேடனிடம், வீமனையும் அர்ச்சுனனையும் அழைத்து வருமாறு அனுப்பிய தூது[4].

4. செலவு (பயணம்)

பயணமும் போரும் ஒரு காப்பியத்தின் இன்றியமையாப் பண்புகளாக அமைகின்றன. சிலப்பதிகாரத்தில் கண்ணகியும் கோவலனும் புகாரிலிருந்து மதுரை வருதல், கண்ணகி கணவனை இழந்தபின் மதுரையிலிருந்து திருச்செங்கோடு செல்லல், சேரன் செங்குட்டுவன் இமயம் சென்று கல்லொடுத்து வருதல் முதலிய பயணங்கள் குறிப்பிடப்படுகின்றன. சீவகசிந்தாமணியில் சீவகன், நந்தத்தன், பதுமுகன், விசையை முதலியோர் மேற்கொண்ட செலவுகள் இடம்பெற்றுள்ளன. இராமயாணத்தில் இராமன் 14 ஆண்டுகள் காட்டில் மேற்கொண்ட பயணம் விவரிக்கப்பட்டுள்ளது. வில்லிபுத்தூரார் பாரதத்தில் பாண்டவர்கள் அரசு இழந்து 13 ஆண்டுகள் காட்டில் பயணம் செய்தது இடம்பெற்றுள்ளது. மேலும் இரட்சணிய யாத்திரிகம் கிறித்தவனின் புனிதப் பயணத்தையும், சீவலமாறன்கதை சீவலமாறன் பல புண்ணிய இடங்கைள வழிபட்டு வந்தச் செலவையும் கூறுகின்றன. பாரத மாவிந்தம் பாண்டவர்கள் துரோபதியுடன் மேற்கொண்ட துறக்கப் பயணத்தைக் கூறுகிறது. துரோபதி மோக்கிஷம் பெற்றச் சருக்கம் முதல் கெருடனைக் காண்டற் சருக்கத்தில் தருமன் திருக்கேதாரம் அடைந்தது வரை உள்ள 437 பாடல்கள் பாண்டவர்களின் பயணத்தைக் குறிப்பிடுகின்றன. பாரத மாவிந்தத்தின் கதைக்கருவே 'செலவு' ஆகும்.

---

[1] பெருங்.4.10.
[2] பெருங். 1.36, 47- 50.
[3] பா.மா.77.
[4] பா.மா.110.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

1. பாண்டவர்கள் பயணம் செய்த தூரம்

பாரத மாவிந்தத்தில் பாண்டவர்கள் பயணம் செய்த தூரம் 2346 யோசனையாகும். ஒரு யோசனை என்பது நூறு மைல்; அங்ஙனமாயின் பாண்டவர்கள் பயணம் செய்த மொத்த தூரம் 2,34,600 மைல்களாகும். இதே முறையில் நோக்கினால் பெருந்தேவனார் பாரதம் (மாவிந்தம்), பாண்டவர்கள் 1860 யோசனை தூரம், அதாவது 1,86,000 மைல்கள் பயணம் செய்ததாகக் கூறுகிறது. தஞ்சை சரசுவதி மகால் மாவிந்தம் 2554 யோசனை தூரம் – அதாவது 2,55,400 மைல்கள் பயணம் செய்ததாகக் குறிப்பிடுகிறது. வைகுந்த அம்மானை பாண்டவர்கள் 556 காத தூரமும் 380 யோசனை தூரமும் பயணம் செய்ததாகக் கூறுகிறது. ஒரு காதம் என்பது பத்து மைல் ஆகும். இவற்றிலிருந்து பாண்டவர்கள் சென்ற பயணத்தின் தூரத்தைக் குறிப்பிடுவதில் நூல்களுக்கிடையே ஒரு ஒருங்கமைப்பு இல்லை என்பதும், ஆசிரியர்கள் தத்தம் விருப்பத்திற்கேற்பப் பயணம் செய்த தூரத்தைப் பற்றிப் பாடியிருக்கின்றனர் என்பதும் புலனாகிறது.

பயணம் செய்த தூரம் பற்றி குறிப்பிடும்போது உண்மைத்தன்மை இருக்க வேண்டும் என்று தமிழறிஞர்[1] கருதுவர். சிலப்பதிகாரத்தில் நாடுகாண் காதையில், கண்ணகி கோவலனிடம், 'மதுரை யென்னு மூதூர் யாதுதான்' என்று கேட்க, அவன், மதுரை நம் அகன்ற நாட்டிற்கு மேல் ஆறைங் காவதங் காண்' என்று கூறுகிறான். புகாரிலிருந்து மதுரைக்கு அன்றும் இன்றும் 300 மைல் தூரம்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

மதுரை மூதூர் யாதென வினவ
ஆறைங் காதநம் மகனாட் டும்பர்
நாறைங் கூந்த லணித்தென... (சிலப்.10:41-43)

2. பாண்டவர்களின் பயணத்தில் ஏற்பட்ட நிகழ்வுகள்

பாண்டவர்கள் துரோபதியுடன் சென்ற துறக்கப்பயணத்தில் அவர்களுக்குப் பல அனுபவங்கள் ஏற்படுகின்றன. அவர்கள் சென்ற வழியில், விநாயகன் அவர்களிடம் தமது நாட்டை ஆளும்படி வேண்டினார். பாண்டவர்கள் அவர் கூற்றை மறுத்து, வைகுண்டம் செல்வதற்குரிய வழியைக் கேட்டனர்; அவர் அவர்களை ஆற்றுப் படுத்தினார்.

பின்பு, பாண்டவர்கள், மேகநாதன் என்ற கந்தர்வனால் ஏற்பட இருந்த இடரிலிருந்து மீண்டு சென்றனர். மீண்டும் பாண்டவர்களுக்குப் பெண்கள் உருவில் சோதனை ஏற்பட்டது. நாகமடந்தையர் அவர்களைப் போகம் துய்க்க அழைத்தனர். பாண்டவர்கள் அதற்கு உடன்படாது சென்று, சத்திய முனிவரிடம் வைகுண்டம் செல்ல வழி கேட்டனர். அவர் பாம்பு உருவில் அவர்களுக்கு வரப்போகும் இடரை அறிவுறுத்தி வழிகாட்டி உதவினார். பாண்டவர்கள் தாம் சென்ற வழியில் எதிர்வந்த பாம்பு, மலை, குதிரைமுகப்பெண், ஆறு முதலியோரின் சாபத்தை நீக்கினர். பாண்டவர்கள் காட்டில் சென்றுகொண்டிருக்கும் போது

[1] நூற்கடல் தி.வே.கோபாலையர்.

Digitization by Hindu-Heritage-Foundation of America-HHFA(USA)

முதலில் துரோபதி விண்ணுலகடைந்தாள். அங்கிருந்து அகன்று பாண்டவர்கள் ஒரு சிங்கத்தின் குகையை அடைந்தனர். வீமன் சிங்கத்தின் சாபத்தை நீக்கினான். ஏனமுனிவர் பாண்டவர்களுக்கு உணவு அளித்து வைகுண்டம் செல்வதற்குரிய வழிகாட்டி யருளினார்.

பின்பு, அவர்களுக்கு அரக்கி உருவில் தடை ஏற்பட்டது. பாண்டவர்கள் அரக்கியின் வாயில் புகுந்ததும், அவளுடைய சாபம் விலகியது. அவர்கள் அங்கிருந் தகன்று துர்வாச முனிவரின் நகரை அடைந்தனர். அவர் பாண்டவர்களிடம் பற்றற்ற உள்ளத்துடன் செல்பவர் இறைவனைக் காண்பது உறுதி என்று அவர்களது பயணத்தின் பயனைக் கூறினார். வழியில் கயிலாயன் என்ற அரக்கன் பாண்டவர்களை விழுங்கினான்; வீமனின் வலிமையால் அவர்கள் வெளிவந்தனர். திருமால் அனுப்பிய கருடன் பாண்டவர்களை அத்தினபுரம் செல்லும்படித் தூண்டியது. அவர்கள் அதற்கு இசைய மறுத்து, இறைவனை அடைவதே தம் குறிக்கோள் என விடையளித்தனர். அப்போது சகாதேவன் உயிர்நீத்து விண்ணுலகடைந்தான்.

அவர்கள் சென்ற வழியில், சில கன்னியர் பாண்டவர்களைப் பொன்னுலகத்திற்கு அழைத்தனர். தருமன் அதற்கிசையவில்லை. மேலும் வானரத் தலைவன், மனித விலங்கு ஆகியோரும் அவர்களை அழைத்தனர். பாண்டவர்கள் தமக்கு மண்ணாசையில்லை என்று கூறி மறுத்தனர். மூன்றாவதாக நகுலன் விண்ணுலகடைந்தான். பாண்டவர்கள் சென்ற வழியில் ஒரு யானை வந்தது. யானையின் சாபம் வீமனால் விலகியது. பின்பு, பூதமுனிவர் தமது மகளிரை அவர்களுக்குத் தருவதாகக் கூறினார் பாண்டவர்கள் தமக்குக் கன்னியராசை இல்லை என்று கூறி மேலும் நடந்து சென்றனர். பின்பு அவர்கள் ஒரு புலியின் சாபத்தை நீக்கினர். நான்காவதாக அர்ச்சுனன் விண்ணுலகடைந்தான். வீமனும் தருமனும் ஒரு பன்றியின் சாபத்தை நீக்கினர். ஐந்தாவதாக வீமன் விண்ணுலகடைந்ததைக் கண்டு தருமன் மிகவும் வருந்தி அழுதான்.

சக்கரத்தாழ்வார் தருமனைப் பாம்பு, மலை, ஆறு முதலியவற்றால் ஏற்படவிருந்த துன்பங்களிலிருந்து மீட்டார். 'சிங்கம்' என்ற பறவைத் தருமனுக்கு ஓர் அழகிய நகரம் அமைத்துத் தருவதாக ஆசை வார்த்தை கூறியது. தருமன் அதற்கு இணங்கவில்லை. எமதர்மன், நாய் வடிவத்தில் வந்து தருமனைச் சோதித்தார். தருமன் அச்சோதனையிலும் வென்று வைகுண்டம் அடைந்தான். இவ்வாறு பாரத மாவிந்தம் நெடும்பயணமாக அமைந்துள்ளது. பற்றற்றுத் தன்னைப் பற்றும் ஆன்மாக்களுக்கு இறைவன் அருள் செய்யும் நிலையை இங்குக் காணமுடிகிறது.

5.1.6 சந்தி

சந்தி என்பது கதைப்பொருளின் தொடர்ச்சி பற்றிய போக்கை ஆய்வது ஆகும். இச்சந்தி நாடகக் காப்பியத்திற்கே அன்றி இயற்றமிழ்க் காப்பியத்திற்கும் உரியது. சந்தி ஐந்து வகைப்படும். இவற்றை முறையே வித்து, முளை, தழைத்தல், விளைவு, துய்த்தல் என்று தண்டியலங்கார உரையாசிரியர் கூறுவார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பாரத மாவிந்தம் ஒரு பெருங்காப்பியத்தின் விளைவு, துய்த்தல் என்னும் இறுதிப் பகுதிகளை மட்டும் கொண்டு எழுந்த நூலாகும். ஆகையால் இதில் நிகழ்ச்சிகளின் சிக்கல் குறிப்பிடத்தக்க வகையில் அமையவில்லை. எனினும், இதில் அமைந்துள்ள கதைப்பகுதியில் இவ்வைந்து உறுப்புகளும் அமைந்துள்ள பாங்கு கீழே விளக்கப்பெற்றுள்ளது.

1. வித்து

வித்து என்பது கதையின் தொடக்க நிலையைக் குறிக்கும். "கதைக்கேற்றபடி தோற்றுவாய்ச் சிறிதாகவோ பெரிதாகவோ இருக்கலாம். ஆனால் அதன் முடிவு படிப்பவர்க்கு எளிதில் புலனாகிவிடும்படி அமைந்திருக்க வேண்டும். சிக்கல் எங்குத் தட்டுப் படுகின்றதோ அவ்விடம் தோற்றுவாயின் முடிவாக இருக்கும்." என்று எஸ்.ஆர். மார்க்கபந்து சர்மா[1] கருதுவார்.

பாரத மாவிந்தத்தில் திருநாட்டுச் சருக்கத்தில் தொடங்குகிறது வித்து. சனமேசயனுக்குப் பிரம்மகத்தித் தொடர்வதும், அது நீங்க அவன் பாண்டவர்கள் மாவிந்தம் சென்ற கதை கேட்பதும் இப்பகுதியில் அடங்குகின்றன.[2] தோற்றுவாயின் முடிவுக்கும் போராட்டத்தின் தொடக்கத்திற்கும் இடையே காலக்கழிவைக் குறிப்பிடுவது ஷேக்ஸ்பியர் வழக்கம் என்று எஸ்.ஆர்.மார்க்கபந்து சர்மா[3] குறிப்பிட்டுள்ளார்.

பாரத மாவிந்தக் கதை, கண்ணன் துவாபரயுகத்தின் இறுதிக்காலத்தில் பாண்டவர்களிடம், "கலி புகுந்திடில் நிற்கிலீர் ... மகவிந்தமே படர்மின்" (பா.மா.96) என்று கூறுவதாக அமைந்துள்ளது. கண்ணனின் கூற்றும் பாண்டவர்கள் மகவிந்தம் செல்வதற்குரிய சூழல் (சிக்கல்) உருவாகும் என்பதை உணர்த்தி நிற்கிறது.

2. முளை

வித்தில் கூறப்பட்ட சிக்கலைப் பெரிதாக்கிக் காட்டுவது முளையாகும். இது போராட்டம் என்றும் கூறப்படும். "போராட்டம் வெளிமுகப் போராட்டம் உள்முகப் போராட்டம் என இருவகைப்படும்" என்பார் வெ.பழனியப்பன்.[4] பாரத மாவிந்தத்தில் இருவகைப் போராட்டமும் இடம்பெற்றுள்ளன.

இப்பகுதியில், கண்ணன் பாண்டவர்களைக் காட்டிற்குச் செல்லும்படிக் கூறியதும், துர்வாச முனிவர் சாபத்தால் யாதவ குலம் அழிந்து கண்ணன் பரமபதம் அடைந்ததும், வீம அர்ச்சுனர் வலிமை இழந்ததும், கலிகாலத்தின் வருகையும், பாண்டவர்கள் காடு சென்றதுமான நிகழ்ச்சிகளைக் கொண்ட துவராபதிச் சருக்கம், துருவாசச் சருக்கம் அத்தினபுரிச் சருக்கம் முதலியவை[5] அடங்கும்.

---

1 சிலம்பின் இரசனை. ப. 63
2 பா.மா.22-76
3 சிலம்பின் இரசனை, ப.64.
4 புகழேந்தியும் நளவெண்பாவும், ப.119.
5 பா.மா. 77 – 236

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

3. தழைத்தல்

பேராட்டத்தின் உச்ச நிலைக்குக் கதை கருவைக் கொண்டு செல்லும் கவிஞன் அதன் முடிவு எவ்வாறு இருக்குமோ என்ற உணர்வைப் படிப்பவர் மனத்தில் ஏற்படுத்தும் வகையில் அமையும் நிலை 'தழைத்தல்' ஆகும். பாண்டவர்களுக்கு வெளிமுகப் போராட்டமும் உள்முகப் போராட்டமும் ஏற்படுகின்றன. மேகநாதன், கயிலாயன், சாபநீக்கம் அடைந்தவர் முதலியவர்களால் வெளிமுகப்போராட்டமும், அவர்களுக்கு நாடும், நங்கையும் தருவதாக அழைப்பவர்களால் உள்முகப் பேராட்டமும் நேரிடுகின்றன. இது பாத்திரங்களின் பண்பைக் காட்டும் மனப்பேராட்டமாக உள்ளது. துரோபதி விண்ணுலகடைதல், பாண்டவர்களால் பலர் சாபநீக்கம் பெறுதல், தருமனின் தம்பியர் விண்ணுலகடைதல் முதலிய நிகழ்ச்சிகள்[1] தழைத்தலில் இடம்பெறுகின்றன.

4. விளைவு

விளைவு என்பது பேராட்டத்தின் வளர்ச்சியை, கதையின் இறுதியைக் குறிப்பிடுவதாகும். இது பேராட்டத்தின் இறுதியில் ஏற்படும் வெற்றி தோல்வியைச் சுட்டும். தருமன் தனக்கேற்பட்ட சோதனைகளில் வென்று விண்ணுலகடைந்தது, சொர்க்க நரகம் கண்டது, துரியோதனன் முதலியோரை நரகத்திலிருந்து மீட்டது ஆகிய நிகழ்ச்சிகள்[2] இப்பகுதியில் அடங்கும்.

5. துய்த்தல்

துய்த்தல் என்பது காப்பியத்தின் இறுதிப் பகுதியாகும். தருமன், 'இராச இருடி' என்று பட்டம் பெறுதலும், வைகுண்டபதம் அடைந்து பேரின்ப வாழ்வு பெறுதலும் துய்த்தலில்[3] இடம்பெறும்.

5.1.7 பகுப்புகள்

தண்டியலங்காரம், சருக்கம், இலம்பகம், பரிச்சேதம் என்ற பகுப்புகளைக் கொண்டதாகக் காப்பியம் அமையவேண்டும் என்று கூறுகிறது. சிலப்பதிகாரம், கம்பராமாயணம், பெரியபுராணம் முதலிய நூல்கள், காண்டம் என்ற பெரும்பகுப்பையும், முறையே காதை, படலம், சருக்கம் என்ற உட்பகுப்பையும் கொண்டனவாகும். வில்லிபாரதம் பருவம் என்ற பெரும்பகுப்பையும், சருக்கம் என்ற உட்பகுப்பையும் கொண்டதாய் விளங்குகிறது. சீவகசிந்தாமணியில் மட்டுமே 'இலம்பகம்' என்ற பகுப்பு காணப்படுகிறது.

[1] பா.மா.237 – 621.
[2] பா.மா.622 – 716.
[3] பா.மா.717 – 750.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பாரத மாவிந்தம் சருக்கம் என்ற பகுப்பைக் கொண்டது. இந்நூல் பாயிரத்துடன் தொடங்கி ஏழு சருக்கங்களைக் கொண்டது. பாரத மாவிந்தத்தில் காணப்படும் பாடல்களின் எண்ணிக்கை[1] கடவுள் வாழ்த்து, பாயிரம் உட்பட 760 ஆகும்.

பாரத மாவிந்தம் என்னும் இந்நூல் பாயிரம் நீங்கலாக ஏழு சருக்கங்கள் கொண்டது. ஒவ்வொரு சருக்கத்திலும் உள்ள பாடல் எண்ணிக்கை ஒரு சீராக அமையவில்லை. துவராபதிச் சருக்கம் மிகக் குறைந்த பாடல்களையும் (21), இறுதி இரு சருக்கங்களும் கூடுதலான பாடல்களையும் (208, 227) கொண்டுள்ளன.

சருக்கங்களின் பெயர் வைப்புமுறை

சிங்கத்தின் கதைச் சருக்கத்தில் பல நிகழ்ச்சிகள், கதைகள் இடம்பெற்றுள்ளன. தருமன் விரிவாகக் கூறும் எல்லாக் கதைகளும் இச்சருக்கத்திலேயே காணப்படுகின்றன. அந்நிகழ்ச்சிகளின் அடிப்படையில் இச்சருக்கத்தின் பெயர் அமையவில்லை. பாண்டவர்கள் ஒரு சிங்கத்தின் சாபத்தை நீக்கிய நிகழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டு, சிங்கத்தின் கதைச்சருக்கம் என ஆசிரியர் பெயர் குறிப்பிட்டுள்ளார் போலும். இச்சருக்கத்தின் பெயர், 'தருமன் கதை கூறும் சருக்கம்' என்று இருப்பின் பொருத்தமாக அமைந்திருக்கும். கருடனைக் காண்டற் சருக்கம் என்ற பெயர் திருமால் கருடன் மீது காட்சி அளித்ததன் அடிப்படையில், அவருக்கு ஏற்றம் தரும் வகையில் அமைந்துள்ளது. இச்சருக்கத்திற்கு, 'முக்தி அளித்த சருக்கம்' என்ற பெயர் இருந்தால், இன்னும் பொருத்தமாக இருந்திருக்கும். துரோபதி மோக்கிஷம் பெற்றச் சருக்கத்தில் பல நிகழ்ச்சிகள் இடம் பெற்றிருந்தும், துரோபதி வீடுபேறடைந்த நிகழ்ச்சிக்கு முதன்மை அளித்துத் துரோபதி மோக்கிஷம் பெற்ற சருக்கம் என்று தலைப்பு வழங்கப்பட் டுள்ளது. ஏனைய முதல் நான்கு சருக்கங்களின் பெயர்களும் பொருத்தமாக அமைந்துள்ளன.

5.1.8 சுவையும் மெய்ப்பாடும்

'கேட்போர் விரும்பச் சுவையும் பாவமும் அமைய வேண்டும்', என்பார் தன்டியலங்கார ஆசிரியர் (8). பாவம் என்பதற்கு மெய்ப்பாட்டுக் குறிப்பு என அதன் உரையாசிரியர் உரை கூறுவார். கவிதைக்கு வேண்டிய அழகுகளுள் ஒன்று சுவை. "முதலில் தோன்றிய பாவம் பின்னர் வேறொரு பாவத்தால் கேடுறாமல் நிலைபெற்று வளர்ச்சியடைந்து துய்க்கப்படும்போது சுவை எனப்படும்", என்று வே.வேங்கடரா ஜுலு ரெட்டியார்[2] தம் கட்டுரையில் குறிப்பிடுகின்றார்.

வடநூலார், சுவை என்று கூறுவதைத் தொல்காப்பியர் "மெய்ப்பாடு" என்று கூறுவார். அவை,

---

[1]காப்பு -1 ; பாயிரம் 21; திருநாட்டுச் சருக்கம் 55 ; துவராபதிச் சருக்கம் 21; துருவாசச் சருக்கம் 59 ; அத்தினபுரிச் சருக்கம் 80 ; துரோபதி மோக்கிஷம் பெற்ற சருக்கம் 79 ; சிங்கத்தின் கதைச் சருக்கம் 208 ; கெருடனைக் காண்டற் சருக்கம் 227, மிகையான பாடல்கள்-9 .

[2]"குறிப்பும் சுவையும் -பாவமும் ரசமும்", தென்மொழிக் கட்டுரை, 1964, ப.115).

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்று
அப்பால் எட்டே மெய்ப்பாடு என்ப (தொல். மெய். 3)

என்னும் எட்டு மெய்ப்பாடுகளாகும். பாரத மாவிந்தத்தில் ஆறு மெய்ப்பாடுகள் அமைந்துள்ளன.

1. நகை

தொல்காப்பியர் எள்ளல், இளமை, பேதைமை, மடமை இவற்றின் அடிப்படையில் நகை தோன்றும்[1] என்பார். பாரத மாவிந்தத்தில் நகையின் பொருளான எள்ளல் இடம்பெற்றுள்ளது.

பாண்டவர்கள் துறக்கப் பயணம் சென்றபோது, தருமன் தன் எதிரே கண்ட காட்சியைக் கண்டு சிரித்த நிலையில் எள்ளல் சுவை வெளிப்படுகிறது. ஒருவன் தன்னுடைய தாயைத் தலையில் சுமை எடுக்க வைத்து, மனைவியைக் கைப்பிடித்து வரும் காட்சி எள்ளல் சுவையைத் தோற்றுவிக்கிறது. இதற்குத்,

தாயர்தலை யிற்சுமை யெடுத்தியிசை தையல்
ஆயவள்கை பிடித்தொருவன் உற்றிட வறத்தோன்
நேயசக தேவன்முகம் நோக்கிநகை செய்தா" (பா.மா.234)

என்ற பாடல் தக்க சான்றாகும். பாரத மாவிந்தத்தில் 570 ஆம் பாடலிலும் எள்ளல் சுவை வெளிப்படுகிறது.

2. அழுகை[2]

அழுகைச் சுவை இளிவு, இழவு, அசைவு, வறுமை என்ற நான்கையும் நிலைக்களனாகக் கொண்டு பிறக்கும்.[3] பாரத மாவிந்தத்தில் இழவுப் பொருள்"[4] இடம்பெற்றுள்ளது. இழவு என்பது தாய் தந்தை முதலிய சுற்றத்தாரையும், நுகர்ச்சிப் பொருள்களையும் இழத்தல் என்பார் பேராசிரியர். தருமன் வீமனை இழந்து வருந்திய நிலையை,

அணைத்திடும் எடுக்கும் அரற்றும் ஆதரிக்கும்
மருண்டுடல் புரண்டிடும் அருளின்
துணைத்ததன் முகத்தை முகத்துட னழுத்துந்
துய்யதாள் முடியினிற் சூட்டும்
பணைத்ததின் டோறிற் றோளினைக் கூட்டிப்

---

[1] தொ.பொ. மெய்.4.
[2] இழவுப்பொருள் இடம்பெறும் பாடல்கள் – 108, 109, 121, 122, 124, 220-224, 609, 611, 612, 613. 617, 618, 620, 621.
[3] தொ.பொ.மெய். 5.
[4] பாரதமாவிந்தம்--. இழவுச்சுவையில் அமைந்த பாடல்கள் 108, 109, 121, 122, 124, 220-224, 609, 611, 612, 613, 617, 618, 620, 621.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பதைத்திடும் மகத்திறல் படைத்த
மணிச்செழுங் கரத்தை இணைக்கணில் ஒற்றும்
மயங்கிடும் முயங்கிடும் தருமன் (பா.மா. 610)

என்ற பாடல் தெரிவிக்கிறது.

3. இளிவரல்

இளிவரல், மூப்பு, பிணி, வருத்தம், மென்மை என்ற நான்கின் அடிப்படையில் தோன்றும்[1]. இங்குப் பிணி அடிப்படையில் தோன்றிய மெய்ப்பாடே காணப்படுகிறது. எமன் தருமனைச் சோதிக்க ஊனமேற்பட்ட வலிமை குலைந்த புழுத்த நாயாக வரும் நிலை, பிணி அடிப்படையில் எழுந்த இளிவரல் ஆகும்; இதற்குச் சான்று கீழ்வரும் பாடல்.

காலனார் திறல்கொள் பாலனார் நெஞ்சங் கவன்றிட விழித்தகு மெய்யின்
நாலுகால் கொண்டு தவ்வியே தொய்வின் நடந்துமெய் நடுங்குறச் சிலிர்த்து
வாலது குழைத்து மெய்மயிர் பொடிப்ப வாய்திறந் தூறிநா வசைத்துச்
சீலமி லாதார் போல நாயாகி.... (பா.மா.664)

4. மருட்கை

மருட்கை என்பது புதுமை, பெருமை, சிறுமை, ஆக்கம் ஆகிய நான்கின் அடிப்படையில் தோன்றும்.[2]

பாண்டவர்கள் சென்ற வழியில் யானை அண்ட கோளங்களும், எட்டுத் திசைகளும் அதிர்ச்சியடையப் பூமியும் பிளப்பிடமாகுமாறு பிளந்து, அப்பிளப்புப் பாதாளம் வரை ஊடுருவிச் செல்லப் பூமியை மிதித்தது, துதிக்கையில் மரங்களை எடுத்து நாலு திசைகளிலும் எறிந்து, தன் நிழலைத் தந்தங்களினால் குத்தி, பாண்டவர்கள் மலையை நெருங்கி வரும் வழியை நோக்கிச் செருக்குடன் குறுக்கே நின்றது. இங்கு ஆக்கம் அடிப்படையில் தோன்றிய மெய்ப்பாடு காணப்படுகிறது.

அண்டகோ ளகையு மெண்டிசா முகமும் அதிர்வுறப் புடவியும் விடராய்
விண்டுபா தாள மோடுமூ டுருவ மிதித்ததுத் துதிக்கையிற் றருக்கள்
கொண்டுநாற் றிசையும் வீசியே நிழலைக் குத்தியே மருப்பினிற் பொருப்பைத்
தண்டியே நிருபர் வரும்வழி நோக்கித் தறுகணோ டெதிர்ந்தது தருக்கி (பா.மா.658)

5. அச்சம்

அச்சம் என்பது அணங்கு, விலங்கு, கள்வர், தம்இறை ஆகிய நான்கையும் களமாகக் கொண்டு பிறக்கும்.[3] இவற்றுள் விலங்கு அடிப்படையில் எழும் சுவையைத் தவிர வேறு

---
[1] தொ.பொ.மெய். 6.
[2] தொ.பொ.மெய்.7.
[3] தொ.பொ.மெய். 8

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சுவைகள் பாரத மாவிந்தத்தில் இல்லை. விலங்கின் அடிப்படையில் எழுந்த சுவைக்குச் சினத்துடன் நிற்கும் யானையின் இயல்பைக் காட்டும் பாடல் சான்றாக விளங்குகிறது.

"அண்ட கோளகையும் எண்திசா முகமும் அதிர்வுறப் புடவியும் விடராய்
விண்டு பாதாள மோடு மூடுருவ மிதித்து துதிக்கையிற் றருக்கள்
கொண்டு நாற்றிசையும் வீசியே நிழலைக் குத்தியே மருப்பினிற் பொருப்பைத், தண்டியே ...
...." (பா.மா.568).

6. பெருமிதம்

பெருமிதம் என்னும் மெய்ப்பாடு கல்வி, தறுகண், இசைமை, கொடை என்பவற்றின் அடிப்படையில் பிறக்கிறது[1]. இவற்றுள், தறுகண் ஒன்றே இடம்பெற்றுள்ளது.

தறுகண் என்பது வீரம் ஆகும். வீமன் கால தூதரைக் கண்டு அஞ்சாது வீரத்துடன் போரிட முற்படும்போது இச்சுவை வெளிப்படுகிறது. இதனைச்,

சென்றிடு நெறியி னெறிந்த குஞ்சியுமச்
சினத்தொடு மடித்தவாய் தானுங்
குன்றியின் சிவந்த கண்களும் சூலம்
கொண்டுறு கரத்தட னெதிரே
நின்றுள கால தூதரைக் கண்டு
நெருக்கியே தருக்கிய வலியின்
முன்றிறற் பெரும்போ ராகவே வீமன்
முனைந்தடல் புரிந்திட மூண்டான் (பா.மா.602)

என்ற பாடல் புலப்படுத்துகிறது.

7. வெகுளி

இது உறுப்பறை, குடிகோள், அலை, கொலை என்னும் நான்கனானும் பிறக்கும்[2]. துரோபதியைத் தூக்கிச் செல்ல முயன்ற மேகநாதனைக் கண்ட வீமன், எட்டுத் திசைகளும் உடைந்து எதிர்ப்பட்ட மலைகள் நடுங்க, மிக்க சினங்கொண்டு, மேகநாதனை எதிர்த்து வலிமையோடு தேவருலகம் அஞ்சுமாறு அவன் நின்ற நிலையில் வெகுளிச்சுவையில் ஒன்றான, அலை வெளிப்படுகிறது.

கண்டவீம னெண்டிசையும் விண்டுநேர் நடுங்கவெதிர்
கன்றுநீள் சினங்க துவவே
மண்டியே புகுந்துகிரி யொன்றினோ டொன்றுபொரு
வனபோல வுங்கு முறியே
சண்டவாயு வுங்கரிய கொண்டலான தும் பெரிது
தங்கனேர்ம லைந்த தெனவுங்
கொண்டபே ருரங்களோடு மண்டரூர் பயங்கதுவு
கொம்புபோர் விளைந்த பொழுதின் (பா.மா.259)

[1] தொ.பொ. மெய். 9
[2] தொ.பொ.மெய்.10.

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA).

8. உவகை

செல்வம், புலன், புணர்வு, விளையாட்டு என்னும் நான்கின் அடிப்படையில் உவகை[1] பிறக்கும்.

1. தருமன் விண்ணுலகம் சென்றபோது விண்ணவர் அவனைப் பலவாறு பாராட்டி அதனால் அவன் அடைந்த பேரின்ப செல்வமே பாரத மாவிந்தத்தில் உவகைச் சுவைக்குரிய பாடல்.

ஈண்டு நின்றெழுந் திருடிக ளிருபுறஞ் சூழ
வாண்ட நாயக னரிபதஞ் சேரவே யயனால்
மீண்டு மாமணித் தேரின்மீ தேறிவிண் குலவு
மாண்ட குந்திரு வைகுண்ட நோக்கினன் றருமன் (பா.மா.725)

2. அத்தினபுரிச் சருக்கத்தில் இரு அந்தணர் தமக்குள் வழக்கிட்டுத் தருமனிடம் வந்தனர்; வழக்கைக் கேட்டறிந்தான் தருமன்.

அறிவுடைய இரு அந்தணர்களின் இயல்பை, அவர்கள் பேசும் நல்ல வார்த்தைகளைக் கேட்டுத் தான் வாழும் அத்தினபுரி நகரத்தின் தன்மையை எண்ணித் தருமன் மட்டற்ற மகிழ்ச்சியடைந்து உவகையடைகிறான். இது அவன் செவிப்புலனால் பெற்ற உவகைக்கு எடுத்துக்காட்டாக விளங்குவதாகக் கொள்ளலாம்.

ஞானமறை யோர்மொழியும் நன்மொழி நவின்றே
தானுறை தலத்தியல்பு தன்மன்மகிழ் வுற்றே
மானமதி மந்திரியர் தம்மைவரு கென்ன
வானவிவ் வழக்கினை யறுத்துரைமி னென்றான் (பா.மா.165)

9. சமநிலை

சமநிலை உலகியல் நீங்கியோர் தன்மை என்பதால் அதற்கெனத் தனியான மெய்ப்பாடு இல்லை. எனவே, தொல்காப்பியர் இது குறித்துச் சிறப்பாக கூறவில்லை என்பது பேராசிரியர் கருத்தாகும்.

தருமன் துரோபதியுடன் தம்பியரையும் அழைத்துக் கொண்டு பற்றற்று மாவிந்தம் சென்ற நிலை இச்சுவையின் வெளிப்பாடாக அமைந்துள்ளதாகத் தெரிகிறது[2].

தொல்காப்பியர் கூறிய சுவைகளின் சில கூறுகளையே பாரத மாவிந்தத்தில் காணமுடிகிறது. இந்நூல், பாரதக்கதையின் பின் நிகழ்ச்சியாக அமைந்த துறக்கப் பயணத்தைக் கூறுவதால் சுவைகள் குறித்து மிகுதியான பாடல்கள் இடம்பெறவில்லை போலும். இந்நூல் இறப்பு, முடிவு முதலிய செய்திகளைத் தரும் நிலையில் அமைந்துள்ளதால் எல்லாச் சுவைகளிலும் மிகுந்து நிற்பது அழுகைச் சுவையாகும். இங்குத் தருமனைத் தவிர மற்றெல்லோரும் இறந்துவிடுகின்றனர். தருமன் உடலோடு விண்ணுலகம் செல்கிறான்.

---

[1] தொ.பொ.மெய்.11.
[2] இதற்குச் சான்றாக அமையும் பாடல் பார்க்க : இயல் 5. எண். 12 .1.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

எண்வகைச் சுவையும் காப்பியத்தில் அமைதல் வேண்டும் என்று வலிந்து முயலுதல் ஆகாது. காப்பியத்தில் அமையும் நிகழ்ச்சிகளுக்கேற்பச் சில சுவைகள் அமையினும் போதுமானதாகும் என்று மு.வரதராசன்[1] கூறியதற்கேற்ப பாரத மாவிந்தத்தில் நிகழ்ச்சிகளுக்கேற்ற மெய்ப்பாடுகள் அமைந்துள்ளன.

10. பேரின்ப முடிவு

பாரத மாவிந்தத்தில் துறக்கப் பயணம் மேற்கொண்ட அனைவரும் வீடுபேறடைகின்றனர். பாண்டவர்களும் துரோபதியுமாக அறுவர் சென்ற பயணத்தில் ஒருவர் பின் ஒருவராக உயிர் துறக்கின்றனர். ஒவ்வொருவர் இறக்கும்போதும் அவர்களுடைய பிரிவுத்துயர் தாங்காது பிறர் வருந்துகின்றனர். தருமன் தம்பியரையும் மனைவியையும் இழந்து துயருற்று வருந்துகிறான். இருப்பினும் பயணம் மேற்கொண்ட அனைவரும் சுவர்க்கம் எய்துகின்றனர். சிற்றின்பத்தினும் பேரின்பமே பெரிது. தம்பியரை இழந்த தருமன் இறுதியில் வைகுண்டபதம் எய்தி பேரின்பம் பெறுவதால், பாரத மாவிந்தம் பேரின்ப முடிவு கொண்ட இன்பியல் நூல்.

5.2 பிற காப்பியப் பண்புகள்

இலக்கியங்கள் கூறும் காப்பியப் பண்புகளுள் சில பாரத மாவிந்தத்தில் இடம்பெற்றுள்ளன. அவை கீழ் வருவன:

1. பாத்திரப் படைப்பு

ஒரு காப்பியத்திற்கு இன்றியமையாதவையாக விளங்குவது பாத்திரங்கள் ஆகும். அவை முதன்மைப் பாத்திரம், துணைப் பாத்திரம் என இருவகைப்படும்.

முதன்மைப் பாத்திரம் என்பது காப்பியம் முழுமையும் வந்து அப்பாத்திரம் இல்லையேல் காப்பியம் இல்லை என்று சொல்லும் வகையில் சிறப்புடையதாய் அமைவதாகும். கதை வளர்ச்சிக்குத் துணைவருவன துணைப் பாத்திரங்கள்.

பாரத மாவிந்தத்தின் முதன்மைப் பாத்திரங்களாகப் பாண்டவர்களும் துரோபதியும் விளங்குகின்றனர். கண்ணன், சனமேசயன், வியாசர், துர்வாசர், பரீட் சித்து, குந்தி, காந்தாரி, வேடன், அந்தணர் முதலியோர் துணைப் பாத்திரங்களாகும். துணைப்பாத்திரங்களில் சனமேசயன், கண்ணன், துர்வாசமுனிவர், வேடர் ஆகியோரைத் தவிர மற்றெல்லாப் பாத்திரங்களும் பெயரளவிலேயே இடம்பெற்றுள்ளன. பாரத மாவிந்தம், மகாபாரதத்தின் கதை முடிவைக் கூறுவதால் இங்குப் பாத்திரப் படைப்புக் குறிப்பிட்டுச் சொல்லும்படி அமையவில்லை என்று கருதத் தோன்றுகிறது.

[1] இலக்கிய மரபு, ப. 60.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

1.1 தருமன்

ஆசிரியர் தருமனைப் பற்றியே மிகுதியாகக் கூறியுள்ளார். (மேலும் பார்க்க: இயல் 5. எண். 1.3)

1.2 துரோபதி

பாரத மாவிந்தத்தில் இடம்பெறும் ஒரே பெண் பாத்திரம் துரோபதி. அவள் துன்பம் வந்த காலத்தும் பாண்டவர்களைப் பிரிய விரும்பாத உத்தமப் பெண்ணாகவும் (பா.மா.244), அக்கினி தேவன் போற்றத் தகுந்தவளாகவும் (பா.மா.271), தருமன் செய்த தவம் போலவும் (பா.மா.231) விளங்குகிறாள்.

1.3 சனமே சயன்

சனமே சயனால் பாரத மாவிந்தம் என்ற கதை கேட்கும் சூழல் உருவாகும் நிலை ஏற்படுகிறது.

1.4 கண்ணன்

கண்ணன் கலிகாலத்தின் வருகையைக் கூறிப் பாண்டவர்களை வைகுண்டம் செல்லும் படி அறிவுரை கூறுகிறார்[1]. அவர் மண்ணுலகில் மட்டுமன்றி விண்ணுலகிலும் பாண்டவர்களை மேலான நிலை அடையும்படிச் செய்கிறார். கண்ணன், இறக்குந் தருவாயில் வீம அர்ச்சுனரிடம் தன் நாட்டுமக்களைக் காக்கும்படி வேண்டுவது அவரது கடமை உணர்வைக் காட்டும் நிலையில்[2] அமைந்துள்ளது.

1.5 துர்வாச முனிவர், வேடன்

துர்வாச முனிவரிட்ட சாபத்தால் யாதவர்கள் அழித்தனர். வேடன் எய்த அம்பால் கண்ணன் விண்ணுலகெய்தினார். இவ்விருவரின் செயலால் யாதவ குலம் முழுவதும் அழிந்ததைத் துருவாசச் சருக்கம் காட்டுகிறது.

மேலே கூறியவற்றை நோக்கும்போது, பாரத மாவிந்தத்தில் பாத்திரங்களின் பண்பு வளர்ச்சி ஓரளவே இடம்பெற்றுள்ளது என்று கொள்ளலாம்.

5.3 வழிகாட்டுபவர்

நீண்டபயணம் செல்பவர் சரியான வழியில் செல்லப், பலர் அவர்களுக்கு வழிகாட்டுவதாக அமையும் பாங்கைத் தமிழிலக்கியங்களில் காணலாம். சிலப்பதிகாரம், கோவலன் கண்ணகியோடு மதுரையை நோக்கிச் சென்றபோது, கவுந்திஅடிகள் அவர்களுக்கு வழிகாட்டியதையும், மாங்காட்டு மறையோன் மதுரைக்குச் செல்ல மூன்று வழிகளைக்

---

[1] பா.மா. 96.
[2] பா.மா.118.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கூறியதையும் நாடுகாண்காதையிலும் காடுகாண்காதையிலும் சீவகனுக்குச் சுதஞ்சணன் வழிகாட்டியதைக் சீவகசிந்தாமணி குறிப்பிடுகிறது. கூறுகிறது.

பாண்டவர்கள் மாவிந்தம் சென்றபோது, அவர்களுக்கு ஆதிபகவன், சத்திய மாமுனி, ஏனமாமுனி, துர்வாச முனிவர், வானரத் தலைவன், பூதங்கள், முனிவரின் மகன், வனதேவதை, மனிதவிலங்கு முதலியோர்[1] வழிகாட்டித் துணை புரிந்தனர் என்று பாரத மாவிந்தம் கூறுகிறது.

5.4 கிளைக்கதைகள்

கிளைக்கதைகள் மூலக்கதைக்குத் துணையாக அமைவனவாகும். பாரத மாவிந்தமும் பல கிளைக்கதைகளைக் கொண்டு விளங்குகிறது. சிலப்பதிகாரம், மணிமேகலை, கம்பராமாயணம், வில்லிபுத்துரர் பாரதம் போன்ற நூல்கள் மிகுதியான கிளைக்கதைகளைக் கொண்டுள்ளன. பாண்டவர்கள் மாவிந்தம் சென்ற கதையைக் கேட்பதற்குரிய தருணத்தை உருவாக்கும் நிலையில், அந்தணனைக் கொன்ற பாவம் சனமேசயனைத் தொடர்ந்தது, அப்பாவம் நீங்க அவன் மாவிந்தக்கதை கேட்பது முதலியவை பொருத்தமாக அமைந்துள்ளன. அதுபோலவே, கலிகாலத்தின் வருகையைச் சுட்டிக் காட்டப்பெறும் அந்தணர்கள் வழக்கிட்ட கதையும் அமைந்துள்ளது. தருமன் தம்பியர்க்குக் கூறிய பாகவத இராமாயணக் கதைகள், இறைவனை நாடிச் செல்பவர், இறையுணர்வோடு செல்ல வேண்டும் என்ற கருத்தை உணர்த்தும் நிலையில் விளங்குகின்றன. சாபநீக்கம் பெற்ற கதைகளும் இந்நூலில் சிறப்பாக அமைந்துள்ளன. இங்ஙனம், பாரத மாவிந்தம் பல பெருங்காப்பியக் கதைகளைக் கிளைக்கதைகளாகத் தன்னகத்தே கொண்டு சிறு காப்பியமாக விளங்குகிறது.

5.5 சாபம்

ஒருவர் செய்த பிழை மற்றொருவருக்குக் சினத்தை விளைவிக்கிற நிலையில் சாபம் வெளிப்படுகிறது. சாப நீக்கம் புராணங்களிலும், தலபுராணங்களிலும் மிகுதியாக இடம் பெறும். சிலப்பதிகாரத்தில் உருப்பசி என்பவள் சாபத்தால் மாதவியாகப் பிறந்தது[2], சயந்தன் அகத்தியர் சாபத்தால் தலைக்கோல் ஆனது[3], கோவலன் முற்பிறப்பில் சாபம் பெற்றது[4] முதலிய சாபங்கள் காணப்படுகின்றன. கம்பராமாயணமும் வில்லிபுத்தூரர் பாரதமும் மிகுதியாக சபவரலாற்றைக் கூறுகின்றன.

பாரதமாவிந்தம், பாண்டவர்கள் வரவால் பாம்பு (பா.மா.277 – 283), மலை (பா.மா.284 – 289), குதிரைமுகப்பெண் (பா.மா.292 அ – 295), ஆறு (பா.மா.298 – 304) சிங்கம் (பா.மா.316 – 322), அரக்கி (பா.மா.335 – 344), யானை (பா.மா.567 – 574), புலி (பா.மா. 581 – 583), பன்றி (பா.மா.596 – 597) முதலியன சாபநீக்கம் பெற்ற நிகழ்ச்சிகளைக் கூறுகிறது.

---

[1] பா.மா.253; பா.மா.275; பா.மா.333, 334; பா.மா.354; பா.மா.561; பா.மா.580; பா.மா. 583; பா.மா.622; பா.மா.639.
[2] சிலப்.6:18-25.
[3] சிலப். 3:1-6.
[4] சிலப். 23: 138-178.

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

5.6 நிமித்தம்

நிமித்தம் பின்னர் நிகழப்போகும் நிகழ்ச்சிகளை முன்னரே அறிவுறுத்தப் பயன்படுத்தப்படும் ஒரு உத்தியாகக் காப்பியங்களில் பயன்படுகிறது. இது நன்னிமித்தம், தீநிமித்தம் என இருவகைப்படும். சிலப்பதிகாரத்திலும், சீவகசிந்தாமணியிலும் நிமித்தங்கள் கையாளப்பட்டுள்ளன. பாரத மாவிந்தத்தில் துரோபதியும் வீமனும் இறக்குந் தறுவாயில் அவர்களுக்குத் தீ நிமித்தம் தோன்றியதாக ஆசிரியர்[1] குறிப்பிடுகிறார். நிமித்தம் எதனால் ஏற்பட்டது என்ற விவரம் நூலில் இல்லை.

5.7 உருமாறல்

கவுந்தி சாபமிட்டதால் வம்பப்பரத்தையர் உருமாறியதாகச் சிலப்பதிகாரம்[2] குறிப்பிடுகிறது. சீவகசிந்தாமணியில் நாய் தேவனாக உருமாறிய நிகழ்ச்சி இடம்பெற்றுள்ளது. பாரத மாவிந்தத்தில் கருடன் அன்னத்தின் உருவெடுத்துப் பாண்டவர்களிடம் சென்றது[3], எமதர்மன் நாய் வடிவெடுத்து வந்து தருமனைச் சோதித்தது[4] ஆகிய உருமாறல் நிகழ்ச்சிகள் இந்நூலில் அமைந்துள்ளன.

5.8 அசரீரி

அசரீரி என்பதும் ஒரு காப்பியக் கூறாகும். பாண்டவர்கள் காட்டில் சென்றபோது தாம் செல்ல வேண்டிய வழியைக் காணாது திகைத்து நின்றபோது, 'விநாயகனால் ஏற்பட்ட மாயம்' என்று ஓர் அசரீரி[5] கூறுகிறது. பாண்டவர்கள் விநாயகனை வணங்கி அவரிடம் வழிகேட்டனர்; அவர் அவர்களுக்கு வழிகாட்டினார். இங்கு, அசரீரி பாண்டவர்கள் செல்ல வேண்டிய வழியைக் கேட்டுப் பெற உதவும் வகையில் இடம்பெற்றுள்ளது. வீமனின் இறுதிக் காலத்தும்[6] அவன் இறந்த பின்பும் ஏற்பட்ட அசரீரி தருமனின் துன்பத்தைத் தணிக்கும் வகையில் அமைந்துள்ளது.

5.9 பாவிகம்

பாவிகம் என்பது காப்பியப் பண்பே (தண். 65) என்பது தண்டியலங்கார ஆசிரியர் கூற்று. ஒரு நூல் முழுவதிலிருந்தும் பெறப்படும் பண்பு, நீதி முதலியவை பாவிகம் எனப்படும். இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் மூன்று பண்புகளைக்[7] குறிப்பிடுகிறார். பாரத மாவிந்தம் நல்வழியில் நடப்பவர் நன்மை எய்துவர் என்பதைக் காட்டுகிறது.

---

[1] பா.மா. 305, 599, 600.
[2] சிலப்.10:232.
[3] பா.மா.527.
[4] பா.மா.664.
[5] பா.மா.252
[6] பா.மா.600
[7] பதிகம் 55-57

Digitization by Hindu-Heritage-Foundation of America (HHFA (USA)

5.10 தொனி

தொனி என்பது காவியத்து ஆன்மா என்று சுப்பிரமணிய சாஸ்திரி[1] கூறுவார்.

'தொனி' என்பது 'குறிப்புப்' பொருளைத் தோற்றுவிக்கும் சொல். ஒவ்வொரு நூலுக்கும் ஒவ்வொரு தொனி உண்டு. பாரத மாவிந்தத்திற்கும் ஒரு தொனி உண்டு; அது உலக ஆசையை விட்டவர்க்கு, வீடுபேறு உண்டு என்பதைக் குறிப்பிடுவதாகும்.

தருமன் புனிதமான ஆத்மா. அவன் ஐந்து புலன்களோடு வாழ்கிறான். இந்த ஐந்து புலன்களும் மனைவியும் தம்பியர் நால்வருமாகும். உலகவாழ்வை நீத்துச் செல்லும் ஆன்மா படிப்படியாக ஒவ்வொன்றையும் இழந்துவிடுகிறது. துரோபதி போகத்திற்கு அறிகுறியாக இருப்பவள்.

துரோபதியின் பிரிவு – வீடுபேறடைபவன் முதலில் போகத்தை விட்டுவிடுகிறான் என்பதைக் காட்டுகிறது.

சகாதேவனின் பிரிவு – கல்வியின்கண் உள்ள விருப்பம் நீங்குவதைக் காட்ட அமைந்துள்ளது.

நகுலனின் பிரிவு – மனவோட்டம் குறைவதைக் காட்டுகிறது.

அர்ச்சுனனின் பிரிவு – உலகப் பெருமையை நீக்குவதைச் சுட்டுகிறது.

வீமனின் பிரிவு – செருக்கின் மறைவை உணர்த்துகிறது.

வீமன் இறந்ததும், தன்மானம் போனதும் தருமன் மிகுதியாக அழுது புலம்புகிறான். பாண்டவர்கள் விநாயகர், வானரத்தலைவன், கருடன், மனித விலங்கு (புருடாமிருகம்) முதலியோரின் அழைப்பை மறுத்தது – பாண்டவர்களுக்கு மண்ணாசை இல்லை என்பதைக் காட்டுகிறது.

பாண்டவர்கள் பெண்களின் அழைப்பை மறுத்தது – அவர்கள் போக உணர்வை நீக்கியதைக் காட்டுகிறது. பாண்டவர்கள் குதிரைமுகப்பெண். அரக்கி முதலியோரின் சாபத்தை நீக்கியது – அவர்களுடைய தீய குணம் நல்ல குணமாக மாறியதைப் புலப்படுத்துகிறது. பாம்பு, சிங்கம், யானை, புலி, பன்றி முதலியவற்றின் சாபம் விலகியது – விலங்கியல் பண்பு ஆன்மாவை விட்டு நீங்கியதென்பதைக் காட்டுகிறது. (பாம்பு – சீற்றம் ; வஞ்சம்; சிங்கம் – கோபம் ; யானை – மதம் ; புலி – உணவாசை ; பன்றி – தூய்மை யின்மை).[2]

இவ்வாறு ஆன்மா கோபதாபங்களிலிருந்து விடுதலை பெற்றுவிட்டதைக் காட்டுவதற்குப் பாரத மாவிந்தம் பாடப்பெற்றுள்ளது என்று அறியமுடிகிறது.

---

[1] தொனிவிளக்கு, ப.1

[2] விளக்கம் கூறியவர் கல்விக்கடல் எஸ். கே. இராமராஜன்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

5.11 பாரதமாவிந்தம் – சிறு காப்பியம்

காப்பியம் என்பது பெருங்காப்பியம் சிறுகாப்பியம் என இருவகைப்படும். அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கினுள்ளும் ஏதேனும் ஒன்று குறைந்து வருவது சிறுகாப்பியம். பாரத மாவிந்தம் நால்வகை உறுதிப்பொருள்களிலும், பொருள் பற்றிக் கூறவில்லை. ஆகையால் இது சிறுகாப்பியமாகும். அடியார்க்கு நல்லாரும், சிலப்பாதிகாரம், 'வீடு' பற்றிச் கூறாத காரணத்தால் அது பெருங்காப்பியம் அன்று என்றும், அறமும் வீடும் கூறும் மணிமேகலை பெருங்காப்பியமாகக் கருதத்தகும் என்றும் விளக்குகின்றார்[1]. எனவே, 'நாற் பொருள் பயத்தல்' என்ற அடிப்படையைக் கொண்டே பெருங்காப்பியம், சிறுகாப்பியம் என்று பகுப்பு முறையைக் கொண்டனர் என்பது புலனாகிறது. நளவெண்பா வீடுபேறு பற்றிக் கூறாததால், சிறுகாப்பியமாகவே கொள்ளப்படுகிறது.

1. பாரத மாவிந்தம், வியாசபாரதத்தின் இறுதி மூன்று பருவநிகழ்ச்சிகளுடன் சில துணைக்கதைகளையும் சேர்த்துப் பாடப்பட்ட ஒரு நூல்.
2. பாரத மாவிந்தத்தில் ஒரு முழுமையான கதையமைப்பு இல்லை.
3. பாரத மாவிந்தத்தில் பாடல் எண்ணிக்கையும் குறைவாக உள்ளது (பாடல்கள் 760).
4. வெவ்வேறு விதமான பண்புகளைக் கொண்ட கதைமாந்தர்கள் நூலில் இடம் பெறவில்லை.
5. மேலும் மலை, கடல், பருவம், இருசுடர் தோற்றம் முதலிய வருணனைப் பகுதிகள் இல்லை. பாரத மாவிந்தத்தில், தலைவன் தொடர்பான செய்திகளான மணமுடித்தல், புனலாடல், புலத்தல், கலத்தல், இகல், வெற்றி முதலிய நிகழ்ச்சிகளும் இல்லை.
6. பாரத மாவிந்தத்தில் ஒவ்வொரு சருக்கத்திற்கும் உரிய பாடல்களின் எண்ணிக்கை சீராக அமையவில்லை.

மேலே கூறிய காரணங்களால் பாரதமாவிந்தம் பெருங்காப்பிய இயல்புகளிலிருந்து விலகிச் செல்வதை உணரமுடிகிறது. அளவில் சிறியவையாயும் கதைகளை முடியக் கூறாதவையாயும் இயன்ற நூல்களை மேனாட்டார் காவியத் துணுக்குகள் எனக் கூறுவதாக எஸ்.ஆர். மார்க்கபந்து சர்மா[2] குறிப்பிட்டுள்ளார்.

நிறைவுரை: பாரத மாவிந்தம் பிற மாவிந்த நூல்களைப் போல் அல்லாது, ஒரு சிறு காப்பியத்திற்குரிய இயல்புகளுடன் அமைந்துள்ளது. மேலும் இந்நூல் ஏனைய மாவிந்த நூல்கள் கூறாத பாயிரம், நாட்டு வளம், நகர் வளம் முதலியவற்றைத் திருநாட்டுச் சருக்கத்தில் கூறிக் கதையை விரும்பிக் கேட்கத் தூண்டும் வகையில் அமைந்துள்ளது. இந்நூல் பெருங்காப்பியக் கூறுகள் பல பெற்றிருந்தும் பொருள் பற்றிப் பாடாததாலும், மலை, கடல் முதலிய வருணனைகள் இல்லாததாலும் இதை ஒரு சிறுகாப்பியமாகக் கொள்ளலாம். பாரத மாவிந்தம், சிறு காப்பியமாயினும், இராமாயணம், பாகவதம் போன்ற பெருங்காப்பியக்

[1] சிலப்பதிகாரம், உரைச்சிறப்புப் பாயிரம்.
[2] சிலம்பின் இரசனை, ப. 108.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கதைகளைத் தன்னுள் அடக்கிய ஒரு சிறந்த நூலாக விளங்குகிறது. சீவக சிந்தாமணி, கம்பராமாயணம், வில்லிபாரதம் முதலிய நூல்களைப்போல் பாரத மாவிந்தம் ஒரு விருத்தக் காப்பியமாகத் திகழ்கிறது.

****

Digitization by Hindu-Heritage-Foundation of America HHFA(USA)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

6. யாப்பு

6. முன்னுரை

கவிஞன் தான் உணர்த்த விரும்பும் கருத்தை வெளியிடுவதற்கு வாயிலாக அமைவதே கவிதை; இக்கவிதை கலைநயம் உடையது. கலைநயம் என்பது உணர்ச்சி, கற்பனை, சொல்லாற்றல் எனப் பலவற்றைத் தன்னகத்தே கொண்டதாகும். அவற்றுள் யாப்பும் ஒன்று. யாப்பு என்ற சொல்லுக்குக் 'கட்டுதல்' என்பது பொருள். ஒரு பொருளை உள்ளீடாகக் கொண்டு தகுந்த சொற்களால் கட்டப்பெறும் வடிவமே யாப்பு. இவ்வடிவம் பாட்டின் பொருளோடு ஒன்றி நிற்கும். சில பாடல்களில் சொற்களின் பொருள் விளங்குமுன்பே புலவர் உணர்த்தும் உணர்ச்சி, அவற்றின் ஓசை நயம் ஆகியவை நம் உள்ளத்தில் பதிந்து உணர்ச்சியைப் பரப்புகின்றன. 'பா' வுக்கு விளக்கம் தரும் பேராசிரியர்,[1] 'பா என்பது சேட்புலத்திலிருந்த காலத்தும், ஒருவன் எழுத்தும் சொல்லும் தெரியாமல் பாடல் ஒதுங்கால் அவன் சொல்லுகின்ற செய்யுளை விகற்பித்து இன்ன செய்யுள் என்று உணர்தற்கேதுவாகிப் பரந்து பட்டுச் செல்வதோர் ஓசை', என்று கூறுகிறார்.

ஒலிகள் அளவாலும், தன்மையாலும், முயற்சியாலும் வேறுபட்டு வந்த அமைப்பே மீண்டும், மீண்டும் வந்து செவிக்கு இனிமை பயப்பதே 'ஒலிநய'மாகும். இயற்கையான இந்த ஒலிநயத்தை வளர்த்து வாய்பாடுகளாக்கி ஒரு வகை செயற்கை அமைப்பைத் தந்தனர் முன்னோர். அதற்கு 'யாப்பு' எனப் பெயரிட்டனர் என்று மு.வரதராசன்[2] குறிப்பிட்டுள்ளார்.

தமிழில் வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என யாப்பு நால்வகைப்படும். சங்ககாலப் புலவர்கள் பாடல்களை ஆசிரியப்பாவிலேயே மிகுதியாகப் பாடியிருக்கின்றனர். திருவள்ளுவர் திருக்குறளைக் குறள் வெண்பாவில் பாடியிருக்கிறார். கலித்தொகை நூலில் உள்ள பாக்கள் எல்லாம் கலிப்பாவில் அமைந்தவை. துறை, தாழிசை, விருத்தம் என்பன பின்னர்த் தோன்றி நால்வகைப் பாக்களின் இனங்களாகச் சேர்ந்தன. தமிழில் பா இனங்களுள், 'விருத்தம்' என்ற இனமே பெருவழக்குப் பெற்றது. 'விருத்தமெனு மொண்பாவுக்கு உயர் கம்பன்' என்று சொல்லுமளவு கம்பர் தன் இராமாயணத்தை விருத்த யாப்பில் இயற்றிச் சிறப்புற்றார். பாரத மாவிந்தமும் விருத்த யாப்பில் அமைந்த நூலாகும்.

விருத்தம் என்ற சொல் கதை சொல்லுதல் என்று பொருள்படும் என்று எஸ்.டேவிட்[3] கருதுவார். விருத்தாந்தம் என்ற சொற்பொருளில் விருத்தம் இப்பொருள் படுகிறது என்று இவர் கூறுகிறார். விருத்தாந்தம் என்பதற்குச் சம்பவம், வரலாறு, கதை என்று பொருள் தருகிறது தமிழ்ப்பேரகராதி. இங்கு 'விருத்தம்' என்பது யாப்பு வகைகளுள் ஒன்று. கதை சொல்வதற்கு ஏற்ற யாப்பிலேயே பாரத மாவிந்தம் அமைந்துள்ளது என்பதைப்,

---

[1] தொல்.பொ.செய். 1 உரை.
[2] இலக்கியத் திறன், ப. 194.
[3] The epic structure of Civakacintamani, p. 143.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பாமனும் விருத்தத்தினிற் பாடினான் (பா.மா.18),

சோமன் விருத்த வகையால் செப்ப (பா.மா.21)

என்ற பாடலடிகள் உணர்த்துகின்றன; எனினும் சிறிதளவு கொச்சகமும், கலிப்பாவின் இனமான கலித்துறையும் இந்நூலில் கலந்துள்ளன. பாரத மாவிந்தத்தில் இடம்பெற்றுள்ள அறுசீர் விருத்தமும் எழுசீர் விருத்தமும் வில்லிபுத்தூரர் பாடிய சந்த விருத்தங்களைப் போல் அமைந்துள்ளன.

சந்தம், தெளிசந்தம், கலவைச் சந்தம் என இரு வகைப்படும். முதல் அடியில் வந்த சீர் அமைப்பின் வாய்பாடே பின் மூன்று அடிகளிலும் அமையுமாயின் அதனைத் 'தெளிசந்தம்' என்பர். முதல் சீரைத் தவிர்த்து வெவ்வேறு ஓசையுள்ள அசைகள் மாறி மாறிக் கலந்து பாட்டின் ஓசையை வேறுபடுத்துமானால் அவற்றைக் 'கலவைச் சந்தம்' என்பர்", என்று வீ.ஞானசிகாமணி[1] குறிப்பிட்டுள்ளார். பாரத மாவிந்தத்தில் இவ்விரு சந்தங்களிலும் அமைந்த பாடல்கள் இடம்பெற்றுள்ளன. மேலும் பாரத மாவிந்தத்தில் முத்தகச் செய்யுட்கள் (தனிநிலைச் செய்யுட்கள்) அருகியும், குளகச் செய்யுட்கள் (தொடர்நிலைச் செய்யுட்கள்) மிகுந்தும் காணப்படுகின்றன.

6.1 பாரத மாவிந்தத்தில் இடம்பெறும் யாப்பு

பாரத மாவிந்தத்தில் கலிவிருத்தம்(410), கொச்சகம்(35), கலித்துறை(40), ஆகியவற்றுடன் அறுசீர்(29), எழுசீர்(197), எண்சீர் ஆசிரிய(39) விருத்தங்களும் இடம்பெற்றுள்ளன. ஒப்பீட்டுக்கு எடுத்துக் கொண்ட சுவடிகளில் மிகையாக ஒன்பது[2] பாடல்கள் உள்ளன. அவை அனைத்தும் கலிவிருத்தத்தால் ஆனவை. இவற்றை இக்கட்டுரையின் இறுதியில் கொடுக்கப் பட்டிருக்கும் அட்டவணை -1 இல் காண்க.

6.1.1 கலிவிருத்தம்

"அளவடி நான்கின கலிவிருத் தம்மே" என்பது யாப்பருங்கலம் (யாப். 89)

பாரத மாவிந்தத்தில் பெரும்பான்மையான பாடல்கள் கலிவிருத்ததால் ஆனவை. இதில் காணப்படும் மொத்தக் கலிவிருத்தப்[3] பாடல்கள் 410.

அத்தினபுரிச் சருக்கத்தில் வரும் 80 பாடல்களும் கலிவிருத்தத்தால் ஆனவை; இவற்றுள் நேரசையில் தொடங்கும் பாடல்கள் 14 எழுத்துக்களையும், நிரையசையில் தொடங்கும் பாடல்கள் 15 எழுத்துக்களையும் கொண்டுள்ளன. பாடல்கள் அடிதோறும் நான்கு சீர்கள் பெற்று நான்கடியாய் அளவொத்து அமைந்துள்ளன; மூவசைச்சீர் வருவதால் ஏனைய கலிவிருத்தப் பாடல்களைவிட எழுத்துக்களின் எண்ணிக்கை இதில் கூடுதலாக உள்ளது.

---

[1] ஹை. ஏ. கிருஷ்ணபிள்ளையின் நூல்கள், ப. 161.

[2] 69அ, 71அ, 292அ, 328அ, 395அ, 401அ, 420அ, 521அ, 724அ (9).

[3] காப்புச் செய்யுள் -1, பாயிரம் -15-20(6), திருநாட்டுச் சருக்கம்- 22-76(55), அத்தினபுரிச் சருக்கம் -157-236(80); துரோபதி மோக்கிஷம் பெற்ற சருக்கம்- 263-315 (53), சிங்கத்தின் கதைச் சருக்கம் -316-523(208), கருடனைக் காண்டற் சருக்கம் -7 (729-735)-410.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இவற்றைத் தவிரப் பிற கலிவிருத்தப் பாடல்கள் அனைத்தும் கந்தரனுபூதி பாடல்களைப் போன்றவை; நேரசையில் தொடங்கும் பாடல்கள் 11 எழுத்துக்களையும், நிரையசையில் தொடங்கும் பாடல்கள் 12 எழுத்துக்களையும் கொண்டுள்ளன.

எ.டு. ஆடும் பரிவேல் அணிசே வலெனப்
பாடும் பணியே பணியா வருள்வாய்
தேடுங் கயமா முகனைச் செருவில்
சாடுந் தனியா னைசகோ தரனே! (கந்தரனுபூதி. 1)

எ .டு. ஆடி வானவ ரார்த்தன ரங்கத
னாடு சென்னியை நாதன்முன் வைத்தனன்
கூடு தம்பிதன் வின்மைகொண் டாடினான்
வாடி விட்டதிலங்கையின் வாழ்வெனா (பா.மா.515)

பாரத மாவிந்தத்தில் காணப்படும் கலிவிருத்தப் பாடல்களில் சில ஓசைக்கேற்ப சீர் பிரிக்கும் போது, தம்முள் எழுத்தொத்துச் சீர் அமைப்பு ஒவ்வாது அமைந்துள்ளன.

1. இன எதுகை அமைந்த பாடல்

எதுகையில், முதலடியில் வந்த அதே மெய்யெழுத்துக்களே ஏனைய அடிகளிலும் எதுகையாக வருதலோடு சிறுபான்மை அவற்றின் இன எழுத்தும்[1] வருவதுண்டு. இது ‘இன எதுகை' எனப்படும்.

பின்னை யோரடி பேரிட மில்லையால்
மண்ணி நின்று திகைத்திட மாவெலி
சொன்ன வோரடி தாவெனச் சொல்லிய
அன்ன வன்றனை யருஞ்சிற யாக்கினன் (பா.மா.42)

மேலே காணும் பாடலில் முதலடியிலும் இரண்டாம் அடியிலும் வரும் முதல் சீரில் உள்ள, ‘பின்னை, மண்ணி' என்பனவற்றுள் 'ன்' என்பதற்கு எதுகையாக அதன் இனமான 'ண்' இரண்டாம் அடியில் வந்து மெல்லின எதுகை அமைந்துள்ளது.

2. ஆசெதுகை அமைந்த பாடல்

வல்லொற்று மெல்லொற்று எதுகைகளில், முதலெழுத்துக்கும் அவ்வொற்று எழுத்துக்கும் இடையில் 'ய், ர், ழ்' என்னும் மூன்று மெய்யும் வரும். இது 'ஆசெதுகை' எனப்படும். இதற்கு,

பேர்ந்து மிக்கப் பிறவிப் பெருங்கடல்
நீந்தி னானென நீந்தினன் நீள்புனல்
வாய்ந்த வைகுண்ட மாகதி யன்புடன்
சேர்ந்த னனெனச் சேர்ந்தனன் அக்கரை (பா.மா. 300)

---

[1] வல்லினம், மெல்லினம், இடையினம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

என்ற பாடல் சான்றாக அமைகிறது. இதில் முதலடி ஈற்றடி ஆகிய இரண்டும் தவிர ஏனையவற்றில் 'ந்' என்னும் 'ந'கர ஒற்று எதுகையாக உள்ளது. முதலடியிலும் ஈற்றடியிலும் 'ந' கர ஒற்றின் முன் 'ர்' என்னும் மெய் வந்து ஆசெதுகை அமைந்துள்ளது.

6.1. 2 கொச்சகம்

நாற்சீரடி நான்கால் வரும் தரவு கொச்சகம். இது கலித்தளையும் வெண்டளையும் மட்டும் பெற்று வருகிறது. இது பெரும்பான்மை அருகிச் சில இடங்களில் ஒன்றா வஞ்சித்தளை வரலாம் எனப் பாடல்களைப் பார்க்கும்போது தெரிகின்றது என்று ச.வே.சுப்பிரமணியன்[1] குறிப்பிட்டுள்ளார். பாரத மாவிந்தத்தில் இடம் பெற்றுள்ள கொச்சகங்கள் நாற்சீரடி நான்கால் அமைந்துள்ளன. அளவடி நான்கால் செய்யப்பெற்று வெண்டளையால் அமைந்த கொச்சகங்களைப் பற்றிப் புலவர் குழந்தை தொடையதிகாரம் என்ற நூலில் குறிப்பிட்டு அதற்குச் சான்றாகச் சிலப்பதிகாரப் பாடலைக் காட்டியுள்ளார்.

சங்கமுஞ் சக்கரமுந் தாமரைக் கையேந்திச்
செங்க ணரிமான் சினவிடைமேல் நின்றாயால்,
கங்கை முடிக்கணிந்த கண்ணுதலோன் பாகத்து
மங்கை யுருவாய் மறையேத்த வேநிற்பாய் (சிலப். 12: 9)

பாரத மாவிந்தத்தில் காணப்படும் கொச்சகப் பாடல்கள் பெரும்பாலும் வெண்டளை பெற்றும் வேற்றுத்தளை அருகியும் அமைந்துள்ளன.

சிறப்பில்லதனைக் கொச்சை என்பதுபோலச் சிறப்பில்லாத செய்யுளுறுப்புக் கொச்சகம் எனப்பட்டது என்று கூறுவார் நச்சினார்க்கினியர் என்று தம் நூலில் குறிப்பிட்டுள்ளார் தி.வே.கோபாலையர்.[2] இங்ஙனம் அமைந்த கொச்சகப் பாடல்கள் 35* துருவாசச் சருக்கத்தில் இடம்பெற்றுள்ளன.

எ.டு. மிக்கமுனி வரரைவிடை கொண்டிரு வரும்போய்ப்
புக்க துவரா பதியிற் புகழினுக்குத்
தக்கதிறற் சாத்தகியுந் தானுந் தனித்தெண்ணி
மைக்கணிறக் கொண்டலும்போய் வைகுண்டஞ் சேர்ந்தனனால் (பா.மா.131)

6.1.3 கலித்துறை

கலித்துறையே நெடிலடி நான்காய் நிகழ்வது (யாப்.காரி. 44)
பாரத மாவிந்தத்தில் கருடனைக் காண்டற் சருக்கத்தில் 40 கலித்துறை பாடல்கள்[3] உள்ளன.

---

[1] இலக்கணத் தொகை யாப்பு – பாட்டியல், ப. 215.
[2] தமிழ் இலக்கணப்பேரகராதி, பொருள் யாப்பு 1, ப.250.
*122-156.
[3] 688-690=3; 692-728=37(3+37=40).

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அடிதோறும் ஐந்து சீர் பெற்று நான்கடியாய் நேரசை முந்தின் பதினாறு எழுத்தாய் நிரையசை முந்தின் பதினேழு எழுத்தாய், சீர் இருபதினால் வருவது கட்டளைக் கலித்துறை. அவ்வாறன்றி எழுத்தெண்ணிக்கையில் அமையாத அடிதோறும் ஐந்து சீர் பெற்று நான்கடியாய் சீர் இருபதினால் வருவது கலித்துறை என்று கூறுகிறது வீரசோழியம்.[1] பாரத மாவிந்தத்தில் அடிதோறும் ஐந்து சீர்கள் பெற்று நாலடிகளாலான கலித்துறைப் பாடல்களே இடம்பெற்றுள்ளன.

◆ சீர் நீக்கப்பட்ட பாடல்கள்

இக்கலித்துறை யாப்பில் வரும் 700 – ஆம் பாடலின் இரண்டாமடியில், 'போரிடை வந்து பொய்யாய்' என்பதில் 'வந்து' என்ற சீர் மிகுதி என்று கருதி நீக்கப்பெற்றது. இதுபோல் 717 ஆம் பாடலின் மூன்றாம் அடியில், 'புகுந்த பின் பேரறன்' என்பதில் உள்ள 'பின் பேர' என்பது நீக்கப்பட்டுப் 'புகுந்த வறன்' என்று மாற்றப்பெற்றுள்ளது.

அரிதி னப்பலனொன் றினால ருக்கன்முன் னிருளென
விரிய லுற்றுவன் சகுனிதுச் சாதன னிடர்தீர்ந்தே
பெரிய மாதவ ரவைக்களம் புகுந்த வறன் தனக்கன்பா
லுரிய ராசமா விருடி யென் றுரைத்தன ருரவோரே (பா.மா.717)

6. 2 ஆசிரிய விருத்தம்

கழிநெடிலடி நான்காய்த் தம்முள் அளவொத்து வருவன ஆசிரிய விருத்தம் ஆகும். பாரத மாவிந்தத்தில் அறுசீர், எழுசீர், எண்சீர் ஆசிரிய விருத்தங்கள் இடம்பெற்றுள்ளன.

6. 2.1 அறுசீர் ஆசிரிய விருத்தம்

அடிதோறும் ஆறுசீர் பெற்று, அடி நான்கடியாய் வருவது அறுசீர் ஆசிரிய விருத்தம். பாரத மாவிந்தத்தில் அறுசீர் ஆசிரிய விருத்தத்தில் அமைந்த பாடல்கள் 29 ஆகும்[2]. இவை அனைத்தும் கருடனைக் காண்டற் சருக்கத்தில் காணப்படுகின்றன.

எ .டு.

அண்டமு மந்தவ கண்டமு மாகிய வச்சுத னச்சரவிற்
கண்டுயில் மேவிய காரண நாரண காரண மாயடிமை
கொண்டவ னீடுவை குண்டநன் னாடுள கொண்டலின் மேனியினான்
பண்டுள பாரத மண்டிய தேர்விடு பான்மையி னீர்மையனே (பா.மா.529)

6. 2. 2 எழுசீர் ஆசிரிய விருத்தம்

இது எழுசீர் கழிநெடிலடியால் அமையும். பாரத மாவிந்தத்தில் கலிவிருத்தத்தை அடுத்து மிகுதியாக இடம்பெறுவது எழுசீர் ஆசிரிய விருத்தம்; இவ்வாசிரிய விருத்தப் பாடல்கள் 197 ஆகும்[3].

---

[1] வீரசோழியம்,காரிகை: 122.
[2] 12 (524-535), 2 (547-548),1(691), 15 (736-750) --30.
[3] 14(1-14), 21 (77-97), 24 (98-121), 9 (254-262), 4 (543-546), 125 (549--673) -197

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

எ.டு.

இத்தகை வீமற் கெய்தல்கண் டறத்தோ
    னிடிவிழுந் துளவர வெனவும்
பைத்தலை யரவின் வாய்ப்படுந் தேரை
    படுந்துய ரென்னவு விரைவின்
வைத்தபே ரன்பென் றொருபெருங் காற்றின்
    மராமரஞ் சாய்ந்தவா றென்ன
மெத்திய துயரால் நடுங்கி மெய்பதறி
    மேவியே வீமன்மேல் விழுந்தான் (பா.மா.609)

6.2. 3 எண்சீர் ஆசிரிய விருத்தம்

எண்சீர்க் கழிநெடியான் அமைவது எண்சீர் ஆசிரிய விருத்தம். பாரத மாவிந்தத்தில் 39 எண்சீர் ஆசிரிய விருத்தப் பாடல்கள் உள்ளன.

எ.டு.

காடதுபு குந்தது கலிக்கே யானதொரு
    காலமி தெனுங்கன கருத்தோ மாகியுள
பாடகமெ னும்பழ வினைச்சூ ழாயவது
    பாதலமு றைந்திடினு மொத்தே மேவியுறு
நீடுமதி யின்குரு குலத்தோர் பாரினிசை
    நேயமற விந்தமது புக்கா ரானவிங்ஙன்
நாடுவசம் வந்தில னெனப்பா ரான்நிருபர்
    நாடிநசை கொண்டிடு வரத்தாலே நவில்வன் (பா.மா.240)

6.3 ஆசிரியர் விருத்தப்பாவைக் கையாண்ட நிலை

ஆசிரியர் சோமன் எழுத்தொத்து வெவ்வேறு ஓசையுடன் விளங்கும் இருவகை கலிவிருத்தங்களைத் தம் நூலில் கையாண்டுள்ளார். பாரத மாவிந்தத்தில் கதை கூறுவதற்கேற்ற விருத்தமாகக் காணப்படுவது கலிவிருத்தமாகும். சனமேசயன் செய்த யாகத்தில் அந்தணன் இறந்த கதை (56 – 63). அந்தணர் இருவர் வழக்கிட்ட கதை (157 – 166). தருமன் தம்பியர்க்குக் கூறிய கதைப்பகுதி (373 – 523) முதலியவை கலிவிருத்த யாப்பில் அமைந்துள்ளன. ஆகவே, ஆசிரியர் கதை சொல்வதற்கு ஏற்ற யாப்பாகக் கலிவிருத்தத்தைக் கையாண்டுள்ளார் என்று அறியமுடிகிறது.

ஒரே உணர்வை வெளிப்படுத்த வெவ்வேறு வகை விருத்தங்கள் பாரத மாவிந்தத்தில் கையாளப்பட்டுள்ளன. கண்ணன் பரமபதம் அடைந்தபோது, வீம அர்ச்சுனர் இருவரும் வருந்தி அழுதது (120 – 156), தருமன் பிரிவால் அத்தினபுரி மக்கள் துயருற்றுக் கண்ணீர் சொரிந்தது (220 – 224), வீமன் பிரிவால் தருமன் புலம்பியது (609 – 617) போன்ற துயர உணர்வைப் புலப்படுத்தக், கொச்சகம், கலிவிருத்தம், எழுசீர் ஆசிரிய விருத்தம் ஆகிய மூவகை விருத்தங்களை ஆசிரியர் கையாண்டுள்ளார். கோப உணர்வைக் காட்ட எழுசீர் ஆசிரிய விருத்தத்தையும் (259), கலிவிருத்தத்தையும் (364, 365) பயன்படுத்தியிருக்கிறார். இந்நூலில் இடப்பெற்றுள்ள துதிப்பாடல்கள் பெரும்பாலும் கலிவிருத்தம் (308 – 310, 347, 356), அறுசீர்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

விருத்தம் (736 – 745), எழுசீர் விருத்தம் (564,586,605, 606) முதலிய விருத்தங்களில் அமைந்து பக்தி உணர்வை வெளிப்படுத்துகின்றன.

6.4 பலவகைச் சந்தப்பாடல்கள்

பலவகைச் சந்தங்களைக் கொண்ட பாடல்கள் பாரதமாவிந்தத்தில் இடம்பெற்றுள்ளன. இவை, நூலாசிரியர் சோமன் சந்தப்பாடல் பாடுவதில் வல்லவர் என்பதற்குத் தக்க சான்றுகளாக விளங்குகின்றன. எடுத்துக்காட்டாக வகைக்கு ஒரு பாடல் தரப்பெற்றுள்ளது. அவை வருமாறு:

1. கலிவிருத்தம்

ஒருவகைச் சந்தம்

எ.டு. இந்த மாநகர்க் கெய்தின னின்னென
உந்தி நீர்கொ ளிலங்கையு முன்னையுஞ்
சிந்த மானொன்றை யேவித் திருடினன்
வந்த மானடி பார்க்கவந் தேனென்றான் (பா.மா. 484)

மற்றொருவகைச் சந்தம்

எ.டு. சொற்றமொழி யுற்றசெவி யிற்சுடுத முற்கோல்
உற்றதென நின்றவளு முள்ளுறுமு யிர்ப்பால்
வெற்றியுட னிப்புவிபு ரக்கவிதி யின்றி
உற்றதிது வென்கொலென ஏந்துமயர் வுற்றே (பா.மா. 194)

2. அறுசீர் ஆசிரிய விருத்தம்

ஒருவகைச் சந்தம்

எ.டு. கோல மணிக்குடை நீழலில் வாழ்வுள கொற்றவர் துற்றவழற்
பாலை நிலத்திடை யாகிய வெம்பர லடருமி ளைப்பறவோர்
ஆல நிழற்கணி ருந்தவர் தம்மினும் அன்புள தாகியுறு
நீல முகிற்றிரு மேனியர் வன்மைநி கழத்திய நேர்மையினான் (பா.மா. 524)

வேறொரு வகைச் சந்தம்

எ.டு. என்றுபு கழ்ந்தரி கேசவ னம்பதி யெப்பொழுது தும்மிரென
நன்றென நின்றுறு தம்பிய ருங்கண நாதரு மன்பினுடன்
நின்றுபு கழ்ந்திட நீரொடு பால்செறி நேயம தாமெனவே
என்றுமி ருந்தன ரிக்கதை கேட்டவ ரின்புற வாழ்குவரே (பா.மா. 749)

3. எழுசீர் ஆசிரிய விருத்தம்

ஒருவகைச் சந்தம்

எ.டு. விடைநட த்திய வரனி டத்துறை
விரகி யுத்தமி யுரகநீள்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

படந டித்தவ னுடனு தித்தவள்
பரிவி னிற்பெறு குமரனாங்
குடவ யிற்றிடைக் கடலை யெட்பொரி
கொளவி ருப்புட னொருகைநீள்
கடத டக்கரி வதன வித்தகர்
கழலி ணைத்துணை கருதுவாம் (பா.மா. 4)

பிறிதொருவகைச் சந்தம்

எ.டு. மேகமங் கெழுதல் கண்டுமா கருணை
வித்தகன் மெய்யென நினைந்து
மாகநன் னிலைமை யுயர்ச்சியை யுலக
மளந்ததோர் நிலையிதென் றறிந்தும்
மோகமில் பொய்கைத் தாமரை மலரை
முகுந்தநல் விழியென வுகந்து
மேகினன் கரிய னானவன் றுணையா
யிறைவனைக் கருத்திலே யெண்ணி (பா.மா. 671)

4. எண்சீர் ஆசிரிய விருத்தம்

எ.டு. அரிகரி ! துளவம ணிந்ததோள் மாதவ!
அரிகரி கருணைமு குந்த! தா மோதர!
அரிகரி! படியைய ளந்துவாழ் சீதர!
அரிகரி கமலம டந்ததைசேர் மார்பின!
அரிகரி யமரர்தொ ழுங்கிருபா சாகர!
அரிகரி பிரமனு றைந்தசீர் நாபிய!
அரிகரி! யெனமொழி கொண்டுசா தேவனும்
அரிதிரு வடியில டைந்துவா னேறியே (பா.மா. 540)

6.5 தெளி சந்தம்

எ.டு. நீதியு டன்புவி தன்னைநி றுத்தி நெடுங்கலி வந்திடவே
ஆதியில் நம்முரை கொண்டுபொல் லாதவ ருஞ்சுரம் வந்தினிய
மாதும டிந்தும னத்துறு தம்பியர் மண்ணிடைத் துஞ்சிடவும்
பேதமி லாதெமை யுன்னிந டந்தபெ ருந்தகை நீயலையோ (பா.மா. 747)

இங்கு முதலடியில் ஆறு சீர்களிலும் வந்த கூவிளம் – கூவிளம் – கூவிளம் – கூவிளம் – கூவிளம் – கூவிளங்காய் என்ற வாய்பாடே பிற மூன்றடிகளிலும் அமைந்துள்ளது.

6.6 கலவைச் சந்தம்

எ.டு. இங்கிவர் போத விளைத்தன ரறவனு மின்புறு மன்பதனா
லங்கது சீருள கலுழனை நாடிய ழைத்தரு ளாழியினான்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பொங்கிய நின்னுரு வன்றியும் வேறொரு புள்ளுரு விற்றருமன்
தங்குத ருக்கணின் வந்தவர் சிந்தைத னைத்தெரி வாயெனலும். (பா.மா. 526)

இங்கு முதலடியில் காணப்படும் கூவிளம் ,தேமா, கருவிளம், கருவிளம் ,கூவிளம் ,கூவிளங் காய் என்னும் சீர் அமைப்பு இரண்டாவதடியில் கூவிளம்,கூவிளம் , கருவிளம், கூவிளம் , கூவிளங்காய் என வேறுபட்டுள்ளது. மூன்றாவதடியிலும் நான்காவதடியி லும் சீர் அமைப்பு கூவிளம்,கூவிளம் , கூவிளம், கூவிளம் ,கூவிளம் ,கூவிளங்காய் என ஒன்றுபோல் உள்ளன . கருவிளம் ஆகிய சீர்கள் விர ,முதலிரு அடிகளிலும் தேமாவி வந்ததால் இது கலவைச் சந்தம் . பாரத மாவிந்தத்தில் இடம்பெற்ற யாப்பினைக் குறித்துப் பின்னிணைப்பில் அட்டவணை -1 இல் காண்க.

நிறைவுரை

பாரத மாவிந்தத்தில் காணப்படும் யாப்புப் பற்றி இதுவரை அறிந்தவற்றால், நூலாசிரியர் சோமன் விருத்தப்பாவின் தன்மையும், காப்பியப் போக்குக்கு ஏற்ப அவர் அவற்றை அமைத்த சிறப்பும் புலப்படுகின்றன. மிகுதியான பாடல்கள் கலிவிருத்தத்தால் ஆனவை. துதிப்பாடல்கள் அனைத்தும் மனனம் செய்யும் வகையில் பக்திச்சுவை மிக்கவை. இவற்றுள் சிறந்த முறையில் விழுமிய ஓசை நயத்துடன் காணப்படுபவை கலிவிருத்தம், அறுசீர்விருத்தம், எழுசீர் விருத்தம் ஆகியனவாகும்.

****

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

7. பாரத மாவிந்தம் – அணிநலம்

'அணி' என்ற சொல் அழகு என்ற பொருளைத் தரும். கவிஞன் தன் கவிதையை அழகுபடக் கூறுவதற்கு அணிகளைப் பயன்படுத்துகிறான். 'அணி' என்பதை வடமொழியில் 'அலங்காரம்' என்று கூறுவர். தமிழில் தொல்காப்பியப் பொருளதிகாரம் உவமை இயலில் அணி பற்றி விளக்குகிறது. சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி முதலிய காப்பியங்களில் உவமை, உருவகம், தற்குறிப்பேற்றம் முதலிய அணிகள் இடம்பெற்றுள்ளன. பக்தி இலக்கியங்களிலும், கம்பராமாயணத்திலும் பல வகையான அணிகளைக் காணமுடிகிறது. தண்டி என்பவர் காவியாதரிசம் என்னும் அணி இலக்கண நூலை வடமொழியில் இயற்றியுள்ளார். இதைப் பின்பற்றித் தமிழில் சில அணியிலக்கண நூல்கள் வந்துள்ளன.

7.1 தமிழில் அணி இலக்கணம் பற்றி எழுந்த நூல்கள்

தமிழில் அணி இலக்கணம் பற்றி வீரசோழியம், தண்டியலங்காரம், மாறனலங்காரம், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், சுவாமிநாதம், சந்திராலோகம், முத்துவீரியம், குவலயானந்தம், அறுவகை இலக்கணம் முதலிய நூல்கள் எழுந்துள்ளன. இவற்றுள் அணி இலக்கணம் மட்டும் கூறும் நூல்கள் சந்திராலோகம், குவலயானந்தம், தண்டியலங்காரம், மாறனலங்காரம் ஆகியவை. இவற்றுள் சந்திராலோகமும் குவலயானந்தமும் வடமொழி நூலை மொழி பெயர்த்துத் தமிழில் ஆக்கித் தந்தவையாகும். தமிழில் இவ்வாறு வளர்ச்சியுற்ற இலக்கணத்தில் கண்டுள்ள நயங்களை உதவியாகக் கொண்டு, பாரத மாவிந்த ஆசிரியர் சோமன் தம்முடைய நூலில் அணி இலக்கணங்களைக் கையாண்டுள்ளார்.

7. 2 உவமை அணி: ஒரு பொருளுக்கு இன்னொரு பொருளை ஒப்புமைப்படுத்திக் கூறுவது உவமை அணி எனப்படும்.

பாரத மாவிந்தத்தில் மிகுதியாக இடம்பெற்றிருப்பது உவமையணியே. ஆசிரியர் சோமன் தமது கவிதையை 'முத்தமிழ் கற்ற புலவர் முன்னால் நான் கூறும் கவிதை, குயில் கூவும் சோலையில் கோட்டானும் குயில்போல் கூவுவதைப் போன்றதாகும்' என்று பாடுகிறார். குயில் பாவலர்க்கும் கோட்டான் நூலாசிரியருக்கும் உவமை. இதனை,

குயிலி ருந்துறக் கூவுமச் சோலையில்
இயலுங் கூகையுங் கூவுமி யல்பெனப்
பயிலு முத்தமிட் பாவலர் முன்கவிச்
செயலி லென்கவி செப்புந் திறமையே (பா.மா.17)

என்ற பாடல் விளக்குகிறது.

ஆசிரியர் அத்தினபுரியின் சிறப்பைக் கூறும்போது, அது இந்திரனின் அமராவதிக்கும், குபேரனின் அளகாபுரிக்கும் ஒப்பாக அமைந்ததென்றும் அந்நகரம் பூமிதேவியின் மார்பில்

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

திகழும் மகிழம்பூ மாலையாகத் திகழ்கிறதென்றும் உவமித்துக் காட்டுகிறார். இதற்குச் சான்றாகக் கீழ்வரும் பாடல் அமைகிறது.

புகழா மமரே சபுரிக் கெதிராய்
நிகழ்வா யளகா புரிநே ரியதாய்த்
திகழா நிலமங்கை செழுந்தன மேல்
மகிழா ரமெனத் தினமா புரியே (பா.மா.31)

1. பல்பொருள் உவமை

தருமன் வீமனை இழந்தபோது, அவன் அடைந்த துயரைக் காட்ட ஆசிரியர் பல பொருள்களை உவமையாகக் காட்டுகிறார்.

இத்தகை வீமற் கெய்தல்கண் டறத்தோன் இடிவிழுந்த
துளவர வெனவும்
பைத்தலை யரவின் வாய்ப்படுந் தேரை படுந்துய
ரென்னவும் விரைவின்
வைத்தபே ரன்பென் றொருபெருங் காற்றின் மராமரஞ்
சாய்ந்த வாறென்ன (பா.மா.609)

தருமன், வீமன் இறந்தது கண்டு இடிவிழுந்த பாம்பு போலவும், பாம்பின் வாய் அகப்பட்ட தேரை போலவும், பெருங்காற்றினால் சாய்ந்த மரம் போலவும் மிகுந்த துன்பம் கொண்டான் எனப் பல்பொருள்களால் விளக்குகிறார் சோமன்.

2. ஏது அணி

பாரத மாவிந்தத்தில், 'ஏது உவமை'யும் இடம்பெற்றுள்ளது. சிவபெருமானின் தலையிலுள்ள கங்கையாறு குருநாட்டில் பாயும் காரணத்தால், அவருடைய தலையிலுள்ள கொன்றை மலரின் மணத்தையும் குளிர்ச்சியையும் குருநாடு பெற்றதாகக் காட்டப்படுகிறது. இதனைக் கீழ்வரும் பாடல் உணர்த்துகிறது.

விளியா வினைதீர் வியன்கங் கையினில்
தெளிவார் புனல்பாய் வயல்தே சமெலாம்
ஒளிவார் சடையுற் றுளகொன் றைமலர்க்
குளிர்மா மணமேர் குருநா டதுவே (பா.மா.29)

பாரதமாவிந்தத்தில் உவமை அணி இடம்பெறும் பாடல் எண்கள்[1], அவற்றில் இடம்பெறும் உவம உருபுகள் இவற்றை அடிக்குறிப்பில் காண்க.

---

[1] 7, 10, 11, 16, 17, 23, 24, 27, 28, 29, 31, 57, 58, 67, 79, 93, 94, 106, 108, 109, 114, 125, 135, 138, 141, 144, 145, 147, 149, 163, 170, 177, 194, 203, 224, 225, 231, 239, 243, 244, 256, 259, 260, 275, 300, 306, 317, 339, 343, 350, 361, 364, 368, 434, 444, 465, 477, 486, 512, 524, 529, 564, 567, 569, 579, 589, 590, 593, 602, 604, 607, 609, 589, 590, 593, 602, 604, 607, 609, 611, 643, 676, 681, 690, 709, 712, 717, 720, 729, 732, 733, 736, 739, 744, 745, 749. உவம உருபுகள்: அன்ன - 567; அனைய - 125; என்று -465; என்ன-109, 135, 149, 231, 443, 564, 609, 611, 717, 733, 745; என -10, 11, 16, 17, 31, 67, 138, 141, 145, 194, 260, 300, 339, 364, 368, 512, 643, 709, 749; எனல்-249; ஒத்து - 224; ஒப்ப-177;

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

7.3 உருவக அணி

'உருவக அணி' உவமையணியோடு நெருங்கிய தொடர்புடையது. உவமையையும், பொருளையும் வேறு வேறாகக் காணாமல் ஒன்றிலே மற்றொன்றைக் காண்பது உருவக அணியாகும்[1]. ஆசிரியர், சோமன் கலியின் இயல்பு பற்றிக் கூறும்போது,

பொய்கொலையெ னும்பணிகள் பூண்டுவினை பேசி
மையல்பொரு ளாசையெனு மாலைமுடி சூடிக்
கையினை நிலத்தினிடை யூன்றியிரு கால்மேற்
செய்யதலை கீழுற நடந்துகலி சென்றே (பா.மா.168)

என்று கலிகாலமானது பொய்யையும், கொலையையும் அணிகலன்களாக அணிந்து, வஞ்சகம் பேசுவதையே பேச்சாகக் கொண்டு, மோகம், பொருளாசை என்னும் மாலையைச் சூடிச் சென்றதாகக் கலியின் கொடிய உருவின் த்ன்மையை நயம்பட உருவகித்துள்ளார்.

7. 3.1 முற்றுருவகம்

ஒரு பாடல் முழுவதும் உருவகம் அமைந்திருந்தால் அதை முற்றுருவகம் என்று தண்டியலங்காரம் (தண்.37) கூறுகிறது. இங்கு நூல் முழுவதுமே உருவகமாக அமைந்துள்ளதால் இதை முற்றுருவகக் காப்பிய அணி என்று கொள்ளலாம். ஆசிரியர் வைகுண்டத்தையே காடாக உருவகம் செய்துள்ளதைப், 'பாண்டுவின் மைந்தர் வைகுண்ட மாவிந்தம் மேவுவர்' (பா.மா.289), 'விந்தமாவனம்' (பா.மா.545) என்ற பாடலடிகள் உணர்த்துகின்றன.

பாரத மாவிந்தம் என்னும் இந்நூல் பாண்டவர்கள் துரோபதியுடன் சேர்ந்து, பாரதப் போரில் வீரர்களைக் கொன்ற பாவம் நீங்கத், திருமாலை அடையும் எண்ணத்துடன் மேற்கொண்ட வைகுண்டப் பயணத்தைக் கதைப்பொருளாகக் கொண்ட கதையாகும். இது, அவர்கள் நாடுவிட்டுக் காடு சென்று, இறுதியில் இறைவனை அடைந்தது வரை நிகழ்ந்த ஆன்மீகப் பயணத்தின் நிகழ்ச்சிகளை விவரிக்கும் நிலையில் அமைந்துள்ளது.

முற்றுருவகம் என்பது ஒரு பொருளின் கதை விளக்கம் (கதை உருவத்திலுள்ள விளக்கம்) அதையொத்த வேறொரு பொருளின் உருவத்தில் (குறியீட்டில்) அமைந்து இருப்பதாகும். மேலோட்டமாகக் கதைபோல் அமைந்திருப்பினும் அதன் உள்ளே அதோடு தொடர்புடைய மற்றொரு பொருளை அது உணர்த்தி நிற்கும் என்று ஜோசப் டி.ஷிப்லி[2] கூறுவார்.

நிகர்க்க- 225; நேரிய - 31; பொரு -7; போல் - 23, 24, 27, 28, 57, 58, 94, 147, 256, 259, 275, 317, 343, 361, 444, 567, 569, 589, 590, 593.

[1] உருவக அணி இடம்பெறும் பாடல்கள்: 7, 154, 168, 204, 240, 242, 289, 300, 301, 430, 545, 625, 671 (13)

[2] டிஷ்னரி ஆப் வெர்ல்டு லிற்றிரேச்சர், ப. 13

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

முற்றுருவக விளக்கத்தின் தாய் 'பக்தி' என்பர் அறிஞர். பாரதமாவிந்தமும் பக்திமிக்க முற்றுருவகத்தாலான காப்பியமாகும். பாண்டவர்கள் திருமால் மீது கொண்ட பக்தியால், அவரை அடைவதையே உள்நோக்கமாகக் கொண்டு, மனம் தளராது உறுதியுடன் சென்று அவரை அடைகின்றனர். இடையில் பல்வேறு தடைகள், பற்பல நிலைகளில் சங்கிலித் தொடர்போல் அமைக்கப்பட்டு, நீண்ட தொடர்ச்சியை உடையதாய் ஒரு முழுமையான வாழ்வுப் பொருளை விளக்கும் நிலையில் அமைந்துள்ளது.

7. 3 . 2 தமிழில் முற்றுருவகத்தில் அமைந்த நூல்கள்

குணங்களை உருவகப்படுத்திப் பாடும் மரபு தமிழில் காணப்படுகிறது. திருக்குறளில் 'அழுக்காறென ஒரு பாவி' (திரு. 168) 'இன்மை என ஒரு பாவி' (திரு. 142), 'நாண் என்னும் நல்லாள்' (திரு.924) எனப் பண்புகளை உருவகப்படுத்திப் பாடியிருத்தலை[1] உ.வே. சாமிநாதையர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு அமைந்த நூல்கள் [2]பாசவதைப்பரணி, [3]அஞ்ஞவதைப் பரணி, [4]மோகவதைப் பரணி என்று இலக்கிய வரலாற்றாசிரியர் மு. அருணாசலம் கூறியிருக்கிறார்.

1. பாசவதைப்பரணி

பாசத்தால் கட்டுண்டு அஞ்ஞானத்தில் உழலும் ஆன்மாவைப் பாச மன்னனாகவும், அஞ்ஞானத்தைப் போக்கும் இறைவனைச் சிவஞான தேசிகராகவும் உருவகப்படுத்திப் பிறபண்புகளையும் அதனோடு தொடர்புபடுத்திப் பாடப்பெற்ற நூல் ஆகும் பாசவதைப்பரணி.

2. அஞ்ஞவதைப் பரணி

தம்மிடமிருந்த அஞ்ஞானத்தைத் தலைவராகிய சொருபானந்தர் வதைத்தார், எனப் பாடிய நூல் அஞ்ஞவதைப் பரணி என்றும், மோகவதைப் பரணி, மோகன் என்பவனைச் சொருபானந்தர் வதைத்த செய்தியைக் கூறும், நூல் என்றும் இலக்கிய வரலாற்றாசிரியர் மு.அருணாசலம் [5] கூறியுள்ளார்.

தமிழில் மட்டுமன்றிப் பிறமொழிகளிலும் மேலைநாட்டு இலக்கியங்களிலும் முற்றுருவகத்தில் அமைந்த நூல்கள் உள்ளன.

---

[1] பாசவதைப் பரணி, ப.x

[2] பாசத்தால் கட்டுண்டு அஞ்ஞானத்தில் உழலும் ஆன்மாவைப் பாச மன்னனாகவும், அஞ்ஞானத்தைப் போக்கும் இறைவனைச் சிவஞான தேசிகராகவும் உருவகப்படுத்தியிருப்பது.

[3] தம்மிடமிருந்த அஞ்ஞானத்தைத் தலைவராகிய சொருபானந்தர் வதைத்தார் எனப் பாடிய நூல்.

[4] மோகன் என்பவனைச் சொருபானந்தர் வதைத்த செய்தியைக் கூறும், நூல் என்று இலக்கிய வரலாற்றாசிரியர் மு. அருணாசலம் கூறியுள்ளார். (தமிழ் இலக்கிய வரலாறு 15-ஆம் நூற்றாண்டு, ப. 233)

[5] தமிழ் இலக்கிய வரலாறு 15-ஆம் நூற்றாண்டு, ப. 233.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

3. கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் திருவேங்கடநாதர் என்பவர் வடமொழியில் எழுந்த பிரபோத சந்திரோதயம் என்னும் நாடக நூலைத் தழுவித் தமிழில் பிரபோத சந்திரோதயம் என்ற பெயரில் ஒரு காப்பிய நூலைப் பாடியுள்ளார்.

4. ஜான்பனியன் (1628 – 1688) எழுதிய பில்கிரிம்ஸ் புரோகிரஸ் என்ற நூலைத் தழுவி ஹை.ஏ.கிருஷ்ணபிள்ளை இரட்சணிய யாத்திரிகம் என்ற நூலைப் படைத்துள்ளார். 'இக்காப்பியம் முழுவதுமே உருவகமாய் அமைந்துள்ளது' என்று வி.ஞானசிகாமணி[1] குறிப்பிட்டுள்ளார்.

7.3.3 வடமொழியில் முறுருவகத்தில் அமைந்த நூல்

கிருஷ்ண மிஸ்ரயதி என்பவர் எழுதிய பிரபோத சந்திரோதயம் என்ற நாடகம் முற்றுருவகமாக அமைந்த நாடகம் ஆகும். ஆசிரியர், 'அத்வைத' தத்துவத்தை உண்மையான மதம் என்றும், பிற தத்துவங்களைப் பொய்யானவை என்றும் கூறி, அவற்றைக் குணங்களாக உருவகித்து முற்றுருவக இயல்புகள் அமையப் பாடியுள்ளார்.

7.3.4 மேல் நாட்டில் முற்றுருவத்தில் அமைந்த நூல்கள்

மேலை நாடுகளிலும் குணங்களை உருவகப்படுத்திக் கூறும் மரபு காணப்படுகிறது.

1. ஸ்பென்சரின் பெயரிகுயின், ஸ்விப்டின் கல்விவர்ஸ் டிராவல்ஸ், டென்னிசனின் ஐடில்ஸ் ஆப் தெ கிங் முதலிய நூல்கள் முற்றுருவகமாக அமைந்தவை என்று மணீந்திரநாத் சின்கா[2] கூறுகிறார்.

2. பில்கிரிம்ஸ் புரோகிரஸ் என்ற நூலும் முற்றுருவகத்தால் ஆனதாகும். இந்நூல் மேலோட்டமான பொருளில் 'திருப்பயணி' ஒருவன் செய்யும் பயணத்தைச் சொல்கிறது; உள்ளுறைப் பொருளில் ஒரு கிறித்தவ வாழ்வின் ஆன்மீகப் பயணத்தை[3] உணர்த்துகிறது.

3. பிரான்சிஸ் தாம்ப்சன் என்பவரின் (1859 – 1907) ஹௌண்ட் ஆப் ஹெவன்[4] என்ற கவிதையும் முற்றுருவக நிலையில் பாடப் பெற்றது. இது, நிலையான இன்பம் பெற ஆன்மாவிலுள்ள அடங்காத ஆசையைப் பற்றிக் கூறுகிறது. இந்நூலில் சொர்க்கத்தை 'வேட்டைநாயாகவும்', அதன் உணவாக 'ஆன்மாவையும் உருவகித்து, இறுதியில் ஆன்மா வேட்டைநாயிடம் அடைக்கலம் அடைவதாகக் காட்டப்பெற்றுள்ளது.

7.3.5 பாரத மாவிந்தத்தில் முற்றுருவகம்

மேலே கண்ட நூல்களைப் போல் பாரத மாவிந்தமும் முற்றுருவக நிலையில் அமைந்துள்ளது. இந்நூல் வெளிப்படையாக நோக்கும்போது, பாண்டவர்கள் வைகுண்டம் செல்வதற்குரிய துறக்கப்பயணத்தை மேற்கொண்டதாகத் தென்படுகிறது; உள்ளுறை

---

[1] எ.ஆ. கிருஷ்ணபிள்ளையின் நூல்கள், ப. 168.

1 எ. மானுவல் ஆப் ரிற்றாறிக் அண்ட் புரோசடி, ப.11.

[3] என்சைக்ளோ பீடியா ஆப் பிரிட்டானிக்கா, தொகுதி 4, ப. 415)

[4] (ஜான் தாம்சன்) பிரான்சிஸ் தாம்ப்சன் பொயட் அண்ட் மிஸ்டிக், ப. 112.

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA).

நிலையில் மனிதனின் ஆன்மீகப் பயணத்தை உணர்த்தி நிற்கிறது. பாண்டவர்களின் பயணத்தின் போது வழியில் எதிர்ப்பட்ட பாத்திரங்கள், இடங்கள், நிகழ்ச்சிகள் அனைத்தையும் உண்மையாகக் கொள்ளாமல் உருவகமாகக் கொண்டால் நூல் முழுமையும் முற்றுருவகமாக அமைந்துள்ளது என்பது விளங்கும். பாண்டவர்களுடைய மாவிந்த பயணத்தைத் திசை திருப்பும் வகையில் அவர்கள் சென்ற வழியில் எதிர்ப்பட்டவர்கள் அவர்களுக்கு நாடு தருவதாகவும், நங்கையரை மணம் செய்வித்துப் போகவாழ்வு அளிப்பதாகவும், பாண்டவர்களை அழைப்பதாக நிகழ்ச்சிகள் அமைந்துள்ளன. இவையெல்லாம் மண்ணாசை, பெண்ணாசை என்னும் பண்புகளின் உருவகங்களாகும். பாண்டவர்களின் வரவால் அவர்கள் சந்தித்த பலர் சாப நீக்கம் பெறுகின்றனர். இந்நிகழ்ச்சி பாண்டவர்களின் தீய இயல்புகள் ஒவ்வொன்றாக அவர்களை விட்டு நீங்குவதை மறைமுகமாகச் சுட்டிச் செல்கிறது.

7.4 தீவக அணி

பாட்டில் ஓர் இடத்தில் ஒரு சொல் அமைந்திருந்தாலும் அச்சொல் அப்பாட்டில் உள்ள ஒவ்வொரு தொடரோடும் பொருந்தி பொருள் தருமாறு அமைவது தீவக அணியாகும். இது செய்யுளில் முதலிலும், இடையிலும், கடையிலும் தோன்றும் இதை முறையே முதனிலைத் தீவகம், இடைநிலைத் தீவகம், கடைநிலைத் தீவகம் என்பர்.

இந்நூலில் இடம்பெறுவது இடைநிலைத் தீவகம் ஆகும்.

நீடு மதியின் குருகுலத்தோர் (பா.மா. 240) என்ற பாடலடியில் மதியின் என்ற சொல் நீண்ட புகழ்பெற்ற சந்திரகுலத்தில் தோன்றிக் குருகுலத்தவர் என்று பொருள் தந்தும், சந்திர குலத்தவரின் நீண்ட புகழ்பெற்ற குருகுலத்தவர் எனப் பொருள் தந்தும் நிற்கிறது. மதியின் என்று இடையில் நிற்கும் சொல் 'நீடு' என்பதன் முன்னும் பின்னும் நின்று பொருள் தருவதால் இது 'இடைநிலைத் தீவகம்' ஆகும்.

7. 5 பின்வருநிலை அணி

ஒரு செய்யுளுள் முன்னர் வந்த சொல்லாவது, பொருளாவது பின்னர்ப் பல இடத்தும் வருமாயின் அது பின்வருநிலை அணியாகும் (தண். 41)

சொற்கள் பொருள் வேறுபடத் தொடர்வதும், பொருள் வேறுபாடின்றி ஒரே பொருள் தரும் சொற்கள் தொடர்வதும், சொல் பொருள் இரண்டும் இணைந்து தொடர்வதும் உண்டு. எனவே, இவ்வணியைச், சொல்பின் வருநிலை, பொருள் பின்வரு நிலை, சொல்பொருள் பின் வருநிலை என மூவகையாகப் பாகுபடுத்திக் கூறுவர்.

1. சொற்பின்வருநிலை அணி

ஒரு சொல் பலபொருளில் வருதல் சொற் பின்வருநிலையணியாகும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வாரண மடைத்துத் தோலா வஞ்சரை யழித்தாய் போற்றி!
வாரணந் தனைய ளிக்க வந்துமுன் னின்றாய்ப் போற்றி!
வாரணஞ் செங்கை கொண்ட வாமன ரூபா போற்றி!
சீரணி முகுந்தா போற்றி! சிறீகரி போற்றி! போற்றி! (பா.மா.742)

என்னும் பாடல் சொற்பின்வருநிலைக்குத் தக்க சான்றாகும். முதலில் உள்ள மூன்றடிகளிலும் வரும் 'வாரணம்' என்ற சொல் முறையே கடல், யானை, சங்கு என்று வெவ்வேறு பொருளில் வந்தமையால் இது சொற்பின்வரு நிலை அணியாயிற்று. இவ்வணியில் அமைந்த மற்றொரு பாடல் 296 ஆகும்.

2. சொற்பொருள் பின்வருநிலை அணி

ஒரு சொல் ஒரே பொருளில் பல முறை பாடலில் வருவது சொற்பொருள் பின்வரு நிலை அணியாகும். சான்றாக,

எண்ணிலா வனந்தகிரி யெண்ணிலா வனந்தநதி
எண்ணிலா வனந்த முனிவர்
எண்ணிலா வனந்தவர மெண்ணிலா வனந்தசுரம்
எண்ணிலா வனந்த மிருகம்... (பா.மா. 262)

என்ற பாடல் அமைகிறது. இதில் 'எண்ணிலா' என்னும் சொல் 'எண்ண இயலாத' என்ற பொருளில் எல்லா இடங்களிலும் சொல்லாலும் பொருளாலும் வேறுபாடின்றி வந்துள்ளது.

'ஆசிரியர் தாம் சொல்லக் கருதிய கருத்தைக் கேட்பவர் உள்ளம் கொள்ளும் வகையில் அறிவுறுத்துவதற்கு இந்தச் சொல்லடுக்கு முறையும் சொற்பொருள் பின்வரு முறையும் ஓரளவு துணைபுரிகின்றன எனலாம்' என்பார் இ. சுந்தரமூர்த்தி [1].

7. 6 உயர்வு நவிற்சி அணி[2]

ஒரு பொருளின் சிறப்பை எடுத்துக்காட்ட அதன் இயல்பான தன்மையினின்றும் மிகுதியாகப் பாராட்டி உயர்த்திக் கூறுவது உயர்வு நவிற்சியாகும். ஆசிரியர் சோமன், குருநாட்டின் வளத்தைக் கூறும்போது, "பொய்கையில் உள்ள கயல்மீன் தாவியதால் அது பாளையில் பட்டு மதுவழிந்து, வயலில் விழும்" என உயர்வுநவிற்சியாக,

வாவி யின்கயல் தாவு பாளையின் மதுவ ழிந்து வயற்கணே
மேவு நன்குரு னாட னத்தின புரியின் வீதியில் மேவினான் (பா.மா.111)

என்ற பாடலில் காட்டுகிறார்.

---

[1] இ. சுந்தரமூர்த்தி, திருக்குறள் அணிநலம், ப. 209.
[2] உயர்வு நவிற்சி அணி இடம்பெறும் பாடல்கள்: 32, 111, 336, 568 - (4).

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

7. 7 தற்குறிப்பேற்ற அணி[1]

கவிஞர்கள் ஒரு பொருளுக்குரிய இயல்பான காரணத்தை ஒழித்துத் தாங்கள் கருதிய வேறொரு காரணத்தை அப்பொருளின் மேல் ஏற்றி, அழகும் பொருளும் விளங்க உரைப்பது தற்குறிப்பேற்றமாகும். இது காப்பியத்திற்குச் சிறப்புத் தரும் வகையிலும், இரக்க உணர்வைத் தூண்டும் நிலையிலும் அமைந்துள்ளது.

தருமன் சென்ற காட்டில் முல்லை மலர் இயல்பாக மலர்ந்திருந்ததை மனைவி, தம்பியர், ஆகியோருடன் வந்த தருமன் அவர்களை இழந்து தனியாக உயிர்வாழ்கிறானே என்று நகைக்கின்றதோ என்றும், காந்தள் செடி அவன் படும் துன்பத்தைக் கண்டு இது கூடாது என்று கைகளை மறுத்துக் காட்டுகிறதோ என்றும் தருமன் எண்ணுவதாக ஆசிரியர் தமது கருத்தை அந்நிகழ்ச்சியின் மீது ஏற்றி சுவைமிக்க பாடலாகப் பாடியுள்ளார்.

காந்தள் மலர் தொங்கிய நிலையில் மலரும் தன்மையைத் தம் கற்பனைக் கேற்பக் கை மறித்துளதோ என ஆசிரியர் பாடுவது அவர் எதையும் நுணுகி நோக்கும் தன்மையுடையவர் என்பதைக் காட்டுகிறது. துன்பத்தில் வருந்துவோர்க்குத் தாம் காண்பவை எல்லாம் தம்மை எள்ளி நகையாடுவதாகவே தோன்றும் என்ற உளவியல் கருத்தை ஆசிரியர்,

கானுறு முல்லை மலர்ந்தது கண்டு
கடுஞ்சுரத் தைவர்களுடனே
தானுறு தரும னவர்களைப் போக்கித்
தனித்தன னெனநகைத் ததுவோ
பூனிறை காந்தள் யான்படுந் துயர்க்குப்
போதவே கைமறித் துளவோ (பா.மா.623)

என்ற பாடலில் காட்டியிருக்கிறார்.

7. 8 நிரனிறை அணி

சொல்லையும் பொருளையும் நிரலே நிறுத்தி சொல்லப்பட்ட பொருள்களுக்குத் தொடர்பானவற்றைத் தொடர்ந்து அம்முறையிலேயே அழகுபடக் கூறுவது நிரல்நிறை அணியாகும். இவற்றை நேராகவும், எதிராகவும் கூறலாம்; முன்னதை 'நேர்நிரல் நிறை அணி' என்றும், பின்னதை 'எதிர் நிரல் நிறையணி' என்றும் கூறுவர். பாரதமாவிந்தத்தில் காண்பது 'நேர் நிரல் நிறை' அணியாகும்.

பொய்கை ஒன்றில் தாமரையும், குவளையும், குமுதமும் மலர்ந்திருந்ததைப் பாண்டவர்கள் கண்டனர். அவர்கள், அவற்றைத் துரோபதியின் முகமும், கண்ணும், வாயும் என்றெண்ணாது, திருமாலின் முகத்துக்கும், கண்ணுக்கும், வாய்க்கும் இயைந்தன என்றெண்ணி மகிழ்ந்த நிலையைக் கீழ்வரும் பாடல் காட்டுகிறது.

---

[1] தற்குறிப் பேற்ற அணி இடம் பெறும் பாடல்கள்: 26, 623, 630, 632, 651 -(5).

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பங்க யங்களும் குவளையும் குமுதமும்
பாத்தன ரினியபாஞ் சாலிக்கு
அங்கு றுந்திரு வதனமும் கண்ணும்
வாயழகு மென்றிவை யெண்ணார்
சங்க மர்ந்துறை கரத்தினர் நயனமுந்
தக்க மேனியும் வாயும்
இங்கி சைந்துள வென்றுள மெண்ணினார்... (பா.மா.544)

தாமரை, குவளை, குமுதம் ஆகிய மலர்களை முதலில் கூறிப் பின்னர் அவற்றிற்கு ஒப்புமை உடைய உறுப்புகளான முகம், கண், வாய் இவற்றை முறையாகக் கூறினமையின் இது நேர் நிரல்நிறை அணியாகும். தாமரை, குவளை, குமுதம் என்ற சொற்களை வரிசையாக நிறுத்தி, அதற்கு இயைபுள்ள உறுப்புக்களை முறைப்படக் கூறியிருப்பது பாடலுக்கு அழகும் இனிமையும் தரும் வகையில் அமைந்துள்ளது.

7. 9 முரண் அணி

ஒன்றிற்கொன்று முரணாக அமைந்தவற்றைக் கூறிப் பின்னர் அவற்றின் தொடர்பைக் கூறுவது கவிஞர்களின் இயல்பு. இதை இலக்கண நூலார் 'முரண் அணி' அல்லது 'விரோத அணி' என்பர் (தண். 82)

கண்ணன் பாண்டவர்களுக்குச் செய்த உதவிகளை நினைத்துத் தருமன் அவனைப் போற்றிப் பாடும் பாடலில் முரண்அணி காணப்படுகிறது. பாரதப்போர் நடந்தபோது, கண்ணன் பீஷ்மரைக் கொல்லத் திட்டமிட்டுச் சிகண்டியை அவரது தேரின் முன் நிறுத்தினான். பீஷ்மர் சிகண்டியுடன் போர் புரியாது நிற்கும் சமயத்தில் அர்ச்சுனன் அவரை அம்பெய்து வீழ்த்தினான்; அவர் இறந்தார். போரில் அபிமன்னன் இறந்தபோது, அர்ச்சுனன் அந்தத் துயரம் தாங்காத நிலையில் நெருப்பில் விழ முயன்றான். அப்போது கண்ணன் இந்திரன் மூலமாக அர்ச்சுனனை நெருப்பிலிருந்து காப்பாற்றினான். இவ்வாறு மடியச் செய்து காத்து என்று ஒன்றிற் கொன்று முரண்பட்ட சொற்களை அமைத்துள்ளதால் இது 'முரண் அணி'யாகும். இதை,

வீடுமன் மடியச் செய்து செந்தீயால் விசையனைக் காத்து (பா.மா.661) என்ற பாடலடி காட்டுகிறது.

நிறைவுரை: இதுகாறும் நோக்கியவற்றிலிருந்து பாரதமாவிந்தத்தில் மிகுதியாக இடம்பெற்றிருப்பது உவமையணி என்பது புலனாகும். அதற்கடுத்தாற் போல் உருவக அணியும் பிற அணிகளும் சிற்சில இடங்களில் இடம்பெற்றுள்ளன. அணிகள் குறைவாகக் கையாளப்பட்டிருந்தாலும் அவை கூறப்பெற்றிருக்கும் இடங்கள் சிறப்பாக உள்ளன; சொல்ல வந்ததைத் தெளிவாக விளக்கிக் கற்பவர்க்கு இன்பம் நல்கும் நிலையில் அமைந்துள்ளன.

****

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA).

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

8. பாரத மாவிந்தம் - மொழிநிலை

மொழி என்றும் ஒரே நிலையில் இருப்பதில்லை. காலந்தோறும் மாறும் இயல்புடையது; இடத்திற்கிடம் இனத்திற்கினம் மனிதருக்கு மனிதர் அது மாற்றம் அடைகிறது. காலப் போக்கில் பல்வேறு வடிவங்களைப் பெற்றுத் திரிகின்றது. இத்தகைய திரிபு ஒலியனிலும், உருபனிலும், தொடரிலும் காணப்படுகின்றது. இலக்கியம், நாடகம், நாட்டுப் புறப்பாடல் எனப் பல நிலைகளில் காணப்படும் பாரத மாவிந்தத்தின் மொழிநிலை எங்ஙனம் அமைந்துள்ளது என்பது குறித்துக் காணலாம்.

8.1 பெயர்ச்சொல்

பாரத மாவிந்தத்தில், அடிச்சொற்களோடு ஆக்க உருபுகள் சேர்ந்து பெயர்ச்சொற்கள் அமைந்துள்ளன.

1. ஒப்புமையாக்கம்

நாரியர், வேசியர் என்ற சொல் அமைப்பையொட்டி ஒப்புமை யாக்கத்தால் அமைந்தது 'நேசியர்' (பா.மா.28) என்ற சொல்

எ-டு. அற்புதன் - அற்புதை (பா.மா.5)
ஆயர் - நேயர் (பா.மா.450)
கொடியர்- தீமையர் (பா.மா.392)
சுத்தன் - சுத்ததை (பா.மா.3)
தவத்தினர் - தபத்தியர் (பா.மா.675) ;
முனிவர் -முனிவி (பா.மா.645)
விரகன் - விரகி (பா.மா.4)

2. ஒட்டுக்கள்

ஒட்டுக்கள் அடிச்சொல்லோடு இணைந்தும் பெயர்ச்சொற்கள் சில பாரத மாவிந்தத்தில் காணப்படுகின்றன.

1.' மார்' என முடியும் பன்மை உணர்த்தும் உயர்திணை விகுதி
எ-டு. தம்பி + மார் - தம்பிமார் (பா.மா.284)

2. 'ஓர்' என முடியும் பன்மை உணர்த்தும் உயர்திணை விகுதி
சன்னதி+ஓர் - சன்னதியோர் (பா.மா.349)
முனிவர் +ஓர் - முனிவோர் (பா.மா.70)

3. 'அர்' விகுதி சேர்ந்து வரும் சொறகள்
கடவுள்+ அர் -கடவுளர் (பா.மா.247)
தம்பி +அர் – தம்பியர் (பா.மா.79)
இங்கு மரியாதைப் பன்மை ஒருமையில் வருகிறது.

4. 'ஆர்' சேர்ந்து வரும் சொற்கள்

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

காலன் + ஆர் – காலனார் (பா.மா.664)

பாலன் +ஆர் - பாலனார் (பா.மா.664)

5. 'கள்' விகுதி உயர்திணைப் பன்மை உணர்த்துகிறது.

நீர்+கள் - நீர்கள்

மூர்த்தி + கள் - மூர்த்திகள் (பா.மா.523)

மரியாதைப் பன்மை ஒருமை உணர்த்தவும் 'கள்' விகுதி இடம்பெற்றுள்ளது.

8. 2 வேற்றுமை உருபு

1.மூன்றாம் வேற்றுமை உருபு இடப்பொருளில் வந்துள்ளது.

இது மலையாள வழக்கை ஒத்துள்ளது.

எ-டு. சகா தேவனோ டறத்தினன் இயம்ப (பா.மா.175)
அரியினோடவன் செய்யும் (பா.மா.415)

இவ்விரு தொடர்களும், சகாதேவனிடம் தருமன் கூற, "அரியிடம் அவன்" என்று பொருள்படும். இவ்வழக்கு இன்றும் மலையாள மொழியில் வழக்கில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

எ-டு. தருமன் சகாதேவனோடு பறஞ்ஞு

பாரத மாவிந்தத்தில் மூன்றாம் வேற்றுமை உருபு ஐந்தாம் வேற்றுமைப்பொருளில் வருகிறது. இது இலங்கை வழக்கை ஒத்துள்ளது.

எ-டு. 'நரகினால் விடும்' (பா.மா.713) .இதன் பொருள் 'நரகிலிருந்து விடும்' என்பதாகும். இது இலங்கை வழக்கைப் போன்றுள்ளது.

ஒப்பு நோக்குக.

எ-டு. யாழ்ப்பாணத்தால் வந்தான் - யாழ்ப்பாணத்திலிருந்து வந்தான்.

8.3 வினைச்சொல்

இன்றி என்பதன் பொருளில் 'அன்றி' என்னும் சொல் குறிப்பு வினையெச்சமாக வந்துள்ளது.

எ-டு. அன்றி (பா.மா. 378, 392, 403, 419)

1. பகுதிகள் 'கு' என்னும் ஆக்க நிலை விகுதி பெற்று வந்துள்ளன.

எ-டு. இலகு (பா.மா.669)
நன்கு (பா.மா.533)
பெருகு (பா.மா.242)

2. 'கில்' என்னும் எதிர்மறை இடைநிலையும் இடம்பெற்றுள்ளது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

எ-டு. காண்கிலம் (பா.மா.557)
நிற்கிலீர் (பா.மா.96)
புகல்கிலீர் (பா.மா.555)
பேசகிலால் (பா.மா.20)

3. உயர்திணைத் தன்மை வினைமுற்று இந்நூலில் எதிர்காலத்தில் வந்துள்ளது.

எ-டு. ஏவுது (பா.மா.95) - அனுப்புகிறேன்.

தொல்கப்பியம்[1] 'து' கரம் தன்மை ஒருமை விகுதியாக அமையும் எனக் கூறுகிறது..

எ-டு. வருது.

4. ஒருமை பன்மை மயக்கம்

எ-டு. இசைந்து உடையது எல்லாம் (பா.மா.210)
பகர்கிற்பான் (பா.மா.722)
அறைகிற்பான்(பா.மா.714) போன்ற சொற்கள் முறையே, 'பகரலானான்' 'அறைய லானான்' என்னும் பொருளில் அமைந்துள்ளன. காண் என்பதன் தொழிற் பெயராகக் 'காண்டல்'[2] என்னும் வடிவம் அமைந்துள்ளது.

5. தொடரியல்

பொருளொடு புணராச் சுட்டுப்பெயர் அமைந்த தொடர் பாரத மாவிந்தத்தில் காணப்படுகிறது.

ஆதவன் அத்தஞ் சேர்தலும் ஒளிசேர்
அங்கியும் தன்னுரு மழுங்க
... ...
நீதியன் துயிலும் பாதகங் கண்டு
நேமியங் கரத்துடன் நின்ற,
சோதியான் உதய மெய்தலும்... (பா.மா.651)

இங்கு ஆதவன், அங்கி, சோதியான் என்ற சொற்கள் ஒருபொருள் மேல் நின்றன. பின்னிரண்டு பொருட்பெயரும் 'ஆதவன்' என்ற இயற்பெயரைக் குறித்த சுட்டுப்பொருள் பயத்ததாக அமைந்துள்ளன. இங்ஙனம் அமைவதை நச்சினார்க்கினியர் தொல்காப்பியச் சொல்லதிகாரத்தில் விளக்கியுள்ளார். இதற்கு அவர் காட்டும் சான்று,

பொற்பூண் சுமந்த புணர்மென் முலைக்கோடு போழ
நற்பூங் கழலா னிருதிங்க ணயந்த வாறும்
கற்பா டழித்த கனமாமணித் தூண்செய் தோளான்
வெற்பூ டறுத்து விரையின் நெறிக்கொண் டவாறும் (சீவக சிந்தாமணி, 19)

---

[1] தொ. சொல். 25 நச்.உரை .
[2] கெருடனைக் காண்டல் பாரத மாவிந்தம் .-7 ஆம் சருக்கத்தின் பெயர்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

என்னும் சீவக சிந்தாமணிப் பாடல். இப்பாடலில் கழலான், தோளான் என்பன ஒருபொருள்மேல் நின்ற சுட்டுப்பெயர்கள். சுட்டொடு புணராத பொருள் பெயர் அமைவதை 53 -வது குறள் விளக்கத்தில் திருமேனி காரிரத்தினக் கவிராயர்[1] விளக்கியிருக்கின்றார்.

8.4 பாரத மாவிந்தத்தில் காணப்படும் அரிய சொற்கள்

எ-டு. கரிந்தவாசகம் (பா.மா.552) - கடுஞ்சொல்
மானக்கேடு (பா.மா.124) அவமானம்
வின்மை (பா.மா.511) - வில்லாற்றல்
வினையம் (பா.மா.298) – வஞ்சகம்

பாரத மாவிந்த ஆசிரியர் சோமன், கதை மாந்தர்க்கு அவர்களுடைய பண்பின் அடிப்படையில் பெயர் வழங்கியிருப்பது நோக்கத்தக்கது.

எ.டு. நடுவுரை வழுவுறாத் தருமன் (பா.மா.668),
தகுதியில் பெரியோன் - தருமன்(பா.மா.670)
ஆண்ட நாயகன் - தருமன் (பா.மா.725)
நடுநின்றோன் -தருமன் (பா.மா.716)
பொறையின் பண்பினன் - தருமன் (பா.மா.687)
மண்பொதுத் தந்தை– நான்முகன் (பா.மா.724)
விதியவன் தந்தை -திருமால் (பா.மா.680)

8.5 பழஞ்சொல்லாட்சி

ஆசிரியர் பழைய சொற்களையும் தக்க இடங்களில் பயன்படுத்தியிருக்கிறார்.

எ-டு. உம்பி - உன் தம்பி (பா.மா.619),
எம்பியர்- என் தம்பியர் (பா.மா.634)
நும் - உமது (பா.மா.576);
நின்னது - உன்னுடையது (பா.மா.160)

8.6 பேச்சுவழக்குச் சொற்கள்

எ-டு. அஞ்சு - ஐந்து (பா.மா.150)
தட்டு - தட்டம் (பா.மா.425)
பைய - மெதுவாக (பா.மா.350)
பிறப்படு - புறப்படு (பா.மா.317)
காச்சி - காய்ச்சுதல் (பா.மா.705)
உறுக்கி - அச்சுறுத்தி (பா.மா.569)
பார்த்திடுவோம் - சபதம் (பா.மா.395)

[1] திருக்குறள் பரிமேலழகருரை நுண்பொருள்மாலை, இ.சுந்தரமூர்த்தி பதிப்பு.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கனக்க --இலங்கை வழக்கு (பா.மா.551)

2. அடுக்குத்தொடர் சொற்கள்

எ-டு. அஞ்சல் அஞ்சல் (பா.மா.110),
அழுது அழுது (பா.மா.616),
பட்ட பட்ட(பா.மா.104) என்றும்;

உணர்ச்சிக் குறிப்புச் சொற்கள்,

எ-டு. அ ஆ (பா.மா.693)
ஓ (பா.மா.527) போன்றவை சொற்றொடரின் இடையே வந்து உணர்ச்சி நயத்தை வெளிப்படுத்துவதைக் காணமுடிகிறது.

8.7 மெய்யொலி தோன்றல்

மொழியிடையே யகர, ரகர மெய் தோன்றல்

எ-டு தீமை - தீய்மை (பா.மா.233) ; சேவை - சேர்வை (பா.மா.190)

இவற்றை மொழியியலார் மிகைத்திரிபு என்பர்.

8. 8 திரிதல்

ஒலிகள் மொழிக்கு முதலிலும், இடையிலும், கடையிலும் திரிந்து வந்துள்ளன. இவற்றுள் பலவும் போலியைப் (free variation) போன்றவை.

1. உயிரொலித் திரிபு

பாரத மாவிந்தத்தில் அகர, ஆகார, இகர, உகர, ஊகார, எகர, ஐகார, ஒகாரத் திரிபுகள் இடம்பெற்றுள்ளன.

1.1 அகர ஒலித்திரிபு

அ > இ (மொழி இடை)
எ-டு. அதன் - அதின் (பா.மா.135); வந்ததன் - வந்ததின் (பா.மா.82)
அ > உ (மொழி இடை)
சேவகத்தன்மை - சேவுகத்தன்மை (பா.மா.505)
அ > எ (மொழிமுதல்)
எ-டு. கருடன் – கெருடன் (கெருடனை- 7 ஆம் சருக்கத் தலைப்பு)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

1.2 அகரம் உதட்டுச் சாயல் பெறுதல் (labialisation)

மன்னர் – மன்னோர், தந்தையர் - தந்தையோர் என்னும் சொற்களில் 'அ' கரம் உதட்டுச்சாயல் பெற்றுள்ளதாகத் தெ. பொ.மீனாட்சி சுந்தரம் தம் நூலில்[1] குறிப்பிட்டுள்ளார். அதுபோன்ற சொல் பாரத மாவிந்தத்தில் இடம்பெற்றுள் ளது.

எ-டு. முனிவர் –முனிவோர் (பா.மா.188)

1.3 ஆகார ஒலித்திரிபு

ஆ > அ (முதல் குறுகுதல்)

எ-டு. பாரம்-பரம் (பா.மா.14)
பாவம் - பவம் (பா.மா.692)

1.4 இகர ஒலித்திரிபு . இ > அ (மொழி இடை)

எ-டு. காண்கிலார் - காண்கலார் (பா.மா.284

இ > ஈ (முதல் நீளல்)

இது - ஈது (பா.மா.750)

எ-டு. நிழல் - நீழல் (பா.மா.524)

1.5 உகர ஒலித்திரிபு உ > அ (மொழி இடை)

எ-டு. பேசுகிலால் - பேசகிலால் (பா.மா.20)

உ > இ (மொழி முதல்)

எ.டு. புறப்படு - பிறப்படு (பா.மா.317)

1.6 குற்றியலுகரம் குற்றியலிகரமாதல்

எ-டு. முப்பது – முப்பதி (பா.மா.566), மூன்று – மூன்றி (பா.மா.631)

உ > ஒ (மொழிமுதல்)

எ-டு. முகர்ந்து -மோந்து (பா.மா.217)

இங்கு ர், ந், த் என்ற மூன்று மெய்யொலி வருவதால் 'ககர' 'ரகர' மெய் இரண்டும் கெட்டு முதல் உயிர் நீண்டது.

1.7 ஊகார ஒலித்திரிபு ஊ > இ (மொழி இடை)

எ-டு. முகூர்த்தம் - முகிர்த்தம் (பா.மா.180)

---

[1] மாகபுராண அம்மானை , ப.9

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

1.8 எகர ஒலித்திரிபு

எ > ஏ (மொழிமுதல்)

எ-டு. பெயர்த்து - பேர்த்து (பா.மா.705)

இங்கு ர், த், த் என மூன்று மெய்யொலிகள் வருவதால் 'ய' கரம் கெட்டு முதல் உயிர் நீண்டது.

1.9 ஐகார ஒலித்திரிபு

ஐ > அ (மொழிமுதல்)

எ-டு. ஐந்து - அஞ்சு (பா.மா.150); ஐம்பத்தோரெழுத்து- அன்பத்தோரெழுத்து.

1.9 ஒகர ஒலித்திரிபு, ஒ > உ (மொழிமுதல்)

எ-டு. தொடர்ந்தார் - துடர்ந்தார் (பா.மா.134)

2. மெய்யொலித் திரிபு

மெய்யொலியில் முறையே ககரம், தகரம், நகரம், பகரம், மகரம், லகரம், றகரம், ஆகியவை திரிந்து வந்துள்ளமை கீழ் வருமாறு:

க கர ஒலித் திரிபு க > ப (க்க் > ப்ப்) (மொழி இடை, கடை)

எ-டு. சபிக்க - சவிப்ப (பா.மா. 645) இதில் 'ககர'ப் 'பகர' மயக்கம் காணப்படுகிறது.

1. தகர ஒலித்திரிபு த > ச (மொழியிடை) அண்ண ஒலியாதல்

எ-டு. விரித்துள - விரிச்சுள (பா.மா.585)

த > ந மொழி இடை

எ-டு. புத்தி – புந்தி (பா.மா.66) த > ந (இதை இடைப்போலி என்பர்)

த>ற மொழியிடை

எ-டு. இரத்தின - இரற்றின (682) ; சிங்கத்தின் – சிங்கற்றின். இதை மிகைத்திரிபு (hyper correction) எனலாம்.

2. நகர ஒலித்திரிபு ந > ஞ (மொழிஇடை)

எ-டு. ஐந்து - அஞ்சு (பா.மா.150)

3. பகர ஒலித்திரிபு - ப > வ (மொழி இறுதி)

எ-டு. சபை - சவை (பா.மா.154)

4. மகர ஒலித்திரிபு – ம > ன (மொழிஇடை)

Digitization by Hindu-Heritage-Foundation of America- HHFA(USA)

எ-டு. ஐம்பத்தோரெழுத்து –அன்பத்தோரெழுத்து (பா.மா.745)

மகர ஒலித் திரிபு ம > ப (மொழிஇடை)

5. வேற்றுமைத் தொடரில், வேற்றுமைத் தொகையில் திரிபு.

எ-டு. செம்பு - செப்பினை (பா.மா.705) செப்பினைக் காய்ச்சியே வார்க்க நிற்பார் -

எ-டு. இரும்பு - இருப்பு (பா.மா.100) இருப்புலக்கை விழப் பயந்தனர்

6. லகர ஒலித்திரிபு ல > ன (மொழிஇடை)

எ-டு. அதிலிருந்து - அதினிருந்து (261)

ல கர ஒலித் திரிபு ல >ர (மொழியிறுதி)

எ-டு. குடல் - குடர் (பா.மா.411) ;

சாம்பல் - சாம்பர் (பா.மா.397) - (இது கடைப் போலி)

7. றகர ஒலித்திரிபு ற > த (ற்ற > த்த் மொழி இடை, கடை)

எ-டு. உற்று - உத்து (பா.மா.708)

இங்கு 'ற' கர 'த' கர மயக்கம் காணப்படுகிறது. இது பல்லின வொலியாதல் ஆகும்.

8. 9 கெடுதல் -- மெய்யொலி கெடுதல்

1. ணகர மெய் கெடல்

எ-டு. பண்ணு - பணு (பா.மா.14)

கண்ணால் - கணால் (பா.மா.539)

2. யகர மெய் கெடல்

எ-டு. காய்ச்சி (காய்ச்சுதல்)- காச்சி (705) - யகர மெய் கெடல்
யகரம் வீழ்தல்
எ-டு. யார் ஒருவர் - ஆர் ஒருவர் (பா.மா.161) மொழி முதல்
யானை - ஆனை (பா.மா.190)
'யார்' என்பது ஆர் எனவும் 'யானை' என்பது ஆனை எனவும் மொழி முதல் யகரத்தை இழக்கின்றன.

3. ரகர மெய் கெடல்

எ-டு. பட்டவர்த்தனர் - பட்டவத்தனர் (பா.மா.180)
எ-டு. பார்த்தனர் – பாத்தனர் (பா.மா.544)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

4. ழ கரம் ட கர மாதல் - ழ் > ள் > ட் –

மகிழ்ச்சி – மகிட்சி (பா.மா.81)

இங்கு ' ழ் ச் ச் ' என்னும் மூன்று மெய்களில் 'ச'கர மெய் கெட்டு 'ழ'கரம் டகரமாகியது. இது வீரசோழிய சந்திப்படலம் (வீர.18) விதிக்கேற்ப அமைந்துள்ளது. இங்ஙனம் அமைந்த பல சொற்கள் பாரத மாவிந்தத்தில் காணப்படுகின்றன. அவை வருமாறு:

எ.டு. துவரிதட் சிறுநகை (பா.மா.7:1), மகிட்சி (பா.மா:81:3), புகட்கொரு (பா.மா. 41:4) புகட் பாஞ்சாலி (பா.மா. 124:2), கீட்பணிந்தார் (பா.மா.141:4) இங்கிவன ருட்படியை (பா.மா.181:1) புகட்டருமன் (பா.மா.322:2) மகிட்சியால் (பாமா.367:3) கலைத்தமிட்கு (பா.மா.405:2) மகிட்சியன் (441:2)" என்னும் சொல் வடிவங்கள், வீரசோழிய விதிப்படி அமைந்த வழக்குச் சொற்கள் ஆகும்.

8.10 மெய்ம்மயக்கம்

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மெய்யொலிகள் இணைந்து வருதலை மெய்ம்மயக்கம் என்பர். இது உடனிலை மெய்ம்மயக்கம், வேற்றுநிலை மெய்ம்மயக்கம் என இருவகைப்படும்.

1. உடனிலை மெய்ம்மயக்கம்

ஒத்த இரு ஒலிகள் இணைந்து வருதல் உடனிலை மெய்ம்மயக்கம். வழக்கில் அருகிக் காணப்படும் மெய்ம்மயக்கமே இங்குத் தரப் பெற்றுள்ளது.

எ-டு. ந்ந – வெந்நிட்டான் (பா.மா.618)

2. வேற்றுநிலை மெய்ம்மயக்கம்

வேறுபட்ட இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட ஒலிகள் இணைந்து வருதல் வேற்றுநிலை மெய்ம்மயக்கம். பாரத மாவிந்தத்தில் வேறுபட்ட இரு ஒலிகள் இணைந்தும் மூன்று ஒலிகள் இணைந்தும் வருகின்றன.

1. இரு ஒலிகளாலான மெய்ம்மயக்கம்.

எ-டு. ட் ச் – மகிட்சி (பா.மா.369) ;

ட் ப் – கீட்பணிந்தார் (பா.மா.141)

ர் வ் – எதிர்வர் (பா.மா.121) ;

ழ் த் – போழ்தினில் (பா.மா.319)

ன் ப் –அன்பத்தோரெழுத்து (பா.மா.745)

2. மூன்று ஒலிகளாலான மெய்ம்மயக்கம்

எ.டு. ர் ப் ப் –கார்ப்புறம் (பா.மா.364) ;

ர் ந் த் - தூர்ந்த (பா.மா.519);

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

ர் ச் ச் –துடர்ச்சியாய் (பா.மா.135);

ர் த் த் – பேர்த்து (பா.மா.705)

3. புணர்மொழித் திரிபு

நிலைமொழியும் வருமொழியும் சேர்ந்து இயங்கும்போது ஏற்படும் மாறுதல்களைப் புணர்மொழித் திரிபு என்பர்.

எ-டு இதழ் + சிறுநகை - இதட்சிறுநகை (பா.மா.7)
புகழ் + தருமன் - புகட்டருமன் (பா.மா.322)
முத்தமிழ் + பாவலர் - முத்தமிட்பாவலர் (பா.மா.17)

இங்கு 'ழ' கர ஒற்றில் முடியும் நிலைமொழியின் பின் வல்லினம் வந்து புணர ' ழ' கரம் 'ட' கர மாயிற்று. இவ்வாறு எழுதும் முறை தென்பாண்டிநாட்டிற்கு மிகப்பொருந்தும் என்று தெ.பொ.மீனாட்சி சுந்தரம்[1] கூறுவார்.

எ-டு. கான் + யாறு - கானியாறு (பா.மா.263)

இது, 'ய'கரம் ஒழிந்த மெய்களின் முன்னால் வருமொழி முதலில் 'யகரம்' வந்தால் இடையில் இகரம் சேரும் என்ற நன்னூல் (நன்.206) விதிக்கேற்ப அமைந்துள்ளது.

எ-டு. ஆழ் + என - ஆழ்வென (பா.மா.146)

இது மெய்யீற்றின் முன் உயிர் வர உடம்படு மெய்யல்லாத 'வகரம்' பெறுதலும் உண்டு என நன்னூலார் (நன்.163) இலக்கணம் வகுத்ததற்கேற்பக் காணப்படுகிறது. இதை மெய்யீற்று உடம்படுமெய் என்பார் நச்சினார்க்கினியர்(தொல்.எழு.140).

8.11 வடமொழி ஒலியன்கள்

நூலாசிரியர் சோமன் வடமொழிச் சொற்களைப் பெரும்பாலும் தற்பவமாகத் தந்துள்ளார். தமிழ் ஒலியமைப்பையொட்டித் வருகின்றவை தற்சமமாகவும் இடம்பெற்றுள்ளன.

1. தற்பவச் சொற்கள்

எ-டு. கத்தூரி (பா.மா.125)
சிறீகரி (பா.மா.736)
தாபித்து (பா.மா. 265)
நிட்டை (பா.மா.104)
புட்கரணி (பா.மா. 265)
வசிட்டன் (பா.மா. 429).

2. தற்சமச் சொற்கள்

எ-டு. கமலம் (பா.மா.54)
காரணம் (பா.மா.118)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நிறைவுரை: மேலே கூறியவற்றிலிருந்து பாரத மாவிந்தத்தின் மொழியமைப்பில் தென்பாண்டி நாட்டு வழக்கு, மலையாள வழக்கு, இலங்கை வழக்கு முதலியன இடம்பெற்றிருப்பது புலனாகின்றது. ஆசிரியர் சோமன் பழைய நூல்களைக் கற்றுணர்ந்து பழைய சொல்லாட்சிகளையும் கையாண்டுள்ளார். இந்நூல் இலக்கிய மொழிநடை, வழக்குச்சொற்கள், காலத்துக்கேற்ற மொழிநடை முதலியவற்றைக் கொண்டு விளங்குகிறது. இது காவியகாலத்திற்குப் பிற்பட்டுத் தோன்றிய 14 ஆம் நூற்றாண்டிற்கும் 17 ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்தின் மொழி இயல்பைப் பெற்றுள்ளது எனக் கொள்ளலாம்.

****

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

9. வியாச பாரதம், தமிழ் பாரத நூல்கள், மாவிந்த நூல்கள் - ஒப்பீடு

9. பாரத நூல்கள்

வடமொழி வியாச பாரதம் ஆதி பருவம் முதல் சொர்க்கா ரோகண பருவம் வரை பதினெட்டுப் பருவங்களைக்[1] கொண்டது. இதனைத் தமிழில் பலர் ஆக்கி அளித்துள்ளனர். அவற்றுள் கீழ்க்கண்டவை இன்று கிடைப்பவை:

9.1 வில்லிபுத்தூரர் பாரதம்

பதினான்காம் நூற்றாண்டில் வாழ்ந்த வில்லிபுத்தூரர், பாரதத்திலுள்ள பதினெட்டுப் பருவங்களில், முதல் பத்துப் பருவங்களைப் பாடியிருக்கிறார். அந்தப் பத்துப் பருவங்களுக்கும் வியாச பாரதத்தின் பருவங்களின் பெயர்களையே வழங்கியிருக்கிறார். பத்தாவது பருவமான சௌப்திக பருவத்தின் இறுதிச் சருக்கமாக அமைவது போர்ச்சருக்கமாகும். அச்சருக்கம் தருமன் கௌரவரை வென்று முடிசூட்டியதை விளக்குகிறது. சௌப்திகப் பருவத்தில்[2] சிகாமணிச் சருக்கம் முதல் இறுதிப் பருவமான சொர்க்காரோகணப் பருவம்வரை எஞ்சிய எட்டையும் வில்லிபுத்தூரர் பாடவில்லை. தமிழர்கள் ஒரு நூலை இன்பியலாக முடிப்பதை மரபாகக் கொண்டுள்ளனர். எனவே தான் வில்லிபுத்தூரர் துன்பியலாக அமையும் பிற்பகுதியைப் பாடவில்லை போலும். வில்லிபுத்தூரர் பாடாது விட்ட சௌப்திகப்பருவத்தின் பிற்பகுதியில் அமைந்த சிகாமணிச் சருக்கம் முதல் சொர்க்காரோகணப் பருவம் வரை அரங்கநாதக் கவிராயர் பாடிப் பாரதக்கதையை முற்றுவித்துள்ளார். (பார்க்க: 9.1.3)

இவ்வேறுபாட்டைக் கம்பர், ஒட்டக்கூத்தர் ஆகியோர் இயற்றிய இராமாயணங்களில் காணலாம். கம்பர் தாம் இயற்றிய இராமாயணத்தில் பாலகாண்டம் முதல் யுத்தகாண்டத்தில் இராமன் முடிசூடுவதுவரை பாடியிருக்கிறார். இராமாயணத்தில் கம்பர் பாடாமல் விடுத்த எஞ்சியுள்ள பகுதியை ஒட்டக்கூத்தர் உத்தரகாண்டத்தில் பாடி நிறைவு செய்திருக்கிறார்.

9. 2 தமிழக பாரத நூல்கள்

1. நல்லாப்பிள்ளை பாரதம்

நல்லாப்பிள்ளை (கி.பி. 1732) பதினெட்டாம் நூற்றாண்டின் முற்பகுதில் வாழ்ந்தவர். இந்நூலின் முதல் பதிப்பு கி.பி. 1888 இல் வெளிவந்தது. இவர் வியாசரைப்போல் பாரதம் முழுவதையும் தமிழில் பாடியிருக்கிறார்; வியாசபாரதத்தின் பருவத் தலைப்பையே கொடுத்துள்ளார். இந்நூல் 18 பருவங்கள், 131 சருக்கங்கள், 13949 பாடல்கள் கொண்டது. இது ஆதி பருவம் முதல் உத்தியோகப் பருவம் வரை ஒரு பாகமாகவும், பீஷ்ம பருவம் முதல் சொர்க்கா ரோகண பருவம் வரை ஒரு பாகமாகவும் கொண்டு இரு பாகங்களாக

---

1. ஆதிபருவம், 2. சபா பருவம்,3. ஆரணிய பருவம்,4.விராட பருவம்,5.உத்தியோக பருவம்,6.வீடும பருவம்,7. துரோணபருவம், 8.கன்ன பருவம், 9.சல்லிய பருவம்,10. சௌப்திகபருவம், 11.ஸ்திரி பருவம்,12.சாந்தி பருவம், 13. அனுசாசனிகபருவம், 14. அசுவமேதபருவம், 15.ஆசிரம வாசிகபருவம், 16.மௌசலப் பருவம், 17.மகாப்பிரஸ்தானிகப்பருவம், 18. சொர்க்காரோகணப்பருவம்.

2. 11. ஸ்திரிபருவம்,12.சாந்திபருவம், 13. அனுசாசனிகபருவம், 14. அசுவமேத பருவம்,15.ஆசிரமவாசிக பருவம், 16.மௌசல பருவம்,17. மகாப்பிரஸ்தானிகபருவம், 18. சொர்க்காரோகணபருவம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America-HHFA(USA)

பதிப்பிக்கப்பெற்றுள்ளது. இந்நூல் வியாசர், வில்லிபுத்தூரார் ஆகியோரின் நூலமைப்பை ஒத்து அமைந்துள்ளது. இதற்கு உரை இல்லை.

2. அரங்கநாதக் கவிராயர் பாரதம்

அரங்கநாதக் கவிராயர்(கி.பி.1753.) ஒட்டக் கூத்தர் உத்தரகாண்டம் பாடியதுபோல், வில்லிபுத்தூரர் பாடாது விட்ட சௌப்திகப் பருவத்தின் பிற்பகுதியில் அமைந்த, சிகாமணிச் சருக்கம் முதல் சொர்க்கா ரோகணப் பருவம் வரை பாடிப் பாரதக்கதையை முற்று வித்துள்ளார். நூலின் காலம் பதினெட்டாம் நூற்றாண்டு. இந்நூலில் 45 சருக்கங்களும் 2477 பாடல்களும் உள்ளன. இதற்கு உரை இல்லை.

9. 3 மாவிந்த நூல்கள்:

வியாச பாரதத்தின் இறுதி மூன்று பருவங்களான மௌசல பருவம், மகாப்பிரஸ்தானிக பருவம், சொர்க்காரோகண பருவம் ஆகியவற்றின் கதையை அடிப்படையாகக் கொண்டு, ‘மாவிந்தம்’ என்னும் பெயரில் தனி நூலாகத் தமிழில் பல நூல்கள் தோன்றியுள்ளன. அவற்றுள் ஒன்று தஞ்சை சரசுவதிமகாலின் வெளியீடாகிய, பெருந்தேவனார் பாரதம் (மாவிந்தம்); மற்றொன்று இரத்தின நாயகர் அன்ட் சன்ஸ் மலிவுப் பதிப்பாக வெளியிட்டுள்ள பெரிய எழுத்து வைகுந்த அம்மானை.

இவை போக, இன்னும் அச்சில் வாராது ஏட்டிலும் பல நூல்கள் காணப்படுகின்றன. இவை இலக்கியம், நாடகம், நாட்டுப் புறப்பாடல் போன்ற வகைகளில் அமைந்தவை (பார்க்க: முன்னுரை 8.2)

வைகுந்த அம்மானை (வைகுண்ட அம்மானை) என்னும் நூல் வில்லுப்பாட்டு போன்ற நாட்டுக்கதை மரபில் தோன்றியதாக இருக்கலாம். மேலும், வியாச பாரதத்தின் இறுதி மூன்று பருவங்களின் கதை நல்லாப்பிள்ளை பாரதம், அரங்கநாதக் கவிராயர் பாரதம் ஆகிய நூல்களில் காணப்படுகிறது.

1. மாவிந்த நூல்களின் காலம்

இம்மாவிந்த நூல்களுள் காலத்தால் முந்தியது இங்குப் பதிப்பிக்கப்பெறும் பாரதமாவிந்தமாகும். இதன் காலம் பதினாறாம் நூற்றாண்டின் பிற்பகுதி என்று கருத ஏது உண்டு. அதன் பின்னர் பெருந்தேவனார் பாரதமும் (மாவிந்தம்), அதையடுத்து ஒப்பீட்டாய்வுக்காகப் படி எடுக்கப்பெற்ற தஞ்சை சரசுவதிமகால் மாவிந்தமும் தோன்றியிருக்க வேண்டும். வைகுந்த அம்மானை பதினெட்டாம் நூற்றாண்டில் எழுந்திருக்கக் கூடும்.

2. மாவிந்த நூல்களில் நாட்டுப்புறக் கதைகள்

வேற்று மொழியிலிருந்து இலக்கியத்தைத் தம் தாய்மொழிக்கு மொழி பெயர்ப்பவர் தாய்மொழி மரபிற்கு ஏற்பப் பல செய்திகளைத் தம் நூலில் சேர்த்தல் இயல்பு. வியாச பாரதத்தில் இல்லாத பல செய்திகள் பாரதக் கதைகளாகத் தென்பாண்டி நாட்டில் வாய்மொழி வடிவில் வழங்கியிருக்க வேண்டும். அந்தந்தப் பகுதிகளில் வழங்கி வந்த நாட்டுப்புறக் கதைகளை எல்லாம் தொகுத்தும், பழைய இலக்கியக் கதைகளை இணைத்து மெருகூட்டியும்

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

ஆசிரியர் சோமன் 'பாரத மாவிந்தம்' என்னும் பெயரில் நூலாக இயற்றியிருப்பார் என்று கருதத் தோன்றுகிறது. பெருந்தேவனார் பாரதம் (மாவிந்தம்), கதைகளை விரித்துக் கூறாது கதைகளின் பெயர்களை மட்டும் குறிப்பிடுகின்றது. இவற்றுள் தஞ்சை சரசுவதிமகால் மாவிந்தமே மிகுதியான கதைகளைக் கொண்டுள்ளது.

மாவிந்த நூல்களில் உள்ள பாடல்கள் இலக்கிய வடிவில் இருந்தமையால் கற்றவர்களே கற்க இயலும். எனவே கல்லாதவரும் கற்கவேண்டும் என்றெண்ணிப், பாமரரும் அக்கதையைக் கேட்டுணரும் வண்ணம் எளிய நடையில் கதைப்பாடலாக 'வைகுந்த அம்மானை' என்னும் பெயரில் புலவர்கள் இயற்றியிருக்கக் கூடும் என்பது புலனாகிறது. இவ்வாறு தமிழ் நாட்டின் தென் மாவட்டங்களில் வில்லுப்பாட்டு வடிவில் இராமாயணம், பாரதம், திருவிளையாடல் புராணம் முதலிய கதைப்பாடல்கள் கிடைக்கின்றன. பாரத மாவிந்தத்தில் காணப்படும் கதைக்கரு, சொற்றொடர் முதலியன சிறிதும் மாற்றமின்றி பிற மூன்று மாவிந்த நூல்களிலும் காணப்படுகின்றன. மாவிந்த நூல்களுள் காலத்தால் முந்தியது இங்குப் பதிப்பிக்கப்பெறும் பாரத மாவிந்தமாகும்.

9.4 நல்லாப்பிள்ளை, அரங்கநாதக் கவிராயர் - நாட்டுப்புற கதைகளைச் சேர்க்காத நிலை

நல்லாப்பிள்ளையும், அரங்கநாதக் கவிராயரும், பாரத மாவிந்த நூலாசிரியர் சோமனுக்குப் பிற்பட்டவர்களாயினும் அவர்கள் தென்பாண்டி நாட்டைச் சார்ந்தவர்கள் அல்லர். ஆகையால் அவர்களுக்கு இக்கதைகள் தெரிய வாய்ப்பில்லை. எனவே, அவர்கள் வியாச பாரதத்தை ஒட்டியே தங்கள் நூலை அமைத்துள்ளனர் போலும்.

வியாச பாரதம், நல்லாப்பிள்ளை பாரதம், அரங்கநாதக் கவிராயர் பாரதம், பாரத மாவிந்தம், பெருந்தேவனார் பாரதம் (மாவிந்தம்), தஞ்சை சரசுவதிமகால் மாவிந்தம், வைகுந்த அம்மானை ஆகியவற்றில் அடிப்படைக் கதை ஒன்றுபோல் அமைந்திருப்பினும், கதை நிகழ்ச்சிகளில் ஒற்றுமையும் வேற்றுமையும் காணப்படுகின்றன. வியாச பாரதத்தின் இறுதி மூன்று பருவங்களில் இல்லாத புதிய உட்கதைகள் மாவிந்த நூல்களில் இடம்பெற்றுள்ளன. இவை கதையோடு தொடர்புடையவாக விளங்குகின்றன.

◆ ஒப்பீட்டாய்வு:

நல்லாப்பிள்ளை பாரதமும், அரங்கநாதக் கவிராயர் பாரதமும் பெரும்பாலும் எல்லா இடங்களிலும் வியாச பாரதத்தோடு ஒத்து வருகின்றன. மாவிந்த நூல்கள் அடிப்படைக் கதை அமைப்பில் வியாச பாரதத்தை ஒட்டியும், புதிதாகச் சேர்த்த உட்கதைகளைக் கூறும் நிலையில் வியாச பாரதத்திலிருந்து வேறுபட்டும் விளங்குகின்றன.

எனவே இவ்வொப்பீட்டுக் கட்டுரை இரு நிலைகளில் அமைகிறது.

◆1. முதல்நிலை

வியாச பாரதம், தமிழ்பாரத நூல்கள்,[1] மாவிந்த நூல்கள்[1] இவற்றில் காணப்படும் செய்திகளிடையே உள்ள ஒற்றுமை வேற்றுமைகளைக் காண்பது.

[1] நல்லாப்பிள்ளை பாரதம்(1888 .பதி), அரங்கநாதக் கவிராயர் பாரதம்(பதி. 1902).

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

◆ 2. இரண்டாம் நிலை

மாவிந்த நூல்களில் (வியாசபாரதத்தில் இல்லாத) புதிதாகச் சேர்க்கப் பெற்ற செய்திகளிடையே[2] காணப்படும் ஒற்றுமை வேற்றுமைகளைக் காண்பதாகும்.

புதிதாகச் சேர்க்கப்பெற்றவை இக்கால நாட்டுப்புறவியலார் கூறும் கதைக்கூறுகளுக்குச் சமமானவை எனலாம். வியாச பாரதம், தமிழ் பாரதநூல்கள் இவற்றிற்கிடையே அமைந்த ஒற்றுமை வேற்றுமைகள் கீழ்வரும் அட்டவணையில் கொடுக்கப்பெற்றுள்ளன. இவ்வொப்பீட்டாய்வுக்கு வியாசபாரதத்தின் கதையை அறிய ஸ்ரீமகாபாரத வசனம் – பாகம் 4,[✦] மகாபாரதம் – பகுதி4[⊙] முதலிய நூல்கள் ஆதாரங்களாகக் கொள்ளப்பெற்றன.

மேலே (முதல் நிலை) கூறப்பெற்ற நூல்களில் காணப்பெறும் செய்திகளுக்கிடையே உள்ள ஒப்பீட்டை அட்டவணை - 2 விளக்குகிறது.

அட்டவணை – 2

9.5 வியாச பாரதம், நல்லாப்பிள்ளை பாரதம், அரங்கநாதக் கவிராயர் பாரதம், மாவிந்த நூல்கள் – ஒப்பீடு

நிகழ்ச்சிகள்	வியாச பாரதம்	நல்லாப் பாரதம்	அரங். பாரதம்	பாரத மாவிந்தம்	பெருந் பார. (மாவிந்தம்)	தஞ்.சரசு. மாவிந்தம்	வைகு. அம்மானை
1	2	3	4	5	6	7	8
1)பாரதக் கதையைச் சனமேசயனுக்கு கூறியவர்	வைசம்பாயனர் (ப . 479)	சூத மாமுனி பாயி . 4	சூதமா முனி சொர்.34	வியாசர் 65,66	வியாசர் 1	வியாசர் 6	வியாசர் பக். 79,80
2)கண்ணனைக் காணத் துவாரகைக்கு வந்த முனிவர்	கண்வர், நாரதர், விசுவாமித்திரர், ப.476	கண்வர், நாரதர், விசுவாமித்திரர், மௌ . 5	கண்வர் , நாரதர், விசுவாமித்திரர், மௌ.6	துர்வாசர் 98	முனிவர் பெயர் இல்லை 23	துர்வாசர் 79	துர்வாசர், ப.26
3)கர்ப்பிணி வேடமிட்டவன் கண்ணன் மகன் சாம்பன்	உண்டுப. 476	உண்டு, மௌ .6	உண்டு, மௌ . 6	உண்டு, (பெயர் இல்லை). 99	உண்டு, (பெயர் இல்லை). 23 , 24	இல்லை	உண்டு (பெயர் இல்லை) ப. 26
4)முனிவரின் சாபங்கள்	உண்டு,ப. 476	உண்டு, மௌ . 9-	உண்டு, மௌ . 8	உண்டு (முதல் சாபம்	உண்டு (முதல் சாபம்	இல்லை	உண்டு (முதல் சாபம்

[1] பெருந்தேவனார் பாரதம் (மாவிந்தம்), தஞ்சை சரசுவதி மகால் மாவிந்தம், பெரிய எழுத்து வைகுந்த அம்மானை.
[2] செய்தி என்பது உட்கதை, பாத்திரங்களின் பெயர், இடத்தின் பெயர், நிகழ்ச்சி முதலியனவாகும்.
✦ த. சண்முகக் கவிராயர்.
⊙ அ.லெ.நடராஜன்

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

1.இரும்பு உலக்கை பிறந்து அவ்வுலக் -கையால் யாதவ குலம் அழியும் 2.பலராமன் கடலில் கலப்பான் 3. வேடனின் அம்பால் கண்ணன் பரமபதம் அடைவான்		12		மட்டும்) 99	மட்டும்) 25		மட்டும்)ப. 27
5)உலக்கையைப் பொடியாக மாற்றிக் கடலில் இடக் கூறியவர்	வசுதேவர் ப.477	வசு தேவர், மௌ.15, 16	உக்கிர சேனன், மௌ. 10	கண்ணன் 100	கண்ணன் 27	இல்லை	கண்ணன், ப.27
6)துவாரகையில் தீய நிமித்தம் தோன்றுதல்	உண்டு,ப. 477	உண்டு, மௌ.18-26	உண்டு, மௌ. 11-15	இல்லை	இல்லை	இல்லை	இல்லை
7)சாத்தகியும் கிருதவர் மனும் வழக்கிட்டது	உண்,ப. 479	உண்டு, மௌ. 33-37	உண்டு, மௌ. 19-22	இல்லை	இல்லை	இல்லை	இல்லை
8)இரும்புப் பொடி கோரையாக முளைத்தது, யாதவர்கள் அக்கோரையால் மாண்டது	உண்டு,ப க்.479, 480	உண்டு, மௌ. 39-40	உண்டு மௌ. 22, 23	உண்டு 104	உண்டு, 29-31	உண்டு, 79 , 80	உண்டு,ப. 27
9)கண்ணன் அர்ச்சுனனை அழைத்து வருமாறு தாரகனை அனுப்பியது, யாதவ மகளிரை அழைத்து வந்த பப்ருவாக னன் கோரையால் மாண்டது	உண்டு 480	உண்டு, மௌ . 42-44	உண்டு, மௌ. 25, 26	இல்லை	இல்லை	இல்லை	இல்லை
10)பலராமன் இறுதியில் நாகர்களிடம் சென்றது	உண்டு ப. 479	உண்டு மௌ 52-54	உண்டு மௌ . 30	பாம் பணையா -னான் 716	இல்லை	இல்லை	இல்லை
11) கண் ணன் மரத்தின் கீழ்	உண்டு ப. 481	உண்டு மௌ. 56	உண்டு மௌ. 31	உண்டு 105	இல்லை	உண்டு 78	உண்டு 29

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

யோக நிலையிலிருந்-தது							
12)கண்ணனின் காலை மான் என வேடன் கருதியது	உண்டு ப. 481	புறா, மௌ. 58	விலங்கு, மௌ. 32	உண்டு 106	உண்டு 34	புறா 82	உண்டு ப. 30
13)கண்ணன் வேடனுக்கு முக்தி அளித்தது	இல்லை	இல்லை	உண்டு மௌ.32	இல்லை	இல்லை	இல்லை	இல்லை
14)கண்ணன் துவாரகையில் உள்ளவர்களைச் சேர்க்கச் சொன்ன இடம்	இந்திரப் பிரஸ்தம், ப : 485	இந்திரப் பிரஸ்தம் மௌ. 94	இந்திரப் பிரஸ்தம் மௌ. 46	அத்தின புரம் 118	அத்தின புரம் 40	அத்தின புரம் 93	இல்லை
15)கண்ணனுக்கு இறுதிக் கடன் செய்தவர்	வச்சிர சேனன் (பேரன்) ப. 488	வச்சிரன், மௌ. 61	இல்லை	அர்ச்சு-னன் 129	அர்ச்சுனன் 44, 45	வீமன், அர்ச்சு-னன் 163	அர்ச்சுனன் ப : 37
16)துவாரகை-யிலுள்ள மகளிர், நிதி, சேனை ஆகியவற்றைக் கொண்டு சென்றபோது வேடர் கொள்ளை-யிட்டது	உண்டு, ப. 489, 490	உண்டு, மௌ. 70 – 76	உண்டு, மௌ. 53 - 55	உண்டு, 132 - 135	உண்டு, 47, 48	உண்டு, 107 - 115	உண்டு, பக். 37 - 40
17) துவாரகையை அழித்தது	கடல் ப : 489	கடல் மௌ. 155	கடல் மௌ. 53	மோழை (கீழாறு) 33	மோழை 46	கடல் 138	இல்லை
18)கண்ணன் இறந்த பின்பு வீமன் அர்ச்சுனன் ஆகியோரின் வலிமை குறைந்தது	உண்டு(அர்ச்சு-னன் மட்டும்) ப. 492	உண்டு (அர்ச்சு - னன் மட்டும்) மௌ. 77	உண்டு (அர்ச்சு -னன் மட்டும்) மௌ. 56	உண்டு, 136 - 140	உண்டு, 49, 50	உண்டு, 110 - 126	உண்டு, ப. 35
19)துவாரகை அழிந்த பின் எஞ்சியிருந்த நகரை வச்சிர தேவனுக்கும், கிருத வர்மனுக்கும், சாத்தகி மகனுக்கும்	உண்டு ப. 490	உண்டு மௌ. 148, 149	உண்டு மௌ. 58	இல்லை	இல்லை	இல்லை	இல்லை

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

அளித்தது.							
20)வசுதேவர் மனைவியர், ருக்மணி ஆகியோர் உடன்கட்டை ஏறியது; சத்தியபாமா தவமிருந்து உயிர் நீத்தது; பலராமனின் மனைவியர் தீயில் விழுந்தது	உண்டு ப. 491, 492	உண்டு மௌ. 152	உண்டு மௌ. 49	இல்லை	இல்லை	இல்லை	இல்லை
21)யாதவகுலம் அழிந்ததைத் தருமனிடம் கூறியவர்	அர்ச்சு -னன் ப. 493	அர்ச்சு -னன் மௌ. 164	அர்ச்சு -னன் மௌ. 65	வீமன், அர்ச்சு -னன் 152	வீமன், அர்ச்சுனன் 52, 53	அர்ச்சு -னன் 127	வீமன், அர்ச்சுனன் ப. 39
22)இரு அந்தணர்கள் வழக்கிட்டது	உண்டு பக். 501	உண்டு மகப். 24 - 28	வழக்கும கப்.11, 12	உண்டு 157 – 173	உண்டு 55 - 62	உண்டு 144- 150	உண்டு பக். 45 - 48
23)தருமன் பரீட்சித்துக்கு முடிசூட்டியது	உண்டு ப. 499, 450	உண்டு மகப். 19 - 23	உண்டு மகப். 6 - 8	உண்டு, 188, 191	உண்டு, 69	உண்டு, 154 - 156	உண்டு, ப. 85
24) பாண்டவர்கள் காடு சென்றபோது ஒரு நாய் உடன் சென்றது	உண்டு ப. 502	உண்டு மகப். 29	உண்டு மகப்.16	தருமன் தம்பியரை இழந்த பின் நாய் வந்தது 664 – 669	தருமன் தம்பியரை இழந்தபின் நாய் வந்தது 283 – 293	தருமன் தம்பியரை இழந்த பின் நாய் வந்தது 1262 - 1270	தருமன் தம்பியரை இழந்தபின் நாய் வந்தது பக்.174 – 176
25) காண்டீபத்தைக் கடலில் இடுமாறு அர்ச்சுனனிடம் கூறியவர்	அக்கினி தேவன், ப.504	அக்கினி தேவன், மகப். 43	அக்கினி தேவன், மகப். 22	தருமன் 250	இல்லை	தருமன் கங்கை -யில் 215, 216	தருமன் பக்.92
26)துரோபதி, தருமனின் தம்பியர் ஆகியோர் இறந்தபோது இறுதிக் கடன் கழித்தது	இல்லை	இல்லை	இல்லை	உண்டு 312, 593, 621	உண்டு 190, 232	உண்டு 352	உண்டு பக்.105, 156
27)இறப்பின் காரணம் 1. துரோபதி அர்ச்சுனனிடம்	உண்டு ப : 505	உண்டு மகப். 62	உண்டு மகப்.29	உண்டு 314	இல்லை	ஐவர் கணவ ராயினும் மீண்டும் ஆசை	ஐவரின் மனைவி -யானது பக்.105,

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

மிகுந்த அன்பு கொண்டது						கொண் -டது 350	106
2. சகா தேவன் – அறிவு உடையவன், கலையில் வல்லவன் என்ற எண்ணம்	உண்டு ப.506	உண்டு மகப்.	உண்டு மகப். 65	உறவினர் அழியப் போரை நினைத் -தது 542	களப்பலி -யிட்டது, 190	இல்லை	அரவானை பலி யிட்டது, ப.147
3. நகுலன் – அழகன் என்ற எண்ணம்	உண்டு ப.506	உண்டு மகப். 68	உண்டு மகப். 32	இல்லை	இல்லை	இல்லை	இல்லை
4. அர்ச்சுனன் – வில் ஆற்றல், வலிமை உடையவன் என்ற எண்ணன்	உண்டு ப.506	உண்டு மகப். 73	உண்டு மகப்.34	கண்ணன் தனக்குத் தேரோட் -டியாக இருந்தார் என்ற பெருமை 594	வீடுமார், துரோணர், கண்ணன் ஆகியோ -ரைக் கொன்றது 232	முக்கோடி அசுரரைக் கொன் -றது 1159	கண்ணன் தனக்குத் தேரோட்டி யாக இருந்தார் என்ற பெருமிதம், ப.157
5. வீமன் – உடல் வலிமை, மிகுதியாக உணவு உண்பது	உண்டு பக்.506	உண்டு மகப். 76	மிகுந்த உணவு உண்பது சீற்றம் கொள் -வது, மகப்.36	வாயு தேவனி -டம் செருக்குக் காட்டியது 604	பழவினை 244	இல்லை	இல்லை
28)தருமன் வானுலகிற்கு நாயைக் கொண்டு செல்ல விரும்பியது	உண்டு ப. 508	உண்டு மகப். 91	உண்டு மகப்.40 - 46	இல்லை	இல்லை	இல்லை	இல்லை
29)எமதர்மன் தன் சுய உருவைத் தருமனுக்குக் காட்டியது	உண்டு ப. 511	உண்டு மகப். 166, 167	உண்டு மகப். 46	உண்டு 699	உண்டு 293	உண்டு 1269, 1270	உண்டு பக். 174 - 176
30)தருமன் வானுலகில் புனித நீராடியது	உண்டு ப. 526	உண்டு சொர்க். 107, 108	உண்டு சொர்க். 18, 19	உண்டு 669	உண்டு 293	உண்டு 1269, 1270	உண்டு பக். 174 - 176
31)தருமன் ஒரு பொய் கூறிய தன் விளைவாக நரகமும் சொர்க்கமும் கண் டது	உண்டு பக். 517, 522, 523	உண்டு சொர்க். 29 – 39, 66 - 74	உண்டு சொர்க். 3, 4, 13, 14	உண்டு 687	இல்லை	இல்லை	இல்லை
32) இந்தி ரன் தருமனிடம் முதலில்							

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

சொர்க்கம் அனுபவிப்பவன் பின்பு நரகமும் முதலில் நரகம் அனுபவிப்பவன் பின்பு சொர்க்கமும் அடைவான் என்று கூறியது	உண்டு ப. 525	உண்டு சொர்க். 88, 89	உண்டு சொர்க். 16	இல்லை	இல்லை	இல்லை	இல்லை
33)தரும தேவதை நாய் வடிவில் வந்து தருமனைச் சோதித்தது	உண்டு பக். 512, 524	உண்டு மகப்.106 , சொர்க். 74	உண்டு மகப். சொர்க். 14, 15	உண்டு 664 - 669	உண்டு 283	உண்டு 1269	உ[illegible] பக். 17[illegible] 176
34) குருகுலத்தவர் முக்தி அடைந்தது.	உண்டு பக். 531, 532	உண்டு சொர்க். 144 - 155	உண்டு சொர்க் : 27 - 31	இல்லை	இல்லை	இல்லை	இல்லை

[அட்டவணையினுள் இருக்கும் எண் பாடலெண்/பக்க எண்ணைக் குறிக்கும்]

வியாசபாரதம், தமிழ்பாரத நூல்கள், மாவிந்த நூல்கள் - ஒற்றுமை வேற்றுமை

அட்டவணை - 2 இல் ஆராய்ந்து கண்ட முடிவுகள்

1. வி.பா., த.பா. ஆகியவற்றிலும், மாவிந்த நூல்களிலும் ஒரே மாதிரி காணப்படும் செய்திகள்:

அட்டவணை -- 2 இல் 1, 8, 16, 17, 23, 29, 33--2 ஆகிய எண்களில் கூறப்படும் ஏழு செய்திகளும் ஒன்றுபோல் அமைந்துள்ளன.

2. வி.பா., த.பா., மாவிந்த நூல்கள் முதலியவற்றில் அடிப்படைச் செய்திகள் ஒன்று போலவும், பெயர் முதலியவற்றில் மாவிந்த நூல்கள் வேறுபட்டும் காணப்படுபவை:

அட்டவணை -- 2 இல் 1, 2, 3, 6, 12, 14, 15, 18, 22, 25, 27, 30 ஆகிய எண்களில் கூறப்பெற்றிருக்கும் 12 செய்திகள் ஆகும்.

3. மாவிந்த நூல்களில் ஒரே மாதிரியாக அமைந்த செய்திகள்:

அட்டவணை- 2 இல் 1, 2, 3, 4 -1, 6, 11, 14, 24, 26, 30, 31, 33-2 ஆகிய எண்களில் தரப்பெற்றிருக்கும் 12 செய்திகள் ஒன்று போல் அமைந்துள்ளன.

4. வியாச பாரதம், தமிழ் பாரத நூல்கள், மாவிந்த நூல்கள் இவற்றிற்கிடையே காணப்படும் ஒற்றுமை வேற்றுமைகள் அட்டவணை --2 இல் கொடுக்கப்பெற்றுள்ளன.

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA).

அவை கீழ்வருமாறு:

1. வைசம்பாயனர் பாரதக்கதையைச் சனமேசயனுக்குக் கூறியதாக வி.பா., த.பா. ஆகியவை கூறுகின்றன. சனமேசயனுக்குப் பாரதக் கதையை வியாசர் கூறியதாக மாவிந்த நூல்கள் குறிப்பிடுகின்றன.

2. வி.பா., தா.பா. ஆகியவை கண்ணனைக் காண மூன்று முனிவர்கள் வந்ததாகக் கூறுகின்றன. மாவிந்தநூல்கள் துர்வாசமுனிவர் ஒருவரே கண்ணனைக் காண வந்ததாகக் குறிப்பிடுகின்றன.

3. கர்ப்பிணியாக வேடமிட்டவன் பெயர் சாம்பன் என்று வி.பா., த.பா. ஆகியவை குறிப்பிடுகின்றன. மாவிந்த நூல்கள் வேடமிட்டவனின் பெயரைக் குறிப்பிடவில்லை.

4. முனிவர்கள் இட்ட சாபங்கள் மூன்று என வி.பா., த.பா. ஆகியவை கூறுகின்றன. மாவிந்த நூல்கள் முதலில் உள்ள சாபத்தை மட்டுமே குறிப்பிடுகின்றன.

5. தீய நிமித்தம் தோன்றியதாக வி.பா., த.பா. ஆகியவை காட்டுகின்றன. மாவிந்த நூல்கள் இது பற்றிக் குறிப்பிடவில்லை.

6. வசுதேவர் இரும்புலக்கையைப் பொடியாக்கிக் கடலில் இடச்சொன்னார் என்று வி.பா., நல்.பா. ஆகிய இரண்டும் கூறுகின்றன. இதற்கு மாறாக உக்கிரசேனன் சொன்னதாக அரங். பாரதமும், கண்ணன் கூறியதாக மாவிந்த நூல்களும் குறிப்பிடுகின்றன.

7. வி.பா., த.பா. முதலியவை சாத்தகியும் கிருதவர்மனும் வழக்கிட்டதைக் கூறுகின்றன. மாவிந்த நூல்களில் இது இடம்பெறவில்லை.

8. வி.பா., த.பா. முதலியவை பப்ருவாகனன் இறந்ததையும் கண்ணன் அர்ச்சுனனை அழைத்துவரத் தாரகனை அனுப்பியதையும் கூறுகின்றன. மாவிந்த நூல்கள் இவற்றைக் கூறாது விடுத்தன.

9. யாதவர்கள் அழிந்தபின் பலராமன் நாகர்களிடம் சென்றான் என வி.பா., த.பா. முதலியவை குறிப்பிடுகின்றன. யாதவகுலம் அழியு முன்பே பலராமன் பாம்பணையானான் என்று பா.மா. கூறுகிறது. பிற மாவிந்த நூல்கள் பலராமனின் முடிவைப் பற்றிக் குறிப்பிடவில்லை.

10. வி.பா., நல்.பா. இரண்டும் கண்ணன் யோக நிலையில் இருந்தது மரம் என்று பொதுவாகக் குறிப்பிட, அரங். பா. இதைக் குறிப்பிடவில்லை. மாவிந்த நூல்களில் பெருந். மாவிந்தம் தவிர ஏனையவை ஆலமரத்தின் கீழ் இருந்தார் என்று குறிப்பிட்டுள்ளன.

11. வேடன் கண்ணனின் காலை மான் என்று கருதி அம்பெய்ததாக வி.பா., பா.மா., வைகு. முதலிய நூல்கள் கூறுகின்றன. அரங். பா. விலங்கின் பெயரைக் கூறவில்லை. இவற்றிலிருந்து வேறுபட்டு நல்.பா., தஞ். இரண்டும், வேடன் புறா என்று கருதியதாகக் குறிப்பிடுகின்றன.

Digitization by Hindu-Heritage Foundation of America, HHFA(USA)

12. கண்ணன் வேடனுக்கு முக்தி அளித்ததாக அரங்.பா. கூறுகிறது. பாமா., பெருந்., தஞ். ஆகியவை, இது தனக்குச் சாபத்தால் ஏற்பட்டது என்று கண்ணன் வேடனிடம் கூறியதாகக் குறிப்பிடுகின்றன. அந்த வேடன் முன்னாளில் (இராமாவதாரத்தில்) வாலியாகப் பிறந்தவன் என்றும், முன்பு இராமன் வாலியை அம்பெய்ததால் இப்போது (கிருஷ்ணாவதாரத்தில்) அவரைப் பழிவாங்க வேடனாக வந்து அம்பெய்தான் என்றும் கூறியதாகக் குறிப்பிடுகிறது. வி.பா., நல்.பா. இரண்டும் வேடனிடம் கண்ணன் எதுவும் கூறியதாகக் குறிப்பிடவில்லை.

13. துவாரகையில் உள்ள மக்களை இந்திரப் பிரஸ்தத்தில் கொண்டு சேர்க்கும்படி வேண்டினார் கண்ணன் என வி.பா., த.பா. முதலியவை கூறியிருப்பதற்கு மாறாக, மாவிந்த நூல்கள் அத்தினபுரம் கொண்டு சேர்க்கும்படி அவர் கூறினார் என்று கூறியுள்ளன. இடத்தின் பெயர் வைகு.வில் இடம்பெறவில்லை.

வி.பா., நல்.பா. இரண்டும் கண்ணனுக்கு இறுதிக்கடன் செய்தவர் வச்சிரசேனன் என்று சொல்வதை அரங். குறிப்பிடவில்லை. அர்ச்சுனனும் வீமனும் கடன் செய்ததாகத் தஞ். காட்டுகின்றது. ஏனைய மாவிந்த நூல்கள் அர்ச்சுனன் பெயரைக் குறிப்பிடுகின்றன.

14. வி.பா., த.பா., வைகு. தவிரப் பிற மாவிந்த நூல்கள் வேடர்கள் வழியில் கொள்ளை இட்டதாகக் குறிப்பிடுகின்றன. வேடர்கள் துவாரகைக்குச் சென்று கொள்ளை யிட்டனர் என்றும் பாண்டவர்கள் அங்குச் சென்று வேடர்களுடன் போரிட்டனர் என்றும் வைகு. குறிப்பிடுகின்றது.

15. துவாரகை மோழையால்[1] அழிந்ததென்று பா.ம., பெருந். இரண்டும் கூறுகின்றன. துவாரகை கடலால் அழிந்ததாகப் பிற நூல்கள் காட்டுகின்றன.

16. வி.பா., த.பா. போன்றவை துவாரகையைப் பங்கிட்டளித்ததையும், வசுதேவர் மனைவியர், கண்ணனின் மனைவியர் முதலியோரின் முடிவையும் காட்டுகின்றன. மாவிந்த நூல்கள் இவற்றைப் பாடவில்லை.

17. அர்ச்சுனன் யாதவர்களின் முடிவைத் தருமனிடம் கூறியதாக வி.பா., த.பா. போன்றவை கூறுகின்றன. தஞ். ஒரு பேடி[2] கூறியதாகக் குறிப்பிடுகிறது. ஏனைய மாவிந்த நூல்கள் அர்ச்சுனன், வீமன் ஆகிய இருவரும் கூறியதாகக் குறிப்பிடுகின்றன.

18. கலிகாலத்தின் வருகையை அரங். வணிகருக்கும் பொருள் வாங்குவோருக்கும் இடையே ஏற்பட்ட வழக்கின் வழியாகக் காட்டுகிறது. பிற நூல்கள் அனைத்தும் இரு அந்தணர்களிடையே ஏற்பட்ட வழக்கின் மூலம் கலிகாலத்தின் வருகையைத் தெரிவிக்கின்றன.

19. பாண்டவர்கள் நாடுவிட்டுக் காடு சென்றபோது, அவர்களுடன் ஒரு நாயும் உடன் சென்றதாக வி.பா., த.பா. முதலியவை கூறியிருக்கின்றன. மாவிந்த நூல்கள், தருமன் தன்

---

[1] கீழாறு – நிலத்தின் கீழ் உள்ள ஆறு.

[2]பேடி என்பது அர்ச்சுனனைக் குறிப்பதாகக் கொள்ளலாம்; அவன் உருப்பசியின் விருப்பத்திற்கு இணங்காததால், அவளால் பேடியுருவாகச் சாபம் பெற்று அவ்வுரு சமயத்தில் வரும்படி வரம்பெற்றான்.

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

தம்பியரை இழந்து தனியே வருந்தி இருந்தபோது நாய் அவனிடம் வந்ததாகக் குறிப்பிடுகின்றன.

20. வி.பா., த.பா. முதலியவை காண்டீபத்தைக் கடலில் இடும்படி அர்ச்சுனனிடம் அக்கினிதேவன் கூறியதாகக் குறிப்பிடுகின்றன. இதை மாவிந்த நூல்கள் தருமன் கடலில் இடுமாறு கூறியதாகக் காட்டுகின்றன; காண்டீபத்தை அர்ச்சுனன் இட்ட இடம் கங்கை என்று தஞ். குறிப்பிடுகின்றது.

21. பாண்டவர்கள் ஒவ்வொருவரும் இறந்தபோது மற்றவர் அதற்கு வருந்தாமல் முன்னோக்கிச் சென்றனர் என வி.பா., த.பா. முதலியவை கூறுகின்றன. இதிலிருந்து வேறுபட்டு அவர்கள் இறந்தவர்களுக்காக வருந்தி இறுதிக்கடன் செய்தனர் என மாவிந்த நூல்கள் குறிப்பிடுகின்றன.

22. துரோபதி அர்ச்சுனனிடம் கொண்ட அளவற்ற அன்பு, சகாதேவனின் அறிவுச் செருக்கு, அர்ச்சுனனின் வலிமை, வீமனின் சீற்றம், பெருந்தீனி உண்பது, முதலிய பண்புகள் அவர்கள் இறப்புக்குரிய காரணம் என வி.பா., த.பா. முதலியவை குறிப்பிடுகின்றன.

வி.பா. போன்று பா.மா. துரோபதியின் இறப்புக்குரிய காரணம் கூறுகிறது. தஞ். ஐவர் கணவராயினும் மேலும் ஆசை உண்டென்று துரோபதி[1] கூறியதாகக் காட்டுகிறது. பாரதப் போர் முடிய துரோபதி ஐவரின் மனைவியானது என்று வைகு. காரணம் காட்டுகிறது. பெருந். இச்செய்தியைக் குறிப்பிடவில்லை. நகுலனின் இறப்புக்குரிய காரணம் பற்றி மாவிந்த நூல்கள் கூறவில்லை.

23. பாரதப்போரில் கண்ணன் தனக்குத் தேரோட்டியாக இருந்ததை நினைத்து அர்ச்சுனன் பெருமிதம் கொண்டது அவன் இறப்புக்குரிய காரணம் என்று கூறியதாகப் பா.மா. வைகு. ஆகியவை கூறுகின்றன. வீடுமர், கர்ணன் ஆகியோரைக் கொன்றது என்று பெருந். குறிப்பிடுகிறது. அசுரரைக் கொன்ற பாவம் என்று தஞ். காட்டுகிறது.

24. வீமனின் இறப்புக்குரிய காரணமாக வி.பா. வீமன் தான் வலியவன் என்னும் எண்ணம் கொண்டது, மிகுந்த உணவு உண்பது எனவும், நல்.பா. வலியவன் எனும் உணர்வு, கடுஞ்சொல் கூறல் ஆகியவை எனவும், அரங். மிகுந்த உணவு உண்பது, சீற்றம் கொள்வது எனவும் குறிப்பிடுகின்றன. வீமன் வாயுதேவனிட வம்பு செய்ததைக் காரணமாகப் பா.மா. காட்டுகிறது. பழவினை காரணம் என்று பெருந்.சொல்கிறது. ஏனையவற்றில் (தஞ்., வைகு.) இச்செய்தி இடம்பெறவில்லை.

25. தருமன் நாயுடன் வானுலகம் செல்ல முயன்ற நிகழ்ச்சி வி.ப., த.பா. போன்றவற்றைத் தவிர மாவிந்த நூல்களில் இடம்பெறவில்லை.

---

[1] இது வில்லிபுத்தூரர் பாரதத்தில் பழம்பொருந்து சருக்கத்தில் துரோபதி தன் மனத்தில் உள்ள உள்ளக்கிடக்கையைக் கண்ணனிடம் கூறியதை யொட்டி அமைந்துள்ளது போலும். "மேலும் ஆசை உண்டென்று" துரோபதி கூறியது, குந்தியின் முதல் மகன் கர்ணனைக் குறிப்பிடுகிறதோ என்று கருதத் தோன்றுகிறது.

Digitization by Hindu-Heritage Foundation of America, HHFA(USA)

26. பாரத நூல்கள் தருமன் முதலில் சொர்க்கத்தில் துரியோதனனையும் நரகத்தில் தம்பியரையும் கண்டதாகக் கூறியிருப்பது மாவிந்த நூல்களில் இல்லை.

27. சொர்க்க நரகங்களைத் தருமன் கண்டபோது இந்திரன் அவனிடம் கூறிய செய்தி[1] மாவிந்த நூல்களில் இல்லை.

28. தருமதேவதை தருமனைச் சோதிக்க நாயாக உருமாறி வந்த நிகழ்ச்சி மட்டுமே மாவிந்த நூல்களில் உள்ளன.

29. குருகுலத்தவர் முக்தி அடைந்த நிலை பற்றிய செய்தி வி.பா., த.பா. முதலியவற்றில் உள்ளது; மாவிந்த நூல்களில் இல்லை.

30. பரீட்சித்தின் பிறப்பு, வளர்ப்பு, அவன் சாபம் பெற்றது, நாகம் தீண்டி இறந்தது, சனமேசயனின் பிறப்பு, அவன் சர்ப்ப யாகம் செய்தது முதலியவற்றை வைகு. மட்டுமே கூறுகிறது. இவை பிற மாவிந்த நூல்களில் இல்லாததால் இதை அட்டவணையில் கொடுக்கவில்லை.

◆ முடிவு

1. துரோபதியும் (தருமன் நீங்கலாக) பாண்டவர்களும் இறந்ததன் காரணத்தை நோக்கும் போது துரோபதி அர்ச்சுனன் மீது காதல் உணர்வு மிக்கவளாகவும், சகாதேவன் அறிவில் சிறந்தவனாகவும், நகுலன் அழகு மிக்கவனாகவும், அர்ச்சுனன் வலிமையுடையவனாகவும், வீமன் சினம் மிகுந்தவனாகவும் விளங்கியது தெரியவருகிறது.

பாரதக்கதையின் மொத்தக் கதைப்போக்கை நோக்கும்போது, அடிப்படைக் கதை நிகழ்ச்சிகள் தவிரப் பிற செய்திகள், நுட்பமான விவரங்கள் போன்றவற்றில் வியாச பாரதம், நல்லாப் பிள்ளை பாரதம், அரங்கநாதக் கவிராயர் பாரதம் ஆகியவை ஒருபோக்கிலும், மாவிந்த நூல்கள் அனைத்தும் வேறொரு விதமாகவும் செல்வது நோக்கத்தக்கது. மேலும் மாவிந்த நூல்கள் எல்லாம் ஒரு மூலத்திலிருந்து தோன்றியிருக்க வேண்டும் என்று கூறும் அளவு அவை ஒன்றுபோல் அமைந்துள்ளன.

9.6 மாவிந்த நூல்களில் காணப்படும் செய்திகளின் ஒப்பீட்டாய்வு

இவ்வொப்பீட்டைப் பின்வருமாறு பகுக்கலாம். அவை:

9.6.1 மாவிந்த நூல்களின் நிகழ்ச்சிகள் உள்ள ஒற்றுமை மேற்றுமைகள் (அட்டவணை - 3)

9.6.2 கிளைக்கதைகளிடையே காணப்படும் ஒற்றுமை வேற்றுமைகள், (அட்டவணை-4)

9.6.3 சாபநீக்கம் பெற்ற நிகழ்ச்சிகளிடையே உள்ள ஒற்றுமை வேற்றுமைகள் (அட்டவணை-5),

[1] அட்டவணை 2, எண் 32.

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA).

9.6.4. பாண்டவர்கள் காட்டில் சென்றபோது அவர்களை அழைத்தவர்களின் செயல் என்பனவாகும் (அட்டவணை -6).

9.6.1 இவற்றுள் மாவிந்த நூல்களில் காணப்படும் செய்திகளின் ஒற்றுமை வேற்றுமைகளை அட்டவணை – 3 விளக்குகிறது.

அட்டவணை – 3

மாவிந்த நூல்கள் ஒப்பீடு - 1

9.6.1 மாவிந்த நூல்களில் மட்டும் காணப்படும் நிகழ்ச்சிகளிடையேயுள்ள ஒற்றுமை வேற்றுமைகள்

[அட்டவணையினுள் உள்ள எண்கள் பாடல் எண்/ பக்க எண்ணைக் குறிக்கும்]

1	2	3	4	5
நிகழ்ச்சி	பாரத மாவிந்தம்	பெருந்.பார. (மாவிந்தம்).	தஞ்.சரசு. மாவிந்தம்.	வைகுந்த அம்மானை
1)வியாசர் சனமேசயனுக்குப் பிராமணனைக் கொன்ற பாவம் சேரும் என்று கூறியது	உண்டு 53 , 54	உண்டு 1	உண்டு 16 , 17	உண்டு, ப.79
2)பிராமணனைக் கொன்ற பாவம் எத்தனை நாட்களில் தொடரும் என்று சொன் னது	இல்லை	உண்டு, 27-ஆம் நாள்	உண்டு, 12-ஆம் நாள்	இல்லை
3)சனமேசயன் வேள்வி செய்தபோது, அந்தணன் ஒருவன் உறங்கிக் கனவு கண்டான். சனமேசயன், அவனை உணர்த்தும் பொருட்டுத் தர்ப்பைப் புல்லால் தொட்டதும் அவன் இறந்து விட்டான். அப்பாவம் நீங்குவதற்கு மாவிந்தக் கதை கேட்டது	உண்டு 55-59	உண்டு 1-2, எத்தகைய கனவு என்னும் குறிப்பு இல்லை	உண்டு 22-25	உண்டு, பக் 80- 81
4) பாரதக் கதையைக் கருத்துடன் கேட்டதால் கரும்பட்டு வெண்பட்டானது.	இல்லை	இல்லை	இல்லை	உண்டு, ப. 84

Digitization by Hindu-Heritage-Foundation of America (HHFA)(USA)

5) பாரதக் கதையைக் கருத்துடன் கேட்காததால் வெண்புடவை கறுப்பாகி மீண்டும் கருத்துடன் கதை கேட்டது	இல்லை	இல்லை	உண்டு 29-35	இல்லை
6) பரீட்சித்தின் பிறப்பு, இறப்பு, அவன் சர்ப்ப யாகம் செய்தது, சனமேசயனின் பிறப்பு முதலியவை	இல்லை	இல்லை	இல்லை	உண்டு, பக் 9-25
7)கண்ணன் பாண்டவர்களிடம் கலிகாலத்தின் இயல்பைக் கூறி, வீரரைக் கொன்ற பாவம் நீங்கப் பரீட்சித்துக்கு முடி சூட்டிவிட்டுப் பின்பு காடு செல்லக் கூறியது	உண்டு 82-86	உண்டு 8, 22	உண்டு 71,77	உண்டு ப.22
8) வீடுமர், கர்ணன் ஆகியோரின் வீடுபேறு	இல்லை	இல்லை	உண்டு 37-44	இல்லை
9)யாதவர்கள் கடலில் இட்ட இரும்புத் துண்டை மீன் விழுங்கியது, வேடன் அம்மீனை வாங்கி அதன் வயிற்றிலிருந்து இரும்பு துண்டைத் தன் அம்பில் வைத்து அறைந்தது	உண்டு பக் 101, 102	உண்டு 33	உண்டு 81	உண்டு, ப. 27
10) கண்ணன், தன் மீது அம்பை எய்த வேடனிடம் வீமனையும் அர்ச்சுனனையும் அழைத்துவரக் கூறியது	உண்டு 110	உண்டு (அர்ச்சுனனை மட்டும்) 36	உண்டு 87	உண்டு, ப. 31
11)வீமனும் அர்ச்சுனனும் சாத்தகியுடன் ஆலோசனை செய்தது	உண்டு 131	இல்லை	இல்லை	இல்லை
12) தருமன், கண்ணனின் அங்கம்	இல்லை	இல்லை	உண்டு பக் 137-173	உண்டு ப. 54-59

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA).

கடலில் மிதந்ததைக் கண்டு அதற்குப் பூசை செய்து செகந்நாதன் எனப் பெயரிட்டது				
13)பாண்டவர்கள் காடு செல்லும்போது குந்தி காந்தாரி ஆகியோரிடம் விடைபெற்றது	உண்டு 193-215	உண்டு 73-84	உண்டு 157-173	உண்டு, பக்.54-59
14) ஒருவன் தன் தாயின் தலையில் சுமை ஏற்றி மனைவியைக் கைப் பிடித்து வந்த நிகழ்ச்சி மூலம் கலிகாலத்தின் இயல்பைக் காட்டுவது	உண்டு 234	இல்லை	இல்லை	உண்டு, ப .85 மனைவியைத் தோளில் வைத்துச் செல்வது
15) பாண்டவர்கள் காடு சென்றதைப் பொறுக்க இயலாமல் திருதராட்டிரனும் காந்தாரியும் தீயில் விழ முயன்ற போது அக்கினிதேவன் தடுத்தமையால், அவர்கள் மீண்டும் நாடு திரும்பியது	இல்லை	இல்லை	உண்டு 175-185	இல்லை
16) தருமன் துரோபதி, தம்பியர் ஆகியோரை அத்தினபுரம் செல்லத் தூண்டியதும் அவர்கள் மறுத்ததும்	உண்டு 240-244	உண்டு 92-96	உண்டு 207-214	உண்டு. பக் 87-89
17)மேகநாதன் என்னும் கந்தர்வன் துரோபதியைத் தூக்கிச் செல்ல முயன்றபோது வீமன் அவனுடன் சண்டையிட்டது	உண்டு 258	உண்டு 121	உண்டு 244-247	உண்டு, ப.97
18) ஒவ்வொருவரும் உயிர் துறக்கும் போது வணங்கிய இறைவன்				
1.துரோபதி வணங்கியது – சிவன், திருமால்	உண்டு 307, 308	இல்லை	உண்டு 343-345	உண்டு, பக் 104, 105
2.சாதேவன் வணங்கியது –	உண்டு 540	உண்டு 181-185	இல்லை	உண்டு, ப.143

Digitization by Hindu Heritage Foundation of America, HHFA(USA)

திருமால்				
3.நகுலன் வணங்கியது – திருமால்	உண்டு 563, 564	உண்டு 208-211	உண்டு 1098	உண்டு, பக் 150, 151
4.அர்ச்சுனன் வணங்கியது – திருமால்	உண்டு 586 , 587	இல்லை	இல்லை	உண்டு, ப.156
5.வீமன் வணங்கியது – திருமால்	உண்டு 605, 607	உண்டு 245-248	உண்டு 1188	உண்டு, பக் 159, 160
19) வீமன் கயிலாயன் என்ற அரக்கனுடன் போரிட்டது	உண்டு 359-369	இல்லை	உண்டு 406-411	உண்டு, ப. 111
20)திருமாலின் ஏவலால் கருடன் அன்ன வடிவுடன் வந்து பாண்டவர்களின் மனநிலையை அறிந்தது	உண்டு 527-534	உண்டு 177-180	உண்டு 1055-1063	உண்டு, பக் 138-141
21) இரு கன்னியர் ஊசியில் நின்று தவம் புரிந்தது	உண்டு 577	உண்டு 216-218	உண்டு 1126-1129	உண்டு, பக் 151, 152 பாண்டவர்களைத் தம்முடன் இருக்கும்படிக் கூறினர்
22) சக்கரத்தாழ்வார் திருமாலின் ஆணைக்கேற்பத் தருமனைப் பாம்பு, மலை, நதி முதலியவற்றால் ஏற்பட்ட இடர்களிலிருந்து காப்பாற்றியது	உண்டு 526, 631, 663, 667-668	உண்டு 253, 285-292 மலை பற்றிய குறிப்பு இல்லை	உண்டு 1198-1200, 1203, 1263-1269	உண்டு, பக் 163-165, 174-176
23) தருமன் நாயுடன் கவுசல நதியைக் கடந்தது	உண்டு 656	உண்டு 282 – 286 மாலி ஆறு	உண்டு 1261	உண்டு, ப.172 பெயர் இல்லை
24)விண்ணுலகில் உள்ளவர்கள் தருமனை வரவேற்றது	உண்டு 675	உண்டு 296	உண்டு 1277	உண்டு, ப.177
25) தருமன் துரியோதனனை நரகத்திலிருந்து மீட்க	உண்டு 703	இல்லை	இல்லை	இல்லை

Digitization by Hindu-Heritage-Foundation of America-HHFA(USA)

முயன்றபோது அவன் தருமனை நரகத்துள் இழுத்தது				
26) தருமன் தான் செய்த தருமத்தில் பாதியைக் கொடுத்துத் துரியோதனனை நரகத்திலிருந்து மீட்டது	உண்டு 710	உண்டு 317	உண்டு 1313	உண்டு, ப.183
27) தருமன் தன் புண்ணியத்தின் பலனைக் கொடுத்துச் சகுனி, துச்சாதனன் ஆகியோரை நரகத்திலிருந்து மீட்டது	உண்டு 716	இல்லை	இல்லை	இல்லை
28) தருமனுக்கு 'இராச இருடி' என்ற பெயர் சூட்டப் பெற்றது.	உண்டு 717, 724 அ	உண்டு 322, 323	உண்டு 1317 - 1320	உண்டு, பக் 184, 186
29) திருமால் கருடன் மீது காட்சியளித்தது	உண்டு 729	உண்டு 332	உண்டு 1332	உண்டு, ப.186
30) தருமன் வைகுண்டத்தில் மாவெலியைக் கண்டது	இல்லை	உண்டு 336 - 338	உண்டு 1420 - 1424	உண்டு, பக் 187, 188
31) தருமன் வைகுண்டத்தில் பிரகலாதனைக் கண்டது	இல்லை	இல்லை	இல்லை	உண்டு, ப.189
32) தருமன் திருமாலின் அடியார்களைக் கண்டது	இல்லை	இல்லை	உண்டு 1343 – 1420 18 ஆழ்வார் -களின் பெயர்கள் கொடுக்கப் பெற்றுள்ளன. பார்க்க: ψஅடிக்குறிப்பு .	உண்டு ப.189 பெயரைக் குறிப்பிடாமல் 12 ஆழ்வார்கள் என்று மட்டும் உள்ளது.

ψ 1. திருவடியான், 2. துளசிதேவன், 3. விளக்குத்தேவன், 4. அம்புயத் தேவன், 5. திருத்தோடாழ்வார், 6. திருமண்ணாழ்வார்,7. மாலைதேவன்,8. கின்னவிருத்தர்,9. சக்கரத்தாழ்வார், 10. வாலிதேவன், 11. குடவிளக்கம்மை,12. திருவடிக்கடியான்,13. திருச்சிறப்பாழ்வார்,14. நாரணன், 15. சிவநாராயணன், 16. சந்தனக் கய்யான், 17. நெய்விளக்காழ்வார், 18.கூர்மநாதன்.

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

அட்டவணை 3 தரும் செய்தி:

1. சனமேசயனுக்குப் பிரம்மகத்தி[1] 27 ஆம் நாள் வரும் என்று பெருந். கூறுகிறது. தஞ். 12 ஆம் நாள் வரும் என்று கூறுகிறது. நாள் பற்றிய குறிப்புப் பா.மா., வைகு. ஆகிய இரண்டிலும் இல்லை.

2. சனமேசயன் பத்து நாட்கள் வேள்வி செய்தான் என்று தஞ். கூறுகிறது; பிற மாவிந்த நூல்கள் வேள்வி செய்த நாட்கள் எத்தனை என்பதைக் குறிப்பிடவில்லை.

3. வேள்வி செய்தபோது அந்தணன் கனவு கண்டது பற்றிப் பெருந். குறிப்பிடவில்லை.

4. சனமேசயன் பாரதக்கதையைக் கருத்துடன் கேட்காததால் வெண்புடவை கறுப்பாக மாறியது; அதனால் மீண்டும் அவன் அக்கதையைக் கருத்துடன் கேட்டதாகத் தஞ். கூறுகிறது. சனமேசயன் பாரதக்கதையைக் கருத்துடன் கேட்டதால் கரும்புடவை வெண்ணிறமானது என வைகு. கூறுகிறது. இச்செய்தி பிற இரு மாவிந்த நூல்களிலும் இல்லை.

5. பீஷ்மர், கர்ணன் ஆகியோரின் இறப்புப் பற்றிய செய்தியைக் தஞ். மட்டுமே கூறுகிறது.

6. கண்ணன் சாத்தகிக்கு முடிசூட்டினான் என்பதை வைகு. தவிரப் பிற நூல்கள் குறிப்பிடவில்லை.

7. வீம அர்ச்சுனன் இருவரையும் அழைத்து வருமாறு கண்ணன் வேடனை அனுப்பியதாகப் பா.மா., தஞ்., வைகு. ஆகியவை குறிப்பிடுகின்றன. பெருந். அர்ச்சுனன் பெயரை மட்டும் கூறுகிறது.

8. வீமனும் அர்ச்சுனனும் சாத்தகியுடன் ஆலோசனை செய்த நிகழ்ச்சி பா.மா.வில் மட்டுமே இடம்பெற்றுள்ளது.

9. கண்ணனின் 'அங்கத்தை' வைத்துத் தருமன் பூசை செய்த செய்தியைத் தஞ். மட்டுமே கூறுகிறது.

10. கலிகாலத்தின் வரவைக் காட்டும் நிகழ்ச்சியைப் பா.மா., வைகு. ஆகிய இரண்டும் காட்டுகின்றன. ஏனையவற்றில் இந்நிகழ்ச்சி இடம்பெறவில்லை.

11. திருதராட்டிரனும் காந்தாரியும் பாண்டவர்களைப் பின் தொடர்ந்து சென்று மீண்டும் நாடு திரும்பினர் என்று தஞ். மட்டுமே குறிப்பிடுகிறது.

12. சகாதேவன், நகுலன், அர்ச்சுனன், வீமன் ஆகியோர் தம் இறுதிக் காலத்தில் திருமாலை வணங்குகின்றனர். துரோபதி முதலில் சிவபெருமானையும், பின்பு திருமாலையும் துதித்தாள் என்று பா.மா., வைகு. இரண்டும் கூறுகின்றன. அர்ச்சுனன், துரோபதி ஆகியோர் தம் இறுதிக்

[1] அந்தணனைக் கொன்ற பாவம்

Digitization by Hindu-Heritage-Foundation of America HHFA(USA)

காலத்தில் துதித்ததைப் பற்றிப் பெருந். குறிப்பிடவில்லை. துரோபதி திருமாலை மட்டுமே வணங்கியதாகத் தஞ். குறிப்பிடுகிறது.

13. ஊசியில் நின்று தவம் செய்த கன்னியர் பாண்டவர்களைத் தம்முடன் இருக்குமாறு அழைத்தனர் என வைகு. மட்டுமே காட்டுகிறது. பிற நூல்கள் அவர்கள் அழைத்ததைக் குறிப்பிடவில்லை.

14. தருமன் கவுசல நதியைக் கடந்ததான் என்று பா.மா., தஞ். இரண்டும் குறிப்பிடுகின்றன. ஆற்றின் பெயர் மாலி என்று பெருந். குறிப்பிடுகிறது. வைகு. ஆற்றின் பெயரைக் கூறவில்லை.

15. தருமன் நரகிலிருந்து துரியோதனனை மீட்கும்போது, அவன் தருமனை நரகினுள் இழுத்த செய்தியும், சகுனி துச்சாதனன் முதலியோரைத் தருமன் நரகத்திலிருந்து மீட்ட செய்தியும் பா.மா. தவிரப் பிற மாவிந்த நூல்களில் இல்லை.

16. தருமன் வைகுண்டத்தில் மாவெலியையும், பிரகலாதனையும் பார்த்ததாக வைகு. குறிப்பிடுகிறது. பெருந்., தஞ். ஆகியவை மாவெலியைப் பார்த்ததாகக் குறிப்பிடுகின்றன. இச்செய்தியைப் பா.மா. கூறவில்லை.

17. தருமன் வைகுண்டத்தில் 18 திருமால் அடியார்களைப் பார்த்தான் என்று தஞ். கூறுகிறது; வைகு. 12 ஆழ்வார்களைத் தருமன் கண்டான் என்று குறிப்பிடுகிறது. இச்செய்தி பா.மா., பெருந். ஆகிய இரண்டிலும் இடம்பெறவில்லை.

செய்திகளிலிருந்து பெற்ற முடிவு

1. மாவிந்த நூல்கள் அனைத்திலும் ஒன்றுபோல் காணப்படும் செய்திகள்:

அட்டவணை 3 - இல் 5, 8, 11, 15, 16, 18, 20, 22, 24, 26, 27 ஆகிய எண்களில் காணப்படும் பதினொரு செய்திகள் ஒன்றுபோல் உள்ளன.

2. செய்திகள் அடிப்படையில் ஒன்றுபோல் இருப்பினும் சிறிது மாறுபாட்டுடன் காணப்படுபவை அட்டவணை 3 – இல் 1, 2, 3, 9, 17, 19, 21 ஆகிய ஏழு எண்களில் உள்ள செய்திகளாகும்.

3. பா.மா. மட்டும் குறிப்பிடும் செய்தி	10, 23, 25
தஞ். மட்டும் குறிப்பிடும் செய்தி	6, 14
வைகு. மட்டும் குறிப்பிடும் செய்தி	7
பா.மா., வைகு. இரண்டிலும் காணப்படும் செய்தி	13
பெருந்., தஞ்., வைகு. மூன்றிலும் காணப்படும் செய்தி	28
தஞ்., வைகு. இரண்டிலும் காணப்படும் செய்தி	4,29

ஆகிய எண்க்ளிலுள்ள செய்திகளாகும்.

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

4. மீனவன் வேடனுக்கு மீனை அளித்ததாகக் கூறப்படும் செய்தி பாகவதத்திலிருந்து பெறப்பட்டதாகும்.

5. துரோபதி சிவபெருமானைத் தொழுதாள் என்று பாரத மாவிந்தமும், வைகுந்த அம்மானையும் குறிப்பிடுவது, அவற்றை இயற்றிய ஆசிரியர்களின் சைவ சமய ஈடுபாட்டைப் புலப்படுத்துகிறது.

◆ மாவிந்த நூல்களில் முரண்பட அமைந்துள்ள செய்திகள் வருமாறு:

1. வியாசபாரதம் வீடுமர், கர்ணன் ஆகியோரின் இறப்பை வீட்டும கன்ன பருவங்களில் கூறியிருந்தும், தஞ். அவர்களுடைய இறப்பை அதன் பின்னர் வரும் பருவங்களில் குறிப்பிட்டிருப்பது;

2. மௌசலப் பருவத்தில் சாத்தகி சண்டையிட்டு மாண்டதாக வி.பா. கூறுகிறது. வீம அர்ச்சுனர் இருவரும் சாத்தகியுடன் ஆலோசனை செய்ததாகப் பா.மா. குறிப்பிடுகிறது; இதிலிருந்து சிறிது வேறுபட்டுக் கண்ணன் சாத்தகிக்கு முடிசூட்டியதாக வைகு. குறிப்பிடுகிறது.

3. ஆசிரமவாசிக பருவத்தில் குந்தி, காந்தாரி, திருதராட்டிரன் ஆகியோரின் இறப்பை வியாச பாரதம் தெளிவாகக் கூறியிருந்தும், பாண்டவர்கள் காட்டிற்குச் சென்றபோது குந்தியிடமும் காந்தாரியுடமும் விடைபெற்றதாக மாவிந்த நூல்கள் குறிப்பிடுகின்றன.

4. காந்தாரியும் திருதராட்டிரனும் பாண்டவர்களைப் பின் தொடர்ந்து சென்று பின்பு மீண்டும் நாடு திரும்பினர் என்று தஞ். கூறிருப்பது போன்ற நிகழ்வுகளாகும்.

வி.பா., வீடுமர், கர்ணன், சாத்தகி, குந்தி, காந்தாரி, திருதராட்டிரன் போன்றோரின் இறப்பைத் தெளிவாகக் கூறியும் மாவிந்த நூல்கள் அதற்கு முரண்பாடாகக் கூறியிருப்பது மூலக்கதை அறியாததால் ஏற்பட்ட வேறுபாடா? அன்றி மக்களிடையே இவ்வாறு கதை நிலவியதா என்று தெரியவில்லை.

பெருந். பாரதம் ஏனைய மூன்று மாவிந்த நூல்களைவிடச் சற்று வேறுபட்டுச் செல்வதாகத் தோன்றுகிறது. இவற்றில் தஞ். பா.மா. ஐத் தழுவிச் செல்வது போலவும், வைகு. பா.மா. வைப் பின்பற்றுவது போலவும் புலப்படுகின்றது. பெருந். இயற்றிய நூல் முழுமையாக இல்லாததால் பல செய்திகள் அதில் விடுபட்டுள்ளன என்று கருத இடமுண்டு.

பாரத மாவிந்தம், பெருந்தேவனார் பாரதம் (மாவிந்தம்) ஆகிய நூல்கள் தோன்றிய காலத்தில் மக்கள் மனம் ஒன்றிப் பாரதக்கதை கேட்டதால் பட்டின் நிறம் மாறும் செய்தி சொல்லப்படவில்லை போலும். தஞ்சை சரசுவதி மகால் மாவிந்தம், வைகுந்த அம்மானை ஆகிய நூல்கள் இயற்றப்பட்ட காலத்தில் மக்கள் மனம் ஒன்றிக் கதை கேட்காததால் அவர்களை மனம் ஒன்றிக் கதை கேட்கச் செய்யுமாறு பட்டின் நிறம் மாறும் உட்கதை சேர்க்கப்பட்டிக்க வேண்டும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America (HHFA)

◆ மாவிந்த நூல்கள் ஒப்பீடு - 2

9.6.2 மாவிந்த நூல்களில் காணப்படும் கிளைக்கதைகள் அட்டவணை - 4
கிளைக்கதைகளுக்கிடையே காணப்படும் ஒற்றுமை வேற்றுமை

எண்	கிளைக்கதைகள்	பாரத மாவிந்தம்	பெருந்.பார. (மாவிந்தம்)	தஞ். சரசு. மாவிந்தம்	வைகு. அம்மானை
1	திருமால் பதினாலு உலகங்களையும் உண்டு ஆலிலை மேல் இருந்த நிகழ்ச்சி	உண்டு 373 – 385*	உண்டு 174	உண்டு 413 – 423 *	உண்டு, பக் 112 – 113 *
2	சிவபெருமான் நஞ்சுண்ட கதை	உண்டு 386 – 391*	இல்லை	உண்டு 424 – 443 *	உண்டு, பக் 113 – 114 *
3	சிவபெருமான் திரிபுரம் எரித்த கதை	உண்டு 392 – 402*	இல்லை	இல்லை	உண்டு, பக் 114 – 117 *
4	பிரகலாதன் கதை	உண்டு 403 – 411*	இல்லை	உண்டு 473 – 489 *	உண்டு, பக் 117 – 119 *
5	மாவெலி கதை	உண்டு 412 – 420*	இல்லை	உண்டு 445 – 458 *	உண்டு, பக் 119 – 122 *
6	இராமாயணக் கதை	உண்டு 421 – 522*	உண்டு 175	உண்டு 492 – 981 *	உண்டு, ப. 138
7	கண்ணன் சகடாசுரனை அழித்து, பூதனையிடம் பால் உண்டது, மருதமரம் உதைத்தது, கன்றால் விளவெறிந்தது, பாம்பின் மீது நடனமாடியது ஆகிய பாகவாதக் கதைகள்	உண்டு 525	இல்லை	இல்லை	உண்டு, ப. 138
8	கண்ணன் கம்சனை வதைத்து	இல்லை	இல்லை	இல்லை	உண்டு, ப.138
9	உருக்குமணி துளசி நோன்பு இருந்தது கண்ணனை அடைந்தது	இல்லை	இல்லை	உண்டு 49 – 61 *	இல்லை
10	புன்னான் என்பவன் புறாவுக்கு அடைக்கலம் அளித்தது	இல்லை	இல்லை	உண்டு 318 – 329 *	இல்லை
11	கொக்கு மோட்சம் பெற்றது	இல்லை	இல்லை	உண்டு 330 – 339 *	இல்லை
12	சிவபெருமானின் அடி முடி தேடிய கதை	இல்லை	இல்லை	உண்டு 460 – 471 *	
13	ஆதி மூலம் யானை	இல்லை	இல்லை	உண்டு 982	உண்டு, பக்

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

	மோட்சம்			– 1035 *	122 – 136 *
14	சாத்தடராசர் மோட் சம்	இல்லை	இல்லை	உண்டு 1038 – 1053 *	இல்லை
15	சிவபெருமானுக்கு ஏற்பட்ட பிரம்மகத்தியைத் திருமால் நீக்கியது	இல்லை	இல்லை	உண்டு 1161 – 1166 *	இல்லை
16	திருமால் இரணி யாட்சனை அழித்தது	இல்லை	இல்லை	உண்டு 1222 – 1225 *	இல்லை
17	மீன் முகன் கதை	இல்லை	இல்லை	உண்டு 1300 – 1035 *	இல்லை

கிளைக்கதைகளிலிருந்து பெற்ற முடிவு

1. பாரத மாவிந்தத்தின் கிளைக்கதைகள் பற்றி மேலே கொடுக்கப்பெற்றிருக்கும் அட்டவணையில் உள்ள எண் 1 ஐத் தவிர ஏனைய (பாரத மாவிந்தத்தில் உள்ள) கிளைக்கதைகள் (2, 3, 4, 5, 6, 7, 8 10, 11) வைகு. இல் இடம்பெற்றுள்ளன.

2. தஞ். இல் மேலே குறிப்பிட்ட எண் 1, 2, 4, 5, 6 ஆகியவற்றில் உள்ள கிளைக்கதைகள் மட்டும் காணப்படுகின்றன.

3. எண் 1, 2, 6 ஆகியவற்றில் இடம்பெற்றிருக்கும் கதைக்குறிப்புகள் மட்டுமே பெருந். இல் இடம்பெற்றுள்ளன..

◆ தஞ்சை சரசுவதிமகால் மாவிந்தத்தில் கூடுதலாக இடம்பெறும் கதைகள்:

1. உருக்குமணி துளசி நோன்பிருந்து கண்ணனிடம் சேர்ந்தது
2. புன்னான் என்பவன் புறாவுக்கு அடைக்கலம் அளித்தது
3. கொக்கு ஒன்று தன்னைப் பிடித்த வேடனுக்கு உணவாகி மோட்சம் பெற்றது
4. சிவபெருமானின் அடியையும் முடியையும் தேடியது

5. ஆதிமூல யானையின் மோட்சம் - பார்வதியின் திருமணம் காணச் சென்ற அகத்தியர் தெற்கே வந்தபோது விந்தியமலையை அழுத்தியது, இந்திரன் மழை பெய்வதற்காக விநாயகரை நோக்கித் தவம் செய்தது, காகம் அகத்தியரின் கமண்டலத்தை அழுத்தியதும் அது காவிரி ஆறாக மாறியது, இந்திரத்துய்மனின் சாபம் நீக்கியது.

6. சாத்தராசர் மோட்சம் - சாத்தராசரின் தவத்தை இந்திரன் கலைத்தது, திருமால் அருளால் சாத்தராசர் விண்ணுலகடைந்தது.

7. சிவபெருமான் பிரம்மனின் தலையைக் கிள்ளியதால் ஏற்பட்ட பிரம்மகத்தி, திருமாலருளால் நீங்கியது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

8. திருமால் இரணியாட்சனை அழித்தது.

9. மீன்முகன் கதை - முனிவரின் மனைவி நீர் எடுக்கச் சென்ற போது, கந்தர்வனைக் கண்டு மயங்கியதால் அவளது கற்பின் தன்மை குலைந்து நீர் திரளவில்லை. அவள் கலவியாக நின்ற மீனைப் பார்த்ததால் நீர் திரளவில்லை என்று முனிவரிடம் கூறியது. முனிவர் அவளை மீனாகும்படி சபித்தது.

10. கண்ணன் கம்சனை வதம் செய்த நிகழ்ச்சி பற்றி வைகுந்த அம்மானை மட்டும் குறிப்பிடுகிறது..

கதைக் கூறுகளில் காணப்படும் வேறுபாடுகள்

1. சிவபெருமான் நஞ்சுண்ட கதையில் (எண் 2), பாற்கடலில் தோன்றிய நஞ்சை எடுத்துச் சிவபெருமான் தம் தொண்டையில் வைத்தார் என்று பா.மா., வைகு. இரண்டும் கூறுகின்றன. சிவபெருமான் நஞ்சுண்டதால் ஏற்பட்ட மயக்கம் நீங்கத் தேவர்கள் ஏகாதசி விரதமிருந்தனர் என்று தஞ். புது விளக்கம் தருகின்றது.

2. திரிபுரம் எரித்தகதையில், இருவர் தவிர மற்றெல்லாரும் சிவபூசையைக் கைவிட்டதாகப் பா.மா. கூறுகிறது. முப்புரத்தவர் அனைவரும் பூசையைக் கைவிட்டதாக வைகு. குறிப்பிடுகிறது.

3. நரசிம்ம அவதாரக் கதையில் தமிழுக்கு நான்கு வேதங்கள் இருந்ததாகப் பா.மா. குறிப்பிடுகிறது. வைகு. தமிழ் வேதியர் என்று கூறுகிறது. ஏனைய இரு நூல்களும் இதைக் குறிப்பிடவில்லை.

4. வாமனன் மூன்றாவதடிக்கு மண் கொடுக்க இயலாது நின்ற மாவெலியைச் சிறைப்படுத்தியதாகப் பா.மா., வைகு. இரண்டும் கூறுகின்றன. வாமனன் கேட்ட மூன்றாவதடிக்கு மாவெலி தன் தலையை அவனிடம் காட்டியதாகத் தஞ். குறிப்பிடுகிறது.

5. இராமாவதாரக் கதையில் இராமன் கொடுத்த கணையாழியைச் சீதையிடம் கொடுத்த அனுமான், 'இன்னும் ஒரு திங்கள் அசோகவனத்தில் இருக்குமாறு' வேண்டியதாகப் பா.மா. கூறுகிறது. இக்கூற்றைச் சீதை அனுமானிடம் சொன்னதாக வால்மீகி பாடியிருப்பதையொட்டியே கம்பர் அமைத்துள்ளார். வால்மீகி இராமாயணம், கம்பராமாயணம் ஆகியவற்றிலிருந்து பாரத மாவிந்தம் வேறுபட்டுக் கூறுகிறது.

1.மாவிந்த நூல்கள் நான்கிலும் இடம்பெற்றவை	- 2, 6
2.பா.மா., தஞ்., வைகு. மூன்றிலும் இடம்பெற்றவை	– 4, 5
3.பா.மா., பெருந்., தஞ். மூன்றிலும் இடம்பெற்றது	- 1
4. பா.மா., வைகு. இரண்டிலும் இடம்பெற்றவை	- 2, 4, 5, 6, 7, 8, 10, 11
5.பா.மா. மட்டும் குறிப்பிடும் கதை	- 9

தஞ்., வைகு ஆகிய இரண்டும் பா.மா. ஐ விட மிகுதியான கதைகளைக் கூறுகின்றன.

மாவிந்த நூல்கள் கதைப்பாடலாகப் பொதுமக்களுக்கென்று எழுந்தவை. ஆதலால் அவை மிகுதியான கிளைக்கதைகளைப் பெற்றிருக்கின்றன எனலாம். ஆசிரியர்கள் தத்தம் கற்பனைக்கேற்பக் கதைகளை விரிவாகக் கூறி, நூலைச் சுவையாகப் படைத்துள்ளனர்.

Digitization by Hindu-Heritage Foundation of America, HHFA(USA)

9.6.3 மாவிந்த நூல்களில் உள்ள சாபநீக்கம் நிகழ்ச்சிகளின் ஒற்றுமை வேற்றுமைகளை அட்டவணை – 5 விளக்குகிறது.

சாப நீக்கம் - நிகழ்ச்சிகளிடையே உள்ள ஒற்றுமை வேற்றுமை

[சா.பெற்.— சாபம் பெற்றவர், சா.கொடு. — சாபம் கொடுத்தவர், சா.கார. — சாபத்திற்கான காரணம், சா.நீக்.— சாபத்தை நீக்கியவர்]

நிகழ்ச்சி	பாரத மாவிந்தம்	பெருந். பாரா. (மாவிந்தம்)	தஞ்.சரசு. மாவிந் தம்	வைகுந்த அம்மானை
1. பாம்பு	277-283 சா.பெற். பெயர் இல்லை, சா.கொடு.- தேவ இருடி., சா.கார.- கந்தர்வன் மகளைக் கண்டு பூசைக்குத் தாமதமாக மலர் கொண்டு சென்றது. சா.நீக்.- வீமன். [பாண்டவர் ஐவரையும் விழுங்கிய பாம்பை, வீமன் உதைக்கப் பாம்பின் சாபம் நீங்கி அந்தணனாக மாறியது]	142-145 சா.பெற். பெயர் இல்லை. சா.கொடு.- மகா இருடி., சா.கார. கன்னியரைக் கண்டு பூசைக்கு மலர் கொண்டு செல்லாதது சா.நீக்.- வீமன். [பாண்டவரொடு துரோபதியையும் விழுங்கிய பாம்பின் வயிற்றை வீமன் கிழித்த உடன் பாம்பு அந்தணனாக மாறியது]	277-286 சா.பெற். -பெயர் இல்லை. சா.கொடு.- தேவராச இருடி, சா.கார.- கந்தர்வன் மகளைக் கண்டு பூசைக்குத் தாமதமாக மலர் கொண்டு சென்றது. சா.நீக். வீமன். [பாண்டவர் ஐவரையும் விழுங்கிய பாம்பை, வீமன் வாளால் பிளந்ததும் பாம்பு அந்தணனாக மாறியது]	ப.180 சா.பெற். பெயர் இல்லை சா.கொடு.-இராச இருடி சா.கார..- அரம்பையரைக் கண்டு பூசைக்குத் தாமதமாக மலர் கொண்டு சென்றது. சா.நீக்.-வீமன். [பாண்டவருடன் துரோபதியையும் விழுங்கியபோது பாம்பை வீமன் வாளால் வெட்டியதும் பாம்பு அந்தணனாக மாறியது]
2. மலை	284-289 சா.பெற்.- வித்தியாதரன் சா.கொடு.-நாரணர் சா.கார.-தேவாசுரப் போரில் இறந்தவர்களை வைகுண்டம் அனுப்பியது சா.நீக்.- வீமன். [மலை உருவில்	146-150 சா.பெற்.-பெயர் இல்லை சா.கொடு.- நாரணர் சா.கார.-தேவா சுரப்போரில் இறந்தவர்களை வைகுண்டம் அனுப்பியது சா.நீக்.-வீமன்.	287-297 சா.பெற்.- வித்யாதன்மர் சா.கொடு.- நாரணர் சா.கார. கந்தர்வனை வைகுண்டம் அனுப்பியது. சா.நீக்.-வீமன். [மலை உருவில்	பக்.100- 101 சா.பெற்.-பெயர் இல்லை சா.கொடு.- நாரணர் சா.கார.- அரக்கருடனும் மூர்க்கருடனும் போரிட்ட அசுரரை வைகுண்டம் அனுப்பியது

Digitization by Hindu-Heritage-Foundation of America

	வழியில் கிடந்ததை வீமன் கையால் தகர்த்ததும். வித்தியாதரனாக மாறியது.]	[மலை உருவில் வழியில் கிடந்ததை வீமன் கையால் தகர்த்ததும் மலை, முனிவராக மாறியது.]	வழியில் கிடந்ததை வீமன் கையால் தகர்த்ததும் அரசனாக மாறியது].	சா.நீக்.-வீமன். [மலையைத் தண்டாயுதத்தால் வீமன் அடித்ததும் அந்தணனாக மாறியது].
3. குதிரை முகப் பெண்	292அ --295 சா.பெற். காளி சா.கொடு. முனிவர் - (கணவர்) சா.கார.- வானில் வந்த முனிவருடன் வைகல் சா.நீக். அர்ச்சுனன். [அர்ச்சுனனைத் தழுவும்போது, அவன் தோள் பட்டதும் குதிரைமுகம் மாறியது].	151, 152 சா.பெற். இல்லை. சா.கொடு.- அத்துமி சா்.கார.- அத்துமியின் கையைப் பிடித்தது, சா.நீக் அர்ச்சுனன். [அர்ச்சுனனைத் தழுவியதும் குதிரைமுகம். மாறியது].	299 -- 303 சா.பெற். துங்க வாகினி, சா.கொடு.- முனிவர்- (கணவர்), சா.கார.-குதிரை கூடி நின்றதைப் பார்த்தது. சா.நீக். அர்ச்சுனன். [அர்ச்சுனனைத் தழுவும்போது, குதிரைமுகம் மாறியது]	ப.102 சா.பெற். காளி. சா.கொடு. முனிவர்- (கணவர்) சா.கார.-வானில் வந்த முனிவனுடன் சேர்ந்தது. சா.நீக் - அர்ச்சுனன். [அர்ச்சுனனைத் தழுவும்போது, குதிரைமுகம் மாறியது]
4 . ஆறு	298--304 சா.பெற்.-இனியாள், சா.கொடு.-அரன் - கணவர், சா.கார.-பரன் என்னும் முனிவரிடம் அன்பு காட்டியது, சா.நீக். பாண்டவர், [மாலி என்ற ஆறாக ஓட, அதில் பாண்டவர் நீந்தியது.]	இல்லை	311--317 சா.பெற்..- முனிவர் மனைவி, சா.கொடு.- அரன்-கணவர், சா.கார.- உரமிலா தவம் இருந்தது, சா.நீக். பாண்டவர், [மாலி என்ற ஆறாக ஓடியது. அதில் பாண்டவர் நீந்தியதும் பெண்ணாக மாறியது]	பக்.102- 103 சா.பெற்..-நித்திய கன்னி, சா.கொடு.- நீதிமுனி, சா.கார.-சாதகம் செய்யும்போது உறங்கியது, சா.நீக்.- பாண்டவரும் துரோபதியும் [காளி என்ற ஆறாக ஓட, அதில் பாண்டவர் துரோபதியுடன் நீந்தியதும் பெண்ணாக மாறியது].

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

5. சிங்கம்	316--322 சா.பெற். --பகவதி, சா.கொடு. --- நாரதமுனிவர் - தந்தை, சா.கார.-பூசைக்கு மலர்பறிக்கும் போது சிங்கத்தைக் கண்டதால் தாமதித்தது சா.நீக். தருமன், [பாண்டவரைச் சிங்கம் பிடிக்கும் போது, வீமன் அதன் வாயைக் கிழித்ததும் சிங்கம் அந்தணனாக மாறியது].	இல்லை	357--363 சா.பெற்.- குமாரன்(சுருதி), சா.கொடு.- தந்தை சா.கார.-சிங்கம் தழுவி நின்றதைக் கண்டு தாமதமாக மலர் கொண்டு சென்றது. சா.நீக்.-வீமன் [நீங்கிய விதம் இல்லை. அந்தணனாக மாறியது].	பக்.106- 107 சா.பெற். இல்லை, சா.கொடு.-தாது விசுவமுனி. சா.கார.- இரு சிங்கம் போர் செய்தது கண்டு தாமதமாக மலர் கொண்டு சென்றது. சா.நீக்.-வீமன், [நீங்கிய விதம் இல்லை.; அந்தணனாக மாறியது].
6. அரக்கி	335-344 சா.பெற்.-மகலோக முனிவர் மனைவி, சா.கொடு.-மகலோக முனிவர் சா.கார. வேள்வியில் கவனமின்றிச் சுதக்கண முனிவரிடம் பேசியது சா.நீக்.-தருமன், [அரக்கியின் வாயில் ஐவரும் புகுந்து வெளி வந்ததும் அரக்கி பெண்ணாக மாறியது].	166-168 சா.பெற்.- மகலோக முனிவர் மனைவி, சா.கொடு. பெயர் இல்லை சா.கார. இல்லை சா.நீக். இது பற்றிய விவரம் இல்லை	378-384 சா.பெற்.-சிவ முனிவர் மனைவி, விந்தராஷி சா.கொடு.- சிவமுனி (கணவர்) சா.கார.- துருவாசன் தானவ பாகம் செய்யும் போது தூஷன் என்ற இருடியுடன் பேசியது சா.நீக்.- பாண்டவர் ஐவர். [சாபம் நீங்கிய விதம் இல்லை. அரக்கி பெண்ணாக மாறியது].	இல்லை.
7. யானை	567-574 சா.பெற்.-கேசவன்,	இல்லை	1107-1117 சா.பெற்.-	இல்லை

Digitization by Hindu-Heritage-Foundation of America-HHFA(USA)

	சா.கொடு.-அகத்திய முனி சா.கார.-யானையின் புணர்ச்சி கண்டு தாமதமாக மலர் கொண்டு சென்றது. சா.நீக்.-வீமன். [செருக்குடன் நின்ற யானை மீது வீமன் ஏறியதும் யனை அந்தணனாக மாறியது.		கேசவன், சா.கொடு.- அகத்திய முனி சா.கார.- இந்திரனின் யானையைக் கண்டு தாமதமாகத் தர்ப்பையும் சமுதும் கொண்டு சென் றது சா.நீக்.-வீமன். [செருக்குடன் நின்ற யானை மீது வீமன் ஏறியதும், யானை அந்தணனாக மாறியது.	
8. புலி	581-583 சா.பெற்.- சுகன்(அஞ்சுதன்) சா.கொடு.- அஞ்சுமான் முனிவர் சா.கார.- அங்குரோத்தை என்ற பெண்ணைக் கண்டு தாமதமாக மலர் கொண்டு சென்றது. சா.நீக்.-தருமன். [தருமனைப் புலி பிடித்தபோது வீமன் அதன் வாயைக் கிழித்ததும், புலி அந்தணனாக மாறியது].	221-225 சா.கொடு.-சுதன், சா.கொடு.- அங்கிமாந் தந்தை, சா.கார.- விமலாக்கினி என்ற பெண்ணைக் கண்டு தாமதமாக மலர் கொண்டு சென்றது. சா.நீக்.-வீமன், [தருமன் மீது புலி பாய்ந்ததும் வீமன் அதன் காலைப் பிளந்தான். புலி அந்தணனாக மாறியது.]	1139-1145 சா.பெற்.- அசுவன், சா.கொடு.- அசுமானன் - தந்தை, சா.கார. ஒரு பெண்ணிடம் பேசித் தாமதமாக மலர் கொண்டு சென்றது, சா.நீக்.- பாண்டவர். [புலி தருமனைப் பிடித்தபோது, வீமன் அதை வதைத்ததும் அது அந்தணனாக மாறியது]	இல்லை
9. பன்றி	596, 597 சா.பெற்.-நாரதன், சா.கொடு.-ஓங்கார	235, 236 சா.பெற்.-மீதென், சா.கொடு.-	1173-1180 சா.பெற்.- மணியானந்தன்	ப.158 சா.பெற்.-இல்லை சா.கொடு.-

Digitization by Hindu Heritage Foundation of America, HHFA(USA)

	முனிவன் சா.கார.-சமிதைக் கொண்டு செல்லத் தாமதித்தது, சா.நீக்.-வீமன். [பன்றி தருமன் மீது பாய்ந்தது. வீமன் அதன் கழுத்தைத் திருகியதும், அது அந்தணனாக மாறியது]	ஒகாரந்தன் — இருடி, சா.கார.- இரு பன்றிகள் பொருகின்றதைக் கண்டு மலரும் சமிதையும் தாமதமாகக் கொண்டு சென்றது. சா.நீக்.-வீமன். [பன்றி பாய்ந்ததும் வீமன் அதன் கழுத்தைத் திருகினான். உடனே அந்தணனாக மாறியது]	சா.கொடு.-அரன் -இருடி, சா.கார.-இரு பன்றிகள் கூடி நின்றதைக் கண்டு தாமதமாக மலர் கொண்டு சென்றது. சா.நீக்.-வீமன், [வீமன் மேல் பன்றி பாய்ந்தது. வீமன் அதன் கழுத்தைத் திருகியதும், அது அந்தணனாக மாறியது]	கார்மேக முனிவன், சா.கார.-சமிதை தாமதமாகக் கொண்டு சென்றது. சா.நீக்.-வீமன். [தம்மை அச்சுறுத்திய பன்றியின் கழுத்தை வீமன் திருகியதும், அது அந்தணனாக மாறியது]
10. சிங்கம் என்ற சிம்புள் பறவை	643-645 சா.பெற்.- உமையவளின் அடியவள், சா.கொடு. சிவபெருமான் மனைவி- உமையவள் சா.கார.- சிம்புள் உமையவள் வளர்த்த கிளியைக் கொன்றது சா.நீக். [அதன் சாபம் நீங்கவில்லை.]	256, 257 சா.பெற்.- வாயுபகவானுக்கு அடியவள், சா.கொடு.- சிவபெருமானின் மனைவி- உமையவள் சா.கார. உமையவள் வளர்த்த கிளியைக் கொன்றது, சா.நீக். [சாபம் நீங்கவில்லை]	இல்லை	ப.168 சா.பெற்.-இல்லை சா.கொடு.- உமையவள், சா.கார.- உமையவள் வளர்த்த வாசமுள்ள பிள்ளையை வதைத்தது, சா.நீக்.[சாபம் நீங்கவில்லை.]

◆ நிகழ்ச்சிகளின் ஒப்பீட்டு முடிவுகள்

பாண்டவர்கள் காட்டில் சென்ற வழியில், அவர்களால் பலர் சாப நீக்கம் பெறுகின்றனர். சாபநீக்கம் பெற்ற நிகழ்ச்சிகள் எல்லா மாவிந்த நூல்களிலும் இடம்பெற்றுள்ளன.

1. பா. மா. கூறும் ஒன்பது சாப நீக்க நிகழ்ச்சிகளுள் அட்டவணை - 4 இல் உள்ள எண் 1, 2, 3, 6, 8, 9 ஆகிய ஆறு நிகழ்ச்சிகள் பெருந். இல் இடம்பெற்றுள்ளன.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

2. பா.மா. கூறும் ஒன்பது சாபநீக்க நிகழ்ச்சிகளும் தஞ். இல் இடம்பெற்றுள்ளன.

3. பா.மா. கூறியிருக்கும் ஒன்பது சாபநீக்க நிகழ்ச்சிகளில் வைகு. இல் 1, 2, 3, 4, 5, 9 ஆகிய எண்களிலுள்ள ஆறும் இடம்பெற்றுள்ளன.

4. சிங்கம் என்னும் பறவையின் சாபம் பற்றித் தஞ். கூறவில்லை.

◆ சாபம் பெற்றவர்

சாபம் பெற்றவர்களில் அறுவர் ஆண்கள் (1, 2, 5, 7, 8, 9); மூவர் பெண்கள் (3, 4, 6).

ஆண்களில் ஐவர் அந்தணர்கள். இவர்கள் பெண்களைக் கண்டு காமுற்றதாலும், விலங்குகள் கூடி நின்றதைக் கண்டு சபலமுற்றதாலும், குறித்தகாலத்தில் கொடுத்த பணியைச் செய்யாமையாலும் சாபம் பெறுகின்றனர்.

◆சாபம் கொடுத்தவர்

பெண்களுக்குச் சாபம் கொடுத்தவர் அவர்களின் கணவன்மார் என்பதும் ஆடவர்க்குச் சாபம் கொடுத்தவர் பெரும்பாலும் அவர்களது தந்தை, முனிவர் முதலியோர் என்பதும் தெரிகிறது.

◆ சாபநீக்கம் பெற்ற நிகழ்ச்சிகளின் முடிவுகள்:

1. பாம்பு 2. மலை 3. குதிரைமுகப்பெண் 4. ஆறு 5. சிங்கம் 6. அரக்கி 7.யானை 8.புலி 9.பன்றி முதலியன சாபத்தால் பெற்ற உருவங்களாகும்.

2. இவற்றுள் பாம்பு, மலை, குதிரைமுகப்பெண், பன்றி ஆகிய நான்கின் சாப நீக்க நிகழ்ச்சிகளும் எல்லா மாவிந்த நூல்களிலும் காணப்படுகின்றன.

3. ஆறு, சிங்கம், யானை ஆகியவற்றின் சாபநீக்கம் பற்றிப் பெருந். அரக்கி, யானை, புலி ஆகியவற்றின் சாப நீக்கம் பற்றி வைகு., சிங்கம் என்னும் பறவையின் சாப நீக்கம் பற்றித் தஞ். ஆகியவை குறிப்பிடவில்லை.

4. அந்தணர் ஆற்றவேண்டிய பணி வேதம் ஓதுதல், ஓதுவித்தல், யாகஞ் செய்தல், யாகஞ் செய்வித்தல், ஈதல், ஏற்றல் என்னும் அறுவகைத் தொழிலாகும். முனிவர்க்குத் தொழில் செய்ய வேண்டிய அந்தணர் தன் வேலையைச் சரியாகச் செய்யாததால் அத்தொழில் தடைப்படுகிறது. அதன் கரணமாகத் தம் தந்தை அல்லது முனிவர்களால் அந்தணர் சாபம் பெறுகின்றனர். சாபமடைந்தமையால் ஏற்பட்ட துன்பத்தால் அவர்கள் அத்தவறை மீண்டும் செய்யாது அறநெறியோடு வாழவேண்டும் என்னும் நீதி உணர்த்தப்படுகிறது. அந்தணர் என்பவர் எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகுபவர் ஆவார்.

5. மகளிர் ஒழுக்கக் குறைவாலும், கருத்தூன்றிச் செயல்படாமையாலும் சாபம் பெறுகின்றனர். அந்தச் சாபம் பெறும் நிகழ்ச்சி மூலம் இறைவழிபாட்டுக்குரிய செயல் செய்யுங்கால் போக உணர்வு கூடாது என்பதைச் சுட்டுகிறது. இதன் வாயிலாக ஒழுக்கத்தின் உயர்வு

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

வலியுறுத்தப்படுகிறது. பெண்கள் ஆடவர்க்குக் கட்டுப்பட்டவராக இருத்தல் வேண்டும் என்னும் எண்ணம் சமுதாயத்தில் இருந்ததை இது பிரதிபலிக்கிறது.

6. மேலே கூறியவற்றுள் வீமனால் சாபநீக்கம்[1] பெற்றவர்களே மிகுதி. சாபநீக்கம் வீமன் அல்லாது பிறரால் ஏற்படினும் அத்தடைகளைத் தகர்ப்பவனும், வலிமை மிக்க விலங்குகளின் சாபத்தை நீக்குபவனும் வீமன் என்பது குறிப்பிடத்தக்கது. வீமனின் வலிமை கருதி அவ்வாறு அமைத்திருக்க வேண்டும்.

6. மாவிந்த நூல்கள் 'சிங்கம்' என்னும் பறவையின் சாபநீக்கம் பற்றிக் குறிப்பிடவில்லை. உயிரைக் கொலை செய்யக் கூடாது என்பதை வலியுறுத்திக் கூறும் வகையில் அதன் சாப நீக்கம் இடம்பெறவில்லை போலும்.

◆சாபம் நீங்கிய விதம்

1. பாண்டவர்களின் மேனி பட்டவுடன் சாபம் நீங்குவதாகச் சில சாப நீக்கம் உள்ளது. – மென்மையான தழுவுதல், நீந்துதல் போன்ற அணுகுமுறையால் சாபநீக்கம் பெற்றவை – குதிரைமுகப்பெண் (தழுவுதல்), ஆறு- (நீந்துதல்) ஆகியவையாகும்.

2. அடக்கப்பெற்றதால் சாபநீக்கம் பெற்றது – யானை

3. அழித்ததால் சாபநீக்கம் பெற்றவை – பாம்பு, மலை, அரக்கி, சிங்கம், புலி போன்றவை.

ஒருவர் தாம் செய்யும் தவற்றை உணருங்கால், அது மன்னிக்கப்பட்டு அவர் திருந்தி வாழ வழிவகுக்கும் நிலை உண்டு என்பதை அறிவுறுத்தும் வகையில் மாவிந்த நூல்கள் சாபநீக்க நிகழ்ச்சிகளைச் சேர்த்திருப்பதாகத் தோன்றுகிறது. எனினும் இவை பாண்டவர்களின் சீரிய பண்பையும் சிறப்பையும் உணர்த்தும் வகையில் அமைந்துள்ளன என்று கொள்ளலாம்.

மாவிந்த நூல்கள் ஒப்பீடு 4

9.6.4 பாண்டவர்களை அழைத்தவர்கள் அட்டவணை -6

பாண்டவர்களின் பயணத்தின் போது அவர்களை அழைத்தவர்கள் - அந்நிகழ்ச்சிகளிடையே உள்ள ஒற்றுமை வேற்றுமை

[அட்டவணையினுள் உள்ள எண் பாடல் எண்ணைக் குறிக்கும்]

நிகழ்ச்சிகள்	பாரத மாவிந்தம்	பெருந். பார. (மாவிந்தம்)	தஞ்.சரசு. மாவிந்தம்	வைகு. அம்மானை.
1) ஆனைமுகன், பூமியை ஆளுமாறு பாண்டவர்களை வேண்டியது	253	105, 106	192 (முனிவர் அழைத்ததாக உள்ளது)	இல்லை
2) நாக மடந்தையர்	273	133, 141	266 – 269	பக் 98- 99

[1] வீமனால் சாபநீக்கம் -பாம்பு, மலை, யானை, பன்றி ஆகியவை; தருமனால் சாப நீக்கம் – அரக்கி, சிங்கம், புலி போன்றவை; பாண்டவர் ஐவரால் சாப நீக்கம் பெற்றது– ஆறு; அர்ச்சுனனால் சாப நீக்கம் பெற்றவள் குதிரைமுகப்பெண்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அழைத்தது				
3) கருடன் அத்தினபுரம் செல்லுமாறு தூண்டியது	528 – 534	177 – 180	1060 – 1065	பக் 139- 140
4)சந்திரகாந்த மலைக்கு வந்த மகளிர் பொன்னுலகிற்கு அழைத்தது	551 - 555	196 - 202	1082, 1083	ப.145
5) வானரத் தலைவன் தனது நாட்டைத் தருவதாகக் கூறியது	559	203 – 205	1088 - 1094	பக் 149- 150
6) பூத முனிவர் தம் மகளிரை மணம் செய்து வைப்பதாக உரைத்தது	575	214, 215 (முனிவர் பெயர் இல்லை)	இல்லை	இல்லை
7) புருடமா மிருகம் இந்திர சாலைக்குத் தலைவன் ஆக்குவேன் என்றது	636	254, 255	இல்லை	ப.166
8)சிங்கம் என்ற பறவை நகரம் அமைத்துத் தருவதாகவும், நங்கையரை மணம் செய்து கொடுப்பதாகவும் கூறியது	664, 647	257	இல்லை	ப.169
9)தேவகன்னியர் தேவலோகத்திற்குத் தலைவன் ஆக்குவோம் என்று இயம்பியது	654, 655	268 - 277	1254 - 1256	ப.148
10) தெய்வ மடந்தையர் முடிசூட்டுவதாக வேண்டியது	இல்லை	இல்லை	இல்லை	ப.171

மேலே கொடுக்கப்பெற்றிருக்கும் அட்டவணையில் 1, 2, 3, 4, 5, 7, 8, 9 ஆகிய எண்களில் காணப்படும் நிகழ்ச்சிகள் எல்லா மாவிந்த நூல்களிலும் இடம்பெற்றுள்ளன. அட்டவணை எண் 7 – இல் காணப்படும் நிகழ்ச்சி தஞ்சை சரசுவதி மகால் மாவிந்தத்திலும் வைகுந்த அம்மானையிலும் இடம்பெறவில்லை. எண் 10 – இல் உள்ள தெய்வப் பெண்டிர் பாண்டவர்களை அழைத்ததாக வரும் நிகழ்ச்சி வைகுந்த அம்மானையில் மட்டுமே காணப்படுகிறது.

பாண்டவர்களின் பயணத்தின்போது காட்டில் பலர் அவர்களைத் தங்கள் நாட்டை ஆளுமாறு வேண்டுகின்றனர்; சிலர் தங்கள் மகளிரை மணம் செய்து வைப்பதாக வினவுகின்றனர். பாண்டவர்கள் தம்மை அழைத்தவர்களின் வேண்டுகோளை மறுத்துரைத்தது, மண்ணாசை, பெண்ணாசையின்றி வைகுண்டம் செல்வதையே தம் ஒரே நோக்கமாகக் கொண்டிருந்ததைச் சுட்டுகின்றன. இந்நிகழ்வுகள் பாண்டவர்களின் மனத்திண்மையைப் புலப்படுத்தும் வண்ணம் அமைந்துள்ளன.

Digitization by Hindu-Heritage Foundation of America, HHFA(USA)

9.7. பாரத நூல்கள், மாவிந்த நூல்கள் இவற்றை ஒப்பிட்டு ஆய்ந்த முடிவுகள்:

வியாச பாரதத்தைப் போன்றே நல்லாப்பிள்ளை பாரதமும் அரங்கநாதக் கவிராயர் பாரதமும் அமைந்துள்ளன. பின்னர் எழுந்த மாவிந்த நூல்கள் அடிப்படைக் கதைக் கருவைத் தவிரப் பிற நிகழ்ச்சிகளில் வேறுபட்டு விளங்குவது தெரிகிறது. பாரத நூல்கள் எழுந்த பின்னர் பாரதத்தின் பிற்பகுதியைக் கூறும் நூல்கள் பல தமிழில் தோன்றியுள்ளன. அவை தம் நாட்டில் வழங்கி வந்த பல்வேறு கதைகளைச் சேர்த்துள்ளன என்று உணர முடிகிறது. பாரத மாவிந்த நூல்களிலிருந்து வைகுந்த அம்மானை தோன்றியிருக்கக்கூடும். மாவிந்த நூல்களை இயற்றிய ஆசிரியர்கள் இன்றியமையாத கதைக்கருவை அடிப்படையாகக் கொண்டு மேலும் சில உட்கதைகளைச் சேர்த்தும் சிலவற்றை மாற்றியும் அமைத்திருக்கின்றனர்.

1. கண்ணனுக்கு நேர்ந்த சாபங்கள் இரண்டு. ஒன்று காந்தாரி இட்டது. மற்றொன்று துர்வாச முனிவர் இட்டது. வி.பா., த.பா. ஆகியவை யாதவகுலம் அழியும்படி கண்வர், விசுவாமித்திரர், நாரதர் ஆகியோர் சாபம் கொடுத்ததாகக் கூறுகின்றன. துர்வாச முனிவர், சாபம் கொடுத்ததாக மாவிந்த நூல்கள் குறிப்பிட்டுள்ளன. 'கண்ணனுக்கு உள்ளங்கால் வழி உயிர் போகும்' என்று இடப்பெற்ற சாபத்தின் அடிப்படையில், (மாவிந்த நூல்கள்) வேடனின் அம்பு கண்ணனின் கால்விரலில் பட்டு, அவர் பரமபதம் அடைந்ததாகக் கூறுகின்றன என்று கொள்ளலாம்.

2. துரோபதி, சகாதேவன் முதலியோரின் இறப்புக்குக் காரணமாகத் தரப்படும் செயல்கள், எச்செயலுக்கும் ஓர் எல்லை உண்டு, அவ் வெல்லையை மீறினால் அது குற்றமாகக் கருதப்படும் என்பதை உணர்த்துகின்றன.

3. மாவிந்த நூல்கள் கூறும் புதிய செய்திகளை நோக்கும்போது, ஆசிரியர்கள் சுவைபட அமைக்கும் நோக்கில் சில உட்கதைகளை இணைத்துள்ளனர் என்று கருதத் தோன்றுகிறது.

4. பாண்டவர்களின் பயணத்தின்போது அவர்களுக்குச் சிலர் வழிகாட்டியுள்ளனர். இச்செயல், அவர்கள் மேற்கொண்ட குறிக்கோளை அடையச் செய்வதற்கு உதவும் வகையில் அமைந்துள்ளது.

5. தருமனைச் சோதிப்பதற்காக, எமதர்மன் நாய் உருவில் வந்த உட்கதை, ஆன்மா, எமதர்மன், நாய் ஆகியவற்றிற்கிடையே உள்ள தொடர்பைக் காட்டும் நிலையில் அமைந்துள்ளது. இந்தத் தொடர்பு பற்றி என்சைக்ளோ பீடியா ஆப் ரிலிஜியன் அண்ட் எத்திக்ஸ்[1], விரிவாகக் கூறுகின்றது. அவை வருமாறு:

1. நாய்கள் எமதர்மனின் தூதர்களாகவும் அவனுடன் இருப்பதாகவும் கருதப்பட்டன. இருக்கு வேதம், சொர்க்கத்திற்குச் செல்லும் வழியில் இரு நாய்கள் இருப்பதாகவும் எமதர்மனின் தூதர்களாக அவை மனிதர்களிடையே அலைந்து திரிவதாகவும் கூறுகிறது.

2. தைத்திரிய சம்ஹிதா என்னும் நூல் இரு நாய்களையும் சொர்க்கத்தின் காலம் கணக்கிடும் சூரியனோடும் சந்திரனோடும் தொடர்புபடுத்திச் சொல்கிறது.

3. நார்ச் மித்தாலஜி என்னும் நூல், 'மெங்கிலாட்' என்ற கன்னி உறங்கும்போது ஒரு நாய் பகலிலும் மற்றொன்று இரவிலுமாக ஒன்று மாற்றி ஒன்று உறங்குவதாகக் குறிப்பிடுகிறது. இக்கதைக்கும் இருக்கு வேதம் கூறும் நிகழ்ச்சிக்கும் தொடர்பு இருப்பதாகத் தெரியவில்லை.

[1] தொகுதி 4, பக்.316-31.

Digitization by Hindu-Heritage-Foundation of America (HHFA)

எனினும் இதன் அடிப்படை எண்ணம், சூரியனும் சந்திரனும் வானத்தில் ஒன்று மாற்றி ஒன்று செல்வதை அடிப்படையாகக் கொண்டுள்ளது. நரகம் இருள் சூழ்ந்த இடம். சூரியனும் சந்திரனும் ஒளிமயமானவை. எனவே இரண்டும் சொர்க்கத்திற்குச் செல்லும் வழியில் இருந்து ஒன்று மாற்றி ஒன்று பகலும் இரவும் மனிதனின் மரணத்தைக் கவனிப்பதால், இவை சொர்க்கத்திற்குச் செல்ல வேண்டியவர்களைத் தேர்ந்தெடுப்பதாக எண்ணியிருக்கின்றனர் என்று ஊகிக்கத் தோன்றுகிறது.

மேலே கூறியவற்றிலிருந்து நாயை இறந்தவர்களின் ஆன்மாவோடும் எமதர்மனோடும் தொடர்புபடுத்திப் பேசும் இயல்பு எல்லா நாட்டினரிடமும் நிலவி வந்துள்ளது என்பதை உணரமுடிகிறது. எனவே எமதர்மன் நாயின் உருவத்தில் வந்து தருமனைச் சோதித்ததாக ஆசிரியர் சோமன் கூறியிருப்பது பல நாட்டுத் தொன்மையான மரபுகளுடன் ஒப்புமையுடையது என்பது குறிப்பிடத்தக்கது.

4.தருமன் கவுசல ஆற்றைக் கடக்கும் நிகழ்ச்சி ஆன்மாவுக்கும் ஆற்றுக்கும் இடையே உள்ள தொடர்பைக் குறிப்பிடும் வகையில் அமைந்துள்ளது. மனிதன் இறந்த பின்பு அவனது ஆன்மா, ஒரு நீர்நிலையைக் கடந்து செல்ல நேரிடும் என்னும் எண்ணம் உலகெங்கும் காணப்படுகிறது என்று என்சைக்ளோ பீடியா ஆப் ரிலிஜியன் அண்ட் எத்திக்ஸ்[1] என்னும் கலைக்களஞ்சியம் குறிப்பிடுகிறது.

5. இங்கு ஆறும் பாலமும் நல்லவர்களைத் தேர்ந்தெடுக்கும் அளவுகோலாக அமைந்துள்ளன. காசிக்கலம்பகம் என்னும் நூல், வைதரணி என்னும் ஆற்றைக் கடந்து செல்ல வேண்டும் என்று சொல்வதாகத் தமிழ்ப் பேரகராதி குறிப்பிடுகிறது. இறந்த ஆன்மா பசுவின் வாலைப் பிடித்துச் சென்றால் மட்டுமே இரத்தம் நிறைந்த ஆற்றைக் கடக்க இயலும் என்ற நம்பிக்கை இந்தியாவில் சில பகுதிகளில் நிலவுகிறது. சாலமன் தீவுகளிலுள்ள மக்களிடையே ஆன்மா, 'கோலா பாப்பரோ' என்ற குளத்தைத் தாண்டி செல்ல வேண்டும் என்ற நம்பிக்கையும், நியூசீலந்தில் 'வைரோதேன்' என்ற ஆற்றை கடக்க வேண்டும் என்ற நம்பிக்கையும் காணப்படுகின்றன. கிறித்தவர்களிடமும் இந்த நம்பிக்கை[2] நிலவுகிறது. இவ்வடிப்படையில் பாரத மாவிந்தமும் தருமன் ஒரு நதியைக் கடந்து செல்வதாகக் கூறுகிறது. இவற்றிலிருந்து பூமியில் உள்ள உயிர்கள் இறந்தபின் மேலே செல்லும்போது ஒரு நீர் நிலையைக் கடந்து செல்ல வேண்டியிருக்கும் என்னும் நம்பிக்கை மக்கள் மனத்தில் வேரூன்றியுள்ளது என்று அறிய முடிகிறது.

6. மாவிந்த நூல்கள் பாகவத, இராமாவதாரக் கதைகளைக் கிளைக்கதைகளாகக் கொண்டுள்ளன. இந்நூலைப் படிப்போர் எல்லாக் கதைகளையும் ஒரே நூலில் படிக்க இயலும் என்ற நோக்கத்துடன் இங்ஙனம் படைக்கப்படனவோ என்று நினைக்கத் தோன்றுகிறது. பாரத மாவிந்தம் சிறு காப்பியம் போல் தோன்றினாலும் பெருங்காப்பியமான இராமாவதாரக் கதையையும் தன்னகத்தே கொண்டதாய் விளங்குகிறது. பாண்டவர்கள் அவர்களின் துறக்கப் பயணத்தில் ஏற்பட்ட தடைகளை வென்று இறுதியில் இறைவனடி சேர்கின்றனர். இது இறைவுணர்வோடு செல்பவர்கள் இடர்களிலிருந்து விடுபட்டு, இறைவனை அடைவது திண்ணம் என்பதை வலியுறுத்துகிறது. இறைவனை நாடிச் செல்வோர்க்கு வழியில் ஏற்படும் சோதனைகளை வென்றவர்கள் பற்றி வேறு பல நூல்களும்[3] குறிப்பிட்டுள்ளன.

---

[1] தொகுதி 2 , ப. 337

[2] மேற்படி பக். 337- 338

[3] அவை ஜான் பனியன் எழுதிய, பில்கிரிம்ஸ் புரோகிரஸ், மில்டன் எழுதிய சொர்க்கத்தின் மீட்சி கடோபநிடதம் முதலியனவாகும்.

Digitization by Hindu Heritage Foundation of America, HHFA(USA)

பாண்டவர்களால் பலர் சாபநீக்கம் பெறும் நிகழ்ச்சி முன்னர் கூறியதுபோல் அவர்களுடைய பண்பைச் சிறப்பித்துக் கூறவும், தவறிழைப்பவர் தண்டனைக்குள்ளனாலும், அவர்கள் மீண்டும் திருந்தி வாழ வழி உண்டு என்பதைக் காட்டும் வகையிலும் அமைந்துள்ளது.

ஜான்பனியனின், பில்கிரிம்ஸ் புரோகிரஸ் [1] திருப்பயணி சோதனைகளை வென்றதை விளக்குகிறது. மில்டனின், சொர்க்கத் தின் மீட்சி ஆதாமுக்கு ஏற்பட்ட சோதனைகளை அவன் வென்றதாகக் காட்டுகிறது. எமதர்மன் நசிகேதனைச் சோதித்ததையும் அவன் அவற்றை வென்றதையும் கடோபநிடதம்[2] விளக்குகிறது.

கடவுள் தம்மை நாடி வரும் அடியவர், வீடுபேறு அடைவதற்குரிய தகுதி உடையவர் தாமா என்பதை அறிய அவர்களை நன்கு சோதித்து அதன் பிறகே அவர்களை ஏற்றுக்கொள்கிறார் போலும்.

7. மாவிந்த நூல்கள், வியாசபாரதம், நல்லாப்பிள்ளை பாரதம், அரங்கநாதக் கவிராயர் பாரதம் ஆகியவற்றைவிட, மிகச் சிறப்பாகப் பாண்டவர்களின் துறக்கப் பயணத்தைக் காட்டுகின்றன. அவை ஏற்புடைய இடங்களில் அதற்கேற்ற நிகழ்ச்சிகளைத் தந்தும் அடியொற்றியும் செல்கின்றன. துறக்கப் பயணம் மேற்கொண்ட அனைவரும் பயணத்தின் பலனைப் பெற்றதாகப் பாடி ஆசிரியர் நூலை நிறைவு செய்திருக்கின்றார். எனவே இவை வீடுபேற்று நூல்களாக விளங்குகின்றன. அறம், பொருள், இன்பம், வீடு அடைதல் ஆகியவை நூற்பயனே.

நிறைவுரை : இதுகாறும் கூறியவற்றிலிருந்து மாவிந்த நூல்களை உயர் குடியினர், ஓய்வு அதிகம் உள்ளவர், வைதீகர், பரம்பொருளைப் பற்றிக் கவலைப்படுவோர் முதலியோர் விரும்பிக் கேட்டிருக்க வேண்டும் என்பது புலானாகிறது. கி.பி. 15, 16, 17, 18 ஆகிய நூற்றாண்டுகள் வீடுபேறு பற்றிக் கூறும் புராணம், தோத்திர சாத்திரம் முதலிய நூல்கள் மிகுதியாகத் தமிழிலக்கியத்தில் எழுந்த காலம் ஆகும். இக்காலத்தே அகப்புற இலக்கியங்கள் எழவில்லை. அந்நியர் ஆட்சி, அந்நிய மதங்களின் வரவு, முதலியவற்றால் அமைதியற்ற அவலநிலையில் மக்கள் வாழ்ந்தனர். அவர்கள் ஈடேற நம் நாட்டுப் பழம்பெரும் இதிகாசப் புராணக் கதைகளைப் பல வகையில், கவிஞர்கள் மெருகிட்டு அழகுபடுத்தி இயற்றியிருக்கின்றனர். இந்நிலையில் தோன்றியுள்ள நூல்களில் பாரத மாவிந்தமும் சிறப்பான இடம்பெறுகிறது.

****

[1] என்சைக்ளோ பீடியா ஆப் பிரிட்டானிக்கா, தொ.5, ப. 482.

[2] சுவாமி தத்வானந்தா, உபநிஷாடிக் ஸ்டோரீஸ் அண்ட் சிக்னிபிக்கனஸ் (பக். 25-33)

Digitization by Hindu-Heritage-Foundation of America-HHFA(USA).

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பாரத மாவிந்தம்

பாயிரம்

(பாயிரத்தில்[1] கடவுள் வணக்கம், குரு வணக்கம், அவையடக்கம், நூல் நுவல்பொருள், நூலாசிரியர் பெயர், நூலாசிரியரின் ஊர்ப் பெயர், நூலைச் செப்பமிட்டவர் பெயர் முதலியவை இடம்பெற்றுள்ளன.).

காப்பு
கலிவிருத்தம்

உம்ப ருக்கு முலகுக்கு மொத்துள
தம்ப [1]மாகித் தரித்துடன் [2]றாங்குவ
பைம்பொன் மேருவிற் பாரதந் தீட்டிய
கம்ப [3]மேய்களி யானை[●] கழல்களே

1.மாகி,சு.1+3+4; மாகு,சு. 2*2.றாங்குவ,சு.1+3+4; தாங்கியப், சு.2* 3.மேய்களி, சு.1+2+3; மேனிக்களி, சு.4*

பொ: (வியாசர் கூறிய) பாரதக்கதையைப் பொன்னிறமான மேருமலையில் எழுதிய விநாயகரின் திருவடிகள், விண்ணுலகிற்கும் மண்ணுலகிற்கும் ஒத்த தூணாகி, அடியார்களை அந்தத் தூணில் பிணைத்து நிலை பெற்றுத் தாங்குவனவாம். இதில், கழல் தூணாக உருவகம் செய்யப்பெற்றுள்ளது.

ஒப்: அடி 3. முனிராசன் மாபாரதஞ் சொன்ன நாள், ஏடாக மாமேரு வெற்பாக வங்கூர் எழுத்தாணி தன், கோடாக எழுதும் பிரானை, வில். காப்பு.

அடி 4. கம்பம் – "கம்பமத கடகளிற்றான்" விவேக சிந்தாமணி.132. (காப்புச் செய்யுள்)

பாயிரம் 1-21
கடவுள் வணக்கம்
சிவபெருமான் துதி
எழுசீர் ஆசிரிய விருத்தம்

1. திரும கட்கிறை, சதுமு கத்திறை
[1]தெளிவி லாமரு [2]ணிலையரா
[2]யருநி லத்துயர் ககன மெட்டியு
மடிமு டித்தலை யறியொணா
விருவ ருக்குமுன் னடுவு தித்திடு[ψ]
மெரிய ழற்கட வுளர்சரண்
மரும லர்கொடு துதிசெய் கிற்பவர்
வான மீதுறை தேவரே.

---

[1] பாரத மாவிந்தம், கடவுள் வணக்கம் (முதல் ஏடு).
கடவுள் வணக்கம், பாயிரம் அவையடக்கம், (இரண்டாம் ஏடு) சு.1; மாவிந்தப் பாயிரம், சு.2; ஹரிஓம் ஸ்ரீமகாபாரதம் மாவிந்தம் சிறப்புப் பாயிரம், சு.3; பாரத மாவிந்தம், கடவுள் வணக்கம், பாயிரம் அவையடக்கம், சு.4*
[●] விநாயகர் மேருமலையில் பாரதக்கதை எழுதியது பார்க்க: பா.மா.13.
[ψ] சிவபெருமானின் அடிமுடிதேடியது பார்க்க.பா.மா.12.

Digitization by Hindu-Heritage-Foundation of America | HFA(USA)

1.தெருளிலா,சு.1;தெளிவிலா,சு.2+3+4*2.ணிலையரா,சு.1+2;ணிலை மையா, சு.3+4*3.யருநி, சு.1+3+4; யருள்நி, சு.2*

பொ: திருமகள் கேள்வனான திருமாலும், நான்முகனும் தெளிவில்லா மயக்கநிலை உடையோராய் (சிவபெருமானின்) அடியும், முடியும் கீழ்நிலத்திலும் ஆகாயத்திலும் தேடியும் காண இயலாது நிற்க, இருவருக்கும் முன்பாக நடுவே அழல் உருவாய்த் தோன்றிய சிவபெருமானை வணங்குபவர் தேவர்களாவர்.

அ.வி: திருமட்கு இறை - திருமால், சதுமுகத்து இறை - நான்முகன், தெருள்-தெளிவு, மருள்-மயக்கம், ககனம் - ஆகாயம், எரியழல் கடவுளர் - சோதியாக நின்ற கடவுளான சிவபெருமான், சரண்-திருவடி, மரு-மணம். கடவுளர்- மரியாதைப் பன்மை, ஏகாரம் தேற்றம்.

ஒப். "அலரவனும் மாலவனும் அறியாமே அழல் உருவாய்" திருவா. 260.

(1)

2. கறைமி டற்றனை;@ யிரு[1] ளறத்தெறு
காலகால னை; மாலைநீள்
பிறைமு டித்துள♦ சடைய னைத்திரள்
பேயோ டாடிய நேயனா
மறைமு தற்பொரு ளெனுமொ ருத்தனை
மாது பாகனை♣ யாதியா
மிறைவ னைப்பரி வொடுதி னைப்பவர்
யாவ ரேயவர் தேவரே.

1.யிருளத்தெறு,சு.1;யிருநிலத்தெழு, சு.2; யிருணிறத் தெழு, சு.3+4*

பொ: நஞ்சுகொண்ட கழுத்துடைய சிவபெருமானை, அஞ்ஞானத்தை அழிக்கும் காலனுக்குக் காலனாக விளங்குபவனை, அந்திநேர நிலவைச் சூடிய சடைமுடி உடையவனை, பேய்க் கூட்டத்தோடு ஆடிய அன்பனை, வேதமுதல்வனை, உமையை இடப்பாகத்தில் கொண்டவனை, முதற்கடவுளை அன்போடு மனத்தில் நினைத்து வணங்குபவர் தேவர்களாவர்.

அ.வி: கறைமிடற்றன்- நஞ்சுகொண்ட கழுத்துடைய சிவபெருமான், இருள்-அஞ்ஞானம்,தெறு-அழி, காலகாலன்-காலனுக்குக் காலனாக விளங்கும் சிவபெருமான், மாலைநீள்பிறை - அந்திநேரத்தில் வரும் நிலவு.

ஒப்: காலகாலன் - "காலகாலனைக் கம்பன் எம்மானை" சுந்.தே.VII. 61-1. மாலை நீள்பிறை- "அந்திப்பிறை அணிந்து"அப்.தே.IV 92-1.[1]

(2)

@ கறைமிடற்றன் பார்க்க:பா.மா.379.
♦ பிறை முடித்துளது பார்க்க: பா.மா.68, 308, 661, 691.
சிவபெருமான் பிறை சூடியது- சந்திரன், தக்கனின் இருபத்தேழு பெண்களை மணந்தான். அவர்களில் உரோகிணி, கார்த்திகை என்ற இருவரைத் தவிர மற்றவரை அவன் புறக்கணித்ததால் தக்கன் அவனைத் தேய்ந்து போகும்படிச் சபித்தான். சாபம்பெற்ற சந்திரன், சிவபெருமானைச் சரணடைந்தான். எனவே அவர் சந்திரனுடைய ஒரு கலையைத் தன் தலையில் வைத்தார்.
♣ மாதுபாகன் பார்க்க: பா.மா.310, 376, 725.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பார்வதி துதி

3. அமலை யுத்தமி,. சகல கற்பித
வகில வுற்பவி, நிகரிலா
விமலை யத்தருள் பரம சத்தி, சொல்
விதியி னுக்கொரு விதியதாஞ்
சமைய தற்பரி, யரனி டத்துறை
தமனி யக்கொடி[⊕] யுமையெனுங்
குமரி [1]சுத்தமெய் வினவு சித்திகள்
குறைவ றத்தரு மிறைவியே.

1. சுத்ததை, சு.1+3+4; சுத்தமெய், சு.2*

பொ: மனத்தில் மாசு இல்லாதவளும், உலகு தோன்றக் காரணமானவளும், உடல் குற்றமற்றவளும், சிவபெருமானின் உள்ளே இருந்து இயங்கும் சக்தியானவளும் சொல்லுகின்ற விதிக்கு ஒரு விதி ஆகியவளும், சமயங்களைத் தோற்றுவிப்பவளும், சிவபெருமானின் இடப் பாகத்தில் இருப்பவளும், தூய்மைத் தருபவளும், குமரியானவளுமாகிய பார்வதி நாம் கேட்கும் வரங்களைக் குறைவின்றித் தரும் அன்னையாவாள்.

அ.வி: அமலை - மனத்தில் மாசு இல்லாதவள், அகில உற்பவி-உலகத்தை உற்பத்தி செய்பவள், விமலை-உடற்குற்றம் அற்றவள், அத்தருள்-சிவபெருமானுள் விளங்குபவள்; விதி-வேதம்; சமையதற்பரி-சமயங்களைத் தோற்றுவித்துக் காப்பவன், தமனியக்கொடி - பொற்கொடி, சித்தி-வரம்.

ஒப்:விதியினுக்கு - "விதிக்கும் விதியாகும் என்விற் றொழில்" கம்.அ.ந. நீங்.135.

(3)

யானைமுகன் துதி

4. விடைந டத்திய வரனி டத்துறை
[1]விரகி யுத்தமி, யுரகநீள்
படந டித்தவ[1♥] னுடனு தித்தவள்
பரினி விற்பெறு குமரனாங்
குடவ [2]யிற்றிடைக் கடலை யெட்பொரி
கொளவி ருப்புட னொருகைநீள்
கடத டக்கரி வதன வித்தகர்
கழலி ணைத்துணை கருதுவாம்.

1.விரகி,சு.1+3+4;விமலி,சு.2* 2.வயிற்றிடை, சு.1+3+4; வயிற்றிட, சு.2*

பொ: நந்தி வாகனனாம் சிவபெருமானின் இடப்பக்கம் உறைகின்ற இன்பமளிக்கும் உத்தமி உயர்ந்த பண்புடையவள், காளிங்கன் என்ற பாம்பின் படத்தில் ஆடிய கண்ணனின்

⊕ உமையவள் அரன் இடத்து உறைதல் பார்க்க: பா.மா. 3, 4.
♥ கண்ணன் பாம்பின் மீது நடனமாடியது, பார்க்க: பா.மா.525, 744.

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA).

உடன்பிறந்தவள் அன்போடு ஈன்ற மகனாகிய விநாயகன், குடம்போன்ற தன் வயிற்றிலே கடலை, எள்பொரி இவற்றை இட, விருப்பத்தொடு துதிக்கையை நீட்டும் மதம்பொழியும் பெரிய கையையுடைய அழகிய யானைமுகத்தவரின் திருவடிகளைத் துணையாக நினைப்போம்.

அ.வி: விடை–இடபம், விரகி- திறமையுடையவள், உரகம் - காளிங்கன் என்னும் பாம்பு, நடித்தவன்- நடனமாடிய கண்ணன், குடவயிறு– பானை வயிறு.

ஒப்: "படவர வுச்சி தன்மேல் பாய்ந்து நடங்கள் செய்து" நாலா. 13 (4)

முருகப்பெருமான் துதி

5\. சமர முற்றிய வசுரர் மெய்ப்படை
தரைப்படக் கிரியு ருவவே
யமரர் நற்பதி குடிபு கப்பணி
யயிற்ற ரித்தகை [1]மயிலினான்[ψ]
[2]விமைய வெற்பினன் மகள்சொ லற்புதை
யிளைய புத்திரன் வளமிகுங்
குமர [3]வித்தகன் றனைநி னைப்பவர்
கொடுவி னைத்துய ரகலுமே.

1.மயிலினான்,சு.1;மயிலனா,சு.2+3+4*2.விமைய,சு.1;மிமைய,சு.2+3+4* 3.வித்தகன் றனை, சு.1; வித்தகனென,சு.2+3+4*

பொ: போரிடும் அசுரர்களின் காவல்படை அழியக் கிரௌஞ்சமலையைத் தன் வேலால் பிளந்து, தேவலோகத்தில் தேவர்களைக் குடிபுகச் செய்து, வேல் ஏந்திய கரமுடைய மயில் வாகனன், மலையரசன் மகள் சொல்வதற்கு அற்புதமான பார்வதியின் இளைய மகன் வண்மை மிகுந்த முருகப் பெருமானை நினைப்பவருடைய தீவினை நீங்கும்.

அ.வி: சமரம் - போர், கிரி-கிரௌஞ்சமலை, உருவ-ஊடுருவ, நல்பதி-தேவ லோகம்; அயில்-வேல், இமையவெற்பினன் மகள்-மலையரசன் மகள் பார்வதி.

ஒப்: "சீரிய கிரவுஞ்சத் திற்சேர்ந்து பட்டுருவி" கந்த.தார.165. (5)

திருமால் துதி

6\. அருவு மொப்பறு [1]வுருவு முற்றிய
வருளு மற்றுள பொருளுநீள்
கருவு மக்கரு வுருவு மொத்துறை
[2]ககன முற்படு மவைகளும்
விருளு மெத்திசை வெளியு மெட்டிய

[ψ] முருகப்பெருமான் கிரௌஞ்ச மலையை அழித்தது: கிரௌஞ்சன், அகத்தியர் சாபத்தால் மலையுருவம் அடைந்த ஓர் அரக்கன். இவன் வீரவாகு தேவரை மயக்க வந்த தாருகன் என்பவனுக்கு இடமளித்துத் தேவர்களை மயக்கினான். முருகப்பெருமான் கிரௌஞ் சனுடன் போரிட்டு, வேலால் அம்மலையைப் பிளந்து தேவர்களைக் காப்பாற்றினார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

விருவி னைத்திற மையுமெனுங்
குரிசில் சக்கர கரத லத்தினர்*
குரைக ழற்றுணை பரவுவாம்.

1. வுருவு, சு.1+3+4; முருவு, சு.2* 2.கவன, சு.1+3+4; ககன, சு.2*

பொ: வடிவற்றவனும், ஒப்பில்லாத உருவுடையவனும், நிறைந்த அருளுடையவனும், பிற பொருளும், நீண்ட பிறப்பும், அக்கருவின் வடிவு போன்றவனும், ஆகாயத்தில் இருக்கும் சந்திர சூரிய, நட்சத்திரங்களும், அஞ்ஞானமும், வெட்ட வெளியும், எல்லோரிடமும் பொருந்தியிருக்கிற நன்மையும் தீமையுமாக நிற்கும் தலைவனாம் சக்கரத்தைக் கையில் ஏந்திய ஒலிக்கின்ற கழலணிந்த இறைவனை வணங்குவோம்.

அ.வி: அரு-உருவமற்றது; ககனமுற்படு மவை-ஆகாயத்தில் இருக்கின்ற சந்திர, சூரிய நட்சத்திரங்கள், வெளி-ஆகாயம், சக்கரகரதலத்தினர்-சக்கரம் கையில் கொண்ட திருமால்.

ஒப்: "சாணினு முளனோர் தன்மை அணுவினைச் சதக்கூறிட்ட, கோணினு முளன்" கம்.யு.இர.124. (6)

திருமகள் துதி

7. துவரி தட்சிறு நகைமு கத்தெழில்
[1]சுடர யிற்பொரு [2]விழியினள்
குவிமு லைத்துணை யிறுகு கச்சுறு
கொடியெனப் பொரு மயிலனா
ளுவண [3]முற்றிய புயலெ னத்திரி
யரியு ரத்தினி லொளிரவே
கவலை யற்றவள் பதம லர்த்துணை
கருதி [4]நற்றுணை [5]கருதுவாம்.

1.சுடரயிற், சு.1+3+4; சுடியயிற், சு.2* 2.விழியினள், சு.1+2; விழியினீள், சு.3+4 *3. முற்றிய; சு.1; முற்றுயர், சு.2+3+4* 4.நற்றுணை, சு.1; நற்றுதி, சு.2+3+4*5.கருதுவாம், சு.1+ புகலுவாம், சு.2+3+4*

பொ: பவழம் போன்ற இதழும், புன்னகை நிரம்பிய முகத்தில் அழகு நிரம்பிய, ஒளிவிடும் வேல்போன்ற கண்ணும் உடையவள். குவிந்த மார்பை இறுகக் கட்டிய கச்சு அணிந்த கொடியை ஒத்த மயில் போன்ற சாயலை உடையவள், கருடன் மீது வரும் கார்மேக வண்ணனின் மார்பில் விளங்கும் கவலையற்றவளின் திருவடியை நினைத்து வணங்குவோம். முதல் இரண்டடி உவமை.

அ.வி: துவர்-பவளம், துணை-இரண்டு, உவணம்-கருடன், புயல்-மேகம்; உரம்-மார்பு.

ஒப்: இதட் சிறுநகை-ழகர ஒற்று நிலைமொழி பதத்தின் பின்னர் வருமொழி முதல் வல்லினம் வந்து புணர்ந்தால் ழகரம் டகரமாகும் என்ற வீரசோழிய$^{\Psi}$ (சந்திப்.18) விதிக்கேற்ப

* திருமால் கையில் சக்கரம் ஏந்தியிருப்பது, பார்க்க: பா.மா.23, 534, 587, 607.
Ψ இவ்விதிக் கேற்ப அமைந்த சொற்கள் பார்க்க: பா.மா.17, 41, 81, 124, 141, 187, 322, 367, 405, 441.

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA).

அமைந்துள்ளது. துணை - "துணை மீன் காட்சியின்" கல்லாடம்.5,27, உரம் -"வாளி உரம்புக" கம்.ஆ.மாரீ.80. (7)

கலைமகள் துதி

8. அகலி டத்துள கலைக ளெத்தனை
யவைய னைத்துள பொருள்களாய்
நிகழும் [1]வித்தக தரும சற்குண
[2]நிறைய முற்பவ வறிவினாள்
சகள நிட்களை பதும நற்கொடி
தவள மெத்திய வடிவினாள்
மகிழ்கி ருபைக்க [3]ணினிய சொற்களை
வரவ ழைத்திங்ங [4]னருள்கவே.

1.வித்தக,சு.1;வித்தகி, சு.2+3+4*2. நிறைய, சு.1; நிறையு,சு.2+3+4* 3.ணினிய, சு.1; ணிலினிய, சு.2+3+4* 4.னருள்கவே, சு.1+4; னருள்வளே, சு.2+3*

பொ: பரந்த உலகில் உள்ள கலைகள் அனைத்திலும் உள்ள பொருளாய் விளங்கும் ஞான வடிவாய், அறத்தின் உருவாய், நற்குணம் நிறைந்து தோன்றும் பலதிறப்பட்ட அறிவினாள். உருவமும் அருவமுமான நிலையளாய்த், தாமரைக்கொடியில் வரும் வெண்டாமரை மலர் போல் வெண்மை நிறமுடையவள். கலைமகளின் அருள் நிறைந்த கண்கள், இந்நூலை (நான்) பாட மகிழ்வோடு இனிய சொற்களைத் தந்து அருள் புரியட்டும்.

அ.வி: இடம் - உலகம், சகளநிட்களை-உருவமும் அருவமும் ஆனவள், தவளம் - வெண்மை. ஒப். "தவள ரூப ஸரஸ்வதி " - திருச்சிராப்பள்ளி திருப்புகழ் (8)

மணிவாசகர் துதி

9. பிள்ளை வண்டொடு பம்பு தும்பி
பிறங்கு பாடலோ டாடியே
கள்ளு [1]குத்தவெண் ணளின மாமலர்
கருதி மேவிய கலையினாள்
தெள்ளு செந்தமிழ் கொண்ட கூடல்
சிறக்கு [2]மீனவ னருளவே
கள்ள நற்பரி [3]யுய்த்த னன்கழல்[●]
கையி னிற்றுதி செய்குவாம்.

1. குத்த, சு.1+3+4; யிர்த்த, சு.2* 2.மீனவ னருளவே, சு.1+3; மீனவன் மரு ளவே,சு.2+4* 3.யுய்த்த னன்,சு.1; யுய்த்த வன்,சு.2+3; யுரித்த வன்,சு.4*

[●] நரி பரியானகதை: அரிமர்த்தன பாண்டிய மன்னன் குதிரை வாங்கக் கொடுத்த பொருளை, மணிவாசகர் திருப்பெருந்துறைக் கோயில் திருப்பணிகளில் செலவிட்டார் .அது அறிந்து, மன்னன் வெகுண்டு அவரை அழைத்துச் சிறையிலிட, மணிவாசகர் வருந்துகிறார். இதையறிந்த சிவபெருமான் நரியைப் பரியாக்கிக் கொண்டு சென்றார். மேலும் பார்க்க: திருவிளை. நரிபரியாக்கிய படலம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பொ: சிறு வண்டுகளோடு ஆரவாரிக்கும் தும்பி ரீங்காரமிடும் தேன் சொரியும் வெண் தாமரை மலரை விரும்பி அதில் உறையும் கலைமகள். தெள்ளிய தமிழ்மொழியைக் கொண்ட மதுரைநகர் சிறக்கும் இறைவனாம் சுந்தரபாண்டியன் அருள, நரியைப் பொய்க்குதிரையாக்கிச் செலுத்திய மணி வாசகரின் திருவடிகளை கையால் வணங்கு வோம்.

அ.வி: பிள்ளைவண்டு-சிறுவண்டு, பம்பு -ஆரவாரிப்பது, கள்-தேன், கூடல் - மதுரை, மீனவன்-பாண்டியனாக வந்த சிவபெருமான், மருள-அஞ்ச, கள்ள நற்பரி உய்த்தவன்-பொய்க் குதிரைகளை செலுத்திய மணிவாசகர், உய்த்த நன்கழல் - செலுத்திய நன்கழல்.

குறிப்பு: உய்த்த நன்கழல் என்பதைச் செலுத்திய நன்கழல் என்றும் கொள்ளலாம்.

ஒப்: இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் திங்களைக் "குழவித் திங்கள்" (2-38) என்று கூறுவது போல், சோமன் வண்டைப் "பிள்ளை வண்டு" என்று பாடுகிறார்.

(9)

சுந்தரர் துதி

10. திரைக [1]டற்றிரி முதலை யிற்பொரு
திகிரி[Ψ] விட்டிள மதலையைக்
குரவ னுக்கரு ளரியெ னத்தெரி
குழக முத்தமிழ் விரகினா
லரிய நற்சுதன் முதலை யிற்பெற
[2]வருளி னிற்றுதி[♣] பலசொனா
[3]ரிருப தத்துணை மலர்க ளுக்[4]கென்
னினிய நற்றுதி புகல்வனே.

1.டற்றிரி, சு.1+2; டற்றிசை, சு.3+4*2.வருளினிற் றுதி,சு.1+3+4; வரிய நற்றுதி, சு.2* 3. ரிரு பதத், சு.1+2; னிருபதத், சு.3+4* 4.கென் னினிய சு.1; கென தினிய, சு.2+3+4*

பொ: அலைகளுடைய கடலில் திரியும் முதலை வாயில் சக்கரப்படையைச் செலுத்தித் தன் ஆசிரியர் மகனை மீட்டுத் தந்த திருமாலைப்போல், விளங்கும் சுந்தரனார் முத்தமிழ் இனிமையினால் கிடைத்தற்கரிய பிள்ளை முதலையிடமிருந்து மீள கருணையோடு தேவாரப் பதிகங்கள் பாடி உயிர் மீட்ட சுந்தரரின் இருமலர்த் திருவடிகளுக்கு என் போற்றுதலைக் கூறுவேன். இங்குத் திருமால் சுந்தரருக்கு உவமை.

அ.வி: திகிரி-சக்கரம், மதலை-குழந்தை, குரவன்-கண்ணனின் குரு சாந்திபீனி, குழக முத்தமிழ்-இளமையும் அழகும் உள்ள முத்தமிழ், விரகு-அறிவு, சுதன்-மகன், துதிபல சொனார்-பல பாசுரங்கள் பாடிய சுந்தர மூர்த்தி நாயனார்.

ஒப்: குழக- "கொம்மைக் குழகாடுங் கோலவரை மார்பர்" சீவக.2790. "கதழெரி நேமி தூண்டிக் கராங்கவர் குரவன் ஈன்ற, மதலையை அழைத்த செங்கண் மால்" காசிகாண்டம்.7. "பண்டு

[Ψ]கண்ணன் தனது ஆசிரியர் குழந்தையை மீட்டது: அவந்தி நாட்டிலுள்ள சாந்திபீனி என்னும் முனிவரிடம் கண்ணனும் பலராமனும் வேதங்களைக் கற்றனர். அதற்குக் குருதட்சணையாகக் கடலில் முதலை உண்டு மாண்டுபோன தமது மகனை மீட்டுத்தருமாறு வேண்டினார் அவர். கண்ணன் அவனை மீட்டுக் கொடுத்தான். மேலும் பார்க்க: ஸ்ரீமத் பாகவதம்.

[♣] சுந்தரர் குழந்தையை மீட்டது: திருக்கொப்புளியூர் என்ற ஊரில் இரு பிள்ளைகள் ஏரிக்குச் சென்றனர். ஏரியில் உள்ள முதலை இருவரில் ஒருவனை விழுங்கி விட்டது. சுந்தரர் பதிகம் பாடி அப்பிள்ளையை முதலையிடமிருந்து காப்பாற்றினார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America- HHFA(USA)

சாந்திபன் சொல், கேளாக் கடல் புக்க சேயினை மீட்டதும்" திருவரங்கத்துமாலை 73. "முன்னாள் முதலை வாய்ப் புக்க மைந்தன் முன்போல் வர மீட்டுத், தென்னாரூரர் எழுந்தருளா நின்றார்" பெரி.வெள்.16.

(10)

ஞானசம்பந்தர், நாவுக்கரசர் துதி

11. இமைய நற்கிரி தனிலு தித்திடு
மிறைவி பொற்குய மொழுகுபா
லமைவு றத்தனி [1]பருகி[ᴪ] முத்தமி
ழடைவி னிற்பொழி [2]கருணையா
விமிழ்தி ரைப்பர வையின் மணிச்சிலை
யெழுது ணைப்புணை[•] [3]யெனமுன்னா
விமல னைத்தமிழ் கொடு[4]து திப்பவர்
விரைம லர்ச்சர ணினைகுவாம்.

1.பருகி, சு.1+2; பருகு, சு.3+4*2. கருணையா, சு.1+2; கருணைமா, சு.3+4* 3.யெனமுன்னா, சு.1+3+4; யெனமுனா, சு.2* 4.துதிப்பவர், சு.1; துதித்த வர், சு.2+3+4*

பொ: இமவானின் மகளாக இமையமலையில் தோன்றிய பார்வதி தேவியின் பொன்அனைய தனத்திலிருந்து ஒழுகிய ஞானப்பால் பருகி முத்தமிழில் சிறந்து தேவாரம் பாடி விளங்கிய கருணை மிக்க ஞானசம்பந்தர், அலைகள் கூடிய கடலில் அழகிய கல்லொன்று தெப்பம்போல் எழுக என நினைத்துச் சிவபெருமானைத் தமிழ்ப்பாடலால் துதித்த நாவுக்கரசர் ஆகியோரின் மலர்களை நினைப்போம்.

அ.வி: குயம் - கொங்கை; முத்தமிழடைவு - இயல், இசை, நாடகம் என்னும் முறைப்பாடல்; கருணைமால் - திருஞானசம்பந்தர், பரவை - கடல்; சிலை-கல்; எழுதுணைப் புணை-மிதக்கின்ற துணையாகிய தெப்பம்; விரை-மணம்; முன்னா- நினைத்து; விமலன் - மாசற்ற இறைவன்; தமிழ் கொடுதுதிப்பவர்- திருநாவுக்கரசர்.

ஒப்:"வாரிணங்கு திருமுலைப்பால் வள்ளத்துக் கறந்தருள்" பெரி.சம்.67. "கரியஅஞ் செழுத்தையும் அரசு போற்றிடக் கருநெடுங் கடலினுள் கல்மி தந்ததே" பெரி.அப்.1. முத்தமிழடைவு-"முத்தமிழடைவினை முற்படு" திருப்பகழ்-1.

(11)

ᴪ சம்பந்தர் பால் உண்டது: சம்பந்தர் மூன்று வயதில் தந்தையுடன் குளத்திற்குக் குளிக்கச் சென்றார். சம்பந்தரைக் கரையில் இருக்கச் செய்து தந்தை நீருள் மூழ்கிக் குளித்தார். சம்பந்தர், தந்தையைக் காணாது அழுதார். அப்போது பார்வதி பொற்கிண்ணத்தில் முலைப் பால் பெய்து, சம்பந்தருக்கு ஊட்டினாள்.

• நாவுக்கரசரைக் கல்லோடு கட்டிக் கடலிலிட்டது: நாவுக்கரசர் சமண மதத்திலிருந்து சைவ சமயத்திற்குத் திரும்பியதை அறிந்த சமணர்கள் பல வழிகளில் அவருக்குத் தீங்கிழைத்தனர். பல்லவ மன்னன் நாவுக்கரசரைக் கல்தூணில் கட்டிக் கடலில் இட்டார். அவர் சிவபெருமானை நினைத்துச் 'சொற்றுணை வேதியன்' என்ற பதிகம் பாடியதும் கல்தூண் தெப்பமாக மிதந்தது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

குருவணக்கம்

12. அரிய யற்கரி யவன்* ம லர்ப்பத
மனுதி னத்தினு முரைசெய்தே
மரும லர்க்கொடு பணியும் நற்றவ
மறைய வர்குல முதலெனக்
குருப ரற்றுதி கொளநி னைப்பவர்
குவல யத்தினி [1]லவர்கட
மிருப தத்துணை பரவி நித்தமு
மியலி னைச்சொல நினைவனே.

1.லவர்கடம், சு.1; லெவர்கடா, சு.2; லெவர்கட, சு.3; லெவர்கடம், சு.4*

பொ: திருமாலும் பிரம்மனும் காணஇயலாத சிவபெருமானின் மலர் போன்ற திருவடிகளை நாள்தோறும் புகழ்ந்து மலர்கொண்டு துதிக்கும் நல்ல தவம் பொருந்திய அந்தணர்குலக் குருவை வணங்குபவர், உலகில் அவருடைய திருவடிகளை வணக்கி இயல்தமிழாகிய இந்நூலை இயற்ற நினைப்பேன்.

அ.வி: குவலயம் - உலகம், இயல் – இயல்தமிழ்.

ஒப்: அரிய யற்கரி யவன் பார்க்க: பா.மா.1. (12)

பாரதக் கதையைப் பாடியவர்

வடமொழியில் வியாசர், தமிழில் வில்லிபுத்தூரர்

13. பரன ருட்டிறல் [1]தனையன் வேத
பாரா யணன்சொல மேருவிற்
கரிமு கத்தவ னெழுது[@] பாரத
காவி யம்வட பாவினா
லரிய நற்பதி னெண்பு ராணமு[♦]
மாதி யிற்புகல் சூதனாம்
பெரிய நற்றவ னுரைசெ யத்தமிழ்
பேசி னன்சனி யூரனே.

1.தனையன் வேத, சு.1; தனை வேத, சு.2+3+4*

பொ:பராசரன் அருளிய மைந்தன், வேதங்கள் கற்ற வியாசமுனிவர் சொல்லக் கேட்டு, யானைமுக விநாயகர் மேருமலையில் எழுதிய பாரதக்கதை யும் [1]பதினெட்டு புராணங்களும் வடமொழி சுலோகத்தில் முதன்முதலில் புகன்ற சூதமுனிவன் விரித்துக் கூற, அதனை வில்லிபுத்தூரன் தமிழில் பாடினான்.

---

* அடிமுடி தேடியது பற்றிப் பார்க்க: பா.மா. 1.
@ மேருமலையி விநாயகர் பாரதக்கதை எழுதியது, பார்க்க: பா.மா. காப்புச் செய்யுள்
♦ பதினென் புராணம்: 1. சைவம் 2. பவிஷ்யம் 3. மார்க்கண்டம் 4. இலிங்கம் 5.காந்தம் 6.வராகம் 7. வாமனம் 8.மச்சம் 9.கூர்மம் 10. பிரமாண்டம் 11. காருடம் 12. நாரதீயம் 13. விஷ்ணு 14. பாகவதம் 15.பிரமம். 16. பதுமம் 17.ஆக்னேயம் 18.பிரமனகவர்த்தம். இது பற்றி மேலும் பார்க்க: பா.மா. 42.

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

அ.வி: பரன் - பராசரன்(வியாசரின் தந்தை), வேதபாராயணன்-வேதங் களை முறைப்படிக் கற்ற வியாசன், வடபா -வடமொழி சுலோகம், சூதன்-வியாசரின் சீடர், இருடிகளுக்குப் புராணங்களைக் கூறியவர்,சனியூரன்-வில்லிபுத்தூரார்.

ஒப்: சனியூரன்- நிறைந்தபுகழ்ச் சனிநகர் வாழ்வில்லி புத்தூரனை, வில். சிறப்புப்பாயிரம். 22.

(13)

நூல் நுவல் பொருள்

14. அரவி னிற்றுயில் கருணை வித்தக⊕
னவனி யிற்பர மொழியவே♥
குருகு லத்தவர் தமி[1]லெ திர்த்திடு
கொடிய [2]நாற்படை மடியமுன்
விரகி னைச்செய்து, தருமனைப்புவி
விரிவ னத்திடை வருகெனப்
பரிவின் மிக்குட லொடுபு கப்பணு
பழுதில் நற்கதை$^{\psi}$ பகருவாம்.

1.லெதிர்த்திடு, சு.1+3+4; லெதிர்ப்படு, சு.2 * 2.நாற்படை, சு.1; சொற் படை , சு.2; நற்படை, சு.3+4*

பொ: அரவணையில் அறிதுயில் புரியும் கருணைக் கடவுள், பூமியில் பாரம் ஒழியப் பாண்டவர்களும் கௌரவர்களும் தம்மிடையே எதிர்த்திடும் போரில், நால்வகைப் படைகளும் இறக்கும்படி முன்பு சூழ்ச்சி செய்து, தருமனைப் பரந்த காட்டிற்கு வருமாறு அன்போடு அழைத்து (அவனை) உடலோடு வைகுண்டம் செல்லும்படிச் செய்த குற்றமற்ற மாவிந்தக் கதையைக் கூறுவோம்.

அ.வி: அரவு - பாம்பணை; கருணை வித்தகன்- திருமால், பரம்-பாரம்; குருகுலத்தவர்-பாண்டவர்கள், கௌரவர்கள், விரகு-தந்திரம், பழுதில் நற் கதை-குற்றமில்லாத மாவிந்தக் கதை, புகப்பணு- இடைக்குறை.

ஒப்: பரம் - மிசைப் பரந் தோண்டாது, புறநா. 30.11. (14)

அவையடக்கம்

கலிவிருத்தம்

15. [1]விருத்த நீள்கவி வில்லிபுத் தூரன்முன்
தெரித்த பாரதஞ் செய்தனன்; செய்திலன்
வருத்தமாய் [2]மன்னன் மாவிந்தஞ் [3]சேர்ந்ததை
யுரைத்தல் நன்றென் றுரைக்கவு ணர்ந்ததால்.

⊕ அரவணையில் துயில்வது பார்க்க: பா.மா.373, 529, 626, 726.
♥ திருமால் பூமி பாரம் தீர்த்தது பார்க்க: பா.மா.65, 83, 91, 98, 331.
ψ தருமன் உடலோடு வைகுண்டம் எய்தியது: பா.மா.536.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

1.விருத்த, சு.1+2; விரித்த,சு.3+4* 2.மன்னன்,சு.1+2; மன்னர்,சு.3+4* 3.சேர்ந்ததை, சு.1; சென்றதை, சு.2+3+4*

பொ: விருத்தப் பாடல்களைப் பாடுவதில் வல்ல வில்லிபுத்தூரன், முன்னர் வியாசர் கூறிய பாரதக்கதையைத் தமிழில் இயற்றினார். (பாரதக்கதையின் 18-ஆம்நாள் போர் வரை உள்ள நிகழ்ச்சிகளைப் பாடினார்), தருமன் வருத்தமாய் வைகுண்டம் அடைந்ததைப் பாடவில்லை. அக்கதையைக் கூறுவது நல்லதென்று கூற நினைத்ததால், இது குளகம்.

அ.வி: மாவிந்தம்-வைகுண்டம்.

(15)

16. வைய முய்ய வருங்கன மாமுகில்
[1]பெய்யல் கண்டெதிர் பெய்யும் பனியெனத்
துய்ய வில்லிபுத் தூரன் [2]றொடைக்கவிச்
[3]செய்யல் கண்டபின்[@] செப்பும் கவிதையே.

1. பெய்யல், சு.1+3+4; பெய்யக்,சு.2* 2.றொடைக்கவி, சு.1+3+4; றொடைகதை, சு.2* 3.செய்யல், சு.1; செய்யுள், சு.2+3+4*

பொ: உலகம் உய்யுமாறு வருகின்ற நீண்ட பெருமேகம் மழை பொழிவதைக் கண்டு அதற்குப் போட்டியாகப் பெய்யும் பனியைப் போல், தூய வில்லிபுத்தூரன் பாரதக்கதையை இயற்றியபின், (நான்) இயற்றும் பாடலே. வில்லிபுத்தூராரின் பாடல் முகிலுக்கும், பாரத மாவிந்தத்தின் பாடல் பனிக்கும் உவமை.

அ.வி: கனமா முகில் - செறிந்த மழை மேகம், தொடைக்கவி-பாடல், செய்யல்- செயல்.

ஒப்: மாரிக்கு நிகர்பனி சொரிதல் போலவும், குமரேசசதகம், அவையடக்கம்.

(16)

17. குயிலி ருந்துறக் கூவுமச் சோலையி
லியலுங் கூகையுங் கூவுமி யல்பெனப்
பயிலு முத்தமிட்[ψ] பாவலர் முன்கவிச்
செயலி லென்கவி செப்புந் திறமையே.

பொ: குயில் இருந்து கூவும் சோலையில், குயில்போல் கோட்டானும் கூவுவதைப் போன்று முத்தமிழ் கற்ற புலவர் முன்பு நான் இயற்றும் கவிதை உள்ளது. குயில் தமிழ்ப் பாவலர்க்கும் கோட்டான் நூலாசிரியர் சோமனுக்கும் உவமை. 'கூவும்இயல்பென' என்பதில் எனஎச்சமாய் இருப்பதால் 'இயல்பதாம்' என்று இருப்பின் சிறக்கும்.

[@]குறிப்பு: வில்லிபுத்தூரர் பாரதத்தின் பத்தாவது பருவம் வரை, தருமன் முடிசூடுவது வரை பாடியிருக்கிறார். அவருடைய மகன் வரந்தருவார் ஏனைய பகுதியைப் பாடினார் என்பர். பின் உள்ள எட்டுப் பருவங்களை கி.பி.1753-இல் அரங்கநாதக்கவிராயர் பாடி நிறைவு செய்துள்ளார். நல்லாப்பிள்ளை கி.பி.1732-இல் பாரதக்கதை முழுவதையும் பாடியுள்ளார். பாரத மாவிந்த ஆசிரியரான சோமன் பாரதக்கதையின் இறுதி மூன்று பருவங்களின் கதையையே பாடியிருக்கிறார்.

[ψ] முத்தமிட் பாவலர் பார்க்க: பா.மா.பாடல் 7-இன் வீரசோழிய மேற்கோள்.

Digitization by Hindu-Heritage-Foundation of America- HHFA(USA)

குறிப்பு: செயலிலென் என்ற சொல்லைச் செயலிலேன் என்று அல்லது செயல்+இல்+என் என்றும் கொள்ளலாம்.

ஒப்: "பாருக்குள் நல்லோர் முனேபித்தர் பலமொழி பகர்ந்திடும் செயல் போலவும்" குமரேச சதகம். அவையடக்கம். (17)

நூலாசிரியர் சோமனின் ஊர் - புவனப்பதி

18. சோமன் வாழ்புவ னப்பதித்[®] தோன்றலா
மாமறைக் [1]குலத்தான் வளத்தா னியற்
பாம னும்விருத் [2]தத்தினிற் பாடினான்
றாம மன்னர் மகாவிந்தம் [3]சேர்ந்ததை.

1. குலத்தான், சு.1+2; குலத்தோன், சு.3+4* 2.தத்திறற், சு.1+4(சு.2+3சி.)3. சேர்ந்ததை, சு.1+2; சார்ந்ததை, சு.3+4*

பொ: மாலையணிந்த மன்னர்களாம் பாண்டவர்கள் வைகுண்டம் சேர்ந்த கதையைப், புவனப்பதி என்ற ஊரில் தோன்றிய பாடல் இயற்றுவதில் வல்ல அந்தணகுலத்தைச் சார்ந்துப் பாடுவதில் வல்லச் சோமன் என்பவர் வளம் பொருந்திய பாக்களைக் கதை கூறுவதற்கேற்ற விருத்தப்பாவில் பாடினான்.

அ.வி: சோமன் -நூலாசிரியர் பெயர்; வளத்தான்-செல்வம் நிரம்பியவன்; மன்னர்- பாண்டவர்; மகாவிந்தம்-வைகுண்டம். (18)

19. சந்தப் பனுவற் றமிழ்தேர் புலவோர்
நிந்திப் [1]பர்களா யினுமென் னினைவின்
வந்துற்ற தியம்புவன் மன்னன் மகா
விந்தத்தை யடைந்துள மெய்க் கதையே.

1. பவர்களா, சு.1; பவரா,சு.2; பர்களா, சு.3+4*

பொ: சந்தப்பாடல் இயற்றுவதில் தமிழில் தேர்ந்த புலவர்கள் என் பாடலை நிந்திப்பாராயினும், என்நினைவில் உதித்து வந்தெய்திய தருமன் வைகுண்டம் சேர்ந்த உண்மைக் கதையைக் கூறுவேன். (19)

20. நிறைவென்ற மதிக்கெதிர் நேர்வ தலாற்
பிறையென் றணுகா[Ψ] துரைபே [1]சுகிலா
ரறையுங் கவிபுன் சொலதா தலதன்
குறையெண் ணலர்கூ ரியசீர் மையினார்.

1.சகிலா லறையுங், சு.1; சுகிலா ரறையுங்,சு.2+3+4*

® குறிப்பு: புவனப்பதி என்ற ஊர் திருச்செந்தூர் வட்டம் ஆற்றூரின் பழைய பெயராகிய தென் திருப்பூவணமாக இருக்கக்கூடும் (பார்க்க: இயல் 2.).

Ψ இதற்கு, பாம்பு முழுமதியைப் பற்றும், குறைச் சந்திரனைப் பற்றுவதில்லை. அதுபோல், அறிவுடையோர் குறைந்த மதியுடைய என்னை இகழ மாட்டார்கள் என்றும் பொருள் கொள்ளலாம் என்பார் எஸ்.கே. இராமராஜன்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பொ: முழுமதிக்குக் களங்கம் உண்டு என்று குறை கூறுவதுபோல், பிறைச் சந்திரனிடம் களங்கம் உண்டு என்று குறை பேசுபவர் இல்லை. (அது போல்), என்கவி சிறுமை உடையதாயினும் அறிவுடையோர் அதைக் குறையென்று மனத்தில் எண்ணமாட்டார்கள்.
அ.வி: எதிர்நேர்வது -குறை கூறுவது; அலால்-அல்லாமல்; நிறை வென்ற மதி-முழுமதி.

(20)

நூலைச் செப்பம் செய்தவர் - விநாயகன்

எண்சீர் ஆசிரிய விருத்தம்

21. மங்கலஞ்சேர் மாவிந்தக் கதையைத் தொன்னூல்
வகுத்த சோமன் விருத்தவகை யாற்செப்ப
வங்கதனில் [1]கதைபொறித்த வேட்டிற் சிலசெல்
லரித்ததனாற் பதஞ்சொல், [2]லெழுத்தவை காணாமற்
றங்குறைதேர்ந் [2]துரைவழியே[Ψ] பேணி முன்போற்
றாபித்துக் குறையறவே பூரித் திட்டான்
செங்கமல மார்பனீ சுரபட் டன்றன்
செல்வனெனும் விநாயகனாஞ் செம்ம றானே.

1.வகை, சு.1+3+4; கதை, சு2* 2.லெழுத்தவை, சு.1+2; லெழுத்திவை, சு. 3+4* 2.துரையுமது, சு.1; துரைவழியே, சு.2; துரை யும், சு.3+4*

பொ:சிறப்பு சேர்க்கின்ற மாவிந்தம் என்னும் கதையைப் பல பழைய நூல்களைப் பயின்ற சோமன் விருத்தப்பாவில் இயற்ற, அந்த மாவிந்தக்கதை எழுதப்பட்ட ஏட்டில் சில செல்லரித்ததனால், அந்நூலிலுள்ள சொற்களும் எழுத்தும் காணஇயலாமல் அதிலுள்ள குறையை அறிந்து, அந்நூலுக்குள்ள உரை மூலம் பேணி முன்பு இருந்தது போல் நிலைநிறுத்திக் குறைவின்றி நிறைவு செய்தார் ஈசுரபட்டன் என்பவரின் மகனாகிய விநாயகன்.
அ.வி: மாவிந்தக் கதை-பாண்டவர்கள் வைகுண்டம் சென்ற கதை, மங்கலம்-சிறப்பு, செல்-கறையான், உரை -உரையின் மூலம் .
ஒப்: சோமன் பற்றிப் பார்க்க: பா.மா.18. (21)

பாயிரம் முற்றும்

கடவுள் வணக்கம் முற்றும் – சு.1 ; சிறப்புப் பாயிர முற்றிற்று, சு.3;
கடவுள் வணக்கம் பாயிர முற்றும்-சு.4 (சு. 2 சிதை.)

****

[Ψ]உரை என்பதை முன்னூலாசிரியர் சொல்வழியே அல்லது இந்நூலின் உரைவழியே என்று கொண்டால், இதற்கு உரையிருந்ததாகக் கொள்ளவேண்டும். இன்னும் பாரதக் கதையை ஆங்காங்கு கதாப்பிரசங்கமாகக் கூறுவதிலிருந்து என்றும் கொள்ளலாம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America-HHFA(USA)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

1. திருநாட்டுச் சருக்கம்◎ (22-76)

(திருநாட்டுச் சருக்கத்தில் அத்தினபுரத்தின் சிறப்பு, சனமேசயனின் பெருமை, சனமேசயன் வியாசமுனிவரிடம் பாண்டவர்கள் வைகுண்டம் சென்றதற்கான காரணம் வினவியது, அந்தணனைக் கொன்ற பாவம் சனமேசயனைத் தொடர்ந்தது, அப்பாவத்தை நீக்க அவன் பாண்டவர்கள் வைகுண்டம் சென்ற கதைகேட்டது முதலிய நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன).

பகீரதன் தவத்தால் கங்கை பூமியை அடைதல்

கலிவிருத்தம்

22. விண்ணிற் றிகழ்நீர் மையின்மெய் விரதத்
தெண்ணுற்ற பகீரத[ψ] னென்ப வனா
லண்ணற் கிசைவே ணியமர்ந் தவள்[♣] மண்
கண்ணுற் றதுகங்கை நன்னா டதுவே.

பொ: ஆகாயகங்கை பகீரதன் என்பவன் உண்மையான தவம் செய்ததால், சிவபெருமானின் சடையில் அமர்ந்து, பூமியை அடைந்து குரு நாட்டில் ஓடியது.

அ.வி: பகீரதன்- திலீபனின் மகன்; அண்ணல் - சிவபெருமான்; வேணி-சடை; மண்கண்-பூமியின் மீது.

ஒப்: ஏடவிழ் கொன்றைப் பூநின்ற மவுலியையும் புக்கு அளைந்த புனற்கங்கை, வான்நின்று கொணர்ந்தானும், கம்.பா.குல.9. (1)

மேகம் மின்னலுடன் எழுதல்

23. முன்னைப் படை[1]மா லியவான் முதலோர்
தன்னைப் பொரவாளி தரித்த கைமா
[2]லென்னக் கலுழன் மிசையா யினபோல்[♥]
மின்னிக் கொடெழுந் ததுமே கமரோ.

1 *மாலியவான்*, சு.3+4; வாளியவான், சு.1; மாலியவான், சு.3+4(சு.2 விடு) * 2.லென்ன, சு.1; லன்னற், சு.3; லண்ணற், சு.4 (சு.2 விடு)*

பொ: திருமால், மாலியவான் முதலிய அரக்கருடன் போரிடக் கருடன் மீது எழுந்ததுபோல், மேகம் மின்னலுடன் எழுந்தது. திருமால் மேகத்துக்கும் கருடன் மின்னலுக்கும் உவமை.

அ.வி: மாலியவான்-இராவணனின் பாட்டன்; ஆழி-சக்கரம்; கலுழன்-கருடன்; முதலோர் தம்மை என்பது எதுகை நோக்கி தன்னை என வந்தது.

◎ திருநாட்டுச் சிறப்புச் சருக்கம், சு.1+3+4; திருநாட்டுச் சிறப்பு, சு.2.*

ψ இவன் தன் முன்னோர் நற்கதியடையத் தவம் செய்து வான் நதியாக இருந்த கங்கையைப் பூமிக்குக் கொண்டு வந்தவன் என்று சொல்லப்படுகிறது.

♣ சிவபெருமான் கங்கையைத் தலையில் வைத்திருப்பது, பார்க்க: பா.மா. 44, 390.

♥ திருமால் கையில் சக்கரம் வைத்திருப்பது பார்க்க: 6, மேலும் இதே உவமை பார்க்க: பா.மா. 607, 733.

Digitization by Hindu-Heritage-Foundation of America (HHFA)(USA)

ஒப்:"செம்பொற் குன்றின்மேல், வருவபோற் கலுழன் மேல்வந்து தோன்றினான்" கம்.பா. திரு.12. (2)

இமயமலை குளிர மழைபொழிதல்

24. உமையம்மை தனைப்பெறு முத்தமனா
லிமைய மிவையென் றிசைதன் [1]பரிவா
லமையு மெனமஞ் சன[2]மாட் டுவபோல்*
சிமையங் குளிரப் புனல்சிந் தியவால்.

1. பரிவா, சு.1; பரிவி, சு.3* 2.மாடுவ, சு.1; மாட்டுவ, சு.3+4, (சு.2 வி) *

பொ: மேகங்கள் உமையை மகளாகப் பெற்ற இமயமலை இது என்று ஆர்வத்தால் மகிழ்ந்து, அம்லையை தன்னுடைய அன்பால் குளிப்பாட்டுவதுபோல, அதன் உச்சி குளிர்ச்சியடையும் படி மழை, நீரைப் பொழிந்ததால்- இது குளகம்,

அ.வி: இசை-பொருந்தி; சிமையம்-உச்சி; மூன்றாவதடி தற்குறிப்பேற்றம்.

ஒப்: பம்பி மேகம் பரந்தது பானுவால், நம்பன் மாதுலன் வெம்மையை நண்ணினான்.. வாரி எழுந்தது போன்றதே, கம்.பா. ஆற்.3. (3)

வார்புனல், தாழ்புனல் - குலமங்கையர், விலைமங்கையர்

25. மலைதங்கிய நன்சுனை வார்புனலுந்
தலமங்குள சீர்கொடு தாழ்புனலும்
குலமங்கைய ரும்நிதி கொண்டகலும்
விலைமங் கையரும் மெனமே வியதால்.

பொ: மலையிலுள்ள சுனைப்புனல் குலமகளைப் போலவும், அதன் சிறப்புகளைக் கொண்டு கீழே செல்லும் தாழ்புனல் விலைமகளிரைப் போலவும் விளங்கியதால்; சுனைவார்புனலுக்குக் குலமங்கையரும், தாழ்புனலுக்கு விலைமங்கையரும் உவமை. புனல் தொகுதிப்பெயராய் அமைவதால் மேவியது என ஒருமையில் முடிந்தது.

ஒப்: "மலையி லுள்ளவெ லாங்கொண்டு மண்டலால், விலையின் மாதரை ஒத்ததவ் வெள்ளமே". கம்.பா.ஆற்.6. (4)

---

*குறிப்பு: சிவபெருமானின் மனைவியான உமையைப் பெற்றதால் இமையவரசன் சிவபெருமானுக்கு மாமன். நதிகள் கடலுக்கு மனைவியர் என்று கூறப்படுகின்றன. இமையமலை, கங்கை முதலிய நதிகளைத் தோற்றுவித்தலால், கடலுக்கு மாமன் முறையினன். மேகம் கடலிலிருந்து நீரைப்பெற்று அதன் மாமனாகிய இமய மலையின் வெப்பம் தணிய அதனை நீராட்டுவதுபோல் நீராட்டுகின்றது எனவும் கொள்ளலாம். (எஸ்.கே. இராமராஜன்.)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஐவகை நிலப்பொருள் கொண்டுவரல்

26. சந்தார்க்கு மணிக்குவை தாழ்கவரி
யைந்தாய நிலத்துள வானவெலாம்
மந்தாகினி கொள்கென வாள்வருணன்
தந்தானென வந்தது தண்புனலே.

பொ: ஐவகை நிலப்பொருட்களை எல்லாம் கங்கையே நீ பெற்றுக் கொள் என ஒளிபொருந்திய வருணன் கொடுத்ததுபோல், கங்கையாறு பொருட் களைக் கொண்டு வந்தது.

அ.வி: சந்து-சந்தன மரம்; ஆர்க்கும்-ஒலிக்கும்; மணிக்குவை-நவமணிகளின் குவியல்; ஐந்தாய நிலம்-குறிஞ்சி,முல்லை,மருதம், நெய்தல், பாலை; மந்தாகினி - கங்கை; இது தற்குறிப் பேற்றம். (5)

விலங்குகள் நீரில் புகுதல்

27. செந்நாய் புலியெண்கு சிலம்பி[ψ] முதல்
மின்னார் நதியிற் புகமே வியதாற்
பொன்னாசை மடந்தையர் பூவணைமே
லின்னாரென வன்றியு மேறு வபோல்.

பொ: ஒளிபொருந்திய நதியில் செந்நாய், புலி, கரடி, சிலந்தி முதலிய விலங்கினங்கள் அடைந்தமை, விலைமகளிரின் பூமெத்தைமேல் இத்தன்மை உடையவர் என்றில்லாமல் எல்லோரும் படுக்கையில் கிடப்பதுபோல் இருந்தது. புனலுக்கு மெத்தையும் விலங்குகளுக்கு விலைமகளிரைச் சேர்பவரும் உவமை.

அ.வி: எண்கு-கரடி; சிலம்பி-யானை, (சிலம்பு-மலை), மின்-ஒளி; பொன்னாசை மடந்தையார்-விலைமகளிர்.

ஒப்: சிலம்பி- "சிலம்பி வானூல் வலந்த மருங்கில்"(பெரும்பா.236) (6)

28. புதிதாகி வரும்புனல் கண்டுமவ
ரெதிர்தாவி நடந்தன வாயினமீ
[1]னெதிர் வாரை [2]நடந்துறு நேசியர்போல்
மதியா லெதிர்கொள் விலைமா[⊕] தரினே.

1. னெதிர்வாரை, சு.1; னெதியாரை, சு.3+4* 2. நடந்துறு, சு.1; யறிந்துறு, சு.3+4*

ψ செந்நாய், புலி, கரடி ஆகிய பெரிய விலங்குகளுடன் சிலந்தி வருவதாகப் பாடியிருப்பது பொருத்தமாகத் தோன்றவில்லை. எனவே, சிலம்பி என்ற சொல்லுக்கு யானை எனப் பொருள்கொண்டால் சிறப்பாக இருக்கும். சிலம்பில் (மலையில்) யானை இருப்பதால் சிலம்பி. கிரிசரம் என்ற யானையைச் சிலம்பி என்று கூறியிருக்கக் கூடும்.

⊕ பொருளை ஏற்றுக்கொள்ளும் செயல். விலைமகளிர் தமக்கு எதிர்ப்படும் புதியவர்களிடம் சென்று, அவர் மீது மிகுதியான அன்பு கொண்டவர்போல் தங்கள் அறிவால் பேசி அவர்களை எதிர்கொள்ளும் செயல் - பொருளை ஏற்றுக் கொள்வது.

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

பொ: விலைமகளிர் தமக்கு எதிர்ப்படும் புதியவர்களிடம் சென்று, அவர் மீது மிகுதியான அன்பு கொண்டவர்போல் தங்கள் அறிவால் பேசி அவர்களை எதிர்கொள்ளும் செயல் போல், மீன்கள் புதுப்புனல் நீரை எதிர்த்து அதனுள் பாய்ந்து சென்றன. விலைமகளிர் மீனுக்கும் புதுப்புனல் புதியவர்க்கும் உவமை.

குறிப்பு: கண்டுமவர் என்பது கண்டு மதன் என்று இருந்தால் சிறப்பாக இருக்கும்.

அ.வி: நேசியர்-அன்பர்; மதி-அறிவு. (7)

கங்கையால் குருநாடு வளம்பெறுதல்

29. விளியா வினை தீர் வியன் கங் கையினிற்
றெளிவார் புனல்பாய் வயல்தே சமெலா
மொளிவார்சடை யுற்றுள கொன்றைமலர்க்
குளிர்மா [1]மணமேர் குருநா டதுவே.

1. மனமேர், சு.1+3; மணமேர், சு.4*

பொ: தீராத வினை தீர்க்கும் கங்கைநதி பாய்வதால் வயல் வரம்பெல்லாம் சிவபெருமானின் சடையிலிருக்கும் கொன்றை மலரின் மணமும், குளிர்ச்சியும் பெற்றுக் குருநாடு சிறந்து விளங்கியது.

இது ஏதுவணி. சிவபெருமான் தலையிலுள்ள கங்கை பாய்வதால் அதனுடன் உள்ள கொன்றை மலரின் மணத்தையும் குளிர்ச்சி யையும் குருநாடு பெற்றது.

அ.வி: விளியாவினை-தீராத வினை, வியன்-பெருமை, ஏர்-பொருந்திய.

(8)

புதுப்புனலில் மீன் பாய்தல்

30. புதிதார் புனல்பொய்கை புகுந்துறவே
சதிபாய் வுறுநாள் தகர்தன் மையெனா
மதிதாழ் [1]பொழில்மா மலர்சிந் தவரால்
குதிபாயு மெழிற் [2]குருநா டதுவே.

1.பொனின்மால் வரை, சு.1; பொழில் மாமலர்,சு.3+4* 2.குருநாடதனில் சு.1+4; குருநாடதுவே, சு.3* (சு.2 சி.)

பொ: புதுப்புனல் பொய்கையில் விரைந்து புகும்போது, பொய்கையை அழித்தலைப் போல், நிலவே தாழ்ந்து போகின்ற அளவு உயர்ந்திருக்கின்ற சோலையில் உள்ள மலர் சிந்துமாறு மீன் குதித்துப் பாயும் குருநாடு. இது உயர்வு நவிற்சி.

அ.வி: சதி- விரைவு; தகர்-அழி; வரால்-மீன்.

ஒப்: "மீன்கணம் வெருக் கொள்ள வெடி வரால் குதிகொள்ளும்" மீனாட்சியம்மைப் பிள்ளைத்தமிழ், 50.

(9)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அத்தினபுரம் நிலமங்கையின் மாலை

31. புகழா மமரே சபுரிக் கெதிராய்
நிகழ்வா யளகா புரிநே [1]ரியதாய்த்
திகழா நிலமங் கைசெழுந் தனமேல்
மகிழா ரமென♥ வத்தினமா புரியே.

1. ரியதாய், சு.1; ரிலதாய்த், சு.2+3+4*

பொ: அத்தினபுரம், அமராபதியையும் அளகாபுரியையும்போல் சிறப்பாக விளங்கி, நிலமாகிய பெண்ணின் கொங்கை மீது விளங்கும் மாலையைப் போல் திகழ்ந்தது. இது உவமை.

அ.வி: அமரேசபுரி - இந்திரனின் தலைநகரான அமராபதி, அளகாபுரி-குபேரனின் நகர், திகழா-திகழ்ந்து, தனம்-கொங்கை; மகிழ் ஆரம்-விரும்புகின்ற மாலை, மகிழம்பூ மாலை என்றும் கொள்ளலாம். ஆரம்-சந்தனம் எனலுமாம்.

ஒப்: நிலமங்கை - "மண்ணக மடந்தை" சிலப். 16. 40. "கடலாடை நில மகளை" திருவிளை. பழி. 5.

(10)

அத்தினபுரியின் எழில் தோற்றம் 32-34

32. ஆகாய மளந்தெழு கோபு ரமு
மோகாழி வரைக்கெதிர் மும்மதிலு
நாகா யனனாடு நலந் திகழும்
[1]வாகா கியவத் தின[2]மா புரியே.

1. மாகாதிய, சு.1; வாகாகிய, சு.2+3+4* 2.மாபுரியே, சு.1; மாநகரின் சு.2+3+4*

பொ: வானளவு உயர்ந்த கோபுரத்தையும், சக்கரவாள மலைக்கு ஒப்பான மதில்களையும் உடைய அத்தினபுரம் நாகலோகம்போல் அழகுடன் திகழ்ந் தது.

அ.வி: மோக ஆழி வரை-விரும்பப்படும் சக்கரவாளமலை; பாதிரி மரம் நிறைந்திருக்கும் சக்கரவாள மலை என்றும் கொள்ளலாம். நாகாயனன் நாடு-நாகலோகம் (அகழி) ; வாகு-அழகு; முதல் இரண்டடி உயர்வு நவிற்சி. இறுதி இரண்டடி உவமை.

(11)

33. பயிலும் பவழஞ் சுடர்பத்தி கொள்தூ
[1]ணுயரும் வயிடு ரியமொண் கனகச்
செயலொன்றிய [2]போதிவை செப்பு தல்வே
[3]றியல்வென் பலவெண் ணிலமா ளிகையே.

1.ணுயிரும்,சு.1;ணுயரும்,சு.2+3+4*2.போதிவை,சு.1;போதிகை,சு.2+3+4*
3. றியலென் வென், சு.1+4; றியலென சு.2; றியல்பென், சு.3*

♥ நிலத்தை மங்கையாகக் கூறியிருப்பது பார்க்க: பா.மா.94.

Digitization by Hindu-Heritage-Foundation of America-HHFA(USA)

பொ: பவளம் ஒளிவிடும் தூண், வயிடூரியமும் பொன்னும் பொருந்திய போதிகை இவற்றை உடைய எண்ணற்ற மாளிகைகளைப் பற்றி வேறென்ன கூற இயலும்?

அ.வி:பத்தி-வரிசை; கனகம்-பொன்; போதிவை-தூணின் மீது வைக்கப் படும் தாங்குகட்டை; போதிகை போதிவை என்று மருவிற்று.

(12)

34. சிகரங்கொள் செழுந்தட மாளி கையி
னிகருங்கன காசொளி நீவுதலா
லிகல்கங்குலு நன்பக லாமெனவே
பகருங் கலைமா மதிபா னுவுமே.

பொ: மலையுச்சியைத் தொடும் அளவு உயர்ந்த மாளிகையில், சந்திர சூரியரைப் போல் பொன்னின் ஒளி வீசுதலால் இரவும் பகலாகத் தோன்றியது.

அ.வி: கலைமாமதி-பலகலைகளையுடைய சந்திரன்; காசொளி-பொன்னின் ஒளி; கங்குல்-இரவு. (13)

அர்ச்சுனனின் மகன் அபிமன்னன்

35. மதியா [1]யுயர்மா [2]மதியின் வருபூ
பதியாய் வருபாண் டுவினன் புதல்வன்
விதியா லும்வெலற் கரும்வில் விசையன்
நிதியாக நயந்தரு நேர்குமரன்.

1.யுயர்மா,சு.1+2+3; லுயர்மா,சு.4* 2.மதியின்,சு.1; மரபின், சு.2+3+4 சு.4*

பொ: சந்திரகுல மன்னனாம் பாண்டுவின் மகன் அர்ச்சுனன் பிரம்மனாலும் வெல்ல முடியாத வில்லாற்றலுடையவன். அவனுடைய மகன், பெருஞ்செல்வமாகப் பெறப்பெற்ற அபிமன்னன் ஆகும்.

அ.வி: மாமதி- சந்திரகுலம்; பூபதி- மன்னன்; விதி-பிரம்மன். (14)

36. எண்ணுந் தரமில் லையிதற் கெனவே
நண்ணுந் திறலத் தினநன் னகரின்
கண்ணன் [1]புகல்கா வலனா கிநிலம்
பண்ணுந் தவமென் றுறுபான் மையினான்.

1.புகல், சு.1; புகழ், சு.2+3+4*

பொ: இதற்கு, இணையான நகரம் இல்லையெனும்படி விளங்கின அத்தினபுரியில், நிலம் செய்த தவம் என்று சொல்லும்படி அபிமன்னன் நல்ல மன்னனாக விளங்கினான்.

ஒப்: நிலம் பண்ணும் -"நிலம் செய்தவ மென்று" கம்.பா.கை.6. (15)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கொன்றை மாலையைக் கடக்காத அபிமன்னன்

37. புரமாள வெரித்துள புங்கவனா[⊕]
மரன்மாலைக் கடக்கில னாமெனவே
செருமாள வடர்ந்த திறத்துடனே[*]
வருமாள் [1] படையத் திறல்வா ளபிமன்.

1. படையத்திறல், சு.1; படைத்திறல், சு.2+3+4*

பொ: வீமனும் அபிமன்னனும் ஒன்று சேர்ந்தால் அவர்களை வெல்வது அரிது என்று எண்ணிய சயத்திரதன், திரிபுரம் எரித்த சிவபெருமானின் கொன்றைமாலையை இருவருக்குமிடையே போட அதனைக் கடக்க விரும்பாத வீமனும் அபிமன்னனும் பின்தங்கி நிற்க, சயத்திரதன் அபிமன்னனைக் கொன்றான்.

அ.வி: மாள-அழிய; புரம் - முப்புரம்; புங்கவனாம் அரன்-பரிசுத்தமானவராகிய சிவபெருமான்; மாலை-கொன்றைமாலை.

ஒப்: "விறலபி மனின்றகள, முறுதுமினி யென்றுநனி, குறுகலும் விலங்கியது ... நறையித ழியந் தொடையே" வில்.துரோ.பதிமூ.52.

(16)

பரீட்சித்தின் மகன் சனமேசயன்

38. மனமேர் திறல்வா ளபிமற் குநெடுங்
கனமேனி முகுந்தர் தற்காத் தருளா
[1]யினமேன்மை [2]பரீக்கத னே[Ψ]குமரன்
சனமேசய னென்றொரு தார்நிருபன்.

1.யினமேன்மை, சு.1+3+4; யனமேன்மை,சு.2*2.பரீக்கதனே,சு.1; பரீக்கதனன், சு.2; பரீக்கத னென், சு.3+4*

பொ: நீண்ட உருவுடைய கண்ணன் தன் சக்கராயுதத்தால் உத்தரை வயிற்றிலிருக்கும் கருவான பரீட்சித்தைக் காப்பாற்றினார். அந்தப் பரீட்சித்தின் மகன் மாலையணிந்த ஒப்பற்ற மன்னனாகிய சனமேசயன்.

அ.வி: பரீக்கதன்-அபிமன்னனின் மகன் பரீட்சித்து; நிருபன்-அரசன்.

ஒப்: "மருமகன் தன்சந்ததியை உயிர்மீட்டு, மைத்துனன்மார்... காத்தானூர்" நாலா.404.

(17)

⊕ சிவபெருமான் முப்புரம் எரித்தது பார்க்க: பா.மா.392-401அ.

* துரியோதனனின் தங்கை துச்சளையின் கணவன் சயத்திரதன். இவன், பாண்டவர்களை அழிக்க எண்ணிச் சிவபெருமானை நோக்கித் தவம் செய்தான். அவர் அவனுக்கு அர்ச்சுனனைத் தவிரப் பிறரை அழிக்க ஒரு கொன்றைமாலை கொடுத்தார்.

Ψ கண்ணன் பரீட்சித்தைக் காப்பாற்றியது பார்க்க: பா.மா.186.
அபிமன்னன்-பரீட்சித்து-சனமேசயன்; பாண்டவர்களை வேரோடு அழிக்க எண்ணிய அசுவத்தாமன், பாண்டவர்களின் வம்சத்து அபிமன்னன் மனைவி உத்தரையின் கருவைச் சிதைக்க எண்ணி 'அபாண்டவாத்திரம்' என்ற படைக்கலத்தை ஏவினான்.

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

சனமேசயன் நீதியுடன் அரசாளல் 39-42

39. வையம் [1]பொருதுற் றிடவாழ் தருமன்
செய்யுமர சின்செயல் செய்தனனால்
மெய்யன் புகழைப் பெறவெவ் வினையின்
பொய்யென் பதுபோ யகலப் புவிமேல்.

1. பொருதுற்றிட, சு.1;பொருவுற்றிட, சு.2; புகழுற்றிட, சு.3+4*

பொ: நாட்டிற்காகப் போரிட்டு அதைப் பெற்ற தருமனைப்போல் சனமே சயன் உலகில் உண்மையான புகழ்விளங்கக், கொடிய செயல்புரியும் பொய்யானது நாட்டை விட்டு நீங்குமாறு உலகை ஆண்டான்.

அ.வி: வையம் பொருது - நாட்டிற்காகப் போரிட்டு; உற்றிட-நாடு பெற்றிட.

(18)

40. துற்றாய நெடும்படை சூழவுறுஞ்
செற்றார்களை வென்று சிறப்புடனே
மற்றாரின் மதிக்குல மேவி[1]சயம்
பெற்றாய தெனும்பெரு வாழ்[2]வுடையோன்.

1.சையம்,சு.1+2+4;சயம், சு.3*2.வுடையோன்,சு.1; வுடையான், சு.2+3+4 *

பொ: சனமேசயன், பகைவரை வென்று, சந்திரகுலமே வெற்றியின் மேம்பட்டது என்று உலகம் கூறுமாறு, சிறந்த வாழ்வை உடையவனாக விளங்கினான்.

அ.வி: துற்றாய-நெருங்கிய; செற்றார்-பகைவர்;விசயம்--வெற்றி; பெற்றாயது-பெருகியது.

(19)

41. மறைமுற்றிய வேள்வியின் மன்னர்நெறிப்
பொறைமுற்றிய கேள்வியினிற் புரைதீர்
நிறைமுற்றிய கல்வியி னீணிதியின்
குறைவற்ற புகட்கொரு கொள்கையினான்.

பொ: சனமேசயன், யாகம் செய்வதிலும், முதிர்ந்த கேள்வி அறிவிலும், குற்றமில்லாக் கல்வியிலும், குறைவற்ற செல்வன் என்ற புகழிலும் சிறக்கும் ஒப்பற்ற கொள்கை உடையவனாகத் திகழ்ந்தான்.

ஒப்: புகட்கு- பார்க்க: பா.மா. 7-இன் வீரசோழிய மேற்கோள்.

(20)

42. ஈரொன்ப தெனச்சொல் புராணமு[ᴪ] முன்
நேருந் திறல்மன்னர் செய்நீ ணெறியுஞ்
சேரும் முனிவோ ருரைசெய் திடவே
[1] பாரம் பெறு[2]கேண்மை கொள்பான் மையினான்.

[ᴪ] பதினெண் புராணம் பார்க்க: பா.மா.13.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

1.பாரம், சு.1+3+4; பாரும், சு.2* 2. கேண்மை, சு.1+3+4; கேள்வி, சு.2*

பொ: பதினெட்டுப் புராணங்களிலும் கூறப்பட்ட, மன்னர் வாழவேண்டிய நெறிமுறைகளைச் சனமேசயனிடம் முனிவர்கள் எடுத்துரைக்கச், சனமேசயன் அவற்றில் கூறியபடி, அரசாட்சி செலுத்தும் தன்மையுடையவன் ஆனான்.
அ.வி: ஈரொன்பது-பதினெட்டு; கேண்மை-நட்பு; பாரம்-பெருமை. (21)

வியாசர் வருகை

43. பொழுதா யதவத் திடைபோ கவிடான்
முழுதா கியகேள் வியின்முற் றுறுநா
ளெழுதா மறைமா முனியெய் துதலுந்
தொழுதா தரவொடு துதித்த னனால்.

1.முற்றுறுநா, சு.1+2; முற்றிடுநா, சு.3+4*

பொ: காலத்தை வீணாகக் கழிக்காமல் சிறந்த நூல்கள் கேட்பதில் செலவிட்ட சனமேசயன், அங்கு வந்த வியாச முனிவரை அன்போடு வணங்கினான்.
அ.வி: அவத்திடை- வீணாக; எழுதா மறை மாமுனி - வேத வியாசமுனிவர்.

(22)

சனமே சயன் கூற்று 44-49

44. ஈரெண் ணுபசார வியற்கையினான்[ψ]
சீரெண் டவிசிற் கொடுசென் றுளபின்
னீரெண் சடையா[+] னிகர்மா முனியைப்
பாரெண் ணியமன் னர்பிரான் பகர்வான்.

பொ: சனமேசயன்(வியாச முனிவருக்குப்) பதினாறுவகை உபசாரம் செய்து, கங்கையைத் தன் சடையில் கொண்ட சிவபெருமானுக்கு ஒப்பானவரான வியாசமுனிவரை அழைத்துச் சென்று இருக்கையில் அமரச் செய்தான்.
அ.வி: ஈரெண் உபசாரம் - பதினாறு வகை உபசாரம் (சோடசோபசாரம்) நீர் எண் சடையான் - கங்கை நீர் இயங்கும் சடையுடைய சிவபெருமான், தவிசு-ஆசனம்/இருக்கை; பார் எண்ணிய – உலகோர் பாராட்டிய.

(23)

45. காலங்களு [1] மெண்ணில் கணக்கிலதாம்
ஞாலங்களு நல்வினை தீவினையின்
சீலங்களு மென்பதெ ரிந்துளபேர்
மேலெங்குளர் [2] நின்னலர் மெய்முனியே.

ψ 1.ஆசனம், 2.சுவாகதம், 3.பாத்தியம், 4.அர்க்கியம், 5. ஆசமனீயம், 6.மதுபர்க் கம், 7.ஆசமனம், 8.சனனம், 9.ஆடை, 10. ஆபரணம், 11.கந்தம், 12.புஷ்பம், 13.தூபம், 14.தீபம், 15.நைவேத்யம், 16. வந்தனம்
+ சிவபெருமான், கங்கையைத் தலையில் வைத்திருப்பது, பார்க்க: பா.மா.22.

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

1.மெண்ணில், சு.1; மெண்ணு, சு.3+4* 2. நின்னலர், சு.1+3; நீயல, சு.2; நின்மலா, சு.4*

பொ: சனமேசயன், எண்ணற்ற காலநிகழ்ச்சிகளையும், உலகங்களையும், நல்வினை, தீவினைகளின் தன்மைகளையும் பற்றி உன்னைத் (வியாசரை) தவிர மேலாக அறிந்தவர் வேறு இல்லை", என்றான்.

(24)

46. குரவோரையு [1] மெண்ணில் குலத்தினரா
முரவோரையு மொத்துல கத்தரசாள்
திரவோரையு மெண்ணில திப்பழிதான்
வரவோதை யமர்க்கண் மலைந்துறவே.

1. மெண்ணில், சு.1; மெண்ணு, சு.2+3+4*

பொ: "குரு, உறவினர், மன்னர் என்றெண்ணாது அவர்களை எதிர்த்துப் போர் செய்ததால் நம்மை வந்து சேர்ந்தபழி கணக்கற்றது" (என்றான் சனமேசயன்)

அ.வி: குரவோர்-குரு; உரவோர்-உறவினர்; திரவோர்-மன்னர்; அமர்க்கண் மலைந்து-போரில் எதிர்த்துப் போர் செய்து; எண்இலது-கணக்கற்றது; வர ஓது ஐய- ஐயா, வர வேண்டிய காரணத்தைச் சொல்.

(25)

47. உரியோ [1]ரரசர்க் கெனவொப் பிலராந்
துரியோதன [2]னூற்றுவர் சொற்றிறலோர்
வரியோடை மதக்கரி வாசியொடும்
புரியோத நெடும்படை பொன்றிடவே.

1. ரரசர்க்,சு.1; ரரசுக், சு.2+3+4*2.னூற்றுள், சு.1+3; னூறுள,சு.2+4 *

பொ: "அரசராக வர உரிமை உடையோரெனச் சிறப்பாக ஆண்ட ஒப்பற்ற துரியோதனனும், அவன் தம்பியரும் தம் கடல் போன்ற படையோடு அழிந்திட", இது குளகம்.

அ.வி: வரி-புள்ளி; வாசி-குதிரை; ஓதம் புரிநெடும்படை-கடல் போன்ற நீண்ட படை; பொன்றிட-அழிந்திட.

(26)

48. கொன்றேகள மீதுகொ டுந்தொழிலி
னின்றேபுவி யாசையி னீள்தருமன்
நன்றே[1]யர சாள்கையை யற்றுவனஞ்
சென்றேயுள னென்றுரை செப்புவரால்.

1.யரசாள்கையை, சு.1+2+3; புவியாசையை, சு.4*

பொ: "தருமன் போர்க்களத்தில் கௌரவரைக் கொன்று வென்று, பின் புவியாசையற்றுக் காடு சென்றான் என்பர்".

அ.வி: கொடுந்தொழில் - போர்த் தொழில்.

(27)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தருமன் காடுசென்ற காரணம் வினவுதல்

49. இந்துக்குல மன்னனெ னுந்தரும
னந்தப்புவி யாசையை யற்றுமகா
விந்தத்தை யடைந்தது மின்னினொடும்
வந்துற்றதென் மாமுனி கூறெனவே.

1. இந்துக்குல, சு.1; இந்தக்குல, சு.2+3+4*

பொ:"சந்திரகுலத்தைச் சேர்ந்த மன்னன் என்னும் தருமன், அரசாள்வதை விட்டுத் துரோபதியோடு காட்டிற்குச் சென்றது ஏன்? முனிவரே கூறுங்கள்", என்று சனமேசயன் வினவ.

அ.வி: இந்துக்குலம் - சந்திர குலம்; மின் - துரோபதி; மகாவிந்தம்-பெரிய காடு, மாமுனி-வியாசர்; அந்த-சுட்டு.

(28)

50. முன்னா ளினிலூழ் வினைமுற் றுதலிங்
கென்னா ளும்வில குமெனத் தகுமோ
தொன்னா ளினில்வந் திடர்சூழ் வதுதான்
மன்னாவிவை யென்றனன் மாமுனிவன்.

பொ: "முற்பிறப்பில் செய்த செயல்களின் வினைப்பயன் எந்தநாளும் விலகிப் போகுமோ? முதுமை காலத்தில் அவ்விடர் வந்துசேரும்", என்றார் வியாசர்.

அ.வி: முன்னாள்-முற்பிறப்பு; தொல்நாள்-முதுமைக்காலம். (29)

51. ஏதாகிலு மெங்கள் குலத்த வருக்
காதார மதாகிய வந்தணனா
நீதான்வரு காலநி கழ்ந்த தவர்க்
கோதாம லிருந்ததென் னுத்தமனே.

பொ: "உத்தமனே எங்கள் குலத்தவரைக் காப்பாற்றுபவராயிருந்தும் எதிர்காலம் நிகழ்பவற்றை நீ ஏன் (அவர்களிடம்) கூறுவில்லை?" என்றான் (சனமேசயன்).

குறிப்பு:அடி 3,"நிகழ்ந் தவர்க்கு" என்பது "நிகழ்வ தவர்க்கு" என்றிருக்க வேண்டும்.

(30)

52. வன்மீ கனுநா ரதமா முனியு
முன்மீதுறு செய்கை மொழிந்தனரால்
[1]றன்மீகனி [2]டம்மொழி@ தந்திலையே
நின்மீதினி லிப்பழி நின்றதுவே.

1. றன்மீகனு,சு.1+3+4; றன்மீகனி,சு.2*2.மிம்மொழி, சு.1+3+4; டம்மொழி, சு.2*

@ சனமேசயன், வியாசரிடம் இங்கனம் கூறியது பார்க்க: பா.மா.62.

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

பொ: "வால்மீகி முனிவரும், நாரதமுனிவரும் முன்கூட்டியே எதிர்காலத்தில் நிகழப் போவதைக் கூறினார்" (என்றார்). "தருமபுத்திரனிடம் இதனை நீர் கூறாத பழி உம்மை வந்தடைந்ததே" என்றான். (சனமே சயன்).

அ.வி: வன்மீகன்-வால்மீகி முனிவர்; தன்மீகன்-தருமபுத்திரன். (31)

வியாசர் சனமேசயனை எச்சரித்தல்

53. என்னப் புகல் மன்னனை யேமுனிவன்
முன்னைத்தொடர் [1]தேரினின் மோகமுறா
வுன்னிப்புகல் கின்றன[ψ] னோன்றதுதான்
நின்னைத் தொடரா வகைநீங் குதியால்.

1. தேரினின்,சு.1; தேரினு,சு.2+3+4*

பொ: என்று கூறிய சனமேசயனிடம் வியாசர், "உனது பழைய வினையை உணர்ந்துள்ளேன். அதனை இப்போது குறிப்பிடுகிறேன். அவ்வினை உன்னைத் தொடரா வண்ணம் தவம் செய்து நீக்கிக்கொள்" என்றார்.

'தேரினின்' என்பது 'தேரினன்' என்று இருப்பின் சிறக்கும்.

அ.வி: முன்னைத் தொடர் - பழைய வினை; தேரினின்-உணர்ந்துள்ளேன்; மோகம்-பற்று; நோன்று- தவம் செய்து.

ஒப்: "வேந்தமுனி சொல்லுகிறார், யாகம் வளர்க்க வென்று அரசனே நீ நினைத்தாய், ... யாகம் பலிக்காது காணுமக்கு, மாற்ற உனக்கு வகையுண்டோமாகில், என்னைச் சலித்து மெள்ளளவும் குற்றமில்லை" வைகு.ப.79. வியாசர் கூறிய மொழி பார்க்க : பா.மா.54, 59.

(32)

54. வருமா பிரமத்தியு நின்வ யின்மன்
னருமாதவ [1]னென்னில கற்றுதி யென்
[2]றொருமா முனி யேகின னோதியதைத்
திரமாக நினைந்துள செகையினான்.

1.னென்னில, சு.1; நேரில, சு.2+3*2.றொருமா, சு.1; றுரைமா, சு.2+3+4*

பொ: வியாசர், "அந்தணரைக் கொன்ற பாவம் உன்னைத் தொடர உள்ளது. அதனை நீக்கிக் கொள்", என்று கூறிச் சென்றார். முனிவர் கூறியதை மனத்தில் உறுதியாக நினைத்த வண்ணம் சனமேசயன் இருந்தான்.

அ.வி: பிரமத்தி(பிரம்மகத்தி) -அந்தணரைக் கொன்ற பாவம்.

ஒப்: "பத்துடன் இரண்டு நாளில் பாவம் வந்தடையு தென்றான். தஞ்.17.

(33)

[ψ] வியாசர் கூறிய மொழி பார்க்க: பா.மா, 53.59.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சனமேசயன் வேள்வி செய்தல்

55. சிலநாள்கள் கழிந்துள பின்புதிறம்
[1]பலநாமமு [2]முள்ளதோர் பான்மையினால்
குலமாமறை யோரருள் கொண்டுமிகும்
நலமாமக மொன்றுந டத்திடுவான்.

1.பலநாமமு,சு.1; பலநாமொழி, சு.2+3+4* 2.முள்ளதோர், சு.1; யுள்ளதோர், சு.2+3+4*

பொ: சிலநாள்கள் சென்றபின், புகழ் மிகுந்த சனமே சயன் அந்தணர் உதவியுடன் நலம் தரும் ஒரு யாகம் செய்தான்.

அ.வி: நாமம்-புகழ்; பான்மை-இயல்பு; மகம்-யாகம். (34)

அந்தணனை அரசன் உணர்த்துதல்

56. ஓமம்புரி லேதிய ரிலொருவன்
மாமந்திர மொன்றும றந்துதுயி
லாமங்கது கண்டர சன்கரமே
னீமம்பயில் தெற்பையை நீட்டுதலும்.

பொ: வேள்வி செய்த அந்தணர்களில் ஒருவன் மந்திரம் சொல்லாமல் உறங்கியதைக் கண்ட சனமேசயன் அவனை விழிக்கச் செய்வதற்காகத் தர்ப்பைப் புல்லை அவன் கை மீது நீட்டவும்- இது குளகம்.

அ.வி: ஓமம்-வேள்வி; நீமம்-ஒளி; தெற்பை-தர்ப்பைப்புல்.

ஒப்:"ஐயோ மறையவ னக்கினியி லசந்து விழுவானென வெண்ணி, கையால் தெர்ப்பைத் தனை... கழுத்திற் பிடரியதிற் றொடவே" வைகு.ப.81. "தெய்வ மறையவனைத் தேர் வேந்தன், கையிலோர் தெர்ப்பையினால் விட்டெறிய" பெருந்.2. "இலைத்தலைய பழு மரத்தின் மிசை முன்னா ளெய்த்தொரு, கொலைத் தலைய கூர்வாளி கோப்புண்டு கிடந்தது ... மானோக்கி வயிறுருவத் தைத்தென் றால்" திருவிளை. பழி.8.

(35)

கனவில் புலியைக் கண்டு வெருளல்

57. வீயுந்துயி லானவி னைக்கனவே
யாயங்கது தானோர ரும்புலிமுன்
பாயுந்திறல் [1]போல்மெய் [2]மனங்கதுவா
காயும்பல் புலிக்கையெ னத்தளர்வான்.

1.போல்மெய்,சு.1+3+4; கொண்ட, சு.2* 2. மனங்கதுவா, சு.1+3; பயங்க துவா, சு.2+4*

பொ: வீழ்த்தும் உறக்கத்தில் அந்தணன் ஒரு புலி அவன்மீது பாய்வதாகக் கனவு கண்டு மனந் தளர்ந்தான்.

அ.வி: வீயும்-வீழ்த்தும்: மனங்கதுவா- மனத்தில் கொண்டு,

Digitization by Hindu-Heritage-Foundation of America-HHFA(USA)

குறிப்பு: வேயும் பல் என்பது காயும்புல் என மாற்றப்பெற்றது.

ஒப்: அந்த உறக்கத்தில் . . சொற்பனமும் . . காட்டில்புலி பாய்ந்த தென்று கலங்கியுடல் பதறி மடிந்தான் பிராமணனும்" வைகு.பக்.80-81. "சொற்பனந் தன்னில் பாய்ந்து துரத்திடும் புலி ... பாய்ந்தது" தஞ்.23. "உடம்பீண் டொழிய உயிர்பல காவதம், கடந்து சேட் சேறல் கனவினுங் காண்குறை, யாங்கனம் போகி யவ்வுயிர் ... யாக்கையிற் புகுவது தெளிநீ " மணி.16:102-105.

(36)

அந்தணன் இறத்தல்

58. கற்பித்தவர் கல்வியி னாகியநல்
விற்புத்தியி னர்க்கும்வி லக்கரிதாற்
தெற்பைப்புல் படப்படு செவ்வயில்போ[@]
லற்பத்தி லிறந்தன னந்தணனே.

பொ: கற்றுத் தேர்ந்த சிறந்த அறிவுடையவர்க்கும் (விதியை) நீக்குவது அரிது. ஆகையால், அந்தணன் தர்ப்பைப் புல் தன்மீது பட்டதும், கனவில் கண்ட புலி பாய்வதாகக் கனவை நனவாக நினைத்துத் தெர்ப்பைப் புல்பட்ட வேல் அழிவதுபோல் இறந்தான்.

அ.வி: செவ்வயில்-செம்மையான வேல். மூன்றாவதடி உவமை. (37)

சனமேசயன் துயருறுதல்

59. முன்னேமுனி கூறுமொ ழிப்படியே
யென்னேபழி வந்ததி[*] சைந்ததெனாத்
தன்னேரில் புகட்சன மேசயனாம்
மன்னேய வுறுந்துயர் மட்டிலையே.

பொ: வியாசர் கூறியதுபோல் அந்தணனைக் கொன்ற பழி வந்து சேர்ந்ததே என்று சனமேசயன் அடைந்த துன்பத்திற்கு அளவில்லை.

அ.வி: பழி-அந்தணனைக் கொன்ற பாவம்; இசைந்தது-சேர்ந்தது. மன்னே யவுறும்-மன்+ஏய+உறும்; ஏய உறும் துயர்- பொருந்திய மிக்க துன்பம். (38)

வியாசமுனிவரின் வருகை

60. துனியார் பிரமத்தித் தொலைந்திடவே
[1]யினியானேது செய்குவ னென்னுமதோர்
நினைவாய வயிர்ப்பொடு நிற்பவன்முன்
முனிவேத வியாதனு முன்னினனால்.

1.யினியாயது, சு.1+4; யினியானேது, சு.2+3*

[@] அந்தணன் இறந்தது பற்றிக் கூறுவது பார்க்க: பா.மா.62.
[*] வியாசர் கூறிய மொழி பார்க்க: பா.மா.53.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பொ: அந்தணனைக் கொன்ற பாவத்தை நீக்க இனி என்ன செய்வது என்றெண்ணி வருந்திய சனமேசயனின் முன் சினம் கொள்ளாத வியாசமுனிவர் வந்தார்.

அ.வி: துனி-துன்பம்; அயிர்ப்பு-சோர்வு; வியாதன்-வியாசமுனிவன்

61. சென்றேயெதிர் கொண்டுறு தீவினையை (39)
வென்றேனெனு [1]மென்னுழி வீரமறைக்
குன்றேவரு கென்றருள் கூர்பரிவி
னென்றேமணி யாசன மேற்றியபின்.

1.மென்னுழி, சு.1+3+4; மென்னொடுநீ, சு.2*

பொ: சனமேசயன், "தீவினையை வென்றுவிடுவேன் என்று அறியாமையால் கூறிய என்னிடம், ஞானவீரியமுடைய வேதமலை போன்றவரே வருக" என்று வியாசரை அன்புடன் ஆசனத் தில் அமரச் செய்தான்.

அ.வி: உழி-இடம்; மறைக்குன்று-ஞானமுடைய வேத மலை போன்றவர்.

(40)

சனமேசயன் நடந்ததைக் கூறுதல்

62. கைவேல்நிகர் தெற்பைக டிந்துருவா
மெய்வேதிய னல்லுயிர் வீடியதுஞ்
செய்வேள்வி யழிந்துள செய்கையது[♦]
நைவோடு முனிக்குரை [1]நண்ணுவரால்

1. நண்ணுவரால், சு.1; நல்கிடுவான், சு.2; நல்குவனால், சு.3+4*

பொ: வேலுக்கு ஒப்பான தர்ப்பைப்புல்லால் அந்தணன் உயிர் பிரிந்ததும், அதனால் வேள்வி நின்றுவிட்ட செயலையும் சனமேசயன் வியாசரிடம் துன்பத்தோடு கூறினான்.

அ.வி: கடிந்து-தண்டித்து;உருவா-உருவி; வீடியதும்-இறந்ததும்; நைவோடு-துன்பத்தோடு.

ஒப்: கைவேல்-"கைவேல் களிற்றொடு" குறள்.774. (41)

63. உன்னா[1]துனை யுன்னி [2]முனைந்தனைநா
னன்னாளொரு புன்மொழி[Ψ] யாடியதா
லென்னால்வரு மிப்பழி யிங்கொழிதல்
நின்னாலல தில்லென நெஞ்சுருகா.

1. துனை யுன்னி சு.1; தெதிருனனி, சு.2+3+4* 2.முனைந் தனைநா, சு.1; முனிந்துனைநா, சு.2+3+4*

[♦] அந்தணன் இறந்தது. பார்க்க: பா.மா.56-58.

[Ψ] சனமேசயன் வியாசரிடம் குறை கூறியது பார்க்க: பா.மா.52.

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

பொ: சனமேசயன், "உம்மை உள்ளவாறு உணராமல், தவறாகக் கருதி அன்று குறை கூறியதால் எனக்கேற்பட்ட இப்பழியை உம்மால் அன்றி வேறு யாராலும் நீக்க இயலாதென்று வருந்தி".

அ.வி: புன்மொழி-சனமேசயன் வியாசரைக் குறை கூறிய சொல். (42)

64. உளைவான மனத்தொடு யிர்க்குமவன்
வளைவாயுரை வாய்மை மகிழ்ந்துறவே
விளைவார்பழி யாகிய வெவ்வினையைக்
களைவானு நினைந்துரை கட்டுறுவான்.

பொ:சனமேசயன் வருந்திய மனத்தொடு பணிந்து கூறியதைக் கேட்டு வியாசர், கொடிய பழிச் செயலை நீக்கும் வழியைக் கூறலானார்.

அ.வி: உளைவான-வருந்திய; வளைவாய்-பணிவாய். (43)

மாவிந்தக் கதை கேள் எனல்

65. பூபார [1]மகற்ற வெழுந் துளவோன்*
பூபாலனெ னப்புவியின் புடைவாழ்
மாபாதக மன்னரை மாளவுறு
மாபாரத நூலைம னத்துறவே.

1. மகற்றவெழுந், சு.1+3+4; மகற்றுப் புகட், சு.2*

பொ: "பூமியின் பாரம் நீங்க அவதரித்த திருமால், மன்னர்களாக உலகில் வாழ்ந்த கொடியவரான கௌரவர் முதலியோரை அழியச்செய்த மகாபாரத நூலை மனத்தில் நினைத்து", - இது குளகம்.

அ.வி: துளவோன்-துளசிமாலையணிந்த திருமால்; பூபாலன்-அரசன்; மாபாதக மன்னர்-கொடுங்கோல் அரசரான கௌரவர்முதலியோர். (44)

66. சிந்திப்பன வென்றுள சீரரசின்
[1] பந்தத் தொடர் [2]பற்றமனத் தருமன்
விந்தத்தை யடைந்துயர் விண்ணரசா
ளந்தக்கதை கேள்பழி யற்றிடவே.

1.னந்தத், சு.1; பந்தத், சு.2+3+4* 2. பற்றபனிற், சு.1; பற்றமனத், சு.2; பற்ற பணித், சு.3+4*

பொ: "(உனக்கேற்பட்ட) பழிபாவம் நீங்கிட, அரசாட்சியில் பற்று நீங்கிய தருமன் வைகுண்டம் சென்று விண்ணுலகையாண்ட அந்தக் கதையைக் கேள்", என்றார் வியாசர்.

அ.வி: பந்தம்-பற்று; விந்தம்-காடு; அந்தக்கதை-வைகுண்டம் சென்ற கதை.

ஒப்:"பத்தியாய் பாரதக்கதை ...கேட்டீரோ .. கிலேச மெல்லாம் தீர்ந்து விடும்"வைகு.ப.83. (45)

* கண்ணன் பூமி பாரம் ஒழித்தது. பார்க்க: பா.மா.14.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கதை கேட்கும் முறை 67-69

67. தனிவானமர் மின்னொடு தாரகையு
மினிதாக விளங்குமி யற்கையென
நனிதாழ விதானந லந்திகழப்
பனிமாமலர் மாலைப ரந்தொளிர.

பொ: கதைகேட்கும் இடம் (மண்டபம்) வானில் உள்ள மின்னலுடன் நட்சத்திரங்களும் விளங்க இருக்கும் தன்மைபோல், மேற்கூரையில் குளிர்ந்த மலர்மாலைகள் அழகுடன் திகழ; -இது குளகம்.

குறிப்பு: முதலடியில் சுவடிகளில் காணப்பட்ட "தனிவானவரு" என்பது "தனிவானமர்" என்று கொள்ளப்பெற்றது.

அ.வி: தாரகை-நட்சத்திரம்; விதானம்-மேற்கூரை, வானவர் என்பது வானமர் என இருப்பின் சிறக்கும். (46)

68. தனுவின் கதிர்மே வுறுதண் மதியின்
புனிதம் பெறவே புனலா டியரோ
பனிவெண் மதிசூடி பதந் தொழுதே
யினிதின் [1] கதைகேட்க⊚ யியன்றபின் ✤

1. கதைகேட்க, சு.1; மணிமாட, சு.3+4*2. யியன்றபின், சு.1; மதேறிய பின், சு.3+4(சு.2 விடு)*

பொ: "மார்கழிமாதம் பௌர்ணமி அன்று நீராடிச் சிவபெருமானைத் தொழுது கதையைக் கேள்" என்றார் வியாசமுனிவர்.

அ.வி: தனு-மார்கழி மாதம்; கதிர்மேவுறு தண்மதி-பௌர்ணமி; பனிவெண் மதிசூடி-குளிர்ச்சியும் வெண்மையுமான சந்திரனைத் தலையில் சூடிய சிவபெருமான்; எழுதி-எழுக. (47)

அந்தணர்க்கு உணவளித்தல்

69. அருமா மறையோர்க் கினிதா மடிசில்
பரிவோ டுதவிப் பரம னருள்சேர்
குருபாதம் வணங்கி யொர்கொள் கையதா
யொரு[1]நாள் மறவாம [2]லுவப்புடனே .

1.நாளயர்வா, சு.1+3+4; நாள் மறவாம, சு.2* 2. யுடனே கிடுமே, சு.1+3+4; லுவப் புடனே, சு.2*

பொ:சனமேசயன் அந்தணர்க்கு உணவளித்து, சிவனருள் பொருந்திய வியாசமுனிவரை வணங்கி ஒரு நாளும் மறவாது கதைகேட்கச் சென்றான்.

அ.வி: பரமன்-சிவபெருமான்; அடிசில்-உணவு; குரு-வியாசமுனிவர். (48)

⊚ குறிப்பு: "இற்றை நாளிலும் கிராமங்களில் அறுவடை முடிந்து ஓய்வாக இருக்கும் நாட்க ளில் பாரதம் படிக்கப்படுகிறது; இறுதி நாளில் தீ மிதியும் நடைபெறுகிறது. பாரதம் படிப்போர் தூய்மையுடன் இருப்பர். திருச்சிராப்பள்ளி, தென்னார்க்காடு, தஞ்சாவூர் போன்ற மாவட்டங்களில் இன்றும் பாரதம் படிக்கும் வழக்கம் இருப்பதைக் காணலாம் (பாரத நூல்களின் திறனாய்வு. பக்.45- 46.)

✤ பாடல் 68 சுவடி 2 இல் இல்லை.

69 அ. [1]தினையம் பொழுதும் பலசிந் தையர்க்
கனவின்படி [2]கேள்வி கருத்துறநின்
வினையென்பன யாவையும் வீட்டிடுமேல்
நினையும்பிர மத்தியும் நீங்கிடுமே.

1. தினையம், சு.2; தினையின், சு.3+4(சு.1வி) * 2. கேள்விகருத் துறநின், சு.2; கேள்கருத் துளதென, சு.3; கேட்பின் கருத்துள தென, சு.4*

பொ: "பலவித எண்ணம் கொண்டோர் சிறிது நேரமாவது பெரியோர் வரலாறு கருத்துடன் கேட்டால், நிலைத்து நிற்கும் தீவினையாவும் நீங்கிவிடும், உனக்கும் அந்தணனைக் கொன்ற பாவம் விலகும்", என்றார் வியாசமுனிவர்.

அ.வி: தினையம் பொழுது-சிறிது நேரம்; கனவு-எண்ணம். (48 அ)

சனமேசயன் மாவிந்தக் கதை கூற வேண்டுதல்

70. என்றோதிய மாமுனி யோர்கழலி
னின்றோனும் வணங்கின னேர்சமரின்
வென்றோரவர் செய்தியும் விந்தமதிற்
சென்றோர்[1]கதைநீ ரருள்செய் கெனலும்.

1.கதிநீய, சு.1; கதைநீய, சு.2+3; கதைநீர, சு.4*

பொ. சனமேசயன் வியாசரை வணங்கினான். "பாரதப் போரில் வென்ற பாண்டவர்கள் செய்த செயல்களையும், அவர்கள் வைகுண்டம் சென்ற கதையையும் கூறும்படி", வேண்டினான்.

அ.வி: ஓர் சமர் வென்றோர்-ஒப்பற்ற பாரதப்போரில் வென்ற பாண்டவர்கள்; முனிவோர்-முனிவர்- மரியாதைப்பன்மை. (49)

71. கேளா [1]யினிநேர் கின்ற சேனையொடு
நாளொன்பதி ரட்டியி [2]லற்றுமணித்
தோளார் துரியோ தனனுந்[3]தொடர்பு
மீளாதுயர் விண்ணுலக [4]கேறிடுநாள்.

1.யினெனக் கிளர், சு.1+3+4; யினிநேர் கின்ற,சு.2*2.லற்றுமணி, சு.1+3+4; யினாகுமணித், சு.2* 3.தொடர்பு, சு.1+3+4;தொடர்பால் சு.2* 4.கேறிடு நாள், சு.1; கேறியபின், சு.2+3+4*

பொ: இனி கதை கேட்பாயாக! எதிர்த்துநின்ற கௌரவர் சேனையொடு போரிட்டுப் பதினெட்டு நாளில் அதை அழித்துத், துரியோதனனும் பிறரும் இல்வுலகத் தொடர்பு திரும்ப வும் வாராமல் விண்ணுலகுக் கேற்றியபோது-இது குளகம்.

அ.வி:நேர்கின்ற-எதிர்க்கின்ற; நாளொன்பதிரட்டி-பதினெட்டுநாள்; அற்று-அழிந்து; தோளான்-குறிப்பு வினைமுற்று.

(50)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தருமன் நீதியுடன் அரசாளல் 71-73

71அ.[Ψ] [1]பொருவன்றகை வென்ற புவிக்கண்மேல்
முரசங்கள் [2]முழங்க [3]வுதிட்டிரனுந்
தருமங்கள் தழைத்திட முன்னுதலுங்
கருமந் தவறா வகைகா சினியின்.

1.பொருவன், சு.2; பொரவென், சு.3+4* 2. முழங்க, சு.2; முழங்கிடவே, சு.3; முழக்கிடவே, சு.4* 3. வுதிட்டிரனுந், சு.2; தரு மன், சு.3+4(சு.1வி)*

பொ: தருமன் பகைவரைவென்று, முரசுமுழங்கக் கடமை தவறாது அறம் தழைக்க உலகை ஆண்டான்.

அ.வி: வன் தகை -வலிய ஆற்றல்.

(50 அ)

72. ஆவின்றிரள் [1] பல்கவு மந்தணர்சீர்
மேவுங்கனல் வேள்வி விளங்கிடவுந்
தாவும்பகை யோர்திறை தந்திடவும்
யாவும் நலமா யரசெய் திடுநாள்.

1.பல்கவு, சு.1+2+4; மல்கவு, சு.3*

பொ:தருமன் பசுக்கூட்டம் பெருகவும், யாகங்கள் விளங்கிடவும், பகையோர் கப்பம் செலுத்திடவும் நல்ல முறையில் நாட்டை ஆளும் போது-இது குளகம். (51)

73. கவராத மனத்தொடு காசினியின்
புவிராசர் புகழ்ந்துப ணிந்திடவே
[1]யவராழி யிடத்தய லொப்பிலதாந்
துவராபதி யுற்றதொ டைத்துளவோன்[©].

1.யவராழி, சு.1; யுவராழி, சு.2+3+4*

பொ: நாடாளும் அரசர்கள் புகழ்ந்து பணிந்து வணங்கிட வாழும் துளசி மாலையணிந்த கண்ணன், கடலருகில் இருக்கும் துவாரகையை அடைந்தான்.

அ.வி: கவராத -வஞ்சமில்லாத; ஆழி-கடல்.

(52)

74. முருகார் முகில்[1]வண் ணர்தம் [2]முன்னவராய்
வரு[3]கா ரணசீ பெலதேவ னையே

[Ψ] 71அ ஆம் பாடல் அடிப்படைச் சுவடி1 இல் இல்லை.
[©] கண்ணனைத் துளவோன் என்று குறிப்பிடுவது. பார்க்க: பா.மா.93, 540, 607, 736.

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

யொருகா ரியமுண் டெனவுற் றிடலு
மருகாக [4]வணைந்திடு [5]செய்கையினான்.

1.வண்ணர்தம், சு.1+3+4; வண்ணல், சு.2* 2.முன்னவரும், சு.1; முன்னவனாய்,சு.2; முன்னவனாம்,சு.3+4* 3 காரண சீபெல,சு.1;காரண வன்பெல, சு.2; காரண சீர்பெல, சு.3+4*4. வணைந்திடு,சு1;வணைந்தருள், சு.2+3+4* 5. செய்கையினான், சு.1; செய்திடுவான், சு.2+3+4*

பொ: கண்ணன் தனக்கு மூத்தோனாய பலராமனை நோக்கி, "உன்னிடம் சொல்ல ஒரு காரியம் உண்டென்று", சொன்னதைக் கேட்டு அவனருகில் வந்தான்.

அ.வி: முருகு-அழகு; முருகார்-முருகு +ஆர், சீபலதேவன்-பலராமன். (53)

கண்ணன் பலராமனைப் பாம்பணையாகு எனல்

75. [1]தலையான துவாபர முந்தொலைய்த்
கலியானது வந்து[2]க லந்ததுமே
லலையா லுயர் பாற்கட லினணையா
நிலையாயினி முன்னட நீயெனவே.

1.தலைவான,சு.1+3; துலைவான,சு.2+4*.2.கலந்துள்மே,சு.1+3+4; கலந்ததுமே, சு.2*

பொ: "துவாபரயுகம் முடிந்து கலியுகம் வந்து கலந்துவிட்டது. நீ அலைகளுடைய பாற்கடலில் பாம்பணையாக முதலில் செல்வாயாக", என்று கண்ணன் கூற -இது குளகம்.

அ.வி:தலையான-முதன்மையான; துவாபரம் –துவாபரயுகம்; அணை-பாம்பணை; தலைவான என்பது எதுகை நோக்கி தலையான என்று மாற்றப் பெற்றது. (54)

76. நாமும் [1]*வருவோ நட நீ யெனவத்*
தேமந்துள வோனருள் செய்திடலுஞ்
சோமன்னிற மாகிய தூய்மையினா
னாமன்பின ராவணை [2]யாயினனால்.

1. வருவோ நடநீ யெனவத்,சு.2* வருவோ முன்னட நீயெனத், சு.1+3+4; 2. யாயினனால், சு.1+3+4; மேவினனால்,சு.2*

பொ: "நானும் வருவேன், நீ செல்வாயாக" என்று துளசிமாலையணிந்த கண்ணன் உரைத்ததைக் கேட்ட வெண்ணிறமுடைய பலராமன் பாம்புப் படுக்கையாக ஆனான்.

அ.வி: சோமன் நிறம்-சந்திரனைப் போன்ற வெண்மை, தூய்மையினான்-பலராமன், தேமன்-தேன் பொருந்திய, அரவணை-பாம்புப்படுக்கை. (55)

திருநாட்டுச் சருக்கம் முற்றும்.

திருநாட்டுச் சிறப்பு முற்றும், சு.1+2+4; திருநாட்டுச் சிறப்புச் சருக்க முற்றிற்று, சு.3*

****

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

2. துவராபதிச் சருக்கம்* (77-97)

(இச்சருக்கம் கண்ணன் பாண்டவர்களிடம், தான் வைகுண்டம் செல்ல இருப்பதைக் கூறி, பரீட்சித்துக்கு முடிசூட்டிவிட்டுத் துரோபதியுடன் வைகுண்டம் செல்லுமாறு அவர் களுக்கு அறிவுறுத்தியதை விளக்குகிறது).

கண்ணன், பாண்டவர்களுக்குத் தூதனுப்புதல்

எழுசீர் ஆசிரிய விருத்தம்

77. சங்க மைத்த கரத்து♥ வள்ளல்
[1]தனித்தி ருந்த [2]வுளத்தினா
[3]லிங்க ழைத்தொரு தூது வன்றனை
யணுகி யத்தின நகரியின்
துங்க மெய்த்தரு மன்ற னைப்பணி
துணைவர் தம்முடன் விரையவே
யிங்க ழைத்துடன் வருகெ னக்கடி
தென்ன வன்னவ னேகியே.

1.தனித்திருந்த, சு.1+3+4; தனித்திருந்து, சு.2* 2. வுளத்தினா, சு.1+3+ 4; மனத்தினா, சு.2* 3. லிங்க, சு.1; லங்க, சு.2+3+4 *

பொ: கண்ணன் ஒரு தூதுவனை அழைத்து, "அத்தினபுரம் சென்று தருமனை வணங்கி வாழும் அவனது தம்பியர்களுடன் துவாரகைக்கு விரைவாக அழைத்து வருவாயாக", என்று சொல்ல, அவன் சென்று,- இது குளகம்.

அ.வி: துங்கமெய்த் தருமன் - தூய்மையான உண்மை பொருந்திய தருமன்; கடிது-விரைந்து.

ஒப்: "குருபதியாரைக் கொடுவா யென்றுதான் . . மண்ணுலக மாயோன்" பெருந்.9.

(1)

தருமன் குந்தியிடம் விடைபெறல்

78. மருவி யத்தின புரம திற்புகு
வாயி [1]லற்கிது ரைத்தலுங்
குருகு லத்தும கீப னன்பொடு
கொணர்கெ னக்குரை கழற்றொழா
முருகு டைத்துள வோன❁ ருட்பணி
[2]முதல்வ [3]போதுதி யென்னமுன்
னருள்ம னத்திளை யோரோ [4]டுத்தம
னன்னை குந்தியை♆ யணுகினான்.

* துவராபதிச் சருக்கம், சு. 1+2+4; துவாரகைச் சருக்கம், சு.3*மூன்று சுவடிகளில் 'துவராபதிச் சருக்கம்' என்று காணப்படுவதால் அதுவே தலைப்பாகக் கொள்ளப்பெற்றது.

♥ கண்ணன் கையில் சங்கு வைத்திருப்பது.பார்க்க:பா.மா.132, 544, 607, 742.

❁ கண்ணன் வேடனைத் தூது அனுப்பியது பார்க்க: பா.மா.110.

Digitization by Hindu-Heritage-Foundation of America

1. லற்கிது, சு.1+3+4; லற்கது, சு 2* 2.முதல், சு.1; முதல்வ, சு.2+3+4* 3. போதுதி, சு.1+2; வோதுதி, சு.3+4* 4.டுத்தம னன்னை, சு.1; டுந் தன தன்னை, சு.2; டுந்தம தன்னை, சு.3+4*

பொ: தூதுவன் வாயிலோனிடம் (தான் வந்த விவரம்) கூற, வாயிலோன் மூலம் தருமன் தூதுவனை அழைக்கத், தூதுவன் தருமனைத் தம்பியருடன் அழைத்து வருமாறு கண்ணன் பணித்ததைக் கூறத் தருமன் துவாரகை செல்வதற்காக விடைபெறவேண்டித் தன் தம்பியருடன் அன்னை குந்தியிடம் சென்றான்.

அ.வி: மகிபன்-தருமன்; தொழா-தொழுது. (2)

கண்ணனின் அழைப்பைக் குந்தியிடம் கூறல்

79. வந்து தாள்பணி மன்ன னைத்தன்
[1]மனச்சி றப்பொடு வாழ்த்தவே
யெந்த நாளுமெ மக்கு யிர்த்துணை
யென்ன நின்றிடும் [2]துணைவனா
மந்த மாமுகில் வருக வென்ன
வழைத்த னன்னென [3]வன்பனுஞ்
சிந்தை யார [4]மகிழ்ந்து தம்பிய
ரோடு [5]சென்றுரை செய்யவே.

1.மனச்சிறப்பொடு,சு.1+3+4; மனமுவப்பொடு,சு.2* 2.துணைவனா, சு.1; இறைவனா, சு.2+3+4* 3.வன்பனுஞ், சு.1+3+ 4; வன் னைமுன், சு. 2* 4. மகிழ்ந்து, சு.1+3+4; வுவந்து, சு.2* 5. சென்றுரை, சு.1+3+4; நின்றுரை, சு.2*

பொ: குந்தி தன்னை வணங்கிய தருமனை மனமார வாழ்த்தத், தருமன் அவளிடம் கண்ணன் அவர்களை அழைத்துவரப் பணித்ததைக் கூறக் கேட்ட குந்தி மகிழ்ச்சியடைய, (தருமன்) பின்னர் அவ்விவரத்தைத் தம்பியருக்குச் சொல்ல- (குளகம்).

அ.வி:மன்னன்-தருமன்;மாமுகில்-திருமால்; உயிர்த்துணை- உவமை. (3)

தருமன் தம்பியருடன் துவாரகை அடைதல்

80. பட்ட வத்தனர் [1] மகுட வத்தனர்
தம்மொடுங் கனபடை யோடு
மட்ட திக்குள மன்னர் தம்மொடு
மணிகொ ளத்தின [2]புரியினா
[3]னிட்ட மொத்துள துணைவர் நால்வரு
மிரும ருங்கினு மெய்தவே

[v]குறிப்பு: வியாசபாரத ஆசிரம வாசிகப் பருவம் குந்தியும் காந்தாரியும் இறந்துவிட்டனர் என்று கூறும். பாரதமாவிந்தத்தில் அவர்கள் உயிருடன் இருப்பதாகக் கூறப்பட்டுள்ளது. இது போலவே வியாசபாரத மௌசலப் பருவம் சாத்தகி கிருதவர்மனுடன் வழக்கிட்டு மாண்டான் எனக் கூறுகிறது பாரத மாவிந்தம். கண்ணன் இறந்த பின்னும் அவன் உயிருடன் இருப்பதாகக் குறிப்பிடுகிறது. குந்தி, பார்க்க: பா.மா.155, 192-196, 202, 2015-211; காந்தாரி, பார்க்க:பா.மா.212-215; சாத்தகி பார்க்க: பா.மா.131.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மட்டு டைத்துள வோன மர்ந்தருள்

துவரை மாநகர் மருவினான்.

1.தம்மொடு மறுபாடை மன்னவர் தம்மோடு, சு.1; மகுட வத்தனர் தம்மொடுங் கனபடை யோடு, சு.2; தம்மொடுங் கனபாடை மன்னவர் யாரோடு, சு.3+4*2. புரியினா, சு.1+3+4; புரியினின், சு.2* 3. னிட்ட, சு.1+3+4; றிட்ட, சு.2*

பொ: இளவரசரொடும், மன்னர்களொடும், எட்டுத் திசைகளிலுமுள்ள மன்னர்களோடும் அழகுடன் விளங்கும் அத்தினபுரியில் இருக்கும் தருமன், தம்பியர் நால்வரும் இரண்டு பக்கமும் உடன்வரத் துவாரகையை அடைந்தான்.

அ.வி: பட்டவத்தனர்-பட்டத்திற்குரிய இளவரசர்; மணி-அழகு; இட்டம்-விருப்பம்.

ஒப்: பட்டவர்த்தனர்-"பட்டவர்த்தனரும் மகுடவர்த்தனரும் வந்து சேவடி" வில்.உத். கிரு. 103.

(4)

பாண்டவர்களைக் கண்ணன் வரவேற்றல்

81. சென்று தூதுவர் கூற [1]நண்புள

செய்ய வைவரு முய்யவே

யன்று தூதுவ ரான் மேன்மைய

னருளி னாகிய பரிவினான்

மன்ற லோடணி மார்பி னிற்றரு

மனைய ணைத்து மகிட்சியால்

நின்ற நால்வர் வணங்கி னார்க்கருள்

[2]நெறிய [3]னாயினன் நிமலனே.

1.நண்புள, சு.1+3+4; நண்புகர், சு.2* 2.நெறிய, சு.1+3; நேய, சு.2; நெறியி, சு.4* 3. னாயினன், சு.1+3; மாயினன், சு.2; னான், சு.4*

பொ: கண்ணன்மீது நட்புப் பொருந்திய சிறந்த பாண்டவர்கள் ஐவரும் வெற்றிபெறப், பாண்டவர்களுக்காகத் (துரியோதனனிடம்) தூது சென்ற கண்ணன், தூதுவன் வாயிலாக அவர்கள் வரவை அறிந்து, அவர்களை வரவேற்றுத் தருமனைத் தழுவினான்; தம்பியர் நால்வரும் அவனை (கண்ணனை) வணங்க, அவர்களுக்கு ஆசி அருளினான் தூய்மையுடைய திருமால்.

அ.வி. நிமலன் - தூய்மையுடைய திருமால்.

ஒப்: மகிட்சி-பார்க்க: பா.மா. 7-இன் வீரசோழிய மேற்கோள்.

(5)

கண்ணன் கலிகாலத்தின் வரவைத் தெரிவித்தல்

82. மந்தி ரத்தயல் சாலை யேயறன்

மன்ன னைக்கொடு மருவினா

னுந்த னுக்குரை செய்வ [1]தென்றுள

துண்மை [2] யாயிது ணர்ந்துகேள்

சிந்தை யிற்கொடி ருத்தி நீடிய

Digitization by Hindu-Heritage-Foundation of America- HHFA(USA)

சீத ரன்[3]து வாபரம்

மந்த முற்றது [4] கலியும் வந்ததி

னருக ணைந்துள தாதலால்.

1.தென்றுள,சு.1;தொன்றுள,சு.2+3+4*2.யாயிது,சு.1+3+4; யாமிது, சு.2* 3.துபாபரம், சு.1; துவாபரம், சு.2+3+4* 4. கலியின், சு.1; கலி யும், சு.2+3+4*

பொ: கண்ணன் தருமனிடம், "உன்னிடம் ஒன்று சொல்ல உள்ளது. அதைக் கருத்துடன் கேட்பா யாகத், துவாபரயுகம் முடிந்து கலியுகம் அதனருகே நெருங்கியுள்ளது. ஆகை யால்"- இது குளகம்.

அ.வி: மந்திரத்தயல் - அருகிலுள்ள ஆலோசனை மண்டபம்; அறன் மன்னன்- தருமன்; சீதரன்- கண்ணன்; அந்தம் -முடிவு; கொடிருத்தி-கொடு+இருத்தி; எதுகை நோக்கி 'உன்றன்' என்பது உந்தன் என்றாயிற்று.

ஒப்: "அந்தரர்கோன் மைந்தருடன் ஐவரும் கொண்டுவந்து, மந்திர சாலையிலே மாயோ னும் போயிருந்தான்" வைகு.ப.22

(6)

கண்ணன், பாண்டவர்களை மகவிந்தம் வந்திடும் எனல்

83. பாரி னுக்குயர் பார மானது பார தத்தில கற்றினேஞ்[1]♦
சீரி தத்த வைகுண்ட மேவுதல் செய்து முய்திற லைவரு
[1] நீர்த மர்க்கெதி ராகி [2] வந்தவர் நீரு மெம்மிட மெய்தவே
வீர கத்திதொ லைக்க வேமக விந்தம் வந்திடும் விரைவினே.

1. நீதமர்க்கெதி, சு.1; நீர்தமக்கெதி,சு.2+3+4* 2. வந்தவர், சு.1+3+4; வந்தனிர், சு.2*

பொ: கண்ணன் தருமனிடம், "பூமி பாரத்தைப் பாரதப்போர் மூலம் அகற்றினேன். இனி வைகுண்டம் செல்ல எண்ணியுள்ளேன். உறவினர்க்குப் பகையாகி வந்தவர்களாகிய நீங்களும் என்னுடன் வைகுண்டம் அடைய வேண்டும். வீரர்களைக் கொன்ற பாவம் நீங்க, வைகுண்டம் வந்து விடுங்கள்" என்றான்.

அ.வி: வீரகத்தி- வீரர்களைக் கொன்ற பாவம்; மகவிந்தம்-வைகுண்டம்.

ஒப்:"..பூமி பாரமதுதான் தீர்த்தோம்,.. மற்றுமினி நாமுமிந்த வைகுந்த வாழ்பதிக்கு ...மாநகரம் விட்டுப்போகிறோம்," வைகு.ப. 22.

(7)

கண்ணன் கலிகாலத்தின் தன்மை கூறல்

84. மன்ன ரானவு மக்கு மாநிலம்

வசமு றாதினி வரிசைகூர்

முன்னை நாளுள வலியும் வீரமும்

முனைமு கத்தினில்" நினைவுறாச்

♦ கண்ணன் பூமிபாரம் நீக்கியது பார்க்க:பா.மா.14.

"முனை முகம் பார்க்க: பா.மா. 97.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சொன்ன வாய்மையு மெய்யு றாது
சுமந்து பெற்றுவ ளர்த்திடு
மன்னை யானவ டன்னை மைந்தர்க
[1]ளாச ரிப்பது [2]மில்லையால்.

1.ளாச ரிப்பது, சு.1+3; ளாதரிப்பது,சு.2+4*2. மில்லையால், சு.1+4; மில்லையே, சு.2(சு.3சி) *

பொழி: கண்ணன்,பாண்டவர்களிடம், "இனி நாடு உங்கள் ஆணைக்குட்படாது, முன்புள்ள வலிமையும், வீரமும் போர்க்களத்தில் நினை வுக்கு வாராது, உண்மை உண்மையாக ஆகாது, பெற்று வளர்த்த அன்னையை மைந்தர்கள் ஆதரிக்கமாட்டார்கள்", (என்றான்).

ஒப்: காலங் கலியுகங்கள் கற்பனையும் வந்ததினால், ... கொலையும் புனை சுருட்டுமே களவும், செய்யும் பரிகாசஞ் சின்ன முகாசனமும்" வைகு.ப. 25

(8)

85. மாத வங்களொ ழிந்து சாதி
வரம்ப ழிந்து தரம்பெறும்
நீதி யென்பத ழிந்து புன்மை
நிகழ்த்தும் வஞ்சக நெஞ்சராய்க்
காதல் மங்கையர் துணைவ ரென்றுள
கற்பு நன்னிலை தப்பியே
வேத மும்பல பேத [1]மாய்விடு
[2]மேலிங்ஙன் கலி காலமே♦

1.மாய்விடு,சு.1+3+4;மாய்விட, சு.2* 2.மேலிங்ஙன்,சு.1+3+4; மேவி டுங், சு.2*

பொ: "தவம் அழிந்து, குலஒழுங்கு கெட்டு, நீதி ஒழிந்து, மக்கள் பிறரை ஏமாற்றும் மனமுடையோராய் மாறி, மனைவியர் கற்புநிலை தவறி, வேதமும் திரிந்து விடும். இவ்வாறிருக்கும் கலிகாலம்.

அ.வி: தரம்பெறும்-மேன்மை பொருந்தும்; புன்மை-இழிவு.

ஒப்: "மாதவங்கள் தானழியும் வரமு மழிந்து விடும், வேதங்கள் தன் பலமும் பேதங்களாகி விடும், ... நீதி யழிந்துவிடும் நெஞ்சகமே வஞ் சமாய்", வைகு.ப.22. (9)

கண்ணன் பாண்டவர்களின் விருப்பம் வினவல்

86. ஆதலா லிங்ங னினியு [1]மக்குயர்
அரசி யற்கை தகாது[2]மே
லோத வேறிலை யெண்ண மென்னினி
யிசைய [3]வெம்மொடும் வருதிரோ
தீததா கிலு மின்ன முஞ்சில
வரசி யற்கைசெ லுத்தியே
போத நீதிநி னைத்தி ரோவும
திச்சை [4]யாயது [5]புகல்திராய்.

♦ கலிகாலத்தின் இயல்பு பார்க்க: பா.மா. 84, 85, 175, 176.

Digitization by Hindu-Heritage-Foundation of America- HHFA(USA)

1. மக்கியல், சு.1+4; மக்குயர், சு.2; யெமக்கியல், சு.3* 2.மேலோத, சு.1+4;மேலேது,சு.2, (சு.3 சி) *3.வெம்மொடும்,சு.1+3+4; வெம்முடனே, சு.2* 4. யாயது, சு.1+3+4;யானது, சு.2* புகல்திராய், சு.1; புகல்திரால், சு.2+3+4*

பொ: (கண்ணன்) "ஆகையால் நீங்கள் இனி நாட்டை ஆள்வது பொருந்தாது, என்னுடன் வைகுண்டம் வருகிறீர்களா? அன்றி இன்னும் சிலகாலம் நாட்டை ஆளவேண்டுமென்று நினைக்கிறீர்களா? உங்கள் விருப்பம் என்னவென்று சொல்லுங்கள்" (என்றான்).

ஒப்: "ஆதலா னுங்களுக்கு அரசே தானாகாது...மீளவு மப்படியே மேதினியைக் காப்பீரோ, உங்களுக்குத் தோன்றினதை உண்மையாய்ச் சொல்லுமென்றார்". வைகு.ப.23.

(10)

கண்ணன், துரியோதனன் செய்த தீங்கைக் கூறல்

87. தோய மூடுறு கழுநி ரைத்து♥
மரக்கு மாளிகை துன்றவே♦
தீயை [1]நீவியு நீடு கல்லொடு
சேர நீரிடை யிட்டும்♣மண்
மாய மாகிய சூதி [2]னாலறன்
[3]மண்ணை வவ்வியு♆, மவ்விடைப்
போய கானிடை நஞ்சினாகிய
பொய்கை கண்டது♆ மன்றியே.

♥ துரியோதனன் கழுநிரைத்தது பார்க்க: பா.மா.123, 658, 711, 743. அரக்கு மாளிகையை எரித்தது பார்க்க: பா.மா.615, 711, சூதால் நாடு கவர்ந்தது பார்க்க: பா.மா.711, 739. நச்சுப் பொய்கை கண்டது பார்க்க: பா.மா.659.

குறிப்பு: துரியோதனன் கழுநிரைத்தது: வீமனின் ஆற்றல் கண்டு பொறாமை கொண்ட துரியோதனன் ஆற்றில் கழுவை நட்டு வைத்து அந்த இடத்தில் வீமனை குதிக்கச் சொன்னான். இதையுணர்ந்த கண்ணன் வீமனைக் காப்பாற்ற எண்ணி ஒரு வரிவண்டாய்க் கழு நடப்பட்ட இடத்தில் அமர்ந்தான்; வீமன் அதைக் கண்டு, வேறிடத்தில் குதித்தான்.

♦ அரக்குமாளிகையை எரித்தது: துரியோதனன் பாண்டவர்களைக் கொல்ல எண்ணி ஓர் அரக்கு மாளிகை கொடுத்தான். பாண்டவர்கள் தூங்கும்போது அம்மாளிகையைத் தீ இட்டுக் கொளுத்தவேண்டும் என்ற துரியோதனின் எண்ணத்தை விதுரர் மூலம் அறிந்த வீமன் அம்மாளிகை எரியும்போது, யாருமறியாமல் நிலவறை வழியாகத் தருமன், தம்பியர், தாய் ஆகியோரைத் தூக்கிக்கொண்டு வெளியேறினான்.

♣ துரியோதனன் வீமனை நீரிலிட்டது: துரியோதனன் வீமன் தூங்கும்போது அவனைக் கொடிகளால் கட்டிக் கங்கையில் இட்டான். வீமன் அதனை அறுத்துக் கொண்டு கரை யேறினான்.

♆ கௌரவர்கள் சூதால் நாடு கவர்ந்தது: தருமன் இராஜசூய யாகம் செய்து புகழுடன் இருப்பது கண்டு பொறாமையடைந்த துரியோதனன் ஒரு மண்டபம் கட்டிப் பாண்டவர்களை அங்கு அழைத்தான், அவர்களுடன் சூதாடித் தோற்கடித்து அவர்களது நாட்டைக் கவர்ந்தான்.

♆ நச்சுப்பொய்கை கண்டது: பாண்டவர்கள் வனவாசம் முடிந்து நாடுபெற வந்துவிடுவர் என்று நினைத்த துரியோதனன் அவர்களைக் கொல்ல எண்ணிக் காளமா முனிவரை அழைத்து, 'அபிசார வேள்வி' செய்தான். வேள்வியில் தோன்றிய பூதத்திடம் பாண்டவர்களைக் கொல்லுமாறு வேண்டினான். அங்கு ஒரு நச்சுப் பொய்கை இருந்தது. நகுலன் குடிப்பதற்குத் தண்ணீர் கொண்டுவரச் சென்றான். அப்போது ஓர் அசரீரி தன் வினாவுக்கு விடையளித்துப் பின்னர் நீர் அருந்தக் கூறியது. நகுலன் தாகமிகுதியால் விடையளிக்காது நீர் அருந்தி மாண்டான். அவ்வாறே சகாதேவன், அர்ச்சுனன், வீமன் ஆகியோர் மாண்டனர். இறுதியாக வந்த தருமன் அசரீரியின் வினாவுக்கு விடையளித்துத் தன் தம்பியரைப் பிழைக்கச் செய்தான். பூதம் பாண்டவர்களை உண்ணாமல் முனிவரைக் கொன்றது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

1.நீவியு,சு.1+4;யேவியு,சு.2; நீவியுந்,சு.3*2.னாலயன்,சு.1; னாலிகல், சு.2; லியன், சு.3+4*
3.மன்னை, சு.1; மண்ணை, 2+3+4*

பொ: தண்ணீரில், 'கழுவை' நட்டு வைத்தும், அரக்குமாளிகை அழியத் தீயைக் கொளுத்தியும், கல்லொடு வீமனைக் கட்டி கங்கையில் இட்டும், மாயச் சூதாடிப் பாண்டவருடைய நாட்டைக் கவர்ந்தும், காட்டில் நச்சுப் பொய்கையைக் கண்டதும் அல்லாமல் , (குளகம்).
அ.வி: தோயம் - தண்ணீர்; நீவி - கொளுத்தி; அறன் - தருமன்; வவ்வி - கவர்ந்து; துன்ற - நெருங்க; கான் - துவைதவனம்.
ஒப்: "அன்று ...கழுநிரைத் தரிய வஞ்சனை செய்தான்",வில். சபா.சூது.70."ஒளிஉரு அரக்கில்லை வளிமகன் உடைத்து ... கிளைக ளோடு உயப்போகுவான்" கலித். 25. 7, 8.
(11)

88. [1]ஆறி ரண்டு பருவ முந்தனி
யருவ னத்திடை மருவவே
கூறெ னும்புவி யுங்கொ டாது
[2]குறித்து வெஞ்சமர் குறுகியே
மாறு கொண்ட [3]சுயோத னன்குரு
வான வன்முதல் மற்றுளோர்
நீறெ ழும்படி கொன்று [4] வென்ற
நிலத்தி னானச லத்தினீர்.

1.ஆறிரண்டு,சு.1+3+4;ஆறிரண்டுள,சு.2* 2.குறித்து, சு.1; கொதித்து, சு.2+3+4*
3.துயோதனன், சு.1;சுயோதனன், சு.2+3+4* 4 வென்ற, சு.1+3+4; வென்று, சு.2*

பொ: "பன்னிரண்டு ஆண்டுகள் பாண்டவர்கள் அரிய காட்டிற்குச் செல்லவே, அவர்களுக்குரிய நாடு (துரியோதனன்) கொடுக்காத தால், கௌரவர்களொடு கொடிய போர்செய்து பகை கொண்ட துரியோதனன், துரோணர் முதல் மற்றுள்ள அனைவரும் அழியும்படி கொன்று வென்ற நாட்டுக்குரியவரான உறுதிப்பாடுடைய (பாண்டவர்களாகிய) நீர்" ; (குளகம்).
அ.வி: ஆறிரண்டு பருவம் - பன்னிரண்டு ஆண்டு; கூறு-பங்கு; மாறு-பகை; சுயோதனன்-துரியோதனன்; குரு - துரோணர்; அசலத்தினீர்- உறுதிப்பாடுடையீர். (12)

தருமனின் மறுமொழி 89-94

89. இன்னி லத்துள வாசை தன்னையு
மின்ன முஞ்சில காலநீர்
நன்னி லத்தில்ந டத்தி யெம்முழை
[1]நவிலு வீரென நவிலலும்
மன்ன ருக்கொரு திலக மான
வறத்தின் மைந்தன் மறத்தினால்

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

அன்ன தத்தனை யுஞ்செய் தார்*திரு
வடிகள் வேறுள ராரென.

1. நவிலு, சு.1; நணுகு, சு.2+3+4*

பொ: "இவ்வுலகில் இனியும் சிறிது காலம் அரசாள வேண்டுமென்ற விருப்பத்தை நிறைவேற்றி வைகுண்டம் அடைவீர்கள்", என்று கண்ணன் கூறியதும், மன்னர்க்கு மன்னனாகிய தருமன், "எமக்கு ஏற்பட்ட எல்லாத் துன்பங்களிலிருந்தும் எம்மைக் காத்த உம்மையன்றி வேறுயார் எமக்கு உள்ளார்", என்று சொல்ல;

அ.வி: திருவடிகள் - கடவுளாகிய நீர்.

ஒப்: அடி 4. "திருவடியை நாரணனைக் கேசவனை" நாலா.2512. (13)

90. விதுரன் வில்லைமு றித்தும்♦ வேதியன்
மகனை வெஞ்சம ரகலவே♣
துதிப ரந்தவ ருக்கன் மைந்தன்
றொடுக்கும் வாளிக டக்கவே♥
[1]சதிர்பு னைந்துமி றந்தி டாது
தனஞ்செ யன்றனி யாழியிற்
கதிர்த கைந்தும்♆ வல் லிரத மூர்வினை
கருது சாரதி♣ யாயுமே.

1. சதிர், சு.1; சதுர், சு.2+3+4*

---

* பா.மா.87, 88.

♦விதுரன் வில்லை ஒடித்தது: கண்ணன் பாண்டவர்களின் தூதனாகச் சென்றபோது விதுரனின் வீட்டில் விருந்துண்டான். துரியோதனன் இதைக் கண்டு விதுரனை இகழ்ந்தான். அதனால் விதுரன் தனது வில்லை ஒடித்துப் போர் செய்யேன் என்று போர் செய்வதிலி ருந்து நீங்கினான்.

கண்ணன் சக்கரத்தால் சூரியனை மறைத்தது, பார்க்க: பா.மா.662, 738. கண்ணன் தேரோட்டியாக இருந்தது பார்க்க:பா.மா.129, 148, 331, 529, 592, 594, 661.

♣அசுவத்தாமன் போரிலிருந்து விலகியது: கண்ணன், பாண்டவர்கள் அசுவத்தாமனை வெல்வது கடினம் என்பதை உணர்ந்து அசுவத்தாமன் மீது துரியோதனன் ஐயம் கொள்ளும்படித் தன் கணையாழியைக் கீழே போட்டு அதை அசுவத்தாமனை எடுத்துத் தருமாறுசெய்து, அவனிடம் வானத்தில் சூரியனைக் காட்டினார். துரியோதனன் இதைக் கண்டு, அசுவத்தாமன் கண்ணனுக்கு ஏதோ உறுதிமொழி அளித்துவிட்டான் என ஐயம் கொண்டு அசுவத்தாமனுக்குப் படைத்தலைமை அளிக்கவில்லை.பார்க்க: பா.மா.660

♥ கண்ணன், கர்ணனின் அம்பை விலகச் செய்தது: பாரதப்போரில் கர்ணன் அர்ச்சுனன் மீது நாகாஸ்திரம் ஏவினான். கண்ணன் தேரைப் பூமியில் அழுத்தியமையால் நாகாஸ்திரம் அர்ச்சுனனைக் கொல்லாது அவன் முடியை அடித்துச் சென்றது.

♆ கண்ணன் சூரியனைச் சக்கரத்தால் மறைத்தது: சயத்திரதன் பாரதப்போரில் அர்ச்சுனன் மகன் அபிமன்னனைக் கொன்றான். இதைக் கண்ட அர்ச்சுனன், மறுநாள் பொழுது போவதற்குள் சயத்திரதனைக் கொல்லா விடில் தீயில் விழுந்து இறப்பதாகச் சபதமிட்டான். துரியோதனன், மறுநாள் முழுவதும் சயத்திரதனைக் காப்பாற்றிவிட்டால் அர்ச்சுனன் இறந்து போவான் என எண்ணிச் சயத்திரதனை நிலவறையில் ஒளித்து வைத்தான். கண்ணன் தன் சக்கராயுதத்தால் சூரியனை மறைத்தான். சயத்திரதன் பொழுது மறைந்துவிட்டதென்று எண்ணி நிலவறையிலிருந்து வெளியில் வந்தான். கண்ணன் சூரியனை மறைத்த சக்கரத்தை விலக்கிச் சயத்திரதனைக் கொல்லும்படி அர்ச்சுனனிடம் கூறினான். பார்க்க: பா.மா.662, 738.

♣ கண்ணன் தேரோட்டியானது: அர்ச்சுனனும் துரியோதனனும் கண்ணனின் உதவியை நாடினர். கண்ணன் அவரது படையைத் துரியோதனனுக்குக் கொடுத்துப் போரில் படையைத் தொடுவதில்லை என வாக்களித்தான். அர்ச்சுனன் விரும்பிய வண்ணம் அவனுக்குத் தேரோட்டியாக இருக்க உடன்பட்டான்.

♆ கண்ணன் பூமி பாரம் நீக்கியது பார்க்க: பா.மா.14.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பொ: "விதுரனைப் பாரதப்போரில் கலந்து கொள்ளாது வில்லை முறிக்கச் செய்தும், அசுவத்தாமனைப் போரினின்று அகலச் செய்தும், கர்ணன் தொடுக்கும் நாகாஸ்திரம் அர்ச்சுனன் மீது படாமல் கடந்துசெல்லச் சூழ்ச்சிசெய்தும், அர்ச்சுனன் இறந்து போகாமலிருக்கச் சக்கராயுதத்தால் சூரியனை மறைத்தும், அவனுக்குத் தேரோட்டியாக இருந்தும்"; (குளகம்).

அ.வி: விதுரன் - திருதராட்டிரனின் தம்பி; வேதியன் மகன்- (துரோணர் மகன்) அசுவத்தாமன்; அருக்கன் மகன்-கதிரவன் மகன் கர்ணன்; வாளி-நாகாஸ்திரம்; தனஞ்செயன்-அர்ச்சுனன்; தகைந்து-மறைத்து.

ஒப்: "சமரினின்று வெங்கணை தொடேன்... வில்லதனை வேறி ரண்டு படவெட்டினான்" வில்.உக்.கிரு.131. "இனிவந் துறவாய் நின்றாலு மெங்ஙென்...சொன்னானிடியே றன்னானே" வில்.உத்.கிரு. 228. "அலர்கதி தந்தருள் காளையம் பெனவிடு மரவு தனஞ்செயன் மார்பையும்... விலகி" வில்.கன்.பதினே.224. "மாயோன், ஓராழி யேழு பரித்தேரு டையானை மாயையினா லொழிக்கத் தன்கைக் கூராழி பணித்தலும்" வில்.துரோ.பதினான்.164.

(14)

91. இப்ப டிக்கு வகுத்த வாய்மையை
[1]யெட்டி ரட்டியி ரண்டெனச்
செப்பு தற்குள் வக்கு ரோணிகொள்
சேனை வானக மேறவே
அப்ப டிக்குறு பார [2]மற்றிட[ψ]
[3] வெய்ய ரானவ [4]ருய்யவே
தப்பு வித்தனை யமரி னின்னருள்
தன்னை யார்வச முன்னவே.

1. யெட்டி,சு.1+2+3; யோரிரட்டி, சு.4* 2. மற்றிட, சு.1+3+4; ழித்திட, சு 2*3. வெய்ய பாதக, சு.1+3+4; வைவ ரானவ, சு2* 4.ரைவரை, சு.1+3+4; ருய்யவே, சு.2*

பொ: "பூமியின் சுமை நீங்கிடவும், பாண்டவர்கள் உயிர் வாழவும், பாரதப்போரில் பதினெட்டு அக்கரோணி அளவுள்ளபடையை மடியச் செய்தும் உதவிய உன் அருளை யாரிடம் சொல்வோம்".

அ.வி: எட்டிரட்டி இரண்டு-பதினெட்டு; அக்குரோணி-படை; வான கம் ஏற-இறந்து பட; படி-பூமி .

(15)

92. பெற்ற தாயரு [1]மெய்மை யன்பொடு
பேணு தற்குள தந்தையும்
உற்ற செல்வமு நீய லாதினி
யுன்னில் வேறிங்க னுள்ளதோ
கொற்ற வாவுன் [2]திருவ ருட்கொடு
குரைக முற்றுணை மேவவே

[ψ] கண்ணன் பூமி பாரம் நீக்கியது பார்க்க: பா.மா.14.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA).

துற்ற வாதர வல்ல வேதுள
துணையெ மக்கயல் சொல்லிலே.

1.மெய்மை,சு.1;மெம்மை,சு.2+3+4*2.திருவருட்கொடு,சு.1+3+4; திருவடிக்கொடு, சு.2*

பொ: "பெற்ற தாயும், உண்மையான அன்புடன் பேணிக் காப்பதற்குள்ள தந்தையும், நாங்கள் பெற்ற செல்வமும் எல்லாம் நீ அல்லாது நினைத்துப் பார்க்கில் வேறு இங்கு உள்ளதோ? தலைவா! சொல்லப்போனால் உனது திருவடி தவிர எமக்கு வேறு நெருங்கிய துணை வேறு யாருமில்லை" (குளகம்).

அ.வி: துற்ற-நெருங்கிய. (16)

93. [1] என்று கூறு முதிட்டி ரன்னுட
நிசையும் வாயுவு மங்கியும்
நின்ற தாமெனும் வீம ருச்சுனர்
நிலைமை யைக்கொடு நேரவே
வென்ற தாகும தல்ல [2]வென்னில்
விளைந்த மெய்த்திற லேதெனும்
மன்றல் நாறுது ழாய லங்கல்கொள்
மவுலி யானை வணங்கியே.

1. நின்று, சு.1+4; என்று, சு.2+3* 2.வென்னில், சு.1; வெம்மில், சு.2; நம்மில், சு.3; தெம்மில், சு.4*

பொ: என்று சொல்லும் தருமனிடம், "காற்றையும் நெருப்பையும் ஒத்த வீமஅர்ச்சுனர் வலிமைகொண்டு பெற்ற வெற்றியாகுமேயன்றி என்னால் ஏற்பட்டதன்று", என்று கூறிய துளசிமாலை அணிந்த கண்ணனை வணங்கி, (குளகம்).

அ.வி:உதிட்டிரன்-தருமன்; வாயு-வாயுபகவான்; அங்கி-அக்னிதேவன்; மவுலியான்-கிரீடந் தாங்கிய கண்ணன்; வாயுவும் அங்கியும்-வீம அர்ச்சுனர்க்கு உவமை.

ஒப்: "வீம விசய னென்றிரண்டு வெங்கோப யானைகளே ... போர் வென் றழித்தலால்" பெருந்.20. (17)

94. கண்ணி லாகிய குற்ற மங்கது
கண்ணி டைத்தெரி யாதபோ
[1] லெண்ணி லாததோ ரெமது குற்ற
மெமக்கு நேர்தெரி யாததால்
வண்ண மாநில மங்கை* மேலுள
[2]மருளொ ழிந்துன தருளினா
னண்ணு மாகதியைப் பெ றும்படி
நவில்தி யென்றன னலமுளான்.

---

* நிலத்தைப் பெண்ணாகக் கூறுதல் பார்க்க: பா.மா.31.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

1.லெண்ணி, சு.1+3+4; தெண்ணி, சு.2* 2. மருளழிந்துள, சு.1; மரு ளொழிந்துன, சு.2+3+4*

பொ: "தன் கண்ணில் உள்ள குறை தனக்குத் தெரியாதது போல், எங்கள் குற்றம் எங்களுக்குத் தெரியாது. ஆதலால் அழகிய மண்மேல் உள்ள ஆசை நீங்கி உன்னருளால் மேலான நிலை அடையும் வழியைக் கூறுவாயாக", என்றான் தருமன் (முதலடி உவமை)

பரீட்சித்துக்கு முடிசூடு எனல் (18)

95. ஆகி நாமும்வை குண்டமே செல
வமைதி யாகிய காலமா
[1]யேகு நாளுள தருகு தூதரை
[2]யேவு [3]துன்னக ரெய்தியே
வாகை துன்றுத னஞ்செ யன்னபி
மன்சு தன்றனை மன்னனாய்♥
மோக நன்புவி [4]யாளு தற்கெழில்
முடிக வித்திடு [4]முறையினே.

1. யேகி னாலு மதருள தாதரை, சு.1; யேகு நாளுள தருகு தூதரை, சு.2; யேகி னானம தருளு, சு.3; யேகி னாளு மதருளு, சு.4* 2.யேவு, சு.1+3+4; யேகு. சு.2* 3.துன்னக,சு.1+4; தன்னக, சு.2; நுந்நக, சு.3*4. யாளுதற், சு.1+3; யாள்வதற், சு.2+4; யாள்வதாக, சு.4* 4.முறையினே, சு.1+2+4; முறையிலே, சு.3*

பொ: கண்ணன் தருமனிடம், "நான் வைகுண்டம் செல்வதற்குரிய காலம் நெருங்கி விட்டது. அர்ச்சுனன் மகன் அபிமன்னன் மகனாகிய பரீட்சித்தை அத்தினபுரிக்கு மன்னனாக முறைப்படி முடிசூட்டு", என்றான்.

அ.வி: ஏவுது-அனுப்பு; அபிமன் சுதன்- அபிமன்னன் மகன் பரீட்சித்து.

குறிப்பு:ஏவுது - உயர்திணைத் தன்மை ஒருமை வினைமுற்று தொ.சொ.205 நச்.உரை. இது எதிர்காலத்தில் வந்தது. இறந்தகாலத்தில் வந்ததற்குச் சான்று "கழிந்தது பொழிந்தென வான் கண் மாறினும் தொல்லது விளைந்தென" புறநா.203.

பாண்டவர்களை மகவிந்தம் செல்லக் கூறல் (19)

96. உலக டங்கவ வற்கு நல்கி
யுகந்த மங்கையு [1]மைவருங்
கலிபு குந்திடி னிற்கி லீர்பல
கந்த மார்மக விந்தமே✚
பலமி கும்பர கதிபு கும்படி
[2]படர்மி னன்புள பரிவினால்

♥ கண்ணன் பரீட்சித்தை மன்னனாக்கக் கூறியது பார்க்க: பா.மா.96,186.
✚ கண்ணன் பாண்டவர்களை மகவிந்தம் செல்லக் கூறியது. பார்க்க: பா.மா.193, 200.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நிலைகொள் குந்தியை யரசு [3]கொண்டுள
நிருபர் தன்னயல் நிறுவியே.

1.மைப்பெருங், சு.1; மைவருங், சு.2+3+4*2. படர்மி, சு.1+3+4; படர, சு.2* 3. கொண்டுள, சு.1+4; கொண்டு, சு.2+3*

பொ:"கலிகாலம் வந்துவிட்டால் இங்கே இருக்கமாட்டீர்கள். எனவே, நாடு முழுவதும் பரீட்சித்துவுக்குக் கொடுத்துவிட்டுக், குந்தியை அரசாளும் பரீட்சித்துவிடம் இருக்கச் செய்து, மேலான நிலையையடைய வைகுண்டம் செல்வீர்" என்றான்.

அ.வி: உகந்த மங்கை- துரோபதி;கந்தம்-கிழங்கு; மகவிந்தம்-காடு; பரகதி-மேலான நிலை; படர்மின்-செல்மின். (20)

பாண்டவர்கள் அத்தினபுரத்தை அடைதல்

97. எனவு ரைத்தருள் புரிய [1]வன்புட
னெண்ணில் சேனையு மிறைவனும்
நினைவி னிற்றிரு[2]வடி மலர்த்துணை
நெஞ்ச மீதுறு தஞ்சமா
முனைமு கத்தெதிர்[ψ] பின்னி டாவிறல்
முந்து தம்பியர் [3]தம்முட
னினிய வத்தினபுரி புகுந்தன
னிறைவ னாகிய [3]வறவனே.

1.வன்போடு,சு.1;வன்புட,சு.2+3+4*2.மலரடித்துணை,சு.1+2;வடி மலர்த்துணை, சு.2+3+4* 3. தன்னுட, சு.1+4; தம்முட, சு.2+3*4.வறவனே, சு.1+3+4; வறன்மகனே,சு.2*

பொ: என்று கண்ணன் கூறியருளியதைக் கேட்ட தருமன், கண்ணனின் திருவடியே தஞ்சமாக மனத்தில்கொண்டு போரில் புறங்கொடாத தம்பியருடன் அழகிய அத்தினபுரம் அடைந்தான். (21)

துவராபதிச் சருக்க முற்றும்

துவராபதிச் சருக்க முற்றும், சு.1+2; துவாரகைச் சருக்க முற்றிற்று, சு.3; துவாரகைச் சருக்க முற்றும், சு.4*

****

[ψ] முனைமுகம் பார்க்க: பா.மா.84.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

3. துருவாசச் சருக்கம்Ψ (98-156)

(இச்சருக்கம், துர்வாச முனிவரின் சாபத்தால் யாதவ குலம் அழிதல், வேடனின் அம்பு பட்டுக் கண்ணன் வைகுண்டம் அடைதல், வேடர்கள் வீம அர்ச்சுனரின் நிதியைக் கொள்ளையிடல், கண்ணனின் மறைவை அறிந்து பாண்டவர்கள் வருந்துதல் முதலிய நிகழ்ச்சிகளை விளக்குகிறது.)

துர்வாச முனிவரும் சிறுவரும்

எழுசீர் ஆசிரிய விருத்தம்

98. அன்ன [1] காலையில் தருமன் [2] போனபின்
னவனி பாரம கற்றி♦ வாழ்
மன்னர் மன்னவர் பணியும் வண்டு
வராப திப்பதி [3] யாளுநாள்
சொன்ன [4] வாய்மையி [5] னெட்டி ரட்டி
துலங்கு மைந்தர்க டுன்மொழிப்
பன்ன ருந்தவன் வருநெ றிக்கெதிர்
பாடு வார்விளை யாடுவார்.

1. காலையில், சு.1; தன்மைய, சு.2+3+4* 2.போனபின், சு.1+2; போய பின், சு.3+4* 3. யாளுநாள், சு.1; வாழுநாள்,சு. 2+3+4*4. வாய் மையி, சு.1; வாயிர, சு.2+3+4* 5. னெட்டி ரட்டி, சு.1; வெட்டி ரெட்டி, சு.2; வெட்டி ரட்டி, சு.3+4*

பொ: அப்போது, தருமன் துவாரகையிலிருந்து சென்றபிறகு பூமிபாரம் அகற்றி வாழும் பேரரசர் பணியும் வளமையான துவாரகை நகரின் தலைவன் கண்ணன் வாழ்கின்ற நாளில் முன்பு கூறிய உண்மைக் கேற்பப் பதினாறு வயது இளம் மைந்தர்கள் துர்வாச முனிவர் வரும் வழியில் பாடி விளையாடுவராயினர்.

அ.வி: எட்டி +இரட்டி- எட்டிரெட்டி- பதினாறு,துன்மொழிப் பன்னருந்தவன்-துர்வாச முனிவன்

ஒப்: அடி 3. “ஐயிரண்டு மீரிரண்டு மவ்வளவிற் பிள்ளைகள்” பெருந்.23. “பச்சை மாலீன்ற பதி னாயிரம் புதல்வர்... விளையாடும் நேரமதில்... துர்வாச மாமுனிதான் வரவே” அரங். மௌ.6. “புண்டரி காக்கனை... நோக்கவே வீணை மாமுனி புண்டரக் கண்ணுவரென்னும் புங்கவர்” நல்.மௌ.5. (1)

இரும்புலக்கை பிறக்குமெனல்

99. இனைய ரானவர் [1] தம்மி லேவிளை
யாடு [2] மெல்லையி [3] லொருவனைப்
புனையு மாமணி [4] யாடை யுந்தி
[5] பொருந்தல் [6] கண்டெதிர் பூசுரன்♥

Ψ துருவாசச் சருக்க முற்றும், சு.1; துருவாசச் சருக்கம், சு.2+3; துருவாசச் சருக்கம், சு.4*

♦ கண்ணன் பூமிபாரம் அகற்றியது பார்க்க: பா.மா.14

♥ துர்வாச முனிவரின் சாபம் பார்க்க: பா.மா.100, 102, 104, 110, 116.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

றனையிம் மாதுபெண் ணோசொல் லாண
துவோபெ றத்தகு [7]வாளெனத்
[8]துனியி னானோரி ருப்பு லக்கை
பெறுந் துணித்திட வென்னவே

1.தம்மிலா, சு.1; தம்மிலே, சு.2+3+4* 2. மெண்ணின, சு.1; மெல் லையி, சு.2; மெண்ணிலா, சு.3+4* 3.றொருவனை, சு.1+3+4; லொரு வனை, சு. 2* 4. யொடை, சு.1+3+4; யாடை, சு.2 * 5. பொருந்தல், சு.1+3+4; பொருத்தியே, சு.2* 6.கண்டெ திர், சு.1; யெதிர், சு.2; கொண் டெதிர், சு.3+4* 7. வானெனத், சு.1; வாளெனத், சு.2+3+4*8.துனியினா, சு.1+3+4; துனியனா, சு.2*

பொ: யாதவகுல மைந்தர்கள் விளையாடும்போது, தமக்குள் ஒருவனை அழகிய ஆடையுடுக்கச் செய்து கர்ப்பிணிப்பெண் போல் வேடமிட்டு, எதிர் வந்த துர்வாச முனிவரை, "இந்தப் பெண் பெண்மகவோ அன்றி ஆண்மோ பெறுவாள்"? என்று வினவ, அவர் சினந்து "ஓர் இரும்பு லக்கை பெறும் அழித்திடவே", என்று சாபமிட, (குளகம்).

அ.வி: உந்தி - பெரிய வயிறு, பூசுரன் -துர்வாசமுனிவர், துனி- கோபம், துணித்திட-அழித்திட.

ஒப்: அடி 4. "...இவன் வயிற்றில் வந்தோரிருப் புலக்கை, புந்தியி லும்மைப் பொடியாக்க" பெருந். 25. "மேதகு சாம்பனை மின்ன னார்களிற் ... யாதவர் தம்குலம் அழிந்திடத் சூல் முதிர்ந்த மடந்தையைப் போற் செய்து" அரங்.மௌ.7,8. "இந்தப்பெண் தன் வயிற்றில் இருப்புலக்கை... பெறுவாள்" வைகு.ப.27. துனி- "துனியறு முனிவரர்" கம்.பா.திரு.66.

(2)

உலக்கையைப் பொடியாக்கிக் கடலில் இடக் கூறல்

100. அக்க [1]ணத்தி [2]லிருப்பு லக்கைவி
ழுப்ப யந்தன ரனைவரும்
சக்க ரக்கை [3]முகுந்தன் முன்னது
தன்னை வைத்தனர் தனையரால்
புக்க திப்பொழு தேசொல் சாபமெனப்
புகன்று நீர்பொ டியதா
யிக்க ணத்தி [4]லராவி யேகட
லிடையி டக்கட வீரெனா.

1. ணத்தி, சு.1; ணத்தோ, 2+3+4* 2. லிருப்பு, சு.1+3+4; ரிரும்பு, சு.2* 3. முகுந்த னன்னது,சு.1; முகுந்தன் முன்னது, சு.2+3+4* 4. ரரா வியே, சு.1; லெ ராவியே, சு.2; லராவியே, சு.3+4*

பொ: அப்பொழுதே இரும்பு உலக்கை விழ, யாதவ மைந்தர்கள் அனைவரும் அச்சமுற்றனர். அதை அவர்கள் சக்கரம் ஏந்திய கையுடைய கண்ணன் முன்வைத்தனர். இப்போதே துர்வாச முனிவர் சொன்ன சாபம் பலித்தது என்று கூறி, "நீவிர் உலக் கையை அராவி இந்நிமிடமே கடலில் இடக் கடவீர்" என்று சொல்லி,(குளகம்).

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஒப்: அடி 4. "கொண்டல் வண்ணன்... பொடியாக்கிக்... கடலிலே போடுமென்றார்" வைகு.ப.27. "தீங்கணுகா வகைநினைந் துக்கிரசேனனதைப் பொடியாச் செய்து வாரிப் பாங்கர் இறைத் திடுமின்" அரங்.மௌ.10. "சீதரன் றந்தையார் திருமுன் னோதலும்" "அரங் கொடு ... பொடிகளாக்கியே ... பெருங்கடற் செறி மின்" நல்.மௌ.15, 16. (3)

இரும்புத் துண்டை மீன் விழுங்குதல்

101. அந்த வாய்மையு ரைத்த வப்பொழு
தேய ராவி [1]யலைக்கணே
சிந்த வீசின [2]ரிறையு டைபடு
சிற்றி ரும்பையு [3]மற்றிதன்
முந்த வீசின ரதனை யங்கொரு
மீன் [4]விழுங்கி [5]முயற்சியால்
வந்து வீசிய வலையி [6]னுட்படு[ψ]
மீனையே நல்வ னப்பினால். (5)

1. யலைக்கவே, சு.1; யலைக்குளின், சு.2 ; யலைக்குளே, சு.3+4* 2. ரிறையி னுட்படு, சு.1+3+4; ரிறையி னுற்படு, சு.2 * 3. மற்றிதன்,சு.1; மற்றதன், சு.2+3+4* 4. விழுங்கி, சு.1+3+4; விழுங்கிட, சு.2* 5.முயற்சியால், சு.1+3+4; முறையினால், சு.2* 6. னுட்படு வலையில் மீனின், சு.1+3+4; னுட்படு மீனையே, சு.2*

பொ: கண்ணன் சொன்ன உண்மைக்கேற்ப அப்பொழுதே உலக்கையைப் பொடியாக்கிக் கடலில் பரக்க வீசினர். எஞ்சியிருந்த சிறிய இரும்புத்துண்டையும் கடலில் எறிந்தனர். அதை அங்குக் கடலிலுள்ள ஒரு மீன் விழுங்கிப் பின்னர் ஒரு மீனவன் வீசிய வலையில் அகப்பட்டது. அதன் அழகிய தோற்றத்தால், (குளகம்).

அ.வி: இறை - சிறிது, சிற்றிரும்பு - சிறிய இரும்புத் துண்டு (4)

வேடன் சிற்றிரும்பை அம்பில் இணைத்தல்

102. [1]அன்ன கர்ப்புற [2]முறையு மங்கொரு
வேட னுக்கித ளிக்கவே
தன்னி லுற்றவி ரும்பை நீடிய
சரமு னைக் [3]கறை வித்தனன்
[4]முன்ன [5]முற்றிய சாப நேரது
முற்று வித்திடு மென்பதைப்
பன்ன கத்து [6]நடிப்பவன் னினை
[7]பான்மை யாயின நாளினே.

[ψ] மீன் வலையில் அகப்படும் நிகழ்ச்சி, பார்க்க: ஸ்ரீமத் பாகவதம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

1.அன்னதிக்கரை, சு.1; அன்னகர்ப்புற, சு.2; அன்னகர்க் கரை, சு.3+4 * 2. யுறையு சு.1+3+4; முறையு,சு.2* 3. கறைவித்த வன் சு.1+3+4; கமைவித்தவன், சு.2* 4. முன்ன, சு.1+3; முன்னி, 2+4* 5.முற்றிய, சு.1+3+4; யற்றிய சு.2* 6. நடிப்பவன், சு.1; நடித் தவன் சு. 2+3+4* 7.பான்மை யாயின, சு.1; பான்மை யாயுறு சு. 2+3+4*

பொ: மீனவன் அவ்வூரின் புறத்தே வாழும் ஒரு வேடனுக்கு அம்மீனைக் கொடுக்கவே, (வேடன்) அதன் வயிற்றில் உள்ள இரும்பை நீளமாக இருந்த அம்பின் நுனியில் வைத்து அறையச் செய்தான். முன்பு முற்றிய சாபம் முழுதும் நிறைவேறிடும் என்பதைப் பாம்பின் மீது ஆடிய கண்ணனை மனத்தில் நினைக்கின்ற தன்மையுடையவனாய் இருக்கின்ற நாளில், (குளகம்).

அ.வி: பன்னகம் -பாம்பு, சரமுனை-அம்பின் நுனி, அறைவித்தனன்-அடித்துப் பொருத்தினான்.

ஒப்: அடி 1, 2. " தவ்விரும்பை, வங்கக் கடல்மீன் வயிற்றகத்தே ... அம்பாகக் கொட்டி" பெருந்.33. (5)

இரும்பின் பொடி கோரையாக முளைத்தல்

103. [1]சேர நேர வராவி யிட்ட
விரும்பி னுண்பொடி செறியவாட்
கோரை [2]யாக முளைத்து நின்றது
குரைக டற்கரை நிறையவே
வாரும் நாம்விளை யாடு வோமென
மைந்தர் யாவரும் வந்துதன்
நேரி [3]லாகிய கோரை வாள்கொடு
[4]நேய வெஞ்சம [5]ராடினார்.

1. சேரநேரா, சு.1; சேரநேர, சு.2+3+4*2. யாக , சு.1+4; யாகி, சு.2, (சு.3 சி) * 3. லாகிய, சு.1+3+4; லாதவர், சு.2* 4.நேய , சு.1+4; நெடிய, சு.2, (சு.3 சி.) * 5. ராடினார், சு.1+2+3; ராடி னான், சு.4*

பொ: நேர்மையுடையயாதவர் ஒன்று சேர்ந்து பொடியாக்கி இட்ட இரும்பின் நுண்மையான பொடிகள் கரையை அடைந்து, கடற்கரை முழுவதும் வாள்போன்ற கோரையாக முளைத்து நின்றன. "வாரும் நாம் விளையாடுவோம்" என்று யாதவ குல இளைஞர்கள் அனைவரும் அங்கு வர, எதிரில் இருந்த புல்லாகிய வாளைக் கொண்டு விளையாட்டுச் சண்டை புரிந்தனர்.

ஒப்: அடி 1-4, "...பண்டை முனிசாபம் பரந்துபல சம்பாகி, மண்டுகடல் பார்மேல் வளர்ந்த தனைக் கண்டு... கையாற் பறித்துக் களித்தார்த்து வாரிமணலில்... நின்றாடினார் சூழ்ந்து". பெருந்.30. (6)

கோரையால் யாதவகுலம் அழிதல்

104. பட்ட பட்டவி டந்தொ றுங்கன
பார வாள்கடு ணிப்ப போல்
[1]விட்டெ றிந்துள கோரை யீர
விழுந்தி றந்தனர் முனிவர

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

னிட்ட சாபம்வி ளைந்த♥ தென்றுற
வெண்ணி யேமுகில் வண்ணனு
னிட்டை யாகிய யோக [2]நேரி
னிருப்பதே நினை வாயினான்.

1.*விட்டெ றிந்துள, சு.1+3+4; வெட்டி யிட்டனர், சு.2** 2. *நேரி* னிருப்பதே, சு.1+3+4; மாக விருப்பதே, சு.2*

பொ: கோரை பட்ட இடங்களெல்லாம் கனமான வாள்கொண்டு வெட்டியதுபோல் அறுக்க, எல்லோரும் கீழே விழுந்து இறந்தனர். துர்வாச முனிவரிட்ட சாபம் பலித்தது என்றெண்ணி, மேகநிறக் கண்ணன் யோக சமாதியில் இருப்தையே நினைந்து கொண்டிருந்தான்.

அ.வி: வாள்கடுணிப்ப-வாள்கள்+துணிப்ப, ஈர-அறுக்க, நிட்டை-யோக சமாதி, முதலிரண்டடி உவமை.

ஒப்: அடி 1. "சொன்னவன் தொட்ட தொட்ட இடந்தொறும்" கம்.யு.இரா.126.

(7)

கண்ணன் யோகநிலையில் இருத்தல்

105. வீறு டைத்துவ ராப திப்பதி
விட்டு நேர்வட மேல்திசைக்
காறு பத்துள [1]யோச னைக்கணோ
ரால நீழ[2]லி லமைதியாற்
பேறு முற்றிய யோக மெய்நெறி
பெற்றி ருந்தன னுற்றபே
யூறு மத்தன பாலி னோடத
னுயிரு முண்ட♦ வுபாயனே.

1.வோசனைக், சு.1; யோசனைக், சு.2* 2. லிலமைதியாற், சு.1; னினமைதியாற், சு.2*

பொ: பேயாக வந்த பூதனையிடம் சுரந்த பாலோடு அவள் உயிரையும் குடித்த கண்ணன், சிறப்புடைய துவராபதியை விட்டு நீங்கி அதிலிருந்து வடமேற்கே அறுபது யோசனை தொலைவில் ஓர் ஆல மர நிழலில் அமைதியாகப் பயன் முதிர்ந்த யோகநெறியில் இருந்தான்.

அ.வி: கணோர்- கண்+ஓர், பேய் - பூதனை, உபாயன்-கண்ணன், பேறு-பிறப்பு. உண்ட உபாயன் இருந்தனன் எனக் கூட்டுக.

ஒப்: அடி4. "வஞ்சனப் பேய் முலையூ டுயிர் வாய்மடுத் துண்டானை" நாலா.1602.

(8)

♥ துர்வாச முனிவரின் சாபம் பார்க்க: பா.மா.99.

♦ கண்ணன் பூதனையிடம் பால் உண்டது பார்க்க: பா.மா.122, 151, 297, 525, 586. கம்சன் கண்ணனைக் கொல்லப் பூதனை என்னும் அரக்கியை ஏவினான். அவள் அழகிய பெண்ணுருக் கொண்டு, கண்ணனை எடுத்துப் பால் கொடுத்துக் கொல்ல முயன்றபோது, கண்ணன் பால் குடிப்பது போல் தோற்றமளித்து அவள் உயிரைக் குடித்தான்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வேடன் கண்ணன் விரலில் அம்பெய்தல்

106. அன்ன [1]கானின் மானி னை[வழித்]
[2]துடர்ந்தவ் வேட [3]னடந்துமே
லுன்னி மானினை யெய்வ தாக
வுருத்து விட்ட [4]சரத்துநேர்
சொன்ன மாமறை யாலும் நாடரி
தாய தூயவர் சுடர்மணிப்
பன்ன காசனர் [5]பத்தர் பங்கையப்
பதவி ரற்றலைப் பட்டதால்.

1.கானினின், சு.1+4; கானின், சு.2+3* 2. துடர்ந்து, சு.1+2+4; தொடர்ந்து, சு.3* 3. னடந்துமே, சு.1; னடர்ந்துமே, சு. 2+3+4* 4. சரத்துநேர், சு.1+4; சரத்தினேர், சு. 2+3* 5.பத்தர், சு.1; வற்ற, சு.2; வத்தர், சு.3+4*

பொ: கண்ணன் யோக நிலையிலிருந்த காட்டில் மானைத் தொடர்ந்து நடந்து சென்ற அந்த வேடன், மானை அம்பெய்வதாக நினைத்து இழுத்து எய்த அம்பு வேதங்களாலும் அடைய இயலாத தூய்மையானவனும், ஒளிவிடும் மணிகளைக் கொண்ட பாம்பைப் படுக்கையாகக் கொண்டவனுமாகிய கண்ணனின் தமரைபோன்ற காலின் விரல் நுனியில் பட்டது.

அ.வி: உருத்து-இழுத்து, பன்னகம்- பாம்பு, விரற்றலை - விரல்+தலை, விரல்நுனி.

ஒப்: அடி 2-4. "செல்லுங் கலைமான் ... ஓடியதே மாதவன்மே, லற்ற முன் சாபத்தா லாங்கு" பெருந்.34. "நற்புரவென், றேடார் சிலையின் முகமிட்ட கணை போக்குதலும்" நல்.மௌ.58. "மாடப்புறாப் போல் மாயன் மலரடி தோன்றக் கண்டு... வில்லு வாங்கி விட்டதோரம்பு" தஞ்.82. "சரனெனுமோர் வில்வேடன் விலங்கெனவே நினைந்து கொடுஞ்சரந் துரக்க" அரங்.மௌ.32. "விட்டான் சரத்தை வேடனவன் மானெனவே" வைகு.ப.30. "புக்குப் பெருநீர் ... கைக்கண் கணை சென்றது அலால் கண்ணின் தெரியக் காணேன்" கம்.அ.ந.நீங்.75.

(9)

வேடனின் அச்சம்

107. கையு ணர்ச்சியின் மான கன்று
கழிந்த வம்பது [1]கடுமையின்
றையி லக்கணை நாடி யுமது
தன்னை நாடுது மென்னவே
யைய [2]மிக்க [3]வனத்தன் வேட
னணைந்து கண்டடி மேல்விழா
நைய லுற்ற வுளத்த [4]னாகி
நடுங்கி [5]நின்றிவை நவிலுவான்.

1.கடுமையென், சு.1; கடுமையின்,சு.2+3+4* 2. மிக்க, சு. 1+3+4; மிக்கு, சு.2 * 3. வனத்தன், சு.1; மனத்து, சு.2; மனத்தன், சு.3+4* 4. னாகி, சு.1+3+4; னாவு, சு.2* 5 நின்றிவை, சு.1+2; நின்றவை, சு.4(சு.3சி) *

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பொ: கையின் உணர்வால் மானை விட்டு அகன்று சென்ற அம்பு கடுமையாக ஊடுருவிய இலக்கையும் அம்பையும் தேடிக் காண்போம் என்று, ஐயுற்று கண்ணனின் அருகில் சென்று அவன் விரலில் அம்பு பாய்ந்திருப்பது கண்டு நடுங்கி வேடன் இவற்றைக் கூறலானான்.

அ.வி: தை - ஊடுருவு, இலக்கண-இலக்கு, அதுதன்னை-அம்பை, நையல்-துன்பம்.

வேடன் வருந்திக் கூறுதல் (10)

108. போத [1]மன்றிய மானி னேவிய
புங்க [2]மங்கமழ் பங்கையப்
பாத மன்னிய விரலி னிற்றலை
பட்ட தாயது பாவியே
னேது செய்குவ னாவி [3]தன்னை
யிறப்ப னென்று முகத்திலே
மோது செங்கைய னிடரி லாமையின்
மூழ்கி னானென மாழ்கினான்.

1.மன்றிய, சு.1+3+4; மன்றியு,சு.2* 2. மங்கமழ், சு.1+4; புங்க வங்கமழ், சு.2+3* 3.தன்னை, சு.1+3+4; யின்றை, சு.2*

பொ: "அறிவின்றி அம்மானின் மீது எய்த அம்பு அழகு நிரம்பிய தாமரைமலரையொத்த காலில் நிலைபெற்ற விரல் நுனியில் பட்டு விட்டது, பாவியாகிய நான் என் செய்வேன்? உயிரை விட்டுவிடுவேன்", என்று வேடன் முகத்திலடித்துக் கொண்டு வருத்தத்தால் ஏற்பட்ட மயக்கத்தில் ஆழ்ந்தான் .

அ.வி: போத மன்றிய மானின்-போதம்+அன்றி+அம்மானின், புங்கம்-அம்பு, அம் கமழ்-அழகு நிரம்பிய, இடரில் ஆம் மையல்-வருத்தத்தால் ஏற்பட்ட மயக்கம்.

(11)

109. எந்த னாலத றிந்தி டாவகை
யெய்து தீவினை யெங்ஙனே
வந்த தோவென நெஞ்ச ழிந்து
வருஞ்[1]ச ரத்தளி குருதிநீர்
சிந்தி டாமல் முகத்தில் வேதுகொ
டொற்றியே திகழ் பங்கையக்
கந்த [2]மாமல ரென்ன லாகிய
கழல்க [3]ணீரொடு கழுவினான்.

1. சரத்தளி, சு.1; சரத்தினி, சு.2; சரத்திழி, சு.4 (சு.3 சி.) *2. மாமல, சு.1+3+4; நாண்மல, சு.2* 3.ணீரொடு,சு.1;ணீர்கொடு, சு.2+3+4*

பொ: "என்னால் நான் அறியாத வகையில் அடைந்த தீவினை எவ்வாறு நிகழ்ந்ததோ." என மனம் வருந்தி அம்பு தைத்த இடத்திலிருந்து வரும் இரத்தத்தைத் தரையில் சிந்திடாமல் தன் முகத்தாலே அழுத்தி ஒத்தடம் கொடுத்து விளங்கும் மணம் நிறைந்த தாமரை மலர் எனச் சொல்லும்படியான கழலணிந்த கண்ணனின் காலைக் கண்ணீரால் கழுவினான்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அ.வி: அளி குருதிநீர்- ஒழுகும் இரத்தம், முகத்தில் - வாயில், வேது-ஒத்தடம், 'என்தனால்' என்பது எதுகை நோக்கி எந்தனால் என்றாயிற்று.

ஒப்: "எண்ணெய் உண்ட பொன்எழில்கொள் மேனியைக் கண்ண நீரினால் கழுவி ஆட்டினான்" கம்.அ.பள்.124. அடி 3, வேது-"வேதி னொற்றி" கலித்தொகை.106.

(12)

வீம அர்ச்சுனரை அழைத்து வரக்கூறல்

110. அன்ன வன்றுயர் கண்ட வையனு
மஞ்ச லஞ்சல்நின் னறிவினால்
[1]உன்ன வந்துள தன்று முன்னை
[2]யதுள்ள சாபம தொன்று◆கேள்
பொன்னி னன்னக ரன்ன வத்தின
புரம திற்கிறை தருமனாம்
[3]மன்னர் தம்பிய ரிருவ ராமவர்
தமைய ழைத்துடன்ᵠ வாவெனா.

1.உன்ன, சு.1; உன்னி, சு.2; றுன்னி, சு.3+4* 2. யதுள்ள, சு.1; யினோது. சு.2; யினுள்ள, சு.3+4* 3, மன்னர், சு.1+3+4; மன்னவன், சு.2* 4. தம்பியரிருவரா மவர்தமை, சு.1+3+4; றுணை யிருவரும் வரநீ, சு.2*

பொ: அத்தகைய வேடன் படும் துயர் கண்ட கண்ணன், "பயப்படாதே! இது உன் அறிவினால் வரவில்லை, முன்பு, முனிவரிட்ட ஒரு சாபம் அது. ஒன்று சொல்வேன் கேட்பாயாக! அமராபதி நகர் போன்ற அத்தினபுரத்திற்கு மன்னனாம் தர்மனின் தம்பியர் வீம அர்ச்சுனர் என்னும் இருவர், அவர்களை உடனே அழைத்து வா" என்று,(குளகம்).

அ.வி: பொன்னின் நன்னகர்-அமராபதி நகர், மூன்றாவதடி உவமை.

ஒப்: அடி 1-3. "முன்னாளில் நீயும் பலமிகுந்த வாலியல்லோ, அந்த நாளில் நீயிருந்தாயப்போது எய்து கொன்றேன், முன்னாட் பழி வாங்க யெய்து கொன்றாய் வில் வேடா... வீமன் விஜயனிடம் விளம்பி வாயென் சேதி" வைகு.ப.31. "முன்னை வினைகாண் முரண் வேடா... பார்த்தனைக் கொண்டிங் கணைவாய்" பெருந். 36.

(13)

வேடன் அத்தினபுரி அடைதல்

111. ஏவ வங்கவ னிருக ழற்க
ணிறைஞ்சி யென்கொடு [1]வினையினாற்
பாவம் வந்து பலித்த தென்றுறு
பழிகொள் நெஞ்சினன் [2]வழிக்கொளா
வாவி யின்கயல் தாவு பாளையின்
[3]மதுவ ழிந்துவ யற்கணே

◆ துர்வாச முனிவரின் சாபம் பார்க்க: பா.மா.99.
ᵠ கண்ணன் பாண்டவர்களுக்குத் தூது அனுப்பியது பார்க்க:பாமா.77.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மேவு [4]நன்குரு னாட னத்தின
புரியின் [5]வீதியின் [6]மேவினான்.

1.வினையிலென், சு.1+3+4; வினையினாற், சு.2* 2. வலி கொளா, சு.1; வழிக்கொளா, சு.2+3+4* 3. மதுவழிந்து, சு.1+2+4; மது வுடைந்து, சு.3* 4. நன்குருனாடனத்தின புரியின், சு.1+3+4; மத்தின புரிநகர்க்கணின் விரைவி, சு.2* 5.வீதியின், சு.1; னிற்றனி, சு.2; னின் கணின், சு.3+4* 6.மேவினான், சு.1+3+4; மருவினான், சு.2*

பொ: (கண்ணன்) வேடனைப் பணிக்க, அவன் அவரது கழலணிந்த காலை வணங்கி என் கொடிய செயலால் இந்தப் பாவம் வந்து விளைந்தது என்று பழிகொண்ட மனத்தவனாகிப் பயணம் செய்ய அங்கிருந்த கன்று பொய்கையில் மீன் தாவியதால் கமுகம் பாளையிலிருந்து தேன் சிந்தும் வயல் நிறைந்த அழகிய குருநாட்டின் தலைநகர் அத்தினபுரத்தின் அகன்ற தெருவை அடைந்தான்.

ஒப்: அடி 2, வழி-"இசைவலான்...இருள்வழிக் கொண்டான்" திருவிளை. விறகு. 48.

(14)

வேடன் கண்ணனின் அழைப்பைக் கூறல்

112. [1] தருமர் [2]கோயில் புகுந்து [3]கண்டவர்
தாள் வணங்கி வெல் தம்பிமா
ரிருவ ராகிய வீம ரிச்சுன ரிவரை
யன்பொடு விரையவே
வருக [4]வேயென வருளி [5]னானுயர்
வாயு தேவனெனா முன
மருகு [6]நின்றுள துணைவர் தம்மோ
டறத்தின் மைந்தனு ணர்த்துவான்.

1.தருமர், சு.1+3+4; தருமன், சு.2* 2. கோயில் புகுந்து, சு. 1+3+4; மேவிய நகர்ப்புகுந், சு.2*3. கண்டவர் தாள்வணங்கி வெல், சு.1+3+4; தரசன் பதம்பணி, சு.2*4. வேயென, சு.1+3+4; வென்றன, சு.2* 5.னானுயர் வாயு, சு.1+3+4; னாலுயர் வாசு, சு.2* 6. நின்றுள, சு.1+3+4; நின்ற, சு.2*

பொ: வேடன், தருமனின் அரண்மனையினுள் சென்று அவன் கால்களில் பணிந்து வணங்கி, "வெற்றி பொருந்திய தம்பியர் இருவரான வீம அர்ச்சுனரென்பவரை அன்போடு விரைவாக அழைத்து வருவாயாக என்று அருளால் உயர்ந்த கண்ணன் கூறினார்" எனக் கூறி முடிக்கு முன்பே, அருகில் நின்ற தம்பியர் இரு வர்க்கும் தருமன் கூறலானான். (15)

113. எம்மை யிங்ஙன ழைத்தி டாம
லியம்பு காரிய முளதெனா
வும்மை யன்பின ழைத்த [1]தாதலி
[2]னுணர்வி னீரென [3]விருவருஞ்
செம்மை [4]யொன்றிய குருசில் தம்முழைச்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சேர்தி ரென்றருள் செய்யவே
தம்மு னேவலின் விரைவின்
வந்தரி [5]தான மர்ந்துள கானினே.

1. தாதலி, சு.1+3+4; நன்செய, சு.2* 2.னுணர்வி னீரென, சு.1+3; லுணரு வீரென, சு.2; னுணர்மி னீரென, சு.4*3. விருவருஞ், சு.1+3+4; வோதியே, சு.2* 4.யொன்றிய குருசில் தம்முழைச், சு.1+3+4; தங்கு மனத்த னவ்விடை, சு.2* 5. தான மர்ந்துள, சு.1+3+4; தானிருந் திடு, சு.2*

பொ: "என்னை இவ்வாறு அழைக்காமல் உங்களிடம் சொல்லக்கூடிய செய்தி உள்ளதென்று உங்களை அன்போடு அழைத்துள்ளார். ஆதலால் நீவிர் அதை உணருங்கள், இருவரும் சிறப்புப் பொருந்திய கண்ணனிடம் செல்வீர்" என்று (தருமன்) கூறியருளத் தம் முன்னவனாம் தமையனின் கட்டளையினால் வீமனும் அர்ச்சுனனும் கண்ணன் இருந்த காட்டிற்கு விரைவில் வந்து,(குளகம்).

அ.வி:உணர்வின் – உணர்மின் (வியங்கோள்), குரிசில் - கண்ணன், தம்முன்-தமக்கு முன்னவனாம் தருமன், அரி - கண்ணன்.

(16)

வீம அர்ச்சுனர் புலம்பல்

114. கண்ட யர்ந்தனர் பாத மீது
கருத்த ழிந்துவி ழுந்துளோர்
கொண்ட வெந்துய ருக்கோ ரெல்லை
[1]குறித்த லான திறத்ததோ
முண்ட கஞ்செறி தாளி னம்பு
முனைக் [2]கொளும்படி முதல்வனே
யெண்ட ருங்குறி யேதெ னாமுன்
னிறைஞ்சி நின்றுபு லம்பினார்.

1.குறித்த,சு.1+4; குறிக்க,சு. 2+3* கொளும்படி, சு.1+3+4; குறும்படி, சு.2*

பொ: (வீம அர்ச்சுனர் அவரைக்)கண்டு, சோர்வுற்றனர், அவர் கால்களில் விழுந்து உளம் நொந்து, அவர்கள் அடைந்த கொடிய துன்பத்திற்கு அளவு இவ்வளவு என்று கூற இயலும் திறத்ததோ? "தாமரை மலரையொத்த உமது காலில் அம்பின் முனை தைக்கும்படி தலைவா! எண்ணத்தின் குறிப்பின் காரணம் என்ன" என்று கூறி முன் பணிந்து நின்று புலம்பினர்.

(17)

வீம அர்ச்சுனர் கலங்குதல்

115. யாவரோ வதுதேவரோ யிகல
சுரரோ [1] விகல் வீறிலா
மூவ ரென்னினும் வெஞ்ச மர்க்கண்
முடித்த [2]தெம்முயிர் [3]முடித்தலே
தேவ வென்றடி மிசைவி ழுந்து
தியங்கி யுள்ளம யங்கியே

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

யாவ தொன்றறி கின்றி லாம
லயர்ந்த ழிந்து [4]முயங்கினார்

1. விகல் வீறிலா, சு.1; வரு ளீறிலா, சு.2+3+4* 2. தெம்முயிர், சு.1; லெம்முயிர், சு.2+3+4* 3. முடித்தலே, சு.1; முடிதலே, சு.1+3+4* 4.முயங்கினார், சு.1+3+4; மயங்கினார், சு.2*

பொ: "யார்? அது தேவரோ, வலி மிக்க அசுரரோ? அன்றி ஒப்புமை கூற இயலாத வலியையுடைய அயன், அரி, அரன் ஆகிய மூவரே ஆனாலும் அவர்களோடு போர் செய்து போரில் அவர்களை அழித்து எங்கள் உயிரை விடுவோம் தேவனே", என்று கூறி அவரது கால்மேல் விழுந்து உள்ளம் மயங்கி வேறொன்றும் அறியாது சோர்வடைந்தனர்.

அ.வி: இகல்-வலிமை, ஈறு - ஒப்புமை, மூவர்-அயன் அரி அரன், அயர்ந்து- சோர்ந்து.

ஒப்: அடி 1, 2. "தேவ சுரர்களோ திக்குள்ள பாலர்களோ, மூவரோ அந்த முனிவர ரக்கர்களோ, யாவரோ யெய்தவர்க ளடுந்தே ரறுத்திடுவோம்" வைகு.ப.34.

குறிப்பு: அடி 1, இல் "யாவரே யதனா தேவரோ" என்று நான்கு சுவடிகளிலும் இருந்த பாடம் "யாவரோ வது தேவரோ" என்று கொள்ளப்பட்டது. (18)

பாண்டவர்களை வைகுண்டம் சேரக் கூறல்

116. வான கத்தினில் மண்ணி லெண்ணிய
மற்றி டத்தினி [1]லுற்றபெய
ரான முத்தொழி லுள்ள தேவரு
மஞ்சு [2]வாரும தாண்மையின்
மோன முற்றிய தீய வாசக
முனிவன் முன்னிடு சாபமே•
தானி தற்கொரு வேது வாகமுன்
வந்து தைத்த சரத்தினே.

1. லுற்றபெய, சு.1; லுற்றபே, சு.2+3+4* 2.வாரும, சு.1+3+4; வாருன, சு.2*

பொ: "விண்ணிலும், மண்ணிலும் மட்டுமல்லாத பிற இடங்களிலும் உள்ளவரான படைத்தல், காத்தல், அழித்தல் தொழில் செய்யும் பிரம்மா, விஷ்ணு, சிவன் என்கின்ற மூவரும் உமது வீரம் கண்டு அஞ்சுவார். தவத்தில் சிறந்த கடுஞ்சொல் கூறும் துர்வாச முனிவர் முன்பு இட்ட சாபம் காரணமாக அம்பாக வந்து காலில் தைத்ததே! (குளகம்).

அ.வி: முத்தொழில் - படைத்தல், காத்தல், அழித்தல், மோனம்-மௌன தவம், தீயவாசக முனிவன்-துர்வாச முனிவன், ஏது-காரணம், சாப மேதான-சாபம்+ஏது+ஆன. (19)

• ஒப்: துர்வாச முனிவர் சாபம் பார்க்க: பா.மா.99.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கண்ணனின் கூற்று

117. முந்த வே[1]நசை சோபம் வந்து
முளைத்த [2]தாதலா லிளைத்துநீர்
சிந்தை வெந்துயர் கொண்ட யர்ந்து
தியங்க [3]லீர்கள் வியங்கொள்சீ
ரந்த ரங்கம தாகி யேபுக
ழுண்ட மானவை குண்டமே
வந்தி டுஞ் சில நாளில் நம்பதி
மருவு [4]மோவென வருளினான்.

1.நசை, சு.1+3+4; யிசை, சு.2*2. தாதலி, சு.1+3+4; தால் மெய், சு.2* 3. லீர்கள் வியங், சு.1+3+4; லீர்க ளியங், சு.2* 4. மோவென, சு.1; வோமென, சு. 2+3+4*

பொ: " முற்பட்ட ஆசையும் துன்பமும் வந்து தோன்றின. ஆதலின் நீவிர் அவற்றால் இளைத்து மனத்தில் துயர்கொண்டு மயங்கி மனம் சஞ்சலப்படவேண்டாம். பெருமை கொண்ட சிறப்பும் புகழும் பொருந்திய வைகுண்டத்தை அந்தரங்கமாய் அடைகிறேன். நீவிர் சில நாட்கள் சென்றபின் என்னிடம் வருக" என்று அருள்செய்தான்.

அ.வி: நசை-ஆசை, சோபம்-துன்பம், வியம்-பெருமை, அந்தரங்கம்-ரகசியம், பதி-வைகுண்டம்.

(20)

துவாரகையிலுள்ள மக்கள் அத்தினபுரம் செல்லல்

118. யாரெ மக்கினி யிங்கு ளார்[1]பிறர்
நீய [2]லாதினி [3]யேகிலோங்
கார ணத்துமு குந்த வென்றவர்
கழற [4]வேறவர் [5]கருதுவீர்
நீர ணைத்துவ ராப திக்குற
நீவி ரேகிநன் னிதியமும்
வார ணித்தன மாத ருங்கொடு
மருவு மத்தின புரியினே.

1.பிறர்நீய, சு.1+3+4; துணையாவ, சு.2* 2.லாதினி, சு.1+3+4; ரென்று, சு.2* 3.யேகிலோங், சு.1; கலங்கியெங், சு.2; கிலேங்,சு.3+4*4. வேறவர், சு.1+3; வேறு, சு.2; வேறது, சு.4* 5. கருதுவீர், சு.1+3; கருத்திலீர், சு.2; கருதிலீர், சு.4*

பொ: " எங்களுக்கு இங்கு உற்றார் உறவினர் வேறு யார் இருக்கிறார்? நாங்கள் உன்னை விட்டுச் செல்லமாட்டோம், எல்லா உலகுக்கும் காரணமாய் நற்கதி அருளுபவனே!" என்று வீம அர்ச்சுனர் கூற, "வேறு எண்ணமில்லாத நீவிர் நேரே கடல் நடுவேயுள்ள துவாரகைக்குச் சென்று அங்குள்ள நல்ல செல்வத்தையும் கச்சு அணிந்த மகளிரையும் கொண்டு செல்லுங்கள் அத்தினபுரிக்கு".(குளகம்)

அ.வி: ஏகிலோம் - போகமாட்டோம், நீரணை - நீர் சூழ்ந்த, வார் அணி - கச்சு அணிந்த.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஒப்: "வண்டு வரைக்குள்ள மாநிதியும் மாதரையும் கொண்டுபோ மென்றார்" பெருந்.40. "வீமா விசையா துவாரகைக் கேகி நீங்கள், தையலாருடனே வீட்டில் தனமெலாம் ... பையவே அத்தினாபுரப் பதிக்கேகு மென்று...கண்ணனும் செப்பினார்" தஞ்.93. "மாயனென்பான் அர்ச்சுனன் இங்கெய்திடுவான் அவனே... மாதரையும் புரந்திடுவான்" அரங்.மௌ.43, 44.

(21)

கண்ணன் வைகுண்டம் அடைதல்

119. என்று கொண்டல்[1]நிறத்தர் [2]கூறலு
[3]மனைய மைத்துனனை யிருவருஞ்
சென்று [4] கைதொழுது முடியின் மீது
[5]தியங்கி [6]நின்றருள் சிந்தையார்
குன்று கொண்டு♥கன் மழை[7]தடுத்தவர்
[8]குறைவி லாத வைகுண்டமே
யன்ற டைந்தன னகில லோகமு மாகி
யெங்கு மடைந்துளான்.

1.நிறத்தர், சு.1+3+4; நிறத்தவன், சு.2* 2. கூறலு, சு.1+3+4; சொல, சு.2* 3. மனைய மைத்துனனை, சு.1; யிணையடித் துணை, சு.2+3+4* 4. கொண்டனர், சு.1+3+4; கைதொழுது, சு.2* 5.தியங்கு, சு.1; தியங்கி, சு.2+3+4*6. கின்றருள், சு.1; நின்றருள், சு.2+3+4* 7.தடுத்தவர், சு.1+3+4; தடுத்தருள், சு.2* 8. குறை விலாத, சு.1+3+4; குரிசில்மேவு, சு.2*

பொ: என்று மேகநிறக் கண்ணன் கூறலும், மைத்துனனை வீம அர்ச்சுனர் இருவரும் சென்று, கையால் தொழுது, கையைத் தலைமீது வைத்து மயங்கும் மனத்தார், கோவர்த் தன மலையைக் குடையாகப் பிடித்துக் கல்மழையைத் தடுத்தவரின் குறைவில்லாத வைகுண்டத்தை அன்று அடைந்த அவர் உலகெங்கும் தானாகி நிறைந்துள்ளார்.

அ.வி: தியங்கி-மயங்கி, முடி-தலை, குன்று-கோவர்த்தன மலை.

ஒப்: அடி 3. "குன்றால் மாரி தடுத்தவனை" நாலா.1601.

(22)

வீம அர்ச்சுனரின் புலம்பல் 120-125

120. வேத நாயக னன்று பாரின்
மிகுத்த பாரதம் விளையவே
[1]நீதிய னாகிய யாத வக்குல
நிகழ [2] வந்தவர் [3]திகழுமுன்

♥ கண்ணன் குன்றால் மழை தடுத்தது பார்க்க: பா.மா. 744.
கோவர்த்தன மலையால் மழையைத் தடுத்தது: கோவர்த்தனமலை வடமதுரைக்கரு கில் உள்ளது. இந்திரன் கண்ணனிடம் பகை கொண்டு அவனது பசுக்களை வருத்த எண்ணி, விடாத அடைமழை பெய்வித்தான். கண்ணன் கோவர்த்தன மலையைக் குடையாகப் பிடித்துப் பசுக்களைக் காப்பாற்றினான்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சோதி சோதி [4]யோடாய் [5]யடங்கின
தொன்மை தேர்கிலர் துணையெனும்
[6]போதவே மனநொந்து வெந்[7]துயர்
புனைய நின்று புலம்பினார்.

1.நீதியனாகிய, சு.1; நீதியாகிய, சு.2+3+4* 2. வந்தவர், சு. 1+3+4; வந்தவை, சு.2* 3. திகழு முன், சு.1; திகழவே, சு.2; திகழமுன், சு.3+4* 4. யோடாய், சு.1+3+4; யோடே, சு.2* 5.யடங்கின, சு.1+3+4; யடங்கிய, சு.2* 6. போதவே மன, சு.1+3+4; போதனேக மெய், சு.2* 7. துயர் புனைய, சு.1+3+4; துயராகி, சு.2*

பொ: வேதங்களுக்குத் தலைவனாகிய திருமால் அன்று உலகில் மிக்கு இருந்த பாரதப்போர் நிகழவும், நீதி பொருந்திய யாதவக் குலம் விளங்கவும் வந்தவர். சுயஞ்சோதியுடன் உயிரும் நீங்கியது எனும் சிறப்பினை அறியாத வீம அர்ச்சுனர் தமக்குத் துணையாக இருந்தவர் தம்மை விட்டு நீங்கவே, மனம் வருந்தி மிகுந்த துயருற்றுப் புலம்பினர்.

(23)

121. விழுவர் துன்புற வெழுவர் நின்றயல்
வெய்து யிர்ப்பர் வெயிர்ப்பினோ
[1]டெழுவர் சென்னியை மண்ணின் மீதுற
[2]வுழல்வர் நைவரெதி ரவர்போய்த்
தொழுவர் நின்று துதிப்ப ராருயிர்
சோர்வர் தேர்வல வாவெனா
வழுவர் வாரிய ணைப்பர் நீடு
மருந்து யர்க்குள [2]மூந்தியே.

1.டுழுவர், சு.1+3+4; டெழுவர், சு.2*2.வுழல்வர், சு.1+3+4;வுழுவர், சு.2* 3.மூந்தியே, சு.1+3; மூங்கியே, சு.2+4*

பொ: நீடிய துன்பத்தில் அழுந்தி கீழே விழுவர், துன்பத்துடன் எழுவர், அருகில் நின்று பெருமூச்சு விடுவர், தம் தலைமயிரைக் கலைத்துக் கொள்வர், மண்ணின் மீது விழுவதை நீக்கினர், ஒருவரையொருவர் பாராது விலகி நிற்பர், மீண்டும் எதிரே வருவர், தொழுவர், நின்று துதிப்பர், அரிய உயிர் சோர்வடைவர், தேரோட்டி! என்றழுது அவனை அள்ளி அணைத்து நீண்ட அரிய துன்பத்துள் மூழ்கியே, (குளகம்).

அ.வி: வெய்துயிர்ப்பர் -பெருமூச்சு விடுவர், வெயிர்ப்பு - வியர்வை, உழுவர் - கிளறுவர், தேர்வலவன்- பார்த்தசாரதி, உழல்வரை என்பது உழல்வதை என மாற்றப்பட்டுள்ளது.

ஒப்: "மலையென எழுவர், வீழ்வர் மண்ணிடைப் புரள்வர் கம்.யுத். நாக. 193.

(24)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வீம அர்ச்சுனர் புலம்புதல்
(கொச்சகம்)

122. மாயா கருணை வடிவா மணிநிறத்துக்
காயா மலர்மேனிக்* காகுத்தா கஞ்சன்விடு
பேயான தாயின் பெரிய முலையருந்தும்■
மாயா [1]வெமக்காய வருந்துணையிங் காரினியே.

1. வெமக்காய, சு.1+3+4; வெமக்கு, சு.2*

பொ: "ஆச்சரியமான செயல்களைச் செய்யும் மாயனே! கருணை வடிவானவனே! கரிய நிறமுடைய காயாமலர் போன்ற மேனியுடைய காகுத்தனே! கம்சன் ஏவிவிட்ட பேய் வடிவில் வந்த தாயின் பருத்த மார்பில் பால் உண்ட யாதவ குலத்தவனே! இனி எங்களுக்கு ஆகும் அரிய துணை இங்கு யார்?", (குளகம்).

அ.வி: மணி-கரிய, காகுத்தன்-இராமன், கஞ்சன்-கண்ணனின் மாமன்

ஒப்: "நந்தா விளக்கனைய நாயகனே நானிலத்தோர், தந்தாய் தனி அறத்தின் தாயே தயாநிலையே" கம். அ. திருவ. 60.

(25)

123. தீய மனத்துத் திரியோ தனன்புனலிற்
பாயுங் [1]கழுவைப் பறித்ததனிற் பாயாமற்
றூயவரி வண்டாந்ᴪ துணையே [2]துடர்ந்துனடி
நேயமுள வெம்மையிங்ங னீத்தெங்ங [3]னேகினையோ.

1. கழுவிற் பறித்ததனைப், சு.1; கழுவைப் பறித்ததனிற், சு.2+3+4* துடர்ந்து னடி,சு.1+2+4; தொடர்ந்துன்னடி, சு.3* 2. னின் றாயே, சு.1+3+4; னேகினையோ, சு.2*

பொ: தீமை இழைக்கும் மனமுடைய துரியோதனன் கங்கையாற்றில் நட்டிருந்த கழுவில் வீமன் விழாதிருக்க அக்கழு இருந்த இடத்தில் புள்ளிகளுடைய வண்டாய் இருந்து, அந்த இடத்தைக் குறிப்பான் வீமனுக்கு உணர்த்திக் காத்த துணைவனே! தொடர்ந்து உன் திருவடியின் மேல் அன்பு கொண்ட எம்மை இவ்வாறு பிரிந்து எங்குச் சென்றாயோ? (குளகம்)

அ.வி: புனல்-கங்கையாறு, நீத்து-பிரிந்து,

ஒப்: "வெங்கழு முனையில் விழாமலோ ரளியாய் வீமனுக்கா ருயிரளித்தாய்" வில். பதினே.9.

(26)

124. கன்று மனத்தி [1]னெம்மைக் காந்தாரி தன்புதல்வன்
துன்றுபுகட் பாஞ்சாலி♥ [2]துய்ய [3]குழறீண்டி

---

* ஒப். காயாமலர் மேனியன் பார்க்க: பா.மா.143,149,744.
■ பூதனையிடம் பால் உண்டது பார்க்க: பா.மா.105.
ᴪ கண்ணன் வீமனைக் கழுவிலிருந்து காத்தது பார்க்க: பா.மா.87.
♥ புகட் பாஞ்சாலி பார்க்க பா.மா.பாடல் 7-இன் வீரசோழிய மேற்கோள்.

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

[3]மன்றலுரிய* வப்பொழுதின் மானக்கே டாகாம

லன்றருளிக் [4]காத்தமையிங் காரெமைக்காப் பாரினியே.

1.னமைக், சு.1+4; னெம்மைக், சு.2; னெமைக், சு.3* 2. துய்ய, சு.1+3+4; சோரத், சு.2* 3.குழறீண்டி, சு.1+3; துகில்தீண்டி, சு.2+4* 4. மன்றலுரி, சு.1+3+4; மன்றிலுறு, சு.2* 5. யப்பொழுதின்,சு.1+3+4; பொழுதின், சு.2* 4. காத்தமையிங், சு.1; காத்தனையிங், சு.2+3*

பொ: "வருந்தும் மனத்தினையுடைய எம்மை காந்தாரியின் மகன் நெருங்கிய புகழுடைய துரோபதி வருந்த அவள் ஆடையைத் தொட்டு அரச சபையில் அவிழ்த்தபோது, அவளது மானத்திற்குக் கேடு வராது அப்போதே அருள் செய்து காப்பாற்றினாய், இங்கே எம்மை இனி யார் காப்பாற்றுவார்?"

அ.வி: கன்று-வருந்து, புதல்வன்-துச்சாதனன், சோர-வருந்த, மன்று-அரசசபை.

ஒப்: அடி 1-3. "பைங்கழ லரசவை யினில் யாமும் பார்த்திருந் தலமரப் பயந்தநுங் கழலனை யாணாணமுந் துகிலு நோக்கினை காக்கு நாயகனே" வில். கன்.பதினே.100.

(27)

125. என்றென் றரற்றி [1]யிருவருமத் தாயிழந்த

கன்றின் செயலனையார் [2]கத்தூரி யும்புழுகும்

மன்றல்செறி பன்னீரு மஞ்சன மாட்டிக் களபந்

துன்றுங் கற்பூரத் துகள்மேனி யிற்றிமிர்ந்தார்.

1. யிருவருமத், சு.1+2+3; யிருமதலை, சு.4*2.கத்தூரி, சு.1+2+4; கஸ்தூரி, சு.3*

பொ: வீமனும் அர்ச்சுனனும் இவ்வாறு புலம்பி அழுது தாயை இழந்த கன்றுபோல் வருந்தி, வாசனை நிறைந்த கஸ்தூரியும், புனுகும், பன்னீரும் கலந்த நீரில் அவரை நீராட்டி நறுமணப் பொடியை அவரது மேனியில் பூசினர்.

அ.வி: புழுகு-புனுகு, மஞ்சனமாட்டி-நீராட்டி, துன்றும்-பொருந்தும், திமிர்ந்தார்-பூசினார். முதல் இரண்டடி உவமை.

ஒப்: அடி 2."துன்று தாளினுஞ் சோர்ந்து வீழ்ந்தனர் கன்று தாய்படக் கவலுமாறு போல்" நல்.மௌ.120. "இந்தனம் எனைய என்ன, கார் அகில் ஈட்டத்தோடும், சந்தனம் குவித்து" கம்.ஆ.சடா உயிர். 134. அடி 3. களபம்-"வம்பதாம் களப மென்றோள் பூசு மென்றாள்" அந்தகக்கவி.

(28)

126. தண்ணந் துழாய்மாலை [1]தண்டா மரை மாலை

பண்ணுநவ ரற்றினப் பதக்கமுடன் சாத்தி

[2]வண்ணமணிப் பூம்பட்டுச் [3]சேர்த்தி மணங்கமழுஞ்

சுண்ண வகைத்தீப தூபங் கொடுத்தார்கள்.

---

* தருமன் துரியோதனனுடன் சூதாடி நாடு, நகரம், தம்பியர், மனைவி அனைத்தும் இழந்தான். அப்போது துரியோதனன் துரோபதியின் ஆடையை உரியும்படி தன் தம்பி துச்சாதனனுக்குக் கட்டளையிட்டான். துச்சாதனன் துரோபதியின் ஆடையை உரியும்போது, அவள் கண்ணனைத் துதிக்க, அவர் ஆடை அளித்து அவளது மானம் காத் தார். துகில் உரிந்தது பார்க்க; பா.மா.154, 659.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

1. தண்டா மரைமாலை. சு.1+3+4; தாழுமணி மார்பில், சு.2* 2. வண்ணமணிப், சு.1+3+4; வண்ணமலர், சு.2* 2. சாத்தி, சு.1+3; சேர்த்தி, சு.2; சார்த்தி, சு.4*

பொ: (வீம அர்ச்சுனர்) கண்ணனது மேனியில் துளசிமாலை, குளிர்ச்சி பொருந்திய தாமரை மாலை, நவரத்தினப் பதக்கம் முதலியன அணிவித் துப்பட்டாடை சாத்தி, நறுமணப்பொடி தூவித், தீபம் காட்டி நறும்புகை கொடுத்தனர்.

ஒப். மேலும் பார்க்க: கம்.ஆ.சட.உயிர்.135.

(29)

முனிவர்கள் கண்ணனைக் காணல்

127. அக்கான கத்தி லருமுனிவர் தாமெல்லாந்
திக்கான வைகுண்டஞ் சேர்ந்தான் றிருமார்பன்
மிக்கா ரிலானை விடைகொள்ள வேணுமெனத்
தொக்கார்பல் லாண்டோதிச் சூழ்ந்து துதித்திருந்தார்.

பொ: அந்தக் காட்டில் அரிய முனிவர்கள் எல்லாம் இலக்குமி மணாளன் வைகுண்டம் சேர்ந்தான் என்பதை அறிந்து, தமக்கு ஒப்புமை இல்லாத அவனிடம் விடைபெற வேண்டுமென்று பல்லாண்டு பாடி அவரைச் சூழ்ந்து துதித்த வண்ணமிருந்தனர்.

அ.வி: திரு-இலக்குமி; மிக்காரிலான்-ஒப்புமைஇல்லாதவன்; தொக்கார்-அடுத்தோர்(முனிவர்); திக்கு - இருப்பிடம், ஆதாரம்.

ஒப்: அடி 2,3 "முனிவர் ... மேக வண்ண மேனியனை விடைகொள்ள வேணுமென்று" வைகு.ப.37. அடி 4. பல்லாண்டு- "பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு" நாலா.காப்பு,

(30)

128. எண்வளர்ந்த சிந்தையர்க்கு மெட்டா வரும்பொருளாய்
விண்வளர்ந்த தென்ன விளங்குங் கருமுகிலைப்,
பண்வளர்ந்த வேதப் பரஞ்சுடரைப் பாற்கடலிற்
கண்வளர்ந்த கோலத்தைக் கண்ணாரக் கண்டனமால்.

பொ: எண்ணத்தை வளர்த்த மனமுடையவர்க்கும் அடைய இயலா அரும்பொருளாக வானளாவ உயர்ந்ததுபோல் உயர்ந்து விளங்குகின்ற கார்மேகக் கண்ணனை, இசை மிக்க வேதப் பரஞ் சுடரைப், பாற்கடலில் துயிலும் பேரழகைக் கண்குளிரக் கண்டனர்.

(31)

அர்ச்சுனன் நீர்க்கடன் செய்தல்

129. பாரதநேர் [1]போர்தன்னிற் பார்த்தா வுனக்கன்று
சாரதியே♦ யான தயாபரற்குத் தண்கங்கை

♦ கண்ணன் சாரதியானது பார்க்க:பா.மா.90.

Digitization by Hindu-Heritage-Foundation of America-HHFA(USA)

[2]நீரதனால் கடன்[ψ] நீயே [3]யிசைகென்னச்
சீரதனி லுள்ளதெலாஞ் செய்தான் திறல்விசையன்.

1. போர்தன்னிற், சு.1; போரதனிற், சு.2+3+4* 2. நீரதனால், சு.1; நீரதனா லாய, சு.2+3* 3. யிசை, சு.1+2+4; புரி, சு.3*

பொ: "அர்ச்சுனா! பாரதப்போரில் உனக்கு அன்று தேரோட்டியாக இருந்த கருணை வள்ளல் கண்ணனுக்குக் குளிர்ந்த கங்கை நீரால் உலகிற் கொப்பானதெல்லாம் நீ பொருந்தச் செய்வாய்", என்று கூற இறுதிக்கடனுக்குரியவற்றை எல்லாம் அவ்வாறே சிறப்பாகச் செய்தான் அர்ச்சுனன். பாரதனேர் போர் என்பது பாரத வெம்போர் என்றிருப்பின் பொருள் சிறக்கும்.

அ.வி: பாரத நேர் போர்-ஒருவரை யொருவர் எதிர்த்த பாரதப்போர், பார்த்தன்-அர்ச்சுனன், தயாபரன் -கருணை வள்ளல் கண்ணன்.

ஒப்: அடி 2. "பார்த்தன் தன்தேரை யூரும் தேவதேவன்" நாலா.1496; அடி 3,4, "வச்சிரன் றனைமாழ்க னீக்கியே...விரவு மாமறை விரித்த பான்மையிற்" "புரிசடங் கெலாம் பேரன் போற்றவே" நல்.மௌ.107, 108. "ஐயாறு நாளங் கணிநகரத்துள்ளிருந்து, வையத்தோர் தான் செய்யும் வரன்முறையால்...பார்த்தனவன் செய்தான் பரிந்து" பெருந். 45. "வாள்விசையன் செய்யுஞ் சடங்குஞ் செய்கருமம் தான் முடித்து" வைகு.ப.37.

(32)

கண்ணன் வைகுண்டம் அடைதல்

130. அந்தர துந்துமிக ளார்ப்ப வலர்தூவி
யெந்தை யெழுந்தருளினா னென்றிசை மலரோன்
வந்திங் கெதிரே வணங்கிமகிழ்ந் தேத்த
முந்திய வைகுண்ட முதல்வன் குடிபுகுந்தான்.

பொ: ஆகாயத்தில் பேரிகைகள் முழங்க, மலர் தூவி என் தந்தை எழுந்தருளினான் என்று (தாமரைமலரில் பொருந்தியிருப்பவனான) பிரம்மன் எதிர்வந்து வணங்கி மகிழ்ந்து போற்ற, மூலப் பரம்பொருளாம் கண்ணன் தன் முந்திய இருப்பிடமான வைகுண்டத்தில் குடிபுகுந்தார்.

அ.வி: துந்துமி-பேரிகை, முதல்வன்-கண்ணன், மலரோன்- பிரம்மன்.

(33)

வீம அர்ச்சுனர் துவாரகையை அடைதல்

131. மிக்க [1]முனி வரரைவிடைகொண் டிருவரும்போய்ப்
புக்க துவரா பதியிற் [2]புகழினுக்குத்

[ψ] கண்ணன் சாரதியானது பார்க்க: பா.மா.90. துரோபதி, தசரதன், இராவணன், அர்ச்சுனன், வீமன் ஆகியோர் இறந்தபோது, அவர்களுக்கு இறுதிக் கடன் கழித்தது பார்க்க: பா.மா. 312, 447, 520, 593, 621 மேலும் இறுதிக் கடன் செய்வது பற்றிப் பார்க்க: கம்.அ.திருவடி.78-82; கம்.யு.இரா.வகை.245, 246.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தக்கதிறற் சாத்தகியுந்♦ [3]தானுந் தனித்தெண்ணி
மைக்கணிறக் கொண்டலும்போய் வைகுண்டஞ் சேர்ந்தனனால்.

1. முனிவரரை, சு.1; முனிவோரை, சு.2+3+4* 2. புகழினுக்குத், சு.1; புகழினுக்குந், சு.2* 3. தானுந்,சு.1; தாமுந், சு. 2+3+4*

பொ:வீம அர்ச்சுனர் காட்டிலிருந்த சிறப்புமிக்க முனிவர்களிடம் விடைபெற்று, இருவரும் போய்ச் சேர்ந்த துவராபதியில், புகழ்வதற்கேற்ற வலிமை மிக்க சாத்தகியுடன் தனித்திருந்து ஆலோசனை செய்து, கரிய நிற மேக வண்ணனாம் கண்ணன் வைகுண்டம் சேர்ந்ததால், (குளகம்).

அ.வி: சாத்தகி- சத்தியகனின் மகன், கண்ணனின் பங்காளி.

(34)

வீம அர்ச்சுனர் துவாரகையிலிருந்து புறப்படுதல்

132. [1]இங்கிருக்கை யாதுமினி தன்றென் றெண்ணிமிகச்
சங்கமைத்த [2]கையனருள்♣ தந்த வுரைப்படியே
வங்கக் கடற்றுவரை மாநகரைக் கைவிட்டுப்
பொங்குகடற் சேனையெல்லாம் [3]போகப் புறப்பட்டார்.

1. இங்கிருக்கை, சு.1+3+4; இங்கிருக்க, சு.2* கையன்றருள், சு.1; கையனருள், சு.2+3; கைய்யனருள், சு.4* 3. போகப், சு.1; போற றப், சு.2+3+4*

பொ: இனி இங்குத் துவாரகையில் இருப்பது இனிதன்று என்று நினைத்து, சங்கைக் கையில் ஏந்திய கண்ணன் அருளிச் சொன்னது போல், கப்பல் செல்லும் கடலால் சூழப்பட்ட துவாரகையை விட்டுக் கடல்போல் பொங்கும் நால்வகைச் சேனையெல்லாம் உடன்வரப் புறப்பட்டனர்.

ஒப்: அடி 3. வங்கக்கடல் -"வங்கக்கடல் கடைந்த மாதவனை" திருப்: 30.

(35)

மோழையால் துவாரகை அழிதல்

133. ஆழி நெடுமா லருளி னிடங்கொடுத்துச்
[1]சூழு கடன்முன்னாட்♥ சொற்ற [2]வருட்படியே
மோழை யது[3]மண்டியெங்கு மூடிற்றால்▪ முன்னாண்ட
வாழி யரசேக [4]மண்கொண்டார் மாற்றலர்போல்.

♦ ஒப். சாத்தகி பற்றிப் பார்க்க.பா.மா.78.
♣ ஒப். சங்கமைத்த கையன் தந்த உரை. பார்க்க: பா.மா.118.
♥ குறிப்பு: துவாரகை கடலால் அழியும் என்று கண்ணன் கூறியது. இதை நல்லாப் பிள்ளையும், அரங்கநாதக் கவிராயரும் தம்நூலில் குறிப்பிட்டுள்ளனர்.
▪ மோழையால் துவாரகையின் அழிவு பார்க்க: பா.மா.152.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

1. சூழுகடன், சு.1+3; சூழுங்கடல், சு.2+4* 2. வருட்படியே, சு.1+3+4; மொழிப்படியே,சு. 2*3. மண்டில, சு.1; மண்டி, சு.2+4; மண் டியெங்கு, சு.3* 4.மண்கொண்டார், சு.1; மண்கொண்ட, சு.2+4(சு.3 சி.)*

பொ: பாற்கடலில் பள்ளிகொண்ட நெடிய கண்ணன் அருளால் பூமிக்கு இடங்கொடுத்துத் துவாரகையைச் சூழ்ந்துள்ள கடல் முன்பு கூறியபடி, முன்பு நாட்டை ஆண்ட அரசன் இறக்க (அவனுடைய), அரசைக்கைப் பற்றிய பகைமன்னர் போல், மோழை நெருங்கி எல்லாவிடங்களிலும் மூடியது.

அ.வி: ஆழி-சக்கராயுதம், திருப்பாற்கடலுமாம், மோழை-கீழாறு, மண் டிலம்-பூமி, இறுதியடி உவமை.

ஒப். அடி 2. "இந்த மாநகர் ஏழுநா ளிருப்பதா மினிமேல் அந்த மெய்திடும் வாரியில்" நல்.மௌ.92. "விருப்புறு மிந்நகர் மூழ்கும்" அரங்.மௌ.44., "ஆழிநீர் வண்ணனருளாலே அந்நகர் மூழையது வெழுந்து மூடிற்றே" பெருந்.46. அடி 3. மோழை-"மோழையெழுந் தாழிமிகும் ஊழி வெள்ளம்" நாலா.1286. மேலும் கடல், நகரைக் கொண்டது பற்றிப் பார்க்க: கலித்தொகை.104. (36)

வேடர் பின்தொடர்தல்

134. தேடுநிதி யனைத்துஞ் [1]செய்யதிரு மங்கையரு
[2]நாடும் புரவியோர் நாற்பத் தெண்ணாயிரமு
மாடல் [3]மதகரிக [4]ளாறுநூ றாயிரமுங்
[4]கூடவரவே வேடர்கொள்ளை கொள்ளவே [6]துடர்ந்தார்.

1. செய்யதிரு, சு.1; செய்யமட, சு.2+3+4* 2. நாடும் புவியொரு, சு.1+3+4; நாடு புவியோர், சு.2* 3.மதகரியு, சு.1; மதகரிக, சு.2+3+4* 4.மாறுநூ, சு.1; ளாறுநூ, சு.2+3+4* 5. கூடவரவே, சு.1+2; கூடிவரவே, சு.3+4* 6. துடர்ந்தார், சு.1+2+4; தொடர்ந்தார், சு.3*

பொ: (வீம அர்ச்சுனர்) துவாரகையிலுள்ள மக்கள் தேடிய எல்லாப் பொருட்களும், அழகிய மகளிரும், குதிரைகள் 48 ஆயிரமும், அசையும் மதம்பொருந்திய யானைகள் ஆறு இலட்சமும் அவர்களுடன் சேர்ந்து வர, வேடர்கள் கொள்ளைகொள்ளப் பின் தொடர்ந்தனர்.

ஒப்: அடி 1-4. "வண்டுவரை தன்னிலுள்ள மாநிதியும் வாம்பரிமா, கெண்டையங்கண் மாதருடன் கேசவன்றன் பண்டாரம் உள்ளதெல்லாம் கொண்டுவர வோங்கு வரை வாணர் கொள்ளை கொண்டார் எல்லாம் குறித்து" பெருந்.47. "நிதியின் குழுவும் வருநேரிழையார், மதியின் குழுவும் வயமெய்துறவே,...மிளிர் வெம்படையார், கதியின் புடைவந்தனர்". நல்.மௌ.140.

குறிப்பு: அடி 2, புவி என்பது புரவி எனவும், தெண்ணாயிரருமென்பது தெண்ணாயிரமும் என்று கொள்ளப்பெற்றது.

(37)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வேடர் கொள்ளையிடுதல்

135. சூர்மேவும் [1]வீமன் துடர்ச்சியாய் முன்புவரத்
[2]தார்மேவுந் தோள்விசையன் தானையதின் பின்செல்ல
கார்மேகம் வந்து [3] கவிந்தனவே யென்னவந்தப்
பார்வன வேடர் பறிக்கத் துடங்கினரால்.

1.வேடன், சு.1; வீமன், சு.2* 2. தார்மேவுந், சு.1; தார்மேவு, சு.2* 3.தானையதிற், சு.1+2+3; தானையதன், சு. * 3. கவிந்தனவே, சு.1+3+4; கவிந்தனமேயா, சு.2*

பொ: வலிமை பொருந்தியிருக்கும் வீமன் தொடர்ந்து (சேனையின்) முன்னே செல்ல மாலையணிந்த தோள்களையுடைய அர்ச்சுனன் அந்தச் சேனையின் பின்னே செல்லக், கரிய மேகம் வந்து வளைத்தது போல், அங்கு வந்த காட்டு வேடர்கள் விசயனின் படை பின்வாங்கிச் செல்லும்படிக் படைக்கு முன்பாக வந்து சூழ்ந்து(கொண்டு), துவாரகையிலிருந்து கொணர்ந்த பொருட்களைப் பறிக்கத் தொடங்கினர்.

அ.வி: சூர்-வலிமை, மூன்றாவதடி உவமை. தானையதின் என்பது 'தானையதன்' என இருப்பின் சிறக்கும்.

ஒப்: "கார்மேக மெங்கும் கலந்தெழுந்த வாறேபோல், போர்வேட ரெங்கும் ... சீர்மேவும், மாநிதியும் கொள்வார்". பெருந்.48. (38)

வீமனின் ஆயுதம் செயலிழத்தல்

136. கண்டான் சொல்வீமன் [1]கருவேடன் செய்கையினைப்
பண்டான வாயுதத்தைப் பார்த்துப் பகைத்தவர்மேல்
கொண்டானச் [2]சீற்றத்தாற் கூறுஞ் சமர்துடங்கத்
தண்டாயு தந்தானுந் தன்கைவச [3]மாச்சிலதால்.

1. கருவேடன், சு.1; கனவேடர், சு.2; கருவேடர், சு.3+4* 2. சீற்றத்தாற், சு.1+3+4; சீற்றத்திற், சு.2* 3. மாச்சிலதால், சு.1+3+4; மாச்சிலையால், சு.2*

பொ: புகழ்பெற்ற வீமன், வேடர்கள் கொள்ளையிடும் செயலைக் கண்டு, தன் பழமையான கதாயுதத்தை எடுத்து அவர்களைப் பார்த்துப் பகைகொண்டு போர் செய்யத் தொடங்கக், கதாயுதம் கூட அவன் கைக்குக் கட்டுப்படாமல் பயனற்றதாயிற்று.

அ.வி: சொல் - புகழ், பாண்டான ஆயுதம் - கதாயுதம், கைவசம் ஆச்சிலது - பயனற்றுப் போயிற்று.

ஒப்: "விறல்வீமன் வீரியமும் குன்றியதா லூக்கங் குறைந்து" பெருந்.49. (39)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

137. எண்ணான துட்டனி டும்பனையும்♥ வெங்கொலைக்குப்
பண்ணாகி♦ நின்ற பகாசுரனை யுங்கொன்றுΨ
விண்ணா டளித்ததிறல் வீமனுக்கு வேடர்படை
கண்ணாலு [1]நோக்கி [2]வசமின்றிக் [3]கலந்துளதால்.

1. நோக்கி, சு.1+4; நோக்க, சு.2+3* 2. வசமின்றிக், சு.1+4; கடிதா, சு.2; வச்சமின்றிக், சு.3*
3.கலந்துளதால், சு.1+3+4; யிருந்துளதால், சு.2*

பொ: தீமையே தன் எண்ணமாகக் கொண்ட இடும்பனையும், கொடிய கொலைத் தொழிலில் பொருந்தியவனாகிய பகாசுரனையும் கொன்று வானுலகிற்கு அனுப்பிய வலிமையுள்ள வீமனுக்கு, வேடர்படை கண்ணால்கூடப் பார்த்து (அவர்களை) அழிக்கும் வலிமையின்றிப் போகுமளவு அப்படை அவர்களுடன் கலந்து நின்றது.

அ.வி: இடும்பன்-இடும்ப வனத்தின் அரக்கன், பண்ணாகி-பொருந்தி, பகாசுரன்-ஏக சக்கர வனத்திலுள்ள அரக்கன்.

ஒப்: அடி 1. "வன்றிற லிடும்பனை வயக்கை யாலுடல், ஒன்றிரண்டாகுமாறுடன்ற மைந்தனை" வில்.ஆதி.வேத். 16. (40)

அர்ச்சுனனின் ஆயுதம் செயலிழத்தல்

138. பாத்தனிகல் வேடர் பறிக்குஞ் செயல்கண்டே
சேத்துமழை பொழியுஞ்செய் கையெனத் தேவரெலா
மேத்துவிறற் காண்டிபத்தி னேவைத் தொடுத்துமிகக்
கோத்தகணைΨ வாங்கவலி கூடாமல் [1] நின்றனனால்.

1. னின்றனனால், சு.1; வாடினனால், சு.2+3+4*

பொ: அர்ச்சுனன் வலிமையுடைய வேடர்கள் பொருட்களை வழிப்பறி செய்தலைக் கண்டு, சேற்றில் மழை பெய்யும் செயலைப் போல், தேவர்கள் எல்லாம் போற்றும் காண்டீப வில்லை வளைத்து அம்பைத் தொடுத்து மிக முயன்று பொருத்திய அம்பை எய்வதற்கு இயலாமல் வலிமையற்று நின்றான்.

அ.வி: காண்டீபம் - வில், ஏ- அம்பு, கணை-அம்பு, 'சேற்று' என்பது எதுகை நோக்கிச் சேத்து என்றாயிற்று. பார்த்தன் பாத்தன் என்பதும் அது. இரண்டாவதடி உவமை.

♥ வீமன் இடும்பனைக் கொன்றது: இடும்ப வனத்தில் உள்ள இடும்பன் என்ற அரக்கனின் தங்கை இடும்பி. அவள் வீமனைக் கண்டு காமுற்று வீமனிடம் தன் தமையன் அறியாது ஒரு குன்றில் சென்று வாழலாம் என்றாள். அப்போது இடும்பன் அங்குவர, வீமன் அவனுடன் போரிட்டு அவனைக் கொன்று இடும்பியை மணந்தான்.

♦ இசை-பண், இசைதல் -பொருந்துதல், பண்ணாகி - பொருந்தி.

Ψ பகாசுரனைக் கொன்றது: வேத்திரகீயம் என்ற ஊரில் பாண்டவர்கள் ஓர் அந்தணர் இல்லத்தில் தங்கி இருந்தனர். ஏக சக்கரவனத்து அசுரனான பகாசுரன் மக்களை வருத்திக் கொண்டிருந்தான். அந்தணப் பெண் அசுரனுக்குத் தன் மகனை உணவாகக் கொடுக்க வேண்டிய முறைவரக்கண்டு அழுதான். அதுகண்ட வீமன் அசுரனோடு போரிட்டு அவனைக் கொன்றான்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஒப்: அடி 3. ஏ-"ஏவக விருத்தச் செவ்வியின் றனுவுக்கு" வில். ஆதி.காண்.49.

139. கானமெனுங் காண்டா வனத்தைக் கனல்கொளுத்தித் (41)
தானவர்முக் கோடியரை* வென்ற தனஞ்[1]செயற்கங்
கீனமிகு வேட ரெதிரா [2]யினர் புன்மை
யான [3]புகுதற்கன் [4]றாரம்ப மாகையினால்.

1. செயற்குங், சு.1; செயற்கங், சு.2+3+4* 2. யினர் புன்மை, சு.1+3+4; யின புன்மை, சு.2* 3. புகுதற்கன், சு.1+3+4; புகுதற்கங், சு.2* றாரம்ப, சு.1+3+4; காரம்ப, சு.2*

பொ: சிறுமையான செயல்கள் அப்போது உலகில் புகுவதற்கு ஆரம்பம் ஆகியதால் காண்டவ வனம் என்னும் காட்டை எரியச் செய்து, நிவாத கவசர் என்னும் முக்கோடி அசுரரை வென்ற அர்ச்சுனனை இழிந்த பண்பு மிகுந்த வேடர்கள் எதிர்த்துப் போர் செய்வாராயினர்.
அ.வி: தானவர் முக்கோடியர்-தோய மாபுர வாசிகளான முக்கோடி அசுரர் நிவாத கவசர்.
ஒப்: அடி 1. "காண்டவமுங் கனல்வயிற்றுக் கனறணிய நுகருவித்துக் காக்கும்" வில். சபா.1. "துவசத் தொடுதேர் களம்வீழச் சுடர்நிவாத கவசத்தொடு மெய் கடல்வீழ..." வில்.ஆர.நிவாத.

(42)

வீம அர்ச்சுனரின் வீரம் கெடுதல்

140. துங்கமிகு மாயன் துணைசெய்த தோற்றத்தால்
யெங்கள் தனிவீர மேற்றமெனத் [1]திரிந்தார்
[2]தங்கள்படை மேன்மை தருக்கழிந்து பார்த்திருக்க
வங்குளவில் வேடரணி சூறைகொண் டகன்றார்.

1. திரிந்தார், சு.1+3+4; பொருதார், சு.2* 2. தங்கள்படை மேன்மை, சு.1+3+4; தங்கள டைமை, சு.2*

பொ: (வீம அர்ச்சுனர்) தூய்மை மிகுந்த கண்ணன் உதவி செய்த காரணத்தால் தங்கள் ஒப்பற்ற வீரம் ஏற்றமுடையது, தங்கள் வீரத்தால் பெற்றதென்று எண்ணியிருந்தனர். தங்களது ஆயுதத்தின் சிறப்புத் தம் கண் முன்னே வலிமை இழந்து போனதைப் பார்த் திருக்க, அங்கிருந்த வில் வேடர் கூட்டம் இவர்களது பொருட்களைக் கொள்ளையிட்டுச் சென்றனர்.
ஒப்: அடி 4. சூறை-"சோதியான் சூழ்பனிநீர் சூறை கொள்ளு, மாறே போல்" பட்டினத்தார் பாடல். நெஞ்சொடு மகிழ்தல்.32.

(43)

---

* காண்டவ வனம் எரித்த அர்ச்சுனனுக்கு அக்னியின் ஏவலால் வருண பகவான் கொடுத்த வில்.
* நிவாத கவசரை அழித்தது பார்க்க: பா.மா. 255, 589. அர்ச்சுனன் நிவாத கவசரை அழித்தது: இந்திரன் அர்ச்சுனனிடம் முக்கோடி அசுரரை வதைத்து அவனது பகையைத் தீர்க்க வேண்டினான். அர்ச்சுனன் பாசுபத அம்பை ஏவி நிவாத கவசரான முக்கோடி அசுரரை அழித்தான்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வீம அர்ச்சுனர் அத்தினபுரம் அடைதல்

141. பட்டுப் படாதபடர் சேனையுந் [1]தாமுந்
தட்டுற்ற மாற்றார் [2]தமக்குடைந்த தன்மையென
மட்டுற்ற [3]தோளார் மதிலத்தின புரத்தைக்
கிட்டித் தருமன்கிளர்[4]பதத்தைக் [5]கீட்பணிந்தார்.

1.தானுந், சு.1; தாமுந், சு.2+3+4* 2. தனக்குடைந்த, சு.1; தமக் குடைந்த, சு.2+3+4* 3.தோளான், சு.1; தோளார்,சு.2+3+4* 4. பதத்தைக், சு.1; பதத்தின், சு.2+3+4* 5.கீட்பணிந்தார், சு.1+4; கீழ்வீழ்ந்தார், சு.2; மேல் பணிந்தார், சு.3*

பொ: அம்பு பட்டும் சாகாமல் இருக்கும் பெரிய படையும், வீரம் அழிந்து நிற்கும் வீம அர்ச்சுனரும் முன்பு வலிமையற்ற பகைவர் இவர்களுக்குத் தோற்றது போல், (இப்போது இவர்கள் வேடரிடம் தோற்று நிற்க), தேன் பொருந்திய மாலையணிந்த தோளரான இருவரும் அத்தினபுரத்தை அடைந்து விளங்கும் தருமன் பாதங்களைக் கீழ்ப் பணிந்து நின்றனர்.

அ.வி: பட்டுப்படாத - அம்பு பட்டும் சாகாத, கிட்டி-அடைந்து, இரண்டாவதடி உவமை.

ஒப்: கீட்பணிந்தார்-பார்க்க பா.மா. பாடல் 7-இன் வீரசோழிய மேற்கோள். (44)

தருமன் கண்ணனின் நலம் வினவுதல்

142. கண்டு பணிந்தார் கருகு [1] மனத்தினராய்க்
கொண்ட துயருடனே நிற்பக் குலமுதல்வன்
வண்டுவரை மாநகர்வாழ் மாலினுக்கும் [2]பால்வணற்கும்
பண்டுநன் னேரிற் பழுதிலவோ தானென்றான்.

1 மனத்தினாய்க், சு.1; மனத்தினராய்க், சு.2; மனத்தராய், சு.3+4* 2.பால்வணற்கும், சு.1+3+4; பால்வணரும், சு.2*

பொ: வீம அர்ச்சுனர் இருவரும் இருண்ட மனத்தினராய்த் துயரத்துடன் நிற்க, அவர்கள் குல முதல்வனாகிய தருமன் அவர்களிடம், "வளமையான துவாரகைப் பெருநகரில் வாழும் கண்ணனும் பலராமனும் முன்புள்ள நலனில் குறைவின்றி இருக்கின்றனரோ" என்றான்.

அ.வி: கருகு மனத்தினர்-இருண்ட மனத்தினர், குலமுதல்வன்-தருமன், பால்வணர்-வெண்மை நிறமுடைய பலராமர், நன்னேர்-நலம்.

ஒப்: அடி 3,4. "வேந்தர் வேந்தர் தன் வரைத்தடந்தோள் இணை வலியவோ?" கம்.ஆ.சடாயு.18.
அடி 3, பால் -"பாற்றிரு நீற்றெம் பரமனை திருவாசகம் 44, 6. (45)

143. பேசாம லொன்றும் பெருந்துயரத் தொடுநிற்ப
[1]மாசான [2]தின்றிமதி மானென வாழ்தருமன்
[3]காசா♥ மலர்நிறத்துக் காகுத்தன் செய்கைதனைக்
கூசாம லுள்ள [3]குறிப்புரையு நீரென்றான்.

♥ ஒப்: கண்ணன் காசாமலர் நிறத்தன் பார்க்க: பா.மா.122.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

1. மாசாதி, சு.1; மாசான, சு.2+3+4* 2. யின்றமதி, சு.1; தின்றிமதி, சு.2+3+4* 2.காயா மலர்நிறத்துக், சு.1+4; காசா மலர் நிறத்துக், சு.2; காசா நிறத்துக், சு.3 *3. குறித்துரையு, சு.1+3+4; குறிப்புரையு, சு.2*

பொ: (இருவரும்) ஒன்றும் பேசாமல் வந்து சேரும் மிக்க துயரத்தோடு நிற்க, குற்றமென்பது இல்லாமல் அறிவுடையவனாக வாழும் தருமன், "காயாம்பூ வண்ணக் கண்ணனின் செயலைத் தயங்காமல் குறிப்பாகச் சொல்வீர் நீர் " என்றான்.

அ.வி: மாசு ஆதி-குற்றம் முதலியவை, கூசாமல்-தயங்காமல், காயாமலர் என்பது எதுகை நோக்கிக் காசாமலர் என்றாயிற்று.

(46)

வீம அர்ச்சுனர் நிகழ்ந்ததைக் கூறல்

144. ஐயா வறத்தி னரசே யடியேங்கள்
செய்யாத விண்ணப்பஞ் செப்புவதென் றீவினையே
மையாழி வண்ணனுந்தன் வைகுண்டஞ் சேர்ந்தனன் பால்
[1] மெய்யானும் பாலாழி தன்னிலுற [2] வேவினனால்.

1.மெய்யாலும்,சு.1; மெய்யானும்,சு.2+3+4*2. வேவினனால்,சு.1;மேவினான், சு.4, (சு.2,3 சி) *

பொ: "தலைவா! தரும ராசாவே! அடியவர்களாகிய நாங்கள் எங்களால் சொல்ல இயலாத தீவினை செய்தியை எவ்வாறு சொல்வது? கரிய கடல் போன்ற வண்ணமுடைய கண்ணன் தன் வைகுண்டத்தைச் சேர்ந்தான். மேனி வெண்ணிறம் கொண்ட பலராமனும் பாற்கடலில் இருக்க விரும்பிச் சென்றான்.

அ.வி: விண்ணப்பம்-செய்தி, மை ஆழி - கரியகடல், பால்மெய்யான்-பலராமன்

(47)

கண்ணன் இறந்தது கேட்டுத் தருமன் வருந்துதல்

145. என்றவுரை செவியி னேறிய[1]நா ராயமெனச்*
சென்றுபுக விருந்த சிங்காசனத்[2]தினின்று
நின்றமரங் காற்றி னிலைதளர்ந்து சாய்ந்ததெனத்
துன்றுமணி முடியான் றுன்பத்துடன் [3]வீழ்ந்தான்.

1. நாராய மெனச், சு.1; நாராச மெனச், சு.2+3+4* 2. தினின்று, சு.1+3+4; திருந்து.சு.2* 3.வீழ்ந்தான்,சு.1+3; விழுந்தான், சு.2+4*

பொ: என்று சொன்ன சொற்கள், காதில் சூடான ஈயம் ஏறியதுபோல் போய்ப்புகத் தானிருந்த அரியாசனத்திலிருந்து பூமியில் நின்ற மரம் காற்றில் நிலைகுலைந்து விழுந்ததுபோல், மணிமுடி சூட்டிய தருமன் துன்பத்துடன் விழுந்தான்.

* ஒப்: செவியி னேறிய நாராயம் பார்க்க: பா.மா.194. மரம் காற்றில் சாய்ந்தது பார்க்க: பா.மா. 512, 609.

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

அ.வி: நாராயம்-இரும்பாலான கம்பி, மணிமுடியான்-தருமன், நாராசம் என்பது நாராயம் என்றாயிற்று. மூன்றாவதடி உவமை.

ஒப்: அடி 1. நாராயம் -"குறுநரிக்கு நல்ல நாராயம் கொளல்" பழ. 80. (48)

தருமன் புலம்புதல் 146-151

146. வாழ்வே! யெனக்கு [1]வருத்தா வருந்தனமே!
தாழ்வேது மின்றியெமைத் தாபரிக்குந் [2] தாபரமே!
சூழ்வேலைப் பார்புரக்கச் [3]சூட்டி [4]மகு டந்துயரி
லாழ்வென [5]தாக்கினையா லையா! நின்னன் பிதுவே!

1. வருத்தா, சு.1; வருந்தா, சு.2+3+4* 2. தாபரமே, சு.1+3+4; தாயகமே, சு.2* 3. சூட்டி, சு.1+3+4; சூட்டு, சு.2* 4.மகு டந்துயரி, சு. 1+3+4; முடியென் துயரி, சு.2* 5. தாக்கினையா, சு.1+3; தாக்கி னையே, சு.2+4*

பொ:" வாழ்வே! எனக்கு வருத்தமின்றி வரும் பெருஞ்செல்வமே! குறைவின்றி எங்களைத் தாங்கும் துணையே! கடல் சூழ்ந்த உலகைக் காக்க என்னை மன்னனாக்கி முடி சூட்டி (நாங்கள்) துன்பத்தில் மூழ்கி அழுந்து என்று ஆக்கினையே தலைவா! உனது அன்பு இதுதானோ?"

அ.வி: வருத்தா அருந்தனம்-அடைதற்கரிய பெருஞ்செல்வம், தாபரிக்கும் தாபரம் - தாங்கும் துணை, வேலை - கடல், ஆழ்+என-ஆழ்வென. இத்தகையவற்றை மெய்யீற்று உடம்படுமெய் என்பார் நச்சினார்க்கினியர் தொல்.எழு.140. உடம்படு மெய்யல்லாத 'வ' கரம் தோன்றிற்று என்பர் சங்கர நமச்சிவாயர் நன்.163. எ-டு செல்வுழி.("வாழ்வே யெனக்கு" என்பது "வாழ்வே யெமக்கு" என்றும் "நின்னன் பிதுவே" என்பது நின்னன்பிதுவோ என்றும் இருக்க வேண்டும்)

ஒப்: அடி 1. வருத்தா அருந்தனம்-"வாராத செல்வம் வருவிப்பானை". அப்.தே.VI. 54-8.
அடி 2, தாபரம்-"மருதூரனென் றாபரமே" மருதூ ரந்தாதி.60.

(49)

தருமனின் துயரம்

147. கானடைந்த வன்றுமுதற் காத்தெம்மை நீங்காம
லூனடையு மாருயிர்போ [1]லொன்றா யுறைந்துளநீ
வானடைந்த வைகுண்டஞ் சேர்வாயவ் வைகுண்டந்
தானடைந்தே யாமும் பிழைக்கவருள் [2]தந்திலையே

1.லொன்றா, சு.1+3+4; யொன்றா, சு.2* 2.தந்திலையே, சு.1; தந்திலையால், சு.2+3+4*

பொ: "காடுசென்ற அந்த நாள் முதல் எங்களைக் காத்து எம்மை விட்டு அகலாமல் உடலை அடைந்த அரிய உயிர்போல் ஒன்றாய் எம்முடன் தங்கி இருந்த நீ, விண்ணிலுள்ள வைகுண்டம் சேர்ந்தாய். அந்த வைகுண்டத்தை நாங்களும் அடைந்து நற்கதிபெற அருள் செய்யவில்லையே?" (பாண்டவர்கள் உடலுக்கும் கண்ணன் உயிருக்கும் உவமை).

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஒப்: அடி 2. "ஊனும் உயிரும் உணர்வும் போல்" கம்.அ.கடவுள் வாழ்த்து, "கான் அடைந்தேன் என்னத் தரியாது காவல நீ வான் அடைந்தாய்...ஊன் அடைந்த தெவ்வர் உயிர்" கம்.அ. திருவடி.65.

(50)

148. தூதாகி [ψ] மிக்க துணையாகித் தோழனா
யாதார மாகி யணிந்துள தேர்ப்பாகனாய்[■]
[1]நீதானெனைப் பிரிய நெஞ்சுடை[2]யனானக்கா
[3]லேதாக நானிங்கி ருப்பே [4]னிறைவனே.

1. நீதானெனைப், சு.1+2; நீதானெமைப், சு.3+4*2. யனா னக்கா, சு.1; யையானக்கா, சு.2+3+4* 3.லேதாக, சு.1+3; லேதாகி, சு.2* 4.னிறைவனே,சு.1; னிறையவனே,சு.2+3+4*

பொ:"தூது சென்று தூதுவனாகி, நெருங்கிய துணையாகி, நண்பனாகி, ஆதரவு அளித்தவனாகி, அர்ச்சுனனுக்குத் தேரோட்டியாக இருந்த நீ என்னைப் பிரிந்து செல்ல மனமுடையவன் ஆனால் நான் எதுவாக இங்கு இருப்பேன் தலைவனே!

ஒப்: அடி 1. "வேத மாகி வேள்வியாகி விண்ணினோடு மண்ணுமாய்" நாலா.785.

(51)

149. வேலை யழலுருவ[♥] மெய்மரங்க ளேழுருவ,
வாலிமணி மார்புருவ[♣] வாங்குஞ்சிலைக் கையுடைய
நீலமலர் காயா நிறமா முகிலென்ன
வேலுந் [1]திருக்கோலு மென்றினிநான் [2] காண்குவதே.

1. திருக்கோலு, சு.1; திருக்கோல, சு.2+3+4* 2. காண்குவதே, சு.1; காண்பதுவே, சு.2+3+4*

பொ: "கடலை நெருப்பு உருவ (அக்னியாஸ்திரம் செலுத்தி), ஏழு மரங்களையும் ஊடுருவ, வாலியின் அழகிய மார்பில் ஊடுருவ வளைந்த வில்லை வாங்கும் கையுடைய நீலமலர் போன்ற கார்மேக நிறம் பொருந்தும் அழகிய வடிவத்தை இனி நான் எப்போது காண்பேன்?"

அ.வி: அழல்-அக்னியாஸ்திரம், மரம்-மராமரம், வாங்கும் சிலை-வளைந்த வில், ஏலும்-பொருந்தும்.

ஒப்: அடி 1.வேலையழலுருவ-"கொடுஞ்சிலை வழங்கிய பகழி, ஏழு வேலையும் எரியொடு புகை மடுத்து ஏகி" கம்.யு.வரு.20. "ஏழுமா மரம் உருவி கீழ்உலகம் என்றிசைக்கும் ஏழும் ஊடுபுக்கு உருவி" கம்.கி.மரா.15,16. "மீக்கொண்ட வாலி மேல், கோல் ஒன்று வாங்கி, தொடுத்து, நாணொடு தோள் உறுத்து இராகவன் துரந்தான்" கம்.கி.வாலி.65.

(52)

[ψ] கண்ணன் தூது சென்றது பார்க்க: பா.மா.606, 660. பாண்டவர்கள் காட்டில் பன்னிரண்டாண்டு வாழ்ந்து திரும்பி வந்த பின்னும் துரியோதனன் அவர்களுக்கு நாடு கொடுக்க மறுத்தான். தருமன் போரை விரும்பாது பாதி நாடு அல்லது ஐந்து ஊர், அல்லது ஐந்து இல்லம் கொடுத்தால் யுத்தம் வேண்டுவதில்லை என்று துரியோதனனுக்குக் கூறும் படிக் கண்ணனைத் தூதாக அனுப்பினான்.

[■] தேர்ப்பாகனாய் இருந்தது பார்க்க: பா.மா. 90.

[♥] ஒப்: அக்னி கணை ஏவியது பார்க்க: பா.மா.494.

[♣] மராமரம் எய்தது பார்க்க: பா.மா. 470. வாலியின் மார்பு உருவியது பார்க்கபா.மா: 472.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

150. [1]ஈரைஞ்சு சென்னி யிராவணனை[ᵠ] வெஞ்சமரி
னேரந் தரத்து நிருதரையும் வேரறுத்த
வீரந் தனையுன்னி [2]மெல்லியனென் றோவென்மேல்
வாரந்தனைத் தவிர்ந்து வைகுண்டஞ் [3]சேர்ந்தனையே.

1. ஈரைஞ்சு,சு.1; ஈரஞ்சு, சு.2; ஈரைந்து, சு.4 (சு.3 சி) *2.மெல்லியலென், சு.1+2+3; மெலிவனென், சு.2; மெல்லியனென், சு.4* 3.சேர்ந்தனையே, சு.1; சேர்ந்ததுவே, சு.2+3+4*

பொ: " பத்துத்தலையுடைய இராவணனைக் கொடிய போரில் எதிர்த்து அவனைக் கொன்று அரக்கர்களை வேரோடழித்த உன் வீரத்தை எண்ணி, நான் வலிமையற்றவன் என்றோ என்மீது கொண்ட அன்பை நீக்கி வைகுண்டம் அடைந்துவிட்டாயே ! "

அ.வி: ஈரஞ்சு சென்னி - பத்து தலை, நேர்-எதிர்ப்படுவது, அந்தரம் - பகை கூட்டம், நிருதர்-அரக்கர், வாரம்-அன்பு, மெல்லியன்-வலிமையற்றவன், ஈரைஞ்சு என்பது எதுகை நோக்கி ஈரஞ்சு என மாற்றப் பெற்றது.

ஒப்: அடி 1-3. "அரம் சுடச் சுடர்நெஞ்சின் அரக்கர்கோன், உரம்சுடச் சுடரோன் மகன் உந்தினான்" கம்.யு.இரா.வகை.192. அடி 4. வாரம் -"தாளி ணைக்கொடு வார மாகுமென்" நாலா.664. (53)

151. கஞ்சன்[1]விடுபேயாங் கனபேயி[♥] னாருயிரும்
வஞ்சச் [2]சகடு மருதும் [3]விழவுதைத்த
நெஞ்சத் திறமையுள [4]நேரோ யுனைநம்பித்
தஞ்சமெனு மெம்மைப் பிரிந்திடவுந் தக்கதோ.

1.விடுபேயாங், சு. 1+3+4; விடுந் தாயாங், சு.2*2. சகடு மருதும், சு.1+2; சகடும் மருதும், சு.3+4* 3. விழவுதைத்த, சு.1; பொடியாக்கி, சு.2+3+4* 4. நேரே, சு.1; நேரோ, சு.2+3; நேரா, சு.4* 4. நம்மை. சு.1+2+3+4*

பொ: "கம்சன் ஏவலால் வந்த பேயான பெருத்த பூதனையின் அரிய உயிரும், வஞ்சக எண்ணமுடைய சகடாசுரனும், மருதமர உருவில் வந்தவனும் ஆகியோரை அழித்த மன வலிமையும் நேர்மையுமுடையவனே உன்னை நம்பி அடைக்கலமாக வந்த எம்மைப் பிரிந்து சென்றது தக்க செயலோ?".

குறிப்பு: அடி 4 இல் 'தஞ்சமெனும் நம்மை' என்பது 'தஞ்சமெனும் எம்மை' என்று கொள்ளப் பெற்றது.

ஒப்: அடி 2. "கள்ளச் சகடு கலக்கழிய" நாலா.131. "மருதம் இறுத்த பிள்ளை" நாலா.32. (54)

[ᵠ] இராவணனைக் கொன்றது பற்றிப் பார்க்க: பா.மா. 519, 560.

[♥] கண்ணன் பூதனையிடம் பால் உண்டது பார்க்க: 105, கண்ணன் சகடர்சுரனை அழித்தது பார்க்க: பா.மா. 525. கண்ணன் மருதமரம் உதைத்தது பார்க்க: பா.மா.525, 681.
சகடாசுரனை அழித்தது: கம்சன் கண்ணனைக் கொல்ல சகடாசுரன் என்னும் அசுரனை அனுப்பினான். அவன் கண்ணன் தூங்கிய இடத்திற்கருகில் ஒரு வண்டியில் தன் ஆற்றலைப் புகுத்தி அமர்ந்திருந்தான். கண்ணன் அவனைத் தன் காலால் உதைத்துக் கொன்றான்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வீம அர்ச்சுனர் வழியில் நிகழ்ந்ததைக் கூறல்

152. வாழியற மன்னன் வருந்துகின்ற காலத்தி
னாழியயலே யடுத்த துவரா பதிநீர்
மோழையது மண்டிநில* மூடியது [1]முந்தியே
[2]சூழை♦ முது [3]வேடர்கிளை சூறைகொண்டதும் பகர்ந்தார்.

1.முந்தியே, சு.1+3+4; முற்றியெதிர், சு.2*2. சூழைமுது, சு.1+3+4; சூழுமது, சு.2*3. வேடர்கிளை சூறை, சு.1+3+4; வேடர் சூறை, சு.2

பொ: தருமன் துன்புற்றிருந்த வேளை, வீம அர்ச்சுனர் கடலுக்கருகில் உள்ள துவாரகையை மோழை நெருங்கி வந்து (பூமியை) அழித்ததையும், முன்பே குடுமி வைத்த வேடர் உறவினரோடு சூழ்ந்து பொருள்களைக் கொள்ளையிட்டதையும் கூறினர்.

அ.வி: மோழை-கீழாறு, சூழை-குடுமி, வாழி-அசை.

ஒப்: அடி 4. சூழை -"சூடை விளங்கு மாமணி" சேதுபுராணம். சேதுவந்த. 15.

(55)

153. ஆரருளி [1]னிங்ங னாவலித்தல் கண்டிரங்கிச்
சோரு [2]முளத்தினராய் நிற்கத் துணைவரெலாம்
வாரமுள கோமான் மலர்ப்பாதஞ் [3]சென்றன்றித்
[4]தீருமோ [5]வெம்துயர மென்றுரைத்துத் [6]தேற்றினார்.

1. னிங்ஙனாவலித்தல், சு.1+3+4; னிங்ஙவ் வலித்தல், சு.2* 2. முளத்தினராய், சு.1+3+4; மனத்தினனாய், சு.2* 3. சென்றன்றித், சு.1+3; சேர்ந்தன்றித், சு.2; சென்றேறித், சு.4* 4. தீருமதோ, சு.1+3+4(சு.2 சி) * 5.வென்றுயர, சு.1; வித்துயர, சு.3+4 (சு.2 சி) * 6. தேற்றினார், சு.1+4; தேற்றினான், சு.2; தேறினார், சு.3*

பொ: அருளினால் இங்ஙனம் ஆவலித்தல் கண்டு இரங்கிச் சோர்ந்த மனமுடையவராய் நிற்க, "தம்பியர் எல்லோரும் நம் மீது அன்பு கொண்ட கண்ணனின் மலர்த் திருவடி சென்றாலன்றி நம் துயரம் தீராது", என்று சொல்லித் தேற்றினர். அடி 4 தீருமதோ என்பது தீருமோ என்று திருத்தப் பெற்றது.

அ.வி: ஆவலித்தல்-வருந்துதல், கோமான்-கண்ணன்.

(56)

துரோபதி துயருறல்

154. நின்ற துரோபதியு [1]நேருஞ் சவையகத்தென்
துன்று குழற்சோரத் துகிலுரிந்த வப்பொழுதே[ψ]

---

* மோழை நிலத்தை மூடியது பார்க்க: பா.மா.133.

♦ ஒப். சூழை - குடுமி (தலை), சூழியம்- உச்சிக் கொண்டையில் அணியும் அணிகலன்.

ψ ஒப்: துச்சாதனன் துரோபதியின் துகில் உரிந்தது பார்க்க: பா.மா.124.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வென்மானங் காத்த வருட்கடலே
வன்றுடைய [2]வென்மானங் காத்த வருட்கடலே
[3]யின்றெனைத் தான்கைவிட் [4]டேகினையோ வென்றழுதாள்.

1. நேருஞ் சவை, சு.1+4; நெடுஞ் சபை, சு.2(சு.3 சி) * 2. மென் மானங், சு.1; வென் மானங், சு.2+3+4*3. யின்றெனைத், சு.1; யின்றெ மைத், சு.2+3+4*4. டேகினையோ,சு.1+4; டெங்கேகினையோ, சு.2(சு.3 சி)*

பொ: நின்ற துரோபதியும், "துச்சாதனன் பொருந்திய அரசசபையில் என் அடர்ந்த கூந்தல் அவிழும்படி ஆடையை உரிந்த அப்போதே அன்று என் மானம் காத்த அருள்கடலே! இன்று என்னைக் கைவிட்டுச் சென்றனையோ?" என்றழுதாள். (57)

குந்தியின் துயரம்

155. குந்தியது கேட்டுக் கொடுந்துயரி னாகிமிகச்
சிந்திய கண்ணீர் [1]திருநிலத்தைச் [2]சேறுசெய்ய
மைந்தர் தனித்தனரால் மாயா வெனக் [3]கருதி
[4]நொந்தயரத் தேற்றித் நுவன் றிருந்தக் [5]காலை.

1. திருநிலத்தைச், சு.1; நிலத்தை, சு.2+3+4* 2. சேறு செய்ய, சு.1; சேரவே சென்றுருகி, சு.2; சேறு செய்ய சென்றுருகி, சு.3+4* 3. கருதி, சு.1; கருத்தி, சு.2+3+4* 4. நொந்தயரத், சு.1; நொந்தவளைத், சு.2* 5. காலை, சு.1; வக்காலை, சு.2+3+4*

பொ: குந்தி கண்ணன் இறந்ததைக் கேட்டு, பெருந்துயருற்றவளாகி மிக அழுது சிந்திய கண்ணீர் நிலத்தைச் சேறாக்க, மைந்தர்கள் தனியாகி விட்டனர் கண்ணா என்று நினைத்து வருந்திச் சோர்வடையத் தன்னைத் தேற்றிக் கூடி நின்றபோது, (குளகம்)

அ.வி: அதுகேட்டு - கண்ணன் இறந்தது கேட்டு, கொடுந்துயரினாகி என்பது கொடுந்துயராகி என்றிருப்பின் பொருள் சிறக்கும். (58)

தருமன், கண்ணன் நினைவாக இருத்தல்

156. மாயனுந் தன்னுடைய வைகுண்டஞ் சேர்ந்தனனா
லாயதுணை யிங்கெமக்கே யாருமிலை [1]யாமாறே
தீயகலி[ψ] வரவுஞ் செப்பின னென்றே[2]கருதி
[3]நேய நினைவோ டிருந்தா னியலறத்தோன்.

1.யாமாறே, சு.1+2+3; யாமற்றே, சு.4* 2.கருத்தி, சு.1+3+4; யுலகி, சு.2*3. நேய, சு.1; லேய, சு.2+3+4*

[ψ] ஒப்: கலிகாலத்தின் வரவைக் கண்ணன் கூறியது பார்க்க: பா.மா.82.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பொ: திருமாலும் தன் இருப்பிடமான வைகுண்டம் சேர்ந்தனன், இங்கெமக்கு உற்ற துணையாக வேறு யாரும் இல்லை. இப்படி ஆகும் நிலையில் தீமையான கலிகாலத்தின் வருகையினையும் கூறினான் என்று கருதி, அவர் மீது அன்பு கொண்ட நினைவுடன் இருந்தான் வலிமையுடைய தருமன்.

(59)

துருவாசச் சருக்கம் முற்றும்

துறுவாசச் சருக்க முற்றும், சு.1+2+4; துறுவாசச் சருக்க முற்றிற்று, சு.3*

****

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

4. அத்தினபுரிச் சருக்கம் - பிராமணர் வழக்கு[ψ] (157-236)

(அத்தினபுரிச் சருக்கம், கலிகாலத்தின் வருகையால் இரு அந்தணர்கள் மனம் மாறி வழக்கிட்டதையும், பாண்டவர்கள் பரீட்சித்துக்கு முடிசூட்டிவிட்டுத் துறக்கப் பயணம் மேற்கொள்ளத் தீர்மானித்துக் காடு செல்ல முற்பட்டதையும் விளக்குகிறது).

அந்தணர் அரண்மனை முரசை முழக்குதல்

கலிவிருத்தம்

157. அன்னதரு மன்புவிபு ரந்துடைய வந்நாள்
மன்னுமறை யோரிருவர் வந்தனர் [1]வழக்கால்
[2] முன்னைமணி வாயில்முர சந்தனை முழக்கா
[3]வென்னமுர சின்னொலி யிதேதுரைமி னென்றான்.

1. வழக்கால், சு.1+3+4; வழக்காய், சு.2* 2.முன்னைமணி, சு.1+3+4; முன்னிமணி, சு.2* 3.தென்ன, சு.1; வென்ன, சு.2+3+4*

பொ: அத்தகைய தருமன் நாட்டை ஆண்டு வரும் அந்த நாளில், இரண்டு அந்தணர்கள் வழக்கின்பொருட்டுத் தருமனின் பழமையான அழகிய அரண்மனை வாயிலின் முரசத்தை ஒலிக்க, (அதைக் கேட்ட தருமன்), "இது என்ன முரசு ஒலிக்கிறது? இது என்ன காரணத்தால் வந்தது சொல்லுங்கள்" என்றான்.

அ.வி: முரசம் - நீதி கேட்பதற்காக அரண்மனை வாயிலில் வைத்திருக்கும் தோற் கருவி.

(1)

158. அந்தண ரிரண்டுபெய ரன்புறு தவத்தோர்
வந்தனர்கள் வாயில்முர சந்தொனிசெய வன்போர்
[1]சிந்தையி னினைந்தது [2] தெரிந்ததிலை யென்றார்
தந்திடுமி னென்னவவர் சென்றருகு சார்ந்தார்.

1. சிந்தையி னிகழ்ந்தது, சு.1; சிந்தையி னினைந்தது, சு.2+3+4* 2. தெரிந்ததிலை, யென்றார், சு.1; தெரிந்ததில தென்றார், சு. 2+3+4*

பொ: "தவமுடைய அன்புகொண்ட இரு அந்தணர்கள் அரண்மனை வாயிலில் வந்துள்ளனர். (அவர்கள்) வாயில் முரசை ஒலி செய்ய, மனத்தில் நிகழ்ந்த வன்மையான போராட்டம் (என்னவென்று) தெரியவில்லை என்றனர். "அழைத்து வருவீர்" என்று (தருமன்) சொல்லக், அந்தணர் தருமனருகில் சென்றனர்.

அ.வி: தொனி-ஒலி, வன்போர் சிந்தை - மனப்போராட்டம்; தந்திடுமின்-அழைத்து வாருங்கள்

(2)

ψ அத்தினபுரிச் சருக்கம் - பிராமணர் வழக்கு , சு.1+4; அத்தினாபுரிச் சருக்கம் , சு. 2+3*

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

முரசு ஒலித்ததன் காரணம் வினவுதல்

159. ஆசிகள் புகன்றருகி ருந்தனர றத்தோன்
பூசுரர் புகுந்துமுர சங்கடை புடைத்தீர்
மாசறு [1]மனத்தினினை [2]வென்னென [3]வழக்கோர்
தேசிகர் [3]வழக்கினெறி [5]செப்பியரு [6]ளென்றான்.

1. மனத்தினினை, சு.1+2+4; மனத்துனினை, சு.3*2. வேதென, சு.1; வென் னென, சு.2+3; வெனென, சு.4* 3.வழக்கோர், சு.1+3+4; வழங்கத், சு.2 * 4.வழக்கினெறி, சு.1+2; வழக்குநெறி,சு.3+4*5.செப்பவரு, சு.1; செப்பி னர்க., சு.2; செப்பியரு, சு.3+4* 6. ளென்றான், சு.1; ளன்றே, சு.2; ளென் றார், சு.3+4*

பொ: (அந்தணர்கள்) வாழ்த்துகள் கூறிப் பக்கத்தில் இருந்தனர். தருமன், "அந்தணர்களாகிய நீவிர் அரண்மனையில் புகுந்து முரசை வாசலில் முழக்கினீர், உங்கள் குற்றமற்ற மனத்தின் நினைப்பு யாது?" என்று வினவ, வழக்கை ஆராய்ந்த, அந்தணர்கள் வழக்கின் தன்மையைக் கூற முனையக் "கூறியருளுங்கள்" என்றான் (தருமன்). (3)

நிலம் பெற்றவன் வழக்கின் தன்மை கூறல்

160. என்னவுரை [1]செய்மினென [2]வென்வறுமை கண்டே
தன்னருளி லோர்மனை யளித்தன னதிற்றான்
முன்னமுளர் [3]வைத்தநிதி கண்டனன் முன்னிட்டே
[4]நின்னதிது கைக்கொளென [5]நின்றவன் மறுத்தான்.

1.செய்யுமென,சு.1+3+4;செய்மினென,சு.2*2.வென்வறிமை,சு.1+3+4;வென்வறுமை,சு.2* 3.வைத்தநெதி, சு.1;வைத்தநிதி,சு.2; வைத்த நெறி, சு.3+4* 4. நின்னது, சு.1; நின்னதிது, சு.2+3+4* 5. நின்றனன், சு.1+3+4; நின்றவன், சு.2*

பொ: என்று, உங்கள் கருத்தை உரைப்பீர் என்று (தருமன்) கேட்க, (நிலம் பெற்றவன்) "என் வறுமைநிலை கண்டு அருள் கூர்ந்து நன்கொடையாக எனக்கு ஒரு நிலம் கொடுத்தான். அதில் முன்னோர் வைத்த செல்வம் கண்டேன். அதை அவன் முன் இட்டு, உன்னுடையது இது பெற்றுக்கொள்" என்று கொடுக்க, நிலம் கொடுத்தவன் பெற்றுக்கொள்ள மறுத்தான்",

அ.வி: மனை - நிலம், முன்னமுளர் வைத்த நிதி-முன்னோர் புதைத்து வைத்த செல்வம் (புதையல்).

ஒப்: அடி 1-4."வாணிக மாக்கள் கொண்ட வாணிகத் ததிகலாபங், காணிய விலைகள் கூறக் கண்டவருடனே சண்டை ... மாந்தர் செய்ய" அரங். மகா. 11. "இந்த மறையோன் எனக் கோரகம் விற்றான்" பெருந்.55. "அந்த மனையில் அவனுக்கொரு புரத்தில்" வைகு.ப.45. "ஓதுமனை கொண் டகழ வுற்றநிதி கொண்டேன்"நல்.மகா.25. (4)

161. [1] ஆரொருவ [2]ரேயொருவர் தம் [2]பொருளை யஞ்சார்
தீரமொடு வவ்வினர்கள் சேர்பிறவி தோறும்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நேருமடி மைத்தொழிலி னின்றும்நர கெய்தும்
பாரவினை யும்படுவ ரீதுபழு தாமால்.

1.ஆரொருவர், சு.1; ஆரொருவ, சு.2+3+4* 2. நீரொருவர், சு.1;ரேயொரு வர்,சு.2;ரீரொருவர், சு.3+4* 3.பொருள்க ளஞ்சார்,சு.1; பொருளை யஞ் சார், சு.2+3+4*

பொ: "ஒருவர்தம் பொருளை அஞ்சாமல் கவர்ந்து கொள்பவர் யார்? தீரத்துடன் அதனைப் பறித்தவர்கள், பிறக்கும் பிறவிதோறும் அடிமைத் தொழிலில் நின்றும், நரகத்தை அடைந்தும், கொடிய தீவினையும் அடை வர் இது குற்றமாம்".

அ.வி: வவ்வுதல் - கவர்தல், பாரவினை - தீவினை, பழுது - குற்றம்.

ஒப்:அடி 1-3."ஆரொருத்தர் வைத்தபொருள்,... அஞ்சாதெடுத்துக் கையாண்டால், அடுத்த வர்களுக்கடிமை பாழ்நரகில் வீழ்ந்திடுவார்" வைகு.ப.47. ஆரொருவர்-"ஆரொருவர் அன்னவரை" கம்.ஆ.மாரி.56.

(5)

நிலம் கொடுத்தவன் கூற்று 162-164

162. என்றவனு ரைப்பவங்ங னின்சொலினி யியம்பென்
றொன்றுபரி விற்றரும னோதவுரை [1]செய்வா
னன்றளவ தாகவரு ளம்மனை யிடத்தே
நின்ற[2] நெதி யும்மவனதே [3]நெறியு [4]மென்றான்.

1.நேர்வ, சு.1; செய்வா, சு.2+4; நேர்வா, சு.3*2. நெதியும், சு.1+3+4; நிதி யம் சு.2* 3. நெறியி, சு.1; நெறியு, சு.2+3+4* 4. லென்றான், சு.1; மென்றான், 2+4; ளென்றான், சு.3*

பொ: என்று நிலம் பெற்ற அந்தணன் கூற, "அங்ஙனம் உன் சொல்லால் இனி கூறு" என்று அன்பில் ஒன்றிய தருமன் (நிலம் கொடுத்தவனிடம்) சொல்ல, அதற்கு விடை சொல்வான்: "நிலம் அளித்த அன்றே அருளிய அந்த நிலத்தில் இருந்த நிதியும் நிலம் பெற்றவனுக்குரியதே முறை", என்றான்.

அ.வி: அங்ஙனின் சொலினி யியம்பு- அங்ஙன்+நின்சொல்+இனி+இயம்பு; அடி 4, நெதியும் என்ற பாடம் நிதியும் என்று இருக்க வேண்டும்.

(6)

163. அல்லதுமொர் தானவகை யாயருணி லத்தில்
நல்லவிளை வாயதனை நாடிவினை தேடிச்
சொல்லுநில மேயுனது துய்யவிளை [1]வாகு
நெல்லெனதெ னுஞ்சொலுவர் [2]நேர்நிதிய மென்றார் .

1.வாகு,சு.1+3+4; வானா,சு.2*2.நேநிதிய மென்றார்,சு.1; நேர்நிதியு மென் றான், சு.2+3+4*

பொ: "அல்லாமலும் ஒருவனுக்கு ஒரு நன்கொடை வகையால் அருளிய நிலத்தில், நல்ல விளைச்சல் வரும்போது, அதை நாடித் தொழில் தேடிச், சொல்லப்பட்ட நிலம் நன்கொடை

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பெற்றவனுக்குரியது, அதில் விளையும் நெல் எனக்குரியது (நன்கொடை கொடுத்தவனுக்குரியது) என்றும் சொல்லுவர். (7)

164. [1]கொடுத்ததனை [2]மீளவது கொள்பவரு [3]முன்னே
[4]யடுத்தது [5]மமக்கு [6]விளைவாகு நினைவாருந்
[7]தொடுத்தனர் கருத்துநிலை தொன்மை யழிவாகக்
[8] கெடுத்தவரு மேபெரிது கெட்டிடுவ ரன்றே.

1. கொடுத்தவனை, சு.1; கொடுத்ததனை, சு.2+3+4* 2. வீழவது, சு.1; மீளவது, சு.2+3+4* 2. முன்னே, சு.1+2+3; மன்னே, சு.4* 3. யடுத்தது, சு.1; யடுத்தவர், சு.2+3+4* 5. மமக்கு, சு.1; தமக்கு, சு.2+3+4* 6.விளைவாகு, சு.1; விளைவாகி, சு.2; வினையாகி, சு.3+4* 7.தொடுத்தனர், சு.1; தொடுத் தனன், சு.2; தொடுத்ததன், சு.3+4* 8. கெடுத்துவரு, சு.1+3+4; கெடுத்த வரு, சு.2*

பொ: (நன்கொடையாகக்) கொடுத்ததைத் திரும்பப் பெற நினைப்பவரும், முன்பு தம்மை வந்து சேர்ந்தார்க்குக் கேடு செய்யும் எண்ணம் உள்ளத்தில் கொண்டவரும், பழைய தருமநிலை கெடும்படி உள்ளத்தில் எழுகின்ற சிந்தனையால் அழித்தவரும் அப்போதே பெரிதும் அழிந்து போவார்.

அ.வி: தொடுத்தனர் கருத்து - உள்ளத்தில் கொண்டனர், கெடுத்தவர்-தருமங்களை அழித்தவர்

ஒப்: அடி 1-4,"கொடுத்த பொருள் மீளக் கொள்ளுவார் தாமுண்டோ, அடுத்தோர் தமக்கு வினை அங்கே நினைப்பாரும்... யழித்தவரும் கெட்டிடுவர் கேடில்லா மன்னவரே" வைகு.ப. 47. "கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம், உண்பதூஉ மின்றிக் கெடும்" குறள். 166. (8)

தருமன், அமைச்சரிடம் வழக்கைத் தீர்க்கக் கூறல்

165. ஞானமறை யோர்மொழியும் நன்மொழி நவின்றே
தானுறை தலத்தியல்பு தன்மன்மகிழ் வுற்றே
மானமதி மந்திரியர் தம்மைவரு கென்ன
வானவிவ் வழக்கினை[⊕] யறுத்துரைமி னென்றான்.

பொ: அறிவுடைய அந்தணர்கள் பேசும் நல்ல வார்த்தைகளைக் கேட்டுத், தான் வாழும் அத்தினபுரி நகரத்தின் தன்மையை எண்ணித் தருமன் மகிழ்ச்சியடைந்து, தன் பெருமை பொருந்திய மந்திரிகளை வருக என்றழைத்து, "இங்கு உண்டான இவ்வழக்கைத் தீர்த்து வையுங்கள்" என்றான்.

அ.வி: தலம்-அத்தினபுரம், அறுத்து-தீர்த்து. (9)

வழக்கின் முடிவு கூற ஐந்து நாள் வேண்டும் எனல்

166. முந்துமுரை கொண்டவர் முயன்றடி [1]வணங்கித்
தந்தமி [2] லுணர்ந்ததுசொல் தழைப்புறு மனத்தா

[⊕] மேலும் பார்க்க: மறையோர் வழக்கு சிலப்.23, 42, 52, திருவால. 57.4, கம்பர் தனிப்பாடல், தனிப்பாடல் திரட்டு- 237.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ரைந்துதினம் வேணுமித றிந்தருள வென்னாப்
[3]புந்திநினை விற்கொடு பொருந்தியுறு நாளில்

1.வணங்கித்,சு.1+3+4;வணங்கத்,சு.2*2.லுணர்ந்துசொல்,சு.1+3; லுணர்ந்த சொல்,சு.2; லுணர்ந் தவர் சொல்,சு.4* 3.யுணர்விற்கொடு, சு.2; நினை விற்கொடு, சு.1+3+4; யுணர்விற்கொடு, சு.2*

பொ: இந்த வழக்கை மனத்தில் கொண்ட மந்திரிகள் தருமனை வணங்கிப் அந்தணர்கள் வழக்கில் சொன்ன விவரங்களைக் கேட்டு, மனம் மகிழ்ந்தவராய் வழக்கின் முடிவை அறிந்து கூற ஐந்து நாட்கள் வேண்டுமென்று, கூறி அவ்வழக்கைத் தம் உள்ளத்தில் கொண்டு முடிவு சொல்ல ஆராய்ந்திருந்த நாட்களில், (குளகம்.)

ஒப்: அடி 3."அஞ்சாறு நாளிலறியலாம் - வஞ்ச மறையவர்கள் வழக்கிதனை" பெருந்.58. "தலந்தரு மறிவான் மூத்தோரன்னவரும் மிசைய வந்தச் சலந்தரு வழக்கைத் தீர்த்துத் தருகு வனம் போதியென்றார்" திருவிளை. மாம.12.

(10)

கலியுகம் பிறத்தல்

167. நாடிய துவாபரமு நாளது கழிந்தே
தேடிவரு வெங்கலி செயற்கையை யுரைப்பின்
நீடுதரு மத்தினிரு மித்தவிடம் வாழு
மாடக மணிப்புரிசை யத்தின நகர்க்கே.

பொ: நினைத்திருந்த துவாபரயுகம் முடிந்து சில நாள் சென்றபின், தேடி வரும் கொடிய கலிகாலத்தின் இயல்பைச் சொன்னால், நீண்ட நிலைற்ற தருமம் வாழும்படியான அழகிய மதிலையுடைய அத்தினபுரத்திற்கு, (குளகம்).

அ.வி: செயற்கை -ஆற்றல், நீடுதருமத்தின் நிருமித்த இடம் - நீண்ட தருமம் நிலை பெற்றதால் தருமம் அவ்விடத்தில் வாழும்படியான அத்தினநகரம், ஆடகம்- பொன் , புரிசை- மதில்.

(11)

கலிகாலத்தின் தோற்றமும் செயலும்

168. பொய்கொலை [1]யெனும்பணிகள் பூண்டுவினை பேசி
மையல்பொரு ளாசையெனு மாலைமுடி சூடிக்
கையினை நிலத்தினிடை [2]யூன்றியிரு கால்மேற்
செய்யதலை கீழுற நடந்துகலி சென்றே.

1.யெனுங் களவு, சு.1; யெனும்பணிகள், சு.2+3* 2.யூன்றியணி, சு.1+4; யூன்றியிரு, சு.2; யூன்றியடி, சு.3*

பொ: பொய், கொலை என்னும் அணிகலன்களை அணிந்து வஞ்சகம் பேசி, மோகம், பொருளாசை என்னும் மாலையைத் தலையில் சூடிக் கையை நிலத்தில் ஊன்றி, இரு கால் மேல் தலைகீழாக இருக்கக் கலி நடந்து சென்று, (குளகம்).

அ.வி: வினை-வஞ்சகம், மையல்-மோகம், இது உருவகம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

ஒப்: அடி 1-4. "கையால் நடந்து தலைகீழாய்க் கால் மேலாய், பொய்யால் மிடைந்த புகழ் குடி" பெருந்.59. "உன்னிய மனுசனாக உசரவேகால் கைகீழாய்" தஞ்.147. "காலின் நடையினைத் தவிர்ந்து, பார்மேல் தலையினால் நடந்து சென்றார்" பெரிய.காரை.55.

(12)

கலி அத்தினபுரம் புகுதல்

169. பற்கொள் பிலவாயு மனல்பாயு மிருகண்ணும்
வற்கலை யுடைத்துணியும் [1]மாசடை யுடம்பு
[2]மற்கொணிற முங்கொடணி யத்தின புரத்தின்
[3] றெற்கினிகழ் வாசல்வழி புக்ககலி சென்றே.

1.மாசடை,சு.1+2+4; வார்சடை, சு.3* 2.மற்கணிற, சு.1+3; மற்கொணிற, சு. 2+4* 3.றெற்கி னிகழ், சு.1; றெற்குநிகழ், சு.2+3+4*

பொ: பற்களைக் கொண்ட குகைபோன்ற வாயும், தீ உமிழும் இரு கண்களும், மரவுரி ஆடையும், அழுக்கேறிய உடம்பும், இருள்கொண்ட கரிய நிறமுங் கொண்டு கலிகாலமானது அழகிய அத்தினபுரியின்கண், தெற்கிலிருக்கும் வாசல் வழியே புகுந்து சென்று, (குளகம்)

அ.வி: பிலம்-குகை, வற்கலை-மரவுரி, அல் - கரிய இருள். (13)

கலிகாலத்தின் இயல்பு

170. வந்துகலி புக்கபொழு தேயுலகின் வாழ்வோர்
முந்துதரு மத்தியல்பு மூதறிவு தானுஞ்
[1]சிந்தையி னகன்றுவினை செய்வகை நினைந்தே
[2]யுந்தநிறை பால்பிரை கலந்த[3]செய லாமால்.

1.சிந்தைகள் கனன்று, சு.1+2+3+4* 2. யுந்தநிறை, சு.1; யந்தநிறை, சு.2+3+4* 3. செயலாமால், சு.1+3+4; செயலாய், சு2*

பொ: கலிகாலம் வந்து புகுந்தபொழுதே உலகில் வாழும் மக்கள் முன்னைய அறத்தின் தன்மையும் பழைய அறிவும் மனத்தினின்று நீங்கி வஞ்சகம் செய்யும் வழிவகையினை நினைந்து (இருந்த செயல்) நிறைந்த பாலில் பிரை கலந்தது போலாகும். (குளகம்) (பால் மக்களுக்கும் பிரை கலிகாலத்திற்கும் உவமை). நான்கு சுவடிகளிலும் "சிந்தைகள் கனன்று" என்றிருந்த பாடம், "சிந்தையினகன்று" என்று திருத்தப்பெற்றது.

அ.வி: உந்த-பொருந்த, பிரை-பாலுக்கு ஊற்றும் மோர்.

ஒப்: அடி 4."கால்உறு கண்வழிப் புகுந்த காதல்நோய், பால்உறு பிரை எனப் பரந்தது எங்குமே" கம்.பா.மிதி.41.

(14)

கலியின் வரவால் மனமாறிய அந்தணர்

171. அக்கலி புகுந்தளவி லைந்துதின மும்போய்
மிக்கவடி வின்கணிரு வேதியர்க டம்மி

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

லொக்கவலி பேசியுமு ரைத்ததை யொழிந்தே
தக்கதரு மன்னகரின் [1]வாசல்வழி சார்ந்தார்.

1. வாசல், சு.1+3+4; வாயில், சு.2*

பொ: அந்தக் கலிகாலம் புகுந்த அளவில் ஐந்து நாட்கள் சென்றபின், வடிவத்தால் அந்தணராய இருவர், தமக்குள் ஒருசேரப் பேசியும் (முன்பு) உரைத்ததை விடுத்து, நீதியால் சிறந்த தருமனுடைய அத்தினபுரத்தின் தலைவாசல் வழியே அரண்மனையைச் சேர்ந்தனர்.
ஒப்: அடி 4."நிதி துஞ்சு வியன்நகர்" சிலப். 27-200.

(15)

தருமன் வழக்கின் தன்மை வினவல்

172. வந்துதிக ழந்தணரை மன்னன்மகிழ் வுற்றே
யந்தணர்வ ழக்கினியல் பற்றதேது வென்னா
முந்தமனை [1]யென்னததில் முற்றுபொருள் தானு
மெந்தனது [2]யானதுவி டேனென விசைத்தான்.

1.யென்னதனின், சு.1+3; யென்னததில், சு.2+4*2. யர்ந்தது, சு.1+4; யானது,சு.2+3*

பொ: தன் முன்பு வந்து நிற்கின்ற அந்தணர்களைக் கண்டு தருமன் மகிழ்ச்சியடைந்து, அந்த ணர்களின் வழக்கின் தன்மை இல்லாமல் போனது ஏன்? என்று வினவ, "முதலில் நிலம் என்னுடையதெனில் அதில் உள்ள நிதி முழுவதும் எனக்குரியது நான் அந்நிதியைக் விட்டுக் கொடுக்க மாட்டேன்" என்று மொழிந்தான் (நிலம் கொடுத்த அந்தணன்).
அ.வி: முந்த- முதலில், இயல்பு-தன்மை, அற்றது-இல்லாமல் ஆனது, (பாழானது) "என்றனது" என்பது எதுகை நோக்கி எந்தனது என்றாயிற்று.

(16)

173. மற்றவனு நின்மனை யளித்தபொழு தேயங்
குற்றதன மும்மென துனக்[1]கேதுள தென்றா
[2]னற்றநெறி தப்பிநிதி யாசையொழி யாதே
சொற்றதை யுணர்ந்துதரு மன்துயரி லுற்றான்.

1.கெனுளதென்றா, சு.1+3; கிதுளதன்றால், சு.2; கேதுள தென்றா, சு.4* 2. னற்றநெறி, சு.1; மற்றைமொழி,சு.2; னற்றைமொழி, சு.3+4*

பொ: நிலம் பெற்ற அந்தணனும், "உன் நிலத்தை எனக்கு அளித்தபோதே அங்குள்ள பொருளும் எனக்கே உரியது உனக்கு அதில் என்ன உரிமையுள்ளது" என்றான். முன்பு சொன்னதற்கு மாறாக நெறி தவறி நிதியாசை நீங்காமல் சொன்னதை நினைத்துத் தருமன் வருத்தத்தில் ஆழ்ந்தான்.
அ.வி: அடி4, "சொன்னதை" என்பது எதுகை நோக்கிச் சொற்றதை என்றாயிற்று.

(17)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தருமன் கலிகாலத்தின் வரவை உணர்தல்

174. முந்துகலி வந்ததடை யாளமுறை [1]யாகச்
சிந்தைநெறி தப்பியுரை செப்பியது [2]செப்பா
ரந்தவற முந்தவறு மென்றனர்க ளாமால்
வந்ததுகொ லானகலி வாய்மைதவ றிற்றால்.

1.யையா சு.1; மைப்பேர், சு.2; யாகச் சு.3+4* 2.செப்பா,சு.1+3+4; செய்யா, சு.2*

பொ: முதலில் கலி வந்ததன் அடையாள முறையில் அந்தணர்கள் மனத்தில் நெறிதவறி முன்னர் கூறியதைச் சொல்லார். பழைய அறமும் தவறும் என்று கூறினார்கள். கலி வந்து விட்டதோ? உண்மை தவறிவிட்டதே! (கலிகாலம் முறையாக வந்துவிட்டதன் அடையாளம் இது) (குளகம்)

அ.வி: நெறி தப்பி - நெறி முறை தவறி. (18)

கலிகாலத்தின் இயல்பு

175. என்றுசக தேவனோட றத்தின னியம்பக்
கன்றுகலி யன்வரவு[1*] காணவரு மையா
குன்றுமறம் மெய்மைதவ றுங்கொடிய பொய்யே
வென்றுகொலை யும்பெருகும் வீறும்வினை யன்றே.

பொ: என்று தருமன் சகாதேவனிடம் சொல்ல, "தலைவா! துன்பம் தரும் கலிகாலத்தின் வரவு காணத் தக்கது. (கலிகாலத்தில்) அறம் குறையும், உண்மை அழியும், கொடுமை பயக்கும் பொய்யே வெற்றி பெற்றுக் கொலையும் பெருகும், அப்போதே தீவினை வலிமையுடன் ஓங்கும்" (குளகம்).

அ.வி: கலியன்-கலிபுருடன், சகாதேவனோடு-'ஒடு' எனும் மூன்றாம் வேற்றுமை உருபு இங்கு இடப்பொருளில் வந்தது, வீறும் வினை-தீவினை.

ஒப்: அடி 1-4. "மெய்யு மழிந்து விடும் வீரியமும் குன்றிவிடும், பொய்யும் கொலையும் புவிதனிலே மேலாகும்" வைகு.ப.49. (19)

176. நாரியர்கள் கற்புநட வாதுலகின் நன்காஞ்
சீரியர்கள் புல்லியர்கள் யாவருளர் [1]சேர்வார்
வீரிய [2]மடங்கிவிதி வேந்தர்நெறி நில்லார்
பூரியர் நெடும்புவி புரந்திடுவர் தாமே.

1.சேர்வார்,சு.1;சேரா,சு.2+3; சேரார், சு.4* 2.மடங்கிவிதி, சு.1+2; மடங்கு நெறி, சு.3; மடங்கு விதி,சு.4*

* கலிகாலத்தின் இயல்பு பார்க்க: பா.மா.84.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பொ:கலிகாலத்தில் பெண்கள் கற்புநெறியுடன் நடக்கமாட்டார், மேல்மக்கள் கீழ்மக்களாய் உள்ளவருடன் சேர்வர்; மன்னர்கள் வலிமை குறைந்து சட்டத்தின் வழிநிற்கமாட்டார்; கீழ்மக்களே நீண்ட பெரிய நிலவுலகைக் காத்திடுவர்.

ஒப்: அடி 1. "காசினியில் மாதர்களின் கற்பு மழிந்து விடும்" வைகு.ப.49;

அடி 4, "பொருட் செல்வம் பூரியார் கண்ணுமுள" குறள்.241.

தருமன் காடு செல்ல விழைதல் (20)

177. உள்ளபடி சொற்றனை யுகந்துமுகி லொப்பாம்*
வள்ளலரு ளிச்செயலின் [1]வாய்மை பழுதாமோ
கள்ளவர சிற்பரவு காதலை விடுத்தே
தெள்ளிய வனத்தினிடை சேறலினி [2]தென்றான்.

1.புலிதாமோ,சு.1;பழுதாமோ,சு.2;வலிதாமோ,சு.3+4*2.தென்றார்,சு.1+3;தென்றான், சு. 2+4*

பொ: "நீ உள்ளவாறே சொன்னாய். மகிழ்ந்து மேகத்திற்கொப்பான கண்ணன் அருளிக் கூறிய தின் உண்மை வீணாகுமா? சூழ்ச்சி அரசில் ஏற்படும் ஆசையை விட்டுத் தெளிந்த காட்டி டையே செல்லுகை நல்லதென்றான்"

அ.வி: முகில் ஒப்பாம் வள்ளல்-பண்பிலும் நிறத்திலும் மேகத்திற் கொப்பான கண்ணன், சேறல் - செல்லுகை

ஒப்: அடி 3, 4. "பேதைமைத்தாய் வரும் பிறப்பை நீக்குறு, மாதவம் தொடங்குவான் வனத்தை நண்ணுவேன்" கம்.ஆ.மந்தி.30.

(21)

178. [1]மற்றுரிய தம்பியரும் வந்து[2]முனை வேடர்
செற்றிடநம் முன்னைவலி சென்ற[3]திற லாமால்
நற்றுபுவி கொண்டினி நடத்தலரி தென்றே
யுற்றமக விந்தமது றிற்பெரிய தென்றார்.

1.மற்றுடைய,சு.1+3+4;மற்றுரிய,சு.2*2.வினைவேடர்,சு.1; முனை வேடர், சு.2+3+4* 3. திறலாமால், சு.1+2+4; விறலாமா, சு.3*

பொ: தருமனுடைய மற்ற தம்பியரும் வந்து, "போர்க்குணமுடைய வேடர் போரிட, முன்புள்ள நமது வலிமை குறைந்துவிட்டது; ஆதலால், நன்மை (தரும்) உலகைக் கொண்டு இனி ஆள்வது கடினம் என்று கூறிச், சிறப்பு மிக்க மகவிந்தம் செல்வதே மிகச் சிறந்ததென்றனர்."

அ.வி: செற்றிட - போரிட, நற்று-நன்மை, மகவிந்தம்-பெரிய காடு, நன்று என்பது எதுகை நோக்கி நற்று என்றாயிற்று.

(22)

* ஒப்: கண்ணன் பாண்டவரிடம் கூறியது, பார்க்க: பா.மா. 84-86.

Digitization by Hindu-Heritage-Foundation of America.

பரீட்சித்துக்கு முடிசூட்ட நினைத்தல்

179. ஆயனருள் செய்தனவு [1]மிப்படி யவன்றன்
துாயகழல் விட்டரசி னாசைதுய ரன்றோ
மாயன்மரு கன்புதல்வன் மண்முழு தினுக்கு
நாயகனெ னச்செய நடத்திடுது மென்றார்.

1.மிப்படி, சு.1; மப்படி, சு.2+3+4*

பொ: "கண்ணன் கூறியருள் செய்தனவும், இவ்வாறு அவனுடைய [1]தூய திருவடிகளை மறந்து அரசாள்வதில் ஆசை கொள்வது துன்பம் தருமல்லவா?, கண்ணனின் மருமகனாகிய அபிமன்னனின் மகன் பரீட்சித்து நாடு முழுவதற்கும் மன்னன் என்னும் செயலை நடத்திடுவோம்" என்றார் (தம்பியர்).

அ.வி: மாயன் மருகன் புதல்வன்-கண்ணனின் தங்கை சுபத்திரையின் மகனாகிய அபிமன்னனின் மகன் பரீட்சித்து. (23)

180. பண்ணிய[1]தவத்தியல் பரீக்கதனை யின்றே
நண்ணுமுல குக்குரிய நாயக மதாக
[2]வண்ணநக ரைப்பெரித லங்கரியு [3]மன்பா
லெண்ணிய முகிர்த்தமிடு [4]மென்றற [5]னிசைத்தான்.

1.தவத்தியல், சு.1+3; னத்ததியல், சு.2; தலத்தியல், சு.4* 2.வண்ண நகரிற், சு.1+2+3; வண்ணல் நகரைப், சு.4* 3. மன்பா, சு.1+2+4; மன்போ,சு. 3* 4. மென்றற, சு.1;மென்றினிதி, சு.2; மென்றன, சு.3+4* 5.னிசைத்தான், சு.1+4; திசைத்தான், சு.2; னறத்தோன், சு.3*

பொ: "தவம் பண்ணிய இயல்புடைய பரீட்சித்தை இன்றே விரும்பும் உலகிற்குரிய மன்னனாக ஆக்க அழகான அத்தினபுரத்தை மிகச் சிறப்பாக அழகுபடுத்துங்கள்! முடிசூட்ட நினைத்தற்குரிய நல்ல நேரத்தைக் குறித்திடுங்கள்" என்று தருமன் கூறினான்.

அ.வி: முகிர்த்தம்-நல்லநேரம்

ஒப்: அடி 2-4. "சித்திர நளிர்முடி கவித்தற்கு நல்லோய், சென்று வேண்டுவ வரன்முறை அமைக்க" கம்.அ.மந்தி.72.

(24)

அத்தினபுரத்தை அழகுபடுத்தல்

181. பூகநிறை தாரொடு பொருந்துகுலை வாழை
கமுயர் தோரண வகைக்கனக கும்ப
மாகிய மணிக்குவைகொ டத்தினபு ரத்தை
[1]மோகமுறு [2]மும்பர்பதி [3]மும்முறை சமைத்தார்.

[1] ஒப்: ஆயனருள். பார்க்க :பா.மா.95, 96.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

1.மோகமுறு, சு.1+3+4; மோகமுற, சு.2* 2.மும்பர்பதி, சு.1+3+4; வும்பர்பதி, சு.2* 3 மும்முறை, சு.1+3+4; யாமுறை, சு.2*

பொ: நிறைந்த பாக்குக்குலையோடு, பொருந்தும் வாழைக்குலை, விண்ணளவு உயர்ந்த அழகான தோரண வகைகள், பொற்கும்பமாகிய மணிக்குவை கொண்டு அத்தினபுரத்தை, ஆசை கொள்ளவைக்கும் தேவேந்திரப் பட்டினத்தைவிட மும்மடங்கு சிறக்குமாறு அழகுபடுத்தினர்.

அ.வி: பூகம் நிறைதார் - நிறைந்த பாக்குக்குலை, மாகம்-விண், கனகக் கும்பம் -பொற்கும்பம், உம்பர்பதி - தேவேந்திரப்பட்டினம். (25)

வேந்தர்கள் முடிசூட்ட வருதல்

182. நன்முளை தெளித்தினிமை நாடிய முகிர்த்தஞ்
சொன்முனிவ ரிட்டதொரு [1]தொன்மையது தன்னிற்
தன்மனுமி சைந்துடைய தம்பியரு மொய்ம்பால்
வின்மருவு தோளின்முடி வேந்தரு நிறைந்தார்.

1.தொன்மையது, சு.1+2+3; சொல்லரிய,சு.2* 2. தன்னிற், சு.1+3+4; நாளிற். சு.2*

பொ: புகழ்மிக்க முனிவர்கள் கூறிய ஒரு முந்தைய வழக்கத்திற்கேற்ப நல்ல முளைப் பாலிகை தெளித்து விரும்பிய நல்லநேரத்தில் தருமனும் அவனுக்கிசைந்த தம்பியரும், வலிமை பொருந்திய வில் ஏந்திய தோளினையுடைய முடிமன்னர்களும் அவையில் நிறைந்தனர்.

அ.வி: முளை-முளைப்பாலிகை, வின் மருவு - வில் ஏந்திய தழும்பு (26)

தருமன் பரீட்சித்திடம் நாட்டை ஆள்க எனல்

183. அங்கபிமன் மைந்தனை யழைத்தவனி காவற்
றங்கியற மெய்மைகள் தழைக்கநெறி தப்பா
மங்கையர்கள் கற்புநிலை மன்னுமறை வேள்வி
பொங்கியுற விப்புவி [1]புரந்திடுக வென்றான்.

1.புரந்திடுக, சு.1+3+4; புரந்திடுதி,சு.2*

பொ: அபிமன்னனின் மகன் பரீட்சித்தை அழைத்து, "அறமும் உண்மையும் தழைக்க, அறநெறி தவறாது மங்கையர் கற்பு நெறி பொருந்தும், நிலை பெற்ற வேத வேள்வி ஓங்கியிருக்க இவ்வுலகை ஆள்வாயாக", என்றான்.

ஒப்: அடி 2-4. "புனையும் மாமணி புனைந்து இந்த நல்லறம் புரக்க நினையல் வேண்டும், யான் நின்வயின் பெறுவது ஈது" கம்.அ.மந்தி.68. "வேத மோதிய வேதியர்க்கோர் மழை, நீதிமன்னர் நெறியினுக் கோர் மழை, மாதர் கற்புடை மங்கையர்க் கோர்மழை, மாதம் மூன்று மழையெனப் பெய்யுமே" விவேகசிந்.26. (27)

Digitization by Hindu-Heritage-Foundation of America (USA)

184. ஆயகலு ழுன்னுரிமை யானவவ [1]னிக்கோர்*
ஈயரசு[Ψ] செய்திடு மியற்கையை நிகர்க்க
நீயரசு செய்தற னிலைகொள் புவியையா
நாயடியே னாள்வது நன்றென [2]நகைத்தான்.

1.னிக்கோர், சு.1; நீயரசு, சு.1;னிக்கோ ரீயரசு, சு.2+3+4*2. நகைத்தான், சு.1; நவின்றான், சு.2*

பொ: "திருமாலின் ஊர்தியான கருடனுக்கு உரிமையான உலகுக்கு ஓர் ஈ அரசாட்சி செய்திடும் தன்மையைப் போன்று, நீ ஆட்சி செய்து அறம் நிலைபெறச் செய்த நாட்டையா, நாய் அடியேனாகிய நான் ஆள்வது; இது நன்றாக இருக்கிறது" என்று கூறிச் சிரித்தான்" (கருடன் தருமனுக்கும் ஈ பரீட்சித்துக்கும் உவமை)

அ.வி: கலுழன் உரிமை-கருடனை உரிமையான வாகனமாக் கொண்டுள்ள திருமால் என்று ஆகும். ('கருடன்' தருமனுக்கும் 'ஈ' பரீட்சித்துக்கும் உவமை)

ஒப்: அட் 1, 2. "கருடனவன் காக்குங் கடலுலகம் காப்ப" பெருந்.65. "ஈயோடுவதோ கருடற் கெதிரே" கம்பர் தனிப்பாடல். "... இயம்பிய தண்டமிழ் ஈங்குரைக்க, நீயு முளையோ யெனின், கருடன் சென்ற நீள் விசும்பில் ஈயும் பறக்கும்" வீரசோழியம் தற்சிறப்புப் பாயிரம். 2.

(28)

பரீட்சித்து முடிசூட மறுத்தல்

185. [1]முனைந்த [2]சமர்தொலைசெய் மொய்ம்புடைய வீமன்
[3]றனஞ்செயனன் [4]நேர்நகுலர் தம்பிய ரிருக்க
[5]நினைந்தில [6]வவர்க்குமிது நேய[7]வினை யாகு
[8]மனந்தனி [9]னினைந்தது செய்யேனென மறுத்தான்.

1.முனைந்த,சு.1+3+4; முனைந்தவர், சு.2*2. சமரைத் தொலைசெய், சு.1+3; தமைப்பொடிசெய், சு. 2; சமர், தொலைசெய், சு.4* 3. றனஞ் செயனன், சு.1+3+4; தனஞ்செயனு. சு.2* 4.நேர்நகுலர்,சு.1+3+4; நேரிளைய, சு.2* 5. நினைந்தில, சு.1+4; நினைந்திலை, சு. 2+3* 6. வவர்க்குமிது, சு.1; யவர்க்குமிகு, சு. 2+3+4* 7.வினையாகு, சு.1+3+4; வினையற்குன், சு.2* 8. மனந்தவிய, சு.1+3+4; மனந்தனி, சு.2* 9.நேர் கொ டிய, சு.1+3+4; னினைந்தது, சு.2*

பொ: "(பகைமையால்) நிகழ்ந்த பாரதப்போரைத் தொலைக்கச் செய்யும் வீரமிக்க வீமன், அர்ச்சுனன் ஆகியோருக்கு ஒப்பான நகுலன், சகாதேவன் ஆகிய தம்பியர் இருக்க நினைந்திலை நீ; அவர்க்கும் இது நேய வினையாகும். எனக்கு முடிசூட மனத்தினில் நீ நினைந்தை, நான் செய்யேன்", என்று மறுத்தான்.

அ.வி: தனஞ்செயனன் நேர்-தனஞ்செயன்+அந்நேர்.

(29)

* குறிப்பு: நாராயணர் நான்முகனைப் படைக்க, நான்முகன் உலகத்தைப் படைத்தான் என்பர். உலகைக் காக்கும் கடவுள் திருமால். திருமாலால் காக்கப்படுகிற பூமி (விளக்கம் கூறியவர் மு.சண்முகம் பிள்ளை).

Ψ நீயரசு என்பது "ஈயரசு" என்று கொள்ளப்பட்டது, அடுத்த அடியிலும் நீயரசு என்று வருவதால். "ஈயாடு வதோ கருடற் கெதிரே" என்னும் கம்பர் தனிப்பாடல் போன்றவற்றிலிருந்து இக்கருத்து எடுத்தாளப்பட்டுள்ளது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

திருமாலருளால் உலகம் பரீட்சித்திடம் உளது எனல்

186. அன்னவனு ரைத்ததை யுணர்ந்தவறன் மைந்த
னென்னினைவி னின்னினை [1]விதெண்ண முளதாமோ
முன்னநெடு மாலருள்* முயற்சியினி லிப்பார்
நின்னிடை யிலேநிலை [2]நிறுத்தியுள [3]ராமால்.

1. விதெண்ண, சு.1; வினெண்ண, சு.2+3+4* 2. நிறுத்தியுள, சு.1+3+4; நிறுத்தரச, சு.2* 3. ராமால், சு.1+3+4; தென்றான், சு.2*

பொ: பரீட்சித்துக் கூறியதை உணர்ந்த தருமன், "உன்னை மன்னனாக்க, என் மனத்தில் ஏற்பட்ட கருத்து இது என்று உன் நினைவில் எண்ணம் உளதாமோ? முன்பு நெடிய திருமால் அருளிய முயற்சியால் இனி இவ்வுலகத்தை உன்னிடம் நிலைநிறுத்தியுள்ளார்". (30)

187. இங்கிவன [1]ருட்படியை யாவரு மறுத்தால்
[2]வெங்கணரி ருக்குமிடம் வெவ்வினையு முண்டாம்
பொங்கிய புகட்குமிழி [3]வாகுமது பொய்யா
[4]யங்கவ னுரைத்தபடி செய்தி [5]யிவணையா

1.ருட்படியை, சு.1+3+4; படிசொல், சு. 2* 2.வெங்கணர் குக்கு மிடம், சு.1+2+3+4* 3. வாகுமது, சு.1+3+4; வாகுமிது, சு.2* 4. யங்கவ, சு.1+3+4; தங்கவ,சு.2* 4.யிவணையா, சு.1+3+4; யினியையாசு .2*

பொ: "இங்கு திருமாலருளால் கிடைத்த நாட்டை ஆள்வதற்கு எல்லோரும் மறுத்தால், அந்நாடு பொறாமையுடையோர் இருக்கும் இடமாகி அங்குத் தீவினைகள் உண்டாகும்; நம் மிகுந்த புகழுக்கும் இழுக்காகும்; அவை பொய்யாகும்படி அங்கு அவன் சொன்னதுபோல் இங்கு நாட்டை ஆட்சி செய்வாய் மகனே",

குறிப்பு: நான்கு சுவடிகளிலும் "வெங்கணர் குக்குமிடம்" என்றிருந்த பாடம் வெங்கணரிருக்குமிடம் என்று கொள்ளப்பெற்றது.

ஒப்: அடி 3. புகட்கு, பார்க்க: பா.ம. 7-இன் வீரசோழிய மேற்கோள். (31)

பரீட்சித்து முடிசூட இசைதல்

188. என்னவுரை செய்தனனி சைந்தன னிருப்ப
வன்னதை யறிந்த [1]வறவோ [2]னரசரோடு
முன்னமுனி வோர்களொடு முந்துகிளை யொடு
மின்னிய முடிக்கிசையும் வேள்வியை [3]வளர்த்தே.

*நெடுமால் அருள் பார்க்க: பா.மா. 95, 96. கண்ணன் பரீட்சித்தைக் காப்பாற்றியது பார்க்க:பா.மா.38.

Digitization by Hindu-Heritage-Foundation of America.

1.வறவோ, சு.1+3+4; வரசோ, சு.2* 2 னரசரோடு, சு.1+3+4; னரசரோடு, சு.2* 3. வளர்த்தே, சு.1+3+4; வளர்த்தான், சு.2*

பொ: என்று தருமன் சொன்னான். பரீட்சித்து முடிசூட்ட இசைந்து இருக்க, அதையறிந்து தருமன், அரசர்களோடும், முன்னத்தில் வல்ல முனிவர்களோடும், முன்புள்ள உறவினரோடும் மின்னுகின்ற முடி சூட்டுவதற்குரிய வேள்வியை வளரச் செய்து, (குளகம்).

அ.வி: முன்னம் - குறிப்பு, முடிக்கு இசையும் வேள்வி – முடிசூட்டுவதற்குரிய வேள்வி.

(32)

பரீட்சித்துக்கு முடிசூட்டல்

189. மங்கல வகைத்தொனி முழங்கவரு சங்கின்
பொங்கொலித ழைப்பமறை பூசுரனி சைப்பக்
கங்கைநதி யுற்றபுவி காவல னெனத்தன்
னங்கைகொ டெடுத்துமுடி வைத்தன னறத்தோன்

பொ: மங்கலக் கருவி வகைகள் முழங்க, அருமையான சங்கின் ஒலி மேலோங்கித் தழைக்க, அந்தணன் வேதம் ஓத, "கங்கை ஆறு பாயும் குரு நாட்டின் மன்னன்" என்று தன் அழகிய கையால் கிரீடத்தை எடுத்துப் பரீட்சித்துக்கு முடி சூட்டினான் தருமன்.

ஒப்: அடி 3, 4, "அபிமனருள் பரீட்சித்தினுக்கு, விடுசுடர் மகுடம் சூட்டி" அரங்.மகா.6. "வெண்ணெயூர்ச் சடையன் தங்கள், மரபுளோர் கொடுக்க வாங்கி, வசிட்டனே புனைந்தான் மௌலி" கம்.யு.திருமுடி.38.

(33)

190. ஆனைபரி தேரெனு மனைத்தையு [1] மமைத்துத்
தேனின்மொழி மங்கையர்கள் சேர்வைசெய் திறத்தாற்
றானெதிய முள்ளது [2]தொகைப்படி [3]வளித்தே
மானகரு நின்னுடை வசத்ததினி யென்றான்.

1.மமைத்து,சு.1+2; மமைத்தே, சு.3* 2.தொகைபெற, சு.1+3+4; தொகைப்படி, சு.2* 3. வளித்தே, சு.1+2+4; வளித்து,சு.3*

பொ: தருமன் தனது யானை, குதிரை, தேர் என்னும் எல்லாப் படைகளையும் சேர்த்து அமைத்து, அரசனுக்கு ஏவல் செய்யும் இன்சொல் பெண்டிர் திரள், நல்வழியில் ஈட்டிய பொருள் உள்ளதனைத்தையும் மொத்தமாகக் கொடுத்து, இனி இந்நாடும் சிறந்த நகரும் உன் வசத்ததாகும்", என்றான்.

குறிப்பு: சுவடி 2- இல் இப்பாடலின், முதலடியைத் தவிர ஏனைய மூன்றடிகள்,

"...மானமதி மந்திரியர் தம்மை அயல் வைத்துத்
தேனின்மொழி மங்கையர்கள் சேர்வைசெய் திறத்தா,
றானிதிய முள்ளது தொகைப்படி வளித்தே"

என உள்ளது.,

சுவடி 3 - இல் ஈற்றடி,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

" ... மானமதி மந்திரியர் தம்மை அயல் வைத்தே" எனவும்,

சுவடி 4- இல் இப்பாடலின் ஈற்றடி,

"***னை யரசுக் குரிய யாவையு மளித்தான்"

எனவும் காணப்படுகிறது.

ஒப்: அடி3, 4 "நங்கை நின்பேரனுக்கு நானில முழுதும் ஈந்து" அரங்.மகா.7; அடி 3. நெதி - "அருநெதி நல்ல நல்ல" சம்.தே. II 85-3

(34)

தருமன் குந்தியிடம் செல்லல்

191. மற்றுமர சற்குமுன் வழங்கலுள [1]தெல்லாம்
பெற்றிட [2]நடத்தியுயர் பேணலர் வணங்கச்
சுற்றமொடு வாழ்தியென வைத்தினிய தொன்மைப்
[3]பொற்றொடிசொல் குந்திமனை புக்கடி [4]பணிந்தான்.

1. தெல்லாம், சு.1+3+4; வெல்லாம், சு.2* 2. நடத்தியுயர், சு.1+3+4; வழங்கியுயர், சு.2* 3. பொற றொடிசொல், சு1+3+4; பொற்றொடிய குந்தி, சு.2* 4.பணிந்தார், சு.1; பணிந்தான், சு.2+3+4*

பொ: மேலும் தருமன் அரசர்க்கு முன்பு வழங்கக் கூடியவையெல்லாம் பெறும்படி செய்து, "பகைவர் வணங்க, உறவினர்களோடு வாழ்வாயாக", என்று வாழ்த்தி (அவனை) அங்கிருக்கச் செய்து, பண்டு பொன்வளையல் அணிந்த புகழ்மிக்க குந்தியின் இருப்பிடம் சென்று அவள் திருவடிகளை வணங்கினான்.

அ.வி: பேணலர்-பகைவர், தொன்மைப் பொற்றொடி குந்தி- பண்டு பொன் வளையல் அணிந்த குந்தி.

(35)

குந்தி தருமனை வாழ்த்துதல்

192. நீதிகள் தழைக்க நிறைசேர் மறைவிளங்கப்
பூதல மனைத்துமொரு பொற்குடை நிழற்கீ
ழேதிலர் தொழப்புவி புரந்திடுமி னென்றே
மாதுபரி வுற்றுமிக வாழ்த்தினள் மனத்தே.

பொ: "நீதி தழைக்க, நிறைவைத் தரும் வேதம் விளங்க, உலகம் முழுவதும் ஒரு பொற்குடையின் நிழலின் கீழ் பகைவரும் வணங்கும்படி நாட்டை ஆள்வீராக", என்று குந்தி அன்புற்று உளம் நிறைந்து வாழ்த்தினாள்.

ஒப்: அடி 3. "ஒன்றி வாழுதி யூழிபல வென்றான்" கம்.அ. ந. நீங். 303.

(36)

தருமன் மகவிந்தம் செல்ல வினவல்

193. ஒன்றடிய னேன்புகல்வ துண்டுநெறி யின்றிக்
கன்றுகலி வந்தெதிர் கலந்துளது பார்மேல்
சென்றுமக விந்தமது♥ சேர்வதரு ளாலே
யின்றருள் புரிந்துவிடை யீய்தியென லோடும்.

♥ கண்ணன், பாண்டவரை மகவிந்தம் செல்லக் கூறியது பார்க்க: பா.மா. 96

Digitization by Hindu-Heritage-Foundation of America (HHFA)

பொ: "அடியவனாகிய நான் ஒன்று சொல்வதற்குண்டு; நெறியின்றிப் பூவுலகில் கொடிய கலிகாலம் வந்து எதிரே கலந்துள்ளது. கண்ணனருளால் மகவிந்தம் சென்றடைய இப்போது விடை கொடுத்தருள்வாய்", என்று கூறியதோடும் (இது முதல் 195 வரை குளகம்).

ஒப்:அடி 1. "நாயக னென்னை நன்னெறி யுய்ப்பதற்கு, ஏயதுண்டொர் பணி யென்றி யம்பி னான்" கம்.அ.ந.நீங்.7.

(37)

குந்தி வருந்திக் கூறுதல் 194-196

194. சொற்றமொழி யுற்றசெவி யிற்சுடுத ழற்கோ*
லுற்றதென நின்றவளு முள்ளுறு முயிர்ப்பால்
வெற்றியுட னிப்புவி புரக்கவிதி யின்றி
[1] யுற்றதிது வென்கொலென [2]வோதுமயர் வுற்றே.

1.யுற்றதிது,சு.1; யுற்றநினை, சு.2+3+4* 2. வேந்து, சு.1+2; வோது, சு.3+4*

பொ: சொன்ன சொல் கேட்ட குந்தி, பழுக்கக் காய்ந்த சூட்டுக்கோல் செவியில் உற்றதுபோல் துன்புற்று, உள்ளே பெருமூச்சினால் "வெற்றியுடன் இந்நாட்டை ஆள வழியின்றி வைகுண்டம் செல்ல என்ன நிகழ்ந்தது? என்று சொல்லி மிகச் சோர்ந்து,

அ.வி: சுடுதழல்கோல் - பழுக்கக் காய்ந்த சூட்டுக்கோல். 'சொன்ன' என்பது எதுகை நோக்கிச் சொற்ற என்றாயிற்று. முதலடி உவமை.

ஒப்: அடி 1,2. "அனல்குழை தூங்குதன் செவியில் தொடரா முனம்", கம்.அ.ந.நீங்.8.

(38)

195. தம்பியர்க ளோடுமுயர் தாரணியி லுன்னை
நம்பியவ ரோடுமிகு நன்குரவ ரோடு
மம்புவி புரக்கநினை வன்றியறி [1]வின்றி
வெம்பிய வனத்தினிடை மேவுவ [2]தேனென்றாள்.

1. வின்றி, சு.1+2+4; வொன்றி, சு.3*2.தேனென்றாள், சு.1+2+4; தென்னென்றாள், சு.3*

பொ: "தம்பியர்களோடும், உயர்ந்த உலகில் உன்னை நம்பியிருப்பவர்களோடும், நல்ல ஆசிரியர்களோடும் அழகிய உலகைப் பாதுகாக்க எண்ணம் இல்லாது, வெம்மை மிகுந்த காட்டிற்குச் செல்வது ஏன்?", என்றாள் (குந்தி).

(39)

196. திக்கின்முடி மன்னவர் [1]கொணர்ந்து திறைநல்க
மிக்கவரி யாசனமி சைக்கவரி வீசத்
[2]தக்கதரு மத்தியில் தலத்துரிமை விட்டே
தொக்கவன மேவநினை வென்னதுணி வென்றாள்.

---

* இதே உவமை பார்க்க: பா.மா.145.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

1.கொணர்ந்து,சு.1+3+4; கொணர்ந்த,சு.2* 2.தக்கதரு, சு.1+3+4; தக்கமரு, சு.2*

பொ: "எல்லாத் திசைகளிலிருந்தும் முடிசூடிய மன்னர்கள் கப்பம் கொண்டு வந்து கொடுக்க, பெருமைமிக்க அரியாசனத்தின் மீதிருந்து வெண்சாமரம் வீசத், தருமம் பொருந்திய இந்த இடத்தில் அரசாளும் உரிமையை விட்டு, அடர்ந்த காடு செல்லும் நினைவு என்ன? நோக்கம் என்ன" என்றாள் (குந்தி).

அ.வி: கவரி-வெண்சாமரம், தொக்க-அடர்ந்த, துணிவு-நோக்கம். (40)

தருமனின் மறுமொழி 197-201

197. நுண்ணிய மனத்திறமை நூற்றுவர்க ளோடே
புண்ணியர் துரோணர்புகழ் வீடுமர் பொருந்தித்
திண்ணிய செருக்கினிடை செற்றவரை யானே
பண்ணிய கொலைக்கெதிர்[1]செய்பாதகமு முண்டோ.

1. செய், சு.1; சொல்,சு.2+3; கொல், சு.4*

பொ. நுட்பமான மனத்திறமை கொண்ட கௌரவர் நூறுபேர்களுடன் புண்ணியரான துரோணரையும், புகழுடைய வீடுமரையும் எதிர்த்துத், திண்ணிதான பாரதப்போரில் பகைவரை நானே செய்த கொலைக்கு ஒப்பான கொடிய தீவினையும் வேறுண்டோ?" (இது முதல் 201 வரை குளகம்) (41)

198. மைந்தரொரு நூற்றுவர் மடிந்தமரின் மாளச்
சிந்தைதுயர் கொண்டவர சன்பெரிய தேவி
முந்தியவென் னனைதன் முகத்தெதிர் விழித்தே
யிந்தவர சாள்கொடுமை யென்னிலினி யாரே.

பொ: "ஒப்பற்ற நூறு மைந்தர்கள் போரில் இறக்க, (அதனால்) மனத்தில் துயர் அடைந்த திருதராட்டிரரின் மூத்த மனைவி பெரிய தாயாம் காந்தாரியின் முகத்துக்கெதிராக விழித்து இவ்வரசையாளும் கொடுமையுடையவர் என்னைவிட இனி யார் இருக்கிறார் ?"

அ.வி: அரசன் பெரியதேவி - திருதராட்டிரரின் மனைவி காந்தாரி, முந்தியவென் அனை- பெரியதாய். (42)

199. பாவமுய ரும்[1]பழியி [2]னின்றுபலர் சொல்லு
மேவமு [3]மெமக்குநிறை வெய்தியிட வின்னங்
[3] கோவிலி னியற்கை, புவி கொண்டுளனி தென்றா
[4]லாவதெனி திற்பெரிய வாரணியம் நன்றே.

1.பழியி, சு.1+3+4; பழியு, சு.2*2. னின்று, சு.1; நின்று, சு.2; னென்று, சு.3+4* 2. மெமக்கு,சு.1; மெனக்கு, சு.2+3+4* 2.கோவிலி னியற்கை சு.1+3; கோவினி லியற்கை, சு.4(சு.2.சி) *3. லாவதெனதிற், சு.1+3+4; லாவதெனிதிற், சு. 2*

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பொ: (கௌரவரைக் கொன்றதால்) பாவம் சேர்ந்து உயரும், அப்பழியிலிருந்து பலர் கூறும் குற்றமும் எமக்கு நிறைய அடைந்திட, இன்னும் அரசின் தன்மை அறிந்து பூமியை ஆண்டு கொள்வது இனிதென்றால் ஆவது என்ன? இதைவிடப் பெரிய காடு நல்லது".

அ.வி: ஏவம் - குற்றம், இன்னம் - இன்னும், கோ-அரசாட்சி, கொண்டுளனி தென்றால்- கொண்டுளன்+இது+என்றால்.

(43)

200. பாரத முடிக்கநிகழ் பாரினிலு தித்தோர்
நாரணர் வைகுண்டநிலை நண்ணியுறு மன்னாள்
தாரணி தனிற்கலி* புகிற்றரணி விட்டே
வாருநம்மி டத்தென வகுத்தவரு ளுண்டால்.

பொ: பாரதப்போர் முடிப்பதற்காக விளங்கும் உலகில் அவதரித்த நாராயணர், தாம் வைகுண்ட நிலையை விரும்பியுற்று அடைந்த அந்நாள், "கலிகாலம் உலகில் புகுந்தால் நாட்டை விட்டு எம்மிடம் வாருங்கள் என்று அவர் கூறிய அருள்வாக்கு உண்டு".

(44)

201. அந்தமொழி தப்பியர சாயினி [1]யிருந்தால்
வந்துவினை முற்றுமர சாள்கை வசமாகா
சிந்தையொ [2]டுயற்சிவினை [3]விட்டுவினை சேரும்
விந்தமத னிற்செல [4] விடைதருதி யென்றான்.

1. யிருந்தால், சு.1+2; திருந்தால், சு.3+4* 2. டுயற்சிவினை, சு. 1+2; டுயற்றிவினை,சு.3+4* 3.விட்டுவினை, சு.1; விட்டுநெறி, சு.2+3+4* 4.நீவிடையருள்தி, சு.1;விடைதருதி, சு.2; விடைக்கருள்டி, சு.3+4*

பொ: "அவர் மொழிந்த வாக்குத் தவறி இனி அரசு ஏற்று இருந்தால் தீவினை வந்து சேரும். நாட்டை ஆள்வது கைவசம் ஆகாது. (எனவே அரசாளும் ஆசை நீக்கி) மனத்தைத் தப்பிச் செல்லச் செய்து தீவினை நீங்கி நல்வினைகள் சேரும் வைகுண்டமதிற் செல்ல எனக்கு விடையருள்வாயாக", என்றான் (தருமன்).

அ.வி: அரசாள்கை வசமாகா- ஆட்சி கைவசம் இராது.

(45)

குந்தி, தானும் உடன் வருவேன் எனல்

202. கானமதி னேகியிசை கண்ணனடி காணு
மானநினை வின்செயலிவ் வைவரோடு கூட
நானும்வரு வேனென நயந்தமொழி கூறும்
மானமொழி யன்னையை வணங்கியிவை [1]சொன்னான்.

1. சொன்னான், சு.1+3+4; சொல்வான், சு.2*

* ஒப்: நாராயணர் பாண்டவர்களை மகவிந்தம் செல்லக் கூறியது பார்க்க: பா.மா. 96.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பொ: "காட்டினில் சென்று புகழ் பொருந்திய கண்ணன் திருவடிகளைக் காணும் எண்ணத்தின் செயலில், இந்த ஐவரோடு நானும் உங்களுடன் வருவேன்", என்று அன்பு மொழி பேசும் தன்மான வார்த்தை சொன்ன தாய் குந்தியை வணங்கி இவற்றைத் தருமன் சொன்னான்:

ஒப்: அடி 2, 3, "போகின் நின்னொடும் கொண்டனை போகு என்றாள்" கம்.அ.ந.நீங்.18.

(46)

தருமனின் மறுமொழி

203. வெம்பரல் [1]பரந்தமிகு கானமது மீதுன்
செம்பதும மெல்லடி நடத்தல்திற மாமோ
மம்புவி தனக்கரச [2]னாகியவி மன்சேய்
பைம்பொன்முடி பெற்றதொரு பான்மையின [3]னாமால்.

1.பரந்தமிகு, சு.1+3+4;பரந்தமுது, சு.2* 2.னாகி யவிமன், சு.1; னாக வபிமன், சு.2+3+4* 3. னாமால், சு.1+3+4; னானான், சு.2*

பொ: "வெம்மையான பரல்கற்கள் மிகுந்த காட்டின்கண், உன் சிவந்த தாமரைமலர் போன்ற மென்மையான அடிகள் நடக்க வலியுடையனவோ?, அழகிய நாட்டிற்கு அரசனாகிய அபிமன்னன் மகன் பரீட்சித்து பசிய பொன்னாலானமுடி பெற்றவொரு அரசனாக இருக்கும் தன்மையால்" (குளகம்).

ஒப்: அடி 1, 2. "கல் அரக்கும் கடுமைய அல்ல நின், சில் அரக்குண்ட சேவடிப்போது" கம்.அ.ந. நீங். 221.

(47)

204. போதமோ டவற்குநிகழ் புந்தியை யுரைத்தே
யோதிய தவத்துடனு றைந்தருள்கை! யொப்பா
மாதினுட னைவரும் வனம்புகுத வேயுன்
பாதமல ரேதுணை பணித்திவிடை யென்றான்.

பொ: "அறிவோடு பரீட்சித்துக்கு உரிய அறிவுரை கூறியே, தவத்துடன் (அரண்மனையில்) இருப்பாயாக. நாங்கள் ஐவரும், உனக்கொப்பான துரோபதியுடன் காடு செல்லவே உன் திருவடியாகிய மலரே துணை. விடை கொடுப்பாயாக", என்றான்.

அ.வி: போதம்-அறிவு, புந்தி-புத்தி. மெலித்தல் விகாரம், மாது-துரோபதி.

ஒப்: அடி1. "போதத்தி னகன்று" பெருங்கதை.1-43, 61. ; அடி.3,4."ஆர் உயிர்த் தம்பியும் தாமரைப், பொன்னும் தானும்... போயி னான்" கம்.அ.ந.நீங்.234.

(48)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

குந்தி வருந்துதல் 205-208

205. அந்தவபி [1]மன்னியல் கடோற்கய♥ னராவான்
முந்துமம ரிற்பட முடிந்தசெயல் கண்டேன்
விந்தமுற நீர்செலும் வினைத்திறமை கண்டே
[2]னெந்தனிலும் வெவ்வினையில் யாவர்கொடி யாரே?

1.மன்னியல், சு.1+3+4; மன்னிகல், சு.2* 2. யெந்தனிலும், சு.1; னெந்தனிலும், சு.2+3+4*

பொ: "அந்த அபிமன்னன், விளங்கும் கடோற்கயன், அரவான் ஆகியோர் முன்பு நடந்த பாரதப் போரில் இறந்து பட்ட செயலைக் கண்டேன். நீங்கள் காடு செல்ல முயல்கின்ற செயலின் தன்மையையும் கண்டேன். (இவற்றையெல்லாம் கண்ட) என்னை விடத் தீவினையில் யார் கொடியவர்?"

அ.வி: கடோற்கயன்-மயிரில்லாத குடம் போன்ற தலையை உடையவன், அராவான்-அர்ச்சுனன் மகன். 'என்தன்' என்பது எதுகை நோக்கி எந்தன் என்றாயிற்று.

(49)

206. கன்னனொடு நூற்றுவர் கடுந்திறலின் மிக்கோர்
மன்னவர் குமாரர்கள் மடிந்தசெயல் கண்டே
னின்னமிங்கு னுந்துவினை கண்டிட [1]விருப்பே
னுன்னுமுயிர் போகவோரு பாயமுணர் கில்லேன்.

1.விருப்பே, சு.1+3+4; விரும்பே, சு.2*

பொ: "கர்ணனுடன் கௌரவர் நூறுபேர், வலியின் மிக்க மன்னரின் மைந்தர்கள் இறந்த செயலைக் கண்டேன். இன்னும் இவ்வாறு செலுத்தும் விதி நீங்கள் காடு செல்வதையும் கண்டிட இருப்பேன், நிலைபெற்றிருக்கும் என் உயிர் போக ஒரு வழி அறியேன்".

அ.வி: கன்னன்-கர்ணன், மன்னவர் குமரர்-திருதராட்டிரரின் மைந்தர், உந்து வினை-செலுத்தும் விதி, நுந்து (தள்ளு) வினை என்றும் கொள்ளலாம்.

ஒப்: அடி3, "பரந்து பொன்னிரந்து நுந்தி" நாலா.802.; அடி 4, "நஞ்சமோ இனி நான் உயிர் வாழ்வெனோ" கம்.அ.ந.நீங்.9.

(50)

207. மைந்தர்வன [1]மேகியிட வாழ்தசர தன்றா
னுய்ந்தில னுயிர்க்கிறுதி யாயின னுரைப்பி
னைந்துமக வோர்வன [2]மடைந்தரு [3]ளிலாதே
[4]நைந்திட [5]வெனன்புநிலை நாடவெளி தன்றே.

♥ கடம் -குடம், உற்கஜம்-மயிரில்லாதது (விளக்கம் தி.வே.கோ.), கடோற்கயன் வீமனுக்கும் இடும்பிக்கும் பிறந்த மகன். அராவான்- அர்ச்சுனனுக்கும் உலூபி என்னும் நாககன்னிகைக்கும் பிறந்த மகன், (இவன் பாரத யுத்தத்திற்கு முதல் பலியாக உயிர் தந்தவன். தன்னைப் பலி தந்தாலும் சில நாள் வரையில் உயிரோடிருக்க வேண்டிக் கண்ணனிடம் வரம் வேண்டினவன்)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

1.மேகியிட, சு.1+2+4; மேகிவிட, 2* 2. மடைந்தரு, சு.1+4; மடைந்துள, சு.2* 3. ளிலாதே, சு.1+4; வருந்தி, சு.2+3* 4. நைந்தில, சு.1+3+4; நைந்திட, சு.2* 4.னென்னநிலை, சு.1+3; வெனன்புநிலை, சு.2; னென்னன்புநிலை, சு.4*

பொ: "இராம இலக்குவர் காடு சென்றதும், வாழ்ந்த தசரத மன்னன் பிழைக்கவில்லை, உயிர் துறந்தான். ஆராய்ந்து பார்க்கின், ஐந்து பிள்ளைகள் காடு சென்றது கண்டு அருள் இல்லாமல் மனம் வருந்திட என் அன்பு நிலை கிடைப்பதற்கு எளிதல்ல", (என வருந்திய குந்தி).
ஒப்: அடி 2. "நுனிக்கொம்பர்...உயிர்க்கிறுதி யாகி விடும்" குறள்.476.

(51)

208. பிள்ளைகள் தனைப்பெறுதல் [1]பேதையர் [2]தமக்கிங்
குள்ளுறு [2]தவத்தரென வோதுமுல கெல்லாம்
வள்ளிய குமாரரை வனத்தினிடை யேவுங்
கள்ளியிவ ளென்றுலகு [3]காணுநல மாமால்

1. பேதையர், சு.1+3+4; பேதைகள், சு.2*2. தனக்கிங்,சு.1+2+3; தமக்கிங், சு.4 *2. தவத்தரென சு.1+3+4; தவத்தினென, சு.2* 3.காணநல, சு.1; காணுநல ,சு.2+3+4*

பொ: "நன்மக்களைப் பெறுதல் பெண்களுக்கு இங்கு அவர் செய்த தவத்தால் என்பர் உலக மக்கள். கொடையில் சிறந்த மைந்தர்களைக் காட்டிற்கு அனுப்பும் வஞ்சகி இவள் என்று உலகம் காணும்படி நான் இருத்தல் நலமோ?"
குறிப்பு: "தனைப்பெறுதல்" என்பது தமைப்பெறுதல் என்று இருக்க வேண்டும்.
அ.வி: வள்ளிய குமரர் - கொடையில் சிறுந்த மைந்தர், கள்ளி-வஞ்சகி.
ஒப்: அடி1. "நன்கலம் நன்மக்கட் பேறு" குறள். 60

(52)

ஐவரும் குந்தியிடம் விடைபெறல்

209. தன்னிளைய மைந்தர்கள் தனித்தனி வணங்க
வன்னவரை [1] யன்புற வணைத்தழு திரங்கி
யுன்னுமுயிர் சோர்வுறு முயிர்ப்பினொடு நின்றாள்
மன்னர்பணி குந்திவள னாடன்மட மங்கை.

1.யன்புற, சு.1+2+3; முன்புற, சு.4*

பொ: மன்னர்கள் பணிந்து வணங்கும் போச மன்னன் மகள் மடப்பம் பொருந்திய குந்தி, தன்னுடைய இளைய மைந்தர்கள் தனித்தனியாக வணங்க, அத்தன்மையுடையோரை அன்புடன் அணைத்து, இரங்கி, அழுது உயிர் சோர்வுறும்படி பெருமூச்செறிந்து நின்றாள்.
அ.வி: உயிர்ப்பு-பெருமூச்சு, வளநாடன் மடமங்கை-போச மன்னன் மகள் குந்தி.

(53)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

துரோபதி - விடைபெறல்

210. சொல்லிய துரோபதை துணைக்கழல் வணங்கப்
புல்லினள் துயர்க்கொடு பொருந்துற வணைத்தே
யெல்லையில் விதிப்படி யிசைந்துடைய தெல்லாம்
வெல்லவுள சிந்தனை விதிக்கு[1]மரி தாமால்.

1.முளதாமால், சு.1; மரிதாமால், சு.2+3+4*

பொ: (காடு செல்வதைக்) கூறிய துரோபதி குந்தியின் அடிகளை வணங்கக், குந்தி துயர்கொண்டு அவளை மிக நெருங்க அணைத்து, "முன்புள்ள விதிப்படி நடப்பவற்றை வெல்லலாம் என்ற எண்ணம் விதியாகிய பிரம்மனுக்கும் அரிதாம்", (குளகம்)

அ.வி: விதி-பிரம்மன், உடையது எல்லாம்-ஒருமை பன்மை மயக்கம்.

ஒப்: அடி 3, 4: "மூலம் வந்துதவிய மூவர்க்கு ஆயினும், காலம் என்று ஒரு வலைக்கடக்கல் ஆகுமோ" கம்.அ.திருவடி.73. (54)

காந்தாரியிடம் விடைபெறல்

211. இப்படி வருந்தி [1]யவ்விடர்க் [2]கடலி லாழும்
மெய்ப்பரிவி னன்னையை வணங்கிவிடை கொண்டே
வொப்பரிய மைந்தரொழி யத்துயரு ழக்கு
மப்பெரிய தாயருறை கோயிலை [3] யடைந்தார்.

1.யவிடர்க், சு.1+3+4; யிவ்விடர்க், சு.2* 2.கடலி லாழும், சு.1+2; கடலுளாழும், சு.3+4*
3.யடைந்தான், சு.1; யடைந்தார், சு.2+3*

பொ: இவ்வாறு துன்பத்தில் வருந்தியவாறு துன்பமாகிய கடலில் ஆழ்ந்திருக்கும் உண்மை அன்புகொண்ட அன்னை குந்தியை வணங்கி, விடைபெற்றுக் கொண்டு ஒப்பற்ற அரிய வீரமுடைய மைந்தர்கள் (போரில்) அழியத் துன்பத்தில் வருந்தும் அந்தப் பெரிய தாயாம் காந்தாரி தங்கியிருக்கும் அரண்மனையை அடைந்தனர்.

அ.வி: மைந்தர்-கௌரவர், பெரியதாயர்-காந்தாரி, இடர்க்கடல்-உருவகம்.

ஒப்:அடி 1,2. "போகின் றாளைத் தொழுது, புரவலன் ஆகம் மற்று அவள் தன்னையும் ஆற்றி" கம்.அ.ந.நீங்.19, 28.

(55)

காந்தாரி தருமனை வாழ்த்துதல்

212. தாளின்மிசை வீழ்தருமனைத் தழீஇ யெடுத்து
[1]நாளுமிசை வாழ்திரென நல்லுரை நவின்றே
தோளுமன முந்தனி துவண்டுற விருந்தீர்
கேளிரை யிழந்துள கிலேசியர்க ளென்றாள்.

1.நாளுமிசை, சு.1+3+4; நாளுமுறை, சு.2*

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பொ: காந்தாரி, தன் காலடியின்மேல் விழும் தருமனை அணைத்து எடுத்து, "எந்நாளும் புகழுடன் வாழ்வீர்" என்று வாழ்த்தி நல்வார்த்தை சொல்லித், "தோள் பலமும், மன ஆற்றலும் பொருந்த அமைந்தவரே! நீவிர் உறவினரை இழந்து மனத்தில் கவலைப்படுபவர்" என்றாள்.
ஒப்:அடி 2,3. "வாழ்த்தினார் இளையோனை, வழுத்தினார் காத்து நல்குமின் தெய்வ தாங்கள்" கம்.அ.ந.நீங்.233. அடி 4. கேளிர் "யாதும் ஊரே யாவரும் கேளிர்"புறநா. 192.

(56)

தருமன் காடு செல்வதைக் கூறல்

213. வெய்யகலி வந்துமிக [1]மேவிய நகர்க்கண்
[2]வையமதி லாசையிலை மற்றுன்னரு ளாலே
செய்யமக விந்தமது சேரநினை [3]வுற்றோ
முய்யவிடை நல்கென வுதிட்டிரனு ரைத்தான்.

1. மேவி யவன்றகண், சு.1+3+4; மேவிய நகர்க்கண், சு.2* 2. வையமருளாசை, சு.1; வையமதி லாசை, சு.2+3+4* 3. வுற்றே, சு.1+2; வுற்றோ, சு.3+4*

பொ: "கொடிய கலிகாலம் வந்து அத்தினபுரியின்கண் அடைய, எமக்கு அரசாள்வதில் விருப்பமில்லை; மேலும் உன்னருளாலே சிறப்பான மகவிந்தம் என்னும் காட்டிற்குச் சென்று சேர எண்ணியுள்ளோம். நாங்கள் செல்ல விடையருள்வாய்", என்றான் தருமன்.

(57)

காந்தாரியின் துயரம்

214. ஆயதிறல் நூற்றுவ ரடங்கிய வதற்பி
[1]னேயமுள வைவருள ரென்றுநிலை கொண்டேன்
றீயவுரை [2]நீருமிது செய்திடுவ தாயின்
[2] மாயும்வகை யன்றியொரு வாய்மையில தென்றாள்.

1.நேயமுள, சு.1+3+4; நேயமுற, சு.2* 2. நீருமிது, சு.1+2+3; நீருமது, சு.4* 3. மாயின்வகை, சு.1; மாயும்வகை, சு.2+3+4*

பொ: "வலிமை கொண்ட நூறு மைந்தர்கள் இறந்தபின்பு என்மீது அன்பு கொண்ட ஐந்து மைந்தர்கள் உள்ளனர் என்று நிலைத்து இருக்கிறேன். தீக்கு ஒப்பான சொல்லைக் கூறி, நீவிரும் எம்மை விட்டுச் (செல்லச்) செயல்படுவதாயின் உயிரை விடுவதன்றி சொல்ல வேறு ஒரு சொல் இல்லை", என்றாள் (காந்தாரி).
அ.வி: தீய உரை-தீக்கு ஒப்பான சொல், மாயும்-இறக்கும், வாய்மை-சொல்.

(58)

பரீட்சித்திடம் சென்று விடைபெறல்

215. என்றுதுய ரோடுரைசெய் வாளையிட ரெய்தேல்
நின்றருள்தி [1]ராமென நிறுத்திவிடை கொண்டே

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மன்றல்[2]மணி மார்ப[3]னபி மன்புதல்வன் வைகுந்
துன்றுமணி மாளிகை புகுந்தனர்கள் தூயோர்.

1.ராமென,சு.1+3+4; நீயென, சு.2* 2. மணிமார்ப, சு.1; மலர்மாலை, சு.2; மணிமாலை, சு.3+4*
3.னபிமன்,சு.1; யபிமன், சு.2+3+4*

பொ: என்று துன்பத்தொடு கூறிய காந்தாரியை, "இடர் அடையாதீர்! (எமக்கு) நின்று அருள்வீர்!" என இருக்கச்செய்து, விடைபெற்றுக் கொண்டு, தூய்மையானவர் (பாண்டவர்) மணமுள்ள மாலை பொருந்திய அழகிய மார்பினையுடைய அபிமன்னனின் மகன் பரீட்சித்து வசிக்கும் அழகிய அரண்மனையினுள் சென்றனர். (59)

216. வந்துபணி மைந்தன்மகனைப் பரிவின் வாழ்த்திச்
சிந்தையில் வருத்தமது தீரவர சாள்தி
யிந்திர [1]பதத்தினிமை எய்தியிரு மென்றே
விந்தமது சேர்வுற [2]விரைந்து [3]நடந்தான்.

1.புரத்தினிமை,சு.1;பதத்தினிமை,சு.2+3+4*2.விரைவுடன்,சு.1;விரைந்துடன்,சு.2+4;விரைந்து, சு.3*3.நடந்தார்,சு.1+3+4; நடந்தான்,சு. 2*

பொ: வந்து பணிந்த பரீட்சித்தைப் பாண்டவர்கள் பரிவுடன் வாழ்த்தி, "மனத்தில் கொண்ட வருத்தம் நீங்க அரசாள்வாயாக!, இந்திரபதி நகரின் இனிமையை அடைந்து இருப்பாயாக!" என்று கூறி விந்தத்தை அடைய விரைந்து நடந்தான்.

அ.வி: இந்திரபதி- இந்திரப்பிரஸ்தம், (அமராவதி, என்றும் கொள்ளலாம்) மைந்தன் மகன்- அபிமன்னன் மகனாகிய பேரன் பரீட்சித்து.

ஒப்: அடி1. மைந்தன் மகன்-"வையம் தந்தான் நான்முகன் மைந்தன் மகன் மைந்தன்" கம்.சு.நிந்.77. (60)

தருமன் நல்லுரை நவிலல்

217. அத்துணை பணிந்துநிகழ் [1]பேரனை [2]யறத்தி
னுத்தமனு மன்பினுட னுச்சிதனை [2]மோந்தே
[3] வைத்தமணி மன்னவர் வணங்குமவ ருக்காஞ்
சித்தமுற நற்பரிவு செப்பின னமைத்தே.

1.போயின, சு.1; யோசனை, சு.2; பேரனை, சு.3; பெயரனை, சு.4* 2. மோந்தே, சு.1+2+4, மோர்ந்தே, சு.1+3* 3. வைத்தமணி, சு.1; வைத்தவணி, சு.2+3+4*

பொ: மிகவும் பணிந்து நின்ற பேரன் பரீட்சித்தை, அறத்தின் உத்தமன் தருமன் அன்போடு உச்சி முகர்ந்து, தன்னை வணங்கிய மணிமுடி மன்னவர்க்கும் மன உவப்புற்று நல்லன்போடு நல்ல பரிவினைக் கூறினான்.

அ.வி: பணிந்து நிகழ் பேரன் - பணிந்து நின்ற பரீட்சித்து, மோந்து-முகர்ந்து

(61)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

218. அங்குவரு மந்திரிக ளானவரை யெல்லா
முங்கள்பர மாமிவனோ டொன்றியுல காள்கை
பொங்கு[1]புக ழுந்தருமமும் [2]நும்மதது தப்பி
னெங்குள [3]பழிச்சொலது [4]நும்முதெனு [5]மாமால்

1.புகழும் தருமம், சு.1; தருமம் புகழும், சு.2+3+4* 2. நும்மதது, சு.1+3; நும்மிதது, சு.2; நும்முதது, சு.4* 3. பழிச்சொலது,சு.1+3+4; பழிச் சொலு, சு.2* 4. நும்முதெனு, சு.1; மிசைந்திடுத, சு.2; நும்மதென, சு.3; நும்முதென, சு.4* 5.மாமால்,சு.1; லாமால், சு2+3+4*

பொ: அங்கு வரும் மந்திரிகளான எல்லோரையும்,"இவனுடன் சேர்ந்து உலகை ஆள்வது உங்கள் பொறுப்பாம். மிகுந்த புகழும் தருமமும் நமதாகும். நீங்கள் அது தவறி நடப்பின் எல்லா இடங்களிலுமுள்ள பழிச் சொல்லும் உங்களுடையதாகும்" (குளகம்)

அ.வி: பரம்-பொறுப்பு, நும்மது-உங்களுடையது. "புகழும் தருமம்" என்பது "புகழும் தருமமும்" என்று கொள்ளப்பட்டது.,

(62)

மந்திரியரிடம் விடைபெறல், அத்தினபுரம் நீங்கல்

219. ஆயவுரை கொண்டவ ரடித்துணையின் வீழா
நேயமுரு கிச்சொரிவ தென்னநிகழ் கண்ணீர்
தோயமொடு சென்றனர் [1]தொடர்ந்து [2]தொடரெய்து
[3]மாயைகள் [4]கடந்தவனும் மாநகர் கடந்தான்.

1.துடர்ந்து, சு.1; தொடர்ந்து, சு.2+3+4* 2. துடரெய்து, சு.1; தொடர்பெய்து, சு.2+3+4* 3.மாய் கைக, சு.1; மாயைகள், சு.2+3+4* 4. ளடைந்தவனு, சு.1; கடந்தவனு, சு.2.+3+4*

பொ: தருமன் கூறிய மொழிகளைக் கேட்ட மந்திரியர் தருமனின் இணையடிகளில் வீழ்ந்து, வணங்கி மனமுருகிச் சொரிவதுபோல் (கண்ணில்) கண்ணீர் நிறைந்து, நீர்மல்க அவனைத் தொடர்ந்து சென்றனர் தொடர்ந்து, பற்றும் மாயைகளை வென்ற தருமன் அத்தினபுரத்தைக் கடந்து சென்றான்.

அ.வி: தோயம்-நீர், தொடர்ந்து தொடரெய்தும்-தொடர்ந்து பற்றி வரும்.

(63)

தருமன் செல்வது கண்ட மக்கள் நிலை 220-224

220. நீதியற [1]வோனுநகர் நீங்கியகல் கின்றா
னேதினி [2]யெமக்குநிலை யாமுமவ னோடே
போதல்புரி வோமலது பொன்றிடுவ [3]மென்றே
[4]யோதினர்க ளந்நகரி னுள்ளவர்க ளெல்லாம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

1.வோனுநகர், சு.1+3+4; வோனகர், சு.2 *2.யெமக்கு நிலை, சு.1+2+3; பயனமக்கு நிலை, சு.4 *3.மென்றே, சு.1+2+3; மின்றே, சு. 4; மென்றே, சு.2+3+4* 4.யேதினர்க, சு.1;யோதினர்க, சு.2+3; யேகினர்க, சு.4*

பொ: "நீதி பொருந்திய தருமனும் நாடு நீங்கிச் செல்கிறான். நமக்கு இனி ஆதரவு நிலை ஏது? நாமும் அவனுடன் போவோம் அல்லது இறந்திடுவோம் இன்றே" என்று அந்நகரத்தில் உள்ள மக்கள் எல்லோரும் கூறினர்.

ஒப்: அடி 3,4. "நரந்த நறைக்குழ னங்கையு நாமும், முருங்கெரி யிற்புக மூழ்குது மென்பார்" கம்.பா.கார்மு.29.

(64)

221. ஆரருளி னிப்புவியை யாள்பவன றத்தோன்
[1] பாரிலிய லாசையது பற்றற நினைந்தான்
வாருமினி யாமுமவன் மாகதிய தாகச்
சேருதுமெ னக்கொடெவ ரும்பிறகு சென்றார்.

1. பாரிலிய, சு.1+2; பாரினிய, சு.3+4*

பொ: பொருந்திய அருளில் இந்த உலகை ஆள்பவன் தருமன்; உலகில் உள்ள ஆசையை விட்டுப்பற்று அற நினைத்தான். வாருங்கள் நாமும் அவனது பெருவழியைச் சேர்வோம் என்று கொண்டு எல்லோரும் பின்தொடர்ந்து சென்றனர்.

அ.வி: பிறகு-பின்தொடர்ந்து,மாகதி-உய்யும்பெருவழி,எவரும்-எல்லோரும்.

(65)

222. அன்னகரில் மங்கைய [1] றத்தினியல் மன்ன
னுன்னிவன [2] மேவுத [3]லுகந்துற விரைந்தா
ரென்னசெய லென்னநிலை யென்னவுட லென்னா
மன்னுவிழி நீர்முலை [3] மறைத்தொழுக நின்றார்.

1.றத்தினிகல், சு.1+3+4; றத்தினிகர், சு.2; றத்தினியன், சு.3; றத் தினியல், சு.4* 2.மேவுத, சு.1+2; மேவுதலு, சு.3+4* 3. லுகந்துற, சு.1+2; வந்துற, சு.3+4* 3.மறைத்தொழுக,சு.1+4; மறைந்தொழுக, சு.2; மறைத் தொழுகு, சு.3*

பொ: அத்தினபுர மகளிர் அறத்தின் இயல்கின்ற தருமன் காடு செல்ல விரும்பிப் போதல்கண்ட அத்தினபுரப் பெண்டிர், அவனுடைய செயல் என்ன! நிலை என்ன! உடல் என்ன! என்று கண்களிலிருந்து சொரியும் நீர் மார்பை மறைத்து ஒழுகும்படி நின்றனர்.

ஒப்: அடி 4. "முலைக் குவட்டு இழிகணீர் ஆலி மொய்த்து" கம்.அ.ந.நீங். 193.

(66)

223. சோருமுணர் வானவர்கள் தொன்னகரி யுள்ளோ
ராருமொழி யாதுபின் னடங்கலு நடந்தார்
பேருடைய [1]தன்மிதர் பிறந்தமுத லின்னாட்
சேருயர றத்தின் [2]வகை சென்றபிற கென்றே.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

1. தன்மிதர், சு.1+3+4; தன்மன்மெய், சு. 2*2.வகை,சு.1+3+4;நெறி, சு.2*

பொ: பழமையான அத்தினபுர நகர மக்கள் யாவரும் எஞ்சுதல் இன்றிச் சோர்ந்த உணர்வுடையோராய் யாரும் ஒன்றும் பேசாது முழுவதும் தருமனின் பின்னால் அவன் பிறந்த காலத்தில் உடன்பிறந்த அறத்தின் கூறுபாடுகள் அவனைத் தொடர்ந்து சென்றதுபோல் பின்தொடர்ந்து சென்றனர்.

அ.வி: பேர்-புகழ், அடங்கலும்-முழுவதும்.

ஒப்: அடி 2. "திரைப் பெருங்கடல் எனப் பின்செல" கம்.அ.ந.நீங்.181.

(67)

224. [1]கைம்மகவு [2]போனவழி காண்கிலர் மறந்தார்
தம்மனை [3]மறந்தவர்கள் [4]தம்மையும் மறந்தார்
விம்மிவிழி நீர்பொழிய மெல்லியர் துடர்ந்தார்
செம்மையுயிர்ப் போகவுடல் சேர்துயர மொத்தே.

1.கைமகவு, சு.1+2+4, கைம்மகவு, சு.3*2.போனவழி,சு.1+3+4; போன நெறி,சு.2*
3.மறந்தவர்கள், சு.1;மறந்தனர்கள்,சு.2+3+4*4. தம்மை யும், சு.1+3; தன்னையும், சு.2+4*

பொ: பாண்டவர்கள் செல்வதைக் கண்ட மக்கள் தம் கைக்குழந்தை போன வழியைக் கண்டிலர். தங்கள் வீட்டை மறந்த அவர்கள் தங்களையும் மறந்தனர். செம்மையான உயிர் பிரிந்து போக, உடல் அடையும் துன்பம் போன்று பெண்கள் விம்மி அழுதுகொண்டே கண்களில் நீர்வழியப் பின்தொடர்ந்து சென்றனர். (இறுதியடி உவமை).

ஒப்: அடி1.'கைக்குழந்தை சம்.தே. 1, 92-2. அடி 1-4. "மக்களை மறந்தனர் மாதர் தாயரைப் புக்க இடம் அறிந்திலர் புதல்வர்" "இன்னுயிர் பொன்றும் போது உற்றது உற்றனள் போலுமே" கம்.அ.ந.நீங்.196, 11. "இன்னுயிர் இழந்த யாக்கை என்ன" சிலப்.13-59.

(68)

தருமன் திருமாலை நினைந்து செல்லல்

225. இன்னதுய ராயெவரு மெய்திய தறிந்து
மன்னர்பதி யன்பொடு வழிக்கொள நடந்தான்
தன்னுடைய கன்றைநினை தாயினை நிகர்க்கும்
மின்னுசுட ராழியினர் மேல்நினைவு கொண்டே.

பொ: இவ்வாறு நகர மக்கள் எல்லோரும் துன்பமடைந்ததை அறிந்து, கன்றை நினைக்கும் தாய்ப்பசுவைப் போன்று திருமாலை நினைத்த வண்ணம் மன்னர் மன்னனாகிய தருமன் அன்புடன் வழியைப் பற்றி நடந்தான்.

அ.வி: தாய்-திருமால், ஆழியினர்-சக்கரத்தையுடைய திருமால், மூன்றாமடி உவமை.

ஒப்: அடி 3."தாய் தன்னை அறியாத கன்றில்லை தன் கன்றை, ஆயும் அறியும்" கம்.ஆ.விரா.55. "கற்றாவின் மனம்போலக் கசிந்துருக" திருவாசகம்.556.

(69)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தருமன் மண்ணாசை விடல்

226. இட்டவள வல்ல*திங்ங னேறவினி யாசைப்
பட்டபொழு தேவருவ [1]தில்லையெனப் [2]பாசக்
[2]கட்டு* பரி கொண்டுபுவி காவல்புரி தன்மன்
விட்டனன்மண் ணாசையை விடாதவிதி தன்னால்

1. தில்லையெனப், சு.1+2; தில்லையெனல், சு.3+4* பாரீர், சு.1+3+4; பாசக், சு.2* 2.கட்டுபரி, சு.1+3+4; கட்டுவரி, சு.2*

பொ: இறைவன் வரையறுத்த அளவுக்குமேல் மிகுதியாக இனி ஆசைப்பட்ட அப்பொழுதே அதுகிட்டாது என்றுணர்ந்து, பாசமாகிய கட்டினோடு, நன்று தீது ஆய்ந்து பகுத்தறிவோடு பூமியை ஆண்ட தருமன் தன்னை விடாத விதியின் ஆற்றலால் மண்ணாசையைத் துறந்தான்.

அ.வி: இட்ட அளவு - இறைவன் விதித்தபடி, ஏற-மிகுதியாக, பாசக்கட்டு-பாசக்கயறு போல் கட்டுகிற அன்பு, காவல்புரி -உலகை ஆண்டு வருகிற. விதி-ஊழ்வசத்தால் மண்ணாசையை விட்டான் என்றுமாம், பரி-அன்பு . (70)

227. தம்பியர்கள் நூற்றுவர் தறைப்படுதல் கண்டே
வெம்பிய [1]வனத்திடைபின் மேவினர்கொ லென்பா
ரம்புவி யனைத்துமுறு மத்துயர றிந்துந்
தம்பரிவி லன்கொல்தறு கண்ணனிவ னென்பார்.

1. வனத்திடை, சு.1+2+4; வனத்தினிடை,சு.3* மேவினர்கொ லென்பா, சு.1+2+4; மேவினர்க ளென்பார், சு.3*

பொ: தம்பியராம் கௌரவர்கள் பூமியில் இறந்ததைக் கண்டு பின் வெம்மையான காட்டினுள் சென்றனரோ என்பர். அழகிய பூமியிலுள்ள மக்கள் அனைவரும் பிரிவால் அடையும் அந்தத் துன்பமறிந்தும், தம் மீது அன்பு இல்லாதவனோ? கொடியவன் இத்தருமன் என்று கூறுவாராயினர் (நகர மக்கள்).

அ.வி: தறைப்படுதல்-இறந்துபடுதல், தறுகண்ணன்-கொடியவன்.

ஒப்: அடி-3,4. “இறந்திலன் செருக்களத்து இராமன் தாதை, தான் அறம் தலை நிரம்ப மூப்பு அடைந்த பின்னரும், துறந்திலன் என்பதோர் சொல் உண்டான பின்” கம்.ஆ.மந்தி.27

(71)

227 அ. மைந்தரை யினிப்பெறுவ [1]தென்கொல் மண்மே
லைந்துமக வைப்பெறு மருந்ததியை நேர்வாள்
குந்திதனை யன்பொடு குறித்தில ரறத்தோர்
வந்துகலி புக்கதொரு [2]வாசியதி னென்பார்.

---

* இறைவன் விதித்தப்படி நடக்குமே அல்லாது ஆசைப்பட்டபடி எதுவும் நடவாது என்பதாம்.
* பாசக்கட்டு உபரி-உபரியானது மிகுதி, அதிகம் என்னும் பொருளது. பாசக்கட்டு பரிகொண்டு எனின் பற்று மிகுதியாகக் கொண்டு என்பது பொருள். (விளக்கம் மு சண்முகம் பிள்ளை) பாசக்கட்டு-பாசக்கயறு போல் கட்டுகிற அன்பு, பரிகொண்டு-பகுத்தறிவோடு செயற்பட்டு.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

1.தென்கொலினி, சு.3; வென்கொலென, சு.4* 2.வாசியதி, சு.3; வாசையதி, சு.4*

பொ: புவிமேல் பிள்ளைகளைப் பெறுவதால் இனி என்ன பயன்? ஐந்து மைந்தர்களைப் பெற்ற அருந்ததியை ஒத்த குந்தியை அன்போடு நினைக்க வில்லை நீதிமான்கள். கலிகாலம் வந்து புகுந்ததால் வரும் தன்மை என்பார்.

அ.வி: வாசி-தன்மை.

(71 அ)

பரீட்சித்திடம் அன்பு காட்ட வேண்டுதல்

228. பின்புவரு மன்னகரி யுள்ளபெயர் தன்னை
யன்பினபி மன்புதல்வ னேயரச னானா
னென்பரிவு போலவனை யாருநினை வுற்றே
துன்பமற நீடிய சுகத்திலிரு மென்றே.

பொ: தருமன், தன்னைப் பின்தொடர்ந்து வரும் அந்நகரிலுள்ள மக்களைப் (பார்த்து), "என்னிடம் அன்பு காட்டியது போல் அபிமன்னனின் மைந்தனாகிய உம் மன்னனாம் பரீட்சித்திடமும் அன்பு கொண்டு துன்பமின்றி நீடிய நலத்துடன் வாழ்வீர்", என்று(குளகம்). 'தன்னை' என்பது தம்மை என்று இருப்பின் சிறக்கும். (72)

ஐவரும் துரோபதியுடன் கங்கையை அடைதல்

229. [1]மல்கிவிழி [2]நீர்பெருக வந்தவரை யெல்லா
நல்கிவிடை நில்லுமென நண்ணிமுன் நடந்தான்
வெல்குமரர் நால்வரொடு மெல்லியலொ டுந்தான்
[2]செல்கதியி னாடியுயர் கங்கைநதி சேர்ந்தான்.

1.மல்கிவிழி,சு.1+3+4;மல்குவிழி,சு.2* 2.நீர்பெருக,சு.1+3+4; நீர் சொரிய, சு.2* 2.செல்கதியி, சு.1+2+4; செல்கதியை, சு.3*

பொ: கண்ணில் நீர் பெருகிக் கண்ணீர் சிந்த வந்த தன் நாட்டு மக்களை எல்லாம் விடை கொடுத்து, இங்கு நில்லும் என்று சொல்லி, விரும்பி முன்பாக நடந்தான் வெற்றி பொருந்திய தம்பியர் நால்வரோடும், துரோபதி யொடும்; தான் செல்லவேண்டிய வழியை நாடி உயர்ந்த கங்கையாற்றை அடைந்தான்.

ஒப்: அடி 3, 4."சீரை சுற்றித் திருமகள் பின்செல, மூரிவிற்கை இளையவன் முன்செல, காரை ஒத்தவன் போம்படி கண்ட அவ்வூரை உற்றது உணர்த்தவும் ஒண்ணுமோ" கம்.அ.ந.நீங்.230. (73)

நாட்டுமக்கள் தருமனைத் தொடர்தல்

230. அந்தவிறல் நால்வரு[1]மவ்வத்தின புரத்தோர்
[2]சிந்தியிரு [3]கண்புனல்கள் [4]சீரியர்க ளெல்லாந்
தந்தமி [5]லணைந்திலர் [6]தமைக்களைமி னென்றே
முந்துதரு மற்குமிக முன்புற நடந்தார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

1.மோரத்தின,சு.1; மவ்வத்தின, சு.2+3+4* 2.சிந்தியிடு, சு.1+3+4; சிந்தியிரு, சு.2*3. கண் புனல்கள், சு.1+3+4; கண்புனல்கொள், சு.2*4. சீறினர்க,சு.1+3+4; சீரியர்க, சு.2* 5.லணைந்திலர், சு.1; லணைந்திடா, சு.2+3+4* 6.தமைக்களைமி, சு.1; தமக்கழிமி, சு.2; தனைக் களைமி, சு.3+4*

பொ: அந்த அத்தினபுர மக்கள் இரு கண்களிலிருந்தும் நீர் சொரிய தங்கள் வீடுகளை அடையவில்லை; கண்ணீர் சிந்தி அழுதவாறு அந்த வலிமையுடைய தம்பியர் நால்வருடன் தருமனுக்கு முன்பாக நடந்தனர். (தருமன் அவர்களிடம்) அவர்களை எம் பின் தொடரவிடாமல் நீக்குங்கள் என்று (குளகம்).

அ.வி: விறல்- வெற்றி, தந்தமில் - தம்தம்+இல் -தங்கள் வீடு, களைமின்-நீக்குங்கள்.

ஒப்: அடி 3, 4. "வீரன் முன்வனம் மேவுதும் யாம் எனா, போரென்று ஒல்லொலி கைம்மிகப் போயினார்". கம்.அ.ந.நீங்.231. (74)

துரோபதி விடைபெறுதல்

231. மெய்யுருகி யந்நகரின் மெல்லியர்க ளுள்ளார்
துய்யவள் துரோபதி துணைக்கழலின் வீழ்ந்தே
நையுமவ ரைத்தழுவி நல்லுரை பகர்ந்தே
பொய்யில்தரு மன்செய்தவ மென்னவயல் போனாள்.

பொ: அத்தினபுரநகரத்தின் உள்ள மகளிர் உள்ளம் உருகித், தூய்மையானவளாகிய துரோபதியின் இணையடிகளில் வீழ்ந்து வணங்க, மனம் வருந்தும் அவர்களை அணைத்து, அவர்களுக்கு நல்வார்த்தை கூறிப் பொய் பேசாத தருமன் செய்த தவம்போல் மக்களை விட்டு நீங்கிச் சென்றாள்.

அ.வி: அயல் போனாள் - (மக்களைவிட்டு) நீங்கிச் சென்றாள். இறுதியடி உவமை.

(75)

நகர் நீங்குதல்

232. மெய்வினையி லுள்ளவை விலக்கியருள் கங்கைத்
தெய்வநதி யாகிய செழும்புனலி லாடி
மைவிழி மடந்தையொடு வாழ்தருமன் முன்னா
வைவரு நடந்தன ரரும்பதி* துறந்தே.

பொ: உடம்பின் வினைகளைத் தீர்க்கும் நீர்வளம் மிக்க தெய்வ ஆறாகிய கங்கையில் நீராடி, மையுண்ட கண்களையுடைய துரோபதியுடன் வாழும் தருமனின் முன்னால் துரோபதியும் தம்பியர் நால்வருமாக ஐவரும் அருமையான அத்தினபுரத்தை விட்டு அகன்றனர்.

ஒப்: அடி 2. "கங்கையென்னும் கடவுட் டிருநதி" கம்.அ.கங்கை.10. "அணங்கொடு தம்பிமாரும் அரசனுந் தொடர்ந்து...சுணங்கனும்" அரங். மக.16. "மன்னவரைவரும் மாதும்...சாரமேயனும்

---

*குறிப்பு: வியாசரும், நல்லாப்பிள்ளையும், அரங்கநாதக் கவிராயரும் பாண்டவருடன் ஒரு நாயும் சென்றதாகக் கூறியுள்ளனர். பாரத மாவிந்தம் தம்பியரை இழந்த பின் தருமனிடம் ஒரு நாய் வருவதாகக் கூறுகிறது (பா.மா.664).

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இத்தலத்தினை வலம்புரி தகையா...தென்பால் நெடிது தூரம் போந்தொரு...மேற்கடலை வந்தடுத் தார்" நல். மகா.44, 45. (76)

மரவுரி புனைதல்

233. நற்றிய மரத்துரியி [1]னல்லுடை [2]புனைந்து
சுற்றிய சடைச்சிகை முடித்துறும லோடுஞ்
[3]செற்றிய சினத்தினியல் தீமையை யொழிந்தே
[4]பற்றுறு தவத்தினர்கள் பான்மையென [5]லாயே.

1.னல்லுடையு, சு.1+3+4; நல்லுடை, சு.2* 2.நண்ணி, சு.1+3+4; புனைந்து, சு.2* 3.செற்றிய, சு.1; செற்றுள, சு.2+3+4* 4. பற்றுறு, சு.1+2+3+4* 5.லாயே, சு.1+2+4; லாமே, சு.3*

பொ: (பாண்டவர்கள்) விரும்பிய மரவுரியாலான நல்ல உடையை உடுத்துத், தலைமயிரைச் சடையாகச் சுற்றி முடித்து, உறுமுதலோடும் அழித்த கோபத்தால் வரும் தீமையை விட்டு நீங்கி, உலகப் பற்றற்ற தவசிகள் போன்ற இயல்புடையவராய் ஆகி.

அ.வி: நற்றிய-நச்சிய, மரத்துரி-மரவுரி, உறுமல்-உறுமுதல், செற்றிய-அழித்த.

ஒப்: அடி1."சுற்றிய சீரையன் தொடரும் தம்பியன்" கம்.அ.ந.நீங். 166. (77)

தாய் தலையில் சுமை ஏற்றி மனைவியை கைப்பிடித்தல்

234. போயவழி தன்னிலொரு புல்லிய கலிச்சீர்
தாயர்தலை யிற்சுமையெ டுத்தியிசை தைய(ல்)
லாயகை பிடித்தொருவ* னுற்றிட வறத்தோன்
[1]நேயசக தேவன்♥ முக நோக்கிநகை [2]செய்தான்.

1. நேரிய சாதேவன், சு.1+4; நேயசக தேவன், சு.2+3* 2. யெய்தா, சு.1; யெய்தார், சு.2; செய்தான், சு.3+4*

பொ: அவர்கள் போன வழியினில் ஒப்பற்ற கீழ்மை பண்புடைய கலிகாலத்தின் சிறப்பால், தன் தாயின் தலையில் சுமையை ஏற்றிப், பொருந்திய மனைவியானவளின் கையைப் பிடித்து ஒருவன் வருவதைக் கண்ட தருமன் அன்பு கொண்ட சகாதேவன் முகம் நோக்கி நகைத்தான்.

அ.வி: கலிச்சீர்-கலிகாலத்தின் சிறப்பு, தையல்-மனைவி.

ஒப்: அடி 3. "தன்னுடைய மாதாவின் தலையிற் சுமையேற்றி, மன்னன் மனைவிதனை வார் புயத்தின் மேலேற்றி" வைகு.ப.85. (78)

235. இக்[1]கொடுமை வன்கலியி யற்றுநெறி யல்லா
லொக்குமென விங்குறைவ தற்குறுதி யுண்டோ
மக்கள்பெறு தாயர்தமை வன்சுமை [2]யெடுக்கத்
தக்கவிது காணுமிது சாலும்வினை யென்றே.

* பிடித்தொருவன் என்பது பற்றியொருவன் என்றிருந்தால் ஓசை சிறக்கும்.
♥ சகாதேவன் முக்காலமும் அறிய வல்லவன், எனவே அவனை நோக்கிச் சிரித்ததாக ஆசிரியர் கூறுகிறார் எனக் கொள்ளலாம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

1. கொடுமை, சு.1+3; கொடிமை, சு.2+4* 2.யெடுத்த, சு.1+3+4; யெடுக்க, சு.2*

பொ: இந்தக் கொடிய செயல் வலிய கலிகாலம் செய்யும் நெறியேயன்றி ஏற்றுக் கொள்ளக்கூடியது என்று இங்கு இருப்பதற்கு உறுதிப்பாடு சொல்லப்போமோ? மக்கள் தம்மைப் பெற்ற அன்னையரைப் பெரிய சுமையைத் தூக்கச் செய்வது பொருந்திய செயல் என்று கொள்ளும் இதனைக் காண்பது கலிகாலத்தின் இயல்புக்கு எடுத்துக்காட்டான செயல் என்று (குளகம்).

(79)

வடதிசை நோக்கி நடத்தல்

236. [1]ஐயன்மிக [2]நொந்துநனி [3]யாய்பல காலம்
மெய்யுற வருந்திட வெயிற்புற நடந்தே
யுய்யுமக விந்தமெனு* முத்தர திசைக்கண்
மையல்தவி ரப்பெரு வனத்திடைப் புகுந்தார்.

1. ஐயன்மிக,சு.1+3+4; ஐயமிக, சு.2* 2. நொந்துநனி, சு.1; நொந்து வனி, சு.2; நொந்துதனி, சு.3+4* 3. யாய்பல, சு.1+3+4; யாய் மிது,சு.2* 4. வெயிற்புற, சு.1+2; வெயர்ப்புற, சு.3+4*

பொ: தருமன் மனம் மிக வருந்திப் பல நாட்கள் உடல் வருந்த கோட்டை மதில் புறத்தே நடந்து, ஈடேறும் மகவிந்தமெனும் வடதிசையின்கண் மயக்கம் தீரப் பெரிய காட்டினுள் நுழைந்தனர்.

ஒப்: "பூருவ திசையில் வேலைப் பொருநிரை" ...தென்பா லெய்தி மேற் றிசை தன்னைச் சார்ந்தார்"... "பூவலஞ் செய்யவே தன்புந்தியில் நினைந்து வேந்தன் வடதிசையிற் சார்ந்தான்" அரங்.மகா.20, 21, 22.

(80)

அத்தினபுரிப் பிராமணர் வழக்கு முற்றும்

அத்தினபுரிப் பிராமணர் வழக்கு முற்றும், சு.1; அத்தினாபுரிச் சருக்க முற்றும் சு. 2;அத்தினாபுரிச் சருக்க முற்றிற்று, சு. 3; அத்தினபுரியிற் பிராமணர் வழக்குச் சருக்க முற்றும், சு.4*

குறிப்பு: சுவடி 1, இல், 80 பாடல்கள்; சுவடி 2 இல் 80 பாடல்கள். சுவடி 3 இல் 81 பாடல்கள். இச்சுவடியில் அத்தினாபுரிச் சருக்கத்தின் இறுதியில் 'அக ஆ விருத்தம் உாசுய" என்று எழுதப்பெற்றுள்ளது. இச்சுவடி தவிர ஏனையவற்றில் பாடலின் இயல் எண் மட்டுமே காணப்படுகிறது. தொகை எண் இல்லை. சுவடி 4 இல் 81 பாடல்கள்.

****

* குறிப்பு: பாண்டவர்கள் முதலில் கிழக்கு நோக்கி நடந்து தென்திசை அடைந்து, பின்னர் மேற்குத் திசை சென்று வடதிசை நோக்கிப் (பூமியை வலம் வந்தது போல்) பயணம் செய்ததாக வியாச பாரதமும், நல்லாப்பிள்ளை பாரதமும், அரங்கநாதக் கவிராயர் பாரதமும் குறிப்பிட, மாவிந்த நூல்கள் வடதிசை நோக்கிச் சென்றதாக மட்டுமே உரைக்கின்றன. மேலும் பார்க்க: வைகு.ப.85.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

5. துரோபதி மோக்கிஷம் பெற்ற சருக்கம்Ψ (237-315)

(இச்சருக்கம், பாண்டவர்கள் துரோபதியுடன் காட்டு வழியே துறக்கப்பயணம் மேற்கொண்டபோது, வழியில் சந்தித்த பலர் அவர்களுக்குத் தம் நாட்டைக் கொடுப்பதாகவும், போகவாழ்வு அளிப்பதாகவும் கூறி அழைத்தமை, பாம்பு, மலை, குதிரைமுகப்பெண், ஆறு முதலியன பாண்டவர்களால் சாப நீக்கம் பெற்றமை, துரோபதியின் இறப்பு ஆகியவற்றை விளக்குகிறது).

பாண்டவர்கள் காடு செல்லுதல்

எண்சீர் விருத்தம்

237. பூவினிதழ் பஞ்சணை [1]படுத்தே மென்மையொடு
போதுநடை கொண் டுள பதத்தோ ராயவவர்
[2]தாவுகன வெம்புகை [3]யடுத்தே [4]பாலைநெறி
தானு[5]மவித மங்கென நடப்போ ராயினர்கள்
[6]மேவவினை [7]வந்த துயரத்தே [8]யாயிடினும்
வீறுநல முந்திய [9]சுகத்தை யாயிடினும்
[10]யாவுமன மிங்கென [11]வகுத்தான் வேதனெனும்
ஏதுவிதெ னும்படி வனத்[12]தே யேகினர்கள்.

1.படுத்தே, சு.1+3+4; தொடுத்த, சு.2* 2. ஆவியென, சு.1+3; தாவுகண, சு.2; ராவுகென, சு.4* 3.படுத்தே சு.1+3+4; யடுத்தே, சு.2* 4. பாலைநெறி, சு.1+2; மாலைநெறி, சு.3+4* 5. மவிதமங், சு.1; மிகவங், சு.2; மிதமங், சு.3; மிதாமங், சு.4* 6.மேவவினை, சு.1+3; மேவுவினை, சு.2; வேவவினை, சு.4* 7. வந்துறு, சு.1+3+4; வந்த, சு.2* 8. யாய்விடினும், சு.1; யாயிடினும், சு.2+3+4* 9. சுரத்தே , சு.1+3+4; சுகத்தே, சு.2* 10. யாவுமனமிங், சு.1+4; யாவுமளவிங், சு.2+3 *11.வகுத்தான், சு.1;விதித் தான்,சு.2+3+4*12. தேயேகினர்கள், சு1+3+4; தேகினர்கள், சு.2*

பொ: பூவின் இதழ்களைப் பரப்பிய பஞ்சுமெத்தையில் படுத்தே, சிறப்போடு மலர் தூவப்பட்ட மென்மையான நடைபாதையில் அடிவைத்துச் செல்வோராகிய பாண்டவர்கள், நெருப்பிலிருந்து வெளிப்படும் புகை (தாவி வரும் வெம்மையான புகைக் கூட்டம்) தோன்றும் பாலைநில வழியிலும், பஞ்சணையில் நடப்பதுபோல் நடந்து செல்வாராயினர். வினையினால் பொருந்தி வந்தடைந்த துன்பத்திலாகிலும் வேறு ஒன்றுக்கும் இல்லாத அழகு பொருந்திய நல்வினையால் முன்னால் ஏற்பட்ட இன்பத்திலாகிலும் எவற்றிலும் மனம் இப்படி இருக்கும் எனப் பிரம்மன் விதித்தான் என்பதே இதற்குக் காரணம் எனும் படிக்காட்டில் சென்றனர்.

அ.வி: போது நடை-மலர் தூவப்பட்ட பாதை, வீறு-வேறு ஒன்றிற்கும் இல்லாத அழகு, வேதன்-பிரம்மன், இரண்டாம் அடி உவமை. 'சுகத்தை' என்பது சுகத்தே என்றிருப்பின் சிறக்கும்.

ஒப்: அடி 3. வீறு-"வீறுயர் கலசநன்னீர் சொரிந்தனன்" சீவக.489. (1)

Ψ துரோபதி மோக்கிஷம் பெற்ற சருக்கம், சு.1; துரோபதி மோக்கிஷச் சருக்கம், சு.2; துரௌபதி மோ...ம் பெற்ற சருக்கம், சு.3; துரோபதி மோக்கிஷச் சருக்கம், சு.4*

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

238. கானகம டைந்துள பதத்[1]தோர் நீடுபல
காதமு [2] நடந்துற யிளைத்தே [3]மாநதிகள்
தானினிய தண்டக வனத்தே[Ψ] [4]யாகியுள
[5]தாழ்சுர [6]மகன்றுள [7]தடப் பா ரீசமென
[8]லானதல [9]மங்குள தவத்தா லாமுனிவ
ராசிரம முங்கருதி யப்பா [10] லேகவியல்
[11]பானுவும் [12]விழுங்குட திசைக்கே யாகியிருள்
பாய்பொழுதி னங்கொரு [13] பதிக்கார் [14] பாறையதின்.

1.தோன்நீடு, சு.1+2+3+4; தோர்நீடு,சு. * 2. நடந்துழி, சு.1; நடந்துற, சு.2+4 (சு.3 சி) * 3. மானிதிகள், சு.1+4; மாநதிகள், சு.2 (சு.3 சி)* 4.யாகி யுள, சு1+3+4; யேகியுள, சு.2* 5.தாழ்சுர, சு.1+2+3; தானசுரம், சு.4* 6.மகன்றுள, சு.1+3+4; மகன்றுயர், சு.2* 7. தடப்பாய் நீச, சு.1; தடப்பா ரீச, சு.2+3+4* 8. லானதம, சு.1; திரன்தல, சு.2; லானதல, சு.3; லாயதம, சு.4* 9. ரங்குள, சு.1; மங்குள, சு.2+3+4*10.லேகவியல், சு.1+2; லேகவுயர், சு.4(சு.3சி.) * 11.பானுவும், சு.1+2; பானும், சு.4(சு.3சி.) * 12. விழுங்குட, சு.1; விழுங்கிட, சு.2+4(சு.3சி.) *13.பதிக்கார், சு.1; பணிக்கார், சு.2+4; பழிக்கார், சு.3* 14. பாறையதின்;சு.1+3; பாசறையின், சு.2*

பொ: நடந்தே காட்டை அடைந்துள பாண்டவர்கள் பலகாத தூரம் நடந்ததனால் மிகக் களைப்படைந்தே, பெரிய ஆறுகளையும், இனிமையாக அமைந்த தண்டகவனத்தையும் கடந்து, அங்கிருந்த வளைந்த பாலையையும் கடந்து, அருகிலுள்ள சிற்றூர்களில் இருந்த தவமுனிவரின் தவக்குடில்களுக்குச் சென்று விருப்புற்று நினைந்தும், அதனைக் கடந்து செல்லச், சூரியன் மேற்றிசையை அடைய, இருள் பரவியபோது ஓர் ஊருக்கு வழியாக அமைந்த பாறையில், (குளகம்).

அ.வி: காதம்-பத்துமைல் தூரம், சுரம்-பாலைவனம், பாரிசம்-பக்கம், பாரிசம் என்பது பாரீசம் என ஓசை நிறைக்க வந்துள்ளது, இருள்பாய்-இருள் பரவும். (2)

தருமனின் கூற்று

239. சூழுமிரு ளங்கியு முருக்கா ணாதபடி
சூழவழி கண்டில ரிளைத்தே பாறைமிசை
யாழின்மொழி மங்கையு மறத்தோன் நால்வரிளை
யோர்களு மிருந்தனர் தனித்தோ ராகியவ
ரூழினைம னந்தனில் [1]நினைத்தாரோ [2] வலது
மூரினை [3] நினைந்தா [4]சலித்தா ரோவெனமுன்
வாழிதரு மன்றுணை வரைத்தா னீண்மனதில்
வாய்மையை யறிந்திட வுரைத்தா [5]னோர்வசனம்.

[Ψ] தண்டகவனம் விந்தியமலைக்கும் சைவலத்திற்கும் இடையில் உள்ளது. (அபி.சிந். பக்.772).

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

1.நினைத்தாரோ, சு.1+3+4; நினைந்தாரோ, சு.2* 2. ரலது, சு.1+3; வலதம், சு.2; வலது, சு.4* 3. நினைந்தா, சு.1; நினைந்தனர், சு.2+4(சு.3 சி) * 4. சலித்தாரோ, சு.1+2+4; சளித்தாரோ, சு.4(சு.3 சி) * 5.னானார்வசனம், சு.1; னோர்வசனம், சு.2+3+4*

பொ: நெருப்பும் எவ்வுருவும் காணமுடியாதபடி எல்லா இடத்தும் இருள் சூழ்கையினாலே, செல்லும் வழி காண இயலாதவராய் மனம் சலித்து யாழிசை போன்ற மொழி பேசும் துரோபதியும், தருமனும், தம்பியர் நால்வரும் (அப்பாறைமேல்) இருந்தனர். தனித்திருந்தவராகிய அவர் தம் ஊழ்வினையை உள்ளத்தில் நினைத்தாரோ அல்லது பழைய ஊராகிய அத்தினபுரத்தை நினைத்தாரோ என்று ஐயுற்ற தருமன் தம்பியர் மனத்தின் உண்மை நிலையறிய ஒரு பேச்சுரைத்தான்.

அ.வி: அங்கி-நெருப்பு, ஆசலித்தல்-துன்பமடைதல், வாய்மை-உண்மையான மனநிலை,

ஒப்: அடி 1. "கொள்ளிக்கு விள்ளாத கூரிருளில் தானலைந்து வைகு.ப.87. அங்கியும் உருக்காணாதபடி "-கொள்ளிக்கும் பற்றாத கூர் இருள்" நள.111. அடி 3. ஆசலித்தாரோ- "ஆசலம் புரி ஐம்பொறி" கம்.பா.ஆற்.13. அடி 4. "அவரவர் மனத்திலுற்ற மெய்தனை யறிவோ மென்று விரும்பினார் தன்மராயர்" தஞ்.206. அடி 1.

(3)

240. காடதுபு குந்தது கலிக்கே யானதொரு
காலமி தெனுங்கன கருத்தோ மாகியுள
பாடகமெ னும்பழ வினைச்சூ ழாயவது
பாதலமு றைந்திடினு மொத்தே [1]மேவியுறு
நீடுமதி யின்குரு குலத்தோர் [2] பாரினிசை
நேயமற விந்தமது புக்கா ரானவிங்ஙன்
நாடுவசம் வந்தில [3]னெனப்பா ராள்நிருபர்
[4] நாடிநசை கொண்டிடுவ ரத்தாலே நவில்வன்.

1.மேவியது, சு.1; மேவியுறு, சு.2+3+4* 2.பாரினிசை, சு.1; பாரிலிசை, சு.2; பானிசை, சு.4(சு.3 சி) *3. னெனப்பா, சு.1; தெனப்பா, சு.2+4(சு.3சி) *4. நாடிநசை, சு.1; நாடிநகை, சு.2+3+4*

பொ: "நாம் காட்டிற்கு வந்தது கலிக்கேயான காலம் இது என்னும் பெரிய கருத்துடையேமாகிக் காலணி என்னும் பழவினை பாதாள உலகம் புகுந்தாலும் நம்மை வந்து சேரும். நீண்ட சந்திரன் வழிவந்த குலத்தவர் உலகில் பொருந்தும் பற்று நீங்கக் காட்டை நோக்கிச் சென்றுவிட்டனர், இவ்வாறு வரும் (அவர்கள்) நாட்டுப் பக்கம் வாரார் என உலகை ஆளும் வேற்று மன்னர்கள் நாட்டிடத்தில் விருப்பம் கொள்வார்கள்", என்பதால் மேலே கூறுவானாயினான்.

அ.வி: பாடகம்-காலணி, மதி-சந்திரகுலம், அத்தால்-அதன்மேலே, இரண்டாவதடி உவமை.

ஒப்: அடி 2. " பாடகம் போலச் சூழ்ந்த பழவினை" சீவக.510.

(4)

தருமன் வீமனை நாட்டிற்குச் செல் எனல்

241. வீம[1]வின வின்குரு குலத்தே யாகியுள
மேன்மைதவ றுந்தனி நகர்க்கே யேகியிசை

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நாமவபி மன்புதல்வ னைத்தா னீகொடு முன்
 னாடது [2] புரந்திடி னமக்கே நாடுபுக
ழாமெனும ருந்தவரி டத்தே யாகியிசை
 யாறில்பல [3]நண்புளம தித்தே யாடிவினை
[4]போமெனும தங்கொடரி பொற்பார் பாதமிசை
 போகநினை வன்றருகு றப்போ [5]வாயெனலும்.

1.வினவின், சு.1+3+4; னவில்வன், சு.2* 2. புரந்திடி னமக்கோர் புகழா, சு.1; புரந்திடினமக்கே நாடுபுகழா, சு.2; புரந்திடு நமக்கே நாடு புகழா +3; புரந்திடு நமக்கோர் நாடுபுகழா, சு.4* 4. நண்புள மதித்தே, சு.1+4; னன்புள மதிதந்தே, சு.2(சு.3சி) * 4.போமனு மதங்கொடிரி, சு.1; போமனுமதங் கொடரி, சு.2; போமது மதங்கொடரி, சு.4(சு.3சி) *4.வாரெனலும், சு.1; வாயெனலும், சு.2+3+4*

பொ: வீமனே! கேட்கப்போனால் குருகுலத்துக்கு இதுகாறும் வந்துள்ள பெருமிதம் கெட்டுவிடும்; ஒப்பற்ற அத்தினபுரத்துக்கு நீ திரும்பிச் சென்று புகழ்மிக்க அபிமன் மைந்தனாகிய பரீட்சித்தைப் பாதுகாத்துக் கொண்டு முன்பு நாம் ஆண்ட நாட்டினைப் பாதுகாப்பாயானால், நமக்கு ஒப்பற்ற புகழ் கிட்டும். தவமிக்காரிடம் மரியாதை செலுத்திப் புகழ் தரும் வழியிலே பலரிடமும் நட்பினை உள்ளத்துக் கொண்டு ஆள்வாயாக! (ஆறுகளில்) நீராடி வினைப் பயன் நீங்கும் என்ற கோட்பாட்டைக் கொண்டு திருமாலுடைய அழகு பொருந்திய திருவடிக் கண் செல்ல யான் நினைக்கிறேன். நீ நாடு காக்க அதனருகே செல்வாயாக, (இது முதல் 244 வரை குளகம்).

அ.வி: அபிமன் புதல்வன் - பரீட்சித்து, மதம்-உறுதி, கொடரி-கொடு+அரி, நினைவன் றிருகுற* -நினைவு+அன்றி+திருகுற, திருகுற – அருகே.

(5)

வீமனின் மறுமொழி

242. ஏதடிய னிங்குனத ருட்கே றாதவகை
 [1] யாதது புரிந்தன னெனைத்தா னீயுனது
பாதமல ரின்பணிவி டைக்கே [2]லாதுநிகழ்
 பாரது [3] புரந்திடு வென்பது வனத்தென்
மாதவனு றைந்துள விடத்தே நீர்[4]பெரு
 வாழ்வுறவு [5] மந்தநர கத்தே யானுறவு
மோதியநல் [6]லன்பென திடத்தே யாகிலினி
 யோர்நொடியி லிங்குயிர் துறப்பேனா னெனலும்.

1.யாதது, சு.1+4; யாயது,சு.2 (சு.3சி) * 2.லெதுநிகழ், சு.1; லாதுநிகழ், சு.2+3+4* 3.புரந்திடு வென்பது வனத்தென், சு.1; புரிந்திடுமெனப் பெறா யினதென், சு.2, புரந்திடுவெனப் பெருவனத்தென், சு.3; புரிந்திடுவெனப் பெருவனத்தென், சு.4* 4.நீர்பெருகு வாழ்வுறவு, சு.1;

---

* விளக்கம் அளித்தவர் எஸ்.கே. இராமராஜன்.

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

நீர்பெருகு வாழ்வுற, சு.2; நீர்பெரு வாழ்வுறவு, சு.4(சு.3 சி) * 5. மந்த நர கத்தே, சு.1; மந்த நகரத்தே, சு.2+4(சு 3 சி) * 6.லன்பெனு மிடத்தே, சு.1+3+4; லன்பென தித்தே, சு.2*

பொ: "உன் அடியவனாகிய யான் உன் அன்புக்குப் பொருந்தாவகையில் என்ன குற்றம் புரிந்தேன்? என்னை நீ உனது அடிகளுக்குப் பணிவிடைக்குப் பொருந்தாது நாட்டைக் காப்பாயாக என்று காட்டில் வைத்துக் கூறுவதன் காரணம் யாது? திருமால் இருக்கும் வைகுண்டத்தில் நீர் மேம்பட்ட நல்வாழ்வு பெறவும், பூமியை ஆளும் அந்த நரகத்தில் நான் உழலவும் சொன்ன, உமக்கு என்னிடம் நல்லன்பு இருக்குமாயின் ஒரு நொடியில் இங்கேயே என் உயிரை நான் துறப்பேன்" என்று கூறலும்.

அ.வி: அருட்கு ஏறாத-அன்புக்குப் பொருந்தாத, யாயது-என்ன குற்றம், அதுவென் - (அன்னது வென்) அதனால் என்ன பயன், இடம் – வைகுண்டம், நரகம் - பூமியை ஆள்வது.

ஒப்: அடி 4. "சாவதே அல்லால் நான் நின் தன்னை விட்டகலே னென் றான்" தஞ்.208

(6)

அர்ச்சுனன், நகுலன், சகாதேவன் - மறுமொழி

243. சீருளத னஞ்செயனை யொத்தே யாவியொடு
சேரிருவர் தம்பியரை நட்பாலே தருமன்
வாருமிங்க னென்சொலை மறுத்[1]தா ராகாமலியன்
மாநகரி சென்றுலகி னைத்தா னாள்திரென
நேருமற மும்புகழு முற்றே யாதியுள
[2] நீணிதிய மும்புவியு [3] மத்தா! நீமருவு
மாரணிய மெங்களுயி ருக்கே [4]யாசையுள
தாவதுநின் னம்பொனின் மலர்த்தா ளாமெனலும்.

1.தாராகமலியன்,சு.1; தாகாமலியல்,சு.2+4;தாகாமலியன், சு.3* 2. நீணெ திய, சு.1+4; நீணிதிய, சு.2* 2. யுமக்கா னீமருவு, சு.1+3+4; யுமக்கா னீர் மருவு, சு.2; யுமக்கா னீய்மருவு, சு.4* 3.யாசையுள, சு.1+3+4; யாசையல, சு.2+3*

பொ: சிறப்புடைய அர்ச்சுனனைப் போன்றே உயிரோடு ஒத்த தம்பியராகிய நகுல சகாதேவர்களைத் தருமன் நட்போடு அழைத்து, "இங்கே வாருங்கள், என் சொல்லை மறுக்காமல் நன்கு அமைந்துள்ள பெரிய அத்தினபுரம் சென்று உலகத்தை நீங்கள் ஆள்வீராக", என்று கூறத், தலைவனே! "பொருந்திய அறமும் புகழும் கொண்டு பண்டைப் பெருஞ்செல்வமும் நாடும் நீ தங்கிருக்கும் காடேயாகும். எங்களுயிருக்கு உன் பொன்னான மலர்போன்ற திருவடி மீதே விருப்பம் உள்ளது", என்று கூறலும். (அடி 3 'மக்கா' என்பது மத்தா என்று கொள்ளப் பட்டது.)

அ.வி: இருவர்-நகுல சகாதேவர், மறுத்தாராகாமல்-மறுக்காது

ஒப்: அத்தா-"அத்தா உன் அடியேனை" அப்.தே.VI 95-8.

(7)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

துரோபதியின் கூற்று

244.[ψ] பாகுமொழி மங்கையை [1]வரைக்கே லாதுனது
பாதமலர் நொந்துற விளைத்தாய் மீளநக
ரேகியிசை குந்தித னிடத்தே மாதர்பல
ரேசறவி ருந்தவரோ டுற்றே வாழ்தியென
[2]வாகுமுயி ரும்முடலு மொத்தே மேவிவள
ராரணியம் வந்தன னெனப்[3]பே ரறமுனிவர்
தோகையர் நகும்படியு ரைத்தீ ராவியது
[4]சோரினு முனன்புள துணைத்தாள் [5]சூழ்கதியே.

1.வகைச்செலா,சு.1;வரைக்கேலா,சு.2;வகைக்கேலா, சு.4(சு.3சி) * 2. வாகு முயி, சு.1+4; வாரு முயி, சு.2*3. பேராய, சு.1+2+4; பேராய, சு.3* 4.சோரி னுமுனன்,சு.1+4; சோரிமுனன், சு.2*5. சூழ்கதியே, சு.1+4; சேர்கதியே சு. 2 (சு.3சி.)*

பொ: பாகு போன்ற இனிய சொற்களை உடைய துரோபதியை நோக்கி, "உன் மலர்ப் பாதம் மலைப்பகுதியில் நடத்தற்கு இயலாது. உனது மலர் போன்ற அடிகள் நொந்து மிக இளைத்துவிட்டாய். மீண்டும் அத்தினபுரம் சென்று புகழ்மிக்க குந்தியிடமுள்ள மற்ற மகளிரோடு மனக்குறைவில்லாமல் நீயும் உடன் இருந்து பொருந்தி வாழ்வாயாக", என்று கூற, "உம்மை உயிராகவும் நான் உடலாகவும் மனம் ஒத்து விரும்பிப் பெருகி வரும் காட்டிற்கு வந்தேன், எனப் பெரிய அறமுரைக்கும் முனிவருடைய மனைவி மார் எள்ளிச் சிரிக்கும் படிக் கூறினீர். என் உயிர் போவதாயினும் உன் அன்புடைய இணையடிகளே எனக்குப் பற்றுக் கோடாகும்". (அடி 3 இல் வரும் "பேராய" என்பது பேரற என்று கொள்ளப் பெற்றது.)

அ.வி: ஏசு அற - மனக்குறைவின்றி, தோகையர் - மனைவியர், மூன்றாவதடி உவமை.

ஒப்: அடி 3. "உடம்பொ டுயிரிடை யென்ன"குறள்.1122.அடி 4 "வையகத்தார் சொல்லி வம்பால் நகையாரோ" வைகு.ப.89. அடி 3, 4. "... வையகத்தோ, ரேசும் படியோ விருப்பே னிருநிலத்தார்" பெருந்.96. "துறந்து போம் எனக் சொற்றசொல் தேறுமோ" கம்.அ.ந.நீங். 219.

(8)

பாண்டவர்கள் காட்டில் செல்லல்

245. [1]ஆயவவ ரன்புற வுரைத்தே [2]நேர்வளவி
லாதவன ருங்கிரி யிடத்தே யாகவிருள்
மாயவெளி கண்டன னறத்தோன் நால்வரொடும்
மாதொடு மெழுந்தனன் வனத்தே யேகவெதிர்
சீயமொடு வெம்புலி [3]யடர்ந்தே யாளியொடு
சேர்கரடி யுங்கன [4]தடத்தே யாயவவை
போயதரு மன்றிரு முகத்தோர் சோகமது
போகவுள றிந்து[5]புலர் வுற்றே நாடியுற.

[ψ] சுவடி 3 இல் இப்பாடல் முழுமையாக இல்லை.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

1.ஆயழவ,சு.1;ஆயவவ, சு.2+4(சு.3சி.)* 2. நேர்வளவி, சு.1+3+4; நேர்ப ளவி, சு.2* 3.யடர்த்தே, சு.1+2+4; யடர்ந்தே, சு.3*4. தடத்தே யாயவவை, சு.1+4; தடத்தை யாயவகை, சு.2; தடத்தே யாயவை, சு.3* 5.புலர், சு.1+4; பலர், சு.2(சு.3சி.)*

பொ: உடன் வந்த அவர்கள் தம் அன்பு தோன்ற உரைத்து இசைந்த கானக வாழ்க்கையில், சூரியன் உதயகிரியில் தோன்ற, இருள் மறைய, வெளிச்சத்தைக் கண்டவனாகித் தருமன் தம்பியர் நால்வரொடும் துரோபதியோடும் எழுந்து காட்டினுள் செல்ல, (அவர்கள்) எதிரே சிங்கத்துடன் புலி, யாளி, கரடி ஆகியவை பெரிய வழியில் நெருங்கி வந்தன. அவ்விலங்குகள் அவர்களை எதிர்க்காமல் தம் வழியே போயின. தருமன் முகத்தில் மற்றவர் மனநிலையை ஓர்ந்ததனால் துயரம் நீங்க, அவர்கள் உள்ளத்தை அறிந்து, தெளிவுற்று மாவிந்தத்தின் வழியை நாடிச் செல்ல, (குளகம்).

அ.வி: அருங்கிரி - உதயகிரி, சீயம்-சிங்கம், அறிந்து-எல்லோரின் மனநிலையையும் அறிந்து.

(9)

246. மானதிக [1]எங்குளவை புக்கே [2] யாடியுயர்
மாதவர்க ளங்கவர வற்[3]கோர் பூசனைக
ளானவை தெரிந்தொரு மனுச்சே [2] ராதமுழு
வாரணிய கங்கையி னிடத்தே சேரவியல்
[3] வேனில ரசன்றன திருப்பாய நீணிலமும்
[4] வேமெனு மருங்கன சுரத்தே [5] போகியுயர்
கானலை மிகும்புன லெனத்தா னாடியுறு
கானது புகுந்தனர் கருத்தால் வீரியர்கள்.

1.எங்குளவை, சு.1+3+4; எங்குளது, சு.2*2. யாடியுயர், சு.1+2; நாடியுயர், 3+4(சு.3சி.) * 3.கவரவற்கோர், சு.1+3+4; கவரவற்கே, சு.2* 4.ராதமுழு, சு.1+4; ராதபெரி, சு.2* 3.வேனிகலரசன், சு.1+4; வேனிலர சன், சு.2+3*4. வேமென.சு.1; வேமெனு, சு.2+3+4* 5.யேறியுயர், சு.1+3+ 4; போகியுயர், சு.2*

பொ: அங்குள்ள பெரிய ஆறுகளில் மூழ்கி நீராடி, சிறந்த முனிவர்களுக்கு அவரவர்க்கேற்பப் பூசைகளை முறையாக நிகழ்த்தி, மனிதர் ஒருவரும் அணுக இயலாத காட்டில் பாயும் கங்கை யாற்றினிடம் அடைய, வேனிற்காலத்தின் நல்ல அரசனாகிய சூரியனுடைய இருப்பிடமாய் உள்ள நீண்ட உலகமும் வேகும் என்னும்படியான கடத்தற்கரிய பெரிய காட்டினை அடைந்து, உயர்ந்த கானல்நீரை, மிக்க தண்ணீரென நினைந்து (மான் கூட்டங்கள்) அணுகும் காட்டினுள் உள்ளத்தில் வீரம் கொண்ட பாண்டவர்கள் நுழைந்தனர்.

அ.வி: மனு-மனிதன், வேனலரசன்-சூரியன் (வேனிற்காலம்), இருப்பு-இருப்பிடம், வீரியர்-வீரர், 'மாநதி' என்பது எதுகை நோக்கி மானதி என்றாயிற்று. வேனிலரசன் -அஃறிணை உயர்திணையாயிற்று, வேனிலரசன் என்பது 'வேனலரசன்' என இருப்பின் சிறக்கும்.

ஒப்: அடி3. "வேனலங் கிழவன்", "வேனில்வேந்தன்" சிலப்.11-62; 14-124. அடி 4."...கான கத்தில் வழிந்தோடும் நீரதுபோல், காடுதனி லோடுங் கானலை நீரென்று சொல்லி ஓடுவா ரள்ளி யுண்ண" வைகு.ப.90.

(10)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பாலை நிலம்

247.[Ψ] காயுமுதிர் வெங்கதிர் [1] படத்தாழ் சேடர்பதி
காணவழி கண்டுள [2] திறத்தாலே புடவி
[3] யாயது கிழிந்துசரு குற்றே நீவியெதி
ராகிய கரிந்து [4] புகையைத்தான் மாகமிசை
போயமுகி [5] லுறிஞ்சிவ ரிடைச்சூ ரராயகொடி
போமிட நினைந்துருக [6]வெப்ப ரானபல
தீயரசெ னுங்[7]கடவு ளர்க்கே யேயதொரு
சீர்நகரெ னுங்கன திறல்சேர் பாலையதின்.

1.படத்தாழ்,சு.1+3+4; படித்தாழ், சு.2*2.திறத்தாயே, சு.1+3+4; திறத்தாலே, சு.2* 2. யானது, சு.1+4; யாயது, சு.2(சு.3சி.)* 3.புகையத் தான்மாகமிசை, சு.1; புகைக்கா மாகமிசை, சு.2; புகையைக் கானக மாயிசை, சு.4(சு.3 சி * 4. முகிலுரிஞ் சிவரிடைச் சூராய, சு.1; முகிலுஞ் சுவரிடைச் சுராய, சு.2; லுரிஞ்சி வரிடைச் சூராய, சு.3; லுரிஞ்சி வரிடச் சூராய, சு.4* 5. வெப்பாரான, சு.1+4; வொப்பாரான, சு.2(சு.3சி.)* 6. கடவுளற்கே, சு.1+2+4*

பொ: கொளுத்தும் வெயில் முதிர்ந்த வெப்பமான கதிர்கள் படுவதால், கீழே உள்ள நாகலோகத்தைக் காணும் திறத்தால் பிளவானது. இலைகள் சருகாகிச் சூரியனின் ஒளிக்கதிர்கள் படுவதால் அதற்கு எதிர்ப்பட்ட சருகுகள் கரிந்து புகையவும், அக்கதிர்கள் வானத்தில் பரவிச் செல்லும் மேகங்களை உறிஞ்சி வர. இடைநிலத்தில் பரவிய கொடி தான் செல்ல வேண்டிய இடத்தை நினைத்து வருந்த, வெப்பம் மிகுந்தவரான பல தீய அரசரெனும் கடவுளர்க்கே பொருந்திய சிறப்புடைய நகரம் இது என்று சொல்லும்படியான ஆற்றல் பொருந்திய பாலையில் (குளகம்).

அ.வி: காயுமுதிர் வெங்கதிர் - கொளுத்தும் முதிர்ந்த வெப்பமான சூரிய ஒளிக்கதிர், சேடர்பதி - நாகலோகம், புடவி-பூமி, நீவி-தடவி, மாகம்-வானம், சூராய கொடி-அச்சம் தரும் புகைக்கொடி, வெப்பரான-வெப்பம் மிகுந்ததான, இது தற்குறிப் போற்றம்.

ஒப்: அடி 1-4. "பாலைவனங் கொடுமை பார்பிளந்து நீறாகி, ... மூங்கில் வனம் தானெரிந்து நீறாக,... தீயெரிந்து மேகநீர் வாரிடுமாம்" வைகு.ப. 90. "தீய வக்கொடிய கானகத் தரைதிறந்த வாய்தொறும் நுழைந்து தன், சாயை புக்கவழி யாதெனப் பரிதிதன் கரங்கொடு திளைக்குமே" கலிங். பரணி.79.

(11)

[Ψ] சுவடி 3இல் 11 ஆம் பாடல், அடி 4 இன் முதல்சீர் 'தீயர' என்பதுவரை உள்ளது. இதையடுத்து 15 ஆம் பாடல் முதலடி, 'கிரியனந்த' என்பதில் தொடங்குகிறது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

காட்டின் புதுமையைக் காணல்

248. மாதவன ருங்கருணை யிற்சேர் [1]பாலையினு
[2]மாமருத மென்றுற மதிப்பா லேகியவர்
போதலு [3]மதன்கிடையோர் பத்தே ழோசனைசெல்
பூமியிலு ருண்டுள பணிக்கா காரமென*
வோதிய வரும்பணி தனைக்[4]கா ணாவிதொரு
மோகன முறும் [5]புதுமை யைக்காணீர் களென
வோதிய [6]கனங்குழை களித்தே போயினர்க
ளூழியுறு [7]மன்புகழ் [8]தமக்கா மோரறுவர்.

1.பாலையது, சு.1+4* 2.மாமதுர,சு.1; மாமருத, சு.2+4* 3. மதன் கிடை யோர், சு.1+2; மதின் கிடையோர்,சு.4* 4.காணாவிதொரு, சு.1+4; காவி தொரு, சு.2* 5. புதிமை, சு.1+4; புதிமை, சு.2*6.கனங்குள, சு.1+4; கனங் குளைக் சு.2* 7. தன்புனல், சு.1; வன்புகழ். சு.2; மன்புகழ்3+4* 8.தமக்கா மாரறுவர்,சு.1; தனக்கா மோரறுவர், சு.2+4*

பொ: கண்ணனின் அரிய கருணையால் அடைந்த பாலைநிலத்திலும் பெரிய மருதநிலம் என்று கருதிக் கண்ணனிடம் பக்தியோடு அவர்கள் போதலும், அவ்வழியின் இடையில் வழியில் இடையே எழுபது யோசனை தொலைவு சென்ற இடத்தில், பூமியில் உருண்டு கிடக்கின்ற பாம்புக்கு உணவு என்று சொல்லும் படியாகக் கிடந்த தோற்கருவியைப் பார்த்துப் "பாலைவனத்தில் வெம்மையால் வருந்திய பாம்புகட்குத் தோற்கருவிகள் இருப்பிடமாக இருக்கும் சிறப்பைக் காண்பீராக", என்று துரோபதி மகிழ்ந்து கூற, அங்கிருந்தகன்று ஊழியால் உலகில் புகழ் அடையும் அறுவரும் சென்றனர். (2, 3 ஆம் அடிகள் பொருள் தெளிவில்லை)

அ.வி: மதிப்பு-பக்தி, பணி-பாம்பு, ஆகாரம்-உறைவிடம். ஆகரம் என்பது ஓசைநயம் கருதி ஆகாரம் என நீண்டது, மோதிய அரும்பணி-கோல்களினால் மோதப்பட்ட தோற்கருவி; காணா-கண்டு, இதொரு-இது+ஒரு, கனங் குழை-துரோபதி. ஓதிய என்பது ஓதினள் என்றிருந்தால் பொருள் சிறக்கும்.

ஒப்: அடி 1. "பாங்கு வெங்கனல் பங்கய வனங்களாய்ப் பரந்த" கம்.அ. வனம்.39.

(12)

249. மேனிகட னந்திட நடப்போர் நாளுமிக
மேகநிரை கொண்டு[1]முனி விட்டே சாடிமது
சோனைசொரி யுங்கனபொ ருப்பாய் நீடியுள
சூழ்வரைக டந்தனர்க ளப்பா [2]லேகவுயர்
கானகநெ டுங்[3]கடலொ ருக்கால் மாறுதலில்
காயெரிப டர்ந்துள தடத்தே யாகி[4]நிகர்

*மோதிய அரும்பணி: பாலைநில மறவர்கள் மற்றவர்களைத் தாக்கத், தாக்கப்பட்டவர்கள் இட்டுச் சென்ற கருவிகள் இவை. (விளக்கம் எஸ்.கே இரா.).

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மானகர்கள் சென்றிட [5]வழித்தீ மாறியது
மாமியரொ துங்குதல் [6]வகைப்பாம் வாய்மையெனல்.

1.முனிவிட்டே சாடிமது, சு.1+4; முடிவிட்டே சாடுமதி,சு.2* 2.லேயுயர், சு.1;லேகவுயர்,சு.2+4*3. கடலொருக்கால்,சு.1+4; கனலொ ருக்கால், சு.2*4 . நிகர் மானகர்கள் சு.4, நிகர் மானகழ், சு.1; நிகள் மான்கள்,சு.2; * 5.வழித்தீ, சு.1+2; பனித்தீ, சு.4* 6 வகைப்பாம் வாய்மையெனல்,சு.1; மதிப்பாம் வாயதே, சு.2; மதிப்பாய் வாய்மையெனல், சு.4*

பொ: நாள்தோறும் உடல்கள் தளர்ந்திட நடந்து செல்வோர், மேகக் கூட்டங்கொண்டு கோபத்துடனே மோதிப்பெரு மழை பொழியும் உயர்ந்து நீண்டு பெரிதாய்ச் சூழ்ந்திருந்த மலையைக் கடந்தவர்களாய் அப்பால் செல்ல, கடலொடு வேறுபாடு காணமுடியாதபடி நெடுகப் பரந்திருக்கும் காட்டிலே காயும் நெருப்புப் பரவியுள்ள வழியில் அவர்கள் (நடந்தே, தனக்குத்தானே நிகராகிய அஞ்சத்தக்க வழியில்) செல்ல, வழியிலிருந்த தீ மாமியார் மருமகனைக் கண்டால் ஒதுங்கிச் செல்வது போல்[Ψ] அங்கிருந்து நீங்கிச் சென்றது. குறிப்பு: 'மேனிகட னந்திட' என்பது மேனிகடளர்ந்திட என்று இருப்பின் சிறக்கும்.

அ.வி: நிரை - வரிசை, சோனை - மழை, கானக நெடுங்கடல் - காடாகிய நீண்ட கடல், தடம் - வழி. மூன்றாவதடி உருவகம். இறுதியடி உவமை.

ஒப்: அடி 3 "கடல்போல் தோன்றல காடிறந் தோரே" அகநா.1. அடி 4. "அக்கினிதான் வழி விலகி... உத்தம மருமகனுக் கொதுங்குகின்ற மாமியைப் போல் விலகி வழிவிடவும்" வைகு.ப. 91. "தாமரை வதனம் சாய்த்துத் தனுநெடுந் தரையில் ஊன்றி, மாமியர் குழுவின் வந்தான் ஆமென மைந்தன் நிற்க பூமியில் அணங்கு அனார்தம் பொதுவிடைப் புகுந்து" கம்.கி.கிட்.48.

(13)

அர்ச்சுனன் காண்டீபத்தைக் கடலில் இடுதல்

250. பாரத மெனுங்கொடு வினைப்போ ராகியுள
பாதக நெடுஞ்சம ரிடத்தே வாசிபுனை
[1] வீரதர னங்குரு குலத்தோன் வீடுமனும்
வேதமுனி வன்குரு [2] பரத்தா சிரியனு
[3]நேரினின் மலைந்திட வளைத்தே யானசிலை
நீள்வன [4]மடைந்தபின் [5]னமக்காகா திதனை
வாரியிலெ றிந்திடுகெ னத்தா னேர்தருமன்
வாசக [5] முணர்ந்து கடலிட்டான் வாள்விசையன்[e].

1.வீரகரனங், சு.1, வீரதரனங், சு.2; வீரதரனுங், சு.4* 3. பரத்தா சிரியனு, சு.1; பரத்த ராசிரி யனு, சு.2; பரத்தாசா ரியனு, சு. 4* 4. நேரநின் மடிந்திட, சு.1+2; நேரநின் மலைந்திட, சு.2;

Ψ துரோபதி நெருப்பில் பிறந்தாள், அதனால் நெருப்புப் பாண்டவர்க்கு மாமியார். எனவே நெருப்பாகிய மாமியார் மருமகன்களாகிய பாண்டவர்க்கு வழிவிடுகிறது.

e குறிப்பு: அர்ச்சுனனிடம் காண்டீபத்தைக் கடலில் இடும்படி அக்கினிதேவன் கூறியதாக, வியாசபாரதமும், தமிழ் பாரத நூல்களும் குறிப்பிடுகின்றன. மாவிந்த நூல்கள் தருமன் சொன்னதாகக் கூறுகின்றன. மேலும் பார்க்க: அரங்.மகா.20-22, 24; நல்.மகா.உத்திர திசையடைந்த சருக்கம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நேரினின் மடிந்திட, சு.4* 5. மடிந்திட மலைந்தே,சு.1; மடிந்திட வளைத்தே,சு.4* 6.மடைந்த பின மக்காகாத தனை, சு.1;மடைந்திவ னெமக்காகா திதனை, சு.2; மடைந் தபினமக் காகா திதனை, சு.4* 6. மடைந்தபி, சு.1+4; மடைந்திவ, சு.2* 7. னமக் காகா, சு.1+4; னெமக்காகா, சு.2* 8.ததனை, சு.1; திதனை, சு.2+4, சு.4* 9.முனைந்து சு.1+2; முணர்ந்து,சு.4*

பொ: பாரதம் எனும் கொடுஞ் செயல் மிக்க போராகிப் பாதகம் விளைக்கும் நெடிய போரிடத்தே, மற்றவரைவிட வேறுபாடுடைய வீரச்செயல் புரிந்த நம் குருகுலத் தலைவனாம் வீடுமனும், வேதம் வல்ல துரோணனும் பாரதப்போரில் நேருக்கு நேர் நின்று போரிட வளைத்த வில், காட்டுக்குப் புறப்பட்டு வந்த பின், இங்கு நமக்கு ஆகாது. இதனை கடலிலே போட்டிடுக" என்று தனக்குத் தானே நிகரான தருமனின் மொழியை உணர்ந்து விசயன் அவ்வில்லைக் கடலில் வீசினான்.

அ.வி: வாசிபுனை-மற்றவரைக் காட்டிலும் வேறுபாடு மிக்க, வீரதரன்-வீரத்தைத் தரிப்பவன், வேதமுனிவன்-துரோணன், நேர்+இன்+இல் -நேரினில்- நேராக, சிலை-காண்டீபம் எனும் வில், முனைந்து-துணிந்து.

(14)

நாக நதியை அடைதல்

251.Ψ வாகுபிர மன்கிரிமுதற் றானமா முனிவர்

வாழ்கிரி யனந்தமிடை விட்டே யேகியேழு

சாகரம்வ ளைந்தநிக ரொத்தோர் கானின்மிகு

[1] தாகமிக நொந்துறவி ளைத்தே போயவர்கள்

[2] ஏகுமக விந்தமத னுக்கோர்* காவலெனு

மாயியட லங்கிரியைத் துர்க்கா தேவியுறை

நாகநதி [3]யென்பதனை யுற்றான் வாகைபுனை

நால்வரொடு மங்கையொடு நட்பாய் வாழ்தருமன்.

1.காதமிக நொந்துற, சு.1+4; தாகமிக, சு.3* 2. வாகுமிக, சு.1; ளேகுமிக, சு.3+4* 3.யென்ப தனை, சு.1; யென்பதனி லுற், சு.3; யென்ப தனி, சு.3+4*

பொ: அழகிய பிரம்மமலை முதலாத் தான மாமுனிவர்கள் வாழும் இடமான பல மலைகளைக் கடந்து சென்று, ஏழு கடல்களும் வளைந்தாற் போன்ற பெரும் பரப்புடைய ஒரு காட்டில் சென்றபோது தாகம் மிகுதியாக நொந்து களைத்துப்போன பாண்டவர்கள் செல்லும் (மகவிந்தத்திற்கு) விந்தியமலைக்கு ஒரு காவலென்பதாகி இருந்த ஆயி என்னும் பெரிய மலையை ஒட்டித் துர்க்கை வீற்றிருக்கும் நாகநதியை அடைந்தான் ஏனைய நால்வரோடும் துரோபதியோடும் வாழும் தருமன் (இதுமுதல் 254 வரை குளகம்).

Ψ 251 ஆம் பாடல் சுவடி 2 இல் இல்லை.

* குறிப்பு: விந்தியமலைக் காடு கடவுள் பெயரால் ஏற்பட்ட காடு என்று பதிற்றுப்பத்துக் கூறும். "கடவுட் பெயரிய கானம்" (88). துர்க்கையை விந்தை என ஆசிரிய நிகண்டு(16) குறிப்பிடுகிறது. விந்திய வாசினி என்ற சொல்லுக்குத் துர்க்கை என்று தமிழ்ப் பேரகராதி பொருள் கூறுகிறது. விந்தியமலை 108 சக்திப்பீடங்களில் 54-ஆவது விந்தியாசல பீடம், விந்தியா நிவாசநீ பீடம் என்றும் கூறப்படும் என்று அபிதான சிந்தாமணி குறிப்பிட்டுள்ளது. விந்தியமலை விந்தா கடிகை என்னும் தேவதையால் காக்கப்பட்ட மலை என்று கூறப்பட்டுள்ளதை மணிமேகலையில் காணலாம், 'விந்தங் காக்கும் விந்தா கடிகை' (20.120).

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அ.வி: தான(ம்)-இடம், அனந்தம்-பல, சாகரம்-கடல், நிகர்-ஒப்புமை, விந்தம்-விந்தியமலை. மாயியடலங்கிரி-மாஇயல்+அடலங்கிரி,

ஒப்: அடி 3. விந்தம்-"விந்த மால் வரை" மணி. 20.117. "விந்தவன மென மேவுவம்" தக்.பர.62.

(15)

விநாயகர் தருமனை நாடாள வேண்டுதல்

252. தூயவிறன் மங்கையடி தப்பாதே தொழுது
தூரவழி [1]கொண்டவர்கள் [2]நடப்பாய் மேவியுள
தாயவழி கண்டிலர் திகைத்தா ராக
வசரீரி♥யட லைங்கரக ளிற்றா லாகியுள
மாயமிதெ னுஞ்சொலை மதித்தே [3]நாடியவன்
வார்கழல் பணிந்து புகழ்ச்சீ ரானைமுக
னேயமகிழ் வின்கருணை யுற்றே வாழ்தரும
நீயிவணி ருந்துபுவியைத் தானாள்♥ கெனலும்.

1. கொண்டிட சு.1+3+4; கொண்டவர்கள், சு.2* 2. நடப்பாய், சு.1+3+4; நட்பாய் சு.2*3. நாடி யிவன், சு.1; நாடி யவன், சு.2+3+4*

பொ: தூய ஆற்றல்மிக்க துர்க்கையின் அடிகளைத் தப்பாமல் தொழுது, சேய வழி சென்று நடப்பார் அறுவரும் மேற்கொண்டு செல்லும் வழி காணாது திகைத்து நிற்க, அசரீரி ஒன்று, "வலிமையுடைய விநாயகராலாயது இம்மாயம்", என்று கூறிய சொல்லைச் செவி மடுத்து மதித்து, விநாயகனின் கழலணிந்த திருவடிகளை வணங்கிப், புகழ் பொருந்திய சிறப்புடைய, விநாயகன் மகிழ்வோடு, "கருணை பெற்று வாழும் தரும! நீ இங்கிருந்து உலகை ஆள்வாயாக" என்று கூறவும் (குளகம்).

அ.வி: மங்கை-துர்க்காதேவி, மேவி-பொருந்தி, ஐங்கரக்களிறு -விநாயகன், நேய மகிழ்வின் என்பதை ஏய மகிழ்வின் என்றும் கொள்ளலாம்.

ஒப்: அடி 2 "அந்தரத்தின் மொரு பிறந்தா ரம்மானை, வேழமுகத்தானுடைய விக்கினங்கள் என்று சொல்ல"வைகு.ப.93.

(16)

விநாயகன் தருமனுக்கு வழி காட்டுதல்

253. ஆதிபக வன்சொல வதைத்தா [1]னேபரிவி
னாகியருள் [2]கின்றனை யெனிற்றா ழாமலிங்கன்
மாதவன ருங்கழ லிணைக்கே நேரநினை
[3]வாயின [4]னினைந்தவழி யைத்தானீ யெனலு♣

♥ அசரீரி பற்றிப் பார்க்க: பா.மா.538, 600, 618.

♥குறிப்பு: பாண்டவர்களைத் தம்முடன் இருந்து 'நாட்டை ஆள்க' என்று பலர் அழைத்ததாகப் பாரத மாவிந்தம் கூறுகிறது.வியாசர், அரங்கநாதக்கவிராயர், நல்லாப்பிள்ளை ஆகியோர் இங்ஙனம் குறிப்பிடவில்லை. பாண்டவர்களின் பயணத்தில் அவர்களை அழைத்தவர்கள்,பார்க்க:பா.மா.273, 528, 551-555, 559, 575, 636, 646, 654.

♣ பாண்டவர்கள் வழி கேட்டது பார்க்க: பா.மா.274. 328அ, 561.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மோதுதரு மன்றனை மதித்தே யீதுவழி
யோசனையின் [5]வைகுண்டமுறப் போவா யெனலும்
நீதியின் மகிழ்ந்ததினு மப்பா லேகியடல்
நேருமுயர் கந்திருவர் பொற்பார் நீணகரின்.

1.னேபரிவி,சு.1+3+4; னோபரிவி, சு.2*2. நின்றனை, சு.1+3+4;கின் றனை, சு.2* 3. வாயினி, சு.1+2; வாயின,சு.3; வாயி, சு.4* 4.னியைந்த சு.1; னினைந்த, சு.2+3+4* 5. வைகுண்ட முறப்,சு.1; வைகுண்டமுமுறப், சு.2; வைகுண்டமதுறப், சு.3+4*

பொ: முதற் கடவுளாகிய விநாயகன் கூற, "அதை அன்பினால் எங்கள் மீது கருணை கொண்டு அருளுகின்றாயெனின், காலந்தாழ்த்தாமல் திருமால் திருவடிகளைச் சேரும் நினைவாயினன் நான் (தருமன்); பொருத்தமான அந்த வழியை நீ கொடு", எனலும், (அங்ஙனம்) சொன்ன தருமனை மதித்து, "இதுவே வழி. உன் எண்ணப்படி வைகுண்டம் அடைய (ஒரு யோசனை தூரம்) இவ்வழியே செல்வாயாக", என்று அவர் சொல்ல நீதியின்வழி செல்லும் தருமன் மகிழ்ந்து அவ்வழியிலிருந்தும் அப்பால் சென்று ஆற்றல் மிக்க உயர்ந்த கந்தருவருடைய அழகிய பெரிய நகரில், (குளகம்)

அ.வி: ஆதி பகவன் - யாவரும் முதற்கண் வணங்கும் முதல்வன், சொலவதை-சொல+அதை, தாழாமல்-காலந்தாழ்த்தாமல்,பொற்பு-அழகு, "நீ எனலும்" என்பதை ஈ எனலும் (வழிகொடு) என்றும் கொள்ளலாம்.

ஒப்: அடி 1. "ஆதி பகவன் முதற்றே உலகு" குறள்.1; அடி 3. "வைகுந்தஞ் சேர்வதற்கு நல்வழி காட்டி நடந்தார் விநாயகர்" வைகு.ப.95. "மாமறை முதல்வச் செந்நெறி, கூறு நீயென" சிலப்.11.58, 59.

(17)

மேகநாதன் எதிர் வருதல்

எழுசீர் ஆசிரிய விருத்தம்

254. மேகமேவு தண்கிரியின் மேகனாத னென்றொருவன்
வீறு [1]மானுடங்கொள் [2]வடிவே
[3]யாகுநீர்க ளெங்குளவ [4]ராம்நாம மென்கொலென
வாசையாகு மெண்டிசை [5]யுமான
வாகையான சந்தனுவி னானபேர னன்பினர்சொல்
வாசி நாமமுந் [6]தருமனே
[7]னேகினேனிவ் [8]விந்தமது பூமியாசை யின்றியரி
யீறிலாத [9]நண்பு பெறவே.

1.மானடங்கொள்,சு.1+3+4;மானடங்கள்,சு.2*2.வடிவே,சு.1+3+4;வரவே, சு.2*3.யாகிநீர்க,சு.1; யாகுநீர்க, சு.2+3+4*4. ராம்நாம, சு.1; ரானனாம, சு.2+3+4* 5. யுமான, சு.1+3+4; யுமென, சு.2* 6.தருமனே, சு.1+2+3;தரும, சு.2* 7.யேகினேனிவ், சு.1+3; கினேனிவ், சு.2; யேகினா

பாண்டவர்களுக்கு வழிகாட்டியவர்கள் பார்க்க: பா.மா. 275, 333, 334, 354, 561, 580, 583, 622, 639.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

னிவ், சு.4* 8.விந்தமது, சு.1+3+4; விந்தமிசை, சு.2* 9. நண்பு பெறவே, சு.1+3+4; பாத முறவே, சு.2*

பொ: மேகம் தங்கியிருக்கும் குளிர்ந்த மலைபோன்ற கரிய நிறமுடைய மேகநாதன் என்பான், "சிறந்த மானிட வடிவுடையவராகிய நீங்கள் எப்பகுதியைச் சார்ந்தவர்? உங்கள் பெயர் என்ன" என்று வினவ, "எட்டுத் திசைகளிலும் உள்ள அரசரை அடிமை கொண்ட வெற்றிமிக்க சந்தனுவின் பேரன் நான், அன்புடையோர் சொல்லும் வாசியான பெயருடைய தருமன். உலகை ஆள்வதில் ஆசையை நீத்துத் திருமாலுடைய அழிவற்ற நட்பைப் பெற இவ்விந்த மலையை அடைந்தேன்". இரண்டாவதடி பொருள் தெளிவில்லை. "வாசை யாகு" என்பது வரசையாளு என்று இருப்பின் சிறக்கும்

அ.வி: மேவும் - தங்கி இருக்கும், சந்தனுவின் பேரன்-தருமன்.

(18)

மேகநாதன் போர் செய்ய அழைத்தல்

255. என்னவே யறன்குரிசில் சொன்னவாச கங்கருதி
[1]யெண்ணலாத [2]நண்பின ரையே
முன்னைவான வன்சமரின்◆ முன்னமே கொலும்பகைவர்
[3]முன்னினார்கள் வந்தெ [4]னெதிரே
தன்னினீ ரிசைந்தசம ரென்னோடே பொரும்படிசெய்
தன்மிதா வெனும்பு கல்கொளா
வுன்னுமா தவங்கருதி யன்னபார் துறந்தபிற
[5]கொண்ணுமோ கொடுஞ்ச மரமே.

1.யெண்ணலாத, சு.1; யென்னலான, சு.2; யெண்ணிலான, சு.3; யெண் ணலான, சு.4*.2. நண்பின ரையே, சு.1+4; நன்பின் வரவே, சு.2; நண்பி னுரையே,சு.3* 3.முன்னினார்கள், சு.1+2+3; முன்னார்கள், சு.4* 4.னெதிரே, சு.1+3+4; னெதிர, சு.2* 5.கொண்ணுமோ,சு.1+3+4; கொன் னுமோ, சு.2*

பொ: என்று கூறவே, அறத்தின் தலைவனாம் தருமன் கூறிய சொற்களை உட்கொண்டு, "எண்ண இயலாத நண்பர் பலரையுமே முன்பு தேவனோடு நிகழ்ந்த போரில் கொல்லும் பகைவராக வந்துள்ளார்கள். இங்கு என் எதிரே உங்களுக்குள் விரும்பும் போரை என்னோடு மோதும்படி தருமனே (உன் தம்பியரை) நீ ஏவுவாயாக!" என்று அவன் கூறியதை உட்கொண்டு, "தவம் செய்வது கருதி நாட்டைத் துறந்த பிறகு எண்ணக் கூடுமோ கொடிய போர் செய்ய?" (குளகம்)

அ.வி: வானவன் சமர்-அர்ச்சுனனுக்கும் நிவாத கவசருக்கும் இடையே இந்திரன் பொருட்டு நடந்த போர், தன்னில்+நீர்-தன்னினீர்-சமர் தன்னில் நீர் எனக் கூட்டுக. புகல்கொளா-சொல்ல, குறிப்பு: 'முன்னினார்கள்' என்பது முன்னினீர்கள் என மாற்றப்பெற்றது.

ஒப்: அடி 2 "இந்திரன் குயிலனாய் என்னுட குலத்தார் தன்னை வந்து முக்கோடி பேரைமாளவே கொன்று போட்டு, ... விசையன் வான்பகை யெனக்கு என்றான்" தஞ். 235. "முன்னாளில்

◆ அர்ச்சுனன் நிவாத கவசரைக் கொன்றது, பார்க்க: பா.மா.139.

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

வானவர்க்காய் மூர்க்கமுள்ள அர்ச்சுனனை, மனம் பொறுத்து விட்டேன், வலிய வந்தீரிப்போது" வைகு. ப. 96.

256. என்றபோது [1]நின்பிறகு நின்றவீம [2]னென்தனுட (19)
னின்றுபோர் துடங்க [3]வெனவே
கன்றிவீம னங்கெதிர்கை [4]சென்றபோத றன்றவிர்தி
கன்றுகோப மென்ற ருள்செயா
வென்றிவீர குஞ்சரம தொன்று[5]கூர் குஞ்சரமுன்
னின்றிடா [6] நடுங்கி யதுபோ
[7]லென்றுகோப முந்திருகி [8]நின்றபேர் தனஞ்செயனை
யண்ணிதாக வந்து புகல்வான்.

1. நின்பிறகு, சு.1+3+4; தன்பிறகி, சு. 2*2.னென்தனுட, சு.1+4; னெந்த னுட, 2+3* 3. வரவே, சு.1; வெனவே, சு.2+3+4* 4. சென்றபோத, சு.1+4; கண்டபோத, சு.2; நின்றபோத, சு.4* 5. கூர் குஞ்சர முன், சு.1+3+4; கூற வஞ்சியதி,சு.2*6.நடுங்கியது போசு.1+3+4; நடுங்குவது போ, சு.2* 7.லென் று,சு.1; போலன்று,சு.2+3+4* 8.நின்றபேர், சு.1+3+4; நின்றபோர், சு.2*

பொ: என்று சொன்னபோது, "உனக்குப்பின் நின்ற வீமன் என்னுடன் இன்று போர் தொடங்குக" என்று கூற, வீமன் வெகுண்டு அவனை எதிர்க்கச் சென்றபோது, "தருமன் (இதனைத்) தவிர், கோபத்தை அடக்கு" என்று அருள்செய்ய, வெற்றி மிக்க வீர யானை ஒன்று ஆற்றல் மிக்க யானை ஒன்றின் முன் நின்று (போரிடாமல் ஆற்றலைக் காட்டும் வாய்ப்பின்றி) நடுங்கியதுபோல் (நிற்க), அப்பொழுது (மேகநாதன்) சினத்தோடு வெகுண்டு நின்ற போர்க்குணம் கொண்ட அர்ச்சுனனை நெருங்கி வந்து கூறலானான்.

அ.வி: எதிர்கை-எதிர்ப்பாகவும், குஞ்சரம்-யானை, கூர்-கூர்மை, அண் ணிதாக-அடுத்து அணுக. மூன்றாவதடி உவமை. அடி 2 "அருள் செயா" என்பது அருள் செய என்று இருப்பின் ஓசை சிறக்கும்.

(20)

அர்ச்சுனனைப் போருக்கழைத்தல்

257. [1]அங்கமே [2]தெரிந்துசிறி தெந்தனோடெ [3]திர்ந்திடென
வங்கு[4]நேரருஞ் [5]சமரமாய்த்
தங்குபோரி னன்பர்பட வெங்குநீர் நடந்ததுரை
தண்டி [6]நீவருந் தகையதோ
மங்கவே மலைந்திடுவ னெனசுவாமியின் [7]சொலினை
வஞ்சியா தொழிந்த [8]னனெனா
வெங்கணாய கன்[9]புகலி லிங்குநேர்வ மென்றனர்க
[10]ளெண்கொள் சீரிரண்ட வருமே.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

1. அங்கமோ, சு.1; அங்கமே, சு.2+3+4*2. டெதிர்ந்து,சு.1; தெரிந்து, சு.2+3+4* 3.திர்ந்திடென, சு.1+3;திர்ந்துடனே,சு.2* 4.நேரருஞ், சு.1+3+4; நேருஞ்,சு.2* 5.சமரமாய், சு.1+2+3; சமராய், சு.4*6. நீவருந், சு.1+3; நீர்வருந், சு.2; நீய்வருந், சு.4* 7. சொலினை, சு.1+2+3; சொலின், சு.4* 8.னனெனா,சு.1+2+3; னனோ,சு.4* 9.புகலி லிங்கு, சு.1+3+4; புகலிங்கு, .2*10. ளெண்ணு,சு.1; ளெண்கொள், சு.2+3+4*

பொ: "போரிடும் முறையறிந்து சிறிது என்னுடன் எதிர்த்துப் போர் செய்வாய் என்று சொல்லப், பிறர் செய்ய முடியாது நிகழ்ந்த அரிய போரினில் என் நண்பர்களை அழியச் செய்த நீவிர் எங்குப் புறப்பட்டீர்கள் என்பதைச் சொல், என்னைக் கடந்து நீ வரும் தகையதோ? உன் உயிர் அழியவே உன்னோடு போரிடுவேன்", என்று(மேகநாதன்) கூற, "என் அண்ணனின் சொல்லை வஞ்சியாமல் நான் போர் செய்யாதிருக்கிறேன்" என்று கூறி, எங்கள் தலைவன் கூறினால் இங்குப் போருக்குத் தயாராவோம்" என்று எண்ணத்தில் கொள்ளும்படியான வீம அர்ச்சுனர் இருவரும் கூறினர்.

அ.வி: அங்கம்-போரிடும் முறை, தண்டி-விலகி, தகை-தகுதி, சுவாமி -தருமன், வஞ்சியாது-பொய்க்காது, நேர்வம்-அடைந்தோம்.

(21)

மேகநாதன் துரோபதியைத் தூக்கிச் செல்ல முயலல்

258. அந்தவாய்மை [1]கொண்டவ் [2]வனந்தநாளி லிந்திரனை
யஞ்சநான் மலைந்த பொழுதின்
விந்தமீது பஞ்சவர்கள் வந்தபோ [3]துடன்பொருதி
விஞ்சவே யெனுஞ்சொ லுளதா
மெந்தனோடெ திர்ந்திலர்க ளிந்தமாதை யென்பதி
[4]கொண்டின்று சேர்வ[5]னென்ற நினைவாய்
[6]வந்துநீள் [7]கரங்கள்தொட முந்துமாத ரும்புகழும்
வஞ்சிதான யர்ந்த லறினாள்.

1.கொண்டவ்,சு.1+3+4;கொண்டவ,சு.2*2.வனந்தநாளி,சு1+3;னனந்தநாளி,சு.2;வனந்தனான,4 *3.துடன்பொருதி,சு.1+3+4;துடன்பொருது,சு.2*4.கொண்டின்று,சு.1;கொடன்று,சு.2;கொடிற, சு.3+4 *5. னென்ற, சு.1+4; னென்று,சு.2+3* 6.வந்துநீள்,சு.1+2+3;வந்துநீர்,சு.4* 7.கரங்கள், சு. 1+2; சரங்கள், சு.3+4*

பொ: அத்தகைய சொற்களைக் கொண்ட அவன், "அந்த நாளில் இந்திரன் அஞ்சும்படி, யான் போரிட்டபோது, விந்தத்திற்குப் பாண்டவர்கள் வரும்போது அவரோடு சிறப்பாகப் போரிடு", எனும் கூறிய சொற்கள் உண்டு. நீர் என்னோடு எதிர்த்துப் போரிடவில்லை எனில், இந்தப் பெண்ணை என் ஊருக்குக் கொண்டு செல்வேன் என்ற தன் எண்ணத்தால் அவன் வந்து துரோபதியின் நீண்ட கைகளைத் தொடச், சிறந்த கற்பரசிகளும் புகழும் துரோபதி மயங்கி அலறினாள்.

அ.வி: வாய்மை-சொல், கொடின்று-கொடு+இன்று, முந்துமாதர்—கற்பரசி கள்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஒப்: அடி 1, 2 "முன்னாளி லிந்திரன் மேல் முடுகியமர் பொருதே ...சொன் னான் காணைவர் தோற்றமுட னிவ்வசனம்...சொற்படியே வந்தீர் ... புறம் வாருமென்றான்" "தாவித் துரோபதை யைத் தானெடுத்துத் தோளில் வைத்து" வைகு.ப.97. "ஐவீருங் காக்கின்ற ஆரமுத மாங்க தனைக் கையாலே, தீண்டிக் கருங்காகம் மெய்யதனைத் தீண்டுமோ வென்றழுதாள்" பெருந்.121.

(22)

வீமன் மேகநாதனுடன் போர் செய்தல்

259. கண்டவீம னெண்டிசையும் விண்டுநேர் நடுங்கவெதிர்
கன்றுநீள் சினங்க துவவே
மண்டியே புகுந்துகிரி யொன்றினோ [1]டொன்றுபொரு
[2] வனபோல வுங்கு முறியே
சண்டவாயு வுங்கரிய கொண்ட[3]லான தும்[4] பெரிது
[5]தங்கணோர்ம லைந்த தெனவுங்
கொண்டபே [6] ருரங்களோடு [7]மண்டரூர் பயங்கதுவு
கொம்புபோர் விளைந்த பொழுதின்.

1.டொன்றுபொரு,சு.1;டதொன்றுபொரு,சு.2+3+4*2.வனபோல,சு.1;வன்புபோல,சு.2+3+4*3. லானதும்,சு.1; லோடெனப், சு.2; லாயதும், சு. 3+4* 4.பெரிது, சு.1+3; பெரிதுந், சு.2+4* 6.தங்கணோர்,சு.1+3+4; தன்கணோர், சு.2*7.ருரங்களோடு, சு.1+2; ருரங்களுட, சு.3+4*8. மண்டரூர், சு.1; னண் டரூர் சு.3+4(சு.2சி) *

பொ: (மேகநாதனைக்) கண்ட வீமன், எட்டுத் திசைகளும் உடைந்து எதிர்ப்பட்ட மலைகள் நடுங்க, மிக்க சினம் அவனைக் கதுவ, அவனை எதிர்த்து மலை ஒன்றோடு ஒன்று மோதுவது போலவுங் குமுறி, ஊழிக்காற்றும் ஊழிக்கார்மேகமும் தங்களுக்குள் பெரிதாக எதிர்த்துப் போர் செய்தது போலவும் மிக்க வலிமையோடு தேவருலகம் அஞ்சுமாறு கொடிய போர் நிகழ்ந்த போது, (இது முதல் 262 வரை குளகம்).

அ.வி: விண்டு-மலை, கதுவ-பற்ற, மண்டி-நெருங்கி, சண்டவாயு -புயல் காற்று, கொம்பு - கொடிய, இரண்டாவதடியும் மூனறாவதடியும் உவமை.

ஒப்:அடி3,4 "கெந்திருவன் தன்னைக் கட்டி மிகமேகநாதனைப் பிடித்து ...காற்றும் மழை யுங் கலந்து பொழிவதுபோல், ஏற்றமலை ரெண்டு மெதிர்த்துப் பொருதாப் போல்" வைகு.ப.97.

(23)

260. மாலைவாயி [1] னின்கனக னான[+]வீரி [2]யன்றனைமுன்
மாறுபோர்செய் சிங்க வுருவின்
[3] கோலமாகி வெஞ்சமரி [4]னானநீள் [5]கரங்களுகிர்
கூரினோர் [6] பிளந்த தெனவே
சாலநீடு குஞ்சிறில மீதுசேரா வெங்கொலைசெய

[+] இரணியனைக் கொன்றது பார்க்க: பா.மா.403-411, 490.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தாகமான தம்பி தனையே
நீலமாமு குந்தர்திரு வாணைநீவி டென்று[7]புகழ்
[8]நீதியான் மொழிந்த ருளவே.

1.னின்கணவ,சு.1;னின்கனக,சு.2+3+4*2.யன்றனைமுன்,சு.1+2+3;றனையுமுன்பு,சு.4*3.கோல மாகி, சு.1+3+4; கோலமாக சு.2* 4.னானநீள், சு.1+3+4; லானநீள், சு.2*5.கரங், சு.1+2; சரங், சு.3+4*6. பிளந்த,சு. 1+3+4; விழுந்த, சு.2* 7.புகழ்,சு.1+2; புகல், சு.3+4* 8. நீதிமான், சு.1; நீதியான், சு.2+3+4*

பொ: மாலைநேரத்தில் வாசற்படியில் இரணியன் என்ற வீரனை முன்பு பொருது போர் செய்கின்ற நரசிங்க உருப்போன்ற கோலத்தவனாகி, கொடியபோரில் தன் நீண்ட கூரிய கை நகங்களால் இரணியனை நேராகப் பிளந்ததுபோலவே, (மேகநாதனின்) மிகவும் நீண்ட தலைமயிர் பூமியில் படிய, அவனைக் கொலை செய்யும் தாகத்தையுடைய தம்பி வீமனை நோக்கிப் புகழ் பொருந்திய நீதியுடையவனாகிய தருமன், "திருமால் பெயரால் ஆணை, அவனை நீ விட்டுவிடுவாயாக", என்று கூறியருள, (குளகம்).

அ.வி: மாலைவாயில்-மாலைநேரத்தில் வாயிற்படியில், கனகன்-இரணியன், மாறு-பகை கொண்டு, சிங்கஉரு-நரசிம்மம், குஞ்சி-மயிர், தாகம்-ஆசை.

ஒப்: அடி 1-3 "கோலிலே முன்னாளில் கோபால சிங்கமுமாய், இரணி யனைக் கொன்றதுபோல் ... வீமன், தரணிதனி லவனைச் சங்கரிக்கவே நினைத்தான்" வைகு.ப.97. "ஆயவன் தன்னை மாயன் அந்தியின் அவன் பொன்கோயில், வாயிலில்...வயிரவாள் உகிரின் வாயின்" கம்.யு.இர.153.

(24)

வீமன் போர் செய்வதை விடல்

261. முன்பனா மறன்புகலு [1]நண்பினா [2]லிரங்கியுயர்
மொய்ம்பி னோடுகந் [3]திருவரும்
வன்பினால் நின்பதியி னுய்ந்துபோ கெனுஞ்[4]சொலொடு
மண்டுபோர் [5]தவிர்ந்து பணியா
வன்பினானு மங்கையுட னந்தநால் வரும்பவள
வங்கமரர் தடங்கி ரியிலே
யின்பமாம ரங்கள்பல கண்கொளாத கண்டதி
னிருந்துதான் வருந்த லறவே.

1.நண்பினா,சு.1+2+4;மன்பினா,சு.3*2.லிரங்கியுயர்,சு.1+2; யிரங்கியுயர், சு.4* 3.திருவனாம், சு.1+4; திருவரு, சு.2+3*4. சொலோடு, சு.1; சொனேடு, சு.2; சொல் கொடு, சு.3+4* 5. தணிந்து, சு.1; தவிர்ந்து, சு.2+3+4*

பொ: மூத்தவனாம் தருமன் சொல்லும் நட்பினால் இரக்கங்கொண்டு, மிக்க வலிமையோடு மகிழ்ந்து, வீமனும் தருமனும், அன்பினால், "உன் ஊருக்கு (உயிர்) பிழைத்துப் போ" என்னும் சொல்லோடு நெருங்கும் போரினைத் தவிர்ந்து பணிய, அன்புகொண்ட தருமனும் துரோபதியுடன் தம்பியர் நால்வரும், தேவருக்குரிய அகன்ற பவழமலையிலே இனிய பல

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பெரிய மரங்களின் கண்கொள்ளா அழகைக் கண்டு அதிலிருந்து வருந்துதல் நீங்கி இளைப்பாற,

அ.வி: மொய்ம்பு-வலிமை, உகந்து-விரும்பி, உய்ந்து-பிழைத்து, மங்கை-துரோபதி.

குறிப்பு:அடி 2 இல், சுவடிகளில் 'அன்பினானை என்றிருந்த பாடம் அன்பினால் என்று கொள்ளப்பட்டது.

(25)

காட்டின் புதுமையைக் காணல்

262. எண்ணிலா வனந்தகிரி யெண்ணிலா வனந்தநதி
எண்ணிலா வனந்த முனிவோர்
எண்ணிலா [1]வனந்தவர மெண்ணிலா வனந்தசுர
மெண்ணிலா வனந்த மிருகங்
கண்ணுறா வரும்[2]புதுமை கண்ணுறா வைகுண்டநிலை
கண்ணுறாசை கொண்ட [3]பரிவால்
நண்ணலாரை வென்றபுவி நண்ணலாசை [4]யன்றியிவண்
நண்ணினார் நடந்த வழியே.

1.வனந்தவர,சு.1; வனந்ததர, சு. 2; வனந்தமர, சு.3; வனந்தாமர, சு.4* 2.புதுமை,சு.1+2+4;புதிமை, சு.3+4* 3.பரிசால், சு.1; வவர்கா, சு.2; பரிவா, சு.3+4*. 4. யன்றியிவன், சு.1; யின்றிவன், சு.2+3; யன்றிவன், சு.4*

பொ:எண்ணிலடங்கா முடிவற்ற மலைகள், எண்ணில்லா முடிவற்ற ஆறுகள், எண்ணற்ற முனிவர்கள், எண்ண இயலாத அளவற்ற வரங்கள், எண்ண இயலாத அளவற்ற காடுகள், எண்ணற்ற அளவில்லா விலங்குகள், முதலியவற்றைக் கண்டு, (வழியில்) வரும் பல புதுமைகளைக் கண்ணுற்று, வைகுண்டத்தின் தன்மையைக் கண்ணால் காணவேண்டும் என்ற ஆசையால் பகைவரை வென்ற மண்ணின் மீது ஆசையின்றி, இங்குக் காட்டை விரும்பி நடந்தனர். ('யன்றியிவன்' என்பது 'யன்றியிவண்' என்று கொள்ளப்பெற்றது.)

அ.வி: அனந்தம்-அளவற்றது, வரம்-நிதி, நண்ணலார்-பகைவர், நண்ணல்-விரும்பல், இது சொல்பொருள் பின்வருநிலை அணி.

ஒப்: அடி 1,"அனந்த வீரியம் - கடையிலா இன்பம்" சீவக. 2846 - இன் உரை "அனந்த" என்றால் எண்ணிலாத என்று பொருள் - இது உயர்ந்தோங்கு மலை என்றார் போல வருவது. "ஒருபொருள் இருசொல் பிரிவில வரையார்" தொ.சொ.சேனா.460.

(26)

கலிவிருத்தம்

263. கானி யாறு® [1]கடும்புலி [2]யெண்குட
னானை மத்தகங் [3]கீன்ற [4]வடலரி

® கானியாறு. பார்க்க:பா.மா.650.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

யூனு [5]கந்த [6]வுறையுள யூகங்கள்
தேன ருந்திய சாரலுஞ் சென்றனர்.

1. கடும்புலி, சு.1+3+4; கரும்புலி, சு.2* 2. யெண்குட, சு.1; யங்குட, சு. 2+3+4* 3. கீன்ற, சு.1; கீண்டங், சு.2; கீன்றங், சு. 3+4* 4. வடலரி, சு.1; கடலரி,சு.2+3+4*5.கந்த, சு.1+2; காந்த, சு.3+4* 6. வுறையுள, சு.1+3+4; யுறையுளும், சு.2*

பொ: காட்டு ஆறு, கொடிய புலி, கரடி ஆகியவற்றுடன் யானையின் நெற்றியைக் கிழித்த வலிமையுள்ள ஊனை விரும்பியுண்ணும் சிங்கம் வாசம் செய்யும் இடமும், கருங்குரங்குகள் தேனை விரும்பி உண்ணும் மலைச் சரிவுகளிலும் (பாண்டவர்) சென்றனர்.

அ.வி: கானியாறு-காட்டாறு, மத்தகம்-நெற்றி, கீன்ற-பிளந்த, அரி-சிங்கம், உகந்த- விரும்பிய, உறையுள-இருப்பிடம் உள்ள, யூகம்-கருங்குரங்கு.

ஒப்: கான்+யாறு- கானியாறு. 'ய' கரத்தை ஒழிந்த மெய்களின் முன் வரு மொழி முதலில் 'ய' கரம் வந்தால் இடையில் இகரம் சேரும் என்ற நன்னூல் (206) விதிப்படி அமைந்துள்ளது.

(27)

264. வெற்பி [1]னீடுற மேவிய தீர்த்தங்க
ளற்பு தத்தி [2]லறிந்தவை யாடியே
பற்ப ராகமெ னுங்கிரிப் பாங்கினோர்
நற்பு [3]னற்கொண் ணறும் [4]பொய்கை [5]நாடியே.

1.னீடிய, சு.1; னீடுற,சு.2+3+4* 2. லறிந்தவை, சு.1+3+4; னறிந்தவை, சு.2* 3. னல்கொள், சு.1; னங்கொள்,சு.2+3+4* 4.பொய்கை, சு.1+3+4; புனல், சு.2* 5.நாடியே, சு.1; நண்ணியே, சு.2+3+4*

பொ: மலையில் நெடிது விளங்கும் நீர்த்தடங்களின் சிறப்புக்கள் அறிந்து அவற்றில் நீராடி, பற்பராகம் என்ற மலையை யடுத்துள்ள ஒரு நல்ல நீருடைய மணமிக்கக் குளத்தை அடைந்து, (குளகம்).

அ.வி: பொய்கை - மனிதர் ஆக்காத நீர்நிலை (குளம் போன்றது). (28)

பாண்டவர்கள் இராச முனிவரைக் காணல்

265. சங்கு நீலமுந் தாதுகு மாம்பலும்
பங்க யங்களு மல்கிப் பரந்துறப்
பொங்கு நீர்புட்க ரணியெனும் பொய்கை
யங்கி ராச முனியை யணுகினார்.

பொ: சங்கு மலரும், குவளை மலரும், பூந்தாதைச் சொரியும் ஆம்பல் மலரும், தாமரைகளும் பெருகிப் பரந்துள்ள நீர் நிறைந்து காணப்படும் புட்கரணி என்னும் பொய்கைக்கரையில் (இருக்கும்) இராசமுனியை நெருங்கினர்.

அ.வி: சங்கு-சங்கு வடிவம் போன்ற மலர், நீலம் - கருநெய்தல்.

(29)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இராசமுனிவரிடம் பொய்கையைப் பற்றி வினவுதல்

266. பாத மீது [1]பணிந்தங் கிருந்தவர்
போதி னான்மிகு பொய்கையின் பொற்பினால்
யாது பொய்கை [2]யீதென்ன வினவலு
மோது நீதி முனிவனு ணர்த்துவான்.

1.பரிந்தங்கி,சு.1; பணிந்தங்கி,சு.2+3+4* 2. யீதென்ன,சு.1+2; யிதென்ன, சு.3+4*

பொ: முனிவரின் கால்களைப் பணிந்து அங்கு இருந்த (பாண்டவர்) பூக்கள் மிகுந்த அப்பொய்கையின் அழகால் கவரப்பட்டு, "இந்தப் பொய்கை யாது?" என்று அங்கிராச முனிவனிடம் கேட்கவும், நீதியை உலகுக்கு ஓதும் முனிவன் உணர்த்தலானான்,

ஒப்: அடி1,2."புனலமுவம் புக்குடைந்து ஓர்தாள் ஊன்றி நின்று, வனசங் காள் செய்தவநீர் வாழியரோ வாழி" சிதம்பரச் செய்யுட் கோவை12.

(30)

நாகமடந்தையரின் பொய்கை எனல்

267. நாடி யெண்ணிலா நாக மடந்தைய
ராடு தீர்த்த மிதாமென் றருள்செயத்
தேடு புண்ணிய மாதினர் [1] சேர்ந்திவண்
கூடு [2]போதெது [3]வென்றவன் கூறவே.

1.சேர்ந்தவண்,சு.1+3+4;சேர்ந்திவண்,சு.2*2.போதது, சு.1+3+4; போதெது, சு.2*3.வென்றவன், சு.1; வென்றவர், 2+3+4*

பொ: "எண்ணற்ற நாகலோக மகளிர் விரும்பி வந்து நீராடும் பொய்கை இது" என்று முனிவர் கூறியருள் செய்ய, "புண்ணியத்தால் தெய்வமாதான அப்பெண்டிர் இங்குப் பொய்கைக்கு வந்து சேரும் நேரம் எது?", என்று தருமன் வினவ, (குளகம்)

அ.வி: தேடு புண்ணிய மாதினர் - முன்பு செய்த புண்ணியத்தால் தெய்வப் பெண்ணானவர்.

ஒப்: அடி 1, 2. "நாகக் கன்னிகள் வந்து கலந்தாடும் தீர்த்தமிது" பெருந்.134.

(31)

நாகமடந்தையர் வருகை

268. உதைய காலத்தி [1]லுற்றிடு வோரென
மதியி னாலுயர் மாமுனி கூறலு
மிதைய நண்பின ரங்கணி ருக்கவே
துதிகொ ணாக மடந்தையர் தோன்றினார்.

1. லுத்திடு, சு.1; லுற்றிடு, சு.2+4; னுற்றிடு, சு.3*

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பொ: அறிவால் உயர்ந்த சிறந்த மாமுனிவர், (நாகமடந்தையர்) அதிகாலையில் வந்து சேர்வார் என்று கூறவும், எல்லோரிடமும் உள்ளத்தால் நட்புகொண்ட பாண்டவர்கள் அங்கு இருக்கப், போற்றத்தக்க நாகமடந்தையர் தோன்றினர்.

அ.வி: உதயகாலம்-வைகறை நேரம், இதய நண்பினர்-உள்ளத்தால் நட்பு கொண்டவர்.

(32)

269. புனல்ப டிந்தபின் பூவைய ரைவரை
யினையர் யாவரிங் கின்றுவந் தாரென
வினவு போதின் [1]மிகுந்திறற் பாண்டுவின்
[2]றனைய [3]தன்மனோ டைவருந் தானெனா.

1.மிகுந்திறற்,சு.1+3+4; மிகும்புகட்,சு.2* 2.றனைய,சு.1; றனையர்,சு.2+3 +4* 3. தன்மரோ, சு.:1; தன்மனோ, சு.2+3+4*

பொ: நாகமடந்தையர், பொய்கையில் நீராடியபின் பாண்டவர்கள் ஐவரையும் பார்த்து, "இங்கு இன்று வந்துள்ள இத்தன்மையர் யாவர்?", என்று கேட்கும்போது, வலிமைமிக்க பாண்டு மன்னனின் பிள்ளைகளாகிய தருமனோடு ஐவரும் ஆவர்", எனக் கூற, (குளகம்).

(33)

270. என்ற வாசகங் [1]கேட்ட [2]விளமினார்
குன்று போலக் குலவுபொற் றோளினீர்
[3]வென்றி வீமன் [4]விசைய னகுலனோ
டொன்று சாதேவ னாரென [5]வோதுவான்.

1.கேட்ட,சு.1; கேளெ, சு.2; கேட்டங்,சு3+4* 2.விளமினார்,சு.1; மினோ ரெலாங், சு.2; கிளமினார்,சு.3+4* 3.வென்றி, சு.1+2; வென்ற, சு.3+4* 4.விசைய னகுலனோ,சு.1+2+4; நகுலன் விசையனோ,சு.3* 4. வோது வான், சு.1+2+3; வோதுவார், சு.4*

பொ: என்று சொன்ன சொற்களைக் கேட்ட இளைய மின்னல் கொடி போன்ற பெண்கள், "குன்றுபோல விளங்கும் பொன்போன்ற தோளினை உடையீர்! வெற்றி பொருந்திய வீமன், விசையன், நகுலனோடு ஒன்றிய சகாதேவன் என்பவர்கள் யார்", என்று வினவத் (தருமன்) கூறலானான்.

(34)

தருமன் ஐவரையும் அறிமுகம் செய்தல்

271. காற்றின் மைந்தனி வன்விசை யன்கடுங்
[1]கூற்றை நேர்நகு லனிவன் கொள்கைசா
லாற்றல் மிக்க சாதேவ னிவனழற்
போற்று [2]மின்னிவள் பொன்னனையீ [3]ரென்றான்.

1. கூற்றி, சு.1; கூற்றை, சு.2+3+4* 2. மின்னவள், சு.1; மின்னிவள், சு.2+3; மன்னிவள், சு.4*

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பொ: "திருமகளையொத்த பெண்டீர்! இவன் வாயுவின் மகன் வீமன், இவன் விசையன், கொடிய எமனையொத்த நகுலன் இவன், அறிவு நிறைந்த ஆற்றல் மிகுந்த சகாதேவன் இவன், அக்னிதேவன் போற்றும் ஒளிபொருந்திய துரோபதி இவள்" என்றான். [தருமன் தன்னைக் கூறாமல் பிறரைக் கூறினான். இதைப் பாரிசேடத்தால் உணர்க.]

அ.வி: கொள்கை சால்-அறிவு நிறைந்த, அழல் - அக்கினி தேவன், மின் அவள்- மின்னல் போன்ற துரோபதி, பொன் - திருமகள்.

(35)

காடுவந்ததன் காரணம் வினவல்

272. அந்த வாசகங் கேட்டருங் கானிடை
வந்த [1]வாறென்ன வைகுண்டஞ் சேரமா
விந்தம் மேவினம் மெல்லிய வீரென
வந்த மங்கையர் மாட்சிமை கூறுவார்.

1. வாறென, சு.1+2; வாறென்ன, சு.3+4*

பொ: அந்த மொழியைக் கேட்டுப் பெண்கள், "நீவிர் அரிய காட்டிற்கு வந்ததன் காரணம் யாது?", என்று வினவ, "மென்மையுடையீர் வைகுண்டம் அடைய மாவிந்தம் வந்து சேர்ந்தோம்", என்று சொல்ல, அங்கு வந்த பெண்டிர் தம் சிறப்பைக் கூறுவாராயினர்.

(36)

நாகமடந்தையரின் அழைப்பை மறுத்தல்

273. எம்மு டன்வரி லிந்திர போகமாய்க்
கொம்மை வெம்முலை கூடுவ மென்னவே♥
யம்மை யீரெங்க ளாய னடித்துணை
தம்மை நாடுதும் என்று [1]தணந்தனர்.

1.தணந்தனர், சு.1+3+4; தணர்ந்தனர், சு.2*

பொ: "எங்களுடன் வந்தால் தேவர்போல் போகவாழ்வு எம்முடன் கூடி வாழலாம்", என்று கூறவே, "அம்மையீர்! எங்கள் தலைவனாம் திருமாலின் திருவடித் துணையையே நாங்கள் விரும்புகின்றோம்", என்று கூறி அவர்களை விட்டு நீங்கிச் சென்றனர்.

அ.வி: இந்திரபோகம்-தேவர்போல் இன்பம் அனுபவித்தல், கொம்மை-பருத்த, தணந்தனர்-நீங்கினர்.

ஒப்: அடி2. "கொம்மை வெம்முலைத் தெரிவையர்க்கு" வில்.ஆதி.வேத்.5;"சேருவோம் தானவர் முன் செவ்வியுட னைவருமாய் வாருமையா வென்று மடந்தையர்கள் தானழைக்க" வைகு.ப.99.

(37)

♥ பாண்டவர்களை அழைத்தவர்கள் பார்க்க: பாமா, 252.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பாண்டவர்கள் சத்திய முனிவரைக் காணல்

274. வடக்கு நோக்கி நடக்கும் வழியிடைத்
தடக்கை குண்டிகைச் சத்திய மாமுனி
யிடத்து வந்தன [1]ரிம்மலைச் சாரலில்◆
நடத்து வாசகங் [2]கேளெனச் [3]சாற்றுவான்

1.மிம்மலை,சு.1;னிம்மலை,சு.2; ரிம் மலை,சு.3+4*2.கேளென, சு.1+3+4; கொள் ளென சு.2* 3.நாட்டுவான், சு.1+2+4; சாற்றுவான், சு.3*

பொ: வடக்குத்திசை நோக்கிச் செல்லும் வழியில் அகன்ற கையில் கமண்டலத்தை ஏந்திய சத்திய முனிவரிடம் வந்தனர். (அவரிடம்), "இந்த மலையின் பக்கம் நடக்க வேண்டிய வழியைக் கூறுங்கள்" என்று கேட்க அம்முனிவன், கேட்பாயாக என உரைக்கலானான்.

(38)

சத்தியமுனிவர் வழி காட்டுதல்

275. ஓது புட்பகிரி [1]முந்நூறி® [2]யோசனை
வீதி சென்றபின் வெந்திறற் பாந்தளொன்ᵠ
றூதை போலவந் துற்றிடும் மெல்லவே
போத லென்றனன்[1]* புண்ணிய மாதவன்.

1.முன்னூறி, சு.1+3; முன்னூ, சு.2; முன்னூற், சு.4*2. யோசினை, சு.1+3; றோசனை, சு.2; றோசனை, சு.4*

பொ: "புட்பகிரி என்று சொல்லப்படும் மலையில் முந்நூறு யோசனை வழி தூரம் சென்ற பிறகு, கொடிய வலியுடைய மலைப்பாம்பு ஒன்று ஊதைக் காற்றுப்போல் உங்களிடம் வந்துசேரும், மெதுவாக அதைக் கடந்துச் செல்லுங்கள்", என்றார் தவம் செய்து புண்ணியம் பெற்ற சத்திய முனிவர்.

அ.வி: வீதி-வழி, பாந்தள்-மலைப்பாம்பு, ஊதை - பெருங்காற்று, போதல்- போகுக (வியங்கோள்)

ஒப்: அடி1.முந்நூறு-முந்நூறி-குற்றியலுகரம் குற்றியலிகரமாகத் திரிந்தது. அடி 2. "கானிடைப் பாந்தள் கண்படுப்பன" சீவக.1900.; அடி 3. "ஊதை போல் விசையின்" கம்.கிட். ஆறு.27. அடி 1-4. "தருமரே நீங்கள் தாவும் வழினிலே, தென்மலைபோல் பாம்பு சீரரவுந்தான் விழுங்கும், ...என்றுரைத்தார் மாமுனியும்". வைகு.ப.99.

(39)

◆ பாண்டவர்கள் வழி கேட்டது, பார்க்க: பா.மா.253.

® அடி1.முந்நூறு-முந்நூறி-குற்றியலுகரம் குற்றியலிகரமாகத் திரிந்தது. குற்றியலுகரத்தின் முன் உயிர் வர உகரம் கெடுதலும் 'ய' கரம் வர உகரம் இகரமாகத் திரியும். நன்.164.

ᵠ பாண்டவர்கள் சென்ற வழியில் பாம்பைப் பார்த்தது பார்க்க: பா.மா.277.

* மேலும் வழிகாட்டிய நிகழ்ச்சி, பார்க்க: சிலம்.11. 70-74; சீவக.1177, தருமனுக்கு வழிகாட்டியவர் பார்க்க: பா.மா.253. பாண்டவர்கள் பாம்பைப் பார்த்தது பார்க்க: பா.மா. 277.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பாண்டவர்கள் நந்திமலையைக் கடத்தல்

276. இந்த வாசகங் கேட்டே யிகற்குரு
மைந்தர் மாபெருங் குன்றும்[1]வண்கானமு
நந்த லின்றி நடந்து நீராடியே
வந்து நந்தி மலைகடந் [2]தாரரோ.

1.மண்கானமு,சு.1+4;வண்கானமு,சு.2+3*2.தானரோ, சு.1; தாரரோ, சு.2+ 3+4*

பொ: இந்த மொழிகளைக் கேட்டே, வலிமையுடைய குருகுலத்தின் மைந்தர்கள் பெரிய மலையும், வளமான காடும் மனவருத்தம் இன்றி நடந்து, ஆறுகளில் நீராடி வந்து நந்திமலையைக் கடந்தனர்.

(40)

வீமனால் பாம்பின் சாபம் நீங்குதல் 277-283

277. [1]முந்து [2]முந்நூறி யோசனை [3]முற்றமூ
குந்த மென்னுங் கொடுவரைப் பாந்தணோர்[ψ]
வந்த வைவரை வாரி விழுங்கலுஞ்
சிந்த வேயுதைத் தான்[4]திறல் வீமனே.

1.இந்த, சு.1; முந்து, சு.2+3+4*2. முன்னூறி, சு.1+2+3; முன்னூறு, சு.4* 3.முற்றமூ, சு.1; முற்றமுங், சு. 2+3; முற்றவுங், சு4* 4. விறல், சு.1; திறல், சு.2+3+4*

பொ: முன்பு கூறிய முந்நூறு யோசனை தூரம் முழுவதும் நடந்த பிறகு, முகுந்தம் என்னும் கொடிய மலைப்பாம்பு அங்கு வந்த ஐவரையும் வாரி விழுங்கவும் அந்தப் பாம்பு அழியும்படி வலியுடைய வீமன் உதைத்தான்.

அ.வி: முந்த- முன்பு கூறிய, வரைப்பாந்தள்-மலைப்பாம்பு, பாந்தணோர்-பாந்தள்+நேர், வாரி-எடுத்து, சிந்த-அழிய, முந்நூறி-குற்றியலுகரம் குற்றியலிகரமாக மாறியது.

ஒப்:அடி 3.“வந்தவர்களை வரையும் வனிதை துரோபதையையும்... நாகம் தானே விழுங்கினதாம், அப்போது வீமன் நாகமதைத் தான் பிளந்து ...” வைகு.ப.100

(41)

ψ"நகுஷன் அகஸ்தியரை, 'ஸர்ப்ப' என்று காலால் உதைக்க, அவர் "மலை ஸர்ப்பமாகிப் பூமியில் வாழ்வாய்" என்று சபித்ததாக மகாபாரதத்தில் உள்ளதென்று இராஜாஜி குறிப்பிட்டுள்ளார். (ப.240). மு. அருணாசலம், 'பாலட்பொயட்ரி' என்ற நூலின் கண் 'பஞ்ச பாண்டவர் வனவாசம்' என்ற நூலில் பாண்டவர்கள் காட்டிற்குச் செல்லும்போது பாம்பு உருவில் இருந்த ராமரிஷி என்பவர் வீமன், அர்ச்சுனன், நகுலன், சகாதேவன் ஆகியோரை விழுங்கித் தருமனை விழுங்க மறுத்ததாகக் கதையில் உள்ளதென அந்நூலில் உள்ளதென்று குறிப்பிட்டுள்ளார்(ப.101). பாம்பு தருமனை விழுங்கியது பார்க்க: பா.மா.625. பாம்பு பற்றி முனிவர் கூறியது பார்க்க:பா.மா. 275. சாபநீக்கம் பெற்றவர் பார்க்க:பா.மா.284-289 (மலை), 292அ- 295 (குதிரை முகப்பெண்), 298- 304 (ஆறு) ; 316-322 (சிங்கம்), 335-344 (அரக்கி), 567-574(யானை), 581-583 (புலி), 596-597 (பன்றி).

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பாம்பு சாபம் நீங்கி அந்தணனாக உருமாறல்

278. திருவி னாயகன் தொண்டன் திருப்பத
மரவின் மேற்பட வந்தண னாகியே[ψ]
பெரிய தேவ விருடி [1]முன்னர்ப் பேசிய
வுரிய சாப [2]வுரைதனை வுன்னுவான்.

1.முற்பேசிய, சு.1; முன்னர் பேசிய, சு.2+3+4* 3. வுரைதனை, சு.1+3+4; வுரைதன்னை, சு.2*

பொ: இலக்குமியின் கேள்வன் திருமாலின் அடியவனான வீமனின் அழகிய கால்கள் பாம்பின் மீது பட்டதும் அந்தணனாக உருமாறிப் "பெரிய தேவ இருடி முன்பு அவனுக்கிட்ட சாபமொழிகளை நினைப்பவனாயினான்.

ஒப்:அடி 2. "கற்றவைம் பதங்கணீராகக் கருவினை கழுவப்பட்டு, மற்றவன் றேவனாகி வானிடு சிலையிற் றோன்றி, இற்றதனுடம்பு மின்னா விடரொழித் தினியனாகி" சீவக. 951.

(42)

அந்தணன் தன் சாபம் பற்றிக் கூறல்

279. பரமன் பூசைக்குப் [1]பன்மலர் கொய்யயான்
கருதிச் [2]செல்கையில் கந்திரு வன்மக
ளுருவை நோக்கி [3]மயங்கிநின் [4]றொண்மலர்
பெருமன் முன்வைக்கப் பேசினன் சாபமே.

1. பலமலர், சு.1; பன்மலர், சு.2+3+4*2. செல்கையில், சு.1+3+4; போகையில், சு.2*3.மயங்கின, சு.1; மயங்கிநின், சு.2+3+4* 4. னொண் மலர், சு.1; றொண்மலர், சு.2+3+4*

பொ: "சிவபூசைக்குப் பலவித மலர் பறிக்கச் செல்லும்போது, நான், கந்தர்வன் ஒருவனுடைய மகளின் கட்டழகைப் பார்த்து மயங்கி, ஒளி பொருந்திய மலர்கொண்டு காலம் தாழ்த்திச் சென்று முனிவர் முன் வைத்ததால் (அவர்) சாபமிட்டார்",

அ.வி: பரமன்-சிவபெருமான், பெருமன்-முனிவன்.

(43)

280. தீரும் வண்ண முரையெனத் திண்பெரும்
பார தம்பொரு தேபஞ்ச வர்கலி
சேரும் போது வைகுண்டத்திற் சென்றிட
நேர்வ ரிந்த நெடுவரைச் சாரலின்.

[ψ]குறிப்பு: சாபநீக்க நிகழ்ச்சி மாவிந்த நூல்களில் மட்டுமே உள்ளது. வியாசர், நல்லாப்பிள்ளை, அரங்கநாதக் கவிராயர் ஆகியோர் இதைக் குறிப்பிடவில்லை.

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

பொ:"சாபம் நீங்கும் வழியைச் சொல்" என்று கேட்க, "வலிமையான பெரிய பாரதப்போர் செய்து, பாண்டவர் ஐவரும் கலிகாலம் உலகில் சேரும்போது வைகுண்டம் செல்ல இந்த நீண்ட மலைச்சாரல் பக்கம் வருவர்", (இது முதல் 282 வரை குளகம்)

(44)

281. பாவி யாயும் பரமனை நம்பியே
[1] மாவு ணாவி [2]வணங்கினை* [3]மாசுறு
[4]போகி யாகிப் புழுங்கிய வன்மையால்
வீம னோடை வரையும் விழுங்குவாய்.

1.மாவு ணாவி, சு.1+3+4; மாவெ னாவி, சு.2* 2. வணங்கினை, சு.1; வளங்கினை, சு.2+3; வழங்கினை,சு.4*3.மாசுறு,சு.1+4;மாசறு,சு.2+3* 4.போகி யாகிப், சு.1+3+4; போலியாகிப், சு.2*

பொ: "பாவியாக இருந்தும் சிவபெருமானை நம்பி உள்ளன்போடு உள்ளிருக்கும் ஆன்மாவை வணங்கினாய், குற்றம் சேரும் போகத்தில் விருப்பம் உடையவனாகிப் புழுங்கிய வலியால் வீமனோடு ஐவரையும் விழுங்குவாய்"

அ.வி: மா உள் ஆவி வணங்கினை-வண்டு போன்ற மனந்தளர்ந்தாய்; மா உள் ஆவி-மேன்மை உடைய மனத்தின் உள்ளிருக்கும் ஆன்மா. மா உள் ஆவி -ஆன்மா என்பதை மா+ ஆ எனப் பிரித்து மா உள் ஆவி என்றும் கொள்ளலாம்.

ஒப்: 1-4. "பூசை சிவன் தனக்குப் புட்பம் வரவில்லையென்று ராஜரிஷி கோபமதாய் நாட்டமுட னெந்தனையும் பாம்பாகவே சபித்து" வைகு. ப.100.

(45)

வீமனால் பாம்பு உருவம் நீங்குதல்

282. கவன முற்றுக் கலங்கியே காலினாற்
பவனன் மைந்தனு தைத்தபின் பாம்புருத்
தவிரு மென்றுரை சாபத்தி னான்மிகக்
கவரு [1] சிந்தைய னாடினன் காணவே

1.சிந்தைய, சி.1+3+4; சிந்தையி, சு.2*

பொ: அறிவு முழுவதும் கலங்கியே துயருற, காற்றின் மைந்தன் வீமன் காலால் உதைத்த பிறகு பாம்பு உருவம் நீங்கும் என்று உரைத்த சாபத்தினால், உங்களைக் காணவே மிக விரும்பும் மனமுடையவனாய்த் தேடினேன்.

அ.வி: கவனம் -அறிவு, பவனன் மைந்தன்-வாயுவின்மகன் வீமன், கவரு -விரும்பும்.

(46)

---

* மா உள் ஆவி வணங்கினை என்பதற்கு வண்டு போன்ற மனந்தளர்ந்தாய் என்று 'எஸ்.கே. இராமராஜனும் 'மேன்மைஉடையமனத்தின்உள்ளிருக்கும்ஆன்மா' என்றுமு.கோ.இராமனும்பொருள்கொள்வார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

283. யான்செய் புண்ணிய [1]மெண்ணிய வாறிது
கான்செய் விந்தத்திற் கண்டன னென்றபின்
மான்செய் நோக்கியு மன்னரு முன்னுள
தேன்செய் மால்வரை யாயிரஞ் சென்றுமேல்.

1.மெண்ணிய, சு.1+3+4; மெய்திய, சு.2*

பொ: "நான் செய்த புண்ணியம், நான் நினைத்தபடி இங்கு விந்தமாகிய காட்டில் (உங்களைக்) கண்டேன்", என்று கூறி அவன் சென்றபின், மான் போன்ற கண்ணையுடைய துரோபதியும் பாண்டவர்களும் முன்பாக இருந்ததேன் சொரியும் பெரிய மலைகள் ஆயிரம் நடந்து மேலே சென்று, (குளகம்)

அ.வி: கான் செய் விந்தம்-காடாகச் செய்யப்பட்ட விந்தம், மான்செய் நோக்கி-மான் போன்ற கண்ணுடைய துரோபதி. இது சொல்பின் வருநிலை.

ஒப்: அடி 3, "வேனிரை செய்கண்ணியொடு" சீவக.2490.

(47)

வித்தியாதர மலையின் சாப நீக்கம் 284-290

284. வித்தியா தரனென் கின்ற மெய்மலை
யொத்து மேற்குங் கிழக்கு முருவவே
வைத்த நேரின் வழியது [1]காண்கிலார்[Ψ]
சத்தி யத்[2]தரு மனுடன் றம்பிமார்.

1.காண்கலாச், சு.1+3; காண்கிலார் சு.2, சு.3; காண்கிலர், சு.4* 2.தருமனுடன், சு.1+3+4; தமையனுடன், சு.2*

பொ: வித்தியாதரன் என்கின்ற உடல் பெருமலையைப்போல் மேற்கிலிருந்து கிழக்காக ஊடுருவிக் கிடக்கவே, அவ்விடத்தில் அமைந்த நேரிய வழியைக் காணாதவராயினார் வாய்மை தவறாத தருமனுடன் தம்பியர். (முதலடி உருவகம்)

ஒப்: அடி1, 2. "விந்தமா மேருவொன்று விண்ணளவாக ஓங்கி, அந்தமா பருத மண்டலத்து..." தஞ்.999. "நல்லதொரு அஸ்தகிரி அடர்ந்து மோரா காயம் அந்திய மட்டுந்தான் வளர்ந்து" வைகு.ப.100.

(48)

பாண்டவர்கள் வழி காணாது திகைத்தல்

285. திகைத்து நின்றனர் செல்வழி காண்கிலார்
முகத்தை நோக்கி முதல்வனை [1]நோக்கியே
அகத்து மாயவ னாழியென் றுன்னியே
[2]தகர்த்த னன்புகழ் வீமன் தடக்கையால்.

1.நோக்கியே,சு.1+3+4; நோக்கவே,சு.2* 2. தகர்த்தனன், சு.1+3+4; தகத்தனன், சு.2*

[Ψ] மேலும் பார்க்க: கந்தபுராணம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பொ: தாங்கள் செல்லும் வழி காணாதவர்களாய்த் திகைத்து நின்றனர். ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துத், தருமனை நோக்கி மனத்தில் தன்னுடைய கையைத் திருமாலின் சக்கரம் என்று நினைத்து, மலையைத் தன் அகன்ற கையால் வீமன் உடைத்தான். (தடக்கையால் தகர்த்தனன் என்பதால், 'ஆழி' என்று தன் கையை எண்ணினான் எனக் கொள்ள வேண்டும்).

அ.வி: முதல்வன் -தருமன், நோக்கி - உள்ளக் கருத்தறிந்து, அகம்-மனம்.

(49)

வித்தியாதரனின் சாபம் நீங்குதல்

286. விண்டு நீங்கிய வெற்பு[1]வித் தியாதரன்
கொண்ட ரூபம தாய்நின்ற[@] கொள்கையைக்
கண்டு [2]தன்மிதன் காரண [3]மென்னெனாப்
பண்டை யுள்ளபடி பகர்ந் தானரோ.

1.வித்தியாதரன்,சு.1+3+4;வியாதரன், சு.2* 2. தன்மிதன்,சு.1+2; தன்மிதர், சு.3+4* 3.மென்னெனப், சு.1+2; மென்னெனாப், சு.3+4*

பொ: உடைந்து மலைவடிவம் நீங்கிய மலை வித்தியாதரன் வடிவாக நின்ற செய்கையைக் கண்டு தருமன், "இதன் காரணம் என்ன" என்று வினவ, அவன் முன்பு நடந்தபடி கூறுவானாயினான்.

ஒப்: அடி1. "வெற்பு, விலங்கல், விண்டு" என்பன ஒருபொருள் குறித்த வேறுபெயர் கிளவி" தொ.சொ.சேனா. 399.

(50)

வித்தியாதரன் சாபம் பெற்ற காரணம் கூறுதல்

287. தேவர் தானவர் [1]செய்கின்ற [2]போரினில்
மேவு நாரணன் சக்கர வெம்மையிற்
பாவ [3]மான வசுரர்[4]பட் டார்களைத்
தேவர் போற்றரும் வைகுண்டஞ் [5]சேர்த்தனன்.

1.செல்கின்,சு.1;செல்கின்ற,சு.2+4;செய்கின்ற,சு.3*2.போரினின்,சு.1; போதினில், சு.2; போரில், சு.3; பேற்றினில், சு.4* 3. மான, சு.1+3+4; மாய, சு.2* 4. பட்டார்களை, சு.1+3+4; பரர்களை, சு.2*5.சேர்ந்தனர், சு.1+2+3; சேர்ந்தனன், சு.4*

பொ: "தேவர்களும் அசுரர்களும் செய்கின்றத் தேவாசுரப்போரில், பொருந்தும் நாராயணனின் சக்கரத்தின் கடுமையால் பாவஞ்செய்து இறந்துபட்ட அசுரர்களைத் தேவர்களும் போற்றும் அரிய வைகுண்டத்தில் சேர்த்தேன். "சேர்ந்தனர், சேர்ந்தனன்" என்பது சேர்த்தனன் என்று கொள்ளப்பட்டது.

[@] சாப நீக்கம் பெற்றோர் பார்க்க:பா.மா. 277.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஒப்: அடி 1-4."முன்னாளரசருடன் மூர்க்கருடன் தான்பொருதே ... சூரர் உயிர்குலைந்து போகையிலே...வைகுந்தம் தந்தேன்... கல்லாயெனைச் சபித்தார் கண்ணருந்தான்" வைகு.ப.101; "தேவாசுரன் சினத்துடன்ற காலத்து...சக்கரத்தாற் பொன்றினரைத்-தேவர்கள், வைகுந்த மாள்வதற்கு வைகுந்த னாங்கதற்கின் றெய்தினார் சாபமிது" பெருந்.150.

(51)

288. அறிந்த நாரண [1] என்றந் தசுரரைச்
சிறந்த வைகுண்டஞ் [2]சேர்த்துள நீபதந்
துறந்து பூமியிற் சூழ்மலை யாகவே
உறைந்தி டென்றெனை யோதின னொப்பிலான்.

1.னன்றந்,சு.1;னன்றங்,சு.2+3+4*2.தசுரரை,சு.1;கசுரரைச்,சு.2+3+4*2. சேர்ந்துள, சு.1+4; சேர்த்துளநீ, சு.2+3*

பொ: இதனை அறிந்த நாராயணன், "அன்று அந்த அசுரர்களைச் சிறந்த வைகுண்டம் சேர்த்துள்ள நீ உன் பதவியை இழந்து பூமியில் சூழ்ந்திருக்கும் மலையாக இருப்பாய், அவ்வாறே வாழ்ந்திடு என்று அந்த ஒப்பில்லாதவன் என்னிடம் கூறினான்".

அ.வி: அந்த அசுரர்-இறந்த அசுரர், பதம்-பதவி, சூழ் -சூழ்ந்து, உறைந்திடு-இருப்பாய், ஒப்பிலான்-திருமால்.

(52)

289. இந்த ரூபமும் நீங்குவ தென்றென
வந்து [1]பாண்டுவின் மைந்தர் வைகுண்டமா
விந்த மேவுவர் வீமன் கரத்தினால்
[2]சிந்து [3]மன்று சிறந்திடு மென்றனன்.

1.பாண்டவர், சு.1; பாண்டுவின், சு.2+3+4*2. சிந்து, சு.1+3+4; சிந்த, சு.2*3. மன்று, சு.1+3; நின்று, சு. 2; மென்று, சு. 4* 3. திறந்திடு, சு.1+3+4; சிறந்திடு, சு. 2*

பொ: "இந்த வடிவம் நீங்குவது எப்போது?" என்று (நான்) வினவ, "பாண்டுவின் மைந்தர்கள் வைகுண்டமாகிய மாவிந்தம் வந்தடைவர். இந்த வடி வம் வீமன் கையால் சிதறும் அப்போது (நின்) பழைய வடிவம் சிறந்திடும்", என்று கூறினான்.

அ.வி: வைகுண்ட மாவிந்தம்-வைகுண்டமாகிய மாவிந்தம், சிந்தும்-சிதறும், சிறந்திடு -- நீ பின்னர் பழைய பதவியில் வடிவில் சிறப்பாயாக. சிறந்திடும் என்று கொண்டு மேன்மை உண்டாகும் என்றும் பொருள் கொள்ளலாம்.

(53)

பாண்டவர்கள் வித்தியாதரனிடம் விடைபெறல்

290. மாய னல்கும் வரத்தின் சிறப்பினா
லாய நன்மை [1]யளித்துயி [2]ராயினார்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

[3]போயி னன்விடை கொண்டெனப் போனபின்
சேய னார்தனி செல்லு நெறிக்கணே.

1.யளித்துயி, சு.1+3+4; யளித்துயர், சு.2* 2.ராயினார், சு.1+4; வாயினார், சு. 2; ராயினீர், சு.3* 3.போயி னன், சு.1+3+4; 2. போயினான், சு.2*

பொ: திருமால் அளித்த வரத்தின் சிறப்பால் உண்டான நன்மையைப் பெற்று உயிர் பெற்ற வித்தியாதரன் பாண்டவர்களிடம் விடைபெற்றுச் சென்ற பின், முருகனையொத்த பாண்டவர்கள் தனியே செல்லும் வழியில், (குளகம்).
அடி 2 இல் 'ராயினார்' என்பது ராயினான் என்று இருப்பின் பொருள் சிறக்கும்.
அ.வி: சேயனார்- முருகனை ஒத்து நினைத்ததை முடிக்கும் ஆற்றலுடைய பாண்டவர்கள்.
ஒப்: அடி 4 "முருகு ஒத்தீயே முன்னியது முடித்தலின்" புறநா. 56.

(54)

291. சூழும் பாம்பும் புலிகளுந் துன்றிய
கேழல் தானுங் கிளர்சினச் சிங்கமும்
[1]வேழ [2]மெண்குடன் மேவிய [3]தீயநே
ரேழைந் தோசனை சென்றன ரீறிலார்.

1.வேழமு, சு.1; வேழ, சு.2+3+4* 2.முடன், சு.1; மெண்குடன், சு. 2+3+4* 3.தீயனே, சு.1+3+4; தீயையி, சு.2*
பொ: சூழ்ந்திருக்கும் பாம்பும், புலிகளும், நெருங்கிய பன்றியும், சினம் கிளர்ந்த சிங்கமும், யானை, கரடி முதலிய கொடிய விலங்குகள் நிறைந்திருக்கும் தீமையை ஒத்த கொடுமையான காட்டில் முப்பத்தைந்து யோசனை தூரம் சென்றனர் அழிவில்லாப் புகழுடையவர்கள்.
அ.வி: துன்றிய-நெருங்கிய, கேழல்-பன்றி, கிளர்-மிகுந்த, ஈறு -அழிவு.

(55)

பாண்டவர்கள் நீண்ட காட்டை அடைதல்

292. சதுர ராகிய தம்பியர் நால்வரும்
மதுர வாய்மை மடந்தையுந் தானுமாய்க்
[1] கதிர்க ணாகிய [2]கண்களுங் [3]காண்கிலார்
[4] வெதிர நீணெடுங் கானத்துள் மேவவே.

1.கதிர்க,சு.1+3+4; திரைக, சு.2* 2.கண்களுங், சு.1+3+4; கணங் களுங், சு.2* 3.காண்கிலார், சு.1+2; காண்கிலர், சு.3; காண்கலர், சு. 4* 4. வெதிர, சு.1; வெதிரி, சு. 2+3+4*

பொ: திறமையுடையவராகிய தம்பியர் நால்வரும், இனிய சொல் கூறும் அழகிய துரோபதியும், தருமனும் (சூரியனின்) ஒளிக்கதிர் கண்ணாகிய கண்களாலும் காண இயலாத இருள் செறிந்த மூங்கில்களை உடைய நீண்ட கொடிய காட்டினுள் செல்லவே, (குளகம்)
அ.வி: சதுரர்-திறமையுடையவர், மதுர வாய்மை மடந்தை - இனிய சொல் கூறும் துரோபதி, வெதிரம்-மூங்கில், மூன்றாவதடி உருவகம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஒப்: அடி 3 "ஆதித்த னூடா டாதவருங் கானகம் புகுந்து" வைகு.ப.101. "அருக்கனேர் நிற்பினு மல்லிருளே காணார்க்கு, இருட்கண்ணே பாசத்தார்க் கீசன்" சிவஞானபோதம் மூலமும் உரையும், ப. 344.

(56)

குதிரைமுகப் பெண் சாபநீக்கம் 292 அ - 295

292அ♣. புரவி மாமுகத் தாளொரு பொற்றொடி♥
தருமன் வீமன் [1]றமக்கு நடுவதாய்
வரும ருச்சுனன் [2]மாமணித் தோள்களைப்
பரிவி னாலெதிர் பற்றித் தழுவவே.

1.றமக்கு நடுவதாய், சு.2; நகுலன் சகாதேவன்,சு.3+4*2.தன்னை மன மிகு,சு.2; மாமணித் தோள்களை, சு.3+4*

பொ: பொன்னாலான வளையணிந்த குதிரைமுகங் கொண்ட ஒருபெண், தருமனுக்கும் வீமனுக்கும் நடுவே வரும் அர்ச்சுனன் முன் வந்து அவனுடைய அழகிய தோள்களை அன்பினால் தொட்டுத் தழுவவே, (குளகம்)

ஒப்: அடி 1-4 "பெண்கொடியாள்... அஸ்வமுகமாக...விஜயன் தோளைத் தழுவுகின்றாள்" வைகு.ப.102.

(56 அ)

293. முன்முகச் செயல் [1]நீங்கி முளரியா
நன்மு கம்பெற நண்ணிய காரணப்
புன்மை [2]யேது புகலுதி [3]யாமெனத்
தன்மன் கூறவத் தையலுங் கூறுவாள்.

1.நீங்கி, சு.1; நீந்து,சு.2; நீங்கு, சு.3+4* 2.செய்து, சு.1; யேது, சு.2+3; யேய்து, சு.4* 3.யாமெனா, சு.1+3+4; யாலெனத், சு.2*

பொ: முன்பிருந்த குதிரைமுகத்தின் நிலைமை நீங்கித் தாமரை போன்று நல்ல முகம்பெற, (அவளிடம்), "குதிரைமுகம் பெற்றதற்குக் காரணமான இழிவு யாது? (நீ) சொல்வாய்", என்று தருமன் கூற, அப்பெண் கூறுவாளாயினாள்.

அ.வி: செயல்-நிலைமை, முளரியா-தாமரையிலுள்ள திருமகளா, புன்மை -இழிவு.

(57)

♣இப்பாடல் அடிப்படையாகக் கொண்ட சுவடியில் 1 இல்லை.

♥"கலிங்கதேச மன்னன் மகள், அயக்கிரீவ முனிவரின் சாபத்தால் குதிரைமுகம் பெற்றுக் கந்தபெருமானருளால் அச்சாபம் விலகப் பெற்றாள்" என்றும், திருச்சி மாவட்டத்திலுள்ள திருப்பராய்த்துறையின் தாருகவாணேஸ்வர சிவன்கோயில் கல்வெட்டொன்றில் (கி.பி.1614,1641) திருப்பராய்த்துறை நாயனார் அடிநாயனார் சோழன் குமாரத்திக்கு நரிமுகம் தீர்த்த தேவர் என்ற குறிப்பு வருகிறது" (ப.48) என்றும், நல்லூர்க் கந்தசாமி கோவில் பற்றியும் மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் பற்றியும் எழுந்த 'பிரபந்தங்கள் ஓர் ஆய்வு' என்ற ஆய்வேட்டில் குறிக்கப் பெற்றுள்ளது.(கனகசபாபதி நாகேஸ்வரன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை,1987). மேலும் பார்க்க: சிலப்.21: 19-25. சாபநீக்கம் பெற்றோர் பார்க்க: பா.மா.277.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

குதிரைமுகப்பெண் சாபம் பற்றிக் கூறுதல்

294. கானின் மாமுனி மங்கைமுன் [1]காளிபோய்
வானின் வந்து முனியுடன் வைகலுந்
தான்சி னந்தரும் சாபந் தனஞ்செய
[2]னான்றன் தோள்படப் போமென்ற ருளினான்.

1.காளிபோய், சு.1+3+4; காணுற, சு.2* 2.நான் தோள்பட, சு.1+2+3; னான்றன் தோள்பட, சு.4*

பொ: காட்டில் வாழும் சிறந்த முனிவரின் மனைவி, முன்பு என் பெயர் காளி. (நான்) போய் ஆகாய மார்க்கமாக வந்து (வேறொரு) முனிவனுடன் தங்குகையும், (கணவனாகிய) முனிவன் சிறப்பாகத் தந்த சாபம், அர்ச்சுனனின் தோள்பட்டதும் விலகும் என்று கூறியருளினான்".
அடி 3 இல் சிறந்தருள என்னும் பாடம் சினந்தரும் என்று கொள்ளப்பட்டது.
அ.வி: மங்கை-மனைவி, வைகல்-தங்குகை,
ஒப்: அடி 2. வைகல் -"காசு கண்பரிய வைகி" சீவக.586. அடி 2-4 "வானி லொரு முனிவன் வந்தென்னைச் சேருகையில், அறிந்த யெந்தன் பத்தாவும் அஸ்வமுக மாகவென்றார்". வைகு.ப.102.
(58)

295. அந்த [1]வாறென் னரும்பெருஞ் சாபமு
மெந்தை நீக்கினை யென்றவ ளேகலும்
வந்து கற்பினிற் காளி மலர்ப்பதஞ்
சிந்தை யாரத் தொழுதுடன் செல்லவே.

1. வாறி லருந் திறற், சு.1+3+4; வாறென் னரும்பெருஞ், சு.2*

பொ: "அந்த விதம் என்னுடைய அரிய பெரிய சாபத்தையும் என் தந்தை போன்றவனே நீக்கி விட்டாய்", என்று கூறி அப்பெண் செல்லும், (பாண்டவர்கள்) அங்கு வந்து கற்பில் சிறந்த காளியின் மலரடிகளை மனம் நிறைவுற வணங்கி மேலே நடந்து செல்ல, (குளகம்)
ஒப்: அடி3, 4."நெஞ்சினால் பிழைப்பிலாளை நீ அழைத்திடுக என்ன", "மாசறு கற்பின் மிக்க அணங்கினை" கம்.பால.அகலி. 27, 28.
(59)

பாண்டவர்கள் வீம மலையைக் கடத்தல்

296. வீம மாமலை யென்றொரு வெற்பிடை
வீம [1]மாமுனி [2]மென்மலர்த் தாடொழாத்
தாம மார்குழற் றையலோ டைவருந்
தாம மால்வரைத் [3]தாள்கடந் [4]தேகினார்.

1.மாமணி, சு.1; மாமுனி, சு.2+3+4* 2. மெய்மலர்த், சு.1; மென் மலர்த், சு.2+3+4*
3.தாள்கடந்,சு.1+2+3; தாள்தடந்,சு.4* 4.தேவினார், சு.1; தாவினார், சு.2+3+4*

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பொ: வீம மாமலை என்னும் ஒரு பெரிய மலையின் இடையே வீமன் என்னும் பெரிய முனிவரின் மென்மையான மலர்போன்ற பாதங்களைத் தொழுது, மாலை அணிந்த கூந்தலுடைய துரோபதியுடன் ஐவரும் அந்த பெரிய மலையடியைக் கடந்து சென்றனர்.

அ.வி: தாமம்-மாலை, தாமம்-தாம்+அம், வரைத்தாள்-மலையடி, முதல் ஈரடி சொல் பின் வருநிலை அணி.

(60)

பாண்வடர்கள் ஆற்றை அடைதல்

297. நீலியா மன்னை நீள்முலை யுண்டதோர்[♣]
காலி யாயன் கழலை நினைந்துளார்
கோலி யாழ மிதுவெனக் கூறொணா
மாலி யாற்றினை வந்தங் கணுகியே.

பொ: தாயுருவின் வந்த நீலியாம் பூதனையிடம் பால் குடித்த ஆநிரைகள் மேய்க்கும் கண்ணன் திருவடியை நினைந்துள்ள பாண்டவர்கள், ஆற்றில் முழுகி அதன் ஆழம் இவ்வளவு என்று கூற இயலாத ஆழமிக்க பெரிய மாலி என்னும் ஆற்றை வந்து நெருங்கியே, (குளகம்).

அ.வி: காலியாயன்-பசுமேய்க்கும் கண்ணன், கோலி-முழுகி.

ஒப்: அடி 3, 4. "காளி யாறொன்றும் மாநதியும் வந்து கண்டார்" வைகு.ப. 102.

(61)

ஆற்றின் சாப நீக்கம் 298-304

298.[♦] ஆறு தானுள [1]தாழமு மன்னதே
யேறொ ணாதநி லைமையு மெண்ணினார்
வேறு நாஞ்செய் வினையம [2]தென்னெனக்
கூறு தன்மனை வீமன் குறுகியே.

1.தாழமு,சு.1; வாழமு, சு.2+3* 2. தென்னெனக், சு.1+2; தென்னெனாக், சு.3*

பொ: "அங்கு ஆறு (அகலம்) உள்ளது, அதன் ஆழமும் அப்படித்தே. அதனைக் கடக்க இயலாத நிலையையும் நினைத்தனர். "நாம் செய்யும் வேறு செயல் என்னது என்று", கூறும் தருமனை வீமன் நெருங்கி, (குளகம்)

அ.வி: வினையம்-உபாயம், ஏற-கடக்க, குறுகி-நெருங்கி.

(62)

299. தருமன் வெற்றித் தனஞ்செய னென்பவ
ரிருபு றத்து மிரட்டையர் கையிலும்
மருவு மங்கை முதுகினும் வைகவே
யரிதி னிற்கொண் டிழிந்தன னக்கரை.

[♣] கண்ணன் பூதனையிடம் பால் உண்டது பார்க்க: பா.மா.105.

[♦] 298 ஆம் பாடல் சுவடி 4 இல் இல்லை.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பொ: (வீமன்) தருமன் வெற்றிப் பொருந்திய அர்ச்சுனன் என்னும் இருவரையும் இரு பக்கமும், இரட்டையராம் நகுல சகாதேவரை இரு கைகளிலும், தழுவும் துரோபதியை முதுகிலும் வைத்து மிக முயன்று ஆற்றின் அக்கரையில் இறங்கினான்.

அ.வி: அரிதினிற்கொண்டு-மிக முயன்று, இழிந்தனன்-இறங்கினான்

ஒப்: அடி 1-4."வீமன் விசயனையுந் தர்மரையும், பூரித்திரண்டு புயமதில் வைத்து ... ஒரு கையில் சகாதேவன் ஒரு கையில் நகுலனையும் ... மங்கையைத் தானேற்றி" வைகு.ப.102. "தோள்கரம் புறந்தள்ளி லன்னையும் துணைவர் நால்வருந் தொக்கு வைகவே" வில்.ஆதி. வேத்.2.

(63)

பாண்டவர்கள் ஆற்றை நீந்திக் கடத்தல்

300.♥ [1]பேர்ந்து மிக்க பிறவிப் பெருங்கடல்
நீந்தி னானென [2]நீந்தின னீள்புனல்✤
வாய்ந்த வைகுண்ட மாகதி யன்புடன்
[3]சேர்ந்த னனெனச் [4]சேர்ந்தன [5]னக்கரை.

1.பேர்ந்து, சு.1; பேந்து, சு.2+3+4* 2.நீந்தின, சு.1+2+3; நீங்கின, சு.4* 3.சேர்ந்தன னெனச், சு.1+3; சேந்தனன்னெனச், சு.2+4* 4.னக்கரை, சு.1+ 3+4; சேர்கரை, சு.2*

பொ: விரிந்த பிறவியாகிய பெருங்கடலை நீந்தினான் என்பதுபோல் நீண்டபுனலில் நீந்தி, வைகுண்டமாகிய மேலான நிலையை அடைந்தனன் என்பதுபோல் ஆற்றின் அக்கரையை அடைந்தான் (வீமன்).

அ.வி: பேர்ந்து - நீங்கி, முதல் இரண்டடி உவமை.

ஒப்: அடி 1. "பிறவிப் பெருங்கடல் நீந்துவர்" குறள்.10.

(64)

ஆறு கன்னியாக மாறுதல்

301. ஆய வாறங் கரும்பெறற் கன்னியாய்Ψ
நேய மோடெதிர் [1]நிற்கநன் னீதியிற்
றூய னான தருமன் றுதிப்பினா
லாய நேரிழை யாரெனச் சாற்றலும்.

1.நிற்கவன், சு.1; நிற்கநன், சு.2+3+4*

♥ சுவடி 1 இல் இப்பாடல் 301 ஆம் பாடலான 'ஆயவாறங்' என்பதை அடுத்து எழுதப் பெற்றிருந்தது.பொருள் நோக்கி மாற்றி இடப்பட்டுள்ளது.

✤ தருமன், ஆறு கடக்கும் செயல் பார்க்க: பா.மா.667, 668. சாபம் நீங்கப் பெற்றோர், பார்க்க: பா.மா. 277.

Ψஆறு பெண்ணாக மாறியது, பார்க்க: சிலம்.7, 21, 22, 13, 168-170.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பொ: அந்த ஆறு அங்கே பெறற்கரிய கன்னியாக உருமாறி அன்போடு எதிரே நிற்க, நல்ல நீதியில் தூயனான தருமன் அவளை வணங்கிப், "பெண்ணே நீ யார்?" என்று வினவலும், (குளகம்). (65)

302. அரனெ [1]னுமுனிக்கா [2]காகயினி யாளென்
றுரிமை மங்கையென் [3]னூழ்வினைத் தன்மையின்
பரனெனு முனிக் கன்பது பற்றினேன்
பெருமை நன்முனி சாபத்தின் பேச்சினால்

1.முனிக்கா, சு.1+2; முனியாக், சு.3+4* 2. கினியாளி, சு.1; கினிமானி, சு.2+3+4* 3. றூழ்வினைத்,சு.1; னூழ்வினைத்,சு.2+3+4*

பொ: "அரன் என்ற பெயருடைய முனிவருக்கு இனியாள் எனும்படியான உரிமை மங்கை. என்னுடைய வினைத்திறத்தால் பரன் என்ற முனிவனிடம் அன்பு செலுத்தினேன். தவப் பெருமை மிக்க நல்ல முனிவன் சாபத்தின் மொழியால்," (குளகம்)

குறிப்பு: அடி 1, சுவடிகளில் 'கினியாளி' 'கினியானி' என்றிருந்த பாடம் இனியாள் எனக் கொள்ளப்பெற்றது.

அ.வி: அன்பது பற்றினேன்-அன்பு செலுத்தினேன்.

ஒப்: அடி 1-4, "நீதி முனிதேவி நான், நித்திய கன்னியென் பேரு, சாதகமா நித்திரையில் தானனந்தல் செய்து விட்டேன் ... ஆறாவாயென்றுரைத் தார்" வைகு.ப.103. (66)

303. ஆற தாகி யருவரைக் கானெலாஞ்
சீறி யோடிப் [1]பெருகிச் [2]சிறந்துளேன்
வீறு மைவருன் மேனியி னீந்தியே
யேறு போதினீ டேறுவை யென்றனன்.

1. பெருகிச், சு.1+3+4; பெருகச், சு.2* 2.சிறந்துளேன், சு.1; செறிந்துளேன், சு.2+4; செறிந்துழல, சு.3*

பொ: (சாபத்தினால்) ஆறாக மாறிச், செல்வதற்கரிய மலை, காடு இவைகளில் எல்லாம் விரைந்து ஓடிப் பெருகிச் செறிந்துள்ளேன், "பெருமை மிக்க பாண்டவர்கள் ஐவரும் உன் உடலில் (ஆற்றுநீரில்) நீந்திக் கரையேறும் போது சாப நீக்கம் பெறுவாய்", என்றான்.

ஒப்: அடி 3,4. "ஐவர் திரௌபதையும், ஏறெனவே வீமன் யிவர்கள் தமைப் பிடிக்க, நீந்தி வருகையிலே நீங்கு முந்தன் சாபமென்றார்" வைகு. ப. 103.

(67)

பாண்டவர் முனிவர் மனைவியிடம் விடைபெறல்

304. முனியு ரைத்த முறைமைப் படியினா
லினிய முன்னுரு வெய்தினன் புண்ணிய
புனித வென்று புகழ்ந்தவள் [1] போனபின்
தனிவ னத்தில் [2]லறுவருஞ் சாரவே.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

1.போயபின்,சு.1+2; போனபின், சு.3+4* 2.லறுவருஞ், சு.1+3+4; லைவருஞ், சு.2*

பொ: "முனிவன் கூறிய முறைமைப்படி முன்பு இருந்த பெண் வடிவம் பெற்றேன் என்று சொல்லி, அப்பெண் பாண்டவர்களை, 'நல்வினை மிக்க தூயவனே! புனிதனே!" எனப் புகழ்ந்து அவள் போன பின்னர், தனியாக ஒரு காட்டில் அறுவரும் அடைய,(குளகம்)
அடி 2 இல் 'எய்தினன்' என்பது 'எய்தினேன்' என்றிருப்பின் சிறக்கும்.

(68)

துன்னிமித்தம் தோன்றல்

305. சோக மாகிய துன்னிமித் தங்களே*
யாக நீடு மருஞ்சுரக் கானிடை
யேகு போதி [1]னிளைப்புறத் தோன்றிய
தோகை யான துரோபதிக் கன்றரோ.

1. லிளைப்புறத், சு.1+3; லிளைப்பறத், சு. 2+4*

பொ: நீண்டு விளங்கிய அரிய காட்டினிடையே செல்லும்போது, களைப்புற்றதுபோல் தோன்றிய மயில்போன்ற சாயலுடைய துரோபதிக்கு வருத்தம் தரவல்ல தீய நிமித்தங்களே தோன்ற;

(69)

துரோபதியின் இறுதி நேரம்

306. [1]கண்குளிர்ந் துமக்கால் தடுமா றியே
[2]பண்கொள் சொல்லும் [3]பசையறப் பாங்கினா
லெண்கொ ளைவரை நோக்கி [4]யிரங்கலீர்
விண்கொள் காலம் விரைவுற வந்ததால்.

1.கண்குளிர்ந், சு.1+3+4; கண்குளிந், சு.2* 2.பண்கொள், சு.1+3+4; மண்கொள், சு.2* 3.பசையறப், சு.1+3+4; வகையறப், சு.2* 4.யிரங்கிநீர், சு.1; யிரங்கலா, சு.2; யிரங்கலீர், சு.3; யிரங்கிலீர், சு.4*

பொ: துரோபதியின் கண்கள் குளிர்ச்சியடைந்தும், அந்தக் கால்கள் தடுமாறி, இசையை யொத்த இனிய சொற்களும் ஈரமற்று உலர்ந்து போக, அத்தன்மையினால், மனத்தில் நீங்காதிருக்கும் ஐவரைப் பார்த்து, "வருந்தாதீர்! நான் வானுலகம் செல்ல வேண்டிய நேரம் விரைவாக வந்துவிட்டது."

ஒப்: அடி 3,4. "எனக்கிது காலமாகும்...நீங்கள் மனம் சலிப்பெய்திடாமல்" தஞ்.341.

(70)

* துன்னிமித்தம், பார்க்க: பா.மா.471, 599, 600.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தருமன் சிவபெருமானை வணங்கு எனல்

307. வருந்த லீர்களெ னப்புகல் மங்கையைப்
பரிந்து தாங்கித் தருமன் சிவபதம்
பொருந்த லாகும் புராந்தகன் பொற்கழல்
தெரிந்த நாமத்தைச் சிந்தையிற் [1]செப்பெனா

1.செய்கெனா,சு.1+2+3; செப்பெனா, சு.4*

பொ: நீங்கள் வருந்த வேண்டாம் என்று கூறிய துரோபதியைத் தருமன் அன்போடு தாங்கிப் பிடித்துச் சிவநிலையை அடையச் செய்யும், திரிபுரம் எரித்த புராந்தகனின் அழகிய திருவடியைப் பற்றிய உனக்குத் தெரிந்த திருநாமத்தை மனத்தில் நினை", என்று, (குளகம்)

ஒப்:அடி 2-4. "நெடியோனைத் தஞ்சமென்று நெஞ்சிற்றியானமதாய் பிடியே நினைவாகப் பிடியுமென்று தர்மர் சொல்ல" வைகு.ப.104

(71)

சிவபெருமான் துதி

308. வெங்க ராசல மெய்யுரி மேவிய♥
பொங்க ராமதி பொன்முடி மீதணி$^{\Psi}$
சங்க ராய சிவாய சயம்புவே
யெங்க ணாயகனே யென்றி [1]றைஞ்சினாள்

1. றைஞ்சினாள், சு.1+3+4; யம்பினாள், சு.2*

பொ: "கொடிய யானையின் உடற்றோலை விரும்பி அணிந்த, படமெடுத்தாடும் பாம்பு, பிறைச் சந்திரனைப் பொன்னிற சடைமுடியில் அணிகின்ற சங்கரா! சிவபெருமானே! தான் தோன்றியே! எங்கள் தலைவனே!", என்று துரோபதி வணங்கினாள்.

அ.வி: வெங்கராசலம் - கொடிய துதிக்கையுடைய யானை (கயாசுரன்), மெய் உரி- உடலிலிருந்து உரித்த உதிரப் பசுமை கெடாத தோல், பொங்கு அரா-படமெடுத்தாடும் பாம்பு, சங்கரன்-நன்மை தருபவன், சிவன்-மங்கள வடிவானவன், சயம்பு-தான் தோன்றி. சுயம்பு என்பது சயம்பு என வந்துள்ளது.

ஒப்: அடி 2-4. "அரிகரி யென்று தோகை அஞ்சு மூணெழுத்தை யோதி" தஞ்.343. "அடியளந்த மாலே பஞ்சவர்ணா தஞ்சமென்று" வைகு.ப.104. "களிற்றுரிவை போர்த்த முக்கட் புனிதனே". பெரிய. சம்.900.

(72)

♥சிவபெருமான் யானையின் தோலை உரித்தது பார்க்க: பா.மா.373. சிவபெருமான் பிறைசூடியது பார்க்க: பா.மா.2. துதிப்பாடல்கள் பார்க்க: பா.மா. 309, 310, 347, 356, 540, 564, 586, 605, 606, 736-745. சிவபெருமான் யானையின் தோல் உரித்தது: கயாசுரன் என்னும் யானை உருவமுடைய அசுரன் எல்லோருக்கும் துன்பம் செய்து அவர்களைக் கொல்லச் செல்லும்போது, சிவபெருமான் அவனை உதைத்து நகத்தால் அதன் தோலை உரித்தார்.

$^{\Psi}$ சிவபெருமான் பாம்பை அணிந்தது: தாருக வனத்து இருடிகள் சிவபெருமானை அழிக்க எண்ணிப் பாம்பை ஏவ, அவர் அதனை அணிகலனாகக் கொண்டார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

திருமால் துதி

309.
நீல மேக நிறத்தனை நேர்கரி
மூல மேயெனத் தோன்று முதல்வனை*
யாலின் மீதுறை யத்தனை நித்தனைச்
சீல மேவிய சிந்தையிற் [1]சேர்த்தினாள்.

1.சேர்த்தினாள், சு.1; தேற்றினாள், சு.3+4*

பொ: நீலமேக நிறமுடைய திருமாலை, கஜேந்திரன் என்னும் யானை ஆதி மூலமே என்றழைத்ததும் தோன்றிய முதல்வனை, ஆலிலையின் மேல் தங்கிய இறைவனாம் திருமாலை, அழிவில்லாதவனைச் சிறப்புப் பொருந்திய மனத்தில் சேர்த்தாள் துரோபதி.

அ.வி: கரி - யானையான கஜேந்திரன், மூலம் - ஆதிமூலம், அத்தன்- திருமால், நித்தன்- அழிவில்லாதவன்.

(73)

சிவபெருமான் துதி

310.
தில்லை காஞ்சி திகழரு ணைக்கிரி
[1]யல்லி மாதி னருட்கம லைப்பதி*
வல்லி பாகன்* [2]குடந்தைமுன் மற்றெலாஞ்
சொல்லியே துதித்தா ளத்துரோ பதி.

1.யல்லை, சு.1; யல்லி, 2+3+4*2.குடந்தைமுன், சு.1+3; மடந்தைமுன், சு.2*

பொ: துரோபதி சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் திருத்தலங்களான தில்லை, காஞ்சி, விளங்கும் திருவண்ணாமலை, அல்லியங்கோதையின் அருள் நிறைந்த கமலை எனும் திருவாரூர், பார்வதி பங்கனின் கும்ப கோணம் முதலிய திருத்தலங்களின் பெயர்களைச் சொல்லியே துதித்தாள் அந்தத் துரோபதி.

அ.வி: தில்லை-சிதம்பரம், காஞ்சி-காஞ்சிபுரம், அருணகிரி-திருவண்ணாமலை, அல்லிமாது-கமலைப்பதி-திருவாரூர், வல்லிபாகன் குடந்தை-சிவபெருமான் அமரும் கும்பகோணம்.

(74)

துரோபதி வைகுண்டம் சேர்தல்

311.
அந்த [1]ரத்தி லரம்பைய ராயுளோர்
துந்து மிக்குல மார்ப்புறத் துன்னியே

---

*கண்ணன் கஜேந்திரனைக் காத்தது பார்க்க: 662. கண்ணன் ஆலிலையில் உறைதல் பார்க்க: 373-385. கண்ணன் கஜேந்திரனைக் காத்தது: அகத்தியர் சாபத்தால் இந்திரத்துய்மன் என்னும் அரசன் யானையானான். இந்திரத்துய்மன் தாமரை மலர் பறிக்கத் தடாகத்தில் இறங்கியபோது, அங்குத் தேவலன் என்னும் முனிவரின் சாபத்தால் முதலையாகக் கிடந்த கந்தர்வன் யானையின் காலைப் பிடிக்க, யானை 'ஆதிமூலமே' என்று அலறியது. திருமால் தனது சக்கரப்படையைச் செலுத்தி யானைக்கு வீடு பேறளித்தார்.

* தில்லையில் காணமுக்தி, அருணகிரியை நினைக்க முக்தி, கமலையில் பிறக்க முக்தி தரும் என்பர்.

* வல்லிபாகன், பார்க்க: பா.மா. 2.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

விந்த [2]மீது விமானத்தி [3]லேற்றவே
வந்து வைகுண்டஞ் சேர்ந்தனள் மங்கையே.

1.ரத்தில, சு.1+3+4; ரத்துள, சு.2* 2.மீது, சு.1+3+4; மீதில், சு.2* 3. லேற்றியே, சு. 1+3; லேற்றவே, சு.2+4*

பொ: விண்வெளியில் அரம்பையராக உள்ளவர் துந்துமி முதலிய இசைக்கருவி வகைகள் முழங்க, துரோபதியை நெருங்கி வந்து விந்தமலையின் மீது விமானத்தில் ஏற்றவே, துரோபதி வைகுண்டத்தை அடைந்தாள்.

(75)

இறுதிக்கடன் கழித்தல்

312. சூடு மாலைத் துரோபதி நீங்கவே
கூடுமோர் பஞ்ச பூதத்தின் கொள்கையார்[ψ]
வாடி நொந்து வருத்தத்தின் வார்[1]புன
லாடி யுள்ள வருங்கடன் [2]செய்தனர்.

1.புனறாடி, சு.1+4; புனலாடி, சு.2+3* 2.செய்துளார், சு.1+3+4; செய்தனர், சு.2*

பொ: மாலை சூடிய துரோபதி நீங்கிச் செல்லவே, பஞ்ச பூதங்களைப் போல் ஒன்று சேர்ந்திருப்பவரான பாண்டவர்கள் ஐவரும் மனம் வாடி வருந்தி, அவ்வருத்தத்தால் ஆற்றில் நீராடி அவளுக்குரிய சடங்குகளைச் செய்தனர்.

அ.வி: சூடும் மாலை-மாலை சூடிய நிலையில் (சுமங்கலியாக), பஞ்சபூதத்தின் கொள்கையார் - ஐந்து பூதங்கள் ஒன்று சேர்ந்திருப்பது போல் இருக்கும் தன்மை உடைய பாண்டவர்.

ஒப்: அடி 3, 4. "ஐவருங் கூடி அடக்கினா ருத்தமியை, ...செய்யுஞ் சடங்குந் திருத்தமுடனே முடித்து" வைகு.ப.105. "ஐம்பெரும் பூதத் தியற்கை போல" புறநா.2.

(76)

வீமன் துரோபதி இறந்ததன் காரணம் வினவல்

313. [1]போமி டத்திற் புகழ்த்தரு மன்னுடன்
வீம னைய துரோபதி வீடவே
யாமி [2]தேனிந்த வாரணி யத்தென
கோமு னித்திறத் தன்மிதன் கூறுவான்.

1. போமி டத்து, சு.1; போமி டத்திற், சு.2+3+4*2.தேனிந்த, சு.1+3+4; தனிந்த, சு.2*

[ψ]குறிப்பு: துரோபதி அல்லது தருமனின் தம்பியர் இறக்கும்போது அவர்கள் வருந்தியதாகவோ, கடன் கழித்ததாகவோ வியாசபாரதம், நல்லாப்பிள்ளை பாரதம், அரங்கநாதக்கவிராயர் பாரதம் ஆகிய நூல்கள் குறிப்பிடவில்லை. ஒருவர் இறக்கும்போது வருந்துதல், கடன் கழித்தல் ஆகிய நிகழ்ச்சிகளை மாவிந்த நூல்கள் மட்டுமே குறிப்பிடுகின்றன. மேலும் பார்க்க: நல்.மகா.60. கடன் கழித்தது பார்க்க: பா.மா.129.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பொ: காட்டில் போகும் இடத்தில் புகழ்பொருந்திய தருமனிடன் வீமன், "தலைவா! இந்தக் காட்டில் துரோபதி இறக்கக் காரணம் என்ன?", என்று வினவ, இராசமுனி போன்ற தருமன் கூறலானான்.

அ.வி: வீட-இறக்க, கோமுனித் திறத் தன்மிதன்-இராசமுனிவனை யொத்த முக்கால அறிவுடைய தருமன்.

குறிப்பு: தன்மிதன் என்பது தருமனைக் குறிக்கும், வேறெங்கும் இப்பெயர் இல்லை.

(77)

314. தெய்வ [1]மாதிவள் காரணச் [2]சேர்த்திய
[3]ளைவரோ டன்பு டையவ ளாயினும்
பைவை நாகத் தனஞ்செயன் பாங்கினா
[4]லுய்வள் கானத்திற் சாதலென் றோதினான்[ψ].

1.மாதிவள், சு.1+3+4; மாகிவன், சு.2* 2.சேர்த்திய, சு.1+3+4; சேர்த்தியி, சு. 2* 3. ளைவரோ, சு.1+3+4; னைவரோ,சு. 2*4. லுய்வ , சு.1+3+4; லுய்வள், சு.2*

பொ: "துரோபதி தெய்வப்பெண், பாரதப்போர் முடிக்க வேண்டிய காரணத்தால் சேர்ந்தவள். ஐவருக்கும் மனைவியாகச் சேர்ந்தவள், ஐவரிடமும் அன்பு கொண்டவளாயினும், படமெடுத்தாடும் (பாம்பின் சீற்றத்தைப் போல் சீறிச் செல்லும்) நாகாஸ்திரம் உடைய அர்ச்சுனனிடம் மிகுந்த அன்பு கொண்ட தன்மையினால், வைகுண்ட வாழ்வடையக் காட்டில் இறந்தாள்", என்று கூறினான் தருமன்.

அ.வி. பைவை நாகம் - படமெடுத்தாடும் பாம்பு, உய்வள் -நீங்கினள்/ தப்பினள்.

ஒப்: அடி 1, 2. "ஈசர் பதிவாழும் இமைய மடந்தையவள், பாரத முடிய வந்திருந்தா ளைவருடன்" வைகு.ப.106. அடி3,4. "தனஞ்செய னிடத்தினன்பு தையலானாளுமிக்காய், மனந்தனில் கொண்டவற்றால் வருந்தி வீழ்ந்தனள் என்றோதி " அரங்.மகா.29. பார்க்க: நல்.மகா.62. "அய்வரும் விதியினாலே அரியதோர் கணவனாகி, வெய்யதோர் மாயா கேழ்க்கில் மீண்டு முண்டாசை யென்னில்" தஞ்.350.

(78)

ஐவரும் குத்திரவனம் அடைதல்

315. அத்தி [1]றத்தினி லைவரு மாகியே
யெத்தி றத்தியல் தேவரு மெய்தொணாக்
குத்தி ரத்து வனத்துக் குறுகியே
யுத்த ரத்திசைச் [2]செல்வ [3]ருரத்தினால்.

1. னத்தினி, சு.1; றத்தினி, சு.2+3+4* 2.செல்வ , சு.1+3+4; செல்ல, சு.2* 3. ருரத்தினால், சு.1+3+4; வுரனினால், சு.2*

ψ பார்க்க: நல்.மகா.62.; தருமனின் தம்பியர் இறந்ததன் காரணம் பார்க்க: பா.மா. 542, 594, 604. பாரத மாவிந்தத்தில் நகுலன் இறப்புக்குரிய காரணம் கூறப்பெறவில்லை.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பொ: அந்த வண்ணம் பாண்டவர் ஐவரும் சேர்ந்து, எத்தகைய வலிமை மிகுந்த தேவரும் அடைய இயலாத அளவு செறிந்தமைந்த குத்திரவனம் என்ற காட்டை நெருங்கி, மனவலிமையால் வடதிசை நோக்கிச் சென்றனர்.

துரோபதி முத்தி பெற்ற சருக்க முற்றும்

(79)

துரோபதி முற்றி பெற்ற சருக்க முற்றும், சு . 1 [அழி] [1];துரோபதி மோக்கிஷச் சருக்க முற்றும், சு.2. [அழி];திரௌபதி மோட்சம்பெற்ற சருக்க முற்றிற்று. சு.3 [அழி, ஆக விருத்தம் ௯சயி]

துரோபதி முத்தி பெற்ற சருக்க முற்றும், சு.4 [அழி]

****

[1] சுவடி C1 இல் இருப்பது 79 பாடல்கள்தாம். துரோபதி முத்திபெற்ற சருக்கத்தில் 57 ஆம் பாடலுக்கு அடுத்த பாடலுக்குரிய எண்ணை 58 என்று இடாமல் 59 என்று தவறாக இட்டதால் சருக்கத்தின் இறுதியில் 80 பாடல்கள் எனக் காணப்படுகிறது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Born in Nagercoil, T.Rajeswari studied Zoology, Tamil and MEd. at the Universities of Madras, Kerala, Madurai and Annamalai and acquired a specialization in manuscriptology (PG Diploma) from the International Institute of Tamil Studies in Chennai and PG Diploma in Higher Education (PGDHE) from The Indira Gandhi National Open University (*IGNOU*), Chennai.

Got Ph.D, and PDF from Kerala University and has worked in many institutions in Tamilnadu (Arts and Science, BEd. Colleges and worked as Assistant Director in Tamil Virtual university in Chennai).

After retirement in 2004 she joined the EFEO in Pondicherry as a Research Fellow. Here she joined in the project of critical reedition of the old Tamil literary corpus initiated in the EFEO by Dr. Eva Wilden. In this project critical editions of Kalittokai and PERUṄKUṞIÑCI (KUṞIÑCIPPĀṬṬU) are done by her. Currently doing the critical edition of Patirruppattu. Pārata Māvintam is her PhD dissertation (an unpublished Palm leaf manuscript).

ISBN:978-80-93542-47-8

ARAM BOOK HOUSE

PRICE : Rs.500/-